வெளியீடு—23—10—1972]
Issued—23—10—1972]

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு

OFFICIAL REPORT

புதன்கிழமை 1972 ஆகஸ்ட் 9

Wednesday 9th August 1972

தொகுதி XXIII—எண் 1

Volume XXIII—No. 1

©

தமிழ் நாடு அரசு

1972

GOVERNMENT OF TAMIL NADU

1972

சட்டப் பேரவைத் துறை

சென்னை-9.

Legislative Assembly Department

Fort St. George, Madras-9

விலை 50 காசுகள்]

PRICE 50 PAISE]

தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

தமிழ் நாடு ஆளுநர்.

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத்துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம் இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம், தமிழ் நாடு கழிவுநீர்-குடி-நீர் வாரியம், குடி-சை மாற்று வாரியம்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** (கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி ; ஆட்சி மொழி, நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சட்ட மன்றம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன்** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன்** (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், எழுது பொருள்-அச்சுத்துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. **மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள்

61568

வீடுதி, அனுதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, வணிக வரிகள், வருவாய், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில்கள், ஆலைத்துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். லே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

10. மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வேளாண்மை, உணவு உற்பத்தி.

11. மாண்புமிகு திரு. ஈ. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

13. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

14. மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : அறக் கட்டளைகள், பால் வழங்குத் துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராமதான இயக்கங்கள்.

7. THE HON. THIRU S. MADHAVAN (*Minister for Industries*) —in charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (*Minister for Public Works*)—in charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU Si. Pa. ADITANAR (*Minister for Co-operation*)—in charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Khadi and Village Industries and Rural Industries Project.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY (*Minister for Agriculture*)—in charge of Agriculture and Food Production.

11. THE HON. THIRU K. RAJARAM (*Minister for Backward Classes*)—in charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. THE HON. THIRU O. P. RAMAN (*Minister for Electricity*) —in charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

13. THE HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Transport*)—in charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. THE HON. THIRU M. KANNAPPAN (*Minister for Religious Endowments*)—in charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன், பி.ஏ.

பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ., பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. என். கணபதி.
திரு. என். டென்னில்.
திரு. ஆ. கு. சுப்பையா.
திரு. கே. ஏ. வகாப்.
திரு. நா. வீராசாமி.
திருமதி த. ந. அனந்தநாயகி.

சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

இணைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).
திரு. கோ. இராகவன்.
திரு. வி. இராஜமாணிக்கம், பி.ஏ.
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.

விவாதப் பதிப்பாளர்

திரு. கே. சுந்தரராசன்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

GOVERNOR OF TAMIL NADU.

THIRU KODARDAS KALIDAS SHAH

Members of the Council of Ministers.

1. THE HON. DR. M. KARUNANIDHI (*Chief Minister*)—in charge of Public, Finance, Planning, General Administration, matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Passports, Newsprints Control, Prices and Supplies of Goods Act, Tamil Nadu Drainage and Water Board and Slum Clearance Board.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (*Minister for Education and Local Administration*)—in charge of Education including Technical Education, Official Language, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions and Legislature.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (*Minister for Public Health*)—in charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (*Minister for Labour*)—in charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU (*Minister for Harijan Welfare*)—in charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (*Minister for Food and Revenue*)—in charge of Food, Commercial Taxes, Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

உள்ளடக்கம்

பக்கங்கள்.

(1) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் .. i–vi

(2) தமிழ்நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. vii

(3) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட பட்டியல்) .. .. ix–xvi

1 நீத்தார் நினைவுக் குறிப்புகள்—

(அ) முன்னாள் உறுப்பினர்கள் திருவாளர்கள் டி. வி. வெங்கடகுப்பா ரெட்டி, எச். சீதாராம ரெட்டி, டி. சஞ்சீவையா, கே. உப்பி சாகெப், ஏ. எஸ். துரைசாமி ரெட்டியார் காஞ்சி மணிமொழியார் ஹைட்ராஸ், திருமதி மனோன்மணி அம்மாள் ஆகியோர் மறைவு குறித்து 1–2

(ஆ) பூட்டான் நாட்டின் மன்னர் திரு. ஜிக்மி டோர்ஜி அவர்கள் மறைவு குறித்து 2–3

2 வினாக்கள்—விடைகள் 3–38

3 அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானமும், அமைச்சரவையின் தனியொரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும் 38–90

4 பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் 91–128

உள்ளடக்கம்—தொடர்ச்சி.

பக்கங்கள்

4. அறிக்கை அளித்தல்.
கால்நடை மருத்துவக் கல்லூரி குறித்து. 177–178

5. நடைமுறைக் கேள்வி.
திருமதி த. ந. அனந்தநாயகி அவர்கள் சேர்ந்துள்ள கட்சியின் பெயர் குறித்து. 179–186

6. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானமும், அமைச்சரவையின் தனியொரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும். 186–241

7. பேரவை முன் வைக்கப்படும் ஏடுகள். 241–24[illegible]

உள்ளடக்கம்

பக்கங்கள்

1 வினாக்கள்—விடைகள் 249–292

2 அறிவிப்புகள்—
(அ) 25 வது சுதந்திரதின விழா நிகழ்ச்சி விவரம் குறித்து 292–294
(ஆ) மதுரைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழுவிற்குத் தேர்தல் 294–295

3 அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மைத் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்—தொடர்ச்சி. 295–452

4 பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் 452–454

உள்ளடக்கம்.

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள் 129–172

2. அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல். 173

(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு. 175

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை) சட்ட முன்வடிவு எண் 51/71. 173

(ஆ) தமிழ் நாடு 1972-ம் ஆண்டு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு. 173

(இ) 1972-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு. 174

(ஈ) தமிழ் நாடு 1972-ம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் பாதுகாப்பு, நியாயவாரம் கொடுத்தல் (கன்னியாகுமரி) மாவட்டத்திற்கு நீட்டிப்பு) சட்ட முன்வடிவு. 174

(உ) தமிழ் நாடு 1972-ம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு. 174–175

(ஊ) தமிழ் நாடு 1972-ம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு. 175

(எ) தமிழ் நாடு 1972-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை–வாடகைக் கட்டுப்பாடு) திருத்த சட்ட முன்வடிவு. 176

(ஏ) தமிழ் நாடு 1972-ம் ஆண்டு பொதுக் கட்டிடங்கள் உரிமம் வழங்குதல்) திருத்த சட்ட முன்வடிவு. 176

(ஐ) தமிழ் நாடு 1972-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளை (திருத்த) சட்ட முன்வடிவு. 176–177

உள்ளடக்கம்

		பக்கங்கள்
1.	வினாக்கள்—விடைகள்	469–488
2.	அரசினர் சட்ட முன்வடிவுகள்—	
	(அ) 1972-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு	488–489
	(ஆ) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) நான்காவது திருத்த சட்ட முன்வடிவு	489
	(இ) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவு	489
3.	முந்தைய நாள் பேரவை நடவடிக்கை குறித்து முதலமைச்சரின் விளக்கம்	490
4.	நடைமுறைக் கேள்வி—	
	நீக்கப்பட்ட சில பகுதிகளை மீண்டும் நடவடிக்கைக் குறிப்பில் சேர்ப்பது குறித்து	490–503
5.	அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானமும் அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும் தொடர்ச்சி	503–643
6.	பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்	644–646

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப்பேரவை
உறுப்பினர்களின் (அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
1 அண்ணாமலை, திரு. சி.வி. எம்.	காஞ்சிபுரம்.
2 அபுசாலி, திரு. எம். ஏ.	புவனகிரி.
3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை... ..	அரவக்குறிச்சி.
4 அரங்கண்ணல், திரு. இராம.	எழும்பூர்.
5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமை கொறடா).	உப்பிலியப்புரம்.
6 அழகர்சாமி, திரு. சோ.	கோவில்பட்டி.
7 அழகுத் தேவர், திரு. எஸ்.	சாத்தூர்.
8 அனந்தநாயகி, திருமதி த. ந.	மயிலாப்பூர்.
9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்).	புரசைவாக்கம்.
10 அன்புச்செழியன், திரு. நீ.	பெரியகுளம்.
11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. ..	ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.)
12 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்.)	ஸ்ரீவைகுண்டம்.
13 ஆலடி அருணா, திரு. வி.	ஆலங்குளம்.
14 ஆல்டா எம். பௌலர், திருமதி ..	நியமன உறுப்பினர்.
15 ஆறுமுகம், திரு. அ.	எடப்பாடி.
16 ஆறுமுகம், திரு. எஸ்.	வீரபாண்டி.
17 ஆறுமுகம், திரு. சி.	மதுராந்தகம்.
18 இரத்தினசபாபதி, திரு. மு.	விளாத்திக்குளம்.
19 இராசகோபால், திரு. க. மு.	உத்திரமேரூர்.
20 இராசகோபால், திரு. வீ.	வந்தவாசி.
21 இராசமாணிக்கம், திரு. அ.	நாகப்பட்டினம்.
22 இராசமாணிக்கம், திரு. கு.	ஆடுதுறை.
23 இராசரத்தினம், திரு. டி.	ஸ்ரீபெரும்புதூர்.
24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்).	சேலம்-11.
25 இராசு, திரு. ஜே. எஸ்.	பெரம்பலூர் (செ.வ.)
26 இராதாகிருட்டிணன், திரு. எம். ..	தண்டராம்பட்டு.
27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. ..	பரங்கிமலை.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி. (2)
28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்)	பண்ருட்டி.
29 இராமநாதன், திரு. சி.	அறந்தாங்கி.
30 இராமலிங்கம், திரு. இரா.	தூத்துக்குடி.
31 இராமலிங்கம், திரு. செ.	கடலாடி (செ.வ.).
32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்).	மேலூர் தெற்கு (செ.வ.).
33 இராமன், திரு. மூ.	கண்டமங்கலம் (செ.வ.).
34 இராஜாங்கம், திரு. என்.	குறிஞ்சிப்பாடி (செ.வ.)
35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே.	கன்னியாகுமரி.
36 இளங்கோவன், திரு. கோ.	திருவையாறு.
37 இளஞ்செழியன், திரு. வீ. சா.	விராலிமலை.
38 எட்டியப்பன், திரு. பூ.	பெரணமல்லூர்.
39 எட்மண்ட், திரு. க. உரொ.	திருச்செந்தூர்.
40 கணபதி, திரு. என்.	பாபநாசம்.
41 கணபதி, திரு. டி.	நாங்குனேரி.
42 கணேசன், திரு. எல்.	ஒரத்தநாடு.
43 கணேசன், திரு. சி.	குற்றாலம்.
44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்).	கிணத்துக்கடவு.
45 கண்ணன், திரு. எம். ஆர்.	பேஸின்பிரிட்ஜ்.
46 கதிரவன், திரு. கா. மு.	தென்காசி.
47 கந்தசாமி, திரு. கே.	உசிலம்பட்டி.
48 கந்தசாமி, திரு. கே. பி.	சாத்தான்குளம்.
49 கந்தசாமி, திரு. எம்.	குளித்தலை.
50 கந்தப்பன், திரு. செ.	திருச்செங்கோடு.
51 கரிவேங்கடம், திரு. மா. வெ.	பாலக்கோடு.
52 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்).	சைதாப்பேட்டை.
53 கருணாநிதி, திரு. தாழை மு.	திருவாரூர் (செ.வ.)
54 கருணைநாதன், திரு. சோ.	கூனூர்.
55 கருப்பையா, திரு. ஆ.	கங்கைகொண்டான் (செ.வ)
56 காசிராமன், திரு. நா.	கும்பகோணம்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி. (2)
57 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி ..	முதுகளத்தூர்.
58 காமாட்சி, திரு. கு.	திருவரம்பூர்.
59 கார்த்தீசன், திரு. வீ.	இராதாபுரம்.
60 காவேரிமணியம், திரு. சொ.	திருப்பரங்குன்றம்.
61 காளிமுத்து, திரு. கா.	சிவகாசி.
62 கிட்டப்பா, திரு. என்.	மாயூரம்.
63 கிருட்டிணன், திரு. நா.	பேரணம்பட்டு (செ.வ.).
64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி.	நெல்லிக்குப்பம்.
65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ.	திருச்சிராப்பள்ளி-1.
66 கிருஷ்ணன், திரு. கே. ஆர்.	ஊத்தங்கரை.
67 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ்.	மதுரை (கிழக்கு).
68 குமாரசாமி, திரு அ. சே.	திருக்கோயிலூர்.
69 குமாரசாமி, திரு. கே. என்.	பல்லடம்.
70 குருசாமி, திரு. நா. வெ.	ஆண்டிப்பட்டி.
71 கேசவலு, திரு. தே.	கள்ளக்குறிச்சி.
72 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். ..	உதனப்பள்ளி.
73 கோபால், திரு. எம்.	குன்னத்தூர் (செ.வ.) .
74 கோபால், திரு. கே. பி.	கம்பம்.
75 கோபால், திரு. பி.	கோயம்புத்தூர் (மேற்கு).
76 கோவிந்தசாமி, திரு. வி. செ.	காவேரிப்பட்டினம்.
77 கோவிந்தராசன், திரு. ஆர்.	கடலூர்.
78 கோவிந்தராசன் துரை, திரு	கந்தர்வகோட்டை.
79 கோவிந்தன், புலவர் கா.	செய்யாறு.
80 கோவை செழியன், திரு.	காங்கேயம்.
81 சகாதேவன், திரு. எஸ்.	செஞ்சி.
82 சங்குமுத்து தேவர், திரு. ச.	அம்பாசமுத்திரம்.
83 சதாசிவம், திரு. சே.	ஆண்டிமடம்.
84 சண்முகசுந்தரம், திரு. அ. ப.	பொள்ளாச்சி.
85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்).	திருவண்ணாமலை.
86 சண்முகம், திரு. பெரி.	திருவாடானை.
87 சண்முகம், திரு. மு.	விழுப்புரம்.
88 சத்தியமூர்த்தி, திரு. மு.	புதுக்கோட்டை.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
89 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்).	பெரம்பூர் (செ.வ.)
90 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. ..	இராமநாதபுரம்.
91 சம்பத், திரு. டி. வி.	செம்பனூர் கோவில்.
92 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்).	உடுமலைப்பேட்டை.
93 சாரதி, திரு. மா. பா.	வேலூர்.
94 சிதம்பரம், திரு. சித.	காரைக்குடி.
95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. ..	சேரன்மகாதேவி.
96 சிவபெருமாள், திரு. கோ.	அரியலூர்.
97 சிறைமீட்டான், திரு. தொ. க.	பரமக்குடி (செ.வ.).
98 சீனிவாசன், திரு. பெ. (துணைத் தலைவர்).	விருதுநகர்.
99 சீனிவாசன், திரு. தொ. ப.	போளூர்.
100 சின்னசாமி, திரு. அ.	செயங்கொண்டம் (செ.வ.)
101 சின்னசாமி, திரு. ஆர்.	தர்மபுரி.
102 சின்னசாமி திரு. மு.	மொடக்குறிச்சி.
103 சின்னசாமி, திரு. வ.	ஏற்காடு (ஆ. வா.)
104 சின்னராசு, டாக்டர் ச. அ.	ஹூர் (செ. வ.)
105 சின்ன வெள்ளையன், திரு. சி.	சேந்தமங்கலம் (ஆ. வா.)
106 சுந்தரம், திரு. ஒ. என்.	திண்டுக்கல்.
107 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. ..	சத்யமங்கலம்.
108 சுப்பிரமணியம், திரு. ஏ.	சிங்கநல்லூர்.
109 சுப்பிரமணியம், திரு. கே. எம்.	தியாகராயநகர்.
110 சுப்பிரமணியன், திரு. மா.	ஈரோடு.
111 சுப்பிரமணியன், திரு. வீ.	உளுந்தூர்பேட்டை.
112 சுப்பு, திரு. க.	ராஜபாளையம்.
113 சுப்பையா, திரு. ஆ. கு.	கோட்டூர் (செ. வ.)
114 சுப்பையா, திரு. கே. வி.	ஆலங்குடி.
115 சுப்பையா, திரு. ச.	சங்கரன்கோயில் (செ. வ.)
116 சுப்பையா, திரு. ஏ. ஆர்.	கடயநல்லூர்.
117 சுருளிவேல், திரு. மு.	போதிநாயக்கனூர்.
118 சுரேந்திரன், திரு. எம்.	மேட்டூர்.
119 சுவாமிதாஸ், திரு. ஏ.	பத்மநாபபுரம்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
120 செபமாலை, திரு. கோ.	மங்களூர் (செ. வ.)
121 ஜெயராமன், திரு. கி.	சேலம்-1.
122 செல்லத்துரை, திரு. வீ.	ஓமலூர்.(செ. வ.)
123 செல்லையா, திரு. குழ.	பேராவூரணி.
124 செல்வராஜ், திரு. எம்.	விருத்தாசலம்.
125 சேதுராமன், திரு. சி.	சிவகங்கை.
126 சோனையா, திரு. த.	மானமதுரை.
127 சோமசுந்தரம், திரு. ந.	வலங்கைமான்.(செ. வ.)
128 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். ..	அருப்புக்கோட்டை.
129 சௌந்தரபாண்டியன், திரு. பெ. ..	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
130 டென்னிஸ், திரு. என்.	கிள்ளியூர்.
131 தங்கமணி, திரு. கே. டி. கே.	மதுரை மேற்கு.
132 தர்மலிங்கம், திரு. அ. பெ.	திருச்சிராப்பள்ளி-2.
133 தருமலிங்கம், திரு. ந.	ரிஷிவந்தியம் (செ.வ.)
134 தவமணித்தேவர், திரு. வி.	சேடப்பட்டி.
135 திம்மராயக்கவுண்டர், திரு. டி. சி. ..	நாட்டரம்பள்ளி.
136 தியாகராசன், திரு. அ.	திருமயம்.
137 தியாகராசன், திரு. இ. எஸ்.	திருத்தணி.
138 திருப்பதி, திரு. கு.	மதுரை (சென்ட்ரல்).
139 துரைசாமி திரு. ஏ. க.	குடியாத்தம்.
140 துரைசாமி, திரு. சு.	திருப்பூர்.
141 துரைமுருகன், திரு.	காட்பாடி.
142 துரைராஜ், திரு. சு. ம.	திருவள்ளூர் (செ.வ.)
143 தூயமணி, திரு. மே. சி.	மேட்டுப்பாளையம்.
144 தேவராசன், திரு. எம்.	உதகமண்டலம்.
145 தேவேந்திரன், திரு. அ.	நன்னிலம் (செ. வ.)
146 தோப்பூர் திருவேங்கடம், திரு.	கணியம்பரடி.
147 நடராசன், திரு ஈ. எம்.	அந்தியூர்.
148 நடராசன், திரு. எஸ்.	தஞ்சாவூர்.
149 நரசிம்மன், திரு. ஏ. சி.	ஆரணி.
150 நல்லசாமி, திரு. எஸ்.	கரூர்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதி
(1)	(2)
151 நாகராஜன், திரு. க.	வடமதுரை.
152 நாகலிங்கம், திரு. பா.	பொன்னேரி (செ.வ.)
153 நாச்சிமுத்து, திரு. நா.	ஒட்டஞ்சத்திரம்.
154 நாச்சியப்பன், திரு. ஏ. எம். டி. ..	ஆத்தூர்.
155 நாச்சியப்பன், திரு. ந.	சங்கராபுரம்.
156 நாராயணசாமி, திரு. மா. வே.	திருவொற்றியூர்.
157 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்.) ..	திருவல்லிக்கேணி.
158 நைனுமலை, திரு. இரா.	ராசிபுரம்.
159 பத்மநாபன், திரு. பொ.	திருநெல்வேலி.
160 பத்மாவதி, திருமதி. ஏ. கோ.	முகையூர்.
161 பரந்தாமன், திரு ஆ.	கடம்பத்தூர்.
162 பரமசிவம், திரு. எம்.	தாரமங்கலம்.
163 பலராமன், திரு. என். எஸ்.	அரக்கோணம்.
164 பழனிசாமி, திரு. நா.	பொங்கலூர்.
165 பழனிசாமி, திரு. என். கே.	பெருந்துறை.
166 பழனிசாமி, திரு. மு.	வெள்ளக்கோயில்.
167 பழனிச்சாமி, புலவர். சி.	பழனி (செ.வ.)
168 பழனியப்பன், டாக்டர், ச. மு.	கோபிசெட்டிபாளையம்.
169 பழனியம்மாள், திருமதி வி. ப. ..	தாராபுரம்.
170 பழனிவேலன், திரு க.	வரகூர்.
171 பழனிவேலன், திரு மு..	நாமக்கல்.
172 பழனிவேலு, திரு. பி.	ஆத்தூர்.
173 பழனிவேல் ராஜன், திரு.	தேனி.
174 பன்னீர் செல்வம், திரு. எம்.	ஆம்பூர் (செ. வ.)
175 பாண்டுரங்கம், திரு. சி.	செங்கம் (செ. வ.)
176 பாலகிருட்டிணன், திரு. கு.	மன்னார்குடி.
177 பாலசுந்தரம், திரு. வை.	அச்சரபாக்கம் (செ.வ.).
178 பாலையா, திரு. ஏ.	கொளச்சல்.
179 பெரியசாமி, திரு. கு.	கொடவாசல்.
180 பெரியசாமி, திரு. தி. ஒ.	அவினாசி.
181 பெருமாள், திரு. செ.	காட்டுமன்னார்கோயில்.
182 பெருமாள், திரு. ஏ. ஆர்.	காரியப்பட்டி.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
183 பொம்மன், திரு. கு. அ.	கூடலூர் (செ. வ.)
184 பொன் சொக்கலிங்கம், திரு. பி. ..	சிதம்பரம்.
185 பொன்னப்ப நாடார், திரு. ஆர்.	விளவங்கோடு.
186 பொன்னுமலை, திரு. தி.	பனைமரத்துப்பட்டி.
187 பொன்னுரங்கம், திரு. ஏ. எம். ..	சோலிங்கபுரம்.
188 மணலி கந்தசாமி, திரு. சி.	திருத்துரைப்பூண்டி.
189 மணியன், திரு. பி. எஸ்.	சோழவந்தான்.
190 மதியழகன், மாண்புமிகு திரு. கே.ஏ. (பேரவைத் தலைவர்).	ஆயிரம் விளக்கு.
191 மருதாசலம், திரு. என்.	பேரூர் (செ. வ.).
192 மலைக்கண்ணன், திரு. வீ.	இளையாங்குடி.
193 மலைச்சாமி, திரு. பெ.	மேலூர் வடக்கு.
194 மன்னியப்பன், திரு. சி.	கிருஷ்ணகிரி.
195 மாணிக்கம், திரு. என்.	பென்னகரம்.
196 மாணிக்கவாசகம், திரு. இரா.	தொண்டாமுத்தூர்.
197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்).	திருப்பத்தூர்.
198 மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.	பட்டுக்கோட்டை.
199 மாரிமுத்து, திரு. மூ.	தலைவாசல், (செ.வ.)
200 மீனாட்சிசுந்தரம், திரு. மா.	வேதாரண்யம்..
201 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். ..	மேலப்பாளையம்.
202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. ..	லால்குடி.
203 முத்து, திரு. வ.	சங்கரி (செ. வ.)
204 முத்துசாமி, திரு. ப.	வேடசந்தூர்.
205 முத்துச்செல்வன், திரு. பு. செ. ..	முசிறி.
206 முத்துவேல், திரு. ந.	வானூர். (செ. வ.)
207 முத்தையா, திரு. கே. கே.	கடலூர்.
208 முத்தையா, திரு. எம்.	ஒட்டப்பிடாரம் (செ. வ.)
209 முருகையன், திரு. எஸ்.	கலசப்பாக்கம்.
210 முனியாண்டி, திரு. ஆ.	நிலக்கோட்டை (செ. வ.)
211 முனு ஆதி, திரு. மு.	திருப்போரூர்.
212 முனுசாமி, திரு. ரா. ரா.	மேல்மலையனூர்.
213 மொய்தீன், திரு. திருப்பூர்	துறைமுகம் (சென்னை

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி. (2)
214 மோசஸ், திரு. ம.	நாகர்கோயில்.
215 ரங்கனுதன், திரு. கே.	கோயம்புத்தூர் (கிழக்கு).
216 ராமசாமி, திரு. இ.	வால்பாறை.
217 ராமசாமி, திரு. ஜி.	திருப்பத்தூர்.
218 ராமராசன், திரு. வ. க.	பவானிசாகர் (செ. வ.)
219 இராஜா, திரு. ஏ. எம்.	பவானி.
220 ராஜாராம், திரு. ஜி.	திண்டிவனம்.
221 ரெத்தினசாமித் தேவர், திரு.மு. சி. ஆ.	திருமங்கலம்.
222 லத்தீப், திரு. எம். ஏ.	வாணியம்பாடி.
223 வகாப், திரு. கே. எ.	ராணிப்பேட்டை.
224 வடிவேலு, திரு. சீ. க.	தோட்டியம்.
225 வடிவேல். திரு. எஸ்.	சீர்காழி (செ. வ.)
226 விசுவநாதன், திரு. செ. கோ. ..	செங்கற்பட்டு.
227 வீராசாமி, திரு. நா.	ஆற்காடு.
228 வெங்கடசாமி, திரு. பி.	ஹோசூர்.
229 வெள்ளத்துரை, திரு. அ.	வாசுதேவநல்லூர்.
230 வேதாசலம், திரு. மு.	வண்ணரப்பேட்டை. (சென்னை நகரம்).
231 வேலப்பன், திரு. சி. வே.	கபிலமலை.
232 வேழவேந்தன், திரு. கா.	கும்மிடிபூண்டி.
233 ஜேம்ஸ், திரு. ஜே.	திருவட்டார்.
234 ஜோதி வெங்கடாசலம், திருமதி. ..	ஸ்ரீரங்கம். (செ. வ.)
235 ஹாண்டே, டாக்டர், எச். வி.	பார்க் டவுன் (சென்னை நகரம்).

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

தொடர் எண்ணும் பெயரும்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.
2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.
3 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1972 ஆகஸ்ட் 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை மண்டபத்தில் காலை 10 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்புகள்.

(அ) முன்னாள் உறுப்பினர்கள் திருவாளர்கள் டி. வி. வெங்கடசுப்பா ரெட்டி, எச். சீதாராம ரெட்டி, டி. சஞ்சீவையா,, கே. உப்பி சாகெப், ஏ. எஸ். துரைசாமி ரெட்டியார், காஞ்சி மணிமொழியார், ஹைடராஸ், திருமதி மனோன்மணி அம்மாள் ஆகியோர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காட்டேர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டப் பேரவையில் 1952-ஆம் ஆண்டு முதல் 1953-ஆம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திரு. டி. வி. வெங்கடசுப்பா ரெட்டி அவர்கள் 14—4—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

பெல்லாரி பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டப் பேரவையில் 1936-ஆம் ஆண்டிலிருந்து 1939-ஆம் ஆண்டு வரையிலும், 1946-ஆம் ஆண்டிலிருந்து 1952-ஆம் ஆண்டு வரையிலும் உறுப்பினராகவும், மேலும் 1946-ஆம் ஆண்டிலிருந்து 1952-ஆம் ஆண்டு வரை நில வரி, தொழிலாளர் நலம், தொழிற் துறை அமைச்சராகவும் இருந்தவருமான திரு. எச். சீதாராம ரெட்டி அவர்கள் 21—4—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

கர்நூல் ஒதுக்கப்பட்ட தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டப் பேரவையில் 1952-ஆம் ஆண்டிலிருந்து 1953-ஆம் ஆண்டுவரை உறுப்பினராகவும், மேலும் கூட்டுறவு, வீட்டுவசதித் துறை அமைச்சராகவும் இருந்தவருமான திரு. டி. சஞ்சீவையா அவர்கள் 7—5—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

திரூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டப் பேரவையில் 1952-ஆம் ஆண்டிலிருந்து 1956-ஆம் ஆண்டுவரை உறுப்பினராக இருந்த திரு. கே. உப்பி சாகெப் அவர்கள் 21—5—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

சைதாப்பேட்டைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1957-ஆம் ஆண்டிலிருந்து 1962-ஆம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திரு. ஏ. எஸ். துரைசாமி ரெட்டியார் அவர்கள் 18—5—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

தியாகராயநகர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1962-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டுவரை உறுப்பினராக இருந்த திரு. காஞ்சி மணிமொழியார் அவர்கள் 7—6—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

பாலக்காடு, முஸ்லிம் கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டப் பேரவையில் 1946-ஆம் ஆண்டு முதல் 1952-ஆம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திரு. ஷௌட்ரஸ் அவர்கள் 5—7—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

உளுந்தூர்பேட்டைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1962-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திருமதி ஏ. மனோன்மணி அம்மாள் அவர்கள் 12—7—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

இப்பேரவையின் சார்பில் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னார்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

(ஆ) பூட்டான் நாட்டின் மன்னர் திரு. ஜிக்மி டோர்ஜி அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம் நாட்டுடன் நட்புரிமையோடு இருந்து வரும் நமது அண்டை நாடான பூட்டான் நாட்டின் மன்னர் திரு. ஜிக்மி டோர்ஜி அவர்கள் 21—7—1972-ஆம் நாளன்று மறைந்ததை இப்பேரவைக்கு ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த மன்னருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Education Reforms Committee

* 1. *Q.*—THIRU E. S. THYAGARAJAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether an Education Reforms Committee headed by Dr. Paul was constituted by the Government; and

(*b*) if so, whether the report has been received from the Committee?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) ஆம். இந்த அறிக்கையின் பரிந்துரைகள் மீது விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இ. எஸ். தியாகராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையின் பரிந்துரைகள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன என்பதை நான் அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த அறிக்கை பொதுத் துறை, நிதித் துறை, சட்டத் துறை ஆகியவற்றினால் ஆராயப்பட்டு, இந்தத் தொடர்க் கூட்டத்தில் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டுப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். இந்தத் தொடர்க் கூட்டத்தில் அது வைக்கப்பட இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: சர்க்கார் செலவிடக்கூடிய பணம் சரியான முறையில் செலவிடப்படவில்லை, அதனுடைய பலன் சரியான முறையில் இல்லை என்று சர்க்காருக்கு எதிராக (அட்வெர்ஸ்) அந்த ரிபோர்ட் கொடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால், இதை நிவர்த்திக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுப்பார்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த அறிக்கைக்கும் அந்த அறிக்கைக்கும் சம்பந்தம் இல்லை. இது, பள்ளிகளில் பணி

புரிகிறவர்களுடைய பணிகளைப் பாதுகாப்பதற்காகக் கொண்டுவரப்படுகிற சட்டமுன்வடிவாகும். அந்த அறிக்கையின்மீது சட்டமுன்வடிவு தயாரிக்கப்பட்டு, இந்தத் தொடர்க் கூட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

DR. H. V. HANDE: Sir, may I know the date on which this report was received and whether it is not a fact that there has been an inordinate delay even in the submission of the report and also after the report is submitted, there is inordinate delay on the part of the Government in implementing certain main recommendations in the report. Also may I know whether the Government, without waiting for the report to be placed on the table of the House, will at least implement some of the main recommendations and if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 18—6—1969 அன்று டாக்டர் பால் அவர்களுடைய தலைமையின்கீழ் குழு அமைக்கப்பட்டது. அவர்கள் தமிழகத்தினுடைய பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று, ஆங்காங்கு பலருடைய யோசனைகளையெல்லாம் கேட்டறிந்து, 23—2—1971 இல் அறிக்கை சமர்ப்பித்தார்கள். பிறகு அது பொதுத் துறைக்கும், நிதித் துறைக்கும், சட்டத் துறைக்கும் சென்றது. சட்டத் துறைக்குச் சென்றபோது அங்கே பல்வேறு வினாக்கள் எழுப்பப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டது. சிறுபான்மையினர் நலனைப் பாதுகாப்பதுபற்றியும், சொத்துக்களை எடுத்துக்கொள்ளும் பிரச்சினைகளைப்பற்றியும் அவர்கள் ஆராய்ந்தறிந்து, குடியரசுத் தலைவருடைய ஒப்புதல்பெற்றுதான், சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதற்குப் பிறகு, குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டு, அவருடைய ஒப்புதல் பெற்று, இந்த சட்டமன்றத் தொடர்க்கூட்டத்தில் இது சட்டமாக ஆக்கப்படுவதற்கு அறிமுகப்படுத்தப்படவும், பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவும் வைக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஒன்றரை ஆண்டுக் காலம் ஆகியும்கூட இதுவரையிலும் சபைக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த மசோதா வரும்போதாவது சபைக்கு முன்னால் அந்த அறிக்கையின் நகல் வைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது பற்றித் தனியாக ஆராயப்பட வேண்டும். அந்த அறிக்கையில் கண்டிருக்கிற கருத்துக்களை வைத்துத்தான் சட்டமுன்வடிவு உருவாக்கப்பட்டிருக்கிறது.

சட்டமுன்வடிவு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்போது, பல்வேறு பிரச்சினைகள் அதன் மூலமாக எழுப்பப்பெற்று, அதற்கு விளக்கங்கள் தரப்படுகிற சூழ்நிலை ஏற்படும்.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, கல்வித் துறையில் சீர்திருத்தங்கள் செய்வதென்பது ஆராயாமல் செய்கின்ற காரியமாக ஆகிவிடக்கூடாது. எனவே, கல்வித் துறையிலுள்ள எல்லோருடைய கருத்துக்களையும் கேட்டுச் செய்யவேண்டுமென்ற கருத்து வெளியிலேயுள்ள விற்பன்னர்களால் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்தை ஏற்று அரசு இந்த அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை அமல்படுத்துமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கல்வித் துறையிலுள்ள பல்வேறு விற்பன்னர்களுடைய கருத்துக்களை அறிந்து அதற்கேற்பவும், வேறு பல காரணங்களாலும் இதைப்போன்ற சட்டங்களெல்லாம் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்தச் சட்டங்களைப் பார்த்து, அதிலே எப்படிப்பட்டவைகளெல்லாம் எடுத்துக்கொள்ளப்பட முடியுமோ அவையெல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்த முறையில் சட்டமுன்வடிவு தயாரிக்கப்பட்டிருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, what are the terms of reference of the Committee and when is the report likely to be placed on the table of the House?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சாதாரணமாக தனியார் பள்ளிகளைப் பற்றிய பல்வேறு பொருள்களை ஆய்வு செய்து அரசுக்குப் பரிந்துரை செய்வதற்காக அந்தக் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கை அவையின்முன் வைக்கப்படுமுன் அது சரியாகப் பரிசீலிக்கப்பட வேண்டும். அந்த அறிக்கையின்மீதுதான் சட்டமுன்வடிவு தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் இந்த அவையின் இந்தத் தொடர்க் கூட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இந்த மசோதா குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டதாகவும் அது கையெழுத்திடப்பட்டு இப்பொழுது வந்திருப்பதாகவும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த மசோதா குடியரசுத் தலைவருக்கு எப்பொழுது அனுப்பப்பட்டது? அது எப்பொழுது இங்கே திருப்பி அனுப்பப்பட்டது? பொதுவாகவே குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்படுகிற மசோதாக்கள் காலதாமதமாகவே திருப்பியனுப்பப்படுகின்றன. அதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

[1972 ஆகஸ்ட் 9

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, காலந்தாழ்த்தி அவர்கள் அனுப்பினாலும், அதற்கென்று எடுத்துக்கொள்ளுகிற நேரத்தைத்தான் அவர்கள் எடுத்துக்கொள்ளுவார்கள். நான்கைந்து மாதங்களுக்கு முன்னால் அது அனுப்பிவைக்கப்பட்டது. அவர்களிடமிருந்து ஒப்புதல் வந்தபிறகு அது இந்தத் தொடர்க்கூட்டத்தில் வர இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்தக் குழுவின் முக்கியமான பரிந்துரைகள் அவ்வளவும் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றனவா? அப்படியானால் அந்த விவரங்கள் என்ன? வரப்போகிற மசோதாவில் அவை உட்படுத்தப்பட்டு இருக்கின்றனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்தக் குழுவின் பரிந்துரைகள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல, வேறு பல மாநிலங்களில் கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டங்களும் ஆராயப்பட்டு முக்கியமான அம்சங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

திரு. எம். சுரேந்திரன்: கல்விச் சீர்திருத்தக் குழுவுக்கு என்ன என்ன மாதிரியான விவரங்களைத் தயாரிக்கவேண்டுமென்று கட்டளையிடப்பட்டது? தனியார் பள்ளிகளை அரசாங்கமே எடுத்துக்கொள்வதா என்கிற கேள்வி இருந்ததா? அந்த மசோதாவின் தன்மை எந்த மாதிரியாக இருக்கும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பள்ளி நிர்வாக அமைப்புகள், வரலாற்றுப் பரிசீலனை, ஆசிரியர்களை வேலைக்குச் சேர்த்தலும் அவர்கள் பணி நிலைமையும், ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே எழும் தகராறுகளைத் தீர்த்தல், பொதுவான ஊதியத் திட்டங்கள், பணி விதிகள், விடுப்பு விதிகள், ஓய்வுகால இதர விதிகள், சட்டம் இயற்றல், நடைமுறைத்தை விதிகள், ஆசிரியரல்லாத பிற பணியாளர்கள், ஆசிரிய மாணவ விகிதம் முதலியவை மசோதாவில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அவர்கள் பரிந்துரையின்மேல் மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. விவாதத்திற்கு வரும்போது பூரணமாகப் பரிசீலிக்க வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: The Hon. Minister stated that the very Bill is based on the recommendations of the Committee? What is the difficulty in placing the very report on the table of the House?

1972 ஆகஸ்ட் 9]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த ரிப்போர்ட்டை வைப்பதில் தகராறு இல்லை. வேண்டுமானால் அந்த ரிப்போர்ட்டை வைப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. ஏ. எம். இராஜா: இதுபோன்று கல்விச் சீர்திருத்தக் குழு வேறு மாநிலங்களில் அமைக்கப்பட்டிருக்கிறதா? அந்தக் குழுக்களின் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டனவா? இந்தப் பரிந்துரைகளைச் செயல்படுத்த நமது அரசுக்கு ஆண்டொன்றுக்கு எவ்வளவு கூடுதலாகச் செலவாகும் என்று அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: வேறு மாநிலங்களில் இது போன்ற குழுக்கள் அமைக்கப்பட்டனவா என்கிற விவரங்கள் வில்லை. ஆனால் வேறு சில மாநிலங்களில் கல்விச் சீர்த்திருத்தத்திற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டங்கள் ஒப்பிடப்பட்டன. தேவையான நல்ல அம்சங்கள் நம்முடைய மசோதாவில் சேர்க்கப்பட்டிருக்கின்றன, மசோதாவை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும்போது அந்த முழு விவரங்களும் தெரியும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: May I know whether the Committee is purely an official Committee or does it contain non-official members also?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதிகாரப்பற்றுடையவர்களும், பற்றற்றவர்களும் இருக்கிறார்கள். பள்ளிக் கல்வி இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர், இணைப் பள்ளிக் கல்வி இயக்குநர், நிதித் துறை துணைச் செயலாளர் ஆகிய அதிகாரப் பற்று உடையவர்களோடு திரு அறிவழகன் எம். எல். சி., திரு. செ. முத்துசாமி எம்.எல் சி. திரு. சங்கரலிங்கம், எம்.எல்.சி., திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி, எம்.எல்.சி. திரு. ஜி. ஆர். தாமோதரன், தலைவர் எஸ்.ஐ.டி.யு., திரு. எஸ். நரசிம்மன். தலைமை ஆசிரியர், எம். சிடி. எம். உயர்நிலைப்பள்ளி, சென்னை, திரு. எஸ், மீனாட்சி சுந்தர முதலியார், தாளாளர், கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு, திரு. ஜே. ஆ. ஏர். ஆழ்வார், தாளாளர், முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளி, சென்னை ஆகிய இவர்கள் அத்தனைபேரும் இடம்பெற்றிருந்தார்கள்.

English Medium Classes

* 2. Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether this Government has issued a directive to the managements of schools stipulating the categories of students to be admitted in the English medium;

(b) if so, the details of the categories; and

(c) whether Government permission should be sought even before admission into English medium classes in respect of other students?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) 'வரையறைகள்' எவையும் விதிக்கப்படவில்லை. எனினும், ஏற்பளிக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில், ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவுகளில், மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளையில் பின்பற்ற வேண்டிய சில விதிமுறைகளைப் பள்ளிக் கல்வி இயக்குநர் வெளியிட்டுள்ளார்.

(இ) & (உ) அத்தகைய விதிமுறைகளின்படி, கீழ்க்காணும் வகைப்பாடுகளின்கீழ் வரும் மாணவர்களை ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவுகளில் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சேர்த்துக்கொள்ளலாம் :—

(1) பெற்றோர்களது தாய்மொழி தமிழாக உள்ளவர்களும், முன்னர் ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகளில் ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவில் பயின்றவர்களுமான மாணவர்கள்;

(2) தமிழைத் தாய்மொழியாகப் பெற்றவர்களும், தங்களது காலத்தில் இந்தியாவின் எந்த ஒரு பகுதிக்கும் மாற்றலாகக் கூடியவர்களுமான பணியாளர்களது குழந்தைகள்;

(3) பெற்றோர்களது தாய்மொழி தமிழாக இல்லாத குழந்தைகள்;

(4) (அ) தாய்மொழி தமிழாக உள்ளவர்களும், ஏற்பளிக்கப்படாத பள்ளிகளில் ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவில் பயின்று வந்தவர்களுமான மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படலாம். அதற்கான ஏனைய நிபந்தனைகளை அவர்கள் நிறைவு செய்யவேண்டும்;

(ஆ) தமிழ் தாய்மொழியாகப் பெற்றவர்களும் ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகளில் தமிழ்ப் பயிற்று மொழிப் பிரிவில் பயின்று வந்தவர்களுமான மாணவர்கள், ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவில் பயிலத் தகுதியுள்ளவரெனக் கண்டறியப்பட்டால் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படலாம். மேற்கூறிய வகைப்பாடுகள் அடங்கல் தன்மையுள்ளவை. மேற்கூறிய வகைப்பாடுகளில் அடங்காத மாணவர்கள் எவரேனுமிருந்தால் அவர்கள் மட்டுமே, ஆண்கள் உயர்நிலைப் பள்ளிகள் நேர்வில் மாவட்டக் கல்வி அதிகாரியின் திட்டவட்டமான முந்திய ஒப்புதலுடனும், பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் பெண்கள் பள்ளி ஆய்வாளரின் (மகளிர்) திட்டவட்டமான முந்திய ஒப்புதலுடனும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்.

DR. H. V. HANDE : From the answer it is obvious that there is heavy rush for this English medium from the students. This particular concession was brought about two years ago when orders were issued by the Director of School Education and it was rebutted by the school authorities. Statements were given. Appeals were made to Hon. Minister and the Hon. Minister gave a statement. Statements and counter-statements were given two years ago. Now I would like to know whether it is not possible for Government to issue clear instructions that whichever parent wants to admit his child in the English medium section should be given freedom to do so. Why should we limit it? Why should we prevent parents who are anxious to admit their children in English medium sections? Why can't we increase the number of English medium classes? What is the difficulty? Why should we completely prevent their aspirations and hopes?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆரம்பப் பள்ளியில் இருந்து மேல் வகுப்புகளில் மாணவர்களைச் சேர்க்கும்போது சங்கடங்கள் இருந்தன. ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பள்ளிகளில் இருந்து வருகிற மாணவர்கள் ஒப்பளிப்பு வழங்கப்படாத பள்ளிகளில் இருந்து வருகிற மாணவர்கள் என்கிற நிலையில் ஏற்படுகிற சங்கடங்களைக் களைவதற்காகத்தான் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பள்ளிகளில் இருந்து வருகிறவர்களைச் சேர்த்துக்கொண்ட பின்னர் ஒப்பளிப்பு வழங்கப்படாத பள்ளிகளில் இருந்து வருகிறவர்களையும் சேர்த்துக்கொள்ளலாம் என்பதாக இந்த உத்தரவு போடப்பட்டது. எல்லோருக்கும் இடம் கிடைக்கிறது. இப்போது எங்கும் இடர்பாடுகள் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. எந்தவிதமான சங்கடமும் இதனால் ஏற்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இங்கிலீஷ் மீடியம், வகுப்புக்கு ஒன்றுதான் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். அரசாங்க, கார்ப்பரேஷன் பள்ளிகளில் தமிழ் மீடியமே இருக்கிற காரணத்தினால் பலர் அன்ரெகக்னைஸ்டு இங்கிலீஷ் மீடியம் பள்ளிகளை அங்கங்கே ஏற்படுத்தி வருகிறார்கள். இதைத் தடுக்க அரசாங்க, கார்ப்பரேஷன் பள்ளிகளிலேயே இங்கிலீஷ் மீடியம் வகுப்புகளையும் ஏற்படுத்த அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முக்கியமான நகரங்களில் எல்லாம் தேவையான அளவுக்கு ஆங்கிலப் பயிற்சி வகுப்புகளைத் துவக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு செக்ஷன், இரண்டு செக்ஷன் கூட

நடைபெறுகிறது. இவை தவிர மெட்ரிக்குலேஷன் ஸ்கூல்ஸ் என்பதாகப் பல்கலைக் கழகத்தின் அனுமதிபெற்று பல பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. தமிழே பாடமொழியாக இருக்கவேண்டுமென்ற கொள்கை இந்த அரசாங்கத்திற்கு இருக்கிற காரணத்தினால்—ஆங்கிலத்தில் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்கிற கோரிக்கை வருகிற இடங்களில் மட்டும் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் அதனைப் பரிசீலித்து அனுமதி வழங்குகிற நிலை இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மலையாளம் போன்ற சிறுபான்மை மொழி தெரிந்திருக்கிற மக்கள் உள்ள இடங்களில் இந்தமாதிரித் தனி வகுப்புகள் ஏற்படுத்த அனுமதி கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அனுமதி கேட்டால் போதிய இடவசதி இல்லை என்கிற அளவுக்கு மறுக்கிறார்கள். அப்படிமறுக்காத அளவுக்கு அனுமதி வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மொழி சிறுபான்மையினருக்குப் பாதகம் ஏற்படாத வகையில்—தாய்மொழி தமிழ் அல்லாதவர்கள் படிக்கத் தக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அனுமதி கோரும் போது போதிய இடவசதியை அவர்கள் ஏற்படுத்தித் தரத்தான் வேண்டும். போதிய இடவசதி இருக்கிறதா என்பதை எல்லாம் ஆராய்ந்து பார்த்தே பள்ளிக் கல்வி இயக்குநர் அனுமதி வழங்குகிறார்.

Dr. H. V. HANDE : Sir, will it not be possible for the Government to take stock of the situation and find out the number of students that require English Medium instruction and the number of seats available and if the latter is less, to increase the same so that those people who want instruction in English medium will be satisfied by admitting their children in that class? This is such a simple thing. Cannot Government do this?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த எண்ணிக்கையைக் கணக்கெடுப்பது கொஞ்சம் கடினமான ஒன்று. கல்லூரிகளைப் பொறுத்தவரை, உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை இந்த எண்ணிக்கையை எடுக்கலாம். ஆனால், 6-வது வகுப்புவரை கணக்கெடுப்பது என்பது கடினமான ஒன்று. தேவைப்படுகின்ற இடங்களிலே தேவைப்படுகிற வசதி வாய்ப்புகள் செய்யப்படுகின்றன. இப்பொழுது தனியார்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்று 'மெட்ரிகுலேஷன் ஸ்கூல்ஸ்' வைக்கலாம். அங்கெல்லாம் ஆங்கிலத்திலே பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இப்படி அதிகமான இங்கிலீஷ் மீடியம் ஸ்கூல்ஸ் வேண்டுமென்று அரசுக்கு அப்ளிக்கேஷன்ஸ் வந்தது உண்டா ? அந்த அப்ளிக்கேஷன்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டனவா ? அல்லது நிராகரிக்கப்பட்டனவா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த அப்ளிக்கேஷன்கள் அரசாங்கத்திற்கு வருவதில்லை. பள்ளிக் கல்வி இயக்குநருக்கு விண்ணப்பிக்கிறார்கள். கூடுமானவரை எங்கெங்கு அனுமதி அளிக்கப்பட வேண்டுமோ அங்கெல்லாம் அனுமதி அளிக்கிறார்கள். பொதுவாக, அனுமதி வழங்குவதிலே ஏற்படுகிற சிக்கல்களைப் பொறுத்துத்தான் பள்ளிக் கல்வி இயக்குநர் அதைப் பற்றி முடிவு செய்கிறார்.

திரு. கே. எஸ். குப்பல் ராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, சில பள்ளிகளுக்கு ரெகக்னிஷன் கொடுப்பதில்லை. அந்தப் பள்ளி நிர்வாகிகள் சர்க்கார் வழங்குகிற உதவிப் பணம் கூடத் தேவை இல்லை, நாங்களே மாணவர்களுக்கு இலவச சாப்பாடு கொடுக்கிறோம், இலவச உடை கொடுக்கிறோம், இலவச இருப்பிடம் கொடுக்கிறோம் என்று கூறுகிறார்கள். இதற்கெல்லாம் சர்க்கார் மானியம் தேவையில்லை, வெறும் ரெகக்னிஷன் மாத்திரம் கொடுங்கள் என்று கூறுகிறார்களே, அந்தமாதிரி பள்ளிகளுக்கு, சர்க்கார் தலையிட்டு, அங்கீகாரம் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அங்கீகாரம் தருவதற்கு சில பல நிபந்தனைகள் இருக்கின்றன. அந்த நிபந்தனைகளை எல்லாம் முறைப்படி நிறைவேற்றுகிற பள்ளிகளுக்குத்தான் அங்கீகாரம் தரப்படும். அந்த நிபந்தனைகளை நிறைவேற்றாத நிலையில் அங்கீகாரம் தராத நிலை ஏற்படுகிறது. அந்தமாதிரி வைத்து அங்கீகாரம் அளித்தால்தான், அந்த நிபந்தனைகளை எந்த வகையிலே நிறைவேற்றுகிறார்கள் அல்லது மீறுகிறார்கள் என்பது தெரிய வரும்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவர் அவர்களே, நகர்ப்புறத்திலே இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு மட்டும் ஆங்கிலப் பயிற்சி மொழிக்கு வசதி செய்து கொடுக்கப்படுகிறதா ? அல்லது கிராமப்புற மக்களுக்கும் வசதியளிக்கும் முறையில், அங்கும் ஆங்கிலப் பயிற்சி மொழியிலே பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பெரும்பாலும் நகர்ப்புறங்களிலே இருக்கிற பள்ளிகளிலேதான் இந்த வசதி இருக்கிறது. நகரங்களிலே தேவையைப் பொறுத்து ஆங்கிலத்திலே பயிற்றுவிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

[1972 ஆகஸ்ட் 9

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, will the Government think of introducing English medium classes in villages also? When will the Government take steps to introduce that in villages ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பெரும்பாலும் தமிழ் மொழியிலே பாடம் சொல்லித்தரப்பட வேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதன் காரணமாக, எல்லாவிடங்களிலும் தமிழைப் பயிற்றுமொழி ஆக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்றியமையாத, தேவைப்படுகிற, அத்தியாவசியமான இடங்களிலே மட்டும்தான் ஆங்கிலத்திலே படிப்பதற்கு ஊக்கம் அளிக்கவேண்டும். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்கிற சூழ்நிலையை உருவாக்குகிற காரணத்தினால், அதற்கான அடிப்படையிலே திட்டங்கள் தீட்ட வேண்டும். இன்றியமையாத, தேவைப்படுகிற இடங்களிலே மட்டும், ஆங்கிலப் பயிற்சி மொழி முறை வரவேற்கப்படுகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, it has become the established fact that students belonging to linguistic minorities study only in English medium. May I know whether this restriction will be removed at least with regard to linguistic minorities ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மொழிச் சிறுபான்மையினருக்கு ஆங்கில வகுப்பில் சேர்ந்து படிப்பதற்கான வசதி வாய்ப்புகள் செய்து கொடுக்கப்படுகின்றன. அவர்களது மொழியிலே படிப்பதற்கு சூழ்நிலை இல்லாதபோது, ஆங்கிலத்திலே படிப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

மாலைநேரக் கல்லூரி தமிழ்ப் பாடமொழி மாணவர்கள்

*3 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாலைநேரக் கல்லூரியில் தமிழ்ப் பாடமுறையை ஏற்றுப் படிக்கும் மாணவர்களுக்குப் பகல்நேரக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிக்கும் உதவித் தொகை கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாலைநேரக் கல்லூரிகளில் தமிழைப் பாடமொழியாக ஏற்றுப் படிக்கும் மாணவர்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக இடத்தை ஒதுக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 9]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எங்கெங்கே மாலைநேர வகுப்புகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் மாணவர்கள் சேர்க்கையைப் பொறுத்து பாடங்கள் வகுக்கப்படுகின்றன. அதிக மாணவர்கள் சேருகின்ற பி.ஏ. வகுப்புகளில், மாணவர்கள் எண்ணிக்கையைப் பொறுத்து புதிய வகுப்புகள் திறக்கப்படுகின்றன.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, மாலைநேரக் கல்லூரிகளிலே இடம் கிடைத்தாலும், சில மாணவர்களுக்கு அந்தக் கல்லூரிக்கு அருகிலேயே உத்தியோகங்கள் மாற்றித் தரப்படாத காரணத்தால், அவர்களுக்குக் கல்லூரிக்குச் செல்வதிலே சில காலதாமதங்கள், கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை அரசு உணருமா ? அதை மாற்ற முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது தனி முயற்சியிலே அவர்கள் செய்ய வேண்டிய ஒன்று. மாணவர்கள் வசதிக்காக இப்பொழுது மாலைநேரக் கல்லூரிகள் நடத்தப்படுகின்றன. அவர்கள் தங்கள் வசதிக்கேற்றபடி, அவர்களாக முயன்று உத்தியோகங்களை அருகில் மாற்றிக்கொள்ள வேண்டும். அவர்களாக அவர்களுக்கேற்ற முறையில் வகுப்புகள் இருக்கின்றனவா என்று பார்த்துக் கொள்ளவேண்டும். மாறுதல்கள் மூலமாக ஏற்படுகிற சங்கடங்கள் இல்லாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். கூடுமான வரையில், அந்த அந்த இலாக்காக்கள் உதவி செய்ய முடியுமே தவிர, கல்வி இலாகா, அவர்கள் இருக்கிற இடங்களுக்கு அருகாமையிலேயே மாலைநேரக் கல்லூரியைக் கொண்டு வர முடியாது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்தமாதிரி மாலைநேரக் கல்லூரிகள், காலைநேரக் கல்லூரிகளுக்குச் சென்று படிக்க முடியாமல் இருக்கிற, பண வசதி இல்லாமல் இருக்கிற மத்திய தர மாணவர்களுக்கு, காலையில் அலுவலகம் சென்று மாலையில் கல்லூரிக்குச் செல்ல வசதி செய்யப்படும் முயற்சியில் இருப்பதால், அவர்களுக்காக, எம்.ஏ. இலக்கியம் போன்ற மாலைநேர வகுப்புகளை அதிகமாக்கி, விரிவாக்க அரசாங்கம் முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எம்.ஏ. வகுப்பு நடத்த வேண்டுமென்ற விண்ணப்பங்கள் பல்கலைக் கழகங்களுக்கு வந்திருக்கின்றன. பல்கலைக் கழகங்கள் அதை ஆராய்ந்து கொண்டிருக்கின்றன. அதற்கான வசதி வாய்ப்புகள் ஏற்பட்ட பிறகு, அதற்கான முயற்சிகளைச் செய்யலாம் என்று பல்கலைக் கழகங்கள் சொல்லியிருக்கின்றன.

[1972 ஆகஸ்ட் 9

தமிழாசிரியர்களின் ஊதியம்

*4 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முதல்நிலைத் தமிழாசிரியர்களையும், இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களையும் அடிப்படை ஊதியத்தில் ஒரே சம நிலையாக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை. ஆனால் முதல்நிலைத் தமிழாசிரியர் தகுதி பெற்றுள்ளோர் அனைவருக்கும் முதல் நிலைப் பதவிகள் கிடைக்கும்படி செய்ய 2,000 புதிய பதவிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, முதல் நிலை, இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் என்று எந்த அடிப்படையில் பிரிக்கப்படுகிறார்கள் என்று அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி.-யிலே தேர்வு பெற்று அதற்குப் பிறகு, வித்துவான் அல்லது புலவர் தேர்வு பெற்று, ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் முதல் நிலைத் தகுதி ஆசிரியர்களாகக் கருதப்படுகிறார்கள்.

பொதுக்கல்வி அடிப்படையில், எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெறாமல், புலவர் தகுதி மட்டும் பெற்று, ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் இரண்டாம் நிலை ஆசிரியர்களாகக் கருதப்படுகிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த இரண்டாம் நிலைத் தமிழ் ஆசிரியர்கள், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்றதற்குப் பின்னரும் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக வைக்கப்பட்டு, முதல் நிலைத் தமிழாசிரியர்களாக இன்னும் 200 பேருக்குக் கொடுக்கப்படாமல் இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறதே, அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இரண்டாம் நிலைத் தமிழ் ஆசிரியர்களாக இருப்பவர்கள் தனியாகப் பரீட்சை எழுதித் தங்களைத் தகுதி உள்ளவர்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்தத் தேர்வு பெற்றவர்களுக்கு வாய்ப்பு அளிக்கிற ஒரு நோக்கின் அடிப்படையில்தான் விகிதாசாரங்கள் அளிக்கின்ற முறையில் மாறுதல் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் தான் இந்த ஆண்டு இரண்டாயிரம் பேருக்குப் புதிய பதவிகள் அளிக்க ஒப்பளிப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது.

1972 ஆகஸ்ட் 9]

புகுமுக வகுப்புகளில் மாணவ, மாணவியர் சேர்ந்து கல்வி கற்றல்

*5 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் மாணவர்கள், மாணவியர் சேர்ந்து கல்வி கற்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். எங்கெங்கு மகளிர் கல்லூரிகள் இல்லையோ, அங்கெல்லாம் புகுமுக வகுப்பில் 1972—73-ல் மாணவர்களோடு மாணவிகளையும் சேர்த்துக்கொள்ள பல்கலைக் கழகங்களை அனுமதிக்கும்படி அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், அரசு கேட்டுக் கொண்டுள்ளது என்று தெரிவித்தார்கள். பல்கலைக் கழகங்கள் அதற்கு அனுமதி கொடுத்து விட்டனவா ? எந்தெந்தக் கல்லூரியிலே இருபாலரும் சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மதுரைப் பல்கலைக் கழகத்தின் கீழும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழும் இருக்கிற கல்லூரிகளில் பி.ஏ., பி.எஸ்.சி-க்கு மேற்பட்ட படிப்பு வகுப்புகளிலே பெண்களும் சேரலாம் என்று இருக்கிறது. புகுமுக வகுப்பிலே பெண்களைச் சேர்த்துக் கொள்வதிலே தான் தடை இருக்கிறது. 10 மைல் சுற்றுப்புறத்திலே பெண்கள் கல்லூரி இல்லாமலிருந்தால், 25 மாணவிகள் சேர முன் வந்தால், அங்கு ஒரு ஆண்கள் கல்லூரி இருந்து, இரண்டு பெண் ஆசிரியர்கள் அங்கு இருந்து, அவர்கள் தங்குவதற்கு மற்றுமுள்ள வசதிகளும் அவர்களுக்குக் கிடைத்தால், அந்தக் கல்லூரியில் பெண்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்று மதுரைப் பல்கலைக் கழகம் அனுமதி அளித்திருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகம் அதை ஆராய்ந்து அனுமதி அளிக்கும் அளவில் வைத்திருக்கிறது. செனட்டை கூட்டி, ஆராய்ந்து அனுமதி அளிக்கப்போவதாக அறிவித்திருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சென்னைப் பல்கலைக் கழகம் இனிமேல்தான் இதைப்பற்றி ஆராய்ந்து வேண்டிய வசதிகளைச் செய்ய வேண்டும் என்று சொன்னால் இந்த வருஷம் இங்கே பெண்களை ஆண்கள் கல்லூரிகளில் சேர்க்க முடியாத நிலைமைதான் வந்துவிடும். ஆகவே அவசரமாக சென்னைப் பல்கலைக் கழகத்தின் சிண்டிகேட்டைக் கூட்டி முடிவெடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ? மதுரைப் பல்கலைக் கழகத்தில் கண்டிஷன்ஸ் போட்டிருப்பதைப்

பார்த்தால்—10 மைல் 15 மைல் சுற்று வட்டாரத்திற்குள் பெண்கள் கல்லூரி இல்லையென்றால்தான் சேர்க்கப்படுவார்கள் என்று கண்டிஷன் போட்டிருக்கிறார்கள்—சேர்க்கமாட்டோம் என்று சொல்வதாகத்தான் அர்த்தம். எனவே 10, 15 மைல் சுற்று வட்டாரத்திற்குள் என்று இருப்பதை மாற்றி 3, 5 மைல் சுற்றுவட்டாரத்திற்குள் என்று போட்டால் நல்லது. அதைத்தவிர இரண்டு பெண் ஆசிரியர்களாவது அந்த ஆண்கள் கல்லூரியில் கேலிபார்த்தால்தான் பெண்கள் சேர்த்துக்கொள்ளப்படலாம் என்று வேறு கண்டிஷன் போட்டிருக்கிறார்கள். இதன் காரணமாக பெண்களைச் சேர்த்துக்கொள்ளமுடியாத நிலைமை ஏற்பட்டு அதனால் அவர்கள் கல்லூரியில் சேரமுடியாமல் பாதிக்கப்படுகிற நிலைமைதான் ஏற்படும். எனவே இத்தகைய முட்டுக்கட்டைகளையெல்லாம் நீக்கிவிட்டு பெண்களைச் சேர்த்துக்கொள்ளுமாறு மதுரைப் பல்கலைக் கழகத்தைக் கேட்டுக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதையெல்லாம் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவாக இருக்கிற சிண்டிகேட்தான் முடிவு செய்ய வேண்டும். அரசாங்கம் கேட்டுக்கொள்ளலாமே தவிர, பல்கலைக் கழகத்திற்கு உத்தரவிடமுடியாது. கல்லூரிக் கல்வி இயக்குநர் மூலமாகக் கேட்டுக்கொள்ளலாம். 10 மைல் சுற்றுவட்டாரத்திற்குள் இருக்கக்கூடாது என்ற அந்த அளவுக்காவது அவர்கள் முன்வந்தார்களே என்று சந்தோஷப்படவேண்டும். அதை வேண்டுமானால் எதிர்காலத்திலே தளர்த்துவதற்கு முயற்சிகள் செய்யலாம். ஆண்கள் கல்லூரியில் பெண்கள் சேரவேண்டிய நிலைமை ஏற்படுவதால் பெண் ஆசிரியர்கள் இருக்கவேண்டும்—ஓரிரு பெண் ஆசிரியர்கள் இருப்பது நல்லது தான்—என்று சொல்லப்படுகிறது. புகுமுக வகுப்பு மட்டும் இருக்கின்ற கல்லூரியில் எல்லாம் பொதுவாக ஆண்கள்தான் ஆசிரியர்களாக இருக்கிறார்கள். ஒருவராவது அஸிஸ்டெண்ட் புரபஸராக—பெண்—இருப்பது நல்லது என்பது வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அந்த முறையையே சென்னைப் பல்கலைக் கழகமும் பின்பற்ற வேண்டுமென்று சொல்லப்பட்டு, அதைப் பற்றி சிண்டிகேட்டில் விவாதிக்கப்பட்டு முடிவு எதுவும் எடுக்கப்படாமல் ஒற்றிவைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் வற்புறுத்தப்படுகிற நிலைமையிலே தான் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் மூலமாக சிண்டிகேட்டுக்கு இதைப் பற்றி நல்ல முறையில் எடுத்துச் சொல்லி ஆதரவு திரட்டும்படியாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, மதுரைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய விவேகானந்தா கல்லூரியிலே அமைச்சர் அவர்கள் கூறிய எல்லாத் தகுதி

களும் இருக்கின்றன. அப்படியிருந்தும் அங்கே பெண்களைச் சேர்ப்பதற்கு இன்னும் மதுரைப் பல்கலைக் கழகத்தினால் அனுமதி கொடுக்கப் படவில்லை. அதைப்பற்றி அரசாங்கம் தாக்கீது அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைப் பற்றிய முழு விவரங்களும் கூறக்கூடிய நிலையில் நான் இல்லை. எந்தக் கட்டத்தில் அனுமதி அளிக்காமல் இருக்கிறார்கள் என்பதுபற்றிய குறிப்பு என்னிடத்தில் இல்லை. அதைப்பற்றி விசாரித்து வேண்மொனால் பதில் கூறலாம்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: ஆண்கள் கல்லூரியில் பெண்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று சொல்லப்படுகிறது. வாலாஜா பேட்டையில் ஒரு பெண்கள் கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரிக்குப் போதுமான பெண்கள் வரவில்லை. அதன்காரணமாக அந்தக் கல்லூரியே நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்தப் பெண்கள் கல்லூரியில் ஆண்களைச் சேர்த்துக்கொள்வதற்கு ஏற்பாடுகளைச் செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆண்கள் கல்லூரியில் பெண்கள் வேண்டுமானால் சேர்ந்து படிப்பது முறையானது. பெண்கள் கல்லூரி என்பது பெண்களுக்கென்றே தனியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிற நிலையில் ஆண்கள் அங்கே சேர்ந்து படிக்கச் செய்யவேண்டுமென்று சொல்வது முறையல்ல. அப்படிச் சேர்ந்து படிக்கவேண்டுமென்று எண்ணுகின்ற பருவத்திலே மாண்புமிகு உறுப்பினர் இல்லை, அவருக்கு அந்த வாய்ப்பும் கிடையாது. (சிரிப்பு)

திரு. கோவை செழியன்: தலைவர் அவர்களே, ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கின்ற கல்லூரிகளிலே ஒழுக்கக் குறைவு ஏற்படாமல் இருப்பதற்காக பம்பாயில் பெண்கள் குட்டைப் பாவாடை அணிவதையும் ஆண்கள் டைட். பேன்ட்ஸ் அணிவதையும் தடை செய்திருக்கிறார்கள். அந்த முறையைத் தமிழகத்திலும் ஏற்படுத்த அரசு யோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த நிலை தமிழகத்திற்கு வந்து சேரவில்லை. வந்து சேராது என்றே நம்புகிறோம். ஒழுக்க முறைகளிலே எல்லோரும் கவனமாக இருக்கிறார்கள். தமிழகத்தின் கல்வி நிலையங்களில் கல்வி கற்கின்ற மாணவர்கள் ஓரளவிற்கு நல்ல முறையிலே ஒழுக்கக் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்கிறார்கள்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமானாலும் சிண்டிகேட் தடையாகவே நின்றுகொண்டிருக்கிறது. அதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இது இன்ஸினுவேஷன் இல்லையா?

MR. SPEAKER : The hon. Member, Thiru Ponnappa Nadar is insinuating his own Congress.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையிலும் எல்லாக் காரியத்தையும்பற்றி முடிவு எடுப்பது சிண்டிகேட்டாகத்தான் இருக்கிறது. எனவே அதுதான் முடிவு எடுக்க வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, ஒழுக்கத்திற்கு முதலிடம் தமிழ்நாடு என்ற பெயரைப் பெற்றிருந்தாலும் மாணவர்கள் முடியை நீளமாக வைத்திருக்கிறார்கள். இதனால் ஆண்களையே பெண்களா என்று சந்தேகப்படக்கூடிய நிலைமையில் அவர்கள் இருக்கிறார்கள். இதைப்பற்றி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படி முடி நீளமாக வைத்துக் கொள்வது நல்லதல்ல என்று கோவையில் மாணவர்கள் கூட்டத்தில் நான் பேசினேன். அப்பொழுது அதை எதிர்த்து எழுதியது உங்களுடைய கட்சிப் பத்திரிகைதான். அதை முதலில் திருத்தினால் மற்றவைகள் எல்லாம் திருந்தி விடும்.

THIRU B. VENKATASWAMY : Sir, in the entire Dharmapuri district, we are having only men colleges. So, may I request the Hon. Minister for Education to introduce the system of admission of girl students in the colleges at Krishnagiri and Dharmapuri?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பல்கலைக்கழகத்தின் ஆட்சி எல்லைக்குட்பட்டதாகும். சென்னைப் பல்கலைக் கழகம் இதைப்பற்றி முடிவு எடுத்து, அதற்குப் பிறகுதான் கிருஷ்ணகிரி, தர்மபுரி போன்ற இடங்களிலும் அந்த முடிவை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு யோசிக்க முடியும்.

அரிசன மாணவர் விடுதிகள்

*6 வினா—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் நகரில் அரிசன நல இலாகாவால் நடத்தப்பட்டு வரும் மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டும் என்று கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) அக்கோரிக்கையை அரசு பரிசீலனை செய்தது. ஆனால், தற்பொழுதுள்ள நிதிநிலை காரணமாக அதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவர் அவர்களே, இருபத்தைந்து ஆண்டுகளாக அந்த மாணவர்கள் விடுதி பெரம்பலூரிலே நடைபெற்று வருகிறது. ஒரு குறிப்பிட்ட இடத்திலே அதற்காகக் கட்டடங்கள் கட்டவேண்டுமென்று அந்த இடத்தை அதற்காகக் கையகப்படுத்துவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வருவாய்த்துறை வாரியத்தின் மூலமாகத் தலைமைச் செயலகத்திற்குத் தபால் அனுப்பி இருக்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மேலும் அதைப் பரிசீலனை செய்து 8,33,500 ரூபாய் மதிப்பீட்டுச் செலவிலே கட்டடம் கட்டப்பட வேண்டுமென்ற செயற்குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு அதற்குப் போதுமான அளவில் நிதிநிலைமை இடம் தராத காரணத்தினாலே எடுத்துக்கொள்ள முடியவில்லை.

*7 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஏழை அரிசன மாணவர்கள் மிகுந்துள்ள கும்முடிப்பூண்டியிலும், பெரியபாளையத்திலும் அரிசன மாணவர் விடுதிகள் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கும்முடிப்பூண்டியில் தாழ்த்தப் பட்டோருக்கான ஒரு அரசினர் மாணவர் இல்லம் 30 அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையுடன் ஏற்கெனவே இயங்கி வருகிறது. பெரியபாளையத்தில் தாழ்த்தப்பட்டோருக்கான அரசினர் மாணவர் இல்லம் துவக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசிடம் இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, கும்முடிப்பூண்டியிலே நான் இந்தக் கேள்வி கேட்பதற்கு முன்னால் இருந்த நிலைமை மாறி விடுதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்காக நான் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வினா காலதாமதமாக வந்திருக்கிறது. பெரியபாளையத்திலே அரிசன மாணவர்கள் இப்பொழுது தங்கிப் படிக்க வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே பெரியபாளையத்திலே மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு ஏற்றவகையிலே ஒரு விடுதியைக் கட்ட அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இதுவரையில் இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து குறிப்பு வரவில்லை. அவசியத்தை முன்னிட்டு செயற்குறிப்பு வருமானால் அதைப்பற்றி யோசிக்கலாம்.

Civil Supplies Corporation

* 8. *Q.*—THIRU N. K. PALANISAMY—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the functions of the State Food Corporation constituted during 1972?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு இன்றியமையாத எந்தெந்த உணவுப் பொருள்கள் குறித்துத் தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கல் கழகம் அரசு வாணிகம் செய்யவேண்டிய தேவையிருக்குமோ, அவ்வப்போது அக் கழகம் அத்தகைய வாணிகம் செய்யும் பொறுப்பையேற்கும்.

திரு. என். கே. பழனிசாமி: சார், இப்பொழுது இந்த உணவுக் கார்ப்பரேஷன் கொள்முதல் செய்து சென்னையிலே மட்டுந்தான் விநியோகம் செய்கிறது. அதற்குப் பதிலாக மாவட்டங்கள் பூராவிலும் அரசு எல்லா அத்தியாவசியப் பொருள்களையும் சர்க்கரை போன்ற பொருள்களையும் குறைந்த விலையில் மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு சர்க்காரிடம் திட்டம் இருக்கிறதா? அதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, சென்னையில் மட்டும் அல்ல, கோவையிலும், இதுபோன்ற பங்கீட்டுக் கடைகள் வைத்து அரிசி கொடுக்கிறோம். தமிழ் நாட்டைச் சுற்றி 5 மைல் பெல்ட் ஏரியாவில் இதுபோல் செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் குடும்பக் கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆங்காங்கு சர்க்கரை விநியோகிக்க அனுமதித்து சர்க்கரை கொடுக்கிறோம். தேவைப்படும் நேரத்தில், அரிசி விலை கூடுதலாக

ஆகிறது என்று மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்கள் கூறினால் ஆங்காங்கு கடைகள் திறந்து கொடுக்கவும் தயாராக இருக்கிறது. அதற்கு நிறைய அரசாங்கத்திடம் இருப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இப்பொழுதே அரிசியின் விலை மிகவும் உயர்வாக இருக்கிறது. பச்சையரிசி 3 ரூபாய் 20 காசு என்றும், புழுங்கல் அரிசி 2 ரூபாய் 20 காசு என்றும் விற்கிறது. இதுவரை மாவட்ட கலெக்டர்கள் விலை ஏறியிருப்பதைப்பற்றித் தெரிவித்திருக்கிறார்களா இல்லையா? ஏன் இன்னும் நியாய விலைக்கடைகள் ஆரம்பிக்கப்படவில்லை? மேலும் பருப்பு, எண்ணெய் ஆகியவற்றின் விலை நாளுக்கு நாள் விஷம்போல் ஏறுகிறதே, அதைப்பற்றி இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு மாவட்ட அதிகாரிகள் கொண்டு வரவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அரிசியைப் பொறுத்தவரையில் அரசாங்கத்திடம் இருந்த தகவலைச் சொல்கிறேன். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு விலை கூடுதலாகவில்லை. 5 காசு குறைவாக இருப்பதாகத்தான் தகவல் இருக்கிறது. எங்கெங்கு தேவைப்படுகிறதோ, அங்கே திறப்பதற்குத் தயார். சென்னையைப் பொறுத்தவரையில் இரண்டாயிரம் டன்கள் பச்சையரிசி ஆந்திராவிலிருந்து வாங்கி, எஃப். சி. ஐ. மூலம் கொடுத்திருக்கிறோம். தேவைப்பட்டால் எங்கு வேண்டுமானாலும் திறப்பதற்குத் தயாராக இருக்கிறோம். பருப்பு போன்ற பொருள்கள் சம்பந்தமாகவும் எஃப். சி. ஐ. யிடம் தொடர்பு கொண்டிருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, 5 மைல் பெல்ட் ஏரியா என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் விநியோகிக்கும் அரிசியின் அளவு குறைவாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இந்தக் கார்டு முறை எல்லோருக்கும் கிடைக்கவில்லை. எனவே, அந்த பெல்ட் ஏரியாவில் உடனடியாக அனுமதித்த குவான்டிட்டி கிடைப்பதற்கும், கார்டுகள் வழங்குவதற்கும் கன்னியாகுமரி மாவட்டத்தில் என்னுடைய தொகுதியிலே ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, திரு. பொன்னப்ப நாடார் அவர்களுடைய தொகுதி மட்டுமல்ல, எங்கெங்கு குடும்பக் கார்டுகள் கொடுக்காமல் இருக்கிறதோ, அதைப்பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். கொடுக்கும் அரசியின் அளவு குறைவாக இருக்கிறது என்று தெரிவித்தார்கள். அதைப்பற்றி எழுதினால் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

DR. H. V. HANDE : May I know whether it is not a fact that there is a common feeling that F.C.I. and State Food Corporation (S.F.C.) are indulging in unhealthy competition and if so, will the Hon. Minister clarify that it is not so, with proper authority? May I also know from the Hon. Minister the number of persons who have been appointed by Government for collecting foodgrains on behalf of Government for the State Food Corporation and if some people have been appointed may I know on what basis they have been appointed? May I know the details?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஏற்கனவே அரசாங்கத்தின் நிலை விளக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் வைத்திருக்கின்ற எஃப்.சி.ஐ.க்குத் தமிழ்நாடு அரசு வைத்திருக்கின்ற ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் போட்டியாக இல்லை. பொதுமக்களுக்கு இன்னும் கொஞ்சம் வசதிக்காகவும், வேகமாகக் காரியம் ஆற்றுவதற்கும் ஏற்பட்ட அமைப்பாகும். மத்திய சர்க்காரின் சார்பில் கிடங்கு துவக்கப்பட்ட நேரத்தில் நான் தெரிவித்தேன், எஃப்.சி.ஐ.யின் மூலமாக ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்குப் பொருள்களை வழங்கும் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டால் நல்லது என்று தெரிவித்தேன். எனவே, அதற்குப் போட்டியாக இல்லை. எஃப்.சி.ஐ.யைப் பொறுத்தவரையில் பல்வேறு இடங்களில் ஏற்பாடு செய்து அரிசி மற்ற பண்டங்களை வாங்குவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் இல்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், குறுவை அறுவடை வருகிறது என்றால் சென்ற முறை எஃப்.சி.ஐ. வாங்க வேண்டுமென்று சொன்னோம். ஆனால் அவர்கள் வாங்கவில்லை. அதற்கு முன் எஃப்.சி.ஐ.யிடம் விட்டோம். எஃப்.சி.ஐ. வாங்குவது போதாது என்று இந்த மன்றத்தில் தெரிவிக்கப்பட்டபிறகு முதலமைச்சரவர்கள் அரசாங்கத்தின் சார்பில் வாங்க வேண்டுமென்று கூறியதன்பேரில், இதை ஆரம்பித்தோம். இந்த ஆண்டு எஃப்.சி.ஐ.யிடம் கொடுப்பதற்கு முடிவு செய்திருக்கிறோம். எனவே அதற்குப் போட்டியாக இல்லை. அடுத்து, ப்ரொக்யூர்மெண்ட் ஏஜண்டைப்பற்றித் தெரிவித்தார்கள் என்று நினைக்கிறேன். யார் வேண்டுமானாலும் வரலாம். குறிப்பிட்ட 50, 51 பேர்தான் இருக்கிறார்கள் என்ற தவறான எண்ணம் தேவையில்லை. ஆனால் ஏற்கனவே ப்ரொக்யூர்மெண்ட் ஏஜண்டாக இருந்து அரசாங்கத்திற்கு நிலுவை செலுத்த வேண்டுமென்று இருக்கின்றவர்களை எடுத்துக் கொள்ள முடியாது. பாக்கியைக் கொடுக்கவேண்டும். பல பேர் எப்.சி.ஐ.யிடம் லட்சக்கணக்கான ரூபாய்களைப் பாக்கி வைத்திருக்கிறார்கள். அவர்கள் ப்ரொக்யூர்மெண்ட் ஏஜண்டாக வரவேண்டுமென்று கேட்டால் அரசு சார்பில், அங்கு கொடுக்க வேண்டிய பாக்கிகளைத் தீர்த்துவிடுங்கள் என்று சொல்லி

யிருக்கிறோம். எனவே, நியாயமாக நடக்கும் வியாபாரிகளை நியமித்திருக்கிறோம். நிலுவை பாக்கி வைத்திருப்பவர்கள் நிலுவையைக் கட்டிவிட்டால் நியமிப்பது பற்றி ஆட்சேபணை இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், தமிழக அரசு அமைத்த ஃபுட் கார்ப்பரேஷன், எஃப்.சி.ஐ.யிலிருந்து தானியம் வாங்குவது நல்ல செய்தி. ஆனால் 5 மைல் பெல்ட் ஏரியாவில் ஃபுட் கார்ப்பரேஷன் மூலம் சப்ளை செய்வதற்குக் கார்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா? தனியாருக்கு உணவு சப்ளை பர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறதே. சென்ற மாதம் கூடலூரில் சில தனி நபர்களிடம் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது தடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, பெல்ட் ஏரியாவில் ஃபுட் கார்ப்பரேஷன்மூலம் கொடுக்கப்படுகிறது என்று சொல்லவில்லை. பெல்ட் ஏரியாவில் அரிசி விநியோகிக்கப்படுகிறது என்று சொல்கிறேன். மாவட்ட ஆட்சி மன்றத் தலைவருக்கு அனுமதி அளித்து தேவையான அரிசியை எடுத்துச் செல்வதற்கு அரசாங்கம் கட்டுப்பாடு விதித்திருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, பெல்ட் ஏரியா என்று சொல்லப்படும்பொழுது, குடும்பக் கார்டுக்கு அரிசி விநியோகம் செய்தாலும் மற்றப் பொருட்களின் விலை ஏறியதில் கடந்த 4 மாதங்களில் கிட்டத்தட்ட 50 புள்ளி உயர்ந்திருப்பதால் ஆலைகளில் சில சிக்கல்கள் வருகிற நிலை ஏற்படும். எனவே, அது சம்பந்தமாக விலையேறாமல் தடுக்க அரசாங்கத்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நாட்டிலே விலையைக் கட்டுப்படுத்தி விலையைக் குறைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதே நேரத்தில் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டுமென்றும் சொல்கிறார்கள். இரண்டையும் பார்த்து அரசாங்கம் எது உசிதம் என்று கருதுகிறதோ, அதைச் செய்கிறது.

Stock of Rice

* 9. *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether there was any stock of rice in excess of its requirements as on 31st May 1970 with the Government; and

(*b*) if so, the quantity of rice that was available for disposal and the method by which it was disposed?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) சில வகை இருப்புகள் தரக்குறைபாடுகள் காரணமாக உள்ளூர்ப் பொதுமக்களால் ஏற்கப்படாத வையாக இருந்ததால், வெளி மாநிலங்களுக்கு, அனுப்பப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மூலம் விற்கப்பட்டன. இம்முறையில், 41,157 டன் விற்கப்பட்டது.

DR. H. V. HANDE: Is it not a fact that just like this on several occasions we come to understand that large quantities of rice are kept idle or improperly stored in godowns as a result of which they get spoiled? In case where they get spoiled, may I know from Government as to the steps taken by them to pin point the responsibility on the persons concerned and what are the steps taken by this Government to see that such things are not taking place again. There is no point in disposing it as second-rate rice or in auction, 'ஏலம்'. We must see that these things do not happen. It is public loss. May I know the steps taken by Government to prevent deterioration of rice, to see that the rice is properly stored and pinpoint the responsibility for loss on the persons concerned?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இது, 70-ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒன்றாகும். அப்பொழுது மாதம் ஒன்றுக்கு 60,000 டன் விநியோகத் தில் இருந்தது. நாம் உணவுக் கட்டுப்பாட்டை ரத்து செய்தவுடன் மாதம் 15,000 டன் விநியோகிக்க வேண்டியிருந்தது. எனவே. 60,000 டன் கொடுக்க வேண்டிய நிலையிருந்தபொழுது கையிருப்பில் இருந்ததைச் சேமித்து வைத்ததால், அரசாங்கத்தின் கிடங்குகளில் நீண்ட நாட்கள் இருந்ததால் குறுவை காலத்தில் அறுவடை செய்ததை, மழைக் காலத்தில் கொண்டு வந்து ஈரத்துடன் இருந்ததால் அதில் சேதம் ஏற்படக் கூடாது என்பதற்காக விற்றுவிட்டோம். இப்பொழுது அரசாங்கம், அதிக் நாட்கள் சேமிப்பில் இல்லாமல் இருக்க வேண்டும் என்றும், அரிசி தேவைப்படும் நேரத்தில் அனுப்ப வேண்டும் என்ற நிலையிலும் இருக்கிறது. சில தவிர்க்க முடியாத காரணங்களினால் அரிசி ஈரத்தோடு இருந்தால் நாற்றம் ஏற்பட்டு வண்ணமும் மாறுகிறது. அவைகளைத் தடுக்க முடியாது. இருப்பினும் அவைகளையும் தடுப்பதற்கு என்னென்ன சாத்தியக் கூறுகள் உண்டோ, அதற்கான நடவடிக் கைகளை எடுத்து வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், அரசாங்கக் கிடங்குகளில் நெல்லை எத்தனை நாட்களுக்கு வைத்துக் கொள்ளலாம் என்ற விதி அதிகாரிகளுக்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா இல்லையா? ஏனென்றால், பார்த்து அனுப்புங்கள் என்றால், மெதுவாகப் பார்த்து கெட்டவுடன்தான் அனுப்புவார்கள். இந்தந்த

ரகத்தை இந்தந்த அளவிற்கு நாம் வைத்துக்கொள்ளலாம் என்று திட்ட வட்டமான 'கைட் லயன்ஸ் டு தி ஆபீசர்ஸ்' அனுப்பப்பட்டிருக்கிறதா? இப்பொழுது ஏதாவது கொஞ்சம் மங்கலாக, தரக்குறைவாக இருந்தால் அதை வெளி மாநிலங்களுக்கு அனுப்பாமல் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தை மீண்டும் புகுத்தி அதை விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, வெளி மாநிலத்திற்கு அரிசி ஏற்றுமதி செய்வதில்லை, ஏலம் விடுவதில்லை. பொதுவாக இந்த அரசாங் கத்தின் கையில் சுமார் 1 லட்சம் டன் அரிசி இருப்பு இருக்கிறது. இதில் எந்தெந்த ரகங்கள் என்ற கணக்கு இருந்தாலும், இத்தனைநாள் பரிசோதனை செய்து அனுப்பச் சொல்லுங்கள் என்று சொன்னாலும், சில தவிர்க்க முடியாத நேரங்களில் அப்படிப்பட்ட சேதம் ஏற்படும் நேரத்தில் அதை இங்குதான் விற்கும், அது ஏற்றுமதி செய்யப்படாது. கூடியவரையில் சேதம் ஏற்படாமல் அரசாங்கம் பார்த்துக்கொள்ள ஏற்பாடு செய்திருக் கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, நமது நாட்டில் போதுமான அளவில் உற்பத்தி இருந்தும் கூட, சாதாரணமாக படி அரிசி ரூ. 3 என்ற நிலை யில் இப்பொழுது விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, நியாயவிலைக் கடைகளுக்குத் தேவையான அரிசியைக் கூடுதலாக வாங்க அரசு முன்வருமா? குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்பொழுது அரிசி விலை ரூ. 3 என்ற நிலையில் விற்கப்படுகிறது. ஆகவே, அங்கே போதுமான அரிசி விநியோகிக்கப் படுமா? பெல்ட் ஏரியா நீங்கலாக உள்ள பிரதேசத்தில் அரிசி நடமாட்டத்தைத் தடை செய்கின்ற முறையை மாற்றுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கன்னியாகுமரிப் பகுதியிலே அரிசி நடமாட்டம் தடுக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் ஏராளமாகக் கள்ளக்கடத்தல் இருப்பது தான். கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்கு அரசாங்கத்தோடு பொது மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் அரிசி கடத்தப்படுவதைப் பிடித்துக்கொடுத்தால், அப்படிப் பிடித்துக்கொடுப் பவர்களுக்கு, பிடித்து கொடுத்த அரிசியின் மதிப்பில் 10 சத விகிதம் ரூ. 10,000 இருந்தால் கூட அதில் 10 சத விகிதம் சன்மானமாக வழங்கப்படுகிறது அரசின் சார்பில். அதேபோலத் தான் சேமித்து வைக்கப்பட்டிருப்பது பற்றி தகவல் கொடுத்தாலும், அப்படித் தகவல் தருபவர்களுக்கு ரூ. 1,000 வரையில் சன்மானம் வழங்கப்படும் என்றும் அரசு அறிவித்திருக்கிறது. அப்படியிருந்தும் கூட கன்னியாகுமரி மாவட்டத்திலும், கோவையில் சில ஓரப்பகுதிகளிலும் கள்ளக்கடத்தல் இருந்து கொண்டிருக்கிறது. அதைத் தடுப்பதற்கு ஆங்காங்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி

[1972 ஆகஸ்ட் 9

மாவட்டத்திற்கு அரிசி கூடுதலாக அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அதுபோல தெரிவித்ததற்கு நான் அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறேன், அதைப்பற்றி எழுதி அனுப்பினால் அது குறித்து அரசு பரிசீலித்துத் தகுந்த முடிவு எடுக்கும் என்று தெரிவித்திருக்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : அமைச்சர் அவர்கள் கூறுகின்றபொழுது சரியான அரிசி, நெல் கொள்முதல் செய்யாததனால், சில குறைகள் ஏற்பட்டு, நஷ்டம் ஏற்பட்டது என்று சொன்னார்கள். அப்படி அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இப்பொழுது லாபமும் இல்லாத அளவுக்கு நஷ்டமும் இல்லாத அளவுக்கு, லாப நஷ்டம் இல்லாத அளவுக்கு அரிசி விற்கப்படுகிறது. அப்பொழுது நஷ்டம் ஏற்பட்டது என்று சொல்ல முடியாது. அந்த ஆண்டைப் பொறுத்த வரையில் விற்றதில் லாபம் தானே தவிர நஷ்டம் இல்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : உறுப்பினர் அவர்கள் கேட்டது மொத்தம் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது என்பது. மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே . . . .

MR. SPEAKER: Is the hon. Member putting his question or is he renewing the question of the hon. Member Thiru Subbiah?

டாக்டர் எச். வி. ஹாண்டே : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நாற்றம் பிடித்த அரிசி எங்கே இருக்கிறது என்று இனி யாவது பார்த்துத் தக்க நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். இப்பொழுது கூட பல நாட்களாக பல இடங்களில் கார்டுகளுக்குக் கொடுக்கப்படும் அரிசி சரியாக இல்லை என்று புகார்கள் வந்திருக்கின்றன. என்னிடம் கூட 10, 15 சாம்பிள்கள் வைத்துக்கொண்டிருக்கிறேன். அதுபற்றி பல தடவை சட்ட மன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்லும்பொழுது, எந்தக் கடைகளில் அந்தமாதிரி அரிசி இருக்கிறது என்று பார்த்து, அதை எடுத்துக்கொண்டு வேறு ஏதாவது அரிசியை விற்கக்கூடிய அந்தப் போக்கை மாற்றி கோடவுன்களையெல்லாம் சரியான வகையில் செக் செய்து, எங்கெங்கே அரிசி எப்படி கெட்டுப்போயிருக்கிறது என்று பார்த்து, அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து, அதை வேறு வகையிலே விநியோகம் செய்வதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதே நேரத்தில் அதற்கு யார் காரணம் என்று கண்டுபிடித்து, அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படி இரண்டையும் செய்வதற்கு அரசு முன்வருமா?

1972 ஆகஸ்ட் 9]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு கிடங்கிலும் அரிசியைக் கொண்டு வந்து கொடுக்கும்பொழுது அந்தக் கிடங்கு அதிகாரி அதனுடைய சாம்பிளைப் பார்த்து பரிசீலனை செய்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற முறையை வைத்திருக்கிறோம். அரிசியைக் கொண்டு வந்து கொடுக்கும்பொழுது ஈரப்பசையோடு கொண்டு வந்து கொடுக்கிறார்கள். அங்கு இருக்கும் அதிகாரிகள் அதைச் சரிவர பார்ப்பதில்லை. யார் கொண்டுவந்த அரிசி கெட்டுப்போயிருக்கிறது, யார் அதைச் சரியாகப் பார்த்து வாங்கவில்லை என்றெல்லாம் கணக்கு எடுத்துப் பார்ப்பது என்பது இவ்வளவு பெரிய நிறுவனத்தில் சாத்தியமான காரியமல்ல. இருந்தாலும் யார் மீது தவறு என்று கண்டுபிடிக்கப்பட்டால், அவர் மீது அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கிறது. தமிழ் நாட்டில் கெட்டுப் போன அரிசி இப்பொழுது இருப்பில் சுமார் 5,000 டன் இருக்கும். அது கெட்டுப் போனது கூட அல்ல. ஈரப்பசையினால் வண்ணம் மாறி சிவப்பாக இருக்கிறது. வியாபாரிகள் ஈரப்பசையோடு கிடங்குகளில் கொண்டு வந்து போடுவதால், அதை அப்படியே மூட்டையாக அடுக்கி வைக்கும்போது, குபு குபு என்று ஆவி ஏற்பட்டு, மண்கட்டி மாதிரி ஒன்றோடு ஒன்று பிடித்துக்கொண்டு வண்ணம் சிவப்பாக மாறிவிடுகிறது. அதை மறுபடியும் ஹல்லரில் கொடுத்து பாலிஷ் செய்து விற்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. கெட்டுப்போன அரிசி விநியோகிக்கப்படுகிறது என்று அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தால், அந்த அரிசியை மாற்றி வேறு நல்ல அரிசி விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்கிறோம்.

முன்னாள் கைதிகள் உதவிச் சங்கம்.

***10 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் சிறையிலிருந்து விடுதலையாகும் கைதிகளுக்கு உதவிபுரியும் அமைப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதில் யார் யார் அங்கம் வகிக்கின்றார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) உண்டு. மாநில, மாவட்ட அளவில் முன்னாள் கைதிகள் உதவிச் சங்கங்கள் இருக்கின்றன.

(இ) (1) சென்னை மாநில முன்னாள் கைதிகள் உதவிச் சங்கம், சென்னை.

தலைவர் :

தலைமைச் செயலாளர், மாநில அரசு.

அங்கத்தினர்கள் :

(1) மாநில காவல்துறைத் தலைவர்

(2) மாநில சிறைத்துறைத் தலைவர்

(3) காவல் ஆணையாளர், சென்னை

(4) குற்றவியல் மாநகரத் தலைமை நீதிபதி

(5) தலைமை நன்னடத்தை அலுவலர்

(6) கண்காணிப்பாளர், மத்திய சிறை, சென்னை

(7) மாநில அரசு நியமன உறுப்பினர்கள் (ஐவர்).

(8) மாவட்ட சங்கப் பிரதிநிதிகள்

(9) முன்னணி சமூக ஊழியர்கள், பெரு வணிகர்கள், பிரமுகர்கள் ஆகியோர்.

(2) மாவட்ட முன்னாள் கைதிகள் உதவிச் சங்கம்.

தலைவர் : மாவட்ட ஆட்சித் தலைவர்.

அங்கத்தினர்கள் :

(1) மாவட்ட குற்றவியல் அமர்வுமன்ற நீதிபதி

(2) மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்

(3) கண்காணிப்பாளர், உள்ளூர் மத்திய சிறை

(4) வருவாய்த்துறை கோட்ட ஆட்சியாளர்

(5) வட்டார நன்னடத்தை அலுவலர்

(6) நன்னடத்தை அதிகாரி

(7) முன்னணி சமூக ஊழியர்கள், பெரு வணிகர்கள், பிரமுகர்கள் ஆகியோர்.

திரு. என். கிட்டப்பா : இப்பொழுது சிறையிலிருந்து வெளியே வரும் கைதிகளை தொழில் துறையில் ஈடுபடுத்த அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இரண்டு சங்கங்களும் என்னென்ன உதவிகளைச் செய்ய முடியுமோ அவைகளையெல்லாம் செய்து கொண்டு வருகின்றன. சுமார் 8 வகையான உதவிகளைச் செய்துவருகிறார்கள். அவற்றிலே ஒன்று அங்கத்தினர் குறிப்பிட்டது போல வேலை வாய்ப்பைத் தேடித் தருவது.

சிறைக் கைதிகளுக்கு அஞ்சல் அட்டைகள்

*11 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கைதிகளாக மத்திய சிறைச்சாலைகளில் உள்ளவர்களுக்கு மாதம் எத்தனை அஞ்சல் அட்டைகள் வழங்கப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாடு சிறைகள் சீர்திருத்த நடைமுறைக் கையேடு 2-ம் பகுதியில் உள்ள விதி எண் 426 பி-ன் படி "சி" பிரிவு கைதிகள் எல்லோரும் வாரத்திற்கு ஒரு கடிதம் எழுதலாம். வரப்பெறலாம். கடிதம் எழுத விரும்பும் கைதிகளுக்கு, செலவைச் சுருக்க வேண்டி அரசு முத்திரையிட்ட அஞ்சல் அட்டைகள் வழங்கப்படுகின்றன. "ஏ" & "பி" பிரிவு கைதிகளுக்கும் இது பொருந்தும்.

நன்னிலத்தில் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு

*12 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் நன்னிலத்தில் புதிதாக சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டு ஒன்றினைத் துவக்கிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

மருத்துவர்களுக்கு நிதி உதவித் திட்டம்

*13 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நர்சிங் ஹோம், சோதனைச் சாலை, ஆஸ்பத்திரி போன்றவைகளைக் கட்டுவதற்குக் கடன் தரும்படி தமிழ்நாடு தொழில் முதலீடு கார்ப்பரேஷனை அரசு கேட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (கால்நடை மருத்துவர்கள் உட்பட) மருத்துவர்கள் கிராமப்பகுதிகளில் மருத்துவத் தொழில் நடத்தவும், வேலையில்லாத மருத்துவர்கள் கிராமப் பகுதிகளில் ஆதாயம் தரத்தக்க வேலையைத் தாமே மேற்கொள்ள அவர்களுக்கு ஊக்கமளிப்பதற்கும் "கிராம மருத்துவர்களுக்கு நிதியுதவி" அளிப்பதற்கான திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அண்மையில் கொண்டு வந்துள்ளது. தனி மருந்தகங்கள், தனி மருந்தக ஆய்வுக் கூடங்கள் ஆகியவற்றை அமைக்கவும் சாதனங்கள் வாங்கவும் தனி மருத்துவ மனைக்கான கட்டிடங்கள் கட்டுதல் முதலியவற்றிற்கும் மருத்துவர்களுக்குத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் நிதியுதவி அளிக்கும்.

Manufacture of Basic Medicines

*14. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to have the basic medicines manufactured at Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: இப்பொழுது ஆரம்பச் சுகாதார நிலையங்கள், மருத்துவ மனைகள் ஆகியவைகளுக்குத் தேவையான மருந்துகள் கிடைக்கவில்லை என்ற குறைபாடுகள் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அதைத் தடுக்க இவ்வாறு தேவையான மருந்துகள் தயாராக ஆதரவாக இருக்கும்படி அதற்கான நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அது பொது நலத் துறையிலே கேட்க வேண்டிய கேள்வி. இப்பொழுது தமிழ் நாட்டிலே ஐந்து தொழிற்சாலைகள் மருந்துகள் தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கின்றன. ஐ.வி.ஐ. என்ற ஒரு பெரிய நிறுவனம் சுமார் 233 லட்சம் செலவில் ஒரு புதிய தொழிலை மருந்து உற்பத்திக்காகத் தமிழ் நாட்டில் தொடங்கவேண்டும் என்ற முயற்சியைப் பல ஆண்டுகளாக எடுத்துவருகிறார்கள். நம்முடைய அரசின் சார்பிலே செய்யவேண்டிய உதவிகளையெல்லாம் அவர்களுக்குச் செய்துவிட்டோம். மத்திய அரசு இன்னும் அதைப்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

சாணூர்பட்டி, வட மதுரை வட்டாரத்தில் நில நீர்வள ஆய்வு.

*15 வினா—**திரு. க. நாகராஜன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

Ground Water Cell அமைப்பின் மூலம் சாணூர்பட்டி, வட மதுரை, ஆகிய வட்டாரங்களில் நிலநீர்வளம் குறித்து ஆய்வு நடத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

திரு. க. நாகராஜன்: தலைவர் அவர்களே, சாணூர்பட்டி, வடமதுரை ஆகிய வட்டாரங்களில் நிலநீர்வளம் குறித்து ஆய்வு நடத்தப்படாத நிலையில் கூட பினான்ஷியல் இன்ஸ்ட்டிடியூஷன் எதுவும் கிணறுகளை ஆழப்படுத்துவதற்குக்

கடன் வழங்க முன்வருவதில்லை. எனவே, விரைவிலே ஆய்வு நடத்திவிட்டால் ஒன்று கடன் வழங்கக்கூடாது என்று ஒரு குறித்த சட்டம் இயற்ற வாய்ப்பு இருக்கும் அல்லது அதுவரையிலாவது கடன்கள் வழங்க வழி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் உள்ள நிலைமைகளை ஆய்வு செய்வதற்காக ஒரு இலாகா அமைக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகள் அந்தத் துறையின் மூலம் இப்போது செயலாற்றப்பட்டு வருகின்றன. இப்போது முழுவதுமாக ஏழு கோட்டங்கள் அமைக்கப்பட்டு, அந்தக் கோட்டங்கள் மூலமாக இந்த ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மதுரையிலுள்ள நில-நீர் கோட்டம் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடங்களிலே இந்த ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தலைமை வேளாண்மை இயக்குனர் மேற்பார்வையில் இப்படிப்பட்ட திட்டங்களுக்கான ஆய்வுகள் நடந்துகொண்டு இருக்கின்றன.

கீழத்திருத்தங்கல் புதிய கண்மாய்

*16. வினா—**திரு. கா. காளிமுத்து:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தூர் வட்டம், கீழத்திருத்தங்கல் புதிய கண்மாய்த் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்போது அது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ரூ. 2,00,000.

(இ) 1973-ஆம் ஆண்டு செப்டம்பர் மாத அளவில் முடிக்கப்படும்.

மீனாட்சிபுரத்தில் புதிய கண்மாய்

*17. வினா—**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டைத் தாலுக்காவில் மறவர் பெருங்குடி மீனாட்சிபுரத்தில் புதிய கண்மாய் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) இத்திட்டம் பரிசீலிக்கப்பட்டு, தண்ணீர் போதுமானதாக இல்லையால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் திட்டம் பல ஆண்டுகளாக ஆய்வு நிலையில் இருந்தது. மிகவும் அவசியமான இந்தத் திட்டத்திற்கு முதலிடம் கொடுத்து—'ப்ரையாரிடி' கொடுத்து—இதைச் செயலாக்க முனைந்திருந்தால், இந்தத் திட்டம் எப்போதோ நிறைவேற்றப்பட்டிருக்கும். இது மிகவும் அவசியமானதொரு திட்டம். எனவே, அரசு இதை மறுபரிசீலனைசெய்து இந்தத் திட்டத்தை அமுல் படுத்துவதற்கு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு தலைவரவர்களே, கஞ்சனோடை திட்டத்தின்கீழ் ரூ. 1,55,000-ல் ஒரு கால்வாயையும், ரூ. 4,20,000-ல் ஒரு கண்மாயையும் அமைக்கத் திட்டமிட்டு இந்த இரண்டு திட்டங்களில் முதல் திட்டத்திற்கு அரசு ஆணை பிறப்பித்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. இரண்டாவது திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. தண்ணீர் போதுமான அளவில் இல்லாத காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட திட்டம் தற்போது கைவிடப்பட்டிருக்கிறது. நிலைமை சீரடையும்போது இதை மறுபரிசீலனை செய்யலாம்.

வரதமாநதியின் குறுக்கே அணை

*18. வினா—புலவர் சி. பழனிச்சாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் பழனிக்கருகில் உள்ள வரதமாநதி அணைக் கட்டுத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) இத்திட்டத்திற்கான குறிப்பை பாசனத் தலைமைப் பொறியாளர் வருவாய்த்துறை வாரியத்தின் மூலம் அனுப்பியிருக்கின்றார். வருவாய்த்துறை வாரியத்தின் குறிப்பு கிடைத்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

புலவர் சி. பழனிச்சாமி: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் திட்டமானது அந்தப் பகுதி வாழ் மக்களால் கடந்த நாற்பது ஆண்டுகாலமாக விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டுவந்த திட்டமாகும். கடந்த இருபது ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் இந்தத் திட்டம் மறுக்கப்பட்டே வந்தது. நமது பெருமதிப்பிற்குரிய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில், மதிப்பிற்குரிய நமது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய முயற்சியினால் இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, இத்திட்டத்தினை

ஏற்றுக்கொண்டதற்காக நமது அரசுக்கு நான் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளும் நேரத்தில் இதை விரைவில் செயற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு விரைவில் இதைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

விருதுநகர்-சிவகாசி சாலை

*19. வினா—திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகரிலிருந்து சிவகாசி செல்லும் வரை உள்ள சாலையை அகலப்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு தலைவரவர்களே, தொழிற்சாலைகளும் பல்வேறு வாணிப நிறுவனங்களும் உள்ள சிவகாசி நகரிலுள்ள முக்கிய சாலை மிகவும் குறுகலாக இருப்பதால் பெருமளவில் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்பட்டு, அவற்றின் காரணமாக அடிக்கடி விபத்துகளும் ஏற்பட்டு விடுகின்றன. எனவே, அந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலையினை அகலப்படுத்துவதற்கான திட்டம் ஒன்றும் இப்போது இல்லை. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைக் குறிப்பிட்டதால் இதுபற்றி தலைமைப் பொறியாளர் பரிசீலனை செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுவார்.

சுற்றுலாத்துறை ஓட்டல்கள்

*20. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுலாத் துறையின் நிர்வாகத்தில் தற்போது ஓட்டல் ஏதேனும் இயங்கி வருகின்றனவா?

(இ) ஆம் எனில், எங்கெங்கே?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

[1972 ஆகஸ்டு 9

கோடம்பாக்கம் புதூருக்கு வசதிகள்

* 21. வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கோடம்பாக்கம் புதூர் (Part II) பிரிவில் (கலைஞர் கருணாநிதி நகர்) சென்னை வீட்டுவசதி வாரியத்தில் ஒதுக்கப்பட்ட மனைகளில் வீடுகட்டி குடியிருப்போர்களுக்கு ஒரு வருடத்திற்கு மேலாகியும், குடிதண்ணீர், மின்சாரம் போன்ற வசதிகள் செய்து தராமல் இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) சென்னை கோடம்பாக்கம் புதூர் (Part II) பிரிவில் (கலைஞர் கருணாநிதி நகர்) வசிக்கும் சுமார் 300 குடும்பங்களுக்கு தற்போது குடிநீர் அளிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பகுதியில் அதிகப்படியான நில நீர் ஊற்றுக்கள் இல்லையாதலால் விருகம்பாக்கம் போரூர் ஏரிக்கரைப் பகுதியில் உள்ள நில-நீர் ஊற்றுக்களிலிருந்து தூய்மையான குடிநீர் இந்நகரில் வசிப்பவர்கள் எல்லோருக்கும் கூடிய விரைவில் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மின் வசதி அளிப்பதற்கான ஏற்பாடுகளை மின்சார வாரியம் செய்து வருகின்றது. இன்னும் மூன்று அல்லது நான்கு மாதத்திற்குள் எல்லா வீடுகளுக்கும் மின்வசதி கிடைக்கக்கூடும்.

நகராட்சிகளும், பேருந்துப் போக்குவரத்தும்

* 22 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் எந்தெந்த நகராட்சிகள் டவுன் பஸ் விட வேண்டுவதற்கான அனுமதி கோரி அரசிடம் விண்ணப்பித்துள்ளன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விண்ணப்பம் ஏதும் முடிவுறு நிலையில் இல்லை. நகரப் பேருந்துப் பணிகளை நடத்த நகராட்சிகளுக்கு அனுமதி வழங்குவதில்லையென்பது அரசின் கொள்கையாகும்.

சென்னை—நாகப்பட்டினம் வழித்தடத்தில் இரவு நேரப் பேருந்து

* 23. வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை—நாகப்பட்டினம் பேருந்து தடத்தில் இரவு நேர துரித வண்டி (Express) விடும் நோக்கம் அரசுக்கு உள்ளதா ?

1972 ஆகஸ்டு 9]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 7—8—1971-லிருந்து 538-ஆம் எண் பேருந்து வழித் தடத்தில் சென்னையிலிருந்து செங்கற்பட்டு, மதுராந்தகம், திண்டிவனம், விக்கிரவாண்டி, நெய்வேலி, சிதம்பரம், மாயூரம், திருவாரூர் வழியாக நாகப்பட்டினம் வரை இரண்டு பேருந்துகள் இரவு நேரப் பேருந்துகளாக விடப்படுகின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இரவு நேரப் பேருந்துகளில், பிரயாணிகளின் வசதிகளை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் 'ஸ்ப்ரிங்' பொருத்தப்பட்ட இருக்கைகள் அமைக்கப்பட இருப்பதாகச் செய்திகள் வந்தன. இது வரையில் இந்த வசதிகளுடன் கூடிய பேருந்துகள் விடப்பட்டனவா? இல்லையெனில் இன்னும் எவ்வளவு காலத்தில் இப்படிப்பட்ட பேருந்துகளை விட இருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பயணிகளுக்கு வசதிபொருந்திய இருக்கைகள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இடையிலே 'லேலண்டு' தொழிற்சாலை நீண்ட நாட்கள் மூடப்பட்டிருந்த காரணத்தினால் போதுமான 'சேஸிஸ்' நமக்குக் கிடைக்கவில்லை. எனவே, இதில் சற்று காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. கூடியவிரைவில் இவைகள் நிறைவேற்றப்படும்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, இப்படிப்பட்ட இரவு நேர நீண்டதூரப் பேருந்துகளிலே பயணிகளுக்குத் தூங்கும் வசதிகொண்ட படுக்கை-இருக்கைகள் ஏற்படுத்தித் தரும் திட்டத்தை அரசு ஆலோசிக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படிப்பட்ட திட்டம் ஒன்றும் அரசின் பரிசீலனையில் இப்போது இல்லை.

அரசுப் பேருந்து பணிமனைகள்.

* 24. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டத்திற்கு ஒரு ஓர்க்ஷாப் துவங்கி அரசு பஸ்களைப் பழுது பார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

திரு. கே. ஏ. வகாப் : இப்படி அமைக்கப்பட்டுள்ள மாவட்டப் பணிமனைகளில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டு போக்குவரத்துக்குப் பயனுள்ளவையாக இருந்தாலும், இன்னும் பல பணிமனைகளில் போதுமான எண்ணிக்கையில்

'மெக்கானிக்குகள்' இல்லை என்றும், உதிரி உறுப்புகள் இல்லை என்றும் குறை பாடுகள் இருக்கின்றன. இத்தகைய குறைபாடு நீங்கினால் போக்குவரத்து இன்னும் செம்மையாக இருக்கும் என்று சொல்லப்படுவதால் போதுமான 'மெக்கானிக்குகளையும்' உதிரி உறுப்புகளையும் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கேள்வி 'ஒர்க் ஷாப்' அமைக்கப்படுவதுபற்றி. மாவட்டத் தலைநகர்களில் அரசாங்கப் போக்கு வரத்துத் துறையினரின் 'ஒர்க் ஷாப்' அமைக்கப்படுவதற்கான திட்டமிடப் பட்டு, இப்போது சென்னையிலும் நாகர்கோவிலும் அவை நல்ல முறையில் இயங்கி வருகின்றன. திருச்சிராப்பள்ளியிலே இந்த ஆண்டு அப்படிப்பட்ட தொரு 'ஒர்க் ஷாப்' முடியும் தருவாயில் இருக்கின்றது. மற்ற இடங்களிலே சிறு டெப்போக்கள் இருந்து வருகின்றன. அங்கே 'ஒர்க் ஷாப்' இல்லை. அவைகளை அங்கேயெல்லாம் ஏற்படுத்தும் நேரத்தில், கனம் உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்ட கருத்துகள் கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்போது சென்னையிலும், நாகர் கோவிலிலும் திருச்சியிலும் மட்டுமே இப்படிப்பட்ட 'ஒர்க்ஷாப்' கள் இருக்கின்றன. மதுரையில் இப்படி ஒரு ஒர்க்ஷாப் அமைக்கப்பட வேண்டுமென்று இடத்தைக் கூட வாங்கியிருக்கின்றார்கள். மேலும் பெருமளவில் தேசியமயமாக்கப்பட்ட பொள்ளாச்சி, தஞ்சை போன்ற இடங்களிலும் இப்படிப்பட்ட ஒர்க்ஷாப்கள் அவசியம். அங்கேயெல்லாம் இப்படிப்பட்ட ஒர்க்ஷாப்களை அமைக்க அரசு துரிதமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மதுரையில் ஏற்கெனவே இடம் வாங்கப்பட்டு அதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. மேலும் கோவையிலும், கும்பகோணத்திலும் அந்தந்தப் போக்குவரத்துக் கழகங் களுக்கு இடங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, except in those district headquarters where the Government have got their own workshops, have they made alternative arrangements for workshop facilities in other district headquarters and if so, with whom they have made workshop agreements?

மாண்மிபுகு திரு. ச. இராமச்சந்திரன் : மாவட்டத் தலைநகரங்களிலே சாதா ரண 'ரிப்பேர்'களை செப்பனிடுவதற்கான வகையில் இப்போது வசதிகள் செய்யப்பட்டு இருக்கின்றன. எனவே இதற்காகத் தனியாரோடு எந்தவிதமான ஒப்பந்தமும் செய்துகொண்டு அப்படிப்பட்ட சிறு 'ரிப்பேர்' கள் செய்யப் படுவதில்லை.

திரு. கோவை செழியன் : இப்போது அரசாங்கம் பஸ் நிறுவனங்களை ஏற்றுக்கொண்ட பிறகு அந்த நிறுவனங்களோடு ஒட்டியுள்ள பெரும் பணிமனை களையும் அரசு மேற்கொள்ளும் திட்டம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பஸ் நிறுவனங் களோடு இணைந்திருந்த ஒர்க்ஷாப்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் பஸ்களுக்கும், லாரிகளுக்குமாகச் சேர்ந்திருந்த ஒர்க்ஷாப்களை எடுத்துக் கொள்ளவில்லை. எடுத்துக்கொள்ளும் உத்தேசமும் இல்லை.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, பஸ்களைத் தேசியமயமாக்குவது என்ற திட்டத்தின் கீழ் இப்போது நான்கு கார்ப்பொரேஷன்கள் உருவாகி இருக் கின்றன. இப்போது நமது நாட்டில் நான்கு நிறுவனங்கள்தான் பஸ் சேசிஸ் களைத் தயாரிக்கின்றன. எனவே ஒவ்வொரு கார்ப்பொரேஷனுக்கும் ஒரு குறிப் பிட்ட சேசிஸ பஸ்களைக் கொடுத்து, அந்த சேசிஸ் சம்பந்தப்பட்ட 'ஸ்பெஷ லைஸ்டு ஒர்க்ஷாப்'களை அந்தக் கார்ப்பொரேஷனுக்கு ஏற்படுத்திக்கொடுத்து விட்டால் எளிதாக இருக்கும். உதாரணமாக லேலண்டு சேசிஸ்களை எடுத்துக் கொள்ளும் கார்பொரேஷனில் லேலண்டு ஒர்க்ஷாப்பினை ஏற்படுத்திக்கொடுக் கலாம். இது பல தொல்லைகளைக் குறைக்கும். எனவே இப்படி ஒரு குறிப் பிட்ட சேசிஸ்களுக்கான ஒர்க்ஷாப்பை நிறுவ, அதாவது அந்தந்தப் போக்கு வரத்துக் கார்ப்பொரேஷனில் நிறுவ அரசு திட்டமிட்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கனம் உறுப்பினர் அவர்களுடைய யோசனை நல்லதுதான். ஆனால் திடீரென்று ஏதாவது காரணத்தினால் அந்த ஒரு குறிப்பிட்ட நிறுவனம் மூடப்பட்டுவிட்டால் அந்தப் பகுதி போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுவிடும் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : May I know what is the difference between workshop and 'Panimanai' ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இரண்டுக்கும் இடையே இருக்கின்ற வேறுபாடு, ஒன்று ஆங்கிலம், இன்னொன்று தமிழ்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, பணிமனை என்றால் கட்டாய மாக அதற்கு வேண்டிய பொருள்கள் எல்லாம் அங்கே இருக்கவேண்டும் அல்லவா ? அப்படி இல்லையென்றால் ஒர்க் ஷாப் என்று சொல்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது ?

MR. SPEAKER : Just the difference between 'Amma' and "Mummy'! (laughter).

பால் வழங்கு இயந்திரங்கள்

*25. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலையத துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காசு போட்டவுடன் பால் வழங்கக்கூடிய சிறிய இயந்திரங்களை சென்னை நகரில் முக்கிய இடங்களில் வைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறியிடப் பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது.

3. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானமும் அமைச்சரவையின் தனியொரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்.

MR. SPEAKER : Before we take up the next item in the Agenda, I have to announce to the House that I have received five notices under Rule 55 (1) of the Tamil Nadu Legislative Assembly Rules expressing want of confidence in the Ministry headed by the Hon. Thiru M. Karunanidhi. The notices are from Dr. H. V. Hande, Thiru K. T. K. Thangamani, Thiru A. R. Marimuthu, Thiru A. Subramaniam, Thiru R. Ponnappa Nadar and Thirumathi T. N. Anandanayaki.

Under Rule 55 (2) of the Assembly Rules, leave of the House has to be obtained. I shall read Rule 55 (2) :—

" If the Speaker is of opinion that the motion is in order, he shall read the motion to the House and shall request those members who are in favour of leave being granted to rise in their places and if not less than twenty-four members rise accordingly, the Speaker shall intimate that leave is granted and that the motion will be taken on such day, not being more than ten days

from the date on which leave is asked for, as he may appoint. If less than twenty-four members rise, the Speaker shall inform the member that he has not the leave of the House."

Before action is taken under Rule 55 (2), I wish to explain a point.

There are 5 notices under Rule 55 (1). According to the established practice, I will have to take them in the order of receipt. When leave of the House is given to one motion, then the other notices cannot be taken up now till the House discusses and decides about the motion for which leave is granted. This is the procedure adopted in the Lok Sabha also.

Hence I will now take up the notice of Dr. H. V. Hande which was received first. The notice reads as follows :—

" That this House expresses want of confidence in the Ministry headed by Thiru M. Karunanidhi." I request those hon. Members who are in favour of leave being granted to rise in their seats.

(27 members belonging to the Congress, Swanthantra, Communist and Congress (O) parties stood up.)

MR. SPEAKER : I find more than 24 hon. Members are for leave being granted to this motion. Hence leave is granted.

I have to announce to the House that I have also received a notice from Thiru K. T. K. Thangamani, under Rule 55 (1) of the Assembly Rules. Thiru K. T. K. Thangamani has given two notices, one expressing no-confidence in the Ministry and another disapproving the policy of the Ministry. I want to request the hon. Member Thiru K. T. K. Thangamani whether he would give preference to the 'no-confidence motion' or this motion 'disapproving the policy of the Ministry'.

திரு. கே. டி. கே. தங்கமணி : இரண்டு தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் இரண்டு தீர்மானங்கள் கொடுத்திருக்கிறீர்கள். ஒன்று 'நேர கான்ஃபிடன்ஸ் மோஷன்'; இன்னொன்று 'டிஸ்ஸப்ரூவிங் தி பாலிஸி ஆஃப் தி மினிஸ்டிரி'. நான் இந்தத் தீர்மானங்களை எடுத்துக் கொள்வதற்கு முன்பு, தாங்கள் கொடுத்திருக்கின்ற இரண்டு

தீர்மானங்களில் எதற்கு அனுமதி கேட்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THIRU K. T. K. THANGAMANI: You were pleased to explain to us the procedure. Now the 'no-confidence motion' of Dr H. V. Hande has got the leave of the House. After getting the leave of the House for this 'no-confidence motion, I have a right to move that leave of the House be also obtained for 'disapproving the policy of the Ministry in the matter of handling the farmers' agitation.' That may be put to vote. There are precedents for this.

MR. SPEAKER: I am not objecting. You have given two resolutions. Which do you prefer?

THIRU K. T. K. THANGAMANI: I would like this to be put to vote. It is in perfect order. If my motion was taken up first, I would not have persisted.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: The Hon. Speaker was saying that the hon. Member Thiru K. T. K. Thangamani had given notice of a motion under Rule 51. Is it 55 (1) or Rule 51?

MR. SPEAKER: Under 55 (1) you can restrict the motion to one of 'no-confidence in the Ministry' or 'motion disapproving the policy of the Ministry in a particular aspect'. Both are same.

The notice of Thiru K. T. K. Thangamani under Rule 55 (1) of the Assembly Rules reads as follows:—

"This House disapproves the policy of the Ministry about the manner in which the farmers' agitation was handled".

Under Rule 55 (2) of the Assembly Rules, leave of the House has to be obtained.

I request those hon. Members who are in favour of leave being granted, to rise in their seats.

(27 members belonging to the Congress. Swathanthra, Communist and Congress (O) Parties stoop up.)

MR. SPEAKER: I find more than 24 hon. Members are for leave being granted to this motion. Hence leave is granted. I think that this motion may also be taken up along with the other motion for discussion.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்த அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லை என்று தீர்மானம் வந்த பிறகு அது உண்டா இல்லையா என்று நாங்கள் தெரிந்துகொள்வதற்குமுன் வேறு பிரச்சினைகளை இங்கு எடுத்துக்கொள்வது நல்லதல்ல. ஆகவே, இப்போதே, முதலில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. T. K. THANGAMANI: The only point we want to know is how many days will be allotted for this?

MR. SPEAKER: That we can discuss in the Business Advisory Committee.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதுபற்றி எத்தனை நாள் விவாதம் நடத்தலாம் என்பதை, பிறகு நம்முடைய 'பிஸினஸ் அட்வைசரி கமிட்டி'க் கூட்டத்தில் முடிவு செய்யலாம். இப்போது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சருடைய இந்தக் கருத்தை நான் மிகுந்த ஆர்வத்துடன் வரவேற்கிறேன். இதுதான் நல்ல மரபு. இந்த நல்ல மரபை இந்த அமைச்சரவை இன்றைக்கு நிலைநிறுத்தியிருக்கிறது என்று மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன் (பலத்த கரவொலி). இது பற்றிய விவாதத்திற்கு எவ்வளவு நேரம், நாள் ஒதுக்குவது என்பதுபற்றி இன்றைய நிகழ்ச்சி முடிந்த பின்னால் கூட இருக்கிற 'பிஸினஸ் அட்வைசரி கமிட்டி'யில் கட்சித் தலைவர்கள், அவை முன்னவர் ஆகியோர் கலந்து பேசி முடிவு செய்வார்கள்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டால், மற்ற விஷயங்களைப் பற்றி விவாதிப்பதற்கு முன், இந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதுதான் சிறந்ததாக இருக்கும் என்று நானே ஆளும் கட்சித் தரப்பினரையும், எதிர்க் கட்சித் தரப்பினரையும் கூடக் கலந்து கொள்ளாமலே இந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டேன். இப்பொழுது அது சம்பந்தமான விவாதத்தைத் தொடங்கலாம்.

இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்து டாக்டர் ஹாண்டே அவர்கள் முதலில் விவாதத்தைத் தொடங்குவார். அதன் பிறகு திரு. தங்கமணி அவர்கள் தொடர்ந்து பேசுவார்கள்.

THIRU K. T. K. THANGAMANI: Sir, I will explain my stand. I do appreciate the gesture of the Hon. Chief Minister and the ruling of the Hon. Speaker. I submit to your ruling, Sir. Even on such a motion, the Speaker has got the discretion. All that the rule says is that within ten days, a date has got to be fixed for taking up the motion for discussion and the Speaker has to announce it, so that we as members of the Opposition will have to apply our mind and prepare and know when it will be taken. Of course, your ruling is more a healthy ruling. But then, I do not know how much time will be given. Normally, the mover of the motion has no time-limit. There is no time limit for both the movers . . . .

MR. SPEAKER: How much time Mr. Thangamani wants?

THIRU K. T. K. THANGAMANI: I may want five hours, Sir. But the point is, instead of discussing those details in this House, these things could be discussed in the Business Advisory Committee.

MR. SPEAKER: Am I to understand that Mr. Thangamani's point is that the No-Confidence Motion or the Censure Motion need not be taken up now? As he had quoted the rule, the Speaker can fix a date, but 'today' is not excluded; 'not more than ten days' does not mean that this day is excluded. I think we can straightaway discuss the motions and fix the number of days, etc., in the Business Advisory Committee.

THIRU K. T. K. THANGAMANI: It is a very good precedent, Sir. No doubt about it.

MR. SPEAKER: I do not think you want to create an unhealthy precedent.

THIRU R. PONNAPPA NADAR: Sir, may I make a submission? Now that the Business Advisory Committee is to meet and decide the number of days that would be taken for these motions,

திரு. ஜே. ஜேம்ஸ் : யாருக்குமே இல்லை என்று சொன்னதனால்தான் குறிப்பிட்டேன்.

DR. H. V. HANDE : My point is that he has not bothered about the persons who died . . .

MR. SPEAKER : How long will the Hon. Member take to finish his speech?

DR. H. V. HANDE : Twenty minutes.

MR. SPEAKER : I cannot further extend it.

DR. H. V. HANDE : Then I want half an hour.

Sir, mention has been made about the late Thiru Pratap Chander. In this connection, I would like to point out that another

trade union leader, Thiru Kannan, was also killed but no mention has been made about him by the Hon. Chief Minister. It is the duty of the Hon. Chief Minister to refer to the persons involved in the recent incidents. We all of us feel sorry over the deaths of Thiru Pratap Chander and Thiru Kannan. Who is responsible for such a state of affairs? Now, there is no use of narrating the whole incident. An orgy of violence had been unleashed in the Simpson Group of Companies long before that incident. Even Thiru Gurumurthy was edged out from the Union as a result of violence and after that there has been a lot of violence and that violence has continued. My submission is that the police took a partisan attitude and they protected the persons who indulged in violence. In one case I had also given the car number of the person who indulged in violence to the Hon. Minister for Labour but he has not bothered about it.

So far as the murder of Thiru Pratap Chander is concerned, cycle chains, tubes and pipes were mercilessly used and we feel sorry over his death. The Government have brought the Simpson dispute to such a point where it has gone beyond their control. I would appeal to the Hon. Chief Minister to neutralise the whole thing; otherwise, the Simpson issue would never be solved.

As regards events leading to the murder of Thiru Pratap Chander, some persons came to issue notice against that trade union leader . . .

MR. SPEAKER : I think there is a case pending in the court and the hon. Member should not go into it.

DR. H. V. HANDE : The Hon. Chief Minister himself should have realised it when he mentioned it . . .

THE HON. THIRU K. ANBAZHAGAN : Reference to Thiru Pratap Chander's murder is one thing and describing the incident is something different.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Pratap Chander case is *sub judice* and neither the Government nor the Opposition should talk about it.

DR. H. V. HANDE : Sir, the Government have got greater responsibility in regard to this matter.

[Dr. H. V. Hande] [1972 ஆகஸ்ட் 9

Today there is labour unrest in Tamil Nadu and for that I put the entire responsibility on the Hon. Chief Minister and his Cabinet. That is one of the reasons for my bringing the No-Confidence Motion against the Government.

Now I come to the Co-operative Department. I cannot keep quiet and I want to wake up the Hon. Minister for Co-operation from his comfortable position. There is no Minister who is handling his department in such a wrong manner as the Hon. Minister for Co-operation. I could even use a stronger language but it would be enough if I say that he is handling the whole thing in a very horrible manner and a number of persons have been put to a lot of trouble.

Now I want to refer to the Walajapet Town Co-operative Bank. On 13th June 1972 the Secretary, Mr. W. S. Varadharaghava Mudaliar reported sick and he did not turn up after this date. When some of the depositors approached the bank to draw money they were informed by the Clerks that the amount will be paid as soon as the Secretary reports for duty. Then the Secretary never came. The Madras Central Co-operative House Mortgage Society has transferred a sum of Rs. 25,000 to this society for disbursement to certain parties who were sanctioned loan for constructing houses. This amount was drawn in the absence of Secretary and some disbursements were made. My submission is what is the Co-operative Department doing? How did it take place? The Hon. Chief Minister does not know it. The Hon. Minister for Health was approached and he had asked the Local District Secretary . . .

THE HON. THIRU K. ANBAZHAGAN : I had not asked the District Secretary or any party official to deal with it. I explained to them that the Governmental machinery will take appropriate action against the person who is absconding. Only when he is available action can be taken. The people who had deposited the money wanted it to be restored to them. The deposit can be given only after proper enquiry. This thing cannot be implemented by the Minister on the spot.

DR. H. V. HANDE : I am glad that I got 50 per cent of the information . . .

1972 ஆகஸ்ட் 9]

THE HON. THIRU K. ANBAZHAGAN : It is not intended to deny the Hon. Member any information from the Government. Whenever the Government have got information, we will come forward to give all details about it.

DR. H. V. HANDE : Sir, so far as Thiru Varadharajan is concerned, I wish to inform the House that he belongs to D.M.K. and he was formerly the Chairman of Walajapet Municipality till 1969. He was the General Secretary of the ' Nam Tamilar Party ' started by the Hon. Minister for Co-operation. For the past several years Thiru Varadharajan has been closely connected with the Hon. Minister. The Silk Throwing Mill run by Thiru Varadharajan is named as ' Sivanthi Silk Throwing Mills '. Further Thiru Varadharajan was the President of the Silk Weavers' Co-operative Society and Yarn Distributing Co-operative Society. These societies were liquidated. He had recently resigned from the Presidentship of Walajah Cane Workers' Co-operative Cottage Industries Societies, Walajapet. He is still holding the Presidentship post in the Walajapet Co-operative Stores. He contested for M.L.A. election two times with the support of Mr. Si. Pa. Aditanar. I want to know why this man should be supported. Why did not the Government send Police bundobust immediately? Even yesterday 10 to 12 persons came to me and complained. Till now no Police protection had been given. What is going to happen to the jewels inside the iron safe? We do not know whether the jewels are there. Who is to assure the safety of jewels? At least now a Police party must go and the safes must be sealed. Why has not action been taken against the persons concerned? I know why the Hon. Minister has not taken action against the person concerned. He is closely connected with the ruling party. I am glad the Hon. Chief Minister appreciates my point of view. I take it in the right spirit.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வரதராஜன் என்பவர் தி.மு. கழகத் தலைவர் என்று சொன்னார்கள். அவர் தி.மு. கழகத்திலிருந்து 7, 8 மாதங்களுக்கு முன்பே விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார்.

DR. H. V. HANDE : I appreciate what the Hon. Chief Minister has said. But the Hon. Minister has not forgotten his old ties, 'Pasam'.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பழைய பாசத்தை மறக்கவில்லை என்று டாக்டர் அவர்கள் சொன்னார்கள். டாக்டர் மேலேயும் பழைய பாசத்தை நான் மறக்கவில்லை. ஆனால் தவறு என்று கண்ட இடத்தில் தாட்சணியம் இல்லாமல் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். டாகடர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்ட பாங்க் ஒரு அர்பன் பாங்க். அர்பன் பாங்குகள் என்பவை பெரும் பாலும் அரசாங்கத்தின் உதவி பெறாமல் நடைபெறுபவை. அந்த பாங்கி நிர்வாகத்தின்மீது அரசாங்கத்தின் கண்பாவை குறைவு. இருந்தாலும, இதைக் கேள்விப்பட்டவுடன், போலீசார் அதை விசாரணை செய்ய வேண்டுமென்று ஆணை இடப்பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE : Nothing has been done till yesterday evening. Till yesterday 5 p.m. no Police has been posted there.

THE HON. SI. PA. ADITANAR : What I said was that the Police had been instructed to go into the matter and take action.

டாக்டர் எச். வி. ஹாண்டே : போலீஸ் பந்தோபஸ்து இல்லையென்று சொல்கிறேன். அரெஸ்ட் பண்ணச் சொன்னேனா? இல்லையே. முதலமைச்சர் அவர்கள் சுறுசுறுப்பாகச் செய்வார் என்று எனக்கு நம்பிக்கை. இதை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகச் சொல்கிறேன்.

What a gap between instruction emanating from the Minister and its emanating through the Police in the form of action! What a gap between the two! He says instructions have been issued to the Police to take action. But till yesterday evening nothing has been done. Registers have to be kept in safe custody as otherwise there are chances to alter, tamper or destroy the records. The Bank must be sealed. Some middle class families, widows and others are entirely depending on the interest from the deposits made by them to maintain their families. They are suffering very much. Arrangements must be made to redress their sufferings. The Bank has been conducting some chits. They must be continued. I have given one example of the mismanagement of one institution in the Co-operative Department. Of course I will leave it for my friend Thiru Suppu to give other examples. In the entire Co-operative Department there are lot of loopholes, omissions

and commissions. This is not fair. Let the Hon. Minister for Co-operation examine the whole thing. Lot of things will come out.

Now I come to the reckless manner in which some people are beaten.

MR. SPEAKER : I have co-operated with you for more than an hour. You have taken more than an hour. You will have another opportunity to speak in your reply. Do you want me to co-operate more?

DR. H. V. HANDE : Two minutes, I shall finish. In Vyasarpadi, one ex-head constable had been mercilessly beaten. All political parties participated in that meeting. The Hon. Minister for Harijan Welfare knows it. That person was unnecessarily dragged, beaten and lost his life. Group of persons are locked up in Police station lock-up and beaten recklessly. All sorts of third degree methods are employed. This is happening in all Police stations of Tamil Nadu, both in Madras City and outside. I have cited the case of Thirupathi. What right have the Police to arrest an innocent person and then foist a case on him? That is what I cannot understand.

There are a number of other problems. I cannot go at length into all of them. Take the Veterinary College problem. Cannot the Hon. Chief Minister solve the problem? The students have not attended the college and they have not written their examination. They are asked to pay examination fees. Cannot the Minister for Public Health take suitable action?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் அந்தக் கால்நடைத் துறை மருத்துவர்களாகப் பணியாற்றுபவர்களுடைய ஊதியத்தை உயர்த்தி அரசாங்கம் ஆணையிட்டால் தவிர, கல்லூரியைத் திறக்கக் கூடாது என்று நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். அண்மையிலே அவர்களுடைய தலைவர்களாக இருக்கிற இரண்டொருமாணவர்கள் கூடச் சுற்றறிக்கை போட்டு மாணவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். மொத்தமுள்ள 750 மாணவர்களிலே 450 பேர் தேர்வு எழுதுவதற்குத் தடையில்லை. அவர்கள், செப்டம்பரிலே தேர்வு எழுதலாம் என்று பல்கலைக் கழகம் அனுமதி அளித்திருக்கிறது. ஏற்கனவே, பணம் கட்டியவர்கள் புதிதாகக் கட்டணம்

செலுத்தாமலே தேர்வு எழுதலாம் என்று கூறியிருக்கிறது. அவர்கள் கல்லூரியில் சேர்ந்து படித்துத்தான் தேர்வு எழுதவேண்டுமென்ற நிலை இல்லை. மற்றும் 300 மாணவர்கள் தமது அடுத்த தேர்வு எழுதுவதற்கு வகுப்பிலே சேர்ந்து படிக்க வேண்டிய மாணவர்கள். ஓசூர் பண்ணையில் பயிற்சி பெற வேண்டுமென்று அவர்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் ஒரு பாடம். அவர்கள் பயிற்சிக்குச் செல்ல மறுத்திருக்கிறார்கள். கல்லூரியிலே சேர்ந்து பயில்வதற்கும், கோர்சை விரைவாக முடிப்பதற்கும் அவர்கள் கொள்கிற ஆர்வத்தைப் பொறுத்து நிச்சயமாக கல்லூரி திறக்கப்படும். கல்லூரிக்கு வந்து சுற்பதில் இந்த மாணவர்கள் ஒத்துழைப்பார்கள் என்று எதிர்பார்த்துத்தான் கல்லூரி திறக்கப்படவுள்ளது. சென்னையிலே உள்ள பல மாணவர்களின் தாய்மார்கள் எனனைச் சந்தித்தபோது விடுதியிலே இருக்கிறவர்கள் வேண்டுமானால் அவர்கள் விருப்பபடி படிக்காமல் போகட்டும், ஆனால் எங்களுடைய பிள்ளைகள் படிக்கட்டும் என்று சொல்கிறார்கள். முதலில் குறிப்பிட்ட மாணவர்கள் போராட வேண்டுமென்று திட்டமிடும்போது கல்லூரியையும் விடுதியையும் திறந்து வைத்து போராட்டம் உருவாக இடம்விட்டு திறந்து வைத்து திரு. ஹாண்டே அவர்கள் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தக் கூடாது என்ற நிலைமையினால்தான் போலீஸ் உதவியோடு கல்லூரியை திறக்க விரும்பவில்லை. கால்நடை மருத்துவர்களுடைய ஊதியத்தைப் பற்றி ஆராயும் குழு தனது அறிக்கையை இன்னும் அரசுக்கு அளிக்காத நிலையில் கல்லூரியைத் திறக்க மாணவர்களுடைய நல்லெண்ணத்திற்காகவே காத்திருக்கிறோம்.

DR. H. V. HANDE : I want the Hon. Minister for Health to solve this problem immediately. Now I come to the Hon. Minister for Public Works Department. He is running a rice mill in Udumalpet.

MR. SPEAKER : From Vyasarpadi to Veterinary College and now you are going to Udumalpet.

DR. H. V. HANDE : I shall finish in two minutes.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய உரிமையைக் கொஞ்சம் தவறாகப் பயன்படுத்துகிறார். திரு. ஹாண்டே மட்டும் அல்ல, சட்டமன்றம் என்பது. அதற்குத்தான் உங்களை முதலிலே கேட்டேன். எவ்வளவு டைம் வேண்டுமென்று கேட்டேன். நான் ரொம்பத் தாராளமாகக் கொடுத்தேன். நீங்கள் விவாதத்தை சீக்கிரம் முடிக்காது போனால், நான் மணி அடித்து நிறுத்த வேண்டும். நான் என்னுடைய நிலைமையைக் கட்டுப்படுத்தி, உங்களை உட்கார வைக்க வேண்டாமென்றுதான் 5 தடவை, 6 தடவை உங்களுக்குச் சொல்லியாகி விட்டது.

DR. H. V. HANDE : Finally, for the reasons I have mentioned so far, because of failure of Government in properly handling the agriculturists' agitation, leading to loss of so many lives, because of political interference in their party *Manadus*, because of failure of law and order, because of their failure to look after the trade unions and because of political interference in trade union activities, because of the total mess in which the Co-operative Department all over Tamil Nadu had been pushed to, and because of the various other things which I have been mentioning in the last one-and-a-half hours, I once again reiterate the charges levelled against the Hon. Chief Minister and his Cabinet Colleagues. I therefore request all members to keep an open-mind in this particular aspect and see that this Government is thrown out.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, may I make a request? Normally, time is not limited for opposition members when they speak on no-confidence motions. They have to catalogue their charges one by one. I think it is always the procedure not to stick to any time-limit.

THIRU R. PONNAPPA NADAR : I may add, Sir, that once before in this House when Mr. Sasivarna Thevar spoke on the no-confidence motion tabled by Thiru M. Kalyanasundaram, he was allowed more than two hours. The opposition members have to ventilate all their grievances. Let it not go unwept. I think the Hon. Speaker would agree with me when I say that ample opportunity should be given to the members to level as many charges as possible.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அம்மையார் அவர்கள் கூறுவது சரிவரப் பொருந்திவருகிறது என்று நான் நினைக்கவில்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு மணி நேரம்தான் கேட்டார்கள். அந்த நேரத்திற்கு மேலேயே ரொம்பவும் தாராளமாக அவை அனுமதித்து இருக்கிறது. எப்பொழுதுமே இப்படித் தீர்மானம் கொண்டுவந்தவர்கள் பேசியிருக்கிற நேரத்திற்கும் அதிகமாக பின்னால் பேசுகிறவர்கள் எடுத்துக்கொள்வது கிடையாது. அது சட்டமன்றத்தின் மரபும் அல்ல. நான்கு நாட்கள் பேசுவோம் என்றால் அதைக்கூட இந்த அவையும் பிரினல் அட்வைசரி கமிட்டியும் அனுமதிக்குமா என்று பார்க்கவேண்டும். எதிர்க் கட்சிகளும் மற்ற எல்லாக் கட்சிகளும்

ஜனநாயகத்தின் மரபுகளைக் காப்பாற்றித் தீரவேண்டியவர்களாக இருக்கிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள்கூட, நான் நாலைந்து முறைகள் சொன்ன பிறகுதான், பேச்சை முடிக்கவேண்டியிருந்தது என்பதுகூட பெருமைக்குரியது அல்ல என்பதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் இந்த அவையின் குறிப்பேட்டிலே அது ஏறவேண்டுமென்பதற்காகத்தான். டாக்டர் அவர்கள் பேசியதையே ஒரு மணி நேரத்தில் இன்னும் கொஞ்சம் எஃபெக்டிவ் ஆகப் பேசியிருக்கலாம்.

DR. H. V. HANDE : On a point of order, Sir. Is the Hon. Speaker trying to support the Government by saying that I have not made an effective speech? (Interruption). No, no. It is very dangerous if the Speaker should take a party attitude. Mr. Speaker, Sir, you are in the Chair not to support any political party, if I know the rules properly. You may not agree with the points raised by me. One may think it is flippant and it is nothing. They may be thick-skinned and may say, 'whatever Hande says, he will say always like that'. They may be thick-skinned to criticisms and may not be sensitive. But the Speaker cannot support them.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் என்ன சொன்னார்கள் என்பது எனக்கு நன்றாக விளங்குகிறது. நான் அரசாங்கத்தை ஆதரித்ததாகச் சொன்னார்கள். அவர்கள் எஃபெக்டிவ் ஆகப் பேசவில்லை என்று சொன்னதாகச் சொன்னார்கள். எஃபெக்டிவ் ஆகப் பேசினார்களா, இல்லையா என்பதல்ல நான் சொன்னது, சட்டமன்ற மரபுகளுக்கு உள்ளடங்கிப் பேசுகின்ற கலையைப்பற்றித்தான் சொன்னேன். முதலமைச்சர் அவர்கள் கூட, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் இன்னும் காரசாரமாகச் சொல்லலாம், என்று சொல்லலாம். எப்படி நான் அரசாங்கத்தை ஆதரித்ததாகச் சொல்கிறார்களோ அதைப்போல அவர்களும் வேறுமாதிரியாகச் சொல்லலாம். அப்படிப்பட்ட வியாக்கியானங்களையெல்லாம் செய்து குழப்பத்திற்குள்ளாக்க வேண்டாம். இந்தச் சட்டமன்றத்தின் நடவடிக்கைகளை எப்படி நல்ல முறையில் நடத்திச்செல்ல வேண்டும் என்பது பற்றித்தான் என்னுடைய கவலையேதவிர, எஃபெக்டிவ் ஆக இருக்கிறதா இல்லையா என்பது எல்லாம் பற்றி எனக்குக் கவலையில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த சபைக்கு முன்னால் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானமும், அடுத்து விவசாயிகள் நடத்திய போராட்டத்தை அரசு

ஹாண்டில் பண்ணிய முறையும் சரியல்ல என்ற என்னுடைய கண்டனத் தீர்மானமும் வந்திருக்கிறது. இரண்டும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையொத்ததுதான். எந்த ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டால், நிறைவேற்றப்பட்ட பிறகு அரசு தொடர்ந்து செயலாற்ற முடியாது என்பதைத் தாங்கள் நன்றாக அறிவீர்கள். இதைப்போன்று நம்பிக்கையில்லாத் தீர்மானமும், கண்டனத் தீர்மானமும் 1970-ம் வருஷத்திலே இந்தச் சபை முன்னதாக வந்திருக்கிறது. அதற்கு முன்பு தங்களாலே குறிப்பிட்ட கொள்கையை அடிப்படையாக வைத்துக் கண்டிருக்கிறோம் என்ற தீர்மானம், 1964-ம் வருஷம் என்று நினைக்கிறேன், கொண்டுவரப்பட்டிருக்கிறது. 1957-ம் வருஷத்திலே இதே சபையிலே முதுகளத்தூர் சம்பவம்பற்றி நம்பிக்கையில்லாத் தீர்மானம் திரு. கல்யாணசுந்தரம் அவர்களால் கொண்டுவரப்பட்டது. 1952-ம் வருஷம் ராஜகோபாலாச்சாரியார் முதலமைச்சராக இருந்தபொழுது நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குப் பதில், நம்பிக்கை இருக்கிறது என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இப்படி 5 தடவைகள் எனக்குத் தெரிந்த வரையிலே வந்திருக்கின்றன. தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசு ராஜிநாமாச் செய்துவிடும் என்று அன்றைக்கு யாரும் கொண்டுவரவில்லை. அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும், அரசுக்கு எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது, அந்த எண்ணிக்கையை வைத்துத் தீர்மானத்தை தோற்கடித்துவிட்டாலும் தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கின்ற விஷயங்களுக்கு அவர்கள் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும், இந்த சபையிலேயோ அல்லது மக்களிடத்திலேயோ, அல்லது கட்சிக்குள்ளேயோ ஆழமாக விவாதித்து ஒரு நிலையெடுக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்படலாம். அந்த அடிப்படையிலேதான் நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். சூன் மாதம் 16-ம் தேதியிலிருந்து பல இடங்களில் விவசாயிகள் போராட்டக் குழுவின் வேண்டுகோளின்படி கலெக்டர் ஆபீஸ்களிலும், தாசில்தார் ஆபீஸ்களிலும் மறியல் செய்தார்கள். அதிலே சிறை சென்றவர்களில் சட்ட மன்ற உறுப்பினர்களும் சிலர் இருக்கிறார்கள். மதுரை சிறையில் நானும் கோபால் அவர்களும், சுப்பு அவர்களும், இன்னும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களும் இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தபொழுது மக்கள் சில கடமைகளை நம்மிடம் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கிறபொழுது மக்களுக்கு அதைப்பற்றியெல்லாம் தெரிவிக்கக் கூடிய முறை என்ன, எந்த மாதிரி 'டிஸ்அப்ரூபல் ஆப் பாலிசி'யைத் தெரிவிப்பது, எந்த முறையில் 'வான்ட் ஆப் கான்பிடன்சை' தெரிவிப்பது என்று யோசித்தோம். அந்த முறையிலேதான் இப்படிக்கொண்டுவர வேண்டும் என்ற முறையிலே கொண்டுவந்தோம். ஏதோ ஹாண்டே அவர்கள் தலைமையில் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களும், ஆளும் காங்கிரஸ் கட்சியும், ஸ்தாபன

காங்கிரஸ் கட்சியும் அணிவகுத்துவிட்டார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிச் சொல்வதற்கு அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? எப்படி அது உருவாகியது?

விவசாயிகள் போராட்டத்தை நாங்கள் நடத்தியபொழுது அதற்கு ஸ்தாபன காங்கிரஸ் கட்சியும் சரிதான் என்றது, ஆளும் காங்கிரஸ் கட்சியும் சரிதான் என்றது, அதேமாதிரிதான் சுதந்திரா கட்சியும் சரிதான் என்றது. இந்த விவாதத்திற்குப் பிறகு பார்வர்ட் பிளாக் கட்சியும் சரியென்று சொல்வார்கள், அதேபோன்று முஸ்லிம் லீக் கட்சியும் சரியென்று சொல்வார்கள். (திரு. கே. சுந்தரசாமி: இல்லை, இல்லை) விவாதத்திற்குப் பிறகு என்று தான் சொன்னேன். இப்பொழுதே அதை எப்படிச் சொல்லமுடியும்? விவாதத்திற்குப் பிறகுதான் தெரியும் . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தாங்கள் மற்ற கட்சிகளையும் இழுக்கிறீர்கள். ஆனால் உங்கள் கட்சிக்குள்ளேயே சிலர் இதை மனமார ஆதரிக்காமல் இருக்கிறார்கள். அதையும் பார்த்துக் கொள்ளுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: எங்கள் கட்சியைப்பற்றி அமைச்சரவர்கள் அவ்வளவு கவலைப்பட வேண்டாம். உங்களுடைய கட்சிக்கு ஆபத்து வெகு வேகமாக வந்துகொண்டிருக்கிறது. இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருப்பதாலும், வேறு சில்பல காரணங்களாலும் கட்டுப்பாடாக இருப்பது மாதிரி தெரியும். ஆனால் அது உடையும்பொழுது பயங்கரமாக உடையும். உடையாது என்று நினைத்தவர்கள் எல்லாம் உடைந்து விட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வலது, இடது என்று உடைந்ததை வைத்துக்கொண்டு பேசுகிறார்கள். இங்கு அப்படி உடையாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: திராவிடக் கழகமாக இருந்தது திராவிட முன்னேற்றக் கழகமானது. திராவிட முன்னேற்றக் கழகமும் தி.மு.க. முன்னேற்றக் கழகமாக ஆகலாம். வருங்காலத்தில் அரசியலிலே என்னென்ன நடக்கும் என்று கூறக்கூடிய மகானுபாவர்கள் இல்லை. ஒரு காலத்திலே பெரிய மகாநாட்டிலே உலக உருண்டையைப் போட்டு உலகத் தலைவர்களாகப் போட்டிருப்பதைப் பார்த்தேன். உலகத் தலைவர்களாக இருக்கலாம், ஆனால் இப்படிப்பட்ட அறிவிப்பதை இப்பொழுது பார்க்க முடிகிறது. இவர்களெல்லாம் உலகத்தில் பெரியவர்கள் என்று மகாநாட்டிலே அறிவித்தும் முறை வந்திருக்கிறது. இந்தத் தலைவர்களைப்பற்றி வருங்காலத்திற்குத் தெரியும். என்னுடைய

அனுபவம் கொஞ்சம்தான். சிலசில தத்துவங்களைப் புரிந்துகொண்டு என்னென்ன முறையில் வரும் என்பதை நினைக்கிறேன். ஆதரிப்பவர்களே கடைசியிலே நடுநிலையை வகித்தார்கள். அன்றைக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்தவர்கள் ஓட்டுப்போடும் நேரத்தில் ஓட்டுப்போடாமல் இருந்தார்கள். அந்த நிலைகூட இன்றைக்கு வரலாம். இன்றைக்குக் கூட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்காமல் இருப்பவர்கள் பிறகு அதை ஆதரிக்கலாம்.

நம் முன்னால் இருப்பவர்களிடம் விஷயத்தைச் சொல்வது ஒருபுறம் இருந்தாலும் மேற்கோள் காட்டுவது நல்லது என்று கருதுகிறேன். பெரிய மெஜாரிட்டி இருக்கிறது, மெஜாரிட்டி இருக்கிறது என்று மட்டும் பார்த்தால் அது சரியாக இருக்காது.

"மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் இன்றைக்கும்கூட எண்ணிக்கையைப் பாருங்கள் என்று சொன்னார். நேற்றும் சொன்னார். சந்தர்ப்பம் கிடைக்கிற நேரத்தில் எல்லாம் சொல்வார். எத்தனை முறை வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளட்டும். எண்ணிக்கையில் பெருத்தவர்கள் அவர்கள். ஆனால் நிச்சயமாக நியாயம் என்பது எண்ணிக்கையைப் பொறுத்தது மட்டும் அல்ல. எண்ணத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது. மனதைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்று சொல்லிவிட்டு பிறகு கந்தசாமி கருப்பாக இருக்கிறார், காக்கையும் கருப்பு தான். ஆகவே கந்தசாமியும், காக்கைதான் என்று சொன்னால் கந்தசாமி காக்கை ஆகிவிட மாட்டார்" என்ற கருத்தை அண்ணா சட்டமன்றத்திலே 30—10—1957-இல் கூறினார். எண்ணிக்கையை மட்டும் வைத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். எண்ணிக்கையை மட்டும் வைத்துக்கொண்டு நியாயம் இருக்கிறது என்று சொன்னால் சூரியனே கிழக்கிலிருந்து உதயம் ஆகவில்லை, மேற்கிலிருந்துதான் உதயம் ஆகிறது என்றுகூடத் தீர்மானம் போட்டுவிடலாம். சாதாரணமாகப் பார்லிமெண்டில் சொல்வதுண்டு, 'பார்லிமெண்ட் கேன் லேஜிஸ்லேட் ஃபார் எவிரிதிங்' என்று மெஜாரிட்டியை மட்டுமே வைத்து எதையும் செய்ய முடியும் என்பதற்காகத்தான் சொல்வார்கள். ஆகவேதான் இந்த ஒரு விஷயத்தை மட்டும், மெஜாரிட்டி என்ற கருத்தை மட்டும் வைத்துக் கொண்டு எங்களிடத்திலே மெஜாரிட்டி இருக்கிறது, ஆகவே, எப்படியும் நாங்கள் கொண்டுவரும் தீர்மானத்தை நிறைவேற்றிவிடுவோம். நீங்கள் எதைவேண்டுமானாலும் சொல்லுங்கள் என்று கனைக் குறைவாக இருக்க வேண்டாம் அல்லது நாங்கள் சொல்வதை அனுசரியப்படுத்த வேண்டாமென்று முதலிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உங்களுடைய தீர்மானத்தை அலட்சியப்படுத்துவதாகவோ அல்லது உங்களுடைய பேச்சைக் கவனிக்காமல் இருப்பதாகவோ கூறுவது மிகமிகப் பொருத்தமற்ற ஒன்றாகும். மதிப்பளிக்க வேண்டுமென்பதற்காகத்தான் அவ்வளவு அமைச்சர்களும் இருக்கின்றோம், அலட்சியப்படுத்தக் கூடாது என்பதற்காகத்தான் இடையிடையே சமாதானம் சொல்லி வருகிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நன்றி. குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றி சில தலைப்புகளாகச் சொல்லி விஷயத்தைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

முதலாவதாக இந்த அரசைப் பொறுத்தவரையில், ஏற்படக் கூடிய சில சிக்கல்களை எதிர்பார்த்து அதற்கான வழிமுறைகள், அதை எப்படித் தீர்த்து வைப்பது என்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இதற்கான விவரங்களைச் சொல்லுகிறேன். இது என்னுடைய முதல் குற்றச்சாட்டு. இரண்டாவதாக, ஏதாவது ஒரு இயக்கம் நடந்தால் ஆரம்பத்திலேயே அந்த இயக்கத்தின் தன்மையைப் புரிந்துகொண்டு அதனுடைய சாதக பாதகங்களை எடுத்து எப்படித் தீர்க்கலாம் என்பதற்குப் பதிலாக, நமக்கு மெஜாரிட்டி இருக்கிறது, நாம் ஆளுங்கட்சி, நம் கையிலே ஸ்டேட் பவர் இருக்கிறது, இதை வைத்துக்கொண்டு இதைச் சமாளித்து விடலாம் என்ற கருத்தும் மேலோங்கி இருக்கிறது. இதற்குக்கூட நான் மறுபடியும் அண்ணா அவர்கள் தந்த மேற்கோளைத்தான் காட்டலாம் என்று நினைக்கிறேன். எந்தப் பிரச்னையையும் முளையிலேயே அணுகினால் தீர்க்க முடியும் என்று கூறிய அரசியல் தத்துவத்தை உங்களுக்கு எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆரம்பத்திலேயே எடுத்து வைத்தால் லேசாகத் தீர்க்கமுடியும், முற்றிப்போன பிறகு கௌரவப் பிரச்னையாக மாறி அது என்ன பிரச்னை என்றே தெரியாமல் போய் விடுகிறது என்ற விஷயத்தையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இன்னொன்று, பின்னால் முடிக்கும்பொழுது லீபார்வர்ட் பிளாக் நண்பர்களுக்குச் சில விஷயங்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். முத்துராமலிங்கத் தேவர்பற்றிச் சொன்ன விஷயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்து, லா அண்ட் ஆர்டர் விஷயத்தை நாம் எப்படிப் பார்த்தோம்? கவர்னர் சுற்றுலா சென்ற பொழுது நெல்லை மாவட்டத்தில் மனுக் கொடுத்ததைப் பார்த்தோம். கவர்னரிடம் கொடுத்தால் என்ன? கவர்னர் என்றால் என்ன? அவரால் எந்த முடிவும் செய்ய முடியாது. இது ப்ராப்பராக கான்ஸ்டிடியூஷனல் பொசிஷன்.

I am aware of the people meeting the Governor. Anybody is free to meet the Governor but only the Government could take decisions on the issue and implement them.

இதைத்தான் நேற்று பத்திரிகையில் பார்த்திருக்கிறோம். கேரளா முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். அங்கு குறிப்பிட்ட பிரச்னையில், பள்ளிக்கூட விவகாரத்தில் அங்கிருந்தவர்கள் கேட்கிறார்கள், கவர்னரைப் போய்ப் பார்த்தார்களே, உங்களைக்கூடக் கேட்காமல் பார்த்தார்களாமே என்று கேட்டதற்கு அவர் திதானமாகச் சொல்லியிருக்கிறார் கவர்னரைப் பார்ப்பதற்கு யாருக்கும் அனுமதி உண்டு, ஆனால் கொள்கைபற்றி முடிவெடுக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். அம்மாதிரி கவர்னரிடத்திலே தந்த முறையீடுகளைத் தயவு செய்து இந்த அரசு எடுத்துப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், குறிப்பாக இந்த லா அண்ட் ஆர்டர் பொசிஷன் சம்பந்தமாக.

அடுத்த விஷயம். பொதுவாக என்னைப் பொறுத்தவரையில் எல்லோரும் முக்கியமானவர்கள்தான். சாதாரணமாகக் கீழ்த்தட்டில் இருக்கின்ற மனிதனுக்கும் பாதுகாப்பு இருக்க வேண்டும். ஆனால் சில விஷயங்களில் பொறுப்பான பதவியில் இருப்பதால் பாதுகாப்பு உண்டு என்று சொல்லப்படுகிறது. நிலுவுக்கல் சட்ட மன்ற உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்களுடைய வீட்டிற்குப் படைபடையாகச் சென்றதைப்பற்றி அவரே சொல்லட்டும். அவ்வாறு சென்றது சரிதானா? சுந்தரம் ஒருவராய் இருந்தால் அவர் உயிருக்கே ஆபத்து என்ற நிலை தமிழ்நாட்டில் இருந்தால், இரவு 1 மணி 2 மணிக்கு ஆயுதபாணிகளாகப் புகுந்து வீட்டைத் தாக்குவதும், சுந்தரம் தப்பித்ததே தம்பிரான் புண்ணியம் என்ற நிலை இருப்பதால் அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். ஒன்று, இந்தப் புள்ளியை வைக்க அரசு தயங்கினால் மக்களே பார்த்து முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய நிலையேற்படும். சாதாரண பொறுப்பில் உள்ளவர்கள் வீட்டில் இருக்க முடியாது என்ற நிலை கண்டிப்பாக ஏற்படக்கூடாது என்று அழுத்தந் திருத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேமாதிரியாக சிறையிலே ஒரு சட்டமன்ற உறுப்பினர், சுப்பு அவர்கள் இருக்கும்பொழுது அவருடைய வீடு தாக்கப்படுகிறது. தாக்கப்பட்டபிறகு போய்ப் பார்த்து வந்தபிறகு முழுதும் சொல்கிறேன், சுப்பு வீட்டைத் தாக்கி, வீட்டிலே மனைவி இல்லை, வெளியிலேயிருந்த படத்தை உடைத்துவிட்டார்கள். அவர்களிடம் போலீஸ் அதிகாரி சொல்கிறார், இது சாதாரண வீடு இல்லை, எம்.எல்.ஏ. வீடு, விவகாரம் ஆகிவிடும் என்று சொல்கிறார்கள். இதைச் சொன்னதைப்பற்றி விசாரிக்கட்டும். இப்படியாகப் போலீசார், இந்த வீட்டைத் தாக்கினால் விவகாரம் பண்ணுவார்கள், போய்விடுங்கள், இந்த வீட்டைத் தாக்கினால் பரவாயில்லை, இந்த வீட்டைத் தாக்கினால் தவறு என்று

சொல்லக்கூடிய நிலை ஏற்பட்டால், அப்படிப்பட்ட துர்ப்பாக்கியமான நிலை வந்தால் அது பரிதாபகரமானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹாண்டே அவர்கள் சொன்னார்கள் நான் பல கூட்டத்தில் சொல்லியிருக்கிறேன். ஸ்டேட் மெஷினரியை வைத்து அமைதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. நாங்கள் 144-ஐ மீறினால் கைது செய்ய வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது, மறியல் செய்தோம் என்றால் கைது செய்ய வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. நாளைக்கு நடந்த நடக்கிறது என்றால் லா அண்ட் ஆர்டர் பொசிஷன் வந்துவிடும், அதைப் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு யாருக்கு இருக்கிறது? அந்த அரசு என்பது யார்? அரசைச் சேர்ந்த கட்சியா? அண்ணா அவர்களே சொல்லியிருக்கிறார்கள், அரசுக்கும் கட்சிக்கும் வித்தியாசம் தெரியவில்லையே, இது எக்காலத்தில்தான் முடியும் என்று வேதனையோடு பேசியிருக்கிறார்கள். மதுரை எனக்குத்தான் சொந்தம் என்ற அகம்பாவம் இருந்தால் என்ன மோசமான நிலை ஏற்படும்? 5-ம் தேதி மூடிய கடைகள் திறக்கப்பட்டன என்பதை மறுக்க முடியுமா? நான் விவரங்களைக் கொடுக்கிறேன். மூடிய கடைகள் திறக்கப்பட்டன. முன்னால் ஜீப் போக, அடுத்தாற்போல் ஒரு ஹுர் பெரியவர் காரில் போக, அடுத்தாற்போல போலீஸ் ஜீப், அதற்குப் பின்னால் இரண்டு லாரி, இரண்டு லாரிகளிலும் ஒவ்வொரு லாரியிலும் சுமார் 50 பேர் வீபல்லாக கள்ளு, சாராயம், பிராந்தி குடித்துவிட்டு, ஆயுத பாணிகளாக வந்து இறங்கி நின்று மூடிய கடைகளை திறக்கவேண்டும் என்று சொல்கின்ற நிலைமை இந்த நாட்டில் நடந்தது 5-ம் தேதி மதுரை நகரத்தில். இல்லை. என்று மறுக்க முடியுமா? இம்மாதிரி ஒரு நிலைமை ஏற்பட்டது என்று சொன்னால், ஆட்சி இதை ஒடுக்கமுடியவில்லை என்று சொன்னால், கட்சியில் இருக்கும் ஒரு சிலரை ஆயுதபாணிகளாக வைத்துக் கொண்டு எதையும் செய்யக்கூடும் என்று மக்களை மிரட்டினால், மதுரை மக்களே எதிரடி கொடுக்கவேண்டிய நிலைமைதான் ஏற்படும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அடிக்கு அடிகொடுப்போம் என்று மோசலே ஹால் கூட்டத்தில் உங்கள் தலைவர் கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார். அதற்குத்தான் மதுரை முத்து அவர்கள் கண்ணப்பர் திடலில் பேசும்போதுது பதில் சொன்னார்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மதுரை நகரத்தில் அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. நீங்களே விசாரித்துப் பார்க்கலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அடிக்கு அடி கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்று சட்ட மன்றத்திலேயே பேசுகிறீர்கள். கோகலே ஹால் கூட்டத்தில் உங்கள் தலைவர் இதே ரீதியில்தான் பேசினார். அதற்குத்தான் மதுரை முத்து பதில் சொன்னார்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நியாயம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு பொறுப்பான மெம்பர் என்ற முறையில் நான் சொல்கிறேன். இது மதுரையில் நடந்த சம்பவம். முன்னாலே போலீஸ், அடுத்து மதுரைப் பெரியவர், அடுத்தாற்போல் போலீஸ் ஜீப், அதற்குப் பின்னால் இரண்டு லாரிகள், அதிலே ஆயுத பாணிகளாக ஆட்கள் இறங்கி மூடிய கடைகளைத் திறக்கவேண்டும் என்று மிரட்டினார்கள். இம்மாதிரி நடந்தது நியாயம் என்று அரசு கருதுகிறதா, அப்படி நியாயம் என்று கருதுகிறது என்று சொன்னால், நான் வேறு வாதத்திற்கே போகவில்லை. இம்மாதிரிச் சம்பவம் நடந்ததா, இல்லையா என்று நீங்களே விசாரியுங்கள். உங்கள் கட்சியில் இருக்கிறவர்கள் கொண்ட ஒரு குழுவை அனுப்பி மதுரையில் இப்படி நடந்தது உண்மை தானா என்று விசாரியுங்கள். தங்கமணி பொறுப்பு இல்லாமல் சொல்லுகிறான் என்று கருதினால் நான் சொல்வது சரியா, இல்லையா என்று நீங்களே விசாரித்துப் பாருங்கள். நான் சொல்வது தவறு என்று சொன்னால், நான் எந்தத் தண்டனையை வேண்டுமானாலும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முன்பே அப்படித் தெரிவித்தது பற்றி விசாரித்தேன். விசாரணையில் தெரியவந்தது என்னவென்றால், அப்படி யாரும் நடக்கவில்லை என்பதுதான். ஆனால், கடைகளையெல்லாம் மூடுங்கள் என்பதற்காகத்தான் சில பேர்கள் அதே ரீதியில் வேல்களை எடுத்துக்கொண்டு, கள், சாராயம், பிராந்தி குடித்துவிட்டு, கடைகளை மூடுங்கள் என்று சொல்லிக் கொண்டு சென்றதாக நான் கேள்விப்படுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அதற்கு அதே பாணியில் நான் பதில் சொல்கிறேன். 2, 3, 4-ம் தேதிகளில் மதுரையில் 2,500 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 1,000 பேர்கள் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். 1,500 பேர்கள் லாக்கப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். கடைகளை மூட வேண்டும் என்று சொல்லக்கூடியவர்களையெல்லாம்தான் உள்ளே பிடித்துப் போட்டுவிட்டீர்களே? இவர்களையெல்லாம் உள்ளே பிடித்துப்போட்டு விட்டு, அதற்குப் பின்னாலே வெளியே இருப்பவர்களை மிரட்டி இந்த மாதிரிக் காரியங்களைச் செய்வது என்றால், அது ஒரு தைரியமான காரியம் என்றோ, எந்த

இருக்கக்கூடிய விவசாயிகள்—அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று சொல்ல முடியாது—அவர்கள் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்ற ஒரு குறிப்பிட்ட கோரிக்கையை வைத்து, அவர்கள் இயக்கம் நடத்தினார்கள் அதைப் பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் ஆதரித்துப் பேசினார்கள். ஜூன் 19-ம் தேதி பெருமாநல்லூரில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது, 3 பேர்கள் இறந்தார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும். இரண்டு மோட்டார் வைத்து பம்பு செட்டுகளை இயக்க வேண்டும் ஆழமான கிணறுகளில். அப்படியிருக்கும்பொழுது 12 பைசா என்பது 24 பைசாவாகத்தான் கட்டவேண்டிவரும் என்பதைக் காரணமாகக் காட்டினார்கள். ஆகவே, மின்சாரக் கட்டணம் அதிகமாக இருக்கிறது என்று கோவையிலும், சேலத்தில் சில பகுதிகளிலும் இதைப் பிரச்னையாக்கினார்கள். அத்துடன் சில கோரிக்கைகளையும் வைத்தார்கள். 12 அம்சக் கோரிக்கைகளை வைத்தார்கள். இந்தக் கோரிக்கைகளை வைத்து விவசாயச் சங்கம் இயக்கம் நடத்திக்கொண்டு வந்தது. விவரம் அரசாங்கத்திற்குத் தெரியும் என்றாலும், சபைக்குத் தெரியவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். இந்த இயக்கத்தில் மன்றாடியார் அவர்களும் இருந்தார்கள். மன்றாடியார் மட்டுமல்ல, அவருடன் மற்ற விவசாயிகளும் இருந்தார்கள். மன்றாடியார் இயக்கம் என்று பேசப்படுகிறது. மன்றாடியாரோடு, அதிலே பல விவசாயிகளும் இருந்தார்கள். பல பேர்களும் சிறைச்சாலைக்குச் சென்றார்கள். பல பேர் கைது செய்யப்பட்டார்கள். இப்படியெல்லாம் கைது செய்யப்பட்டிருக்கக்கூடாது. கைது செய்வது என்றால் எப்படி செய்தார்கள்? செக்ஷன் 144 ஐந்து பேருக்குமேல் கூடுவது; செக்ஷன் 341—மறியல். கிரிமினல் திருத்தச் சட்டம் 7-வது பிரிவு; இப்படியா? கிரிமினல் திருத்தச்சட்டம் 7-வது பிரிவை அரசு தயவுசெய்து உபயோகப்படுத்தக்கூடாது. காரணம் அந்தச் சட்டம் உருவானது எப்படி? 1931-ல் ஐந்து பேராகப் போய் மறியல் செய்வதற்குப் பதிலாக நான்கு நான்கு பேராகப் போய் மறியல் செய்வார்கள். வெல்லிங்டன் ஆட்சிக் காலத்தில் ஐந்து பேராக அவர்கள் இல்லை என்பதால் அவர்களைக் கைது செய்ய முடியவில்லை. அப்போதுதான் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்தார்கள், ஐந்து பேரானாலும்சரி, நான்கு பேரானாலும்சரி, ஒருவரானாலும்சரி, மறியல் செய்கிறவர்கள், அவர்களுக்குத் துணையாக நிற்பவர்கள், அவர்களுக்கு உதவி செய்பவர்கள் யாராக இருந்தாலும் கைது செய்யப்படுவதற்கு எதுவாக அந்தச் சட்டம் அந்தக் காலத்தில் திருத்தப்பட்டது. அந்த ஆக்ட் படித்தான் 1946-ம் ஆண்டு எஸ். ஆர். வி. எஸ். ஸ்ட்ரைக்கில் நான் கைது செய்யப்பட்டேன். அப்போது மூன்று மாநிலங்களும் சேர்ந்திருந்த காலம். அப்போது இந்தச் சபையில்

நம்பியார் அவர்கள் இது சம்மந்தமாக கேள்வியினை எழுப்பியபோது பிரகாசம் அவர்கள் சொன்னார்கள், So far as my Government is concerned, I will not use this section to suppress the Opposition.

இந்தச்சட்டத்தின் கீழான வழக்கினை அரசு நடத்தியிருந்தால், அதை சுப்ரீம் கோர்ட்டுக்கே எடுத்துச் சென்று, இந்தக் கிரிமினல் திருத்தச்சட்டம் 7-வது பிரிவு அரசியல் சட்டத்திற்கே முரணானது என்று எடுத்துக்காண்பித்திருக்கமுடியும். காரணம் அஃபென்ஸ் இஸ் நாட் ஸ்பெஸிஃபிக்.

கேட்டார்கள், 'நீங்கள் மறியல் செய்தீர்களா' என்று. செய்தோம். ஆனால் 'இந்த சார்ஜ் ஷீட்படிக்கு நாங்கள் குற்றவாளியில்லை' என்று சொல்லித்தான் ஒரு மாதகாலம் சிறையில் இருந்தோம். இப்படி இரண்டாயிரம் மூவாயிரம் பேர்—வேண்டுமானால் இந்த விவரங்கள் சற்றுக் கூடக்குறைய இருக்கலாம், மன்னிக்க வேண்டும்—ஆனால் ஏறத்தாழ இரண்டு மூவாயிரம் பேர் கைது செய்யப்பட்டார்கள். அதனால் அந்த இயக்கம் மேலும் விரிவடைந்து விட்டது. ஆனால் இதே நேரத்தில் சாத்தூரில் 600 பேர் கைது செய்யப்பட்டார்கள். இந்த இயக்கத்திற்கும் அவர்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. மின்சாரக் கட்டணத்தினையொட்டிய போராட்டத்திற்கும் அவர்களுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. அவர்களுடைய குறைகள் எல்லாம் தாங்கள் உற்பத்தி செய்யும் விவசாயப் பொருள்களுக்கு சரியான விலை கிடைக்க வில்லை. அதே நேரத்தில் அவர்களுக்குக் கடன் பளுவும் உயர்ந்துகொண்டே வருகின்றது. கிணறுகளில் தண்ணீர் இல்லாத காரணத்தினால் பாசனமும் பாதிக்கப்பட்டு விட்டது. இந்த நிலையில் அவர்களால் கடன் தொகைகளைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. மற்றவர்கள் விஷயத்தில் பாக்கிகளை வசூல் செய்யும் போது நீதி மன்றங்களில் வழக்குப்போட்டு 'டிகிரி' வாங்கி பாக்கித் தொகைகளை வசூலிப்பார்கள். ஆனால் இவர்கள் விஷயத்தில் எடுத்த உடனேயே 'ஜப்தி' என்றுதான் ஆரம்பிக்கின்றார்கள். இதைத்தான் விவசாயிகள் எதிர்த்தார்கள். ஆனால் அரசு எல்லாவற்றையும் ஒன்றாகப் பிணைத்ததால் இங்கேயும் விவசாயப் போராட்டம் சற்று வலுப்பெற்றது. அதையொட்டித்தான் சாத்தூரிலும், ஸ்ரீவில்லிப்புத்தூரிலும் இப்படிப்பட்ட விவசாயப் போராட்டங்கள் உருவாயின. ஸ்ரீவில்லிப்புத்தூரிலாவது அந்தப் போராட்டத்தில் சில கட்சியினர் கலந்து கொண்டனர். ஆனால் சாத்தூரில் அப்படியில்லை. முழுக்க முழுக்க விவசாயிகளே அதை நடத்தினார்கள்.

இப்படி இருக்கும்போதுதான் ஜூன் மாதம் 7-ஆம் தேதியன்று கோவையில் பதினையாயிரம் வண்டிகள் என்று சொல்லுகிறார்கள், நிச்சயமாக

விவசாயிகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டாமா? எனவே இந்த முறை மாற வேண்டும். வரி வாங்கட்டும், ஆனால் முறைப்படி வாங்கட்டும் என்றுதான் சொல்கிறோம். விவசாயிகள் என்று சொன்னால் அவர்களுக்கு நியாயமே கிடைப்பதில்லை.

நான் தினமும் 'தினத் தந்தி' 'முரசொலி' யைப் படிக்கின்றவன். இந்தப் பத்திரிகைகளில் இந்தக் கிளர்ச்சிபற்றி எழுதினார்கள். ஆனால் விவசாயிகளுக்குச் சாதகமாக உள்ள பாயிண்டுகளை முறையாக அவற்றில் எழுதவில்லை. இன்று உள்ள நிலை என்ன, ஏகபோகங்களுக்குச் சாதகமான நிலை உருவாகியிருக்கிறது. நூல் விலை குறையவில்லை. துணி விலை குறையவில்லை. மில் தொழிலாளர்களுடைய சம்பளம் உயரவில்லை. பருத்தி உற்பத்தி திடீரென்று உயர்ந்துவிட வில்லை. ஆனாலும் பருத்தியின் விலை மிகவும் குறைந்துவிட்டிருக்கிறது. பாதிக்கப்படுகின்றவர்கள் யார்? அதை உற்பத்தி செய்யும் விவசாயி. விவசாயிக்கு எந்த அளவிற்கு அடி விழுகிறது என்று சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். இந்தமாதிரி விலையை நிர்ணயிக்கும் ஏகபோகக் கூட்டம் இருக்கிறதே, அந்தக் கூட்டத்தைத்தான் அந்தக் கோரிக்கை 'அட்டாக்' பண்ணுகிறது. எனவே இந்தப் பன்னிரண்டு அம்சக் கோரிக்கையின் அடிப்படையில் தமிழகத்திலுள்ள விவசாயிகள் ஒன்று பட்டு வந்தது உண்மையிலேயே பெருமைக்குரியதாகும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: விவசாய வருமான வரிச் சட்டம் வந்தபோது, அதற்குத் தாங்கள் ஒரு திருத்தம் கொடுத்து, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, தங்கள் திருத்தத்தை வாபஸ் பெற்றுக்கொள்கிறேன் என்று சொல்லி, திரும்பப் பொற்றுக்கொண்டீர்கள். இப்போது அதைப்பற்றி ஏன் குறைகூறுகிறீர்கள் என்பதுதான் புரியவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: அப்போது நான் அப்படி சொல்லியிருக்கலாம். அந்தச் சமயத்தில் வந்த டிபேட்டில் சொல்லியிருக்கலாம். அது வேறு விஷயம். தற்போது விவசாயிகள் பிரச்சனையில் நடைபெற்ற துப்பாக்கி பிரயோகத்தைப்பற்றி விசாரிப்பதற்காக வந்த டாக்டர் குமார், அகமது ஆகியோரை 'ஏர் போர்ட்டிலே' தடுத்து நிறுத்தியிருப்போம் என்று ஒரு முதலமைச்சர் சொல்வது முறையல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நாங்கள் அப்படிச் சொன்னதாக எங்கே பார்த்தீர்கள்? நிருபர்கள் கேட்டார்கள். போலீசார் தடுத்தார்களாமே என்று. வந்தவர்களேகூட தடுத்ததாகச் சொல்லவில்லை. தடுப்பதாக

இருந்தால் விமான நிலையத்திலேயே தடுத்து நிறுத்தியிருப்பார்கள். யாரும் அங்கே தடுத்து நிறுத்தவில்லை. அவர்கள் வருகையை நாங்கள் வரவேற்கிறோம். நீங்கள் வாலையும் விட்டுவிட்டு, தலையையும் விட்டுவிட்டு நடுவிலே இருப்பதைப் பார்த்துவிட்டு இப்படிச் சொல்கிறீர்கள். அதற்கு நாங்கள் பொறுப்பல்ல. ஒரு மாநிலத்தில் உள்ளவர்கள் அடுத்த மாநிலங்களுக்குச் செல்லலாம். விசாரிக்கலாம். வேண்டுமென்றே நீங்கள் விவாதத்திற்காக அப்படிச் சொல்கிறீர்கள். விவசாய வருமான வரி சட்டத்தை ஆதரித்துவிட்டு இப்போது அதையும் குறை கூறுகிறீர்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் அப்படிச் சொல்லவில்லை. . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் அறைகூவல் இட்டுச் சொல்கிறேன். நீங்கள் இந்த மன்றத்திலேயே சொல்லியிருக்கிறீர்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அதை நான் மறுக்கவில்லை. அப்போது அந்த டிபேட்டில் நான் பேசியிருப்பேன். கலவரம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட உ.பி-யிலிருந்து வந்தவர்களைத் தடுப்பது சரியில்லை என்றுதான் சொல்கிறேன். தடுத்தாகப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எந்தப் பத்திரிகையில் அப்படிப் பட்ட செய்தி வந்தது? அந்தப் பத்திரிகையின் வாசகத்தைப் படித்துக்காட்ட வேண்டும். வந்தவர்களை யாரும் தடுக்கவில்லை. போலீசாரை வைத்துத் தடுத்தீர்களமே என்று நிருபர்கள் கேட்டார்கள். பெத்தநாயக்கன் பாளையம், பல்லடம் இன்னும் பல பகுதிகளுக்குப் போகும்போது தடுத்தார்களாமே என்று கேட்டார்கள். அவர்களை யாரும் தடுக்கவில்லை. அப்படித் தடுத்ததாக அவர்கள் அறிக்கை விடவுமில்லை. அகமதையும் மற்றவர்களையும் தடுப்பதாக இருந்தால் முதலிலேயே—விமான நிலையத்திலேயே தடுத்திருப்பார்கள். அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு இல்லை. இந்த அரசு மீது குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காகவே அப்படிச் சொல்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: விவசாயிகள் போராட்டக் குழு என்று ஒரு போராட்டக் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவிலே எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். ஆளும் கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள். சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். எந்தக் கட்சியையும் சேராத விவசாயக் கட்சியும் இருக்கிறது. எல்லோரும் சேர்ந்து ஒரு தீர்மானத்தைப்போட்டு,

இப்போது ஒரு முடிவெடுத்திருக்கிறார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிலே எங்கள் கருத்தினைச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தங்கமணி அவர்களின் உரை முடியும்வரை அவையின் அனுமதியுடன் அவையின் நேரத்தை நீட்டிக்கலாம் என்று கருதுகிறேன். (பல உறுப்பினர்கள்: வேண்டாம்).

திரு. ஜே. ஜேம்ஸ்: சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நாங்கள் ஊரிலிருந்து இன்றுதான் வந்திருக்கிறோம். களைப்பாக இருக்கிறது. பசி யாகவும் இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு இத்துடன் முடித்துவிட்டு மீண்டும் நாளை தொடரலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நாளை வைத்துக்கொள்ளலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நாளை வேறு விஷயங்கள் இருக்கின்றன. (பல உறுப்பினர்கள்: நாளைக்கே வைத்துக்கொள்ளலாம்).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இன்று இத்துடன் முடித்து விட்டு, நாளை அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

4. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

* 1. Notification issued with G.O. Ms. No. 33, Public Works, dated the 7th January 1972, in regard to exemption and reduction in respect of Electricity Tax in Area of operation of Tamil Nadu Electricity Board under the Tamil Nadu Electricity (Taxation and Consumption) Act, 1962. [Laid on the table of the House under section 17 (2) of the Tamil Nadu Electricity (Taxation on Consumption) Act, 1962 (Tamil Nadu Act 4 of 1962).]

* 2. Notification issued with G.O. R. No. 350, Revenue, dated the 14th February 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by Yuvak Mandal, Coimbatore in aid of National Defence Fund. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

* 3. Notification issued with G.O. R. No. 491, Revenue, dated the 6th March 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the Manageress Gem Nursery School, Madras. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

* 4. Notification issued with G.O. Ms. No. 241, Revenue, dated the 28th January 1972, in regard to exemption from sales tax in respect of dealers dealing exclusively in toddy. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 5. Notification issued with G.O. R. No. 87, Revenue, dated the 13th January 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by Air Force Station, Tambaram, in aid of the Air Force Wives Welfare Fund. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

* 6. Notification issued with G.O. Ms. No. 2848, Agriculture, dated the 28th October 1971, in regard to declaration of notified market area of the Hosur Market, in respect of groundnut and gingelly. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

* 7. Notification issued with G.O. Ms. No. 925, Labour, dated the 3rd August 1971, in regard to certain amendments to rule 70 of the Tamil Nadu Industrial Disputes Rules, 1958. [Laid on the table of the House under section 38 (4) of the Industrial Disputes Act, 1947 (Central Act XIV of 1947).]

* 8. Notification issued with G.O. Ms. No. 2690, Home, dated the 25th October 1969, in regard to an amendment to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

* 9. Notification issued with G.O. Ms. No. 147, Agriculture, dated the 20th January 1972, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules. 1962. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

* 10. Notification issued with G.O. Ms. No. 349, Home, dated the 2nd February 1971, in regard to certain amendments to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

* 11. Notification issued with G.O. R. No. 494, Revenue, dated the 6th March 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the Trustee, Sri Vedapureeswarar Temple Renovation Committee, Tiruverkadu. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

* 12. Notification issued with G.O. P. No. 219, Revenue, dated the 25th January 1972, in regard to an amendment to Rule 23 of the Tamil Nadu Entertainments Tax Rules, 1939. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

* 13. Notification issued with G.O. Ms. No. 2959, Revenue, dated the 8th October 1971, in regard to an amendment to Rule 50 of the Tamil Nadu General Sales Tax Rules, 1959 for inclusion of Cost Accountants as Sales Tax Practitioners. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 14. Notification issued with G.O. Ms. No. 112, Revenue, dated the 17th January 1972, in regard to certain amendments to the Tamil Nadu Agricultural Income-tax Rules, 1955. [Laid on the table of the House under section 61 (3) of the Tamil Nadu Agricultural Income-tax Act, 1955 (Tamil Nadu Act V of 1955).]

* 15. Notification issued with G.O. Ms. No. 417, Agriculture, dated the 11th February 1972, in regard to regulation of trade over the purchase and sale of paddy and gingelly in the Chingleput

district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

* 16. Notification issued with G.O. Ms. No. 3209, Agriculture, dated the 10th December 1971, in regard to certain amendments relating to regulation of trade in greengram, blackgram and sugarcane, Jaggery in South Arcot district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

* 17. Notification issued with G.O. No. 551, Revenue, dated the 24th February 1972, in regard to certain amendments to the first schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959). [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 18. Notification issued with G.O. Ms. No. 418, Agriculture, dated the 11th February 1972, in regard to regulation of trade over the purchase and sale of cotton in the Tiruchirappalli district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

* 19. Notification issued with G.O. Ms. No. 2930, Revenue, dated the 6th October 1971, in regard to an amendment to the rules framed under clause 2 (h) of section 26 of the Tamil Nadu Survey and Boundaries Act, 1923. [Laid on the table of the House under section 26 (3) of the Tamil Nadu Survey and Boundaries Act, 1923 (Tamil Nadu Act VIII of 1923).]

* 20. Notification issued with Roc. No. 117411/67, dated the 6th August 1968, in regard to extension of certain provisions relating to building regulations under the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Attayampatti Town Panchayat of Salem district. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 21. Notification issued with Roc. No. 85881/68-E3, dated the 24th November 1968, in regard to extension of certain provisions relating to building regulations under the Tamil Nadu District

Municipalities Act, 1920 in the entire area of Aravakurichi Town Panchayat. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 22. Notification issued with Roc. No. 73690/67/E-3, dated the 17th October 1968, in regard to extension of certain provisions relating to building regulations under the Tamil Nadu District Municipalities Act, 1920, in the entire area of Tiruchendur Town Panchayat. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 23. Notification issued with Roc. No. 97796/68-E3, dated the 24th November 1968, in regard to extension of certain provisions relating to building regulations under the Tamil Nadu District Municipalities Act, 1920, in the entire area of Vadavalli Town Panchayat in Coimbatore district. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 24. Notification issued with Roc. No. 142568/68-E3, dated the 26th November 1968, in regard to extension of certain provisions relating to building regulations under the Tamil Nadu District Municipalities Act, 1920, in the entire area of Uthukottai Town Panchayat. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 25. Notification issued with Roc. No. 13545/68-E3, dated the 16th November 1968, in regard to extension of certain provisions relating to building regulations under the Tamil Nadu District Municipalities Act, 1920, in the entire area of Oddanchatram Town Panchayat. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 26. Notification issued with G.O. R. No. 492, Revenue, dated the 6th March 1972, in regard to exemption from liability to entertainments tax and show tax to the benefit film shows conducted by Pioneer Muthu Theatre, Nagercoil in connection with the National Defence Fund. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

* 27. Notification issued with Roc. No. 3513/70-P1, dated the 2nd March 1970, in regard to exclusion of certain areas from the existing Poomalaikundu Panchayat for constitution into a Separate Panchayat by name " Kattunaickenpatti ". [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

+ 161. Notification issued with G.O. No. 1297, Revenue, dated the 25th April 1972, in regard to an amendment to rule 29 of the Tamil Nadu Entertainments Tax Rules, 1939. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

+ 162. Notification issued with G.O. No. 10, Revenue, dated the 3rd January 1972, in regard to certain amendments to the Tamil Nadu Entertainments Tax Rules, 1939. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

+ 163. Notification issued with G.O. Ms. No. 871, Home, dated the 24th March 1972, in regard to an amendment to the Tamil Nadu Home Guard Rules, 1963. [Laid on the Table of the House under section 15 (4) of the Tamil Nadu Home Guard Act, 1963 (Tamil Nadu Act 3 of 1963).]

† 164. Notification issued with G.O. Ms. No. 77, Co-operation, dated the 16th February 1972, in regard to certain amendments to the Madras Co-operative Societies Rules, 1963. [Laid on the Table of the House under section 119 (4) of Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

+ 165. Notification issued with G.O. Ms. No. 764, Revenue, dated the 8th March 1972 in regard to exemption from liability to entertainments tax to the film shows conducted by the Information and Public Relations Department of the Government of Tamil Nadu, at Children's Theatre (Anna Kalai Arangam), Vellore, North Arcot district. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

+ 166. Notification issued with G.O. R. No. 1121, Revenue, dated the 9th May 1972 in regard to exemption from liability to entertainments tax to the benefit film show organised by the President, Rajput Association, Madras on 14th May 1972, at Mahalakshmi Talkies. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

+ 167. Notification issued with G.O. P. No. 1158, Revenue, dated the 12th April 1972, in regard to exemption from sales tax on the sales of note books, articles of stationery and uniform dresses by educational institutions. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).]

+ 168. Notification issued with G.O. Ms. No. 1209, Agriculture, dated the 22nd April 1972, in regard to certain amendments relating to application of additional notified crops to all regulated markets in Thanjavur District and provision for facilities for the purchase and sale of groundnut at the market at Sirkali in Thanjavur district. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

+ 169. Notification issued with G.O. Ms. No. 3436, Home, dated the 20th December 1971, in regard to amendments to rules 4 and 38 of the Madras Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

+ 170. Notification issued with G.O. Ms. No. 956, Rural Development and Local Administration, dated the 9th May 1972 making the Municipal Corporation of Madurai (Regulation of Payment of Travelling Allowance, Daily Allowance and Conveyance Allowance to the Mayor, Deputy Mayor and other members of the Corporation Council) Rules, 1972. [Laid on the Table of the House under section 432 (2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971).]

+ 171. Notification issued with G.O. Ms. No. 1397, Revenue, dated the 9th May 1972, in regard to certain amendments to rules 5, 6 and forms 1 to 3 of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965. [Laid on the Table of the House under section 48 (5) of the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 30 of 1963).]

+ 172. Order issued with G.O. Rt. No. 500, Revenue, dated the 7th March 1972, Government Memo. 31038/CTIII/72-2, Revenue, dated the 29th March 1972 and Government Memo. No. 42524 A. CTIII/72-2, Revenue, dated the 24th April 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the President, Interact Club on 9th April 1972, in aid of National Defence Fund. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

+ 173. Notification issued with G.O. Ms. No. 331, Rural Development and Local Administration, dated the 22nd February 1972, in regard to an amendment to the Tamil Nadu Khadi and Village Industries Board Rules, 1960. [Laid on the Table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1969).]

+ 174. Notification issued with G.O. P. No. 1160, Revenue, dated the 12th April 1972, in regard to certain amendments to rules 23, 26 and Form F of the Tamil Nadu Sales of Motor Spirit

Taxation Rules, 1939. [Laid on the Table of the House under section 29 (2) of the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939 (Tamil Nadu Act VI of 1939).]

+ 175. Notification issued with G.O. Ms. No. 671, Labour (Housing), dated the 2nd May 1972, making the Tamil Nadu Slum Clearance Board (Remunerative Enterprises) Rules, 1972. [Laid on the Table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 3 of 1971).]

+ 176. Notification issued with G.O. Ms. No. 3910, Revenue, dated the 30th November 1971, in regard to certain amendments to the Tamil Nadu Urban Land Tax Rules, 1966. [Laid on the Table of the House under section 45 (2) of the Tamil Nadu Urban Land Tax Act, 1966 (Tamil Nadu Act 12 of 1966).]

+ 177. Notification issued with G.O. Ms. No. 941, Rural Development and Local Administration, dated the 4th May 1972 making rules for the election of the Mayor and Deputy Mayor of the Madurai Corporation Council. [Laid on the Table of the House under section 432 (2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971).]

+ 178. Notification issued with G.O. Ms. No. 2470, Rural Development and Local Administration, dated the 9th November 1971 in regard to appointment of the Secretary to Government, Rural Development and Local Administration Department, Madras as a member in the Tamil Nadu Khadi and Village Industries Board. [Laid on the Table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

179. 1971ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதி முதல் கருவூலங்கள் கணக்கு துறை அலுவலகங்களில் எல்லா அலுவலக நடவடிக்கைகளுக்கும் தமிழ் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றிய அரசாணை (நிலை) எண் 1868, கல்வி (தமிழ் வளர்ச்சி) துறை 30-10-1971 நாளிட்ட அறிவிக்கை [1956-ம் ஆண்டு சென்னை ஆட்சி மொழிச் சட்டம் (1956-ம் ஆண்டு சென்னை சட்டம் எண் XXXIV-ம்) பிரிவு 6-ன் கீழ் பேரவையின் முன் வைக்கப் படுகிறது.]

+ 180. Notification issued with G.O. Ms. No. 502, Rural Development and Local Administration, dated the 10th March 1972, making special rules for regulating the construction and

Maintenance in the vicinity of civil Aerodrome, 1972. [Laid on the Table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

+ 181. Notification issued with G.O. Ms. No. 1156, Home, dated the 20th April 1972, in regard to grace time for the payment of motor vehicles tax in respect of stage carriages and public carriers for the quarter ending 30th June 1972. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act 1931 (Tamil Nadu Act III of 1931).]

+ 182. Notification issued with G.O. Ms. No. 392, Home, dated the 8th February 1972, in regard to concessional rate of motor vehicles tax in respect of the Ambulance MDH No. 6400, belonging to Oblate Father's Mobile Rural Medical Service Catholic Church, Kancheepuram. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

183. Tamil Nadu Governments Review and the First Annual Report and Statement of Accounts of the Tamil Nadu Small Industries Development Corporation Limited for the year ended 31st March 1971. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

184. Tamil Nadu Governments Review and the Twenty-second Annual Report and statement of accounts of the Tamil Nadu Industrial Investment Corporation Limited for the year ended 30th June 1971. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956.)]

185. Tamil Nadu Governments' Review and the Second Annual Report and statement of Accounts of the Tamil Nadu Textile Corporation Limited for the year ended 31st December 1970. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956.)]

186. The Balance Sheet and Profit and Loss Account of Tamil Nadu Warehousing Corporation for the year 1969–70. [Laid on the Table of the House under section 31 (11) of the Warehousing Corporations Act, 1962 (Central Act 58 of 1962).]

187. Annual Report of the Tamil Nadu Khadi and Village Industries Board for the year 1969–70 (Tamil). [Laid on the Table of the House under section 24 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

188. Annual Report of the Tamil Nadu Khadi and Village Industries Board for the year 1970–71 (Tamil). [Laid on the Table of the House under section 24 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

189. The Tamil Nadu Governments' Review and the 6th Annual Report and statement of Accounts of the Tamil Nadu Small Industries Corporation Limited for the year ended 31st March 1971. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956.)]

** 190. Annual Report of Messrs. South India Viscose Limited, Coimbatore for the year ended 31st December 1971. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

191. Annual Report on the activities of the District Development Councils for the year 1968–69, issued with G.O. Ms. No. 1770, Rural Development and Local Administration, dated the 16th September 1970. [Laid on the Table of the House under section 14 (3) of the District Development Councils Act, 1958 (Tamil Nadu Act XVIII of 1958).]

B. Reports, notifications and other papers.

* 1. Notification issued with G.O. Ms. No. 1212, Labour, dated the 23rd September 1971, in regard to an amendment to the Tamil Nadu Beedi and Cigar Workers (Conditions of Employment) Rules, 1968.

* 2. Notification issued with G.O. Ms. No. 404, Revenue, dated the 8th February 1972 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of mortgage deed to be executed by the Tamil Nadu Housing Board in favour of Housing and Urban Development Finance Corporation (Private) Limited.

* 3. Notification issued with G.O. Ms. No. 3375, Revenue, dated the 3rd November 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of the mortgage deed executed by Thiru V. V. Nathan of Indian Administrative Service.

* 4. Notification issued with G.O. Ms. No. 83, Home, dated the 11th January 1972, in regard to certain amendments to the rules issued with Home Department Notification S.R.O. No. A. 4236 of 1959, published at pages 473–474 of the Rules Supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 15th July as subsequently amended.

@ 5. Notification issued with G.O. Ms. No. 84, Home, dated the 11th January 1972, in regard to certain amendments to the rules issued with Home Department Notification S.R.O.A. 2116 of 1960, published at page 188 of the Rules Supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 30th March 1960 as subsequently amended.

& 6. Notification issued with G.O. Ms. No. 936, Revenue, dated the 21st March 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of the sale deed to be executed by the National Young Men's Christian Association, Kodaikanal in favour of the Tamil Nadu Tourism Development Corporation Limited, Madras.

& 7. Notification issued with Memo. No. 151125/VI-71-3 Revenue, dated 13th March 1972, in regard to remission of stamp duty chargeable in respect of the stock certificates issued by the Tamil Nadu Electricity Board from the year 1968 onwards.

& 8. Notification issued with G.O. Ms. No. 2351, Revenue, dated the 26th August 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the loan bond to be executed by the Special Officer, Tamil Nadu Wakf Board, Madras.

& 9. Notification issued with G.O. Ms. No. 500, Revenue dated the 21st February 1972, in regard to remission of stamp duty chargeable in respect of agreement bonds to be obtained from scholarships holders and students admitted against certain categories of reserved seats in Government Medical Colleges.

& 10. Notification issued with Memo. No. 136207/VI/71-1 Revenue, dated the 17th November 1971 in regard to an amendment to G.O. Ms. No. 3566, revenue, dated the 9th November 1971 relating to deed of trust in favour of South India Teachers' Union Council of Educational Research Trust.

& 11. Notification issued with G.O. Ms. No. 577, Revenue, dated the 23rd February 1971 in regard to remission of stamp duty chargeable in respect of the gift deed to be executed in favour of Rajah Muthiah Chettiar Charitable and Educational Trust, Madras.

$ 12. Notification issued with G.O. Ms. No. 119, Revenue, dated the 17th January 1972, in regard to remission of stamp duty and registration fees chargeable under the Indian Stamp Act, 1899, in respect of a lease deed to be executed by the Deputy High Commissioner for Ceylon and Thiru T. K. Chandrasenan.

$ 13. Notification issued with Memo. No. 133825/VI/71-1, Revenue, dated the 15th December 1971, in regard to an amendment relating to exemption from liability to stamp duty in respect of a mortgage deed to be executed by the Electricity Board.

$ 14. Notification issued with G.O. Ms. No. 3567, Revenue, dated the 9th November 1971, in regard to exemption from stamp duty and Registration fees chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of a sale deed in favour of the Consulate-General of the Union of Soviet Socialist Republics in Madras.

$ 15. Notification isesued with G.O. Ms. No. 3992, Revenue, dated the 7th December 1971 in regard to remission of stamp duty in respect of the gift deeds executed by the donors of National Defence Fund in favour of the Governor of Tamil Nadu.

$ 16. Notification issued with G.O. Ms. No. 945, Revenue, dated the 22nd March 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of the sale deed to be executed by the Guild of Service, Madras in favour of the Society for Social Education and Research, Madras.

§ 17. Notification issued with G.O. Ms. No. 1132, Revenue, dated the 7th April 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of the mortgage deed to be executed by Thirumathi Kamala Rabindra, wife of late Thiru M. Edwin Rabindra, formerly Divisional Engineer for the repayment of full amount of the house building loan.

§ 18. Notification issued with G.O. Ms. No. 863, Revenue, dated the 15th March 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of the bonds and transfer deeds issued in connection with the loan raised by the Tamil Nadu Small Industries Development Corporation Limited.

§ 19. Erratum issued with Roc. No. 197519/69-P1, dated the 17th April 1970, to the notification R. Dis. No. 128889/69, published at pages 389–391 of Part II Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 3rd December 1969.

§ 20. Notification issued with Roc. No. 28361/70-P1, dated the 21st March 1970, in regard to cancellation of the notification relating to exclusion of areas for Constitution of a separate panchayat by name, "Thandavamurthikuppam" in Villupuram taluk of South Arcot district.

§ 21. Notification issued with Memo. No. 28434/J2/71-6. Revenue, dated the 1st October 1971, in regard to an amendment to Schedule 1-A to the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963.

§ 22. The Madurai City Municipal Corporation (Amendment) Ordinance, 1972 (Tamil Nadu Ordinance No. 1 of 1972).

† 23. Annexure to the Tamil Nadu Agriculturists Relief (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 22 of 1972.)

+ 24. Notification issued with G.O. Ms. No. 1295, Revenue, dated the 24th April 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respectof a gift deed to be executed by the Collector of Madurai in favour of the Madurai Corporation.

+ 25. Notification issued with G.O. Ms. No. 1301, Revenue, dated the 25th April 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of bonds to be executed by the Parties to pay the excess stamp duty creating charge on property in favour of the Government.

+ 26. Notification issued with G.O. Ms. No. 1300, Revenue, dated the 25th April 1972, in regard to amendment to the table of fees published with late Judicial Department Notification 177 of 1909, published at pages 315 to 319 of Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 30th March 1909, as subsequently amended.

+ 27. Notification issued with G.O. Ms. No. 1444, Revenue, dated the 15th May 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of the settlement deed to be executed in favour of the Agastheeswarar Society, Kilpauk, Madras.

† 28. Notification issued with G.O. Ms. No. 1237, Labour, dated the 30th September 1971, in regard to certain amendments to the Tamil Nadu Plantations Labour Rules, 1955.

+ 29. Notification issued with G.O. Ms. No. 1488, Revenue, dated the 19th May 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of the mortgage deed to be executed by Small-scale Industries under hire purchase scheme in favour of Small Industries Development Corporation Limited.

+ 30. Notification issued with G.O. Ms. No. 2409, Health, dated the 20th September 1971, in regard to an amendment to the Public Health Establishment (Local Authorities) Regulations, 1940.

@@31. Report of the Administrative Reforms Commission on Board of Revenue.

32. Fourth Annual Report of the Tamil Nadu Vigilance Commission for the period from 1st April 1969 to 31st March 1970.

---

* Despatched to Members on 4th May 1972.
@ Despatched to Members on 22nd May 1972.
& Despatched to Members on 1st June 1972.
$ Despatched to Members on 12th June 1972.
@@ Despatched to Members on 16th June 1972.
† Despatched to Members on 22nd June 1972.
+ Despatched to Members on 13th July 1972.
** Laid on the Table of the Legislature Library with reference to the proviso to Rule 21 (5) of the Tamil Nadu Legislative Assembly Rules.

தமிழ்நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1972 ஆகஸ்ட் 10.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி

*26. வினா.—திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியப் பெருமக்களுக்கு வீட்டுவசதிப் படி அரசு வழங்கி வருகிறதா?

(இ) ஆம் எனில், கிராமங்களில் அமைந்த கல்லூரிகளுக்கு அண்மையிலுள்ள நகரங்களிலிருந்து செல்லும் ஆசிரியர்களுக்கு எந்த அடிப்படையில் வீட்டுவசதிப் படி வழங்கப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) கல்லூரிகளோ அல்லது கல்வி அலுவலகங்களோ, மாநகர், நகர் மற்றும் குறிப்பிடப்பட்ட இடங்களில் இருந்தால்தான் அந்தந்த இடங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட வீட்டு வாடகைப்படி கொடுக்கப்படும். பணியாளர்கள் மட்டும் மேற்கண்ட இடங்களில் வசித்து கல்லூரிகள் அல்லது அலுவலகங்கள் கிராமங்களில் இருந்தால், அவர்களுக்கு மேற்கண்ட இடங்களுக்கு உண்டான வீட்டு வாடகைப்படி கிடைப்பது இல்லை.

திரு. கோ. இளங்கோவன்: துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் உள்ள பூண்டி புஷ்பம் கல்லூரி போன்ற கல்வி நிலையங்களுக்கு தஞ்சை போன்ற பகுதிகளிலிருந்துதான் பேராசிரியர்கள் செல்கிறார்கள். அவர்களுக்கு வேறு வழிவகை கிடையாது. தஞ்சை நகரிலேயே அமைந்துள்ள கல்லூரிக்குச் செல்கிறவர்களைக் காட்டிலும் அவர்களுக்கு வசதிகள் வெகுக் குறைவாக இருக்கின்றன. அப்படியிருக்கின்றபோது அவர்களுக்கும் நகரத்தில் அமைந்துள்ள கல்லூரிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்குத் தரப்படுகின்ற வீட்டு வாடகைப் படி தர அரசு முன்வருமா?

[1972 ஆகஸ்ட் 10

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, ஏதேனும் ஒரு முறையைத்தான் கடைப்பிடிக்க முடியும்.. 'கல்லூரிகள் அல்லது கல்வி அலுவலகங்கள் இருக்கும் மாநகர், நகர்' என்று இருக்கிறது. சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை 32 கிலோ மீட்டர் சுற்றுப்புற இடங்கள், மதுரை மாநகரத்தைப் பொறுத்தவரை 16 கிலோ மீட்டர் சுற்றுப்புற இடங்கள் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் இருப்பவர்களுக்கு மட்டும் தான் வீட்டு வாடகைப்படி அளிக்கப்படுகிறது. கல்லூரிகள், கல்வி அலுவலகங்கள் இருக்கிற நகரங்கள் என்ற அடிப்படையில்தான் தர முடியுமே தவிர, கல்லூரிகள் மற்றவைகளெல்லாம் கிராமங்களில் இருந்து, அவற்றில் பணிபுரிகிறவர்கள் யார் யார் நகர்ப்புறங்களில் இருக்கிறார்கள் என்று தேடி, அந்தந்த நகரங்களில் உள்ளவர்களுக்குத் தருவது என்பது நடைமுறையில் சாத்தியப்படாது.'

Pension for retired teachers

*27 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether this Government has any proposal to increase the pension for the retired teachers of the aided elementary schools in Tamil Nadu; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) இல்லை. ஆயினும், அண்மையில் தாராள ஓய்வூதிய விதிகளும், குடும்ப ஓய்வூதிய விதிகளும் கீழ்க்கண்டவாறு அரசுப் பள்ளி அல்லாத பள்ளி ஆசிரியர்களுக்கும் (Non-Government School teachers) விரிவாக்கப்பட்டுள்ளன.

(1) 2-10-1970 அன்றோ, அதற்குப் பின்னரோ வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்.

(2) 1-6-1970 அன்றோ அதற்குப் பின்னரோ (ஆனால் 2-10-1970க்கு முன்னதாக) ஓய்வு பெற்று, பள்ளி ஆண்டு 1970-71 முடிய வேலையில் நீடிக்கப்பட்டுள்ளவர்கள்.

மேற்கூறியவாறு விரிவாக்கப்பட்டுள்ளதால் எல்லா அரசுப் பள்ளி அல்லாத பள்ளி ஆசிரியர்களும், உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளின் ஆசிரியர் உட்பட, அதிக அளவில் ஓய்வூதியம் பெறத் தகுதி உடையவர்களாகின்றனர்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: துணைத் தலைவர் அவர்களே, 1960-ஆம் ஆண்டுக்கு முன்பு 'சாண்டர்' செய்யப்பட்ட தனியார்க் கல்லூரிகளில் இருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிறார்கள்.

1972 ஆகஸ்ட் 10]

அவர்களுக்கு எந்தவிதமான ஓய்வூதியமும் கிடைக்கவில்லை. ஆகவே, இந்த விதிகளிலே தயவுசெய்து அவர்களுக்கு ரூ. 30 அல்லது ரூ. 50 ஓய்வூதியம் கிடைக்க அரசாங்கம் வழிவகை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை தனியாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். தனிக் கேள்வி போட்டால் அது பற்றிய விவரங்கள் தரலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: 2-10-1970க்குப் பின்னால் ரிடையர் ஆனவர்களுக்கு ஊதியம் என்று தந்த பிறகு, அதற்கு முன்னால் ரிடையர் ஆனவர்களுக்கு கூட தருவது பற்றி பரிசீலனை செய்ய வேண்டும் என்று ஒவ்வொரு நகரசபைக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுபோல், 2—10—1970-க்கு முன்னால் ரிடையர் ஆனவர்களுக்கு ஏதாவது சலுகை அளிப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆசிரியர்களைப் பற்றிய ஓய்வூதியத் தன்மைகள் பற்றியது மூலக் கேள்வி. அரசாங்கப் பள்ளி அல்லாத பள்ளியில் பணிபுரிகின்ற ஆசிரியர்களைப் பொறுத்து 1—6—1970 இலிருந்து 2—10—1970-க்குள் ஓய்வு பெற்றாலும் கூட இந்த விகிதத்தில் ஓய்வூதியம் பெற வாய்ப்பு இல்லை. ஆனால் 1—6—1970 அன்றோ அதற்குப் பின்னரோ (ஆனால் 2—10—1970-க்கு முன்னதாக) ஓய்வு பெற்று, பள்ளி ஆண்டு முழுவதும் வேலைக்கு இருப்பதைக் கணக்கு வைத்து, ஓய்வூதியம் மட்டும் அந்த அடிப்படையில் பெறலாம் என்று சலுகை அளிக்கப்படுகிறது. நகராட்சி மன்ற பள்ளிகளில் இருந்து ஓய்வு பெற்றவர்களைப் பொறுத்து தனிப்பட்ட முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: 1960-ம் ஆண்டுக்கு முன்னால் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு குறைவாகவும், அதற்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கு அதைவிட அதிகமாகவும் ஓய்வூதியம் தரப்படுகிறது. இந்த வித்தியாசம் நீக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய குறிப்புகள் இல்லை. ஆனால், அவர்களுக்கு குறைந்தபட்சம் ஓரளவுக்கு ஓய்வூதியம் தரும் முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. குறைந்த அளவு ரூ. 60 என்று கணக்கிட்டிருப்பதாக அறிகிறேன், தனிக் கேள்வி போட்டால் அதனுடைய முழு விவரங்களை அறிந்து சொல்லலாம்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் நேரடியாக டிரஷரிக்கு வந்து தங்களுக்குரிய ஓய்வூதியத்தைப் பெறவேண்டும் என்ற முறையை மாற்றியமைத்து, அவர்களுக்கு 'மணி ஆர்டர்' மூலமாக தொகையை அனுப்புவதுபற்றி அரசு ஆலோசனை செய்திருக்கிறதா?

[1972 ஆகஸ்ட் 10

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஏற்கெனவே நேரடியாகத் தான் ஓய்வூதியத்தைப் பெறவேண்டும் என்ற நிலை இருந்தது. இப்பொழுது நேரடியாக வந்து பெற்றுக் கொள்ளவும், தேவையானால் 'மணி ஆர்டர்' மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக எனக்கு நினைவு. அண்மையில் அப்படி உத்தரவு போட்டதாக நினைவு. தனிக் கேள்வி போட்டால் திட்டவட்டமாகச் சொல்லலாம்.

அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகைகள்

*28 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகை எந்தெந்த வகைகளில் அரசு வழங்குகிறது?

(இ) அதற்கு மத்திய சர்க்கார் செய்யும் உதவி எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) அரசியல் தியாகிகள்களின் குழந்தைகளுக்கு (1) கல்விக் கட்டணத்திலிருந்து விலக்கு அளித்தும் (2) புத்தகங்கள், கல்வி சிறப்புக் கட்டணம், விடுதிச் செலவு ஆகியவற்றிற்கு படிப்பு உதவித் தொகை வழங்கியும் சலுகைகள் காட்டப்படுகின்றன.

(இ) இதற்காக ஏற்படும் செலவினத்தில் 50 சதவீதத்தை மத்திய அரசு ஏற்கிறது.

திரு. என். கிட்டப்பா: மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்ற தியாகிகளுடைய குழந்தைகளுக்கும் கல்விச் சலுகை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மொழிப் போராட்டத்தில் தீக்குளித்து இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு ஓய்வூதியம் அளிக்கின்ற ஒரு முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்கள் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகைகள் அளிக்கும் முயற்சி எடுக்கப்படவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, may I know from the Hon. Minister for Education whether the list of political sufferers had been prepared separately by the State Government and concessions given or has it been prepared in consultation with the Central Government?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மத்திய அரசினர் 50 சதவீதம் வரை செலவினத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். ஆகவே, அவர்களையும் கலந்தாலோசித்துத்தான் உத்தரவு வழங்கப்படுகிறது.

1972 ஆகஸ்ட் 10]

திரு. ஆ. பரந்தாமன்: சில அரசியல் தியாகிகள் ஆறு மாதங்கள் சிறைச் சாலையில் இருந்துங்கூட, அவர்களிடத்தில் அதுகுறித்த சான்றுகள் இல்லை. அப்படிப்பட்டவர்களுடைய குழந்தைகளுக்கும் சலுகை அளிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஏதேனும் ஒரு சான்றிதழ் வழங்கவேண்டும் என்று சிலபல முறைகளை வகுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட முறைகளுக்கு உட்பட்டு வருகிறவர்களுடைய நிலையெல்லாம் கவனிக்கப்படும்.

திரு. த. சோனையா: போராட்டங்களில் ஈடுபட்டு சிறைக்குச் சென்றவர்களுக்கு எத்தனை காலம் சிறைக்குச் சென்றால் 'தியாகிகள்' என்று பட்டம் வழங்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லையென்றாலும், விடை அளிக்கிறேன். மூன்று மாதங்கள் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. மூன்று மாதங்களுக்கு மேல் சிறைக்குச் சென்றிருந்தால் அவர்களைத் தியாகிகள் பட்டியலில் கொண்டு வருகிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்தக் கல்விச் சலுகைகள் எத்தனை மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்ற விவரம் அமைச்சரவர்கள் கையில் இருந்தால் அதை அறிவிக்கலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பல்தொழில் நுணுக்க பள்ளிகளில் ஆறு பேர்களுக்கும், விவசாயக் கல்லூரிகளில் மூன்று பேருக்கும், பொறியியல் கல்லூரிகளில் மூன்று பேருக்கும், சட்டக் கல்லூரியில் ஒருவருக்கும், மருத்துவக் கல்லூரிகளில் மூன்று பேருக்கும், கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் மூன்று பேருக்கும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் மூன்று பேருக்கும், தொழிற் பள்ளிகள், தொழிற்பயிற்சி மையங்களில் 20 பேர்களுக்கும், கல்வி உதவித்தொகை அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிற இந்தச் சலுகை, கன்னியாகுமரி ஜில்லா தாயகத்தோடு சேரவேண்டும் என்பதற்காக தங்கள் உயிரையே நீத்து தியாகம் செய்தவர்களின் குடும்பத்தினர்களுக்கும் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளின் குடும்பத்தினர்களுக்குத் தான் வழங்கப்படுகிறது. கனம் உறுப்பினர் சொல்வதைப் போன்று எடுப்பது

என்றால் ஏராளமான போராட்டங்கள் வந்து சேரும். இந்தியத் தாய்நாடு விடுதலை பெறுவதற்காக—விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளின் பட்டியல்தான் சேகரிக்கப்படுகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகை அளிப்பதற்கு வருவாய்-வருமான வரம்பு ஏதாவது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ? விதிக்கப்பட்டிருந்தால் விதிவிலக்கு அளிக்கப்படுகிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதன் விவரக்குறிப்பு இப்போது என்னிடத்தில் இல்லை. சில குறிப்பிட்ட நிபந்தனைகள் எல்லாம் அமைந்திருக்கின்றன. அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டே உதவி அளிக்கப்படுகிறது.

திரு. கு. காமாட்சி : விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளின் குழந்தைகளுக்கே சலுகை அளிக்கப்படுகிறது, தமிழ்த் தியாகிகளின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகை அளிக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பின்னாலாவது வழங்குவதற்கு ஏதாகிலும் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது அதுபற்றிய செயற்குறிப்பு இல்லை.

Bharata Natyam Course

* 29. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to introduce Bharata Natyam Courses in Schools and Colleges in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) பள்ளிகளில் உடற்பயிற்சிக்குப் பதிலாக பெண்களுக்குப் பரத நாட்டியம் கற்றுக் கொடுக்கலாம் எனச் சென்னையிலுள்ள லலிதா சுப்பிரமணியம் பரத நாட்டியப் பள்ளி 1—3—1972 அன்று யோசனை கூறி உள்ளது. அந்த யோசனை ஆய்வு செய்யப்பட்டுவருகிறது.

கல்லூரிகளில் பரதநாட்டியத்தைப் பாடமாகச் சேர்ப்பது பல்கலைக்கழகங்களைப் பொறுத்ததாகும்.

THIRU N. DENNIS : May I know from the Hon. Minister whether this subject will be included at least in Music Colleges to give patronage to the ancient arts which would give exercise to youngsters?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கர்னாடக சங்கீதக் கல்லூரியில் சென்ற ஆண்டு முதல் பரத நாட்டியக் கலையும் சேர்க்கப்பட்டு, சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 'பள்ளிகளிலும், கல்லூரிகளிலும்' என்று பொதுப்படையாக கேள்வி இருக்கிறதே, இதில் ஆண்கள் பள்ளிகளும், கல்லூரிகளும் சேர்ந்ததா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆண்களுக்குச் சொல்லிக் கொடுப்பதிலும் தவறு இல்லை. பெரும்பான்மையும் பெண்களுக்கு நாட்டியம் சொல்லிக் கொடுக்கிறவர்கள் எல்லாம் ஆண்களாக இருக்கிறார்கள். முதலில் ஆண்கள் பயிற்சி பெற்றால்தான் பின்னால் பெண்களுக்கும் பயிற்சியளிக்க முடியும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there are a number of students in elementary schools—both girls and boys—who have got special aptitudes for music. Unless they are taught in the elementary schools they cannot cultivate the habit. So may I know whether arrangements would be made to teach music in the elementary schools itself?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எலிமெண்டரி வகுப்புகளில் அத்தகைய வாய்ப்புகள் அளிக்கப்படவில்லை. உயர்நிலைப் பள்ளிகளில் விருப்பப் பாடமாக எடுத்துக்கொள்ள இசைப்பாடம் வைக்கப்பட்டிருக்கிறது. துவக்கப் பள்ளியில் இருந்து இல்லை.

உள்ளாட்சி மன்றங்களுக்கு சாலை மானியம்

* 30. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து, கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகரமன்றங்களுக்கும், பேரூராட்சி மன்றங்களுக்கும் தார் சாலை அமைக்க அரசு மானியம் ஏதேனும் அளிக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. கே. ஏ. வகாப் : இப்போது நகராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் அதிகமான மானியம் தரப்படுகிறது. இரண்டுக்கும் இடையிலே உள்ள பேரூராட்சி மன்றங்களுக்கு மானியம் அளிக்கப்படவில்லை. தார் சாலை போடுவதற்குக் கூட 50 சதவிகிதம்தான் கொடுக்கிறார்கள். நகராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் அளிக்கப்படுவதுபோல பேரூராட்சி மன்றங்களுக்கும் அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரூராட்சி மன்றங்களுக்கும் தூசி படாத தார் ரோடு அமைப்பதற்கு 50 சதவிகிதம் மானியம் வழங்குகிறோம். இதற்காக 1971-72-க்கு 7 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போல 1972-73-க்கு 7 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா : ப்ளாக் டாப் போடுவதற்கு மட்டும்தான் மானியம் வழங்கப்படுகிறது. புதிய இணைப்பு ரோடு போடுவதற்கு மானியம் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை. இனியாகிலும் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது கொடுக்கக்கூடிய ஏழு லட்சம் ப்ளாக் டாப் போடுவதற்கே போதுமானதாக இல்லை. இணைப்புச் சாலைகளுக்கு எல்லாம் நிதி வசதி பெருகுகிறபோதுதான் உதவி அளிப்பது பற்றி யோசிக்க முடியும்.

திரு. சொ. காவேரிமணியம் : பேரூராட்சி மன்றங்களுக்கு தார் சாலை போடுவதற்கு பாதி மானியம் தருவதாகச் சொன்னார்கள். பேரூராட்சிகள் எல்லாவற்றின் நிதி நிலையும் போதுமானதாக இல்லாத காரணத்தினால்—பாதி மானியம் என்பதை மாற்றி முழு மானியம் அல்லது முக்கால் மானியமாவது அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிதிவசதி பெருகும்போது அவை எல்லாம் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

Homeopathic system of medicine

* 31. *Q.* THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Homeopathic College in this State; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : தனிப்பட்டவர்கள் கொடுக்கக்கூடிய மூலதனத்தைக் கொண்டு ஹோமியோபதி ஆசிரியர்கள் மூலம் இந்தக் காலேஜுக்கு ஏற்பாடு செய்தால் அதற்கு அரசாங்கம் அனுமதியும், கிராண்டும் வழங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஹோமியோபதி மருத்துவ வளர்ச்சிக்கு ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டு, இந்தச் சட்டமும் குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்று, ஹோமியோபதி மெடிகல் கவுன்சில் 15—5—1972 இல் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதனை பின்னர் நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்திருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் கல்லூரி ஏற்படுத்துவது என்றாலும் இந்தக் கவுன்சிலின் அனுமதி பெற்று நடக்கவேண்டும். இந்தக் கவுன்சில் செய்கிற சிபார்சுகள் ஏற்றுக்கொள்ளப் படலாம். கவுன்சில் தருகிற ஆலோசனைகளுக்கேற்ப, நிதிநிலைமைகளுக்கேற்ப எந்த அளவு இந்தத்துறைக்கு அரசாங்கம் ஊக்கமும், உதவியும் அளிக்க முடியுமோ அதனை அளிக்கும்.

திரு. நா. வீராசாமி : இப்போது தமிழ்நாட்டில் ஹோமியோபதி கல்லூரிகள் நடைபெறுகின்றனவா ? அவற்றுக்கு அரசாங்க அனுமதி கொடுக்கப்படாதிருந்தால் கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அமைச்சர் பதில் சொல்லும்போது அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளைப் பற்றியேதான் சொல்ல முடியும். சொந்த முறையில் தமிழ்நாட்டில் நடைபெறுகிற சில ஹோமியோபதி கல்லூரிகளை அமைச்சர் அறிவார் என்றாலும் அவற்றை அங்கீகரிப்பதுபற்றி, அதன் தகுதிபற்றி தமிழ்நாடு ஹோமியோபதி மெடிகல் கவுன்சில்தான் முடிவு செய்யவேண்டும்.

திரு. என். கே. பழனிசாமி : அரசு இந்த முறையை அங்கீகரித்திருப்பதன் காரணத்தினால் நகர, மாவட்ட அரசாங்க ஆஸ்பத்திரிகளில் ஹோமியோபதி ட்ரீட்மெண்டுக்காக தனி வார்டுகள் ஒதுக்கி இதனையும் ஆஸ்பத்திரிகளில் நடைமுறைக்குக் கொண்டுவர அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒரு சிறந்த ஹோமியோபதி கல்லூரி ஏற்பட்டு, எம்.பி.பி.எஸ். பாஸ் செய்த டாக்டர்கள் அங்கே ஒரு இரண்டாண்டுகாலமாவது பயிற்சி பெற்ற பிறகுதான் அலோபதி ஆஸ்பத்திரி

களில் இதனையும் புகுத்துவது பொருத்தமாக இருக்கும். அதுவரை இது போலச் செய்வதை நான் சரியான ஒன்றாகக் கருதவில்லை. கிராமப் பகுதிகளில்—குறைந்த செலவில் பெரிய அளவு நன்மை பயக்கும் ஒரு திட்டமாக ஹோமியோபதி கருதப்படுவதால், மத்திய அரசின் ஆலோசனை கவனிக்கப்பட்டு தமிழ்நாட்டில் கிராமப் பகுதிகளில் இந்த ஹோமியோபதி டாக்டர்களைப் பயன்படுத்திக்கொள்கிற திட்டம் உருவாக்க முயற்சிக்கப்படும்.

திரு. அ. தேவேந்திரன்: இத்தகைய கல்லூரிகளை மிகவும் பின்தங்கிய தஞ்சை மாவட்டத்தில் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அங்கத்தினர் கூறுகிற இரண்டு தவறான கருத்துக்களை நான் ஏற்கத் தயாராயில்லை. கல்லூரிகளை அரசாங்கம் ஆரம்பிப்பதாகச் சொல்லவில்லை. அடுத்து தஞ்சை மாவட்டத்தை மிகவும் பின்தங்கிய மாவட்டமாகவும் நான் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

32 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள ஹோமியோபதி டாக்டர்களின் புள்ளிவிவரத்தினை அரசு சேகரித்து வருகின்றதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

ஆனால், ஓமியோபதி மருத்துவர்கள் மாவட்ட ஆட்சியாளர்களிடம் மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டுள்ளனர். 1969-ம் ஆண்டு முடிய அவ்வாறு பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 12,603.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, ஓமியோபதி டாக்டர்களுக்கு தற்போது அரசு அளித்து வரும் உதவிகளை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இதுவரையில் அரசு அப்படி ஒரு உதவி செய்தது இல்லை. செய்கிற ஏற்பாடு எதுவாயினும் இனி மேல்தான் உருவாகவேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, ஓமியோபதி மருத்துவத் துறையில் போதுமான அறிவு பெறாமலே சிலர் டாக்டர் என்ற பட்டத்தை சூட்டிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே இந்த ஓமியோபதியில் டாக்டர் என்ற பட்டத்தை சூட்டிக்கொள்ள குறைந்தபட்சம் ஓமியோபதி மருத்துவத் துறையில் இன்ன அறிவு பெற்றிருக்க வேண்டுமென்ற நிபந்தனையை அரசாங்கம் விதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, பொதுவாக அறிவுக்கு தனியாக அளவுகோல் கிடையாது. இந்தத் துறையில் அறிவை அனுபவத்தின் அடிப்படையில்தான் நிர்ணயிக்கலாம். ஓமியோபதி துறையிலே யார் யார் பணியாற்றலாம் என்று நாம் கொண்டு வந்திருக்கிற சட்டத்தின்படி 10 ஆண்டுக் காலம் இந்தத் துறையிலே ஈடுபட்டு பணியாற்றியவர்களாக இருக்க வேண்டும் என்ற விதி இருக்கிறது. இதற்குமேல் 3, 4 ஆண்டு என்று பயிற்சி பெற்றுள்ளவர்கள் ஒரு தேர்வு எழுத ஏற்பாடு செய்ய வேண்டுமென்று விதி இருக்கிறது. இந்த முறைப்படி, ஓமியோபதி கவுன்சில் அவர்களுடைய தகுதியைப் பார்த்து, அவர்களைப் பணியாற்றுவதற்குரிய தகுதி உள்ளவர்களாக ஏற்றுக்கொள்ளும்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: அலோபதியிலே பயிற்சி பெற்ற டாக்டர்களுக்கு இந்த ஓமியோபதியிலே அறிவு இருந்தால் சற்று நலமாக இருக்கும். அதற்காக, அலோபதி முறையைப் படிக்கும்போதே, கல்லூரியிலேயே இந்த ஓமியோபதி பற்றிய அறிவையும் சேர்த்துக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, பொதுவாக, அலோபதி முறையிலே தேர்ச்சி பெற்றவர்களும், அந்தத் துறையினுடைய பெரிய நிபுணர்களும் ஓமியோபதி முறையை முழு அளவிற்கு ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த நிலையில், இந்தப் பாடத் திட்டத்தோடு அந்தப் பாடத் திட்டத்தையும் ஏற்றுக்கொள்ளக் கூறுவது முறையானதாக இருக்காது என்று அரசு கருதுகிறது. அந்தக் கல்வித்துறை நிபுணர்கள்தான் இதற்கு முடிவு காணமுடியுமே தவிர, அரசாங்கம் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியாது. ஆனால் ஒரு துறையிலே தேர்ச்சி பெற்றவர்கள் இன்னொரு துறையிலே தேர்ச்சி பெறவிரும்பினால் அதற்கு அரசு ஆவன செய்யும்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: மறைந்த டாக்டர் குருசாமி அவர்கள் அலோபதி முறையைத் தவிர, ஓமியோபதி முறையிலும் சிறந்த நிபுணராக இருந்த காரணத்தால்தான் அவர் திறமையான டாக்டர் என்ற பெயர் பெற்றார். எனவே, அலோபதி டாக்டர்கள் ஓமியோபதி கல்வியைக் கற்றுக் கொள்ள அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, டாக்டர் குருசாமி அவர்கள், அலோபதியில் சிறந்தவராக இருந்தார். தவிர, அவர் சித்த வைத்தியத்திலேயும் சிறந்தவராக இருந்தாரே தவிர, ஓமியோபதியில் அல்ல. அங்கத்தினர் அவர்கள் இரண்டிற்கும் வேற்றுமை தெரியாமல் சொல்லி விட்டார்களோ என்று ஐயுறுகிறேன்.

திரு. அ. தேவேந்திரன் : ஓமியோபதி முறையைத் தவறாக உபயோகித்தால்கூட, அதனால் ஆபத்து இல்லை என்று சொல்லப்படுகிறதே அது உண்மையா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்படி ஒரு கருத்து இருக்கிறது. ஆனால் அந்தக் கருத்தைத் தெரிவிப்பது தீங்கு விளைவிக்கும்.

திரு. கோவை செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல பேர் ஓமியோபதி வைத்தியம் பாஸ் செய்துவிட்டு, கிராமங்களில் டாக்டர் என்று போர்டை போட்டுக்கொண்டு, பெனிசிலின், ஸ்டர்ப்டோமைசின் போன்ற மருந்துகளை எல்லாம் கொடுக்கிறார்கள். இதைத் தவிர்க்க, ஓமியோபதி படித்தவர்களுக்கு தனிப் பட்டமும், அலோபதி படித்தவர்களுக்கு தனிப் பட்டமும் கொடுத்தால் வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன். இதை அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, டாக்டர் என்பது எம்.எல்.ஏ. என்பதைப் போல் ஒரு குறிப்பிட்ட வகையில் பணியாற்றுகிறவர்கள் பெற்றிருக்கிற பட்டம். எம்.எல்.ஏ. என்று பொதுவாக குறிப்பிட்டாலும் பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அதே போல், எத்தனையோ துறை இதிலே இருந்தாலும், பயிற்சி பெற்றதன் காரணமாக அவர்கள் டாக்டர்களாக இருக்கிறார்கள்.

Family Planning Campaign

* 33 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government are aware that Panchayat Union Teachers in large numbers staged a walk-out as a protest against Union Teachers being used as agents to procure men for Family Planning Operations in a public meeting attended by the Collector of Tiruchirappalli district at Pudukkottai?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளர் 23-12-71 அன்று புதுகோட்டையில் தீவிர குடும்பக்கட்டுப்பாடு பிரச்சாரத்தை முன்னிட்டு நடத்திய ஒரு கருத்துரை கூட்டத்தில் சுமார் 2,000 பேர் கலந்து கொண்டனர், கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது ஒரு சிறு பகுதியினர் சுமார் 50-லிருந்து 100 பேர் அவ்விடத்தை விட்டு வெளியேறினர்.

திரு. வி. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்தக் கருத்தடை பிரச்சாரத்திற்கு ஆசிரியர்கள் மீது நிர்ப்பந்தம் செலுத்தப்படமாட்டாது என்ற உறுதி மொழியினை அமைச்சர் அவர்கள் அடிக்கடி தருகிறார்கள். இருந்தபோதிலும் நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறார்கள் என்பது போன்ற புகார்கள் அங்கங்கே வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அமைச்சரவர்கள் அதிகாரிகளின் அறிக்கையை மட்டும் நம்பியிராமல், தானே நேரில் விசாரித்து தேவைப்பட்ட இடங்களில் உரிய நடவடிக்கையை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்களை எந்த வகையிலேயும் நிர்பந்திக்கக் கூடாது என்பது முன்னாலேயே அறிவிக்கப்பட்ட ஒன்றாகும். இந்த ஆண்டு நடைபெறுகிற திட்டத்திலும் நிர்ப்பந்திக்கப்படமாட்டார்கள். இந்தத் திட்டத்திலே ஆசிரியர்கள் கலந்து கொண்டு அவர் மூலம் ஒருவர் கருத்தடை சிகிச்சை பெற்றுக்கொண்டாலும் அதற்காக ரூ. 10 பெறுகிற நிலை இருக்கிறது. இது ஒரு தேசிய திட்டம். இந்தத் தேசிய திட்டத்திலே கூட, கட்சி மாறுபாடு கொள்கிறவர்கள் இருக்கிறார்கள். ஆசிரியர்களிலேயும் மாறுபாடு கொள்கிறவர்கள் இருக்கிறார்கள். யாரையும் கட்டாயப்படுத்தி இந்த நடவடிக்கையிலே ஈடுபடுத்தும் எண்ணம் அரசுக்குக் கிடையாது. ஒரு தேசிய நடவடிக்கையிலே அவர்களை ஒத்துழைக்குமாறு, கலந்து கொள்ளுமாறு, ஆதரவு அளிக்குமாறு கேட்டுக் கொள்வதிலே தவறு இல்லை. அரசாங்க அலுவலர்கள் தேசிய கடமையிலே, நாட்டுப் பாதுகாப்பு கடமையிலே ஈடுபடுவது போல, நாட்டு மக்கள் தொகை பெருக்கத்தாலே ஏற்படுகின்ற பேராபத்திலிருந்து மீளுவதற்காக இந்தத் திட்டத்திற்கு எல்லோரும் ஆதரவு அளிக்க வேண்டும். ஆனால் இந்தத் திட்டத்தில் கட்டாயப்படுத்துவதற்கான இடம் இல்லாமல் அரசு கவனித்துக் கொள்ளும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, குடும்ப நலம் என்பது ஒரு 'பீப்பிள்ஸ் புரோகிராம்' என்ற காரணத்தாலே, தமிழகத்திலே பல்வேறு மாவட்டங்களிலிருந்து ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் தாங்களாகவே முன் வந்து அறுவை சிகிச்சை செய்து கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்றும், இத்திட்டத்திற்கு ஆதரவு தருகிறோம் என்றும், அரசுக்கு தெரியப்படுத்தி இருப்பது உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டுகூட, திருச்சி மாவட்டத்திலே ஆசிரியர் சிலரும், இன்னொரு மாவட்டத்திலே ஆசிரியர் சங்கம் அல்ல. ஆனால் ஆசிரியர்கள் சிலரும் இதுபற்றி மாறுபட்ட கருத்து தெரிவித்தார்கள். மற்ற மாவட்டங்களிலே எல்லாம் ஆசிரியர் சங்கச் செயலாளரும், தலைவரும் கலெக்டர்களோடு ஒத்துழைத்து, இத்திட்டத்தை வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, கலெக்டர் நடத்திய கூட்டத்தை விட்டு வெளியேறிய ஆசிரியர்களுக்கு சில அரசியல் கட்சித் தலைவர்கள் ஆதரவாக இருப்பதாகவும், தூண்டி விட்டதாகவும், வன்முறையாளர்கள் ஆதரவாக் இருந்ததாகவும் சொல்லப்படுகிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத்தில் ஆசிரியர்கள் இரண்டுபேர் இந்தக் கருத்தடைத் திட்டத்திற்கு மறுப்பான கருத்தைப் பேசுவதற்கு முன்வந்திருக்கிறார்கள். ஒரு தேசிய திட்டத்திற்கு எதிர்ப்பாக பேசுவது முறையல்ல என்ற காரணத்தால், அவர்கள் பேச அனுமதி மறுக்கப்பட்டார்கள். அதையொட்டி, அவர்களுக்கு ஆதரவாக 100 பேர்கள் வெளியேறி இருக்கிறார்கள். இது தவிர அரசியல் கட்சித் தலைவர்கள் அதைத் தூண்டி விட்டதாகவோ, வன்முறைச் செயல்கள் நடந்ததாகவோ எனக்குச் செய்தி இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : குடும்பநலத் திட்டம் இப்பொழுது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டதாக அவ்வளவு பேரும் எண்ணுகிறார்கள். அதே போல், அதை விரிவாக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, இன்னின்னார் இதைச் செய்து கொள்ள வேண்டும் என்று கட்டாயப் படுத்துகிற முறையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எல்லோரும் ஒத்துக்கொண்ட கருத்து சட்டத்தைவிட வலிவானது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர் சமுதாயத்திலே, முஸ்லிம்களும், கிறித்தவர்களும்தான் இந்த குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை எதிர்ப்பவர்கள். அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி, இந்த மாதிரி அவர்களுக்கு ஏற்படுகிற கஷ்டங்களையெல்லாம் எடுத்துக் கூறியும் மீண்டும் அப்படிப் பட்ட நிர்ப்பந்தங்கள் வந்து கொண்டிருக்கின்றன என்ற புகார் அடிக்கடி வந்துகொண்டிருக்கிறதே, இதைச் சமாளிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, புகார் வந்தது கிறிஸ்தவ ஆசிரியர்களிடமிருந்தும் முஸ்லீம் ஆசிரியர்களிடமிருந்தும் அல்ல. அங்கத்தினருக்கு உறவினராக இருப்பவரிடமிருந்துதான் வந்தது. இந்த தேசிய திட்டம் மக்கள் கருத்தாக உருவாக வேண்டுமென்றுதான் ஆசைப் படுகிறேன். அதற்கு எல்லா அங்கத்தினர்களும் ஒத்துழைப்பு தருவது நாட்டினுடைய திட்டங்கள் நிறைவேற உதவியாக இருப்பதுடன் அது நாட்டிற்குச் செய்யும் கடமையாகும்.

திரு. கோவை செழியன் : இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தினால் தமிழ் நாட்டிற்கு இரண்டு சீட்டுகள் பாராளுமன்றத்தில் போய்விட்டன. ஆகவே, இனிமேலாவது இந்தத் திட்டத்தை கைவிட்டுவிட்டு உற்பத்தியை பெருக்குவார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சீட்டு வாங்குவதற்காக உற்பத்தியைப் பெருக்குவது என்பது முறையான காரியம் அல்ல. உற்பத்திப் பெருக்கம் அராஜக மானப்பான்மைக்கு இடம் தந்து விடும். நான் இன்னொரு மாநிலத்தை இப்பொழுது குறிப்பிட விரும்பவில்லை. வெளியிலே நான் குறிப்பிடுவது உண்டு. மக்கள் தொகை பெருக்கத்தால் ஜனநாயகமே சீர்குலையும். அந்த அளவில் நிலைமை ஏற்பட விடக் கூடாது. அண்மையில் நடந்த மருத்துவத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் இந்தப் பிரச்சினையை நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இதனால் மட்டுமே பாராளுமன்றத்தில் இரண்டு பேர் குறைந்தார்கள் என்று சொல்லக்கூடிய நிலை இல்லையென்று சொன்னாலும், குறைவதற்கு அது ஒரு வாய்ப்பாக வழியாக இருக்கிறது. ஆகவே, அந்த அளவை கருத்தில் கொண்டு எந்த மாநிலம் இத்துறையில் தீவிரமாக பணியாற்றினாலும், அதனால் அந்த மாநிலத்தினுடைய உரிமை பாராளுமன்றத்தில் குறையாத அளவுக்கு வழிவகை காண வேண்டுமென்று மத்திய அரசை நான் கேட்டிருக்கிறேன். மத்திய அரசுக்கு இதிலே அவ்வளவு தீவிரமான கவனம் இல்லை. அதை வலியுறுத்த நான் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

திரு. ஏ. க. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைப் பற்றிப் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதற்காக நகராட்சி மன்றங்களும், ஊராட்சி மன்றங்களும் நடத்துகின்ற விழாக்களிலே அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்து கொள்வதற்காக அழைக்கப்படுகின்றார்கள். அப்படிப்பட்ட விழாக்களில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கலந்துகொள்கின்றபோது எந்த நோக்கத்திற்காக அவர்கள் அழைக்கப்பட்டார்களோ அதை நிறைவேற்றாத முறையில் அதை எதிர்த்து பிரச்சாரம் செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் உத்திரவிடுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நான் அறிந்த வரையில் நான் கலந்து கொண்ட இடங்களில் எல்லாம் எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆதரிக்காமல் பேசவில்லை. வேண்டுமானால் ஆதரித்துப் பேசாமல், வலியுறுத்திப் பேசாமல் இருந்து விடலாம், அது அவர்களுடைய பிறப்புரிமை.

திரு. ப. முத்துசாமி : தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே ஆசிரியர்களைக் காட்டிலும் ஆங்காங்குள்ள வில்லேஜ் முன்சீப்கள், கர்ணங்கள் இவர்கள் எல்லாம் பொதுமக்களிடையே செல்வாக்கு படைத்தவர்களாகவும் அதிகத்

தொடர்பு உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே, ஆசிரியர்களை இந்தத் திட்டத்திற்காகப் பயன்படுத்துவதைப்போல் அவர்களையும் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் யோசிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நாட்டிலே உள்ள எல்லோருக்கும் இருக்கக்கூடிய பொறுப்பு இது. அரசாங்க அலுவலர்களாக இருந்தாலும், ஊராட்சி ஒன்றியங்களின் அலுவலர்களாக இருந்தாலும் அல்லது வேறு எந்த அலுவலரும் இதற்கு ஒத்துழைப்புத் தரக் கடமைப்பட்டிருக்கிறார்கள். எனவே தனித்தனியாக அழைப்புவிட வேண்டுமென்பது அவசியமாகாது.

THIRU R. PONNAPPA NADAR: May I know from the Hon. Minister whether there is appreciable fall in the birthrate compared to what was prevalent last year and if so, whether the Hon. Minister could furnish the details?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அந்த முழு விவரங்களும் என்னால் தரமுடியும். ஆனால் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் கடந்த எட்டு பத்து ஆண்டுகளில், ஆயிரத்திற்கு 47 அல்லது 48 என்ற அளவிலே இருந்த பிறப்பு விகிதம் 33 அல்லது 32 என்ற அளவுக்குக் குறைந்திருக்கின்றதில்—தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ, நான் சொல்கிற புள்ளி விவரத்தில் சிறு வேறுபாடுகள் இருக்கலாம். அகில இந்தியாவிலும் முற்போக்கான மாநிலம் நம்முடைய மாநிலம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு மக்கள் தொகை பெருகும் வேகத்தை குறிப்பிட்ட அளவிற்குக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற அந்த எண்ணத்தை நோக்கி நாம் முன்னேறியிருக்கிறோம் என்பதையே இது காட்டுகிறது.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, மக்கள் தொகைப் பெருக்கத்தாலே நாட்டிலே ஜனநாயகம் குலையும், அதன் மூலம் கேடுகள் விளையும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மக்கள் நலனைக் கருதி மக்களோடு அதிகத் தொடர்பு கொண்டுள்ள ஆசிரியர்களை இதற்காகக் கட்டாயப்படுத்த வேண்டுமென்று அரசு உணருகிறதா? ஆசிரியர்கள் கட்டாயமாக ஒத்துழைக்க வேண்டுமென்று சட்டம் கொண்டு வர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அப்படியொரு காலம் வருமானால் முதலில் அங்கத்தினர்களைக் கட்டாயப்படுத்த வேண்டும். அதற்குப் பிறகுதான் ஆசிரியர்களைக் கட்டாயப்படுத்த வேண்டும்.

திரு. எஸ். நல்லசாமி: தலைவர் அவர்களே, இந்த குடும்ப நலத் திட்டத்தின் மூலமாக கருத்தடை இந்துக்கள் மட்டுந்தான் செய்து கொள்கிறார்கள், கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் அவர்களுடைய மதக் கொள்கைகளைக் காட்டி செய்து

கொள்வதில்லை. இந்துக்கள் மட்டும்தான் இதை ஒப்புக்கொள்கிறார்கள். இது வரையில் கருத்தடை செய்து கொண்டவர்களின் விவரத்தை ஜாதிவாரியாகக் கணக்குச் சொல்ல அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இத்தகைய கேள்வி எழுந்ததற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். முஸ்லிம்களில் பல பேர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள், தாய்மார்களும் செய்துகொண்டிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களும் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் வைதிக கிறிஸ்தவர்கள் இதை எதிர்க்கிறார்கள். அதைப்போன்று வைதீக முஸ்லிம்கள் இதை எதிர்க்கிறார்கள். வைதீக இந்துக்களும் எதிர்க்கிறார்கள். ஆகவே வைதீகம்தான் தடையாக இருக்கிறதே தவிர கிறிஸ்தவர்களோ, முஸ்லிம்களோ தடையாக இல்லை. வைதீக ஆதி திராவிடர்களும் இதை எதிர்க்கிறார்கள், தங்களுடைய ஆதி திராவிடர்களின் எண்ணிக்கை குறைந்து விடுமோ என்று கருதி எதிர்க்கிறார்கள். ஆனால் நாளுக்கு நாள் மனிதாபிமான நோக்கத்தின் அடிப்படையில் இந்தக் கருத்து எல்லா சமயத்தினரிடையேயும் வெற்றி பெற்றே தீரும் என்று நம்புகிறேன்.

திரு. கே. கே. முத்தையா: கடந்த சில மாதங்களுக்கு முன்பாக திருவண்ணாமலை நகராட்சி கமிஷனர் கட்டாயமாக குடும்பக் கட்டுப்பாடு செய்ய வேண்டுமென்று ஆசிரியர்களுக்கு ஆணை பிறப்பித்திருப்பதாக துக்ளக் பத்திரிக்கையில் வந்ததே? அதைப்பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, கட்டாயம் என்ற வார்த்தை பயன்படுத்தப்படவில்லை. ஆசிரியர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கூறப்பட்டது. ஒத்துழைக்க வேண்டுமென்பதை கட்டாயம் என்று எடுத்துக் கொள்வார்களானால் அதைக் கைவிடவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டவர்களுக்கு அரசாங்கம் பரிசுத் தொகை கொடுக்கிறது. குடும்பக் கட்டுப்பாடு ஒரு லட்சம் மக்களின் பிரதிநிதியாக இருக்கின்றவர்கள் தண்டராம்பட்டு நாதாகிருஷ்ணன் போன்றவர்களுக்கு அரசாங்கம் பரிசுத் தொகை அளிக்க முன்வருமா? அதைப்போன்று திருமணம் செய்துகொண்டு இரண்டு ஆண்டுகளுக்குக் கட்டுப்பாட்டோடு இருக்கின்றவர்களுக்கும் அரசு பரிசு கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அப்படிப்பட்டவர்களுக்கு இயற்கை பெரிய வளத்தை அளிக்கும். குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டவர்களுக்கு ஆண்டு வருமானத்தில் 25 சதவீதம் அளவுக்கு மீதப்படுகிறது. நண்பர் துரை

முருகனைப் போன்று அதிகச் செலவு செய்கின்றவர்கள் கடன் வாங்காமல் வாழ வழி செய்கிறது. திருமணம் செய்து கொண்ட பிறகு இரண்டு ஆண்டுகளுக்கு அப்படி இருக்கிறார்கள் என்றால் அவர்கள் ஏறத்தாழ அந்த இரண்டு ஆண்டுக் காலத்திற்குத் தேன்நிலவு நடத்திக்கொண்டிருக்கலாம். எனவே அந்த மகிழ்ச்சிக்கு விலை கிடையாது.

திரு. மா. பா. சாரதி: தலைவர் அவர்களே, குடும்ப நலத் திட்டத்தை எதிர்க்கக்கூடிய கட்சிகள் தமிழ்நாட்டில் ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, கட்சி அடிப்படையில் இதற்கு எதிர்ப்பு இல்லை. ஆனால் அரசாங்கம் இதைச் செய்கிறதே, வெற்றிபெறுகிறதே என்பதால் கசப்புணர்ச்சி சில பேர்களுக்கு இருக்கிறது.

திரு. கு. காமாட்சி: தலைவர் அவர்களே, கிறிஸ்துவப் பெருமக்கள் தலைவரான போப் ஆண்டவர் அண்மையில், எந்த நாட்டிலும் கிறிஸ்தவப் பெருமக்கள் அந்த நாட்டினுடைய நல்ல திட்டங்களையெல்லாம் ஆதரிக்க வேண்டுமென்று அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். குடும்ப நலத் திட்டமாக இருந்தாலும் ஆதரவு தெரிவிக்க வேண்டுமென்று அறிக்கை விட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அப்படி ஒரு அறிக்கை இருந்தால் அதைத் தமிழக அரசு மகிழ்வோடு வரவேற்கும்.

திரு. நா. வெ. குருசாமி: தலைவர் அவர்களே, மத்திய அரசானாலும், மாநில அரசானாலும் குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றபொழுது 16 குழந்தைகள் பெற்றால் பரிசு கொடுப்போம் என்று கூறுகிறார்களே, அவர்கள் மேல் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்த அரசு இத்திட்டத்தை பிரசாரம் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்னால் அப்படியொரு பிரச்சாரம் நாட்டில் இருந்தது. ஆனால் இந்த அரசு அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு அந்தப் பிரச்சாரம் நின்று போய்விட்டிருக்கிறது.

கால்நடைத் துறை மண்டலப் பிரிவு

* 34. **வினா—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இப்பொழுது வேலூரை மையமாகக் கொண்டுள்ள கால்நடைத் துறை மண்டலப் பிரிவைச் செங்கற்பட்டு மாவட்டம், சென்னை மாவட்டம் இரண்டையும் ஒரு தனி மண்டலமாகவும், வடார்க்காடு மாவட்டம், தருமபுரி மாவட்டம் இரண்டையும் ஒரு தனி மண்டலமாகவும் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை. எனினும் செங்கற்பட்டு மாவட்டத்தை மையமாகக் கொண்டு ஒரு தனி மண்டலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்தது. தேசிய நெருக்கடி நிலைமை காரணமாக மேற்படி செயற்குறிப்பு புதிய செலவினத்தை ஏற்க முடியாத காரணத்தால் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, வேலூர் மண்டல இயக்குநர் ஒரு நாள் ஹோசூருக்குச் சென்று மறுநாள் எண்ணூருக்கு வரவேண்டியிருக்கிறது. இதன் காரணத்தினால் செங்கற்பட்டு மாவட்டமும் கோயம்புத்தூர் மாவட்டத்தைப் போல் முன்னேற முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, இந்த ஆண்டாவது சென்னை மாவட்டத்திற்கும் செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் சேர்த்து ஒரு மண்டல இயக்குநரை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் தெரிவித்ததைப் போல் ஒரு மண்டலம் என்பது ஹோசூர் முதல் எண்ணூர் வரை இருக்கிறது. அதைப் போன்று கோவை மண்டலத்தை எடுத்துக் கொண்டால் உதகையிலிருந்து சேலம் மாவட்டத்திலுள்ள நாமகிரிப்பேட்டை வரையில் வரவேண்டியிருக்கிறது. ஆங்காங்கு நடைபெறுகின்ற பணிகள் செம்மையாக நடைபெறுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்வதற்காகத்தான் துணை டைரக்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் நாட்டின் பொருளாதார நிலைமை உயர்கிறபோது மேலும் இது பற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, though the bifurcation proposals are deferred for the present, when the Government actually takes up the proposals, may I know from the Hon. Minister whether they will select Hosur for the North Arcot and Dharmapuri Region?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, we have got a Farm in Hosur under proper supervision of a Farm Superintendent and the Hosur Farm is serving as Headquarters indirectly. But the headquarters of the Deputy Director need not be placed there.

[1972 ஆகஸ்ட் 10

திரு. ஏ. ஆர். சுப்பையா : தலைவர் அவர்களே, சில ஆண்டுகளுக்கு முன்னால் கால்நடை இலாக்கா ரி-ஆர்கனைசேஷன் செய்யப்பட்டது. அதில் சில குறைபாடுகள் இருப்பது சர்க்காருக்கு தெரியுமா? அவற்றை நிவர்த்தி செய்ய அரசாங்கத்திடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, குறைபாடுகள் சில இருக்கின்றன என்பது உண்மை. ஆனாலும் வளர்ச்சிக்கான திட்டங்கள் விரிவடையும் பொழுது இந்தக் குறைபாடுகளை மாற்றும் ஆற்றல் அந்தந்த அமைப்புகளுக்கு ஏற்படும். எனவேதான் வளர்ச்சித் திட்டங்களில் கவனம் செலுத்துகிறோம். வளர்ச்சி ஏற்பட ஏற்பட குறைபாடுகள் குறைவதற்கு வழி காண முடியும்.

ஆடு வளர்ப்புப் பண்ணைகள்.

*35. **வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தற்போது உள்ள அரசு சார்புடைய ஆடு வளர்ப்புப் பண்ணைகள் எத்தனை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நான்கு ஆடு வளர்ப்புப் பண்ணைகள் தமிழகத்தில் உள்ளன.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இந்த ஆடு வளர்ப்புப் பண்ணைகள் லாபத்தில் நடக்கின்றனவா அல்லது நஷ்டத்தில் நடக்கின்றனவா என்று அறிவிப்பதுடன், அப்படி அரசு சார்பில் நடத்தும் இந்த ஆடு வளர்ப்புப் பண்ணைகள் இருந்தாலும், தனியார்களுக்கும், விவசாயிகளுக்கும் தனிப்பட்ட முறையில் உதவி செய்து ஆடு வளர்ப்புத் திட்டத்தை அமல்படுத்தி நல்ல முறையில் செயல்படுத்துமா ? அவர்களுக்கு மானிய உதவி, கடன் உதவி செய்து ஆடு வளர்ப்பதற்கான ஏற்பாட்டை அரசு செய்வதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பண்ணைகள் நடத்துவது என்பது வியாபார நோக்கத்தோடு இருக்கக் கூடாது என்பது அகில இந்தியாவில் கால்நடைத் துறையால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. தனியார் வளர்க்கும் ஆடுகளின் தரத்தை மேம்படுத்தவும், தேவையான பொலியாடுகளை வளர்க்கவும், சின்ன சேலத்திலும், முகவை மாவட்டம் சாத்தூரிலும், செங்கற்பட்டு மாவட்டம் காட்டுப்பாக்கத்திலும், நீலகிரி மாவட்டம் சந்தியநல்லாவிலும் ஆட்டுப் பண்ணைகள் நடக்கின்றன. இன்றைக்கு விவசாயிகள் ஆடு வளர்க்க விரும்பினால் கூட்டுறவு முறையில் பண்ணை ஏற்படுத்த உதவி செய்யப்படுகிறது. இப்படி எந்த அளவிற்குப் பொதுமக்கள் பயன்படுத்துகிறார்களோ அந்த அளவிற்குச் செய்யப்படுகிறது.

1972 ஆகஸ்ட் 10]

திரு. அ. ஆறுமுகம் : தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் மேய்ச்சேரி என்ற இடம் செம்மறி ஆட்டிற்குப் பெயர் பெற்ற இடம். ஆகவே, சேலம் மாவட்டத்தில் ஆட்டுப்பண்ணை அமைப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. ஆனால் சேலத்திற்குப் பக்கத்தில் சின்ன சேலத்தில் ஆட்டுப்பண்ணை நடக்கிறது. மேலும் தேவைப்பட்டால் ஆட்டுப் பண்ணை வைத்து வளர்க்க முயற்சிக்கலாம்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் 4 இடங்களில் ஆட்டுப்பண்ணைகள் அமைத்திருப்பதாகச் சொன்னார்கள். அது எந்தெந்த இடங்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான்கு இடங்களையும் சொன்னார்கள்.

திரு. தொ. ப. சீனிவாசன் : இந்த ஆட்டுப்பண்ணைகளை நன்றாக அமல் செய்வதற்கு மத்திய சர்க்கார் மானியம் அளிக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இத்தகைய பண்ணைகள் அமைந்து அவை இப்பொழுது சரியாக இயங்குவதற்கு எல்லாவிதமான சீர்திருத்தங்களும் செய்யப்பட்டிருக்கிறது. கால்நடை வளர்ச்சிக் குழு பரிசீலனை செய்து சீர்திருத்தங்களை வழங்கியிருக்கிறது. அவைகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட இலாக்கா நடவடிக்கை எடுக்கிறது. அதே நேரத்தில் மத்திய சர்க்கார் நம் நாட்டு ஆட்டு இனத்தின் தரத்தை உயர்த்த—நம்முடைய நாட்டிலுள்ள ஆடுகளின் தரம் அவ்வளவு நல்லதாக இல்லை என்பதால்—காரிடேல் என்னும் இன ஆடுகளைக் கொண்டு கலப்பு இனத்தை உண்டாக்கும் முயற்சிக்கு உதவுகிறது. அப்படிப்பட்ட இனத்தினால் மிகுந்த இறைச்சி கிடைக்கவும், கம்பளி கிடைக்கவும் பல ஆராய்ச்சிகள் இன்றைக்கு நடக்கின்றன.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் மருத்துவ மனைகள்

*36. **வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-ம் ஆண்டு, ஏப்ரல் முதல் தேதியில் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் உள்ளிருப்புச் சிகிச்சைக்காக உள்ள அரசு மருத்துவ மனைகள் எவை ?

(இ) அவற்றின் மொத்த படுக்கைகள் எவ்வளவு ?

[1972 ஆகஸ்ட் 10

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இரண்டு மருத்துவமனைகள்.

(இ) 925 படுக்கைகள்.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, நம்முடைய தமிழகத்திலே இரண்டே இரண்டு மருத்துவ மனைகள்தான் இருக்கின்றன. இன்னும் அதிகமாக்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். மேலும் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப் படுத்தவும் வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். அதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

(விடை இல்லை.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாக இல்லையே.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, கோவையிலேயிருக்கும் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையில் 200 படுக்கைகள் போடுவதற்கான இடம் இருந்தும் அந்த இடம் காலியாக சும்மா கிடப்பதுடன் அதற்குப் போட்ட மூலதனமும் வீணாகிறது. எனவே, படுக்கைகளை அதிகப்படுத்துவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, இங்கே இருக்கும் மருத்துவ மனைகள் குறைவு. இன்னும் தமிழ்நாட்டில் ஏராளமான தொழிலாளர்களுக்கு அமைக்கப் பட வேண்டும். அப்படித் திட்டமிடப்பட்டு பின்னால் கைவிடப்பட்டது. ஆகையால்தான் நான் தெரிவிக்கிறேன். எனவே இன்னும் அதிக மருத்துவமனைகளை அதிகரிக்கவும், படுக்கைகளை அதிகப்படுத்தவும் முயற்சியெடுக்குமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, கனம் உறுப்பினரவர்கள் கேட்ட கேள்வியில், 1971-ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியில் என்று கேட்ட கேள்விக்கு இரண்டு மருத்துவமனைகள் என்று தெரிவித்தேன். ஏப்ரல் 13-ஆம் தேதி மதுரையில் மேலும் ஒரு மருத்துவமனை திறக்கப்பட்டிருக்கிறது. மேலும் பல மருத்துவமனைகளைத் திறப்பதற்கு நிதி வசதி ஏற்பட்ட உடனே பரிசீலனை செய்யும்.

திரு. இரா. இராமலிங்கம் : தலைவரவர்களே, தூத்துக்குடி பகுதியில் மருத்துவமனை கட்டுவதற்கு நில ஆர்ஜிதம் செய்து இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகின்றன என்று தெரிகிறது. இந்த மருத்துவமனை எப்பொழுது கட்டப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்தபடி நிதிநிலையில் தக்க வசதி கிடைத்தவுடன் பரிசீலனை செய்து அந்த முயற்சி மேற்கொள்ளப்படும்.

1972 ஆகஸ்ட் 10]

திரு. எம். சுரேந்திரன் : சார், மேட்டூர் பகுதி மிகுந்த தொழிலாளர்கள் வாழும் பகுதி. அங்கே இதுபோன்ற மருத்துவமனை அமைப்பதற்கு நிலம்கூடப் பார்த்து ஏற்பாடுகள் செய்யப்பட்டு கைவிடப்பட்டிருக்கிறது. அது மீண்டும் ஆலோசிக்கப்படும் என்று ஒரு சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தில் கூறினார்கள். இப்பொழுதே அரசாங்கம் இந்தப் பிரச்னையை எடுத்து அதை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் அங்கத்தினர் அவர்களின் யோசனையையும் நினைவில் வைத்து ஆவன செய்யப்படும்.

* 37. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971 ஏப்ரல் முதல் தேதியில் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி செய்தோரின் உள்ளிருப்பு சிகிச்சைக்காக உள்ள தனியார் மருத்துவ மனைகள் எவை ?

(இ) இவற்றிற்கு அரசு தரும் உதவித் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) நான்கு.

(1) ராமலிங்கம் என்புருக்கி மருத்துவமனை, பெருந்துறை.

(2) ராஜாஜி என்புருக்கி மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி.

(3) ஸ்கட்டர் நினைவு மருத்துவமனை, ராணிப்பேட்டை.

(4) கிறிஸ்துவ மிஷன் மருத்துவமனை, மதுரை.

(இ) இவற்றிற்கு அரசு தரும் உதவித்தொகை பின்வருமாறு :

(1) ராமலிங்கம் என்புருக்கி மருத்துவமனை, பெருந்துறை—பிணியாளர் ஒருவருக்கு 1 நாளுக்கு ரூ. 6 தரப்படுகிறது.

(2) ராஜாஜி என்புருக்கி மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி—பிணியாளர் ஒருவருக்கு 1 மாதத்திற்கு ரூ. 180 தரப்படுகிறது.

(3) ஸ்கட்டர் நினைவு மருத்துவமனை, ராணிப்பேட்டை—பிணியாளர் ஒருவருக்கு 1 நாளுக்கு ரூ. 7 தரப்படுகிறது.

(4) கிறிஸ்துவ மிஷன் மருத்துவமனை, மதுரை—பிணியாளர் ஒருவருக்கு 1 நாளுக்கு ரூ. 7 தரப்படுகிறது.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, 4 மருத்துவமனைகளுக்கும் கொடுக்கப்படும் உதவித் தொகையில் வேறுபாடு இருக்கிறது. இந்த வேறுபாட்டைப் போக்க அரசாங்கம் முயற்சியெடுக்குமா ? அங்கேயிருக்கும் தொழிலாளர்களுக்குப் போதிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

[1972 ஆகஸ்ட் 10

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, மத்திய சர்க்காரிடத்தில் இதற்காகக் கடிதப் போக்குவரத்து நடத்தியிருப்பதால் அவர்களின் மூலம் நிதி உதவி கிடைத்தவுடன் உறுப்பினரின் எண்ணங்கள் நிறைவேற்ற முயற்சிக்கப்படும்.

Fish sales centres

* 38 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that a fish sales counter has been opened by the Government at Teynampet, Mount Road, Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) தேனும்பேட்டை நிர்வாக அலுவலகக் கட்டிடங்களின் எல்லைக்குள் எர்ணாகுளத்திலுள்ள இந்திய-நார்வே திட்டத்தின் கீழ் (இந்திய அரசு) ஒரு பதனப்படுத்தப்பட்ட மீன் விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட மீன் விற்பனை நிலையத்திற்கு மீனவத்துறையினரால் ஒரு தற்காலிகக் கட்டிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான சாதனங்களையும் பணியாளர்களையும் இந்திய-நார்வே திட்டத்தினர் அளித்துள்ளனர்.

THIRU N. DENNIS : Sir, may I know from the Hon. Minister whether there is export by package through this counter?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்த நிலையத்தின் மூலமாக வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற முறை இருக்கவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, சென்னை நகரத்தில் நல்ல தரமான மீன் ஒரு கிலோ 5 ரூபாய்க்குக் கிடைக்கிறது. ஆனால் தாராளமாக மீன் உற்பத்தியாகின்ற நெல்லை, குமரி போன்ற மாவட்டங்களில் ஒரு கிலோ 10 ரூபாய்க்குக் கூடக் கிடைப்பதில்லை. ஆகவே, அந்த ஜில்லாக்களில் அரசாங்கம் கொள்முதல் செய்து விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இது எர்ணாகுளத்திலுள்ள இந்திய-நார்வே திட்டத்தின் மூலம் தேனும்பேட்டையில் பதனப்படுத்தப்பட்ட மீன் விற்கும் நிலையம் ஆகும். உறுப்பினர் அவர்கள் கூறிய நெல்லைக்கு மண்டபத்தில் இருக்கும் மீன் தனியார் துறை மூலமாகவும், வேறு இதேபோன்ற குளிர் பதனப்படுத்திவைக்கும் முறையில் நமது மாநிலத்தில் மண்டபத்தில் விற்கப்படுகிறது.

1972 ஆகஸ்ட் 10]

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, கடற்கரை ஓரமாக திறைய மீன் கிடைக்கிறது. எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கிறது. ஆனால் கடற்கரைக்கு அப்பால் 100 மைல்கள் தாண்டியுள்ள பகுதிகளில் கடற்கரைகளிலுள்ள மீன்களும் கிடைப்பதில்லை, நீர்நிலை வற்றிவிட்டதால் அந்த மீன்களும் கிடைப்பதில்லை. எனவே எந்த ஒரு மீனவது கிடைப்பதற்கு வேண்டிய வழிமுறைகளை அரசு செய்யுமா ? 3, 4 வருஷங்களாக எங்கள் பகுதியில் மீன் கிடைப்பதில்லை.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அது குறித்துத் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : There is a fish depot near Chetpet bridge. I do not think fish is really sold to the people there. Would the Government think of at least closing it down or make it more competitive?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அங்கே இருப்பது மீன் விற்பனைக்காக இருக்கின்ற நிலையம் அல்ல. நான் கூறுகின்ற நிலையம் மீன் விற்பனைக்காக இருக்கின்ற நிலையம். விற்பனைக்காக இருக்கின்ற இடம் மூலமாகத்தான் இதையெல்லாம் செய்யக்கூடும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அங்கே மீன் விற்கப்படுகிறது. நானே சில சமயங்களில் அங்கேயிருந்து வாங்கியிருக்கிறேன். தயவு செய்து அமைச்சர் அவர்கள் அது எப்படி நடத்தப்படுகிறது என்பதை ஆராய்வதற்கு வழி செய்வார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆராய்ச்சி நிலையங்களில்கூட சில இடங்களில் மீன்களை விற்கிறார்கள். அப்படிப்பட்ட இடத்தில் மீன்களை வாங்கியிருக்கலாம். ஆனால், விற்பனைக்காக என்று குறிப்பாகச் சில இடங்கள் இருக்கின்றன.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether prawns would be made available for the local consumers because prawns are now exported to foreign countries and it is not available here? Will the Government take steps to see that local consumers' needs are met?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இது மூலக் கேள்விக்கு முற்றிலும் மாறான கேள்வியாக இருந்தாலும் பதில் சொல்கிறேன். இறால் மீன்கள் அதிகமாக அயல் நாடுகளுக்குத்தான் அனுப்பப்படுகின்றன. நம்முடைய மாநில மக்களுக்கு இறால் மீன்கள் கிடைக்கின்ற வகையில் இன்னும் ஏற்பாடு செய்ய

வில்லை. இன்னும் துறைமுகங்கள் அதிகப்படுத்தப்பட்டு. இயந்திர சாதனங்கள் கிடைக்கப் பெற்றவுடன் நம்முடைய மாநில மக்களுக்குக்கூட இரால் மீன்கள் வழங்கப்படும்.

* 39. வினா—திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மண்டபம் பகுதியில் கிடைக்கும் உணவுக்கான மீன்களை விற்பனை செய்ய மதுரை போன்ற நகரங்களில் விற்பனைக் கூடங்கள் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. கா. காளிமுத்து : இனியாவது அதைப் பரிசீலித்து அப்படி விற்பனைக் கூடங்களைத் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்பொழுது மதுரை போன்ற இடங்களில் விற்பனைக்காக கூடங்கள் இருக்கவில்லை என்றாலும், நான் சற்று முன்னால் ஒரு கேள்விக்குப் பதில் கூறியதுபோல மண்டபத்திலிருந்து குளிர் சாதனப் பெட்டிகளில் வைத்து மீன்களைக் கொண்டுவந்து மதுரை, திண்டுக்கல், விருதுநகர், பாளையங்கோட்டை, நெல்லை போன்ற பகுதிகளில் எல்லாம் மீன்கள் விற்கப்படுகின்றன. தனிப்பட்டவர்கள்கூட மண்டபத்திலிருந்து கொண்டுவந்து மதுரையில் மீன்களை விற்கிறார்கள். மதுரையில் அரசாங்கத்தின் சார்பிலே விற்பனைக் கூடம் இருக்கவில்லை.

திரு. கோவை செழியன் : மண்டபப் பகுதியிலே மீன்களோடு கடற் கன்னிகள் கிடைத்திருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். இரண்டு கடற் கன்னிகள் மண்டபத்தில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அவைகள் இருக்கின்றனவா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்று பார்க்கலாம்.

மண்டபத்திலுள்ள மீன் பதனிடும் தொழிற்சாலை

* 40. வினா—திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இந்திய-நார்வே மீன் பிடிக்கும் திட்டத்தின்கீழ் மண்டபத்தில் அமைந்துள்ள மீன் பதனிடும் தொழிற்சாலையைத் தனியார்க்கும் வாடகைக்கு விடும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. கா. காளிமுத்து : தற்பொழுது அதனை கேரளாவைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. தமிழகத்தில் உள்ளவர்கள் பயன்படுத்தும் அளவுக்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கேரளத்தைச் சேர்ந்தவர்கள் என்ற விவரம் எதுவும் குறிப்பில் இருக்கவில்லை. அதிலே ஃப்ரோஸன் அறைகள் என்றும், தட்டுகளின் மூலமாக மீன்களை உறையவைப்பது என்றும் ஆக இரண்டு முறைகள் இருக்கின்றன. அறைகளில் நீண்ட காலத்திற்கு மீன்களைச் சேமித்து வைக்கிறார்கள். தட்டுகளில் குறைந்த காலத்திற்கு வைத்து விற்கின்றார்கள். பெட்டிகளில் வைத்துக்கொள்வதற்கு அப்படிப்பட்ட சிலர்களுக்கு அது வாடகைக்கு விடப்படுகிறது. முற்றிலும் கேரளத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் விடப்படுகிறது என்ற விவரம் தற்பொழுது என்னிடம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : நார்வீஜியர்கள் தம்முடைய மாநிலத்தில் எங்கே என்ன வகையான மீன்கள் கிடைக்கும் என்று கண்டுபிடித்துச் சொல்வதற்குத்தான் வந்திருக்கிறார்களா ? அல்லது அவர்களே நேரில் மீன்களைப் பிடித்து வியாபாரம் செய்யக்கூடிய அளவுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவர்கள் நமது மாநிலத்தில் எங்கே மீன்கள் கிடைக்கின்றன, மீன்களை எப்படிப் பிடிப்பது, பிடித்து எப்படி உறைய வைப்பது, அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய எப்படிப் பதப்படுத்தி வைப்பது, மீன்களிலிருந்து பிஷ் மீல் எப்படித் தயாரிப்பது ஆகிய இப்படிப்பட்ட பல திட்டங்களுக்காகத்தான் அவர்கள் நமது நாட்டில் இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதன்மூலம் பிடிக்கப்படுகின்ற மீன்கள்தான் அயல் நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. அவர்கள் அயல் நாடுகளுக்கு மீன்களை அனுப்பவில்லை.

Salem Steel Plant

* 41 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether Dastur and Company, the Consultants for the Salem Steel Plant have submitted the detailed report; and

(*b*) if not, the reasons for the delay?

[1972 ஆகஸ்ட் 10

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) சேலம் உருக்காலை ஆலோசனைப் பொறியாளர்களான தஸ்தூர் கம்பெனியார் மத்திய அரசுக்குத் தொழில் துறைக்கப் பொருளாதார விவர அறிக்கை ஒன்றை 1971 நவம்பரில் சமர்ப்பித்துள்ளனர்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: அதில் உள்ள முக்கியமான சிபார்சுகள் என்ன என்பதைச் சர்க்கார் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சிபார்சுகள் என்பது மட்டுமல்ல, சேலம் தொழிற்சாலையில் எந்த பிராடக்ட் மிக்ஸை உற்பத்தி செய்தால் லாபத்தோடு நடத்த முடியும் என்பது போன்ற விவரங்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இவைகளெல்லாம் மத்திய அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கின்றன.

திரு. என். கே. பழனிசாமி: சமீபத்தில் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் சாதனங்களைச் செய்வதற்கு உத்தேசம் இருக்கிறதா. அப்படியானால் எப்படிச் செய்ய உத்தேசம்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: முதல் கட்டமாக ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் உற்பத்தி செய்ய வேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. அது எப்படி என்ற விவரம் என்னிடம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: தஸ்தூர் அறிக்கையை அப்படியே மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதா, அல்லது வேறு ஒரு அறிக்கை தயார் செய்து கொண்டிருக்கிறதா? சேலம் இரும்பு ஆலை உற்பத்தியைத் தொடங்குவதற்கு வரமுடியாத அளவுக்கு எந்த விதமான வேலையும் ஆரம்பிக்காமல் தாமதம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதை அரசு தெரிவிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தாமதம் எதுவும் இல்லை என்று அடிக்கடி மத்திய அரசு சொல்லி வந்திருக்கிறது. தஸ்தூர் அறிக்கையைப் பொறுத்த அளவுக்கு ப்ராடக்ட் மிக்ஸைக் குறித்து வேறுபட்ட கருத்துக்கள் இருந்தன. என்ன பிராடக்ட் மிக்ஸை நாம் சேலம் இரும்பு ஆலையில் கொண்டுவந்தால் லாபமாக நடத்த முடியும் என்று அவர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தவிர வேறு காலதாமதம் இருப்பதாகத் தெரியவில்லை.

*42 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் உருக்காலை திட்டத்திற்காகத் தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு இதுவரை எத்தனை ஏக்கர் நிலம் ஒதுக்கியுள்ளது?

1972 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. ஏ. வகாப்: தலைவர் அவர்களே, நம்முடைய மாநில அரசு இவ்வளவு இடங்களைக் கொடுத்திருந்தும் பத்திரிகைகளிலே மத்திய அமைச்சர்கள் கூறியதாக வருகிற செய்திகளைப் பார்க்கிறபொழுது, நம்முடைய மாநில அரசு, நிலம் கொடுக்காத காரணத்தினால் தாமதப்படுவது போலவும், வேறு பல காரணங்கள் இருப்பது போலவும் கூறியிருக்கிறார்களே. அப்படியில்லை என்பதற்கு விளக்கம் தருகின்ற முறையில்,—இன்னும் அவர்கள் கேட்ட இடங்களைக் கொடுக்காமல் இருப்பதுபோல் கூறியிருக்கிறார்களே—அது உடனடியாக நிவர்த்திக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இவ்வளவு அதிகமான நிலங்களை எடுத்துக் கொடுத்திருக்கும்பொழுது மத்திய அரசோ அல்லது அதனுடைய அமைச்சர்களோ நிலமே இல்லை, ஒரு செண்டுகூட நிலம் இல்லை என்று சொல்வார்கள் என்று நான் நம்பவில்லை. அப்படி மத்திய அமைச்சர்கள் அல்லது மத்திய அரசு பேசுகிறார்களோ என்ற நோக்கத்தோடு பத்திரிகைகளில் போடாமல் இருந்துவிட்டால் இப்படிப்பட்ட பிரச்னை எழாது என்று கருதுகிறேன். என்னைப் பொறுத்தவரையில், எந்த மத்திய அமைச்சரும் மாநில அரசு எதுவும் செய்யவில்லை என்று சொல்லியிருப்பார்கள் என்று நம்பத் தயாராக இல்லை.

தொழில் அனுமதிக்கான விண்ணப்பங்கள்

*43 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971 வரை லைசென்ஸ் வழங்கப்படாமல் மத்திய அரசு காலதாமதம் செய்யும் தொழில்கள் எத்தனை?

(இ) அவைகளின் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 165 விண்ணப்பங்கள் 1971-ம் ஆண்டு வரை மத்திய அரசால் உரிமம்/இசைவுக் கடிதங்கள் வழங்கப்படாமல் உள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: 1971-ம் ஆண்டுக்குப் பிறகு இதுவரை அவைகளில் எத்தனை அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை அறியலாமா?

@ 244–248 -ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 1971-ம் ஆண்டுக்கான விவரங்கள் இருக்கின்றன. வழங்கப்பட்ட லைசென்ஸ் 53, இசைவுக் கடிதம் (லெட்டர்ஸ் ஆஃப் இண்டெண்டு) 71.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, ஒரு கோடி ரூபாய் வரையில் முதல் முடக்கும் தொழில்களுக்கு மத்திய அரசின் அனுமதி தேவையில்லை என்று கூறப்படுகிறதே? ஆகவே எத்தனை லைசென்ஸ்கள் இந்த அரசாங்கம் வழங்கியுள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒரு கோடி ரூபாய் முதல் வரையில் லைசென்ஸ் தேவையில்லை என்றால் மறுபடியும் லைசென்ஸ் வாங்கவேண்டும் என்று ஏன் கேட்கிறார்கள் என்று தெரியவில்லை. ஒரு கோடி முதலீடு போட்டாலும், அதில் வெளி நாட்டுத் தொழில் நுட்ப உதவி, வெளி நாட்டிலிருந்து இறக்குமதி ஆகியவற்றிற்கான விவரங்களும் இணைந்திருந்தால் அதற்கும் அனுமதி வாங்கவேண்டும்.

திரு. எம். சுரேந்திரன்: 1971 வரையிலும் வழங்கப்பட்ட அனுமதியைப் பொறுத்தவரையில் எவ்வளவு தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்றன. இன்னும் எவ்வளவு பாக்கி இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த விவரம் என்னிடம் இல்லை.

சிறு தொழில்களுக்குத் தேவையான இரும்பு

*44 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-72-ஆம் ஆண்டில் நமது மாநிலத்தின் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ்க்காகத் தேவைப்பட்ட இரும்பின் அளவு என்ன?

(இ) அதில் மத்திய சர்க்கார் அனுமதித்துள்ள அளவு என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) 1971-72-ம் ஆண்டில் நமது மாநிலத்தின் சிறு ரகத் தொழில்களுக்குத் தேவைப்பட்ட இரும்பின் அளவு சுமார் இரண்டு லட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும்.

(இ) அதில் மத்திய அரசின் விநியோக முறைப்படி அனுமதித்த இரும்பின் அளவு சுமார் 25,425 மெட்ரிக் டன்கள் ஆகும்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தேவைப்படுகிற இரும்பின் மொத்த அளவு இரண்டு லட்சம் மெட்ரிக் டன் என்றும் ஆனால் மத்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கும் அளவு 25 ஆயிரம் மெட்ரிக் டன்தான் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எனவே மேற்கொண்டு தேவைப்படும் 1,75,000 டன் இரும்பைப் பெறுவதற்கு என நமது அரசு மத்திய அரசிடம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன என்பதை அறிவிக்க இயலுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழகத்திலுள்ள தொழிற்சாலைகளின் தேவைக்கான மூல பொருள்களை நாம் முழுமையாக மத்திய அரசிடமிருந்து கேட்டுப்பெறமுடியவில்லை என்பதை நமது மாநில அரசு மத்திய அரசிடம் அடிக்கடி தெரியப்படுத்தியிருக்கிறது. இந்த மாநிலத்திலுள்ள சிறிய-பெரிய தொழிற்சாலைகளின் தேவைக்கான மூலப்பொருள்கள் மத்திய-மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பில் இப்போது அளிக்கப்பட்டு வருகிறது. இந்த முறை முழுவதும் மாற்றப்பட்டு, தேவைகளை வினியோகிக்கும் முறை முழுவதும் மாநில அரசிடம் ஒப்படைக்கப்பட்டாலொழிய இதில் உள்ள சிக்கல் தீராது. நாம் இவ்வளவு தேவைப்படுகிறது என்று கேட்கிறோம். ஆனால் கொடுக்கப்படுவது குறைவாக இருக்கிறது. எனவே, வேண்டிய மூலப் பொருள்கள் இல்லையா, அல்லது வினியோகம் செய்யும் முறையில் உள்ள கோளாறுகள் இதற்குக் காரணமா என்று தெரியவில்லை. எனவே இது முழுவதையும் மாநில அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதே நமது அரசின் கருத்தாகும். இப்போது 'ஜாயிண்டு ப்ளானிங் கமிட்டி'யால் ஒரு குறிப்பிட்ட அளவும் மற்றும் நமது மாநில அரசின் இயக்குநர் மூலமாகவும் இப்போது வினியோகிக்கப்பட்டு வருகிறது. மாநில அரசு தன் தேவைகளைச் சொல்லுகிறது. ஆனால் தேவை முழுவதும் கொடுக்கப்படுவதில்லை. எனவே இந்தக் குறைகள் இருக்கின்றன. எனவே இது மாநில அரசிடமே ஒப்படைக்கப்படவேண்டும் என்று மாநில அரசால் மத்திய அரசிடம் கேட்கப்பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE: May I know the methods by which the Central Government allots the steel to the various States, whether this is discussed by the State Governments with the Central Government, whether the Centre says 'we are going to allot only this much, 50 per cent, 40 per cent, etc.', whether there has been any partiality shown to other States and this State had been neglected, whether it has been represented to the Central Government and whether the State Government has other channels, other sources, to get the steel?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பல கேள்விகளைக் கேட்கின்றீர்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, நான் கூறியபடி, இப்போது ஜே.பி.ஸி. மூலம் மாநில அரசின் இயக்குநர் அலுவலகத்திற்கு இது அளிக்கப்படுகிறது. நாம் கேட்பதை முழுவதையும் கொடுக்கின்றார்களா இல்லையா, இதில் பாரபட்சம் காட்டுகின்றார்களா என்பதையெல்லாம் நாம் இங்கே குறிப்பிடப்போனால் அது மத்திய மாநில அரசுகளின் போராட்டத்திற்கு வழிகோலுவதாக அமையும். நம்மைப்பொறுத்தமட்டில், இதுபற்றிய முழுப் பொறுப்பும் மாநில அரசிடமே விடப்பட்டு 'அஸெஸ்மெண்ட் ஆஃப் ரிகொயர்மெண்ட்ஸ் அண்டு டிஸ்ட்ரிப்யூஷன்' இந்த இரண்டின் முழுப் பொறுப்பும் மாநில அரசிடமே கொடுக்கப்பட வேண்டும். அப்போது தான் மாண்புமிகு அங்கத்தினர் கேட்கும் கேள்விக்கு முழுமையான பதில் அளிக்க முடியும். இப்படி அதை மாநில அரசிடமே விட்டால்தான் உண்மையிலேயே கேட்கிறதைக் கொடுக்கிறார்களா அல்லது கொடுப்பதில்லையா, கொடுக்கவில்லை என்றால் ஏன் கொடுக்கவில்லை என்பதையெல்லாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இப்போது தேவைப்படுகிற 2 லட்சம் மெட்ரிக் டன்களுக்கு எதிராக 25 ஆயிரம் மெட்ரிக் டன்தான் தரப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுகின்றார்கள். அப்படியானால் மிச்சமுள்ள 1,75,000 மெட்ரிக் டன்களை தொழிலதிபர்கள் எங்கிருந்து பெறுகின்றார்கள் ? 'அஸஸ்மெண்ட்' கூட மாநில அரசிடம் விடப்பட வேண்டும் என்றால் இப்போது அதை மத்திய அரசுதான் செய்கிறதா ? மாநிலங்களுக்குத்தேவை எவ்வளவு என்பதை மத்திய அரசு எப்படி நிர்ணயிக்க முடியும் ? இப்போது அதை யார் நிர்ணயிக்கின்றார்கள் ? தேவைகளைப்பற்றிய அஸெஸ்மெண்டை அகில இந்திய ரீதியில் மத்திய அரசுதானே செய்யமுடியும் ? இங்குள்ள தேவைகளுக்கேற்றமுறையில் இங்கே கொடுக்காமல் வேறு மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டு, அவை உபயோகப்படுத்தப்படாமல் இருந்துவிடுகிறதா என்பதைச் சட்ட மன்றத்திற்கு மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய-மாநில அரசு போராட்டத்தைத் தொடங்கவேண்டாம் என்று டாக்டர் ஹாண்டே அவர்களைக் கேட்டுக் கொண்டேன். இப்போது அம்மையார் அவர்களே தொடங்குகிறார்கள். எங்களைப்பொறுத்தமட்டில் மாநில அரசிடமே இது முழுவதையும் விட்டுவிட வேண்டும் என்றுதான் விரும்புகிறோம். இப்போது வினியோகம் முழுவதையும் ஜே.பி.ஸி. மேற்கொண்டிருக்கிறது. முறைப்படி ஒரு மாநிலத்திற்குத்

தேவைப்படும் மூலப் பொருள்களின் தேவை முழுவதையும் மாநில அரசுதான் முடிவெடுக்க வேண்டும். இதில் சங்கடம் இருந்தால் மத்திய அரசோடு சேர்ந்து செயல்படலாம். வினியோகிப்பதையும் மாநில அரசுதான் செய்ய வேண்டும். அப்போதுதான் எங்கேயாவது தவறு நேர்ந்தால்கூட பொறுப்பை நிர்ணயிக்க முடியும். இப்போது முழுவதையும் கொடுக்காமலுள்ள நிலையில் பற்றாக்குறையை வேறு எங்கிருந்து பெறுகின்றார்கள் என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள். உண்மையிலேயே இதுதான் பெரிய பிரச்சனையாக இருக்கிறது. 'அதிக விலைக்குக் கிடைக்கிறது, வாங்குகிறோம்' என்று தொழிலதிபர்கள் சொல்லுகின்றார்கள். இந்த நிலைக்குக் காரணம் யார் என்று குறிப்பிட்டால் அம்மையார் அவர்களுக்குக் கோபம் வரக்கூடும். எனவே இந்த முறைக்குப் பதிலாக மத்திய அரசு தைரியமாக முன்வந்து மாநில அரசுக்குப் பொறுப்பை விட்டுக்கொடுத்தால் இதிலுள்ள குறைபாடுகள் நீங்குவதற்கு வழி பிறக்கும். இதுதான் இந்த அரசின் கொள்கையாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரம் நீடிக்கப்படுகிறது.

தூத்துக்குடி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை

* 45 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னக பெட்ரோ கெமிக்கல் தொழில் கார்ப்பரேஷன் தூத்துக்குடியில் ரசாயன சுத்திகரிப்பு ஆலை ஒன்று நிறுவிட அரசுக்கு ஏதேனும் ஆலோசனை வழங்கியுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்டிரீஸ் நிறுவனம் தூத்துக்குடியில் தொழிற்பயன் எண்ணெய்த் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்துவதற்கான ஏற்புடைமை அறிக்கையை அனுப்பியது. இத்தொழிற்சாலைக்காக உரிமம் வேண்டித் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் விண்ணப்பித்துக் கொண்டுள்ளது.

மஞ்சளாறு அணைக்கட்டுப் பாசன ஏரிகள்

* 46 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்திலுள்ள மஞ்சளாறு அணைக்கட்டில் பாசன உரிமை பெற்ற கண்மாய்கள் எவை ?

[1972 ஆகஸ்ட் 1

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மதுரை மாவட்டத்தி மஞ்சளாறு அணைக்கட்டின்கீழ் பாசன உரிமைப்பெற்ற கண்மாய்கள் பின்வருமாறு :—

(1) பெரியகுளம் தாலுக்கா, கங்குவார்பட்டி கிராமத்தில்:

(1) செங்குளம் கண்மாய்.

(2) மதுவர்குளம் கண்மாய்

(3) குப்பிநாயக்கன் குளம்

(2) நிலக்கோட்டை தாலுக்கா:

(அ) பத்தலக் குண்டு கிராமத்தில்:

(4) வீரன்குளம் கண்மாய்.

(5) பெரியகுளம் கண்மாய்.

(6) வேடன்குளம் கண்மாய்.

(ஆ) கணவாய்ப்பட்டி கிராமத்தில்:

(7) கணவாய்ப்பட்டி கண்மாய்.

(இ) குன்னவரன்கோட்டை கிராமத்தில்:

(8) குன்னவரன்கோட்டை கண்மாய்.

(ஈ) போடியா கவுண்டன்பட்டி கிராமத்தில்:

(9) ஆலங்குளம் கண்மாய்.

(உ) சிவன்னபுரம் கிராமத்தில்:

(10) சிறுகுளம் கண்மாய்.

திரு. பி. எஸ். மணியன்: தலைவரவர்களே, மஞ்சளாறு அணைக்கட்டிலிருந்து ஆவரம்பட்டி கண்மாய், எத்திலோடு கண்மாய், பிள்ளையார் நத்தம் கண்மாய் ஆகிய கண்மாய்களுக்குக் கால்வாய் வெட்டப்பட்டிருக்கிறது. ஆனால் பாசன உரிமை இன்னும் வழங்கப்படவில்லை. நமது மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் இந்தக் கண்மாய்களைப் பார்வையிட்டு ஆவன செய்யப்படும் என்று அங்குள்ள கிராம மக்களுக்கு உறுதியளித்திருக்கின்றார்கள். இப்போதேனும் பாசன உரிமையை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இதுபற்றித் தலைமைப் பொறியாளரிடம் அறிக்கை கேட்டிருக்கிறோம். அது கிடைத்தபிறகு ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1972 ஆகஸ்ட் 10]

திரு. ஆ. முனியாண்டி: இதே அணைக்கட்டின் கீழ் வரக்கூடிய பொட்டைக் குளம் கால்வாய் இருக்கிறது. அதற்கு மடை திருப்பி பாசன வசதியை ஏற்படுத்தித் தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தேவையானபொழுது ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. நா. வெ. குருசாமி: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின்கீழ் அதிக நீர் தேக்கி வைக்கும் வாய்ப்பிருக்கிறது. எனவே இந்த மஞ்சளாறு திட்டத்திலிருந்து சிலுவார்ப்பட்டி போன்ற கிராமங்களுக்கும் பாசனத்திற்காகத் தண்ணீர் விட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது பற்றிய அறிக்கையைத் தலைமைப் பொறியாளரிடமிருந்து பெற்று அதைப் பரிசீலித்தபின்னர் ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கு. திருப்பதி: தலைவரவர்களே, மஞ்சளாறு அணைக்கட்டிலிருந்து மட்டப்பாறைக் கண்மாய்க்குத் தண்ணீர் விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தனியாக இதுபற்றிய கேள்வியினைக் கொடுத்தால் அதுபற்றிக் கவனிக்கப்படும்.

வேப்பிலை கிராமத்திற்குப் புதிய ஏரி

*47 வினா—திரு. வி. செல்லதுரை: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் வட்டம், வேப்பிலை கிராமம், கோவிந்தாபுரம் சர்வே எண் 190-ல் புதிதாக ஒரு ஏரி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) இத்திட்டம் பாசனத் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையிலுள்ளது.

அணைக்கட்டுகள்

*48 வினா—திரு. சி. இராமநாதன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி வட்டத்தில் பாம்பாற்றின் குறுக்கே களபம் அருகில் அணை ஒன்றினைக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

[1972 ஆகஸ்ட் 10

*49 வினா—திரு. சி. இராமநாதன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி வட்டத்தில் வெள்ளாற்றின் குறுக்கே கீரனூர் (Keeranoor) அருகில் அணை ஒன்றினை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இத்திட்டங்களுக்கான ஆய்வுகள் முடிந்துவிட்டன. மதிப்பீட்டிற்காக வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு பிறகு திட்டம் நிறைவேற்றப்படும்.

Bypass road near Koilpatti

*50 Q.—THIRU K. P. KANDASAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal with the Government to lay a bypass road, west of Koilpatti Railway Station?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

திரு. கே. பி. கந்தசாமி: திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு என்பதையும் இது எப்போது நிறைவேற்றப்படும் என்பதையும் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: திட்டத்தின் மதிப்பு ரூபாய் 21 லட்சம். இதற்கான நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விவசாயத் துறையிலிருந்து கொஞ்சம் நிலங்களை ஆர்ஜிதம் செய்யவேண்டியிருக்கிறது. இது முடிந்தவுடன் ஆவன செய்யப்படும்.

சிறு துறைமுகங்கள்

*51 வினா—திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டத்திலுள்ள 'தொண்டி' யைத் துறைமுகமாகச் சீர்திருத்தம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது, அத்திட்டத்தின் ஆரம்ப வேலைகள் தொடங்கும்?

1972 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்—(அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

*52 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குலசேகரப்பட்டணம் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: குலசேகரப்பட்டிணம் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம் இல்லை.

தமிழ்நாடு நிலவள வங்கி

*53 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள தமிழ்நாடு நிலவள வங்கியில் தற்போது எத்தனை இயக்குநர்கள் (Directors) இருக்கிறார்கள்?

(இ) இவர்களில் அரசு எத்தனை பேரை நியமனம் செய்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) தற்போது இருக்கின்ற இயக்குநர்களின் எண்ணிக்கை 56.

(இ) ஒருவர்.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, 56 இயக்குநர்கள் என்பது 56 சிற்றரசர்களைப்போல் இருக்கின்றது. ஒரு நிர்வாகத்தின் கீழ் இது போன்று 56 இயக்குநர்கள் தேவைதானா என்பதை அரசு ஆலோசித்து இந்த இயக்குநர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: 1967-க்கு முன்பு இந்த வங்கிகளில் அரைக் கோடி ரூபாய்க்கு மேல் வரவு-செலவு இருக்குமானால் அதற்கு ஒரு இயக்குநர் என்ற அளவில் இயக்குநர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இப்போது வரவு-செலவு ரூபாய் 2 கோடிக்கு இருந்தால் தான் ஒரு இயக்குநர் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எனவே எண்ணிக்கை குறையுமே தவிர ஏறாது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, அரசாங்கம் எத்தனை இயக்குநர்களை நியமித்திருக்கிறது? அவர்கள் எந்தத்தகுதி அடிப்படையில் நியமிக்கப்பட்டார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்கள்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இப்போது அரசாங்கம் ஒருவரை இயக்குநராக நியமித்திருக்கிறது. அதாவது அடிஷனல் கூட்டுப் பதிவாளர் அவர்களை நியமித்திருக்கிறது.

திருமதி த. ந. ஆனந்தநாயகி : தலைவரவர்களே, அரசாங்கம் ஒருவரை நியமித்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் ரெஜிஸ்டிரார் ஆப் கோவாப்பரேட்டிவ் சொசைட்டீஸ் பலரை டைரக்டர்களாக நியமிக்கலாம் என்று அறிகிறேன். அப்படி அவரால் நியமிக்கப்படுகிறவர்களுக்கு என்ன குவாலிஃபிக்கேஷன் இருக்கவேண்டும் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அரசு வேறு. பதிவாளர் வேறு. அவர் நியமனம் செய்வது, கடன் வாங்குபவர்களான சிறிய விவசாயிகள், அதாவது 2½ ஏக்கர் நன்செய் அல்லது 5 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளவர்களில், 3 பேரும், தாழ்த்தப்பட்டவர்களில் 3 பேரும், மலை ஜாதியினரில் ஒருவரும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, would there be nomination for ladies in such banks? The Government support the minorities and the weaker section and so I think the women must have representation in such banks?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, does the hon. Member think that ladies form a weaker section?

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்த இயக்குநர் பட்டியலில் முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, பட்டியல் என்னிடம் இல்லை. ஆனால் இயக்குநர் பட்டியலில் முஸ்லிம்கள் சிலரின் பெயர்களைப் பார்த்ததாக நினைவு இருக்கிறது.

மாண்புமிகு போலைவத் துணைத் தலைவர் : வினா எண் 54-யும் 65-யும் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம்.

அரசுப் பேருந்துகளில் பயணக் கட்டணங்கள்

* 54 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசாங்கம் சமீபத்தில் பல் கட்டணத்தை உயர்த்தியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதனால் எதிர்பார்க்கப்படும் வருவாய் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மாவட்டங்களில், போக்குவரத்துத் துறை நடத்தும் பேருந்துப் பணிகளைப் பொறுத்த வரையில், பயணக்கட்டண விதமானது, 1—10—71 முதல், கிலோ மீட்டர் ஒன்றுக்கு 2½ காசிலிருந்து 3 காசாகத் திருத்தியமைக்கப்பட்டது. போக்குவரத்துத் துறை நடத்தும் விரைவுப் பேருந்துப் பணிகளைப் பொறுத்தவரையில் பயணக் கட்டண விதமானது 1—1—72 முதல் கிலோமீட்டர் ஒன்றுக்கு 3.125 காசிலிருந்து 4 காசாகத் திருத்தியமைக்கப்பட்டது.

(இ) கட்டண விதங்களை மாற்றியமைத்ததின் பயனாக, ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 114 லட்சம் துறைக்குக் கிட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

* 55 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether it is a fact that enhanced fare in State Transport from 1st January 1972 has affected the collections; and

(b) if so, the steps proposed for restoring the collection level?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ)—ஆம், வசூல் தொகை உயர்ந்துள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இவ்வளவு அதிகமான லாபம் வருவதாகச் சொன்னார்கள். அதனால் இப்போது விரைவு பேருந்துகள் புதிதாக வாங்கப்பட்டு, சிறந்தமுறையில் பராமரிக்கப்பட்டு வருவதுபோல் குறைந்த தூரம் செல்லுகின்ற பேருந்துகளுக்கும் புதுவண்டிகள் கொடுத்து, பிரயாணிகளுக்கு வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, 114 லட்சம் ரூபாய் வருமானம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்போது 'ஆமினி பஸ்கள்' ஹை கோர்ட்டின் முடிவினால் மீண்டும் ஓடத் தொடங்கியிருக்கின்றன. அதனால் நம்முடைய வருமானம் பாதிக்கப்படுமல்லவா ? அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறது ?

[1972 ஆகஸ்ட் 10

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஆமினி பஸ்கள் விடப்படாமல் இருப்பதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அவர்கள் குறிப்பிட்டதுபோல் கோர்ட்டின் தற்போதைய உத்தரவினால் ஆமினி பஸ்கள் மீண்டும் ஓடத் தொடங்கியிருக்கின்றன. கோர்ட்டிலே வழக்கு முடிந்ததும், போக்குவரத்துத் துறை இதிலே தீவிர கவனம் செலுத்தும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கட்டண உயர்வினால் ஒரு கோடி ரூபாய்க்குமேல் வசூல் கூடியிருக்கிறது. ஆகவே அந்த வருவாயில் அந்தத் துறையில் பணியாற்றும் தொழிலாளருக்கு ஒரு பங்கு கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பொதுவாக வருமானத்தில் பங்கு கொடுப்பதில்லை; லாபத்தில்தான் பங்கு தரப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, உதகையிலிருந்து மைசூருக்கும் கள்ளிக்கோட்டைக்கும் செல்லும் பஸ்களில் சரியாக டிக்கட்டுகள் கொடுப்பதில்லை. அங்கு சரியான செக்கிங் கிடையாது. அதை பரிசீலிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, குறிப்பிட்ட புகார் இருக்குமானால், அதை உறுப்பினர் அவர்கள் எழுதி அனுப்புவாரானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இப்போது கட்டண உயர்வு செய்யப்பட்டாலும், மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது நமது மாநிலத்தில்தான் குறைவாக இருக்கிறது. அதனால் அண்டை மாநிலங்களில் கட்டணம் எவ்வளவு வசூலிக்கப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் குறைந்த கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அண்டை மாநிலமான ஆந்திராவில் கூட ஜூன் மாதம் ஒன்றும் தேதியிலிருந்து சாதாரண பஸ்ஸுக்கு 4 காசு வசூல் செய்கிறார்கள். எல்லா தென் மாநிலங்களிலும் பொதுவான ஒரு கட்டணம் வசூலிக்கப்படுவது குறித்து, போக்குவரத்து துறை அமைச்சர்கள் மட்டத்தில் விவாதிக்கப்பட இருக்கிறது.

1972 ஆகஸ்ட் 10]

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இப்போது கட்டண உயர்வினால் வருமானம் அதிகரித்திருப்பதாகச் சொன்னார்கள். இப்போது நம்முடைய அரசாங்கப் பேருந்துகள் குற்றாலத்திற்கும், மதுரைக்கும் செல்லும் வழித்தடத்தில் அரசாங்கப் பஸ்களைவிட தனியார் பஸ்களில் ரூ. 1¼, 2 குறைவாக வசூல் செய்யப்படுகிறது. அதனால் சில சமயங்களில் அரசாங்கத்தின் வருமானம் மிகவும் குறைவாக இருக்கிறது. எனவே, தனியார் பஸ்களிலும் அரசாங்கப் பஸ்களிலும் ஒரேவிதமான கட்டணம் வசூலிக்கப்படுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரைவு பேருந்தைப்பற்றி குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். சாதாரணப் பேருந்துகளில் ஒரேவிதமான கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதாவது 3 காசு கட்டாயம் வசூலிக்கிறார்கள். ஆனால் விரைவு பேருந்துகளைப் பொறுத்தவரையில் 50 சதவீதம் உச்சக் கட்டணமாக 4 காசு வசூலிக்க வேண்டும். ஆனால் தனியார் பஸ்களில் 3½ பைசா வசூலிப்பதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: தனியார் நடத்துகிற ஆம்னி பஸ்கள் வசதியாகவும், கவர்ச்சியாகவும் இருப்பதுபோல் நமது அரசாங்கம் நைட் பஸ்களை வசதியாகவும், கவர்ச்சியாகவும் செய்யாது, நாங்கள் எப்படி வேண்டுமானாலும் ஓட்டுவோம். தனியார் பஸ்களை ஓட்டக்கூடாது. வரி மட்டும் வாங்கிக் கொள்வோம் என்பது வரவேற்கத்தக்கதுதானா என்பதைச் சிந்தித்தார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நான் இந்த மன்றத்தில் ஏற்கனவே தெரிவித்ததைப்போல நம்முடைய பஸ்களில் வசதிகளை அதிகப்படுத்த பலவிதமான செயற்குறிப்புகளை வைத்திருக்கிறோம். அம்மையார் அவர்கள் கவர்ச்சியைப் பற்றிச் சொன்னார்கள். அது அவரவர்கள் மனநிலையைப் பொறுத்தது.

திரு. ரா. ரா. முனுசாமி: அரசாங்கப் பேருந்துகள் இருக்கும் இடத்திற்கே தனியார் பஸ்களைக் கொண்டுவந்து பயணிகளை ஏற்றிக்கொள்கிறார்கள். அதற்கு நமது அரசாங்கப் பேருந்துகளைச் சேர்ந்த சிப்பந்திகளும் உடந்தையாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்களே அது உண்மையா? மதுரை மாநாட்டின்போதே பார்த்தோம். அரசாங்க பஸ்கள் நிற்கும் இடத்திற்கே ஆம்னி பஸ்களைக் கொண்டுவந்து பயணிகளை அழைத்து ஏற்றிக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை மாற்ற அரசாங்க பேருந்து நிலையத்திலே பிரச்சாரம் செய்து டிக்கெட் சேகரிக்க சர்க்கார் உதவி ஆட்களை நியமிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் கூறிய புகாரை அரசாங்கம் நிச்சயம் கவனிக்கும். தனியார் பஸ்களை விட்டு வைத்திருந்தால் அவர்கள் எதுவும் செய்வார்கள் என்பதற்கு இது ஒரு அடையாளம்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : சர்க்கார் பேருந்துகளுக்கு அதிகம் வருமானம் உள்ள ஒரு பகுதி திண்டுக்கல்லாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். இந்தத் திண்டுக்கல்லில் பயணிகள் தங்குவதற்கும், நிர்வாகிகள் தங்குவதற்கும் சரியான வசதி இல்லை. அங்கே அந்த வசதியையும், வாய்ப்பையும் செய்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் கருத்தை அரசாங்கம் உணர்ந்து திண்டுக்கல்லில் மட்டும் அல்ல—அரசாங்க விரைவுப் பேருந்துகள் தொடுகிற முக்கியமான நகரங்களில் எல்லாம் முக்கியமான வசதிகளோடு முடியுமானால் பயணிகள் தங்கும் விடுதிகளைக் கூட கட்டுவதற்கான செயற்குறிப்பு இருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : அரசாங்கம் ஒரு கிலோ மீட்டருக்கு 2½ பைசாவில் இருந்து 3 பைசாவாக உயர்த்திய காரணத்தினால் தனியார் பஸ்களிலும் கூட 3 பைசா என்ற அளவுக்கு உயர்த்திவிட்டார்கள். முன்பு 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு 40 பைசா என்று வசூல் செய்த தனியார்கள் கூட இப்போது 45 பைசா என்ற அளவுக்கு வாங்க ஆரம்பித்து விட்டார்கள். இதைக் குறைக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் என்பதைப் போலத்தான் நாம் உயர்த்தியவுடன் அவர்களும் உயர்த்திவிட்டார்கள். போகப் போக அவைகள் எல்லாம் நம் கைக்கு வந்துவிடும்.

திரு. எம். சுரேந்திரன் : அரசாங்கம் எந்தத் தொழிலை நாட்டுடைமையாக்கினாலும் மக்களுக்கு அதிக வசதி, கட்டணக் குறைவு ஏற்படும் என்றுதான் எல்லோரும் எதிர்பார்ப்பார்கள். மாறாக நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் என்பதாக—அரசாங்கம் உயர்த்தி அதனால் தனியார்களும் உயர்த்தியிருக்கிறார்கள் என்பது நாட்டுடைமைக் கொள்கைக்கு நல்ல அறிகுறியா என்று அறிய விரும்புகிறேன். பாண்டியன் கார்ப்பரேஷனில் டி.வி.எஸ் முறைப்படி டிக்கெட் போட்டவுடன் கண்டெக்டர்கள் அந்தக்கணக்கை டிரைவர்களிடம் கொடுக்கின்ற முறை இருக்கிறது. இந்த வழக்கத்தை மற்ற பகுதிகளிலும் பின்பற்றினால் வசூல் குறைந்து போகாமல் தடுக்க உதவியாக இருக்காதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கட்டணத்தைப் பொறுத்த வரையில் குறைந்த கட்டணம் தமிழ்நாட்டில் தான் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவார்கள். போக்குவரத்து கழகங்களின் நடைமுறைகளைப் பொறுத்தவரை—இப்போதே திறமையாக நடைபெற்றுவருகிற காரணத்தினால் அவர்கள் முடிவுக்கே விட்டுவிடலாம். அநாவசியமாக நாம் தலையிட வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : இப்போது போக்குவரத்துத் துறையில் லாபம் அதிகம் வருவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே நீண்ட தூர விரைவு பஸ்களை—ஏர் கண்டிஷன் சூப்பர் எக்ஸ்ப்ரஸ்—போட முயற்சி செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதிகமான லாபம் வருவதாக நான் சொல்லவில்லை. நஷ்டம் இல்லாமல் இருக்கிறது என்றுதான் சொன்னேன். ஏர் கண்டிஷன் எக்விப்மெண்டு வெளிநாட்டில் இருந்து வர வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் அதுபற்றி இப்போது ஒன்றும் செய்வதற்கில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : அமைச்சர் அவர்கள் கட்டணத்தைப் பற்றிச் சொல்லும்போது மற்ற மாநிலங்களைவிடக் குறைவாக இருக்கிறது என்றார்கள். கட்டணத்தை மட்டும் ஒப்பிடுவதோ, மொத்த வருவாய், ஓவர்ஹெட் சார்ஜஸ், பல்வேறு செலவினங்கள் போன்றவற்றையும் ஒப்பிட்டு கட்டணத்தை நிர்ணயிப்பதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கட்டணத்தை தருவது பொது மக்கள், அண்டை மாநிலத்தைவிட நம் மாநில மக்களது வாழ்க்கைத்தரம் எந்த வகையிலும் குறைந்துவிடவில்லை என்று நினைக்கிறேன். குறைந்திருப்பதாக வாதாட மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : என்னுடைய கேள்வி கட்டணத்தை நிர்ணயிக்கும்போது—அண்டை மாநில கட்டணத்தோடு மட்டும் ஒப்பிட்டு நிர்ணயிப்பதா ? அல்லது வேறுபலவற்றையும் சேர்த்துக் கணக்கிட்டு நிர்ணயிப்பதா என்பதாகும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பல்வேறு விஷயங்களையும் கணக்கிட்டுத்தான் நிர்ணயிக்கிறோம். நான் சொன்னது கட்டணத்தைக் கொடுப்பவர்கள் நம் மக்கள்—அவர்களது தாங்கும் சக்தி அண்டை மாநிலக்காரர்களைவிட குறைந்தது அல்ல என்பதுதான்.

THIRU K. M. SUBRAMANIAM: Although the Hon. Minister stated that the bus fares in other States is higher than in Tamil Nadu State, will be realise that the cost of living and pay scales in Bombay and Calcutta are higher and the citizens of Madras have to pay more or less the same rate as in Bombay? Since the profit is high, will the Hon. Minister consider the reduction of freight in Madras City particularly where middle-class people use the buses for going to offices and where the cost of living is going up like anything?

THE HON. THIRU S. RAMACHANDRAN: As far as Madras City is concerned, the services are run by Pallava Transport Corporation which is yet to make a profit. The question of reduction of fare does not arise since the corporation is not making profit even now. What I mean by the increase from $2\frac{1}{2}$ to 3 P is not exactly an increase. Even before the mofussil operators were at liberty to charge upto 3 P. Most of the private operators have been charging at 3 P and upto 3 P. What we have done now is, that it has been regularised as at 3 P and instead of upto 3 P.

திரு. ஏ. சுவாமிதாஸ்: கன்னியாகுமரி மாவட்டத்தில் கேரளா வண்டிகளும் ஓடுகின்றன. 24 கிலோமீட்டருக்கு மேல் என்கிறபோது அவர்கள் மினிமம் 20 பைசாதான் வாங்குகிறார்கள். நம்முடைய வண்டிகளில் 30 பைசா வாங்குகிறார்கள். கேரளா வண்டிக் கட்டணத்தைப்போல மினிமம் 20 பைசா என்று குறைக்க நம் அரசு முன்வருமா? இதுபற்றி ஏற்கனவே நான் கேட்டபோது இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அது அரசின் பரிசீலனையில் உள்ளது என்று நான் ஏற்கனவே தெரிவித்த பதில்தான் இதற்கும் பொருந்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு சட்டப் பேரவையின் 6 (1)-வது விதியின்படி கீழ்க்கண்ட உறுப்பினர்களைப் பேரவையின் மாற்றுத் தலைவர்களாக நான் நியமிக்கிறேன்.

1. திரு. என். கணபதி.
2. திரு. என். டென்னில்.
3. திரு. ஆ. கு. சுப்பையா.
4. திரு. கே. ஏ. வகாப்.
5. திரு. நா. வீராசாமி.
6. திருமதி. த. ந. அனந்தநாயகி.

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ் நாடு, 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 51/71.)

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Mr. Speaker, Sir, I rise to present the Report of the Select Committee on the Tamil Nadu General Sales Tax (Fifth Amendment) Bill, * 1971 (L.A. Bill No. 51 of 1971).

(ஆ) தமிழ் நாடு, 1972-ம் ஆண்டு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1972-ம் ஆண்டு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவை நான் இந்தப் பேரவையின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

---

* Published in the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated 20th October 1971.

(இ) 1972-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 1972-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவை நான் இந்தப் பேரவையின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

(ஈ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு, நியாய வாரம் கொடுத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டிப்பு) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1972-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு, நியாயவாரம் கொடுத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டிப்பு) சட்டமுன்வடிவை நான் இந்தப் பேரவையின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இச் சட்டமுன்வடிவை அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

(உ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1972-ம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவை நான் இந்தப் பேரவையின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இச் சட்டமுன்வடிவை அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு, 1972-ம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு, 1972-ம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை இப்பேரவை முன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஊ) தமிழ் நாடு, 1972-ம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1972-ம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை நான் இந்தப் பேரவையின் திருமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இச் சட்டமுன்வடிவை அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

(எ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த சட்டமுன்வடிவை நான் இந்தப் பேரவையின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இச் சட்டமுன்வடிவை அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

(ஏ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்த சட்ட முன்வடிவு

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1972-ம் ஆண்டு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்த சட்டமுன்வடிவை நான் இந்தப் பேரவையின் திருமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

(ஐ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளை (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1972-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளை (திருத்த) சட்டமுன்வடிவை நான் இந்தப் பேரவையின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோரு கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இச் சட்டமுன்வடிவை அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

4. அறிக்கை அளித்தல்

கால்நடை மருத்துவக் கல்லூரி குறித்து.

Statement under rule 82

MR. SPEAKER : The Hon. Minister for Health will now make a statement under rule 82 of the Assembly Rules.

* THE HON. THIRU K. ANBAZHAGAN : Mr. Speaker, Sir, with your permission, I wish to make the following statement in the House.

Even though the Veterinary College was officially closed on the 28th of March 1972, the academic programmes and training for the B.V. Sc. students were continued beyond the date, for example (*a*) facilities were provided to write the University Examination for the regular April batch students numbering 489, (*b*) facilities were provided for the October batch of students numbering about 249 for continuing their farm training which is part of their curriculum at the various farms during the summer vacation. But the students did not avail of the opportunity. On the other hand they have stated that they will not come to the college or write the examination unless the parity of pay is announced by the One-Man Commission.

The Government is still however keen in helping the students to pursue their academic programme. The University has permitted all the students who have registered for the April 1972 examination to re-appear for the next examination without another application and payment of fees. The next examination is scheduled to be held from September 15, 1972. The Government

[Thiru K. Anbazhagan] [1972 ஆகஸ்ட் 10

will provide all facilities for the above 489 students including hostel accommodation if required from September 1, 1972 to get themselves ready for the examination on September 15th, on condition that the students send a letter of joint declaration by parent and candidate that they will not involve themselves in any activities that will be considered as indiscipline as per rules and regulations of the institution.

The Government will further make arrangements for completion of the farm training which is a part of their curriculum for the 249 October batch of students during September 15th to December 15th in two batches and when the farm training is over they can have the additional one term requirements of academic training in the college during January to March 1973 and be eligible for their next University Examination which will commence from 1st April 1973. Here again, the parents and students should send in their declaration in the printed form that will be made available at the college. This is necessary so that the authorities can get ready for giving the farm training.

It is the students' responsibility however to request the University Authorities to conduct the examination from September 15, 1972. Otherwise the University may be under the impression that the students will continue to boycott the examination and they would not be prepared to make preliminary arrangements for conducting the examination on September 15th.

The question regarding the pay is a separate issue and it has been referred to the One-Man Commission and it may take its own time and these two should not be clubbed along with the academic programme of students.

As regards the new admissions in 1972, the Government feels that the admissions will go on with immediate effect. Students who are selected will be intimated by registered post and they will be admitted from 16th August and classes will commence from the 21st or 22nd August 1972.

1972 ஆகஸ்ட் 10]

5. நடைமுறைக் கேள்வி

திருமதி த. ந. அனந்தநாயகி அவர்கள் சேர்ந்துள்ள கட்சியின் பெயர் குறித்து

திரு. நா. வீராசாமி: ஆன் ஏ பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார், தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் திரு. பொன்னப்ப நாடார் தலைமையிலே இயங்கிக் கொண்டிருந்த காங்கிரஸ் கட்சியிலிருந்து திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் வேறு ஒரு கட்சிக்கு மாறிவிட்டதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அந்தக் கட்சிக்கு ஏதாவது பெயர் இருக்கிறதா என்பதையெல்லாம் இந்த அவைக்கு அறிவித்தால், சட்டமன்ற உறுப்பினர்கள், என்னைப் போன்றவர்கள், பேசுகிற நேரத்தில் 'ரெஃபர்' செய்வதற்கு அனுகூலமாக இருக்கும். ஆகவே, இதை மன்றத்திலே அறிவிக்காமல் இருப்பது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி அனந்தநாயகி அம்மையார் மட்டும் அல்ல, இந்தச் சட்டமன்றத் தொடரில் இன்னும் பிரஜா சோசலிஸ்டு கட்சி என்று இருந்த கட்சியும் மாறி, இங்கு தமிழ் நாடு லெஜிஸ்லேச்சர் காங்கிரஸ் பார்ட்டி என்ற பெயரிலே புதிதாக ஒரு கட்சி வந்திருக்கிறது. அந்தக் கட்சியைக் கூட நான் புதிதான கட்சி என்று சொல்ல மாட்டேன். இதனால் எனக்கே ஒரு குழப்பமான நிலை ஏற்பட்டிருக்கிறது. இங்கே இரண்டு காங்கிரஸ் கட்சிகளைச் சிருஷ்டித்திருக்கிறார்கள். தற்போது திரு. வீரபாகு தலைமையிலே வெளியிலே இருக்கிற காங்கிரஸ் கட்சிக்கு என்ன பெயர் என்று எனக்குத் தெரியாது. ஆனால் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி அலுவலகத்திலிருந்து தமிழ்நாடு லெஜிஸ்லேச்சர் பார்ட்டியிலே இன்னவர்கள் எல்லாம் சேர்ந்திருக்கிறார்கள் என்று கடிதம் வந்திருக்கிறது. திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்கள் அதற்குத் தலைவராகவும், திருமதி அனந்தநாயகி அவர்கள் துணைத் தலைவராகவும், தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், மற்றும் அந்தக் கட்சியின் உறுப்பினர்களாகத் திருவாளர்கள் சுப்பிரமணியம், சுரேந்திரன், காசிராமன், குமாரசாமி ஆகியோர்கள் இருப்பதாகவும், அவர்களுடைய கட்சி அலுவலகத்திலிருந்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதோடு திரு. மாரிமுத்து அவர்களும் அப்படித்தான் தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே அவர்களும் தங்கள் பார்ட்டியைத் தமிழ்நாடு லெஜிஸ்லேச்சர் காங்கிரஸ் பார்ட்டி என்று அழைக்கவேண்டுமென்று கோடுத்திருக்கிறார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தமிழ்நாடு லெஜிஸ்லேச்சர் காங்கிரஸ் பார்ட்டி என்றுதான் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இரண்டும் ஒரே மாதிரியாக இருக்கிறது. இதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்களைத் தனியாகக் கூப்பிட்டு நான் கேட்கலாம் என்று கருதிக்கொண்டிருந்தேன்,

இரண்டு பார்ட்டிகளும் ஒரே கட்சியாக இயங்குகிறார்களா என்று தெரியவில்லை, இப்படியிருந்தால் குழப்பம்தான் வரும். எனவே இப்பொழுதே கூட அந்தக் குழப்பத்தைத் தீர்த்துவிடலாம். இந்திரா காங்கிரஸ் கட்சி என்று இந்தச் சபையில் எந்தக் கட்சியும் இல்லை. இந்திய காங்கிரஸ் கட்சி என்றும் இல்லை. தமிழ் நாடு லெஜிஸ்லேச்சர் காங்கிரஸ் பார்ட்டி என்ற பெயரால்தான் இரண்டு கட்சிகளும் இருக்கின்றன. வெளியே எப்படியிருந்தாலும் அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் சட்ட மன்றத்தைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட குழப்பம் கூடாது. ஆகவே, திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் திருமதி அனந்தநாயகி அவர்களும் எடுத்துத் தெரிவிக்கலாம். அந்தக் கட்சிகளுக்கு சபாநாயகர் பெயர் சூட்டவேண்டியதில்லை. அவர்களே பெயர்களைத் தெரிவித்து விட்டால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, may I clarify the position? The Supreme Court has decided that the Congress led by Dr. Shankar Dayal Sharma is the Indian National Congress. If the hon. Member, Thiru Ponnappa Nadar wants to call it Congress, he can call it Congress (O). (An hon. Member : At that time Dr. Shankar Dayal Sharma was not the President of the Indian National Congress). To-day Dr. Shankar Dayal Sharma is the leader of the Indian National Congress. Our Congress is a limb of the Indian National Congress. We call it as the Congress Legislature Party in Tamil Nadu. They can call it Congress (O) or some other name.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்களை என்ன பெயர் சொல்லி அழைக்கலாம் என்பதையும் நீங்கள் சொல்லுங்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : This is a limb of the Congress Party. It is called Tamil Nadu Congress Legislature Party.

(Thiru V. Krishnamoorthy : We can call it ''Anandanayaki Congress ').

THIRU R. PONNAPPA NADAR : I was amused to hear from Thirumathi T. N. Anandanayaki that the verdict had been given by the Supreme Court by which they have got the absolute right to call themselves as the Congress. So far as we are concerned, we fought the elections on the Congress ticket and we got a

separate election symbol. Now some hon. Members have joined or defected to some other party and now they are trying to dictate to us. I do not want to cast any aspersion against that defection but they cannot dictate to us. We have got the mandate of the people and we have been known as such a party throughout and so there is no need to change our name. I think our Congress goes in the name of the Organisation Congress. There is no harm in calling ourselves as the Tamil Nadu Congress Legislature Party (organisation) and that would be the most fitting name and also there shall not be any difficulty. I do not think that we are one even though we may have joined together so far as the No-Confidence Motion is concerned. For other purposes we are a separate entity and legal entity and so it is not up to the hon. Member to say that our name should be changed.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Mr. Speaker, Sir, I am sorry. I have been misundersood by the hon. Member, Thiru Ponnappa Nadar. I have not stated that they should change their name. I only stated that our name is Tamil Nadu Congress Legislature Party. It is up to them to have the same name or change it.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு பேர்களும் இன்னும் குழப்பத்தைத் தீர்க்கவில்லை என்று கருதுகிறேன். எனக்கு, இருக்கிற கவலை எல்லாம் காங்கிரஸ் 'ஓ'வா அல்லது காங்கிரஸ் 'ஆர்'ரா என்பதல்ல. வெளியிலேயும் நீதி மன்றத்திலும் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனால் சட்டமன்றத்தைப் பொறுத்த வரையில் தெளிவாக இருக்க வேண்டும். அனந்தநாயகி அம்மையார் அவர்களும் தமிழ்நாடு லெஜிஸ்லேச்சர் காங்கிரஸ் பார்ட்டி என்று குறிப்பிடுகிறார்கள். பொன்னப்ப நாடார் அவர்களும் அதே பெயரைத்தான் குறிப்பிடுகிறார்கள். எனவே, மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்தாமல் தெளிவாக்குகின்ற முறையில் பெயரிட்டால் நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இந்தச் சபையில் இடம் பெற்றிருக்கிறது. ஆனால் அவர்கள் தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி என்று குறிப்பிடவில்லை. அதே மாதிரி சுதந்திரா, பார்வார்ட் பிளாக் போன்ற இந்தியக் கட்சிகளும் 'தமிழ்நாடு' என்று சேர்த்துக் கொள்ளவில்லை. இரண்டும் தமிழ்நாடு சட்டசபை காங்கிரஸ் கட்சிகள் என்று இருந்தால்—நாங்கள் தெரிவித்ததைப்போல்—குழப்பந்தான் ஏற்படும். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இருக்கின்ற கட்சியை ஸ்தாபன காங்கிரஸ் கட்சி என்றும்

திரு. மாரிமுத்து அவர்கள் இருக்கின்ற கட்சியைத் தேசியக் காங்கிரஸ் கட்சி என்றும் அழைப்பதுதான் பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒத்துக்கொண்டு பிறகு முதலமைச்சர்தான் பெயர் வைத்து விட்டார் என்று சொல்லக்கூடாது. எனக்கு இருக்கிற கவலையெல்லாம் தெளிவான முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதுதான். திருமதி அனந்தநாயகி அவர்களும் 'நாங்கள்தான் காங்கிரஸ் கட்சி' என்கிறார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் 'நாங்கள் தான் காங்கிரஸ் கட்சி' என்று சொல்கிறார்கள். 'ஓ' என்று போட்டுக் கொள்ளட்டும் என்று சொல்கிறார்கள். 'ஓ' என்று போட்டுக் கொள்வதால் பிரச்னை தீர்ந்து விடாது. வெளியிலே வழக்குமன்றங்களிலே எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனால் சட்டப் பேரவைத் தலைவருக்கு அந்தத் தலைவலியை ஏற்படுத்தும் அவசியம் இல்லாமல் தீர்ப்புச் சொல்லக்கூடிய முறையில் பெயர்களைப்பற்றி முடிவு தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, we call as Congress (O) from the very beginning and now a peculiar point of order has been raised. I do not think that there is any merit in the contention of the hon. Member. Now some of the Members of our Party have seceded or defected from us and they cannot now say that our name should be changed. The suggestion made by the Hon. Chief Minister seems to be acceptable and that is also the suggestion which I have already made.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I have no objection. They can call themselves as Organisation Congress Legislature Party. So far as our Party is concerned, we call ourselves as the Tamil Nadu Congress Legislature Party. There is no difference of opinion whatsoever in regard to this matter. The Hon. Speaker is trying to. . .

THIRU K. M. SUBRAMANIAM : Sir, we stood on the ticket of the Indian National Congress and we won. Now somebody has gone to the other party which was born within the Legislature and not voted by the electorate. The hon. Lady Member has referred to the decision of the Supreme Court but whatever it is, they cannot shine by taking up the name of the Indian National Congress and that party has no direct root in the

electorate. Some Members of the Socialist Party rebelled against their Party as also some other Members of other parties and they have joined the Congress (R). Congress (R) means Congress (Rebels) or the Ruling Party. They can call themselves as Congress (R).

THIRU R. PONNAPPA NADAR : They defected from us.

THIRU V. KRISHNAMOORTHI : I may submit to the Hon. Speaker that this is not new. This sort of dispute has come in Parliament. It has happened in Parliament also. They called one as Congress led by Indira Gandhi and the other as Congress led by somebody else. That was how the proceedings were conducted for more than 8 months in Parliament. If we call the one as Congress led by Thiru Ponnappa Nadar and the other as Congress led by Thiru Marimuthu, then that may be the convenient form for us to address and to make comments.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : This is after Supreme Court decision.

THIRU R. PONNAPPA NADAR : There is absolutely no confusion at all.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்த இடத்திலே இல்லாத குழப்பத்தை உண்டாக்குவதற்காக முயற்சிப்பதுபோல் தோன்றுகிறது. எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் அவர்கள் முன்பிருந்த நிலையைச் சொன்னார்கள். இப்பொழுது நாடாளுமன்றத்திலும் காங்கிரஸ்—ஓ என்றும், இந்திய தேசிய காங்கிரஸ் என்று இதையும் அழைக்கிறார்கள். எனவே குழப்பம் இல்லை, வெளியிலேயும் குழப்பம் இல்லை, இன்னும் கொஞ்ச நாளைக்குக் காங்கிரஸ்—ஓ என்றுதான் இருக்கும். குழப்பம் இல்லாமலேயே அது நடைபெற்றுக்கொண்டு இருக்கும். ஆகவே அங்கு அறிவிக்கப்பட்ட பெயரிலே பொன்னப்ப நாடார் காங்கிரஸை காங்கிரஸ்—ஓ என்று அழைக்கலாம். அதோடு குழப்பமும், பிரச்னையும் தீர்ந்துவிட்டது. அதோடு இதனை விட்டுவிட வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுதுள்ள சந்தேகம் எல்லாம் உங்கள் கட்சியை, தேசிய காங்கிரஸ் என்று அழைப்பதிலே என்ன தவறு? தமிழ்நாடு காங்கிரஸ் சட்டசபைக் கட்சி என்று அழைக்க வேண்டுமென்றால் சட்டசபையை விட்டு வெளியில் இல்லையா? தேசிய காங்கிரஸ்

என்பதில் உங்களுக்கும் பெருமையாகத்தானே இருக்கும். எனவே இதைத் தேசிய காங்கிரஸ் என்று அழைத்தால் பேசும் உறுப்பினர்களுக்கும் வசதியாக இருக்கும் என்றுதான் சொன்னேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தேசிய காங்கிரஸ் என்று அழைப்பதற்குத் தடையில்லை. குறிப்பாகப் பல மாகாணங்களில் இந்தக் கட்சி இருப்பதாலே தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு காங்கிரஸ் லெஜிஸ்லேச்சர் பார்ட்டி என்று அழைக்கலாம். இந்திய தேசிய காங்கிரஸ் என்று அழைக்கப் படுவதிலே தடையில்லை. அதுதான் உங்களுக்கு விருப்பமென்றால் தாராளமாக அழைக்கலாம். அதற்குத் தடையில்லை.

THIRU K. M. SUBRAMANIAM : The people who stood for recent election stood in the name of Indian National Congress. That is the party that is governing in many States and so they naturally call themselves as Indian National Congress, since the vote of the people has been given by the people on that. Here how can these people come and say they are 'Indian National Congress'. They did not stand on the ticket of Indian National Congress. A new party has suddenly been formed and they call themselves as 'Indian National Congress'. I am not able to understand this. It is a serious matter because tomorrow things may happen which may affect the ruling party. It is serious matter, I mean, the naming of parties. I think in order to avoid confusion, you can call us as Congress (O) and you can call them as Congress (R) (Rebel). That is what could be done so far as Tamil Nadu is concerned. In other States, they contested the election as Indian National Congress led by Indira Gandhi and won. So naturally they are called Indian National Congress. But here it is different. They did not contest the election like that, as Indian National Congress led by Indira Gandhi. So, is it right and fair for them to be called as Indian National Congress?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : In 1967 we all fought the election under the Indian National Congress. Later on the split came in 1969. Many opted for leadership of Indira Gandhi? Did they all seek re-election now? Nobody sought re-election then, including the leader Kamaraj? They did not seek re-election. They changed seats and occupied different seats.

THIRU R PONNAPPA NADAR : In this one subject the ruling party has succeeded in creating a breeze in this House. I do not want to create any further breeze. I say the problem

may be set at rest now and may be taken up on some other day so that the matter may be discussed calmly instead of ventilating our grievances and accusing each other and shouting at each other. That may not be in good taste. I would once again say that the trap of the ruling party is there. I do not want to commit myself to any decision in this matter. That may be in the Chamber of the Hon. Speaker. So far as we are concerned we can be called as Congress (O).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரு விளக்கம் அறிய விரும்புகிறேன். திரு. சுப்பிரமணியம் அவர்கள் பேசும்பொழுது தேசிய காங்கிரஸ் கட்சி என்று சொல்லும்பொழுது காங்கிரஸ்—ஓ இருக்கிறவரையில் அந்தப் பெயரிலேயே இருக்கட்டும் என்று சொன்னார்கள். அது எந்தக் கால வரையறையைக் குறிப்பிடுகிறார்கள் என்று தெரியவில்லை. இன்னும் 3, 4 ஆண்டு களில் சட்டசபைத் தேர்தல்கள் நடப்பதற்குள்ளாக அவர்களும் இவர்களோடு சேர்ந்துவிடுவார்கள் என்ற கருத்தில் சொன்னார்களா என்று எனக்குப் புரிய வில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இங்கே சட்டமன்றத்தைப் பொறுத்த வரையிலும் சட்டமன்றத்திலே கட்சிகளை என்ன பெயரில் அழைப்பது என்ற பிரச்னை எழுந்தது. ஆனால் வெளியிலே கட்சி என்னென்ன ஆகும் என்பது ஒவ்வொரு கட்சியையும் பற்றி யோசிக்க ஆராய வேண்டிய பிரச்னை. அதைப் பற்றி இங்கே ஆராய வேண்டிய அவசியமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதோடு திரு. பொன்னப்ப நாடார் அவர் களுடைய இந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொண்டு இந்தப் பிரச்னையை இப்பொழுது நிறுத்திவிட்டு, நன்றாக ஆலோசனை செய்து சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆனால் இடையிலே ஒரு தீர்ப்பைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதுமாதிரி வெளியிலே காரியங்கள் கட்சிகளிலே இருக்கலாம். ஆனால் சட்டமன்ற நடை முறைக்காக மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கருத்தைத் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அம்மையார் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இப்படி இங்கே சண்டை போட்டுக்கொண்டிருந்தால் இது அழகு மட்டுமல்ல, பொதுமக்கள் திருப்திக்கக்கூடிய இடமும் அல்ல என்ற வகையில் அதற்குச் சரியான பெயர் வருகின்ற வரையிலே திரு. பொன்னப்ப நாடார் காங்கிரசை பொன்னப் நாடார் அவர்கள் தலைமையில் இருக்கும் காங்கிரஸ் என்றும், அதேமாதிரி திரு. மாரிமுத்து அவர்கள் தலைமையில் இருக்கும் காங்கிரஸ் என்றும் இந்தச் சட்டமன்றத்திலே அழைக்கப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்

THIRU R. PONNAPPA NADAR : The word 'Organisation Congress' may be there. We fought the election on that and won. With due deference I say that we may be called as Congress (O). That would be in the fitness of things.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I agree if we are called as Indian National Congress as stated by the Chief Minister. The Hon. Speaker said I am creating some dispute. That is not correct. We are under Indian National Congress and what we said was that we may be called as 'Tamil Nadu Legislature Congress'. You can call us Indian National Congress and you can call them as Congress (O). The whole problem is solved.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை முதலிலேயே சொல்லியிருந்தால் விவகாரமே முடிந்து போயிருக்கும். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் தலைமையில் இருக்கும் காங்கிரசை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னதைப்போல் காங்கிரஸ்—ஓ என்றும் ஸ்தாபன காங்கிரஸ் என்றும் மற்றது தேசிய காங்கிரஸ் என்றும் இந்த மன்றத்தைப் பொறுத்தவரை அழைக்கப்படுவதாக நீங்கள் ஒத்துக்கொண்டிருப்பதாக நான் அறிவிக்கிறேன்.

6. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானமும், அமைச்சரவையின் தனியொரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின் மீதும் விவாதம் தொடரும். இன்று இரண்டாம் நாள். திரு. தங்கமணி அவர்கள் தமது பேச்சைத் தொடர்வார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், நேற்றைய தினம் விவசாயப் போராட்டம் சம்பந்தமான சில சம்பவங்களைப்பற்றி நான் குறிப்பிட்டேன். இன்றைக்கு நான்கைந்து அம்சங்களை மட்டும், எப்படி அரசு தவறு செய்தது என்பதை வலியுறுத்தலாம் என்று நினைக்கிறேன். 5-ம் தேதி பந்த், சூன் 29-ந் தேதி போராட்டக்குழுவினால் முடிவு செய்யப்பட்டது அரசுக்குத் தெரியும். அதற்குப் பிறகு அரசு இந்த பந்தை நடத்த விடக்கூடாது என்ற நோக்கத்தோடு கலெக்டர்கள் மாநாடும், 2 ஆம் தேதியன்று ஆளுங்கட்சி எல்லாயிடங்களிலும் கூட்டங்களை நடத்த வேண்டுமென்ற முறையிலே ஏற்பாடு செய்தார்கள். இந்த நேரத்தில் பார்வர்ட் பிளாக் கட்சியின் தலைவர் திரு. முக்கையா தேவர் அவர்கள் எடுத்த முயற்சி நல்ல முயற்சிதான். அவர் தங்க

னுடைய அறைக்கு இரண்டு கட்சியினரையும் அழைத்திருந்தால் அது நல்ல முறையிலே இருந்திருக்கும். அதற்கு மாறாக அவர் மூலமாக முதலமைச்சரவர்கள் சொல்லிவிட்டார்களோ என்னவோ தெரியவில்லை. அதை மேலும் சிக்கலாக்கிவிட்டது.

5-ம் தேதி அன்று நடந்த சம்பவங்களைப் பற்றி அரசு கொடுத்திருக்கக்கூடிய குறிப்பின் அடிப்படையிலே சில விவரங்களை நான் சொல்லலாம் என்று நினைக்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் முக்கையா தேவர் அவர்களோடு ஒரு தனி இடத்தில் பேசியது போல, எங்களையும், விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்களையும் அழைத்துப் பேசியிருப்பார்களேயானால், அவர்களும் வந்திருப்பார்கள். ஆனால் இல்லை. . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விவசாயிகளின் பிரதிநிதிகள் கோட்டையில் வந்து என்னுடன் பேச விரும்பவில்லை என்று தங்கள் பேச்சின் மூலமாகப் புரிந்து கொள்ளவேண்டியிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : நேரிடையாக முதல் அமைச்சர் அவர்கள் அழைத்திருக்கலாம். அப்படி அழைப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை என்று தகவல் ஏற்பட்டுவிட்டது. ஏற்கெனவே அழைத்து வந்தார்களே, அப்பொழுது பார்க்க மறுத்து விட்டார்கள். இரண்டு கட்சிப் பிரச்னையாகிவிட்டது. அதற்குப் பிறகு மூன்றாவது ஒருவரை விட்டு அழைக்காமல், அவரே அழைத்திருந்தால் கண்டிப்பாக வந்திருப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வந்தார்கள், பார்க்க மறுத்தேன் என்பதற்கு என்ன ஆதாரம், என்ன சான்று காட்டுகிறீர்கள்?

திரு. கே. டி. கே. தங்கமணி : எனக்குப் பின்னால் பேசக்கூடியவர்கள் இந்த விவரங்களை சொல்வார்கள். நான் கேட்டுச் சொன்னால் அது ஹியர் சேயாக இருக்கும். நேரில் சம்பந்தப்பட்டவர்களே அதைப்பற்றி சொல்வார்கள். அவர்கள் சொல்வது உண்மையா, முதல் அமைச்சர் அவர்கள் சொல்வது உண்மையா என்று சபை முடிவு செய்யட்டும். மக்கள் முடிவு செய்து கொள்ளட்டும்.

5-ம் தேதி பந்தை நடத்த விடக்கூடாது என்பதற்காகத் திட்டம் போடப்பட்டு 2-ம் தேதி கூட்டங்களில் என்ன பேசப்பட்டது என்பது அரசுக்குத் தெரியும். இங்கு வந்திருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கும் தெரியும். 5-ம் தேதி நடந்த சம்பவங்களை ஒட்டி துப்பாக்கிப் பிரயோகங்கள் பற்றி அவர்களே ஒத்துக்கொண்ட விவரத்தைச் தான் சொல்கிறேன். பெத்துநாயக்கன்பாளையத்தில் 9 பேர்கள், ஐயம்பாளையத்தில் 2 பேர்கள், கோவில்பட்டியில் ஒருவர்,

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 ஆகஸ்ட் 10

சாத்தூரில் ஒருவர், மானமதுரையில் ஒருவர், விருதுநகருக்கு அருகே ஒருவர் ஆகியோர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தினால் கொல்லப்பட்டனர். இதைத் தவிர போலீஸ் லத்தி சார்ஜினால் இறந்தவர்கள் இருவர். அரசாங்கத்தினுடைய கணக்குப்படி வரக்கூடிய விவரம் 15, 16 பேர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தினால் செத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அரசாங்கத்தின் கணக்குப்படி என்று சொன்னீர்கள். வேறு உங்களுடைய கணக்குப்படி ஏதாவது இருந்தால், வேறு ஏதாவது பெயர்கள் வைத்திருந்தால், அந்த விவரத்தையும் சொன்னால், அவர்களுக்கும் நிதி தருவதற்குத் தயாராக இருக்கிறேன். நீங்கள் கொடுத்த மனுவின் அடிப்படையில் பேசப்பட்ட அளவிலே, பேசப்பட்டதையொட்டி பெயர் கொடுக்கப்பட்டவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 5,000 நிதி கொடுக்கப்பட்டது. உங்களுடைய கணக்குப்படி வேறு யார் யார் இறந்தார்கள் என்று சொன்னால் அவர்களுக்கும் நிதி வழங்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அதற்கான விவரங்களைக் கொடுப்பதற்குத் தயார். விவரங்கள் இருக்கின்றன. விளாத்திக்குளத்தில் சம்பவத்தையொட்டி படுகொலை செய்யப்பட்டவர் ஒருவர். துப்பாக்கிப் பிரயோகத்தில் அடிபட்டு பின்னால் இறந்தவர் ஒருவர். விவரங்களைக் கொடுக்கத் தயார். ஆனால், துப்பாக்கி பிரயோகம் நடந்த முறை எப்படி? அது அவசியம் தானா? அப்படி அவசியம் இல்லை என்று சொன்னால் அரசு எடுத்த நடவடிக்கை சரிதானா? என்னுடைய பாயிண்டு அதுதான். நான் டிடையில்ஸ்க்குள் போக விரும்பவில்லை. அரசுக்குக் கிடைத்திருக்கக்கூடிய விவரங்களைப் போல கிட்டத்தட்ட நானும் விவரங்கள் வைத்திருக்கிறேன். அந்த இடங்களுக்கு நானும் சென்று வந்துள்ளேன். இறந்தவர்களின் வீடுகளில் போய்ப் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். நான் மட்டும் தனியாகப் போய்வரவில்லை. என்னோடு பல சட்ட மன்ற உறுப்பினர்கள் வந்தார்கள். உறுப்பினர்கள் திரு. சுரேந்திரன், திரு. ஜெயராம் ரெட்டியார், திரு. சுப்பு ஆகியோர் வந்திருந்தார்கள், அதே மாதிரி தான் திரு. மோகன் குமாரமங்கலமும் வந்திருந்தார். திரு. காமராஜ் சென்ற இடங்களை நானும் பார்த்திருக்கிறேன். நான் நேரடியாகப் பார்த்துத்தான் சொல்கிறேன். விஷயம் என்னவென்றால், துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது நியாயம்தானா என்பதைப் பற்றி நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துப்பாக்கிப் பிரயோகத்தால் இறந்தவர்கள் குறித்து இப்பொழுது கணக்குக் கொடுத்தீர்கள். அரசு கொடுத்திருக்கும் கணக்கிற்கும், அதற்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா? இரண்டும் ஒத்து வருகிறதா?

1972 ஆகஸ்ட் 10]

திரு. கே. டி. கே. தங்கமணி: அந்தக் கேள்விக்கு நான் நேரடியாகப் பதில் சொல்ல விரும்பவில்லை. நான் பேசக்கூடிய முறையில்தான் நான் பேச வேண்டும். இப்படித்தான் நான் பேச வேண்டும் என்று என்னை யாரும் கட்டாயப்படுத்துவதற்கு அதிகாரம் இல்லை. இதில் விஷயம் என்னவென்றால் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது நியாயம் தானா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கேட்கவில்லை. நான் ஆர்வத்தோடு கேட்கிறேன். ஆவலோடு கேட்கிறேன். அரசுத் தரப்பில் கொடுக்கப்பட்டிருக்கிற கணக்கைவிட உங்கள் கணக்கில் அதிகமான விவரங்கள் கிடைத்திருக்கிறதா? கவலையோடு கேட்கிறேன். அப்படி ஏதாவது இருந்தால், பெயரைச் சொன்னால் அவர்களுக்கும் நிதி வழங்குவதற்குத் தயாராக இருக்கிறேன். இரண்டு கணக்கும் ஒத்து வருகிறதா? அல்லது உங்கள் கணக்குப்படி அதிகமாக வருகிறதா?

திரு. கே. டி. கே. தங்கமணி: அது வெளியே வைத்து பேசித் தீர்க்கக்கூடிய விஷயம். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சுட்டது அவசியம்தானா என்பது தான் பிரச்னை. சுட்டதில் 9 பேர் இறந்தார்களா அல்லது 10 பேர்கள் இறந்தார்களா என்பது அல்ல. சுட்டது தப்பு என்பது தான் பிரச்னை. சுட்டது தப்பு என்றால், ஒருவரைச் சுட்டார்களா அல்லது மூன்று பேர்களைச் சுட்டார்களா என்பதைப் பற்றி வாதம் செய்வதில் பயனில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அரசாங்கம், பல பேர்கள் செத்திருக்கும்பொழுது, இவ்வளவு பேர்கள்தான் செத்தார்கள் என்று குறைவாகக் கணக்கு கொடுத்தால் அது தவறு—அரசாங்கம் மோசடியில் ஈடுபடுகிறது, அரசாங்கம் உண்மையை மறைக்கப் பார்க்கிறது என்று நினைக்க இடம் ஏற்படும். ஆகவே தான் தயவு செய்து கேட்கிறேன், அரசாங்கத்தினுடைய கணக்கும், உங்கள் கணக்கும் ஒத்து வருகிறதா, இல்லையா என்று சொல்ல வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பெத்துநாயக்கன்பாளையத்தில் முதலில் நான்கு பேர்கள் என்று சொன்னது அரசு. அதற்குப் பின்னால் அது 7 பேர்கள் ஆனது. அதற்குப் பின்னாலே 9 பேர்கள். முதலில் போலீஸ் ஸ்டேஷன் தாக்கப்பட்டதாக சொன்னார்கள். அதனால்தான் துப்பாக்கிப் பிரயோகம் என்று அரசு அறிக்கை வந்தது. அந்த ஊரில் போலீஸ் ஸ்டேஷனே இல்லை. அதைப் பின்னாலே அரசே அறிந்துகொண்டது. இதெல்லாம் நடந்த விஷயங்கள். இப்பொழுது நீங்கள் கொடுத்திருக்கின்ற விவரங்களை எற்றுக்கொண்டு பேசுகிறேன். 9 பேர்கள் இறந்துவிட்டார்கள் என்று அறிவித்திருக்கிறீர்களே, அந்த 9 பேர்களும் பெத்தநாயக்கன் பாளையத்தில் சாகவேண்டியது அவசியம்தானா. அந்தக்

காரியங்கள் நடந்தது நியாயம் தானா? பெத்துநாயக்கன்பாளையம் ஒரு சிறு கிராமம். அதிலே போலீஸ் ஸ்டேஷன் கிடையாது. அவுட் ஸ்டேஷன் கூட கிடையாது. போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னால் கூட, அங்கே போலீஸ் ஸ்டேஷன் வந்துவிட முடியாது. அப்பேர்ப் பட்ட ஒரு இடத்தில் நடந்த சம்பவம் இருக்கிறதே, அது எப்படி நடந்தது. கண்மூடித்தனமாக சுடப்பட்டது அங்கே என்பதற்கு ஒன்றிரண்டு உதாரணங்கள் சொல்கிறேன். அவர்கள் அங்கே பெரிய ஆயுதங்களோடு வந்து விடவில்லை விவசாயிகள் தங்களுடைய மாட்டு வண்டிகளோடு வந்துவிடவில்லை. விவசாயிகள் தங்களுடைய மாட்டு வண்டிகளோடுதான் வந்தார்கள். மாட்டு வண்டிகளுடைய சக்கரங்களை எடுத்துக்கொண்டு போவதற்கு முயற்சி செய்ய, பிறகு பேச்சு வார்த்தை நடக்க, பேச்சு வார்த்தை நடந்து போலீஸ்காரர்கள் லாரியில் ஏறிக்கொண்டு போகக்கூடிய நிலைமைதான். போலீஸ் லாரியில் போகும்பொழுது சுட்டுக்கொண்டே போயிருக்கிறார்கள். உள்ளேயிருந்து சுட்டதால் யாரைச் சுடுகிறோம் என்பது கூடத் தெரியாமல் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படி அவர்கள் சுட்டதால் ஒரு எருமை மாடு இறந்தது. பக்கத்தில் ஒரு ஹோட்டலுக்கு உள்ளேயிருந்த இரு பெண்மணிகள் காயமடைந்தார்கள். சுட்ட முறை எப்படி? லாரியிலிருந்துகொண்டு சுடுகிறார்கள். ஆகவே, மேல்நோக்கித்தான் சுட முடியும். பாதிக்கப்பட்டவர்கள் அத்தனை பேர்களுக்கும் நெஞ்சுக்கு மேல் தான் காயம். போலீஸ் கோட்பாடு காலுக்குக் கீழே தான் சுட வேண்டும். பல உறுப்பினர்கள் இதைப்பற்றி ஏற்கனவே பேசியிருக்கிறார்கள். அண்ணா அவர்கள் பேசியிருக்கிறார்கள்

'only when it is a question of shoot to kill, shooting will be above the chest.'

15, 20, பேர்களில் ஒருவர் இருவருக்குத்தான் காலில் காயம், மற்றவர்களுக்கெல்லாம் 'எபவ் தி செஸ்டு' தான் காயம். படுகொலை செய்யவேண்டுமென்று திட்டமிட்ட முறையிலே படுகொலை நடந்திருக்கிறது. ஆகவே தான் எங்கள் கட்சியின் சார்பாகச் சென்ற மதிப்பிற்குரிய தலைவர் டாக்டர் அகமத் அவர்களும் ஆளும் கட்சியைச் சேர்ந்த காட்கில் அவர்களும் அவர்களுக்குப் பின்னால் சென்ற மோகன் குமாரமங்கலம் அவர்களும், அவர்களுக்குப் பின்னால் சென்ற திரு. கல்யாணசுந்தரம் அவர்களும் இது ஒரு ஜாலியன்வாலா பாக் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த இடத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

'Venmani tragedy was a black spot for the first D.M.K. Ministry and Peddanaickenpalayam is another black spot for the second D.M.K. Ministry'.

என்று குற்றம் சாட்டுகிறேன். பெத்து நாயக்கன்பாளையத்தில் நடந்தது நியாயம் தான் என்று மக்களுக்கு நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையது. எப்படி நிரூபிக்கவேண்டும் என்பதைப் பற்றி பின்னால் சொல்கிறேன். இன்றைக்கு நிரூபிப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை. ஏதாவது ஒரு காரணம் சொல்லி, அதற்குரிய விசாரணையை நடத்தவில்லை. இறந்தவர்கள் 19 வயது, 20 வயது, 25 வயது இப்படித்தான் இறந்திருகிறார்கள். பல ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் இறந்திருக்கிறார்கள். அரிஜனங்களாக இருக்கலாம், படையாச்சியாக இருக்கலாம், நாயக்கராக இருக்கலாம். பல ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் அவர்கள். ஒரே துப்பாக்கிப் பிரயோகத்தில் இறந்தார்கள் என்ற முறையில் 7 பேர்களும் ஒருவர் பக்கத்தில் ஒருவர் வைக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஜாதி உணர்ச்சியைத் தூண்டுகிறேன் என்று யாரும் சொல்ல வேண்டாம். அதைத் தூண்டிவிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அது நேராதவாறு ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுவேன்.

எனக்கு இந்த நேரத்தில் 1946-ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு சம்பவம் தான் நினைவிற்கு வருகிறது. அப்போது மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் சம்பந்தமாக நடைபெற்ற சம்பவங்களில் கோவை சின்னியம்பாளையத்தில் நான்கு தொழிலாளர்களுக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. நாளைக்குத் தூக்கிலிடப் போகின்றார்கள் என்றால் இன்று நாங்கள் போய் அவர்களைப் பார்க்கிறோம். அவர்கள் சொன்னார்கள், 'நாங்கள் நால்வரும் ஒரே இயக்கத்தினைச் சேர்ந்தவர்கள், எனவே தூக்கிலிட்ட பிறகு எங்கள் பிணங்களை ஒரே குழியில் போட்டு புதைக்க வேண்டும்', என்று கேட்டுக்கொண்டார்கள். அதுபோன்றே அவர்கள் அடக்கம் செய்யப்பட்டார்கள் என்பதை இந்தச் சட்டமன்றத்தின் முன்னால் பெருமையுடன் சொல்லிக்கொள்ளுவேன். அது போன்றே இப்போது ஐயம்பாளையத்தில் நடந்தது. இது பல்லடத்தினருகில் பாதைக்குச் சற்று தள்ளியுள்ள ஒரு சிறு கிராமம். அங்கே எந்த விதமான ஹர்த்தால் நடைபெற்று இருக்கமுடியும்? அங்கே ஒரு பஸ்சை நிறுத்தியிருக்கின்றார்கள். இது சம்பந்தமாக டிரான்ஸ்போர்ட் அமைச்சர் அவர்களும் இதைக் கவனத்தில் கொள்ளுவது நல்லது. அந்த பஸ் எம். டி. சி. 9989. அது பொள்ளாட்சி—திருப்பூருக்குப் போய்க்கொண்டிருக்க வேண்டிய பஸ் அது இங்கே எப்படி வந்தது என்பது விசாரிக்கப்பட வேண்டிய ஒன்று. அந்த வண்டியிலிருந்து பெட்ரோலை எடுத்து மாட்டு வண்டிகளுக்குத் தீ வைத்தார்கள். அது போன்று போலீஸ் வண்டியிலிருந்தும் பெட்ரோலை எடுத்துத் தீ வைத்தார்கள். எனவே, மக்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பஸ்ஸில் பெட்ரோல் இல்லை, டீஸல் தான் இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: எனக்குக் கிடைத்த விவரம் அப்படி. இதில் டீஸல் என்றால் போலீஸ் வண்டியிலிருந்து பெட்ரோலை எடுத்திருக்கலாம். அது சிறிய விஷயம். நான் கேட்பது, அந்த பஸ் அங்கே போயிருக்க வேண்டிய அவசியம் என்ன? அந்த பஸ்ஸை அங்கே தடுத்து நிறுத்துகின்றார்கள். உடனே போலீஸ் வருகிறது. வந்து பெண்களையெல்லாம் அவமானப்படுத்துகிறார்கள். தலைமயிரைப் பிடித்து இழுத்து அவர்களை வண்டியில் போடுகின்றார்கள். மக்கள் ஆத்திரப்படுகிறார்கள். போலீசை ஏசிப் பேசுகிறார்கள். அங்கே இரண்டு பேர் சுட்டுக்கொல்லப்படுகிறார்கள். அதில் ஒருவர் மாணவர். பல்லடம் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுகிறார்கள். அதை ஊர்வலமாக எடுத்துச் செல்ல வேண்டும் என்று மக்கள் அந்த பிரேதத்தைக் கேட்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள், 'நாங்கள் உடனே அதற்கு அனுமதி வழங்கினோம்' என்று. ஆனால் அன்றைக்கு அனுமதிக்காமல் இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும் என்று தெரியாது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: என்ன ஆகியிருக்கும் என்று சொல்லுங்களேன்?

திரு. கே. டி. கே. தங்கமணி: சற்றுப்பொறுங்கள். அவசரப்படாதீர்கள். ஆனால் சாத்தூரில் படுகொலை செய்யப்பட்ட அந்தப் பிரேதத்தை ஏன் கொடுக்கவில்லை? இதற்கு முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள்? அங்கே நெஞ்சில் குறிவைத்துச் சுட்டார்களே. இறந்த அந்த சீனிவாசன் ஒரு தொழிலாளி. அவனுடைய தாயாரும் மூன்று சகோதரர்களும் 'பிரேதம் வேண்டும்' என்று கேட்டார்கள். ஆனால் அதைக் கொடுக்க மறுத்து உடனடியாக போலீஸ் அதை எடுத்துக்கொண்டு போய்க் கொளுத்தி, சாம்பலை அல்லவா தாயாரிடம் கொடுத்தார்கள்? இது நியாயம் தானா? இது பாவம் இல்லையா? ஒரு தாய் தன் பிள்ளையின் பிரேதத்தையாவது பார்க்க வேண்டும் என்றுகேட்கிறாள். ஆனால் அதைக் கொடுக்க மறுத்து, ஒரு பிடி சாம்பலைக் கொண்டுபோய் கொடுத்து இதோ உங்கள் பிள்ளையின் சாம்பல் என்று கொடுத்தால் அந்தத் தாய்க்கு எப்படியிருக்கும்?

இது போலவேதான் விருதுநகருக்குப் பக்கத்தில் நம்மாழ்வார் என்ற 19 வயது பையனைக் கொன்றார்கள். அவனுடைய பிரேதத்தையாவது கொடுத்தார்களா என்றால் இல்லை. அங்கேயும் அவனை போலீசே எரித்துவிட்டு,

பிடிசாம்பலையே கொண்டுவந்து கொடுத்த காட்சியினைப் பார்த்தோம். ஒரு பக்கத்தில் ஒன்பது பேர் படுகொலை. இன்னொரு பக்கத்தில் பிணங்களை எரித்துவிட்டு சாம்பலைக் கொடுக்கும் காட்சி.

அன்றைக்குப் பல்லடத்தில் மட்டும் பிணத்தைக் கொடுக்காமல் இருந்திருந்தால் அங்கே 500 பிரேதங்கள் விழுந்திருக்கும். அங்கே உள்ள நிலைமையைப் புரிந்துகொண்டு நீங்கள் சாமர்த்தியமாக சமாளித்தீர்கள் என்பதைத் தவிர நல்லெண்ணத்துடன் அதைக் கொடுத்தீர்கள் என்றால் அதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். எப்படி 15 ஆயிரம் மாட்டு வண்டிகள் கோவையில் வந்தவுடன் சமாளித்தீர்களோ—அது என்னுடைய குற்றச்சாட்டு—ஒரு சிக்கலான நிலைமை வந்தால் அந்த நேரத்தில் அதிலிருந்து விடுபட இறுதியான முடிவெடுக்காமல் அந்த நேரத்திற்கு ஏதோ ஒன்றைச் செய்வதால் அந்தத் தீமை மீண்டும் மீண்டும் ஏற்படுகிறது என்பதை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

சாத்தூரில் ஒரு பையன் பேரிலே குறிவைத்துச் சுட்டிருக்கின்றார்கள். 'போஸ்ட்மார்ட்டம்' செய்யும்போது கழுத்தில், நெஞ்சில்தான் காயம் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதுபோல விருதுநகரில் நம்மாழ்வாரையும் நெஞ்சில் குறிவைத்துத்தான் சுட்டிருக்கின்றார்கள்.

கோவில்பட்டியில் நடந்தது விசித்திரமான சம்பவம். அங்கே அர்த்தால் நடைபெறுகிறது. ஒரு கடை மூடப்படவில்லை. கலைமணி என்ற பெயருள்ள அந்தக் கடை, ஓட்டல், மூடப்படவில்லை. அதுவும் மூடப்படவேண்டும் என்று மக்கள் கோருகிறார்கள். ஆனால் கலைமணி ஓட்டலின் உள்ளேயிருந்து கைக்குண்டுகள் வெளியே அவர்கள் பேரிலே எரியப்பட்டன. உள்ளிருந்து ரிவால்வரால் சுடப்பட்டது. அதில் கந்தசாமி என்று ஒருவர் இறந்தார். அந்தக் கந்தசாமி போலீஸ் துப்பாக்கிச் சூட்டினால் இறந்தாரா அல்லது கலைமணி ஓட்டலிலிருந்து எரியப்பட்ட கைக்குண்டால் அல்லது சுடப்பட்ட கைத்துப்பாக்கி குண்டால் இறந்தாரா என்று ஆராயப் படவேண்டும். இதை விசாரிக்க வேண்டும் என்று நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறேன். ஏன் என்றால் இப்படி லைசென்ஸ் இல்லாத துப்பாக்கி அல்லது வெடி குண்டுகள் அங்கே எப்படி வந்தன என்பதை ஆராய வேண்டும்.

அடுத்து, மானமதுரையில் அமைதியான முறையில் கடையை அடைத்திருக்கின்றார்கள். ஆனால் ஒரு கடையில் மட்டும் ஆட்கள் உள்ளே இருந்துகொண்டு கடையை மூடவே மாட்டோம் என்று மறுக்கிறார்கள்.

[1972 ஆகஸ்ட் 10

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது பொதுவான ஒருவருடைய கடையா அல்லது கட்சிக்காரருடைய கடையா?

திரு. கே. டி. கே. தங்கமணி: அது உங்கள் கட்சிச் செயலாளருடைய கடை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கட்சிச் செயலாளருடைய கடை என்றால் அதை மூடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா?

திரு. கே. டி. கே. தங்கமணி: திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுடைய ஆதரவு இந்த இயக்கத்திற்கு இல்லை என்று எண்ணுகின்றீர்களா? பல கிராமங்களிலே திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் இந்த இயக்கத்திற்கு ஆதரவாக இருந்ததையும் பார்த்தோம். பயந்துகொண்டு சிலர் மூடியிருக்கலாம். ஆனால் பலரும் தங்களுடைய அரசு தவறு இழைக்கிறது என்று கருதி மூடியிருக்கின்றார்கள். அது விவாதத்திற்குரியது. அவர் மூட மறுத்தார், மானமதுரையில். மூடியிருந்தால் விவகாரத்திற்கே இடமில்லை. இறந்தவர் மானமதுரைத் தோழர். நான் அவர் வீட்டிற்கே சென்று விசாரித்தேன். மறுக்க முயற்சிக்க வேண்டாம். அங்கே சாத்தையா என்று ஒரு பையன் 19 வயதிருக்கும். அவனுக்குக் காலில் அடி. மருத்துவ மனைக்கு அவனை எடுத்துச் சென்று மூன்று நாட்கள் சிகிச்சை அளித்து திருப்பியனுப்பிவிட்டார்கள். இன்னும் சிறிது காலம் சிகிச்சை அளித்திருக்க வேண்டும். இல்லையென்றால் காலை எடுத்துவிட வேண்டிய நிலை ஏற்படக் கூடும்.

ஆக, துப்பாக்கியால் சுடப்பட்ட இடங்களிலே ஒரு இடத்திலாவது முதலில் கண்ணீர்புகைக் குண்டுகளை உபயோகித்தார்களா என்றால் இல்லை.

அடுத்து அருப்புக்கோட்டையில் அர்த்தால். அங்கே ஊர் பெரியவர் கிருஷ்ணசாமி ரெட்டியார் சொல்லுகிறார், ஊர் கட்டுப்பாடாக இருக்கிறது, இங்கே ஒரு விதமான தகராறும் வேண்டாம் என்று. அவரைப்போய் போலீஸ் லட்டியால் அடித்துக் கொன்றார்கள். இப்படி போலீஸ் அடக்குமுறையானாலும் சரி, அதையொட்டி சம்பவங்களானாலும் சரி, தேவைக்கு அதிகமான முறையில் போலீஸார் வரம்பிற்கு மீறிய அதிகாரத்தையும் துப்பாக்கிகளையும் உபயோகித்தார்கள், பல அக்கிரமங்கள் நடந்திருக்கின்றன என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

விளாத்திக்குளத்தில் துப்பாக்கிப் பிரயோகம் எதுவும் இல்லாமல் பெருமாள்சாமி என்பவர் வெட்டியே கொலை செய்யப்பட்டிருக்கிறார். அதையும் விசாரணை செய்ய வேண்டும்.

1972 ஆகஸ்ட் 10]

திரு. மு. இரத்தினசபாபதி: சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். திரு தங்கமணி அவர்கள் கூறுவதுபோல் விளாத்திக்குளத்தில் அந்த மாதிரியான சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. அது தவறான தகவல் என்பதை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: போலீஸ் ரிப்போர்ட் வரட்டும். வந்தபின் பார்க்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் விளாத்திக்குளம் எம்.எல்.ஏ. அந்த மாதிரி சம்பவம் எதுவும் கிடையாது என்று அவரே சொல்கிறார்.

திரு. கே. டி. கே. தங்கமணி: எனக்கு கிடைத்த விபரத்தை வைத்து நான் சொல்கிறேன். போலீஸ் ரிப்போர்ட்டில் அந்த விபரம் இருக்கலாம். போலீஸ் ரிப்போர்ட் வந்தபின் உண்மை தெரியும். இறந்தவர்களுடைய பட்டியலை கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். அதனால் எனக்குக் கிடைத்த விபரங்களை இங்கே தெரிவித்திருக்கிறேன்.

சிறையிலே இருந்து நாங்கள் வெளியே வந்த பின்னால் எங்களுக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. சோழவந்தானில் உள்ள பெரியவர் ஒருவர் கருப்பையா பிள்ளை—எங்களை வரவேற்றுப் பேசும்போது "ஜெயிலிலிருந்து நீங்கள் உயிரோடு வந்திருக்கிறீர்களே, அதற்காக உங்களைப் பாராட்டுகிறேன்" என்று சொன்னார். அதனால் ஜெயில் அதிகாரிகளை நாங்கள் குறை சொல்லவில்லை. அவர்கள் நல்லமுறையில் நடந்துகொண்டார்கள். 3,000 பேர் இருக்க வேண்டிய இடத்தில் 8,000 பேரை அடைத்து வைத்தார்கள். அதனால் ஏற்பட்ட சுகாதாரக் கேடு சொல்ல முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் சில இடங்களில் கொடிய நோய்கள் வந்திருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் அம்மாதிரியான கொடிய நோயோ காலராவோ வரவில்லை. அதனால் இங்கும் நோய்கள் வரவேண்டுமென்று நான் சொல்லவில்லை.

மதுரை சிறைச்சாலையில் குடிக்க தண்ணீர் கிடையாது. குளிப்பதற்கு இடம் கிடையாது; தண்ணீர் கிடையாது. அங்கே மலஜலம் கழிப்பதற்கு வசதி கிடையாது. மலஜலம் கழிக்கும் இடங்களில் புழுக்கள் நெளிந்ததை நாங்கள் உணவு அருந்தும்போது கூட பார்த்துக்கொண்டிருக்கவேண்டிய சங்கடமான நிலை இருந்தது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நானும் சட்ட அமைச்சரும் மதுரை சிறைச்சாலையைப் பார்த்திருக்கிறோம். 3,000 பேர் அங்கே இருந்திருக்கிறோம் ஆகையால் எங்களுக்கும் சிறைச்சாலை **அனுபவம் உண்டு; நன்றாகத் தெரியும்.**

[1972 ஆகஸ்ட் 10

திரு. கே. டி. கே. தங்கமணி: 1946-ல் ஒரு வருஷம், பின் 3 மாதம், அதன் பிறகு 3 மாதம், அதற்குப் பின்னால் ஒரு 6 மாதம், அப்புறம் ஒரு மாதம் இப்படி நான் பலமுறை சிறையிலிருந்திருக்கிறேன். ஆகவே, மதுரை சிறைச்சாலையைப் பொறுத்தவரையில் அமைச்சர்களைவிட எனக்கு அதிக அனுபவம் இருக்கும்.

கடைசியாக ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். நான் மதுரைச் சிறையில் இருந்தேன். வேலூரிலிருந்து பெரியகருப்பன் என்பவர் திருச்சி சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார். அனுப்பிய இரண்டாவது நாளில் அவர் இறந்துவிட்டார். அவருக்கு 'காஸ்டிரிக் ட்ரபிள்' இருந்தது. போதுமான சாப்பாடு சாப்பிட வேண்டும். ஜெயிலில் மற்றவர்கள் சாப்பிடாமல் இருக்கிறார்களே, நாமும் சாப்பிடாமல் இருக்கலாம் என்று நினைத்து சாப்பிட மறுத்தார். அதனால் அவர் இறந்திருக்கிறார். கோவையில் கிருஷ்ணசாமி நாயுடு இறந்திருக்கிறார். இப்படி இரண்டு பேர் கதை முடிந்துவிட்டது. அதோடு நின்றுவிட்டது சர்க்காருக்கு நல்லதாகப் போய்விட்டது. இன்னும் பலர் சிறையில் செத்திருந்தால் சிறையிலே ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கும். அரசாங்கத்திற்கு அதனாலும் கெட்ட பெயர் வந்திருக்கும்.

சிறைச்சாலை ஹெல்த் விஷயத்தை நல்ல முறையில் கவனிக்க வேண்டும் சிறையில் மேலும் சுகாதாரக் கேடுகள் ஏற்படாமல் இருந்ததற்கு—உயிர்ச் சேதங்கள் ஏற்படாமல் இருந்ததற்கு நாங்கள் நடந்துகொண்ட முறை பாராட்டத் தக்கது. நான் தற்பெருமைக்காக இதைச் சொல்லவில்லை. ஜெயில் அதிகாரிகளைவிட நாங்கள் இந்த விஷயத்தில் துரிதமாகச் செயல்பட்டோம். ஒருவருக்கு ஏதாவது வயிற்றுப்போக்கோ மற்ற அசௌகரியங்களோ ஏற்பட்டால் நாங்கள் உடனே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தோம். இரவு இரண்டு மணிக்கு ஏதாவது சம்பவங்கள் நடந்தாலும் உடனே தக்க முறையில் கண்காணித்து வந்தோம்.

நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தில் போலீஸார் வேண்டுமென்றே பலரைச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது போலீசாருக்கு, 'ஷூட் டு கில்' என்று சொல்லிக்கொடுத்திருக்கிறார்களா என்று எண்ணத் தோன்றுகிறது. 'ஷூட் டு கில்' என்ற முறையில்தான் இத்தனை பேரை சுட்டுக் கொன்றிருக்கிறார்கள் என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற இடங்களில் ஒரு நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்தினால் இந்த விபரம் தெரியவரும். நீதி விசாரணை வேண்டும் என்று சொன்னவுடனே நீங்கள் சொல்வீர்கள், 'உங்கள் போராட்டக் குழு தானே

1972 ஆகஸ்ட் 10] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற ஒரு துரதிர்ஷ்டவசமான நிலை என்னவென்றால், வெளி மாநிலத்திலிருந்து வருகிற 'பிளிட்ஸ்' பத்திரிகையில் உங்கள் எண்ணத்திற்கு மாறுபட்ட கருத்துக்கள் வந்தால் உடனே அந்த பத்திரிகை மீது கேஸ் போடுகிறீர்கள். அவர்கள் தமிழகத்தில் இருக்கிற கோர்ட் கூடாது என்று சொல்லி, வேறு கோர்ட்டுக்கு—சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்கிறார்கள். இங்கே இருக்கிற அலை ஓசை பத்திரிகை மீது வழக்குப் போடுகிறீர்கள். அவர்கள் இங்குள்ள கோர்ட் வேண்டாம் என்று சொல்லி வேறு கோட்டுக்குப் போகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை இன்று நீங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள். அதனால்தான் விவசாயப் போராட்டக் குழுவும் தமிழ்நாட்டிலுள்ள ஜட்ஜுகள் வேண்டாம் என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: போராட்டக் குழுவில் எந்த மாநில நீதிபதிகளும் வேண்டாமென்று முடிவு செய்திருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: முதலிலே 4 டிஸ்டிரிக்ட் ஜட்ஜுகளை நீதி விசாரணை நடத்துவதற்காக நீங்கள் நியமித்தபோது, 'இந்த நீதிபதிகள் வேண்டாம், சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளைப் போடுங்கள்' என்று அவர்கள் சொன்னார்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் நமது மாநிலத்திலுள்ள நீதிபதிகளின் கௌரவத்தை பாதிக்கின்ற வகையிலே பேசுகிறார்கள். நீதிபதிகள் மீது நம்பிக்கை இல்லை என்று பேசுவது அவர்களை அவமானப்படுத்துவதாகும். ஆகவே அப்படிப் பேசுவது முறையல்ல என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஜட்ஜுகள் மீது எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால் அவர்கள் நேர்மையான முறையில் நடந்துகொள்ள முடியாத அளவுக்கு இன்றைக்கு நிலைமையை உருவாக்கியிருக்கிறீர்களே என்பதற்காகத் தான் வெளி மாநில ஜட்ஜுகள் வேண்டுமென்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரவர்கள் தமிழ்நாட்டிலே உள்ள நீதிபதிகள் தமிழக அரசுக்கு சார்புடையவராக இருப்பவர்கள் என்பதற்காகத்தான் வெளி மாநில நீதிபதிகள் வேண்டும், என்பதாகச் சொன்னார்கள். சில பத்திரிகைகள் அதனால்தான் வெளி மாநில நீதிமன்றங்களுக்குச் செல்கின்றன என்றும் சொன்னார்கள். அதேமாதிரி வெளி மாநில நீதிபதிகள் அவர்களுக்கு சாதகமாக நடந்துகொள்ளச் செய்க

திரு. கே. டி. கே. தங்கமணி: அப்படி இருக்கலாம். இந்த விஷயத்தில் அதற்குமேல் நான் செல்ல விரும்பவில்லை. நீதிவிசாரணை வேண்டுமா வேண்டாமா என்பதுதான் கேள்வி. சீதை தவறு செய்துவிட்டாள் என்று ஒருவர் சொல்கிறார். அவள் தவறு செய்யவில்லை என்பதை நிரூபிப்பதற்காக ஒரு பரீட்சை வைக்கப்பட்டது. அதேமாதிரி நீங்கள் நீதிவிசாரணை வைத்து, நீங்கள் குற்றமற்றவர்கள், தவறு செய்யாதவர்கள் என்று காட்டிவிடுங்கள். அண்ணா பாணியிலே சொல்லவேண்டுமானால், நீதிவிசாரணை வைத்து உங்களைப் புனிதமானவர்களாக ஆக்கிக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) முதுகளத்தூர் கலவரம் நடந்தபோது அண்ணா அப்படிச் சொன்னார்கள். ஆனால் நீங்கள் நீதிவிசாரணை இல்லை என்று சொல்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்போது அண்ணா அவர்களும், கல்யாணசுந்தரம், சசிவர்ணத்தேவர், மூக்கையாத்தேவர் ஆகியோரும் நீதிவிசாரணை வேண்டுமென்று கேட்டும்கூட, முடியாது என்று சொல்லி விட்டார்கள். எடுத்ததற்கெல்லாம் நீதிவிசாரணை வைத்தால் பிறகு போலீசார் கலவரம் நடக்கும் இடத்திற்கே போகமாட்டார்கள் என்று அந்நாள் நிதியமைச்சர் இந்நாள் இந்திய தொழிலமைச்சராய் இருக்கின்ற சி. சுப்பிரமணியம் அவர்கள் காமராஜருக்குப் பதிலாக இந்த மன்றத்தில் முழங்கினார்கள். அதை ஒருவரும் மறந்துவிடவில்லை. ஆனால் இப்போது நாங்கள் நீதிவிசாரணை வைத்தும், நீதிவிசாரணை வேண்டாம், எங்களை விட்டுவிட்டால் போதும் என்று சொல்லிவிட்டார்கள். அதனால்தான் நீதிவிசாரணை கைவிடப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த துப்பாக்கிப் பிரயோகம் . . .

DR. H. V. HANDE: Sir, on a point of order. I think the Hon. Chief Minister is entitled to give a correct version of what had happened in the meeting.

There are about 3,000 persons on whom all sorts of cases have been foisted. I mentioned how innocent persons have been booked under Railway Act. . . . .

MR. SPEAKER: What is the point of order?

DR. H. V. HANDE: The Chief Minister said that it was not possible to release them and that if at all he had to release them, we must waive the right of judicial enquiry. I think the Hon. Chief Minister is entitled to tell us what exactly happened.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் இன்னும் சொல்கிறேன். வழக்குகள் இருக்கிற நிலைமையில் வழக்குகளை வாபஸ் பெறுவது என்றால் நீதி விசாரணை நடத்துவது இயலாது போய்விடும் என்று தெரிவித்தேன். அப்படியானால் நீதி விசாரணை வேண்டாம் என்று திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் தான் சொன்னார்கள். நான் பெருமையோடு சொல்லிக்கொள்வேன். அதைக் கடைசிவரை ஆட்சேபித்தவர் திரு. ஹாண்டே அவர்கள்தான். அவர்கள் கட்சியைச் சேர்ந்த ஆட்கள் சிறையில் அதிகம் இல்லை. பிறகு திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் திரு. ஹாண்டே அவர்களுடன் கிட்டத்தட்ட பத்து நிமிஷம் பேசி, இதற்குச் சம்மதிக்க வைத்தார்கள்.

DR. H. V. HANDE: It is wrong. Number of persons from our party went to jail from every district. I think the Hon. Chief Minister has no right to give an untruth, incorrect statement to the House.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உங்களுடைய ஆட்கள் இல்லவே இல்லை என்று சொல்லவில்லை. அதிகம் இல்லை என்றுதான் சொன்னேன். இன்னும்கூட ஸ்தாபன காங்கிரசைச் சேர்ந்த திரு. இராமச்சந்திரன் அவர்கள் அவர்களது கட்சியைச் சேர்ந்தவர்கள் 19 ஆயிரம் பேர் இருந்ததாகத் தெரிவித்திருக்கிறார்கள். மொத்தம் சிறையில் இருந்ததே இருபதாயிரம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: 25 ஆயிரம் பேர் சிறையில் இருந்தார்கள்.

DR. H. V. HANDE: Majority was from Congress (O). I agree.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பத்தொன்பதாயிரம் பேர் ஸ்தாபன காங்கிரஸ்—பிறகு கம்யூனிஸ்ட் கட்சி, பிறகு விவசாயச் சங்கம், பிறகு சுதந்திராக் கட்சிக்காரர்கள்—ஆக இவர்கள் எல்லோருமே கட்சிக்காரர்கள், விவசாயிகள் அல்ல என்பது இப்போது புலனாயிற்று.

THIRU K. T. K. THANGAMANI: As I have already stated I do not want to gain any debating point. This is not a debating society. In the Assembly I want to place certain facts.

திருமதி த. ந. அனந்தநாயகி: சிறையில் இருபத்தைந்தாயிரம் பேர் இருந்தார்கள் என்றால் யார் யார் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பு எடுக்கப்படவில்லை. என் கட்சியைச் சேர்ந்தவர் பத்தொன்பதாயிரம், என்பதாக எல்லாம் சொல்லிக்கொள்வது அவரவர்களாகச் சொல்லிக்கொள்கிற ஒன்றுதான். இதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அம்மையார் அவர்கள் விஷயம் தெரிந்தவர்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. இராமச்சந்திரன் அவர்களுக்கு அவர்கள் விளக்கம் கொடுத்ததாக நான் ஏற்றுக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : I accept.

திருமதி த. ந. அனந்தநாயகி : இதை வைத்து எங்களுக்குள் பிளவை ஏற்படுத்தமுயல வேண்டாம். சிறையில் அரசாங்க சார்பில் யார் யார் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதாகக் குறிப்பு எடுத்தார்களா? எதை வைத்து அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இத்தனை பேர், இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இத்தனை பேர் என்று சொல்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அங்களுக்குள் புதியதாகப் பிளவை ஏற்படுத்த விரும்பவில்லை. பிளவு இருக்கிறது.

திரு. க. சுப்பு : இன்ன இன்ன கட்சிக்காரர்கள் என்பதனால் அவர்கள் விவசாயிகள் அல்ல என்று புலனாகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கட்சிக்காரர்கள் என்றால் வேலையற்றவர்களா? விவசாயிகளாக இருக்கக் கூடாதா? தொழிலாளர்களாக இருக்கக்கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

The hon. Member Thiru K. T. K. Thangamani may finish his speech in ten minutes.

THIRU K. T. K. THANGAMANI : I may be given the time taken by interruptions.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று 40 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். இப்போது 30 நிமிடம் பேசியாகிவிட்டது. இன்னும் ஒரு பதினைந்து நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்வது நல்லது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இதில் உள்ள முக்கியமான விஷயம் இதுதான். முதுகுளத்தூர் சம்பவம் பற்றி நீதி விசாரணை இல்லை என்பதை நாம் எல்லோரும் கண்டித்தோம். இன்றைக்கு இதுபற்றி நீதி விசாரணை வேண்டாம் என்று அவர்களே ஒப்புக்கொண்டுவிட்டார்கள் என்கிற வாதத்தைச் சொல்லி, எங்கள் கை கட்டப்பட்டுவிட்டது என்று விட்டுவிடவேண்டாம். எந்ததிலையில் அவர்கள் நீதி விசாரணை வேண்டாம் என்கிற முடிவுக்கு வர நேர்ந்தது என்பதை உணர்ந்து நம்மைப் புனிதப்படுத்திக்கொள்ளவாவது எல்லா இடங்களுக்குமாகச் சேர்த்து ஒரு நீதி விசாரணையை நடத்திவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீசைத் தாக்கினார்கள், துப்பாக்கிப் பிரயோகம் செய்யாது என்ன செய்வது என்கிற வாதம் சரியல்ல. எவ்வளவு போலீஸ்காரர்கள் காயம் அடைந்தார்கள் என்கிற விவரத்தையும் சேகரித்துப் பார்க்கலாம். என் சொல்கிறேன் என்றால் மதுரை மகாநாட்டில் "போலீஸ்காரர்களைத் தாக்கி காயம் ஏற்படுத்தினால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யாமல் என்ன செய்வார்கள்?" என்பதாக ஒரு பெரும் தலைவர் பேசினார். இறந்தவர்கள் குடும்பத்திற்கு ஐயாயிரம் நிதி உதவி அளித்தோம் என்று சொல்லிக் கொள்ளலாம். இவ்வளவு பெரிய மதுரை மகாநாட்டில் இறந்தவர்களுக்கு ஒரு சின்ன அனுதாபம் தெரிவிக்கப்பட்டதா? இல்லையே. மாநகராட்சியில் ஒருவர் தான் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். கொண்டு வந்தவரே விரட்டி அடிக்கப்பட்டார். இதைப் பார்க்கும்போது மனிதப்பிறவி உணர்ச்சி இல்லாதது கண்டு நான் பெரிதும் வேதனைப்படுகிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். காயம் பட்டவர்கள் விவரம் எல்லாம் வைத்திருக்கிறேன். நேரம் இல்லாத காரணத்தினால் அதற்குள் நான் போகவில்லை.

அடுத்து 2, 3, 5 தேதிகளில் செக்ஷன் '120-பி—

When two or more people join together to do an unlawful thing by unlawful means, it is conspiracy.

என்கிற இந்தப் பிரிவுப்படி எத்தனை பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள்? அதுவும் 120-6 ரெயில்வே ஆக்ட் படி—ரெயில்வே லைன் இல்லாத மேலூர், களக்காடு, திருப்பத்தூர், பாளையம், கூடலூர் போன்ற இடங்களில் எல்லாம் அந்த ஊருக்கு என்பது மைல், அறுபது மைல் தள்ளி ரெயில் லைன் இருக்கிற இடங்களில்—அந்த ஊர்க்காரர்கள் ரெயில்வே லைனில் விஷமம் செய்ததாக அரஸ்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுபற்றி திருநெல்வேலி பக்கம் வந்திருந்தபோது அவரிடம் 6—8—1972-இல் மகஜர் கொடுக்கப்பட்டது. இதில் இருந்து என்ன தெரிகிறது? சம்பவம் நடக்கிற இடத்தில் எப்.ஐ.ஆர். தயாரிக்க வேண்டியது—மாஜிஸ்ட்ரேட்டிடம், போலீஸ் டிபார்ட்மெண்டு இங்கே இருந்து எப்.ஐ.ஆர். தயாரித்து அனுப்புவது—அதை வைத்து அங்கே உள்ளவர்களை எல்லாம் பிடித்துப்போடுவது என்பது மிகமிகப் பரிதாபகரமான ஒன்று. உத்தமபாளையம், கூடலூர் இங்கெல்லாம் இப்படிப்பட்ட கைதுகள் நடந்திருக்கின்றன.

conspiracy to do an act under section 126 of the Railway Act.

இது சரியல்ல. இதைச் செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். பின்னர் அரசினர் சொல்லக்கூடிய வாதங்களுக்கு இப்போதே ஒரு விளக்கம் ஒன்றைக் கொடுக்கலாம் என்று கருதுகிறேன். இங்கே பார்த்தால் எங்களைக்

கவிழ்க்க முயற்சி நடப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் வடக்கே உள்ள பத்திரிகைகள் எல்லாம் எங்களை ஆதரிக்கின்றன என்கிறார்கள். வடக்கே உள்ள பத்திரிகைகள் என்ன ஸ்டேட்மென்ஸ்—டாட்டா பத்திரிகை, ஹிந்துஸ்தான் டைம்ஸ்—பிர்லா பத்திரிகை, டைம்ஸ் ஆப் இந்தியா—தாஹூர் ஜெயின், இந்தியன் எக்ஸ்பிரஸ்—கோயங்கா—இந்தப் பத்திரிகைகள் எல்லாம் மத்திய சர்க்காரைத் தாக்கி மாநில சர்க்காரைக் கவிழ்க்கப் பார்ப்பதாக எழுதுவது நமக்குப் புரியாதது அல்ல. இந்திய சர்க்கார் மனுபொலியை ஒழிக்க நடவடிக்கை எடுக்கிறது. முழு அளவில் அவர்கள் இறங்கிவிடாதிருக்க இவர்கள் இந்தமாதிரியான தாக்குதலை நடத்துகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இங்குள்ள 'தினமணி' பத்திரிகை விவசாயிகள் போராட்டத்தை ஆதரித்து எழுதியிருந்தபோது, அது எந்த ஏழை நடத்துகிற பத்திரிகை என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தமிழிலே வந்தாலே தகராறு வரும் என்றுதான் ஆங்கிலப் பத்திரிகைகளைப் பற்றி சொன்னேன். இந்த மாதிரி நீங்கள் கேட்பீர்கள் என்று எதிர்பார்த்துதான் இண்டியன் எக்ஸ்பிரஸ் என்று சொன்னேன். இவர்கள் தான் ஆதரித்தார்கள் என்று . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தினமணி தான் தமிழ்ப் பத்திரிகை. இந்த பத்திரிகையை எந்த ஏழை நடத்துகிறார்?

THIRU K. T. K. THANGAMANI: Please do not disturb me. I referred only to the established newspapers run by big monopolists.

அதுதான் என்னுடைய பாயிண்ட். அதற்குப் பதில் 'இல்லாவிட்டால் டைவர்ட் பண்ணுகிறீர்கள். இந்த விவசாயப் போராட்டம் நடக்கிறபொழுது, உங்கள் தீர்ப்புக்கு என்ற தலைப்பிட்டு ஒரு விளம்பரம் வந்திருக்கிறது. மதுரையிலிருந்து வெளிவருகிற ஜூலை மாதம் 13-ம் தேதிய தினமணி பத்திரிகையிலே, 'விவசாயிகள் கோரிக்கைகளுக்கு முக்கிய காரணங்களும் அதற்கான காரணங்களும் பின்வருமாறு' என்று வந்திருக்கிறது. தமிழ்நாடு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநரால் வெளியிடப்பட்டது என்று வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளைக் கூட விளக்குவது தவறு என்றால், அதல்லாமல் வேறு என்னதான் அவர்களுக்கு வேலை என்று கருதுகிறீர்கள்?

திரு. கே. டி. கே. தங்கமணி: அது எந்த அளவுக்கு வந்தது என்று சொன்னால், மதுரையிலே கட்சி மாநாடு நடத்துகிறபொழுது, பேனர்கள் மூலமும் அரசால் வெளியிடப்பட்டு, தமிழ்நாடு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநரால் வெளியிடப்படுகிறது என்று போட்டு, சீல் வைத்து . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்த விளம்பரங்களைக் கம்யூனிஸ்டு கட்சி மாநாட்டிலே அங்கு வருபவர்களுக்குக் கொடுப்பதற்கும் அரசு தயாராக இருக்கிறது. எங்கெங்கே கூட்டங்கள் நடக்கின்றனவோ அங்கே எல்லாம் அவைகளைக் கொடுக்க அரசு தயாராக இருக்கிறது. அந்தக் கூட்டங்கள் கம்யூனிஸ்டு கட்சிக் கூட்டங்களாக இருந்தாலும் சரி, சுதந்திராக் கட்சிக் கூட்டங்களாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சி கூட்டங்களாக இருந்தாலும் சரி, அவர்கள் விரும்பினால், அவைகளைக் கொடுக்கச் செய்தித் துறை தயாராக இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இதை ஒரு முறையாக செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய பாயிண்ட். இப்பொழுது இந்தமாதிரி நீங்கள் செய்துகொண்டிருக்கிறீர்கள் என்றுதான் சொல்கிறேன். பின்னால் பதில் அளிக்கும்பொழுது வேறு சில விஷயங்களைச் சொல்கிறேன்.

முத்துராமலிங்கத் தேவர் ஒரு இடத்திலே சொன்னார்: 'பதவிக்கு வருமுன் அடக்கு முறையை எதிர்த்தவர்கள் பதவிக்கு வந்தபின் அதே அடக்கு முறையைக் கையாண்டார்களே, தாங்கள் நிரந்தரமாகப் பதவியில் இருக்கப் போகிறோம் என்ற எண்ணத்திலா?

'Very many political leaders are not leaders. They are nothing but dealers. No Government can cover its weakness by means of audacity.'

'அடாசிட்டி' என்ற வார்த்தையை முத்துராமலிங்கத் தேவர் அடிக்கடிச் சொல்வார். மெஜாரிட்டி ஆன உடனே இந்த 'அடாசிட்டி' வருகிறது. உங்களிடத்தில் 'அடாசிட்டி' இருக்கிறது. 'மோர் அடாசிட்டி' நல்லதல்ல என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. சுப்ரிம் கோர்ட்டிலே, தமிழக சர்க்கார் பேரிலே கேஸ் போடப்பட்டிருக்கிறது. அந்த நியூசை பி.டி.ஐ.லே க்ரீட் செய்திருக்கிறார்கள், பி.டி.ஐ. எல்லா பத்திரிகைகளுக்கும் க்ரீட் செய்த நியூஸ் கொடுத்திருக்கிறார்கள். அந்த நியூஸ் எல்லா பத்திரிகைகளும் போடத் தயாராக இருக்கிறார்களா என்றால் இல்லை. இந்த நியூஸ் பிளிட்ஸ் பத்திரிகையிலே முதல் பக்கத்திலே போடப்பட்டிருக்கிறது.

முன்னாள் சீஃப் செகரட்டரி, தமிழக அரசு மீது, தனக்கு நியாயம் வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும்பொழுது, பல குற்றச் சாட்டுகளைச் சுமத்தியிருக்கிறார்கள். அந்தக் குற்றசாட்டுகள் உண்மையானால் அல்லது அவை உண்மை என்று திருபிக்கப்பட்டால், அந்த குற்றச்சாட்டுகளை அரசு ஏற்றுக் கொண்டால், அல்லது சுப்ரீம் கோர்ட்டால் அவருடைய பெட்டிஷன் டிஸ்மிஸ் செய்யப்பட்டு, அந்த குற்றச்சாட்டுகளின் பேரில் தமிழக அரசு மீது ஸ்டிரிக்ட் சர்ஸ் பாஸ் பண்ணினால், எந்த நியாயமான அரசும் ராஜினாமாதான் செய்ய வேண்டும்.

THIRU V. KRISHNAMOORTHY: Sir, on a point of order. We have read in the newspapers that the former Chief Secretary has filed a petition in the Supreme Court and it is before the Court now. If the Speaker allowed that to be discussed, would it now amount to expecting some sort of judgment from the Court? The hon. Member cannot say that if something happened, such and such a thing should happen. That is all hypothetical.

THIRU K. T. K. THANGAMANI: I have not gone into the merits. I know my limitations. I have only quoted what has appeared in the papers.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இன்றைய தினம் சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிற வழக்கைப் பற்றி ஒன்று சொன்னார்கள். அதோடு நிறுத்தாமல் அந்த சுப்ரீம் கோர்ட் "இப்படி டிரக்ட் செய்தால்?" என்று சொல்கிறார்கள். சுப்ரீம் கோர்ட் இப்படி டிரக்ட் செய்யக் கூடும் என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். வழக்கு விசாரணையே இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அப்படி இருக்கும்பொழுது, சுப்ரீம் கோர்ட் இப்படி செய்தால் என்று சொல்வது அரசாங்கத்தையும், சுப்ரீம் கோர்ட்டையுமே இழிவு படுத்துவதாக இருக்கும். அப்படி இருக்கும்பொழுது பொறுப்புள்ள உறுப்பினர் திரு. தங்கமணி இப்படிப் பேசுவது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த விவாதம் இன்னும் தொடரும் என்பதால், ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முக்கியமான பாயின்ட் ஆப் ஆர்டரைத்தான் எழுப்பினார்கள். கனம் உறுப்பினர் திரு. தங்கமணி அவர்களுக்கு இது தெரியும். பொதுவாக ஒரு வழக்கு என்று வேண்டுமானால் சொல்லலாம்.

அந்த வழக்கைப்பற்றி அபிப்பிராயத்தையும் வழக்கைப்பற்றிய தன்மையையும், நீதிமன்றம் இப்படி முடிவெடுக்கும் என்றும் நாம் எப்பொழுதுமே சொல்லக் கூடாது. அதைத்தான் நம்முடைய 67-வது விதி தெளிவாகக் கூறுகிறது.

'A member while speaking must not give his opinion about or refer to any matter on which a judicial decision is pending'.

In this matter, a judicial decision is pending before the Supreme Court.

இப்படி இருக்கிற ஒரு விவகாரத்தில் வழக்கு இருக்கிறது என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர, அதிலே ஒரு அபிப்பிராயத்தைச் சொல்லி, அதன்மீது விவாதம் செய்வது தவிர்க்கப்பட வேண்டியது என்பது நம்முடைய விதிமுறைகளிலே ஒன்று. உறுப்பினர் திரு. தங்கமணிக்கு மட்டுமல்ல, குறிப்பாக இந்த வழக்கு முடிகிற வரையிலும், அதைப்பற்றி விவாதிக்கக் கூடாது என்று எல்லா உறுப்பினர்களுக்கும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். கணபதி: பேரவைத் தலைவர் அவர்களே, நமது உறுப்பினர் அவர்கள் இந்த வழக்கில் தீர்ப்பையும் கூறி, அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதாகக் கூடச் சொல்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான், சொல்லியது சுப்ரீம் கோர்ட்டை இன்ஃபுளுயன்ஸ் செய்யுமென்று நினைக்கவில்லை. சூலை 19-ம் தேதி சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு கேஸ் வந்திருக்கிறது என்றும் அதிலே இந்த அரசின் மீது குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன என்றும் சொன்னேன். பி.டி.ஐ.-லே அதை 5, 6 பக்கங்களுக்கு கிரீட் பண்ணியிருக்கிறார்கள். நான் பி.டி.ஐ.-லே கேட்டு காப்பி எடுத்து வாங்கி வைத்திருக்கிறேன். இன்றைக்கு கோர்ட்டிலே ஒரு பப்ளிக் டாக்குமெண்ட் இருந்தால் அதைப் பற்றி சொல்லவே கூடாதா? சேஃபர் பண்ணவே கூடாதா? சப் ஜுடிஸ் என்பது பற்றியே, அதன் பொருளைப் பற்றியே நாம் பரிபூரணமாக விவாதம் நடத்தவேண்டும். சப் ஜுடிஸ் என்பது சொல்கிற நேரத்தில், எதைப்பற்றி இங்கு விவாதிக்கலாம் என்பதுபற்றி, ஸூல்ஸ் கமிட்டியிலே விவாதித்துக் கொண்டிருக்கிறோம். வழக்கு, எல்லா ஜனங்களும் படித்துக் கொண்டிருக்கிற விஷயம். எல்லா ஜனங்களும் வெளியிலே படித்துக் கொண்டிருக்கிற விஷயத்தை இங்கு குறிப்பிட்டதே தப்பா? பொதுவாக, சாதாரணமாக, வெளியே . . . .

[1972 ஆகஸ்ட் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேஸ் போட்டதைப் பற்றி சொல்லுங்கள். அதைப்பற்றி இப்படி இப்படி தீர்ப்பு அளிக்கப்படலாம் என்றெல்லாம் சொல்லாதீர்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இப்படி ஒரு கேஸ் போடப்பட்டிருக்கிறது என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது இன்றைக்கு அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகளுக்கு ஒரு உதாரணம்.

இறுதியாக, நான் ஆரம்பத்திலே எடுத்துச் சொன்ன மாதிரி, விஷயங்களின் தன்மையை ஆராய்ந்து பார்க்காமல், அதன்பிறகு அவை பற்றி கௌரவப் பிரச்னையாகக் கருதி, ஏதாவது ஒரு முடிவு எடுக்கிற போக்கு இந்த அரசுக்கு இருக்கிறது. நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், இவ்வளவு பெரிய இயக்கம், போராட்டம் நடத்தி 25,000 பேர் சிறை சென்று, அரசாங்கக் கணக்குப்படி 15 அல்லது 16 பேர் மாண்டு, சிறைச்சாலையிலே 2 பேர் மாண்டு, லத்தி சார்ஜிலே 2 பேர் மாண்டு மே மாதம் 19-ம் தேதி ஆரம்பித்த இயக்கம், கடைசியிலே சூலை மாதம் 19-ம் தேதி ஒப்பந்தம் கையெழுத்தாகியது. அந்த ஒப்பந்தத்தை முறையாக அமுல் நடத்தவேண்டும். அந்த ஒப்பந்தத்தை அவர்கள் முறையாக அமல் நடத்துவார்களா என்பதை சென்ற காலத்திலே நடந்ததை வைத்துப் பார்த்தால் அச்சம் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, அமைச்சரவைமீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானம் கொண்டுவருகின்ற சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டு எதிர்க் கட்சியிலே இருக்கின்ற தலைவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தைப் புதிய ஜனநாயக முறையை உருவாக்குகின்ற வகையிலே உடனடியாக எடுத்துக் கொண்டு இந்தச் சபை விவாதித்துக் கொண்டிருக்கிறது. விவாதத்தைத் தொடங்கிய நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் நம்பிக்கை இல்லை, அதிலும் தெளிவாக 'மு. கருணாநிதி அவர்கள் தலைமையிலே இயங்குகிற அமைச்சரவைமீது நம்பிக்கை இல்லை' என்று குறிப்பிட்டார்கள். ஆனால், 'எனக்கு மிக மிக நம்பிக்கை இருக்கிறது முதலமைச்சர் மீது, அவர்கள் காதுகொடுத்து என்னுடைய கருத்துக்களைக் கேட்பார்கள் என்று கருதுகிறேன்' என்று பேசும்போது அடிக்கடி கூறினார்கள். ஏதோ அவர்களுடைய தோழர்களுக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறேன் என்று சொல்வதற்காகக் கொண்டுவந்திருக்கிறார்களே ஒழிய, இடையிடையே அவர்கள் முதலமைச்சர் மீது நம்பிக்கை இருக்கிறது என்ற கருத்தைத்தான் தெரிவித்தார்கள்.

1972 ஆகஸ்ட் 10] [திரு. இராம. அரங்கண்ணல்]

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்குக் காரணமே 'அரசினுடைய எஃபிஷியன்சியை இம்புருவ் பண்ணுவதற்காக' என்று ஒரு காரணத்தையும் குறிப்பிட்டார்கள். அப்படிச் சொல்லவில்லை என்று இப்பொழுது சொல்கிறார்கள். முரண்பாடுகள் நிரம்பிய போக்கு டாக்டர் ஹாண்டே அவர்களிடத்தில் இல்லை, ஆனால் அவர்கள் சார்ந்திருக்கிற கட்சி முரண்பாடுகள் நிறைந்தது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். புலியையும் தூண்டிவிடுவார்கள், அதே நேரத்தில் அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் புள்ளிமானுக்கும் ஆதரவு கொடுப்பார்கள். அவர்களுடைய பேச்சிலே நாம் முரண்பாடுகளைப் பார்த்தோம்.

என்ன என்ன குற்றச்சாட்டுகளையெல்லாம் சொல்லவேண்டுமென்று அவர்கள் இங்கே வகைப்படுத்திய நேரத்திலே மாநாட்டைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். தர்மபுரியில் நடைபெற்ற மாநாட்டு வாயிலில் ஒரு தாசில்தார் உட்கார்ந்துகொண்டிருந்தார். நன்னடத்தை சர்டிபிகேட்கள் வாங்க வேண்டுமென்று சொன்னால் அதற்காக பணம் வசூலித்துக்கொண்டு அந்தப் பணத்தையெல்லாம் மாநாட்டிற்குக் கொடுத்தார் என்று எல்லாம் சொன்னார்கள். எனக்குள்ள வேடிக்கையெல்லாம், நாமும்தானே சட்ட மன்ற உறுப்பினராக இருக்கிறோம், நாமும் ஏராளமாக நன்னடத்தை சர்டிபிகேட், மற்ற சர்ட்டிபிகேட்கள் எல்லாம் கொடுக்கிறோம். எத்தனை பேர்களுக்கு அந்த தாசில்தார் சர்டிபிகேட் கொடுத்தாலும், 50 பேர்களுக்கு மேல் வந்திருக்க முடியாது. 50 பேர் கொடுத்த நன்கொடையை வைத்தா மகாநாடு நடத்த முடியும்? எவ்வளவுதான் இதனால் நிதி சேர்க்க முடியும்? அதையெல்லாம் அவர்கள் பெரிதுப்படுத்திப் பேசுவதற்குக் காரணம் அவர்களால் வேறு காரணங்களை எடுத்துக்காட்ட முடியாது, குற்றம் சாட்டவேண்டுமென்ற விருப்பத்தினால்தான் அதையெல்லாம் சொன்னார் என்பது அவருடைய பேச்சிலே தொனித்தது.

மதிப்பிற்குரிய நீண்டகால கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராக இருக்கக்கூடிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மிக மிக உருக்கமாக எடுத்துச் சொன்னார்கள். போலீஸ் அடக்குமுறைபற்றிச் சொன்னார்கள். போலீஸ் கூட்டுத்தான் ஆகவேண்டும், அதில் பல பேர்கள் சாகத்தான் வேண்டும் என்று யாரும் விரும்பமாட்டார்கள். அப்படி விரும்பக்கூடிய கட்சி இந்தியாவிலே இருக்கிறதா என்று பார்த்தால், 1942, 1943-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்திலே அலங்கோலங்கள் நடந்தன. வல்லபாய் படேல் அவர்கள் டெல்லியில் உள்துறை அமைச்சராக இருந்தபொழுது, அவர்களுடைய உத்திரவுப்படி எத்தனையோ பேர்கள் தெலுங்கானாவில் செத்தார்கள். தஞ்சாவூர்

மாவட்டத்திலே என்ன என்ன எல்லாம் நடைபெற்றது, எத்தனை எத்தனை தொண்டர்கள் இறந்தார்கள். இது எல்லாம் தெரியும். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுக்கு இப்படியெல்லாம் நடக்கவேண்டுமென்ற ஆசை. துப்பாக்கிப் பிரயோகம் நடக்கவேண்டும், பல பேர்கள் சாகவேண்டும். துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறுவதற்குக் காரணங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். சும்மா இருக்கின்ற மக்களைத் தூண்டிவிட்டாவது வண்டிகளை ரோட்டில் போடச்சொல்ல வேண்டும். பெத்தநாயக்கன்பாளையத்தில் போலீஸ் ஸ்டேஷன் இல்லை என்று சொன்னார்கள். வண்டிகளை ரோட்டிலே போட்டார்கள். ஒரு போலீஸ்காரர் ஏன் இப்படி வண்டிகளை ரோட்டிலே போட்டு மறிக்கிறீர்கள் என்று கேட்டார். ஒரு போலீஸ்காரர்தான் கேட்டார். அவரை 50 பேர்கள், 100 பேர்கள் சேர்ந்துகொண்டு தாக்கினால் என்ன சூழ்நிலை ஏற்படும்? கம்யூனிஸ்ட் கட்சியின் பலாத்காரத் தத்துவம் உலக நாடுகளில் எல்லாவற்றிலும் தூக்கியெறியப்பட்டு விட்டது. கம்யூனிஸ்ட் கட்சி பிறந்த மாஸ்கோவிலேயே காரியங்கள் எல்லாம் நல்ல உணர்வோடும், எல்லோரையும் மனிதர்களாகக் கருதவேண்டுமென்ற கொள்கை அடிப்படையிலேயும்தான் விவாதித்து நடத்தப்பட வேண்டுமென்று அந்தக் கட்சியின் தலைவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இதெல்லாம் அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும், சாதாரணமானவர்கள் டி.எம்.கே.யைச் சேர்ந்தவர்கள், அவர்கள் இப்படி இருக்கலாமா? வோட்டு வாங்குவதற்கு தி.மு.க. காரர்கள்தான் தேவைப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் இப்படியெல்லாம் இருப்பதா, எப்படியாவது பலாத்காரத்தை ஏற்படுத்தவேண்டுமென்ற முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மூலமாக நான் அந்தக் கட்சியின் தலைமைக்குச் சொல்லிக்கொள்வேன். பலாத்காரத்தை வளர்க்காதீர்கள். டாக்டர் ஹாண்டே, அவர்கள் பின்னே போகிறார்கள். காங்கிரஸ்(ஒ) பின்னே போகிறார்கள். யாராக இருந்தாலும், எங்கே கிடைக்கும், எதைச் செய்யலாம் என்று அலைந்து அலைந்து பலாத்காரத்தை வளர்க்க வேண்டாம், என்று கேட்டுக்கொள்கிறேன்.

ரத்தப் புரட்சி, குத்துக்குக் குத்து, வெட்டுக்கு வெட்டு, இதுவெல்லாம் மனிதப் பண்புகள் நிரம்பிய இந்தக் காலத்தில், 25-வது சுதந்திர தின விழாக் கொண்டாடுகின்ற இந்த நாளிலே அப்படிப்பட்ட கொள்கையை வைத்துக் கொண்டிருக்கவேண்டாம். அப்படி பலாத்காரத்தை வளர்க்க நீங்கள் முயற்சிக்கின்ற நிலையில்தான் நாட்டு மக்கள் மத்தியிலே நீங்கள் செல்வாக்கை இழந்து வருகிறீர்கள். ஆனால் எந்தக் காரியமாக இருந்தாலும் பலாத்காரம் இல்லாத

அன்பால் சாதிக்கிறோம், பேசிச் சாதிக்கிறோம் என்ற காரணத்தினாலேதான் திராவிட முன்னேற்றக் கழகம் இவ்வளவு பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது. மேலும் பெறப்போகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், எனக்கு ரொம்பச் சங்கடமாக இருக்கிறது, பப்ளிக் டிஸ்கன்டென்ட்மெண்ட் அதிகமாக இருக்கிறது, இந்த ஆட்சியைத் தூக்கியெறியவேண்டுமென்று பொதுமக்கள் சொல்கிறார்கள். அதனால்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறேன் என்று சொன்னார்கள். பொதுமக்கள் என்பவர்கள் பத்திரிகை படிப்பவர்கள் மட்டுமல்ல. பொதுமக்கள் உண்மையிலேயே முன்பிருந்த ஆட்சியை வைத்து ஒப்பிட்டு இவர்கள் என்ன என்ன நல்ல காரியங்களைச் செய்கிறார்கள் என்று ஆராய்ந்துபார்க்கிறார்களே அவர்கள்தான். அந்த ஏழைஎளிய மக்கள் தான் பிற்பட்டோர்கள் தான், தாழ்த்தப்பட்டோர்கள்தான் பொதுமக்கள். அவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்கள் இந்த ஆட்சியின் தன்மையை உணர்ந்திருக்கின்ற காரணத்தினாலேதான் சூலை மாதத்திலே 13 இடங்களிலே நடைபெற்ற இடைத் தேர்தலிலே கழக அரசை ஆதரித்திருக்கிறார்கள் 13 இடங்களில் இடைத்தேர்தல் நடந்தது. டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன 'பப்ளிக் டிஸ்கன்ட்னட்மெண்ட்' இருந்தால் அந்த 13 இடங்களில் 10 இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருக்காது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: 13 இடங்களில் 7 இடங்களில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருக்கிறது. அதுவல்லாமல் எங்கெங்கு சுதந்திராக் கட்சி ஸ்தாபன காங்கிரஸ் கட்சி நின்றதோ அத்தனை தலைவர்களையும் . . . .

Almost all the leaders and persons who were members of the party, who were working for the party were arrested. While the D.M.K. meeting was allowed, my meeting was not. I represented to the Chief Minister that I should be granted permission in Tirunelveli or else the elections must be postponed. My only submission is the fundamental, normal practices of democracy were not allowed. This I give in clarification to my distinguished colleague, Mr. Arangannal.

[1972 ஆகஸ்ட் 10

திரு. இராம அரங்கண்ணல் : நண்பர் ஹாண்டே அவர்கள் இதைச் சொல்வார்கள் என்று எனக்குத் தெரியும். எல்லோரும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு இந்தத் தேர்தல் நடந்தது. இதைக் கூட விட்டு விடுவோம். எண்ணிக்கையைச் சொன்னார்கள், திராவிட் முன்னேற்றக் கழகம் 7-ம், லீக் 2-ம், கழக ஆதரவு பெற்றவர்கள் 3-ம், ஆக மொத்தம் 12. 13-ல் 12. கணக்கைத் திருத்திக் கொள்கிறேன், 10, 3.

ஆனால் அவர்கள் ஒன்றை மறந்துவிட்டார்கள். 1971-ல் பொதுத் தேர்தல் நடத்தினோம். பொதுத் தேர்தலுக்கு ஒரு ஆண்டுக்கு முன்பே பெருமதிப்பிற்குரிய ஆச்சாரியார் அவர்களும், காமராஜர் அவர்களும்—காமராஜர் கருதிக் கொண்டிருந்தார், முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குக் காரணம் இவர்கள் கூட்டு சேர்ந்ததால்தான், எப்படியும் கூட்டுகளைப் பிடிக்கவேண்டுமென்று சொல்லி—ராஜாஜியின் வீட்டிற்குச் சென்று அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற்று ஒரு ஆண்டுக்கு முன்னாலேயே 'பப்ளிக் டிஸ்கன்டன்ட்மென்ட்' இருக்கிறது என்று ஆரம்பித்தார்கள். எல்லாப் பத்திரிகைகளும் முன்னேற்றக் கழகம் மோசம், ஊழல் ஊழல், இது நடந்து விட்டது, அது நடந்து விட்டது; முன்னேற்றக் கழகம் அதைச் செய்துவிட்டது, இதைச் செய்து விட்டது என்று ஒரு ஆண்டுக்காலம் பேசினார்கள். இப்படிப் பேசியவர்களைப் பார்த்த மக்கள், பாவம், தி.மு.க. நல்லவர்கள் பாடுபட்டு வருமானத்தைப் பெருக்கி நன்மைகளைச் செய்தவர்கள், வயதான காலத்தில் இவர்கள் இப்படி ஏன் பேச வேண்டுமென்று சொல்லி 138 அக இருந்த எங்களை 184 ஆக ஆக்கினார்களே தவிர இதிலிருந்து பப்ளிக் டிஸ்கன்டன்ட்மெண்ட் எங்கேயிருந்தது என்று பார்த்தோம்.

ஆகவே, பப்ளிக் டிஸ்கண்டன்ட்மெண்ட் என்று, மக்கள் வருத்தமாக இருக்கிறார்கள் என்று சொன்னால், வழி தெரியாமல், தேவையில்லாமல் அமைதியாகயிருந்த நல்ல அருமையான குளத்தைத் தேவையில்லாத கற்களையெல்லாம் விட்டெறிந்து நாசமாக்குகிறார்களே என்று அவர்கள் கட்சியின் மீதுதான் பப்ளிக் டிஸ்கண்டன்ட்மெண்ட் இருக்கிறதே தவிர ஆளுங்கட்சியின் மீது இல்லை. இந்த நாட்டு மக்கள் எங்கள் மீது அதிருப்தி கொள்ள மாட்டார்கள் என்பதை அறியலாம். அப்படியே அறிய வேண்டுமென்றால் அடுத்த தேர்தல் வரப்போகிறது, வராமல் இருக்கப்போதில்லை. அந்த நேரத்தில் உங்கள் கொள்கைகளைச் சொல்லி வெற்றிபெற வாய்ப்பிருக்கிறது. சுதந்திராக் கட்சியையும், ஆளுங்காங்கிரஸ் கட்சியையும், காமராஜர் கட்சியையும் கேட்டுக்கொள்வேன், தயவு செய்து கம்யூனிஸ்டு விரும்பும் வழிக்கு நீங்கள் போய்க்கொண்டே

1972 ஆகஸ்ட் 10] [திரு. இராம. அரங்கண்ணல்]

இருக்காதீர்கள் என்று தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன். திரு. தங்கமணி அவர்கள் சிரிக்கிறார்கள். அவர்கள் சிரிப்பதன் பொருள் எனக்குத் தெரியும். ஏனென்றால் அந்தக் கட்சியை நான் ஓராளவிற்கு அறிந்தவன். பலாத்கார எண்ணங்கள் தலைதூக்கக்கூடாது என்பதைத் தமிழ்நாட்டு மக்களும் நல்லவர்களும் விரும்புகிறார்கள். ஆனால் பலாத்கார எண்ணங்கள் தோன்றி 10, 11. பிணங்கள் விழுந்தன என்றால் அவர்களெல்லாம் யார், நம்மவர்கள்தானே 5,000 ரூபாய் கொடுத்தோம் என்றால் தர்மத்திற்காகக் கொடுக்கவில்லை. எந்த அளவிற்கு முதலமைச்சரவர்கள் வேதனைப்பட்டார்கள், சங்கடப்பட்டார்கள் என்று கடவுளிருந்த எங்களுக்குத் தெரியும். நாம் பலி கொடுத்திருக்கிறோம். எனவே இத்தகைய உணர்வுகளை வளர்க்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திரு. ஆசைத்தம்பி அவர்கள் பேசியதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் அங்கே என்ன பேசினார்கள் என்பதைப்பற்றி இன்றைய இந்து பத்திரிகையில் கொஞ்சம் தவறாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது. இன்றைய இந்து பத்திரிகையில்

'If the Centre attempted to topple the Government, Tamil Nadu will try to become separate'. என்று வந்திருக்கிறது. எப்படி வந்திருக்க வேண்டுமென்றால்

. . . . . then Tamil Nadu would fight separately". என்று வந்திருக்க வேண்டும். ஏனென்றால் புலிகள் நிரம்பிய காட்டில் மான் உலாவுவதைப்போல இந்தியாவிலேயே எல்லா இடங்களிலும் ஒரே ஆட்சியின் கையில் இருக்கும் இந்த நேரத்தில் தமிழ்நாடு அரசு மட்டும் தனியாக இருந்து கொண்டு இருக்கிறது, என்ற அப்படியொரு சூழ்நிலை ஏற்படுமேயானால், தமிழ்நாடு அரசு மோகன் குமாரமங்கலத்தினுடைய சித்தாந்தங்களைக் கேட்டுக் கொண்டோ அல்லது சுப்பிரமணியத்தினுடைய வேதாந்தங்களைக் கேட்டுக் கொண்டோ அல்லது ஆச்சாரியாரின் புராணப் பிரசங்கங்களைக் கேட்டுக் கொண்டோ எந்தக் காரணத்தாலும் 'டாப்பிள்' செய்யும் கட்டம் வந்தால், தனித்து நின்று முன்னேற்றக் கழகம் போராடும் சூழ்நிலை ஏற்பட்டால், தோழமைக் கட்சிகளுடன் போராடும் என்ற கருத்தில்தான் பேசினார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஓரிருவர் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினாலும், அட்டானமியைப் பற்றிப் பேசி பிரிவினையைக் கொண்டுவரப் பார்க்கிறார்கள், பிரிவினையை விதைக்கிறார்கள் என்று பேசுகிறீர்கள். நாங்களும் எத்தனை தரம்தான் சொல்லிக் கொண்டேயிருப்போம். எங்களுக்கு ஒரு சுப்ரீம் பாடி இருக்கிறது, தலைவர் இருக்கிறார்கள்.

நாங்கள் தனி நாடு கோரிக்கையை விட்டுவிட்டோம் என்று தெரிவித்தோம், தனி நாடு கோரிக்கை எங்கள் எண்ணம் அல்ல என்று, ஹாண்டே அவர்களின் பாஷையில் சொல்ல வேண்டுமென்றால் 'கேடகாரிகலி' சொல்லி விட்டோம். அப்படிச் சொல்லியபிறகும் இதைத்தான் கேட்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டேயிருந்தால், தேவையில்லாத குற்றச்சாட்டைச் சொல்லிக் கொண்டேயிருந்தால், யாருக்கு என்ன பலன்? அவர்கள்கூட இப்போது மேடையிலே பேசுகிறார்கள். ஹாண்டே அவர்கள் இவ்வளவு அன்பொழுகப் பேசி சட்டமன்றத்தில் நான் பார்த்தது இல்லை. திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இவ்வளவு கோபத்தோடு பேசியதை நான் சட்டமன்றத்தில் பார்த்ததில்லை. ஆனால் அவர்கள் இங்கே சொன்னார்கள் மாண்புமிகு திரு. இராஜாராம் அவர்கள், அமைச்சரவர்கள் சரித்திரத்தைப் பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். இன்னும்கூட, உயர்நிலைப்பள்ளிகளில் சரித்திரத்தைக் கூடச் சொல்லிக்கொடுக்கக் கூடாது என்று சொல்வார்கள். சரித்திரத்தைச் சொல்லக்கூடாதா? கம்யூனிஸ்ட் கட்சி இப்படி இருந்தது என்று, கம்யுனிஸ்ட் கட்சியின் சித்தாந்தத்தை நம்பி செத்தார்கள், பல வீடுகள் தாக்கப்பட்டன என்று சொல்லக்கூடாதா? இவைகளைத் தடுக்க இப்படிச் செய்தார்கள், இது தான் நடந்தது என்று சொல்லக்கூடாதா?

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் அன்றைக்குச் சொன்னது,

'In what context did he say that?' The Minister was saying about History and said 'we were not a united country and therefore. . .' he gives a pause. There comes the doubt. சரித்திரத்தில் பல நாடுகளாக இருந்திருக்கின்றன, ஒரே நாடாக இல்லை என்பதை ஞாபகப்படுத்தி இப்பொழுது தனி நாடாக ஆயிற்று என்றால் பரவாயில்லை என்ற தொனியில் இருக்கிறது என்று சொன்னேனே தவிர, சரித்திரத்தில் பல நாடுகளாக இருந்தோம் "we were not united country and therefore . . . . . என்று "pause" கொடுக்கும் போதுதான் சந்தேகம் தோன்றுகிறது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். அசோகன் காலத்திலே இந்த நாடு இருந்த நிலை, அக்பர் காலத்திலே இருந்த நிலை, அதற்குப்பிறகு இருந்த நிலையெல்லாம் சொல்லி, இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிகாலத்தில்தான் ஒற்றுமையாக இருந்தது என்று சொன்னேன். இப்பொழுது இருக்கும் ஒருமைப்பாட்டிற்கு

விரோதமாகச் சொல்லவில்லை வடக்கே இந்திரா காங்கிரஸும், தெற்கே நாங்களும் ஆளுகிறோம். எனவே சூழ்நிலையைக் கெடுக்காதீர்கள் என்பதற்காகத்தான் சரித்திரத்தைச் சொன்னேன். (குறுக்கீடு)

திரு. இராம. அரங்கண்ணல்: எல்லா விஷயங்களையும் நண்பர் ஹாண்டே அவர்கள் ஒத்துக் கொள்வார்கள். கூடிய சீக்கிரத்தில் இந்தப் பக்கத்திலேயே வந்து பேசப் போகிறார்கள்.

அவர்கள் சொன்ன கருத்து டி. எம். கே. செகரடரிகள் மிஸ்லீட் செய்கிறார்கள் என்பது. இதைப்பற்றியும் நான் வலியுறுத்திச் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன். அண்ணா அவர்கள் முதலமைச்சராக ஆன தினமே கோட்டையைச் சுற்றியிருக்கும் பரந்த மைதானத்தில் அதிகாரிகளை அழைத்து வைத்துக்கொண்டு சொன்னார்கள். நிர்வாகத்தைத் தனியாக விட்டுவிடுங்கள், நிர்வாகத்தில் யாரும் குறுக்கிடக்கூடாது, யாராவது முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் குறுக்கிட்டால் அந்த அதிகாரிகள் என்னுடைய கவனத்திற்கு அதைக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். அது கடைப்பிடிக்கப்பட்டது. அதற்குப்பிறகு முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற நம்முடைய கலைஞர் வந்தபிறகு அவர்களும் அதை வலியுறுத்திச் சொல்லிக்கொண்டேயிருக்கிறார்கள். கலெக்டர்கள் மாநாட்டின்போது ஒவ்வொரு நேரத்திலும் அவர்கள் சொல்வார்கள், கலெக்டர்களிடம் அவர்கள் சொல்வது எந்தக் கட்சியினுடைய தலையீடு நிர்வாகத்திலே வந்தாலும் எனக்குத் தகவல் கொடுங்கள், சாதாரணமாக டிரான்ஸ்ஃபர் போன்றவைகளுக்கு வந்தாலும் சொல்லுங்கள் என்று கலெக்டர்கள் மாநாட்டிலே வலியுறுத்திப் பேசுகிறார்கள், போலீஸ் அதிகாரிகள் மாநாட்டிலேயும் பேசுகிறார்கள் (குறுக்கீடு) இதை எங்கள் கட்சிக்கு வந்து பார்த்தால் தெரியும், காண்பதற்கு யோசித்தால் எப்படித் தெரியும்?

டாக்டர் எச். வி. ஹாண்டே: அந்த மாதிரி அனுப்புகிறார்களே, அதன் மேல் சீஃப் மினிஸ்டர் ஆக்ஷன் எடுக்கிறார்களா?

திரு. இராம. அரங்கண்ணல்: அவர்கள் நெருங்கி வர வேண்டும். முதலமைச்சரவர்களோடு அரை மணி நேரம் உட்கார்ந்து விவரமாகக் கேட்டால் தெரியும். கட்சியிலேயுள்ள எங்களுக்கு ஏற்படும் சங்கடம் என்ன வென்றால், கட்சித் தொண்டர்கள் சொல்கிறார்கள், எம்.எல்.ஏ. க்களிடத்திலே சொன்னாலும் நடக்க மாட்டேன் என்கிறது, முதலமைச்சரவர்களைப் போய்ப் பார்த்தாலும் அரசாங்கம் வேறு, கட்சி வேறு என்று சொல்கிறார்கள் என்று எங்கள் கட்சித் தொண்டர்கள் எங்களிடத்திலே குறைபட்டுக் கொள்கிறார்கள் தெளி

வாகப் புரிந்துகொள்ள வேண்டியது நிர்வாகத்தை நடத்துகிறவர்கள் எந்த அளவுக்குப் பொறுப்போடு இருக்கிறார்கள், எப்படி காரியங்களைச் செய்கிறார்கள் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். அவர்கள் பிரமையை உண்டுபண்ண முயற்சிக்கிறார்கள். மாநாடு போடுகிறார்கள் என்றால், ஏன் மாநாடு நன்றாக நடந்தால் வயிறு எரிகிறதா? நாங்கள் என்ன செய்வோம்? மக்கள் எங்கள் பக்கத்தில் இருக்கிறார்கள். அவர்கள் பக்கத்தில் இல்லை. அவர்கள் போன வழி, அவர்கள் கடைபிடித்த சித்தாந்தம், செய்த காரியங்கள் ஆகியவைகளினால் மக்கள் அவர்கள் பக்கத்தில் இல்லை. மாநாடுகளை நடத்துகிற கட்சி இன்றைய தினம் ஆளும் கட்சியாக இருப்பதனால்தான் மாநாடுகள் சிறப்பாக நடக்கின்றன, ஏராளமான கூட்டம் வருகிறது என்று நினைப்பது சரியல்ல. டாக்டர் ஹாண்டே அவர்கள் விருகம்பாக்கத்தில் நடந்த மாநாட்டிற்கு வந்திருக்கிறார்கள். அப்பொழுது எங்கள் கழகம் ஆட்சி பீடத்தில் இல்லை. ஆட்சி பீடத்தில் இல்லாத காலத்தில் கூட மக்கள் அழைக்கப்பட்டு அவர்கள் அத்தனை பேர்களும் வந்திருந்தார்கள். எங்களுடைய தலைவர்கள் கொண்டாடக்கூடிய அளவுக்கு மாநாடுகள் நடத்திய கட்சி முன்னேற்றக் கழகம் தான். ஆட்சி பீடத்தில் வந்திருக்கிற காரணத்தினால், ஆளும் கட்சியாக இருக்கிற காரணத்தினால் மாநாடு நடத்த வேண்டும் என்ற ஒரு எண்ணம், ஆசை எங்களுக்கு கிடையாது.

இன்னொன்று சொன்னார்கள். ஹை பெடஸ்டலில் முதல் அமைச்சர் அவர்கள் இருக்கக்கூடாது, எதிலும் கவுரவப் பிரச்னை பார்க்கக்கூடாது என்று சொன்னார்கள். அவர்களுடைய தனிப்பட்ட கவுரவம் கட்சியிலும் சரி, தமிழ் நாட்டிலும் சரி, சரியாகத் தான் இருக்கிறது. அவர்கள் கவுரவப் பிரச்னை பார்க்கவேண்டியதில்லை. ஆனால் எங்களைப் போன்று அவர்களுடன் வாழ்ந்து, அவர்களுடைய கட்சியிலே இருப்பவர்களுடைய சங்கடம் என்னவென்றால், பல நேரங்களில் அவர்கள் கவுரவத்தை விட்டுவிடுகிறார்கள், பொதுப் பிரச்னைகளைக் குறித்து. ஏதோ முதல் அமைச்சர் அவர்கள் கவுரவம் பார்க்கிறார்கள் என்று சொல்லத் தேவையேயில்லை. எந்த நேரத்தில் யார் பேசவேண்டுமென்று வந்தாலும், அவர் கவுரவப் பிரச்னைக்காக யாரையாவது பார்க்கமாட்டேன் என்று சொன்னது உண்டா? மாணவர்கள் போராட்டமாக இருந்தாலும் சரி, தொழிலாளர்களுடைய போராட்டமாக இருந்தாலும் சரி, அவர்கள் கவுரவப் பிரச்னையாக எதையும் பார்ப்பதேயில்லை. எல்லோருடனும் கலந்து பேச முன் வந்திருக்கிறார்கள். எல்லோரையும் கொண்டது இந்த நாடு என்ற எண்ணத்தில் எல்லோரையும் கலந்து கொண்டு, எல்லோரையும் அனுசரித்துப் போக வேண்டும் என்று காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். எந்த ஹை

பெடஸ்டலிலும் அவர்கள் உட்கார்ந்துகொண்டிருக்கவில்லை. ஹை பெடஸ்டலில் சாதாரணமாக இருக்கிற ஒருவன் உட்கார்ந்திருக்கிறானே என்று வேண்டுமானால் சிலருக்கு வயிற்று எரிச்சல் இருக்கலாமே தவிர, அவர் ஒன்றும் ஹை பெடஸ்டலில் இருந்துகொண்டு, பேசமாட்டேன், பார்க்கமாட்டேன் என்று சொல்லியதில்லை. சர்வோதயத் தலைவர் சின்னதுரை அவர்கள், எல்லோரும் சிறையில் இருக்கிறார்கள், அவர்களைச் சிறையிலிருந்து வெளியே விட்டால், வந்து பேசுவார்கள் என்ற ஒரு எண்ணம் இருக்கிறது என்று சொன்னவுடனேயே, சில பேர்கள் மீது வழக்குகள் இருந்தன, கேஸ்கள் போடப்பட்டிருந்தன, அப்படியிருந்தும் அப்படிப்பட்டவர்களைக் கூட உடனடியாகச் சிறையைத் திறந்து வெளியே விட்டார்கள். எல்லாத் தலைவர்களும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். அந்தத் தலைவர்கள் வெளியே வந்ததும் என்ன செய்திருக்கவேண்டும்? சுவாகத் ஹோட்டலில் கூடி காமராஜ் வீட்டிற்குச் சென்று ஆலோசனை கேட்கலாமா, கலியாணசுந்தரம் அவர்களை வைத்துத் தீவிரமாக நடத்தலாமா என்று ஆலோசனை நடத்தினார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்காகப் பாடுபட முன்வந்த தலைவர்கள் அந்த வழியிலே போனார்கள். அப்படிப் போனவர்களை முதல் அமைச்சர் அவர்கள் கூப்பிட்டுப் பேசுவதற்குத் தயாராக இருந்தும், முதல் அமைச்சர் அவர்களோடு அவர்கள் பேசத் தயாராக இல்லை. ஆகவே, முதல் அமைச்சர் அவர்கள் ஹை பெடஸ்டலில் இல்லை. மற்றவர்கள்தான் அதற்காக வழிகளைத் தவிர்த்துவிட்டார்கள்.

இன்னொன்று பேசப்பட்டது. விவசாயிகளுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யாத அரசு இது என்று சொல்லப்பட்டது. விவசாயிகளைப் பொறுத்த வரையில் அகில இந்தியாவிலும் மற்றவர்கள் செய்யாத காரியங்களை இந்த அரசு செய்திருக்கிறது. நகர்ப்புறங்களில் இருக்கிற மனைகளுக்கெல்லாம் வரி விலக்கு கொடுத்தது. நகர்ப்புறங்களில் ஒரு கிரௌண்டுக்குக் கீழே மனை வைத்திருப்பவர்களுக்கு அர்பன் லாண்டு டாக்ஸ் கிடையாது. நகர்ப் புறத்தில் உள்ளவர்களை அனுசரித்து, அதற்கான சட்டம் கொண்டு வந்திருக்கிறது இந்த அரசு. விவசாயிகளைப் பொறுத்த வரையில். புஞ்சை நிலத்திற்கு வரியே இல்லை என்று செய்ததும் இந்த அரசு தான்.

அது மட்டுமல்ல. நஞ்சை நிலத்தைப் பொறுத்த வரையில் 5 ஏக்கருக்குக் குறைந்த நிலம் வைத்திருப்பவர்கள் வரி கொடுக்கவேண்டாம் என்று சொல்லியதும் இந்த அரசு தான். உரம் இல்லை என்று தட்டுப்பாடு ஏற்பட்ட பொழுது, ஏராளமாக உரம் கிடைப்பதற்கு வழி செய்தது இந்த அரசு. அது மட்டுமல்ல. நாங்களும் விவசாயிகள் தான், நானும் விவசாயக் குடும்பத்

தைச் சேர்ந்தவன் தான். நகரத்திற்கு வந்துவிட்டாலும் நாங்களும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தான். முதல் அமைச்சர் அவர்களும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர் தான். விவசாயிகளின் பிரச்னையைப் பற்றி எங்களுக்கும் நன்றாகத் தெரியும். மின்சாரக் கட்டணத்தை உயர்த்திய நேரத்தில் நாங்கள் அதிகமாகக் கூட உயர்த்தவில்லை. 1.2 பைசா தான் உயர்த்தினோம்.

மற்ற மாநிலங்களில் மின்சாரக் கட்டணம் இதைவிட அதிகமாக இருக்கிறது. ஆந்திரப் பிரதேசத்தைப் பார்த்தால் அங்கே 16 பைசா என்று கட்டணம் போடப்பட்டிருக்கிறது. கர்நாடகாவில் 12 பைசா என்று வசூலிக்கிறார்கள். கர்நாடக மாநிலம் ஏராளமாக மின்சாரம் உற்பத்தி செய்கின்ற மாநிலம். குஜராத்தைப் பார்த்தால் 17 பைசா, உத்தரப் பிரதேசத்தைப் பார்த்தால்—நம்முடைய மதிப்பிற்குரிய பிரதமர் மாநிலம்—அங்கே 23.51 பைசா, 12 பைசாவை விட கிட்டதட்ட இரண்டு மடங்கு. மகாராஷ்டிரத்தில் 18 பைசா, மேற்கு வங்காளத்தில் 19 பைசா, ஹரியானாவில் 15 பைசா, பஞ்சாபில் 13 பைசா, மத்திய பிரதேசத்தில் 13 பைசா. இப்படி மின்சாரக் கட்டணம் போடப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டைத் தவிர மற்ற எல்லா மாநிலங்களிலும் மின்சாரக் கட்டணம் அதிகமாகத் தான் இருக்கிறது மின்சாரக் கட்டணத்தை ஏன் இந்த அரசு அதிகமாக்க வேண்டியிருந்தது? கோவையிலே இருக்கிற விவசாயிகளுக்குத் தொல்லை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நாம் இதைச் செய்யவில்லை. நாம் கடன் வாங்க வேண்டியிருக்கிறது ரிசர்வ் வங்கியிலிருந்து மத்திய அரசிலிருந்து நமக்குத் தாக்கீது வருகிறது. அவைகளை வைத்துத் தான் கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதே நேரத்தில் இதையெல்லாம் நம்மிடையே பேசித் தீர்த்துக் கொண்டிருக்கக்கூடும். அதைவிட்டுவிட்டு யார் இதற்கு தூபம் போட்டு காரியங்களைச் செய்ய ஆரம்பித்தார்கள் என்பதைப் பார்க்கவேண்டும்.

இது ஒரு கட்சிப் பிரச்னையாக இருந்தால் கூட பாதகம் இல்லை. ஆனால் ஏதோ ஒருவர் இதைப் போல் ஆரம்பித்தார். அதைப் பார்த்து, நமக்குக் கிடைத்தவரையிலும் ஆதாயம் கிடைக்கட்டும் என்ற முறையில் ஒவ்வொரு கட்சியாக இதில் ஈடுபட்டது. ஆகவே, எந்தக் கட்சியும் இதை ஆரம்பிக்கவில்லை. உழவர்களுக்காகப் பேசுகிற கம்யூனிஸ்டு கட்சியும் சரி, முதலாளிக்காகப் பேசுகிற கட்சி என்று சொன்னால் டாக்டர் ஹாண்டே அவர்கள் மறுக்கப் போகிறார், அவர்கள் கட்சியும், அல்லது காங்கிரஸ் (ஓ) அல்லது காங்கிரஸ் (ஆர்) கட்சியும் ஆரம்பிக்கவில்லை. (குறுக்கீடு) திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுக்கு மன்றாடியார் அவர்களைத் தெரியும். ஏழைகளாக

இல்லாதவர்கள், கஷ்டப்படாதவர்கள் ஆரம்பித்தார்கள். ஆரம்பித்தது யார்? ஆரம்பித்ததின் நோக்கம் என்ன? 890 ஏக்கருக்கு பால் பண்ணை என்ற பெயரால் மன்றாடியார் அவர்கள் விதிவிலக்கு பெற்றிருந்தார்கள். உங்களுக்கெல்லாம் தெரியும். அவர் பெருமை மிகுந்த காங்கிரஸ் கட்சியின் அமைச்சராக இருந்தவர். பெருமை மிகுந்த காங்கிரஸ் கட்சி எந்த அளவுக்கு உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்தது என்பது நமக்கெல்லாம் தெரியும். உச்ச வரம்பு 30 ஏக்கர் என்று வைத்திருந்தார்கள். அந்த நேரத்தில் 890 ஏக்கர் நிலத்தை பால் பண்ணைக்காக மன்றாடியார் அவர்கள் ஒதுக்கியிருந்தார்கள். அப்படி ஒதுக்கி, பால் பண்ணைக்கு அதைப் பயன்படுத்தினார்களா? மாடுகளை வளர்ப்பதற்குப் பயன் படுத்தினார்களா என்று பார்த்தால், கிட்டத்தட்ட 200 ஏக்கரால் அவர்கள் விவசாயம் செய்திருந்தார்கள் என்று அரசாங்கம் கண்டுபிடித்தது. அரசாங்கத்தினுடைய நிலக் குழு அதைக் கண்டுபிடித்து அரசாங்கத்திற்குத் தெரிவித்தவுடனேயே, 200 ஏக்கரில் நீங்கள் விவசாயம் செய்திருக்கிறீர்களே, பம்பு செட்டு வைத்து 200 ஏக்கர் சாகுபடி செய்திருக்கிறீர்களே, செய்யலாமா என்று கேட்டதற்கு அவர் என்ன பதில் கொடுத்தார் தெரியுமா? பயிருக்கு மேலே இருக்கிற நெல் கதிரை மனிதன் சாப்பிடுவான், கீழே இருக்கிற வைக்கோலை மாடுதான் சாப்பிடும், ஆகையினால் 200 ஏக்கரில் விவசாயம் செய்திருக்கிறேன் என்று பதில் அளித்தார். மதிப்பிற்குரிய மன்றாடியார் அவர்கள் முன்னால் காங்கிரஸ் அமைச்சர். இப்போதும் காங்கிரசில்தான் இருக்கிறார். அவர் 1,900 ஏக்கருக்குச் சொந்தக்காரர்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இப்போது வடபாதி மங்கலம் உங்கள் பக்கத்தில் தானே இருக்கின்றார்கள்?

திரு. இராம. அரங்கண்ணல்: அவர் எங்களிடம் இல்லை உங்களிடம்தான் இருக்கிறார். அடுத்து பெரிய காட்டார் என்று ஒருவர். அவர் இருக்கும் கட்சி திரு. சங்கர் தயாள் சர்மா அவர்களைத் தலைவராகக் கொண்டுள்ள கட்சி. அவர் சேலம் மாவட்ட காங்கிரஸ் மாநாட்டின் தலைவர். அர்த்தநாரீஸ்வர கௌண்டர் என்னும் அவருக்கு 700 ஏக்கர் நிலம் சொந்தம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: 700 ஏக்கர் வைத்திருக்கிறார் என்றால் அதை விட்டு வைத்த அரசினைக் குற்றம் சாட்டுகின்றீர்களா அல்லது இன்றும் விட்டு வைத்திருக்கும் அரசைக் குற்றம் சாட்டுகின்றீர்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முன்புள்ள ஆட்சி அதை விட்டு விட்டது. இப்போது உள்ள ஆட்சி அவற்றைத் திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: அந்த முடிவை வரவேற்கிறோம். விரைவில் செயல் படுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தக் கட்டத்தில்தான் அர்த்த நாரீஸ்வர கௌண்டர் அவர்கள் எங்கள்மீது வெகுண்டு எழுகின்றார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: அவர்கள் வெகுண்டு எழவில்லை. பல்லாயிரக்கணக் கான ஏழைகள்தான் வெகுண்டு எழுகின்றார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்த ஏழைகள்தான் பழி வாங்கப்படு கின்றார்கள், அர்த்தநாரீஸ்வர கௌண்டர் போன்றவர்களுடைய சுகபோக வாழ்விற்காக.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, பட்டகார் பெரிய நிலப்பிரபு என்று குறிப்பிட்டார்கள். அதை எல்லாரும் ஏற்றுக்கொள்ளுகிறோம். அரசாங்கம் நிலத்திற்கான உச்சவரம்பினைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். உபரியான நிலங்களை எடுத்துக்கொள்ள இருக்கின்றார்கள். ஆனால் அதே நேரத்தில் அவர் தம்பி உங்கள் கட்சியில் இருந்த காலத்தில் அவர் நிலப்பிரபு என்பது உங்களுக்குத் தெரியாதா? சுயமரியாதை இயக்கத்திலிருந்து பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வந்த அர்சுனன் அவர்கள் நிலப்பிரபு இல்லையா? நன்கு யோசிக்க வேண்டும்.

திரு. இராம. அரங்கண்ணல்: மதிப்பிற்குரிய குமாரசாமி அவர்கள் பழைய அரசியல்வாதி. இறந்தவரைப் பற்றிப் பழித்துப் பேசக்கூடாது. ஆனால் அவரது துணைவியார் பார்வதி அர்ஜுனன் அவர்கள் எங்கள் கட்சியில் இருக்கின் றார்களா? அர்த்தநாரீஸ்வர கவுண்டர் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, மதிப்பிற்குரிய இந்திராகாந்தி அவர்கள் கட்சி என்றுகூட சொல்லவில்லை—அவர் களுடைய பெயரை இங்கே இழுக்க விரும்பாததுதான் காரணம்—ஆனால் சோஷலிஸ தத்துவம் பேசிக் கொண்டிருக்கும் ஆளும் காங்கிரசின் மாவட்ட தலைவர் அவர். விட்டுவைத்தது தவறுதான். விரைவில் செயல்படுங்கள் என்று சொன்னார்கள் சுப்பிரமணியம் அவர்கள். விட்டுவைத்தது நாங்கள் இல்லை. வேறு கட்சி. இன்று நடவடிக்கை எடுக்கிறோம். ஆனால் ஆளும் கட்சியில் இருந்துகொண்டு சோஷலிஸ தத்துவம் பேசிக்கொண்டிருக்கும் அவர் **என்ன**

செய்திருக்க வேண்டும்? அர்த்தநாரீஸ்வர கவுண்டர் அவர்கள் "எனக்குள்ளது 700 ஏக்கர். இதில் 690 ஏக்கரைத் திருப்பித் தந்துவிடுகிறேன், எடுத்துக்கொள் ளுங்கள்" என்று சொல்லியிருக்க வேண்டும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: அன்றையதினம் சோஷலிஸ்டு கட்சி சோற்றுக் கட்சி என்று கேலி பேசியவர்கள்தான் இன்று சோஷலிஸம் பேசிக்கொண்டு பதவியில் இருக்கின்றார்கள் இங்கே.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படி கேலி பேசியவர்கள் யார் என்பதைச் சொல்லுங்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இன்று முதலமைச்சராக வீற்றிருக்கும் அன்றைய கலைஞர் அவர்கள்தான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒரு பெரும் தவறான தகவலை வைத்து கொண்டு மதிப்பிற்குரிய சுப்பிரமணியம் அவர்கள் பேசுகின்றார்கள் என்று ஐயப்படுகிறேன். சோஷலிஸ்டு கட்சி சோற்றுக் கட்சி என்று சொல்லவில்லை. வேண்டுமானால் சோஷலிஸ்டு கட்சிதான் ஏழைகளுக்குச் சோறு போடும் கட்சி என்று சொல்லியிருக்கலாம். தவறாகக் காதில் வாங்கிக்கொண்டாரோ என்று அஞ்சுகிறேன். ஆனால் அர்த்தநாரீஸ்வர கவுண்டர் போன்ற பெரும் நிலக்கிழார் மாவட்ட மாநாட்டின் தலைவராக இருந்துகொண்டு சோஷலிஸம் பேசும் பாணி உலகத்தின் விந்தைகளிலே விந்தையாகும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பல லட்சம் ரூபாய்களை படத்தில் வாங்கும் ஒருவர் சோஷலிஸம் கொண்டாடும் ஒரு கட்சியின் பொருளாளராக இருப்பது மட்டும் எப்படி பொருத்தமாக இருக்கும் என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: படத்தில் நடிக்க வாங்கும் தொகைக்கு கணக்கு இருக்கிறது. அதை அங்கே பார்த்துக்கொள்ளலாம். ஆனால் நிலச்சீர் திருத்தத்தின்கீழுள்ள உச்சவரம்பு விதிகளையெல்லாம் ஏமாற்றிவிட்டு, 'நாங்கள் விவசாயிகளுக்காகப் பாடுபடுகிறோம்' என்று மாநாட்டுக்குத் தலைமை தாங்கி சோஷலிஸம் பேசுகின்றார்களே, அந்த அசிங்கத்தைப் பற்றித்தான் இப்போது இங்கே பேசுகிறோம்.

திரு. இராம. அரங்கண்ணல்: திரு. சுப்பிரமணியம் அவர்கள் உண்மை யிலேயே சோஷலிஸ வாதி. அவரது சோஷலிஸம்பற்றி எனக்குத் தெரியும். அதுபோன்று நமது சகோதரி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் உண்மை யிலேயே சோஷலிசவாதிதான். சோஷலிசம் என்றால் சமதர்மம்.

[திரு. இராம. அரங்கண்ணல்] [1972 ஆகஸ்ட் 10

அவர்கள் தமது பணியை எல்லாக் கட்சிகளுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்க வேண்டும், தமது பணிகள் எல்லாக் கட்சிகளுக்கும் பயன்பட வேண்டும் என்று ஒவ்வொரு கட்சியிலும் அதைப் பகிர்ந்து கொடுக்கின்றார்கள். அவர் சோஷலிஸ வாதிதான்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் என்ன சமதர்மவாதி இல்லை என்று சொல்லுகிறார்களா அல்லது கிண்டலாகச் சொல்லுகிறாரா? அவர் என்ன சொல்லுகிறார்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நண்பர் அரங்கண்ணல் சொல்லுவது, இதுவரையில் ஸ்தாபன காங்கிரஸில் பரப்பிய சோஷலிஸம் போதும், அதை நிறுத்திவிட்டு இனி தேசிய காங்கிரஸில் அதைப் பரப்பலாம் என்று பணியாற்றுகின்றீர்கள் என்றுதான் குறிப்பிட்டார்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இது எங்கள் குடும்பச் சண்டை. அங்கேயிருந்தோம் இங்கே வந்தோம். ஆனால் உங்கள் கட்சியில் எவ்வளவு பேரை இழுத்துக்கொண்டு இருக்கின்றீர்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆக, ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்குப் போனவர்கள் எல்லாம் இழுக்கப்பட்டவர்கள் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: எங்கள் கட்சிகளுக்குள் வித்தியாசம் இல்லை. லட்சியத்தில் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆக, இரண்டு காங்கிரஸுக்கும் கொள்கையில் வித்தியாசம் இல்லை என்று சொல்லிவிட்டீர்கள். இதை நான் மாண்புமிகு இந்திரா காந்தி அவர்களுடைய கவனத்திற்கு இந்தச் சபையின் மூலம் அனுப்பி வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, நம்பிக்கையில்லாத் தீர்மானம்பற்றி விவாதம் செய்வது பொருத்தமாக இருக்கும். சோஷலிஸம் பற்றிய விவாதத்திற்கு வேறு மேடையைப் பார்த்துக்கொள்ளலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சோஷலிஸ்டுகள் என்றால் யார் என்று ஆளும் கட்சியிலிருந்து ஸர்டிபிகேட் பெற இங்கு யாரும் தயாராக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கூடியவரையில் தனிப்பட்டவர்களைப் பற்றி விவாதம் செய்யாமல் இருந்தால் நல்லது.

1972 ஆகஸ்ட் 10]

திரு. இராம. அரங்கண்ணல்: சோஷலிஸ்டுகளைப் பற்றிப் பேசவேண்டிய அவசியம் வந்ததற்குக் காரணம் இன்று அந்தத் தத்துவம் பற்றி அனைவருமே பேசுகிறோம். ஆனால் மாடி வீட்டில் பூத்த ரோஜா அல்ல சோஷலிசம். அது மண்ணில் பூத்த ரோஜா. எங்கள் முதலமைச்சர் மாடி வீட்டில் பூத்த ரோஜா அல்ல, மண்ணில் பூத்த ரோஜா. எனவே, எங்களைப் பொறுத்தவரையில் சோஷலிஸத்தில் உண்மையிலே நம்பிக்கை கொண்டவர்களை மதிக்கிறோம். அம்மையார் அவர்களைக் கிண்டல் செய்யவில்லை. மதிப்பிற்குரிய கே. டி. கே. அவர்களுடைய சோஷலிஸம் பற்றிச் சந்தேகம் கொள்ளவில்லை. இன்றைக்கு அவர் சோஷலிஸத்தைத் தாண்டி கம்யூனிஸத்திற்கே போய்விட்டவர்.

ஆக, அர்த்தநாரீஸ்வர கௌண்டர் போன்றவர்களை, 700 ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு சோஷலிசம் பேசுகின்றவர்களையெல்லாம் சேர்த்துக்கொண்டு இந்தக் கிளர்ச்சிக்குத் திட்டம் போட்டார்கள். சில ஏழை விவசாயிகள் நம்பினார்கள் 'இவர்களை நம்பினால் நமக்குப் பலன் கிடைக்கும்' என்று. நண்பர் குமாரசாமி அவர்களைக்கூட குற்றம் சொல்லவில்லை. ஆனால் இப்படிப்பட்ட நிலப் பிரபுக்களுடைய பின் அணியில் இந்த இயக்கம் உருவாக்கப்பட்டதன் விளைவாகத்தான் இதை உபயோகித்து பலாத்காரத்திற்கு வழிகாண விரும்பியவர்கள் இதை நன்கு பயன்படுத்திக்கொண்டார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் முதலமைச்சர் அவர்கள் பல முறை எடுத்துச் சொன்னார்கள், பேச்சுக்களின் மூலம் பிரச்சினைக்குப் பரிகாரம் காணலாம் என்று. ஆனால் யாராவது ஒருவர் முன்வந்து பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்றார்களா? ஆளும் காங்கிரசைப் பொறுத்தமட்டில் உடனடியாக டி.என்.சி.சி. கூட்டத்தைக் கூட்டுகிறது. தீர்மானம் போடுகிறார்கள், 'விவசாயிகளுடைய போராட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று'. அந்தக் கூட்டத்திற்கு யார் வந்திருக்கிறார்கள் என்று பார்த்தால் யூனியன் அமைச்சர் மோகன் குமாரமங்கலம், அவர்கள் வந்திருக்கின்றார்கள். இன்னொருவர் உள்துறை அமைச்சர் கே. எஸ். இராமசாமி அவர்கள். இவர்களை வைத்துக்கொண்டு டி.என்.சி.சி. கூட்டத்தில் தீர்மானம் போடுகின்றார்கள். இன்றைக்கு அமைச்சர்கள்தான். ஆனால் நாளைக்கு அவர்கள் மீண்டும் இங்கே வந்து மக்களிடம் ஓட்டுக்காக வந்துதான் தீரவேண்டும். அவர்கள் இவற்றையெல்லாம் தூண்டிவிட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அவர்கள் அங்கே உட்கார்ந்துகொண்டு இருக்கின்றார்கள். ஆளும் காங்கிரஸ் டி.என்.ஸி.ஸி. யைக் கூட்டி அவர்கள் முன்னால் தீர்மானம் போடுகின்றார்கள். 'அங்கே போய்ப் பார்த்தோம், இங்கே போய்ப் பார்த்தோம், அங்கே மோகன் வந்தார் இங்கே மோகன் வந்தார்' என்றெல்லாம் மதிப்பிற்குரிய கே. டி. கே. தங்கமணி அவர்கள் அடிக்கடி சொன்னார்கள். அது பிரச்சினை இல்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் உதவியைப்பெற்று உயர்ந்தவர்கள் எல்லாம் இன்றைக்கு நம்மைக் குறை கூறுகிறார்கள். நாம் யார் யாருக்கு உதவி செய்தோமோ அவர்களே இன்றைக்கு நம்மை எதிர்க்கிறார்கள். அது நம்முடைய அதிர்ஷ்டவசம். தி.மு. கழகத்திற்கு அது ஒரு வரப்பிரசாதம் என்றுதான் எண்ணவேண்டியிருக்கிறது. இப்போதுள்ள நிலையில் எல்லோருமாகச் சேர்ந்து தி.மு. கழக அரசை அகற்றிவிட வேண்டும் ; அதைக் கவிழ்த்துவிட வேண்டும் என்று நினைக்கிறார்கள். அதற்கு ஒரு சாதனமாக இருக்குமென்று இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

அங்கே அது நடக்கிறது, இங்கே இது நடக்கிறது ; போலீஸார் போகவில்லை—நடவடிக்கை எடுக்கவில்லை, லா அன்டு ஆர்டர் கெட்டு விட்டது என்றும் சொல்கிறார்கள். சுராஜ்யா பத்திரிகையிலே எழுதுகிறார்கள். பத்திரிகையிலே பார்த்தவுடன் தமிழ்நாட்டிலே அது நடக்கிறது, இது நடக்கிறது பார்த்தீர்களா என்று கிளர்ச்சி நடத்துகிறார்கள். வன்முறையைத் தூண்டுகிறார்கள். எப்படியாகிலும் முன்னேற்றக் கழக அரசைக் கவிழ்த்துவிட வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டு மக்கள் அப்படி அராஜகத்தில் ஈடுபடுபவர்கள் அல்ல ; வன்முறையில் ஈடுபடுபவர்கள் அல்ல என்பதை நாம் நன்கறிவோம்.

சிம்சன் நிறுவனத்தைப் பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். சிம்சன் பிரச்சினையை வைத்தே இந்த மாநிலத்தை அலைக்கழிக்க வேண்டுமென்பது பலருடைய ஆசை. ஆனால் அதற்கு யாரும் செவி சாய்க்க மாட்டார்கள். அந்தக் கம்பெனியை நல்ல முறையில் நடத்துவதற்காக—சுமூகமான முடிவு ஏற்படுவதற்காக முன்னேற்றக் கழகத் தலைவர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள். ஒரு சுமுகமான நிலை ஏற்படக்கூடிய நேரத்தில் மோகன் குமாரமங்கலம் தலையிட்டால் மீண்டும் குழப்பமான நிலை உருவாகியுள்ளது. அவருடைய திறமையில் நமக்கு சந்தேகமில்லை. அவர் கம்யூனிசத்தை நன்கு கற்றவர். பெரிய தலைவர். மெத்தப் படித்தவர்—லண்டனிலே போய் கம்யூனிசத்தைப் படித்து வந்தவர். அவருடைய தலையிட்டால் கிளர்ச்சி உருவாகிறது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிற டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட அம்மாதிரியான போக்கை வெறுப்பவர். எனக்கு நன்றாகத் தெரியும், ஹாண்டே அவர்கள் சமாதானப் பிரியர். எப்பொழுதும் சமாதானத்தையே விரும்புபவர். சிம்சன் தகராறில் ஒரு சுமுகமான முடிவு ஏற்படுவதற்காக முதலமைச்சர் அவர்கள் என்னை அனுப்பினார்கள். நான் சிம்சன் தொழிலாளர்கள் அனைத்துத் தரப்பினரையும் சந்தித்தேன். அவர்கள் எல்லோரும் என்னுடன் நல்ல முறையிலே அணுகினார்கள். தொழிலாளர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக

இருந்தாலும் அவர்கள் நம்முடைய சகோதரர்களே. அவர்கள் எப்படியாவது சிம்சன் கம்பெனி திறக்கப்பட்டு, உள்ளே போய் வேலை செய்ய வேண்டுமென்ற ஆவல் உள்ளவர்களாக இருக்கிறார்கள். வேலைக்குச் செல்லத் தயாராக இருக்கிறார்கள். விரைவிலே அந்தக் கம்பெனி திறக்கப்படுவதற்கு முயற்சி செய்து வருகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மூடிக்கிடக்கின்ற சிம்சன் தொழிற்சாலையைத் திறப்பதற்கு முயற்சி எடுத்து வருவதாகச் சொன்னீர்களே. அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : தொழிலாளர்களைச் சந்தித்து, ஒரு சுமுகமான முடிவை உருவாக்குவதற்காக முதலமைச்சர் அவர்கள் என்னை அனுப்பியிருக்கிறார்கள். தொழிலாளர்கள் மத்தியில் கோபமோ விரோதமோ இருக்கக் கூடாது. பிரச்சினைகளை எல்லோரும் கலந்து பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்று சொன்னேன். என்னுடைய இந்த முயற்சிக்கு மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். மனிதர்கள் அன்புடன் பழகவேண்டும். அந்த அன்பு உள்ளம் இல்லையென்றால்—மாறுபட்ட கருத்துக்கள் இருக்குமானால் முன்னேற முடியாது. அந்தத் தொழிலாளர்கள் அன்புள்ளம் கொண்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் சில சிக்கல்கள் இடையிலே அவர்களை அலைக்கழித்துக் கொண்டிருக்கின்றன. அவைகளை நான் இங்கே சொல்லக்கூடாது. சொன்னால் அதனால் மேலும் பல பிரச்சினைகள் வரும். அது விரும்பத்தக்கதல்ல.

இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லை என்று சிலர் சொன்னாலும் நாட்டு மக்கள் இந்த அரசின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த அரசாங்கம் நீடித்து நிலைத்திருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்ட பின்னால், தமிழ்நாடு எந்தத் துறையிலே சோடை போயிருக்கிறது ? இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற எல்லா மாநிலங்களையும் எடுத்துக்கொள்வோம். எந்தத் துறையிலே முன்னேற்றக் கழகம் பின்தங்கி இருக்கிறது ? முன்னேற்றக் கழகம் வந்த பின்னால் பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டிருக்கின்றன. பெரிய பஸ் முதலாளிகளை நீக்கிவிட்டு—அவர்களை ஒழித்துவிட்டு என்ற வார்த்தையைக் கூட சொல்லவில்லை—தமிழ்நாட்டிலே பஸ்களைத் தேசியமயமாக்கியிருக்கிறோம். இது ஒரு சாதனையா இல்லையா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இந்தியாவிலேயே ஒன்றிரண்டு மாநிலங்களைத் தவிர வேறு எந்த மாநிலத்திலாவது அதைச் செய்திருக்கிறார்களா என்று கேட்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

[திரு. இராம. அரங்கண்ணல்]

அதுமட்டுமல்ல. 224 கோடி ரூபாயாக இருந்த வருமானத்தை நம்முடைய முன்னேற்றக் கழக அரசு 394 கோடி ரூபாயாக உயர்த்தி இருக்கிறதா இல்லையா? நான் பொருளாதார நிபுணர்களைக் கேட்க விரும்புகிறேன், எந்தத் துறையிலாவது நாங்கள் பின்னடைந்திருக்கிறோமா? வருமானத்தைப் பெருக்கிய அதே நேரத்தில் எங்காவது கெடுபிடி செய்திருக்கிறோமா? இல்லையே. ஏழை எளியவர்களுக்கு, சிறிய வியாபாரிகளுக்கு விலக்குகள் அளித்திருக்கிறோம். முன்பு 10,000 ரூபாய்வரை விற்று முதல் செய்யக் கூடியவர்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அதை 15,000 ரூபாயாக உயர்த்தினார்கள். கலைஞர் அவர்கள் 15,000 அல்ல, 25,000 என்ற அளவுக்கு சலுகை அளித்துள்ளார்கள். முன்பு 75,000 ரூபாய்வரை வருமானம் உள்ளவர்கள் 'கம்பவுண்டிங்' வரி செலுத்தலாம் என்றிருந்தது. அதை இப்போது ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. முன்பு விற்பனை வரிக்கு உட்பட்டிருந்த சுமார் 110-க்கு மேற்பட்ட பொருட்களுக்கு இப்போது விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. உப்பு, தேங்காய், அரிசி மாவு, தென்னை நார் போன்ற 110 பொருட்களுக்கு மேல் விலக்களிக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் முன்னேற்றக் கழக அரசின் சாதனையா இல்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. 1,500 பேர் வாழுகின்ற கிராமங்களுக்கெல்லாம் சாலை போட்டுத் தீரவேண்டுமென்ற திட்டத்தை அகில இந்தியாவிலேயே இந்த மாநிலம் தான் போட்டிருக்கிறது. எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று திட்டமிட்டு, ஒரு முன்னோடி மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறதே. இது சாதனை இல்லையா?

அடுத்து குடிசைப்பகுதிகளை மாற்றி செம்மைமிகு வீடுகளை அமைத்துக் கொடுக்க குடிசைமாற்று வாரியத்தை அமைத்திருக்கிறோம். அதற்கு நான் பொறுப்பு வகிக்கின்ற காரணத்தால் அதைப்பற்றி இங்கே அதிகமாகப் பேசுவது பொருத்தமுடையதாகாது என்று நினைக்கிறேன்.

25 வருட காலமாக குடிநீர் வேண்டும், புரொட்டெக்டெட் வாட்டர் வேண்டும், புரொட்டெக்டெட் வாட்டர் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தோமே. கிடைத்ததா? இன்று அதற்காக ஒரு வாரியத்தையே ஏற்படுத்தி—குடிநீர் வாரியத்தை ஏற்படுத்தி, நகரில் இருப்பவர்களுக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் தூய குடிநீர் கிடைக்க வேண்டுமென்று ஒரு திட்டத்தைப்போட்டு, 20 கோடி ரூபாய் செலவில் இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத அளவுக்கு

1972 ஆகஸ்ட் 10] [திரு. இராம. அரங்கண்ணல்]

இங்கே செயல்படுத்திவருகிறோம். இது பாராட்டுக்குரியதல்லவா? (மணியடிக்கப்பட்டது) இன்னும் 10 நிமிடங்கள் பேசுவதற்கு அனுமதி கேட்கிறேன். (டாக்டர் எச். வி. ஹாண்டே: பேசுங்கள்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் (டாக்டர் ஹாண்டே) எப்படி பேசச் சொல்லலாம்?' பேசுவதற்கு அனுமதி கொடுக்க வேண்டியது நான். இன்னும் ஐந்து நிமிடத்தில் முடித்துவிடுங்கள். ஏற்கெனவே நீங்கள் 45 நிமிடம் பேசிவிட்டீர்கள்.

திரு. இராம அரங்கண்ணல்: அகில இந்தியாவிலேயே பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று ஒரு அமைச்சரை நியமித்திருப்பது தமிழ்நாட்டில்தான். அமைச்சர் நியமிக்கப்பட்டது மட்டுமல்ல. பிற்படுத்தப்பட்டவர்களுக்குச் செலவிடப்பட்ட தொகையின் அளவும் அதிகரித்துள்ளது. 1956-ம் ஆண்டுவரை பிற்படுத்தப்பட்டவர்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை 90 லட்சம் ரூபாய். இன்றையதினம் கிட்டத்தட்ட அவர்களுக்காக நாலே முக்கால் கோடி செலவிடப்படுகிறது. இது அரசின் சாதனையா இல்லையா என்று கேட்க ஆசைப்படுகிறேன். முக்குலத்தோருக்கு 3 கல்லூரிகள், யாதவர்களுக்கு ஒரு கல்லூரி, ஹரிஜன மக்களைப் பொறுத்தவரையில் 1966-67 இல் இருந்ததைவிட இரண்டு மடங்கு தொகை அதிகப்படுத்தப்பட்டு இன்றைக்கு 3 கோடி செலவிடப்பட்டது என்றால் இன்றையதினம் 8 கோடி ரூபாய் ஹரிஜன மக்களுக்காகச் செலவிடப்படுகிறது. கல்வித் துறைக்கு 1966-67 இல் 44 கோடி என்றால் இப்போது 96 கோடி ரூபாய், கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அதிகமாகச் செலவிடுகிறோம். 1966-67 இல் 105 கல்லூரிகள். இன்றையதினம் 64 கல்லூரிகள் அதிகமாக்கப்பட்டிருக்கின்றன. அன்று 2,300 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன என்றால் இன்றைக்கு 2,600 உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. இதுபோல சாதனைகளை விவரித்துக் கொண்டே போகலாம். நேரம் இல்லாத காரணத்தினால் சுருக்கிக்கொள்கிறேன்.

விடுதலைப்பெற்று வெள்ளிவிழாக் கொண்டாடுகிற 25 ஆம் நல்லாண்டில் தான் இன்றையதினம் டெல்லியினர் தமிழ்நாட்டைப் பாராட்டி கேடயம் வழங்குகின்றனர். அரிசி உற்பத்தியிலே தமிழ்நாடுதான் முன்னணியில் இருக்கிறது என்பதற்காக, இத்தகைய பெருமைமிக்க கேடயத்தை தமிழ்நாட்டுக்குப் பெற்றுத் தந்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அல்லவா? சிந்திக்க வேண்டும், திராவிட முன்னேற்றக் கழகத்தினிடத்தில் மக்கள் நம்பிக்கை வைத்தார்கள். வைத்திருக்கிறார்கள். எதிர்காலத்திலும், வைக்கத்தான் போகிறார்கள், இன்றைக்கு நம்பிக்கை இன்மைத் தீர்மானம் கொண்டு

வந்துள்ளவர்களைப் பார்த்து நான் சொல்கிறேன். பலாத்காரத்தைத் தூண்டி விட வேண்டுமென்றே யாரோ சதி செய்கிறார்கள், யாரோ இம்போர்ட் செய்கிறார்கள். (குறுக்கீடு) திரு. கே. டி. கே. தங்கமணிக்கு என்ன இந்த அலர்ஜி?

திரு. கே. டி. கே. தங்கமணி: அப்படி நீங்கள் பேசுகிறபோது ஒரு அலர்ஜி இருக்கத்தான் செய்கிறது. யார் பலாத்காரத்தைத் தூண்டிவிடுகிறார்கள் என்பதை விளக்க வேண்டும்.

திரு. இராம. அரங்கண்ணல்: மற்றவர்கள் உயிரை பலியிடவேண்டுமென்கிற சக்திகள் தமிழ்நாட்டில் தலைதூக்கவிட முடியாது. அதைத் தமிழ்நாட்டில் உரு வாக்கிவிட வேண்டாம் என்றுதான் தெரிவித்துக்கொள்கிறேன். கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை எந்த இடமாக இருந்தாலும் ஒட்டிகொள்வது—வன்முறைகளைத் தூண்டுவது—பழியை அரசாங்கத்தின் மீது போடுவது—எத்தனை நாளைக்கு இந்த அரசியல்?

திரு. கே. டி. கே. தங்கமணி: பலாத்காரத்தைக் கையாண்ட விவரங்கள் எல்லாம் இருக்கின்றன. அதை எடுத்துப் பார்த்தால் கம்யூனிஸ்ட் கட்சி யினுடைய செயல்கள் அதிகமா, எவற்றின் செயல் அதிகம் என்று தெரியும். அந்தப் பட்டியலை எடுத்துப் பார்த்தாலே போதும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பலாத்காரம் செய்திருக்கிற புள்ளி விவரத்தைப் பார்த்தாலே தெரியும் என்கிறார். பலாத்காரம் செய்வதையே தம் கொள்கையாக சில அரசியல் கட்சிகள் வைத்துக்கொண்டிருப்பதையும் நாடு உணரும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து திரு. கே. பி. கோபால் பேசுவார்.

திரு. கே. பி. கோபால்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று பேரவையில் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆத ரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்பிக்கை இல்லை என்று சொல்வதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று—அரசு நிர்வாகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பெரும் அளவு தலையிடுகிறார்கள் என்பதும் ஒன்று. முன்பு பேசிய உறுப்பினர் குறிப்பிட் டார்கள், தாங்கள் அறிஞர் அண்ணா வழியில் செல்கிறவர்கள்—நிர்வாகத்தில் தலையிடுவதில்லை என்று,

ஒரு உதாரணம் சொல்கிறேன். பெரியகுளம் கோட்டாட்சித் தலைவர் 8—6—72இல் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார். அட்டை கார்டுகள் மூலம் அரிசி, ஜீனி விநியோகம் பற்றி—எல்லையோரப் பகுதிகளில் உள்ள மக்களுக்குக் கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலம் விநியோகிக்க வேண்டும் என்பது அந்த உத்தரவு. அடுத்த ஒரு வாரத்திற்குள் அவரே 17649/72 A4 16—6—72-இல் தான் போட்ட உத்தரவை மாற்றி ஒரு தனிப்பட்ட நபருக்கு அந்த அனுமதியை அளித்து உத்தரவு போட்டிருக்கிறார். அதற்கான காரணம் என்ன என்று சொல்கிறார் தெரியுமா?

Petition of Thiru Jagadeesan, dated 15th June 1972 and oral representation of Thiru Rajangam, M.P. thereon,

என்பதாகப் பாராளுமன்ற உறுப்பினர் ராஜாங்கம் நேரில் கேட்டுக்கொண்ட தற்கு இணங்க, மனுப்போட்ட சகதீசன் என்பவருக்கு 5 வார்டுகளுக்குச் சப்ளை செய்ய உத்தரவு போடுகிறேன் என்கிறார். கூட்டுறவு ஸ்தாபனத்திற்கே 4 வார்டுகள் தான். இந்தத் தனிப்பட்ட நபருக்கு 5 வார்டுகள். இந்த சகதீசன் திரு. ராஜாங்கத்தினுடைய மைத்துனர். இது அரசியல் தலையீடு இல்லாமல் வேறு என்ன?

மேலும் குடும்ப கார்டு முறை அமலுக்கு வந்து தனிப்பட்ட முறையில் கார்டுகள் எல்லாம் வழங்கப்பட்ட பிறகும் சில தனிப்பட்டவர்களுக்கு சொந்த முறையில் அரசி கொண்டுவர நோ அப்ஜக்ஷன் சர்டிபிகேட் கொடுக்கிறார்கள். அவர்கள் அரிசியைக் கொண்டுவந்து மக்களுக்கு விநியோகிப்பதில்லை. அடுத்த மாநிலத்திற்குக் கடத்தல் செய்கிற தன்மையைத் தான் பார்க்கிறோம். இப்படி எதற்காக அனுமதி வழங்க வேண்டும்?

நேற்றுப் பேசிய உணவு அமைச்சர் அவர்கள் கள்ளக் கடத்தல்காரர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்படுகிற அரிசி 10% நன்கொடையாக அளிக்கப்பட்டு விடுகிறது, செய்தியைச் சொல்பவர்களுக்கு ஆயிரம் நன்கொடை அளிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் கூடலூர் பகுதியில் இதுபோல கைப்பற்றப்படுகிற அரிசியைத் தனிப்பட்டவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு மாறாக அரசாங்க கிடங்குகளுக்கு அனுப்பலாம். அல்லது கிராமச் சாவடி மூலம் மக்களுக்கே விநியோகிக்கலாம். தனிப்பட்டவர்களிடத்தில் கொடுப்பது எந்த வகையில் நியாயம் என்பது புரியவில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பெல்ட் ஏரியாவில் இருக்கிறவர் களுக்குக் கார்டுகள் கொடுத்திருக்கிறோம். விநியோகம் செய்யும் பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. கன்னியாகுமரியைப் பொறுத்தவரையில்தான்

அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது. பறிமுதல் செய்த அரிசி தனிப்பட்டவர்களுக்குக் கொடுத்திருப்பதாக உறுப்பினர் சொல்கிறார். ஸ்டாக் பண்ண இடம் இல்லாத காரணத்தினால் கூடக் கொடுத்து வைத்திருக்கச் சொல்லியிருக்கலாம். அதை விசாரிக்கிறேன்.

அடுத்து, கூட்டுறவு சங்கத்திற்குக் கொடுக்காமல் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கலாமா என்றார். கூட்டுறவு சங்கம் ஓரிடத்தில் சரியான முறையில் இயங்கவில்லை என்றால், அங்கே கூட்டுறவு சங்கத்தின் மூலம் கொடுக்க முடியாது. அதற்காகக் கொடுக்காமலும் இருக்க முடியாது என்கிற நிலையில் தனிப்பட்டவர்கள் மூலம்தான் கொடுக்க வேண்டியிருக்கிறது. சென்னையிலேயே ஒரு கூட்டுறவு சங்கம் சரியாக நடைபெறவில்லை. அதற்காக இங்குள்ள மக்களுக்கு ஜீனி கொடுக்காமல் இருக்க முடியுமா? வேறு யாரை விட்டாவது கொடுத்துத் தான் தீரவேண்டும். அது தப்பாக முடியாது.

திரு. கே. பி. கோபால்: அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நான் குறிப்பிட விரும்புவது, பெரியகுளம் கோட்டாட்சித் தலைவர் இரண்டாவதாகப் பிறப்பித்த, 16—6—72 உத்தரவில் அந்த கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமங்கள் ரத்து செய்யப்படவில்லை. உரிமங்களையெல்லாம் ஒரு தனிப்பட்ட பாராளுமன்ற உறுப்பினருடைய மைத்துனருக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று தான் சொல்ல விரும்புகிறேன். அந்த ஆணையின் நகலைக் கூட, வேண்டுமானால், கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

மற்றும், மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்களுடைய நியாயமான கோரிக்கைகள் கூட ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதற்கு என்னுடைய சொந்த அனுபவத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கேரள மாநிலத்தையொட்டி, பெல்ட் ஏரியா என்று கூறப்படுகிற இடத்தில் எங்களுக்கு ஏலக்காய்த் தோட்டம் இருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர் இராஜாங்கம் அவர்களுடைய உறவினர்களுக்கும் அங்கு ஏலக்காய்த் தோட்டங்கள் இருக்கின்றன. அவர்களுடைய உறவினர்கள் சார்பில் 16—10—1967-ல் ஒரு மனு கொடுக்கப்படுகிறது. தங்களுக்கும், ஏலக்காய்த் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் அரிசி எடுத்துச் செல்ல அனுமதி வேண்டும் என்று மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. 24—10—67-ல் ஒரு உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 8 நாட்களுக்குள் அனுமதி அளித்து ஒரு உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்திரவை மேற்கோளாகக் காட்டி, நாங்களும் மற்ற விவசாயிகளும் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு மனுவைக் கொடுத்தோம். அவர்களுடைய தோட்டங்களுக்குப் பக்கத்தில் எங்களுடைய தோட்டங்களும் இருக்கின்றன. ஆகவே, எங்களுக்கும் அரிசி எடுத்துச் செல்ல அனுமதி வேண்டு

மென்று கேட்டோம். மீண்டும் 1969-ம் வருடம் ஆகஸ்டு மாதம் நினைவூட்டும் கடிதம் ஒன்று அனுப்பினோம். இருந்தாலும், 10—10—69 தேதியிட்ட உணவு இலாகா உத்தரவில், நவதானியங்கள் மட்டும்தான் கொண்டு செல்ல முடியுமே தவிர, அரிசி கொண்டு செல்ல முடியாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே ஆண்டு, டிசம்பர் மாதம், மீண்டும் ஒரு மனு கொடுத்ததற்குப் பின்பு, 1970-ம் ஆண்டு அக்டோபர் மாதம் எங்களுக்கு அனுமதி அளித்து உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். இதிலிருந்து, தங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு 10 திங்களிலே இந்த உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதும், ஆனால் நாங்கள் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் கேட்டதற்கு, 1970-ம் ஆண்டு அக்டோபர் மாதம்தான் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதும் தெரிகிறது. மாற்றுக் கட்சியினருக்காக இந்தப் பாகுபாடு காட்டப்பட்டிருக்கிறது என்றுதான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அரசு நடுநிலையாக இருந்து அரசாங்கக் கொள்கைகளை விமர்சிக்கும் பத்திரிகைகளுக்குப் பாதுகாப்பு அளிக்காமல், காழ்ப்புணர்ச்சி காட்டுகிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே இந்த அரசின்மீது நம்பிக்கையில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சிம்சன் விவகாரத்திற்கும் அலை ஓசைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. இருப்பினும், அலை ஓசை அலுவலகம் ஒரே நாளில் மூன்று முறை தாக்கப்பட்டிருக்கிறது. மேலும், துக்ளக் பத்திரிகை, அரசாங்கத்தின் மீது குறை சொல்லுபவர்களுடைய கடிதங்களையும் அதற்கு அரசு அதிகாரிகளுடைய விளக்கங்களையும் பிரசுரித்துக் கொண்டிருந்தது. அது அரசாங்கத்திற்கும் நல்லது. ஒரு சில அதிகாரிகள் தவறு செய்தால், அதை அரசாங்க கவனத்திற்குக் கொண்டு செல்ல முடியாது. துக்ளக் இப்படி, அதிகாரிகளுடைய விளக்கத்தை வெளியிட்டு வந்ததன் காரணமாக, எந்த விளக்கத்தையும் கொடுக்கக் கூடாது என்று அரசாங்க அதிகாரிகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

கடலூரிலே என். எஸ். கே. பொன்னையா கவுடர் உயர்நிலைப் பள்ளிக்கு அருகாமையிலே, சாராயக் கடை ஒன்று இருக்கிறது. அதை அப்புறப்படுத்த வேண்டுமென்று நான் மாவட்ட கலெக்டருக்கு மனு செய்தேன். அந்தப் பள்ளிக்கும் சாராயக் கடைக்கும் சுமார் 1½ பர்லாங் தூரம் இருக்கிறது. ஆகவே, அந்த சாராயக் கடை அகற்றப்பட வேண்டியதில்லையென்று கலெக்டர் அவர்கள் சொன்னார்கள். நான், உடனே, முதலமைச்சர் அவர்களுக்கு, அந்தப் பள்ளிக்குச் செல்ல ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. 1½ பர்லாங், 3 பர்லாங் இடைவெளி என்பதல்ல. பள்ளிக்கூடத்திற்குப் போவதற்கும் வருவதற்கும் இடையூறாக சாராயக் கடை இருக்கிறது. ஆகவே, அதை மாற்ற வேண்டுமென்று நான்

கோரினேன். கலால் மற்றும் மது விலக்கு காரியதரிசியிடமிருந்து, இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 22-ம் தேதி ஒரு கடிதம் வந்தது. அதில் பள்ளிக்கூடம் கிராமத்தின் ஒரு புறத்தில் இருக்கிறது என்றும், சாராயக் கடை மறு புறத்தில் இருக்கிறது என்றும் கூறி, நான் கொடுத்த மனுவின் கோரிக்கையைப் பரிசிலனை செய்யாமல் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். கலெக்டர் 1½ பர்லாங் இடைவெளி என்கிறார். ஆனால் கலால், மதுவிலக்கு காரியதரிசி, சாராயக் கடை கிராமத்தின் ஒரு புறத்திலும் பள்ளிக்கூடம் கிராமத்தின் மறுபுறத்திலும் இருப்பதாகக் கூறுகிறார். எனவே, கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. காரணம், அந்த பள்ளிக்கூடத்தின் நிர்வாகி, எம்.எல்.ஏ. வாகிய நான் என்பதை இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்தில் நடந்த விவசாயிகள் போராட்டத்தின்போது, ஜனநாயகத்திற்கும் நியாயத்திற்கும் புறம்பாக இந்த அரசு நடந்து கொண்டது என்பதால் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லையென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். கைது செய்யப்பட்ட விவசாயிகள் மீது என்னென்ன குற்றங்கள் சாட்டப்பட்டிருக்கின்றன என்பதை டாக்டர் ஹாண்டே அவர்களும் கே. டி. கே. தங்கமணி அவர்களும் குறிப்பிட்டார்கள். நானும் அதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாடு சட்டப் பேரவை செய்தித் தாளில் நான் மத்திய சிறைச்சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகச் செய்தி வந்திருக்கிறது. 25—6—71-க்கு ஒரு நாள் முன்னதாகவே நான் மதுரையிலே வைக்கப்பட்டிருந்தேன். என்னுடன் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது வழக்கு தொடர வேண்டும், சட்டமன்ற உறுப்பினர்கள் மேல் வழக்கு தொடர வேண்டாமென்று அரசு கூறியிருக்கிறது. மற்றவர்கள் உறுதியை இழந்து விட வேண்டாமென்று நானும் விவசாயிகளோடு உறுதியாக இருந்தேன். கே. டி. கே. தங்கமணி அவர்களைக் கைது செய்து அன்று மாலையே விட்டு விட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில் நீங்கள் சட்டமன்ற உறுப்பினர்களை நீக்கிவிட்டு மற்றவர்கள் மீது வழக்குப் போட வேண்டுமென்ற நோக்கத்தோடு காரியங்களைச் செய்கிறீர்கள் என்றுதான் கூற விரும்புகிறேன்.

ஜூலை மாதம் 5-ம் தேதி நடந்த பந்தையொட்டி பல உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டதற்குக் காரணம், 2-ம் தேதி நடைபெற்ற விளக்கக் கூட்டங்கள்தான் என்று கூற விரும்புகிறேன். 5-ந் தேதி பந்துக்கு எல்லோரும் தயாராகிக் கொள்ளுங்கள் என்று 2-ம் தேதி விளக்கக் கூட்டங்களில் கூறினார்கள். 144 தடை உத்திரவு யார் யாருக்குப் போடப்பட்டது. யார் யார் தவறு செய்கிறார்களோ,

யார் யார் சட்டம் ஒழுங்குக்குப் பாதகம் விளைவிக்கிறார்களோ, அவர்களை எல்லாம் கைது செய்திருக்க வேண்டும். அப்படி இருக்க ஒரு சாராரைமட்டும் கைது செய்து விட்டு, மற்ற குழப்பம் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் போலீஸ் தவறிவிட்டது.

போடிநாய்க்கனூரிலே ஜூலை 5-ம் தேதி ஒரு மூடப்பட்ட கடையை, ஒரு கூட்டம் திறக்கச் செய்தது. அங்கிருந்த மக்கள் கூட்டம், அவர்களைப் பிரிந்து செல்லுங்கள் என்று கேட்டுக் கொண்டது. ஆனால் வழக்கு தொடரப்பட்டதோ, இந்தப் போராட்டத்தை ஆதரித்தவர்கள் மீது. ஜூலை 3-ம் தேதி மதுரையிலிருந்து திருச்சி சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட பெரியகருப்பன் இறந்ததைப் பற்றி திரு. கே. டி. கே. அவர்கள் சொன்னார்கள். அவர் உடல் நலம் இல்லாதவராக இருந்திருந்தால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருப்பார். ஆனால், அவர் திருச்சி சிறைக்குச் சென்ற ஒரு சில தினங்களிலே இறந்தார் என்றால், அதற்கு இந்த அரசுதான் காரணம் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மதுரை சிறைச்சாலையிலே ஆயிரம் பேர் இருக்கக்கூடிய பகுதியிலே 4,000 பேரை வைத்திருந்தார்கள். மதுரை சிறைச்சாலைக் கண்காணிப்பாளர் ஓரளவு மனசாட்சி உடையவராக இருந்ததால், நாங்கள் கூறிய எங்களுடைய குறைகளை நிவர்த்தி செய்தார். அங்குள்ள ஒரு பகுதியினரை ஜூலை மாதம் 3-ம் தேதி திருச்சிக்கும் பின்பு அடுத்து வேலூருக்கும் மாற்றினார்கள். ஆனால் 'பந்த்'ஐ யொட்டி ஆயிரம் பேர்கள், இரண்டாயிரம் பேர்கள் என்ற அளவில் போராட்ட வீரர்களைக் கைது செய்த நேரத்திலே அந்தச் சிறைச்சாலைகளிலே சுகாதாரம் பாதிக்கப்பட்டது. மதுரையிலிருந்து கைது செய்யப்பட்டவர்களை மற்ற நீதிமன்றங்களுக்குக் கொண்டு சென்றுவிடலாம். ஆனால் அவர்களையெல்லாம் ஒரே பஸ்ஸிலே கொண்டு செல்ல முடியாது, பிரித்தாலும் அவர்கள் எல்லோருக்கும் எஸ்கார்ட் கொடுக்கவும் முடியாது. இந்த நிலையில் அரசாங்கம் தனி பஸ்கள் அவர்களுக்காக ஏற்பாடு செய்து கொடுக்கவில்லை. அவர்கள் மணிக்கணக்காக பஸ்ஸுக்காகக் காத்து நிற்க வேண்டியிருந்தது. ஜூலை மூன்றும் தேதியிலிருந்து வழக்குகள் சம்பந்தமாக நீதிமன்றங்களுக்குச் செல்கிறவர்களுக்கு எஸ்கார்ட் கொடுக்கப்படவில்லை. எனவே, நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்படவில்லை.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

தமிழர் படையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். தமிழர் படை இல்லை என்று மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்கள் பகுதியில் உள்ளவர்கள் சொல்லியதை நான் சொல்கிறேன். எங்கள் பகுதியில் தமிழர்

படை என்ற அட்டையை ஒட்டிக்கொண்டுதான் ஜூலை ஐந்தாம் தேதியன்று ஈடுபட்டார்கள். ஆகவே இந்த வகையில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து இருப்தால் நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.

கோயம்புத்தூரிலும் சென்னையிலும் பெரிய பெரிய மௌன ஊர்வலங்கள் நடைபெற்றன. சென்னையில் நடைபெற்ற ஊர்வலத்தில் ஒன்றரை லட்சம் பேர்கள் கலந்துகொண்டார்கள். நான் மிகைப்படுத்திச் சொல்லவில்லை. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் நேரில் கண்டதை, கூறியதைத்தான் சொல்கிறேன். அந்த மௌன ஊர்வலத்தில் செல்கிறவர்களுக்குக் கூடப் பாதுகாப்பு இல்லாத நிலைமை ஏற்பட்டது. குடந்தை ராமலிங்கம், பிரஸிடென்ஸி கல்லூரிக்கு முன்னாலே அவர் தாக்கப்பட்டார். திண்டுக்கல்லிலே தாக்கப்பட்டார்கள். ஜேம்ஸ் என்பவர் சென்ட்ரல் ஸ்டேஷனிலே தாக்கப்பட்டிருக்கிறார். கல்லூரியில் தேர்தல் நடந்தால், அங்குள்ள மாணவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலைமை இருக்கிறது. மதுரையிலே யாதவர் கல்லூரி, தியாகராசர் கல்லூரி, எஞ்சினியரிங் கல்லூரி, காரைக்குடியிலே கலைக்கல்லூரி மூடப்பட்டிருக்கின்றன. மாணவர்களுக்குக் கூடப் பாதுகாப்புக் கொடுக்க முடியாத நிலைமை இருப்பதால் இந்த அரசின் மீது நம்பிக்கையில்லை என்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கையில்லாத தீர்மானத்தை எதிர்த்து சில வார்த்தைகளை நான் இந்த அவை முன் வைப்பதற்கு முன்பு, துப்பாக்கிச் சூட்டில், துரதிருஷ்டவசமாக தமிழ்நாட்டில் நடைபெற்ற இந்தச் சூட்டிலே இறந்த அனைவருக்கும் என்னுடைய அனுதாபத்தையும் என்னுடைய கட்சியினுடைய அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சைத் துவங்க ஆசைப்படுகிறேன்.

இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய எனது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் மிகத் தயக்கத்தோடு இந்தத் தீர்மானத்தை இந்த அரசுக்கு விரோதமாக இந்தச் சபையிலே எப்படி வாதாடுவது என்ற முறையிலே பேசினார்கள்: சாதாரணமாக, தீர்மானம் கொண்டு வந்திருப்பது இந்த அரசு மீது நம்பிக்கை இல்லை, இந்த அரசை ஆட்சியிலிருந்து அகற்ற வேண்டுமென்று சொல்லித்தான். ஆனால் அவர்களுடைய பேச்சுத் தொடக்கத்தில் இந்த ஆட்சியை அல்லது கட்சியை அல்லது கலைஞர் ஆட்சியை அகற்றுவதை நான் விரும்பவில்லை என்று சொல்லிவிட்டார்கள். அதைப்பற்றி நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். நம்முடைய அருமை நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாதாரணமாக எதிர்க்கட்சியாக இருக்கிற கட்சிகள் ஜனநாயக நாடுகளிலே பார்த்தோமானால் எதிர்க்கட்சித் தலைவர்கள் குறிப்பாக சட்டமன்றத்திலே இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் இயங்குகின்றபோது அதை ஒரு ஷேடோ கேபினட் என்றுதான் சொல்வார்கள். முதலமைச்சர் அவர்கள் அமர்ந்திருக்கின்றார்களே அதற்கு எதிராக அமர்ந்திருக்கின்றவர்கள் எதிர்க்கட்சித் தலைவர்கள், நீ நகன்றால் நான் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன், அதற்குத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லக்கூடிய முறையிலேதான் ஷேடோ கேபினட் என்ற பதத்தைப் போட்டிருக்கிறார்கள். ஷேடோ பிரைம் மினிஸ்டர், ஷேடோ பாரின் மினிஸ்டர், ஷேடோ பைனான்ஸ் மினிஸ்டர், ஷேடோ கேபினட் என்றெல்லாம் சொல்வார்கள். எதிர்க்கட்சித் தலைவர்கள் அவ்வளவு பொறுப்பாக முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு பொறுப்போடு நடந்துகொள்கிறார்களோ, அந்த அளவிற்குப் பொது மக்கள் நலனைக்கருதி, எதிர்க்கட்சித் தலைவர்களும் நடந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் அந்தப் பதத்தைப் போட்டிருக்கிறார்கள்.

நாட்டினுடைய மக்கள் நன்மைகளைக் கருதி, நாட்டு மக்களுடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும், தேவைகளை நாட்டிலே பூர்த்தி செய்வதற்கு ஏற்ற சூழ்நிலை, அமைதி நிலை, சட்டம் பாதுகாக்கப்படுதல் போன்றவற்றை ஏற்படுத்துவது போன்ற கடமைகள் ஆட்சியில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல, ஆட்சியை இறக்கிவிட்டு வரத்தயாராக இருக்கக் கூடியவர்களும்தான் அந்தப் பொறுப்புணர்ச்சியுடனும், கடமையுணர்ச்சியுடனும் நடந்துகொள்ள வேண்டுமென்ற தத்துவத்தை ஜனநாயக மரபுகளை மிகப் பெரிய ஜனநாயகவாதிகள் பெரிய நாடுகளிலே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். 'லாஸ்ட் ரிஸார்ட் டு ரிமூவ் தி கவர்ன்மெண்ட்' தான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது. இந்தக் கடைசி ஆயுதத்தைப் பயன்படுத்துகிறவர்கள், நாம் எல்லாம் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கிறோம், இந்தச் சபைக்கு வருவதற்கு முன்னதாக பல வாக்குறுதிகளைத் தந்து வந்திருக்கிறோம், அவற்றை நிறைவேற்றுகின்ற வகையிலே, மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலே அமைந்திட உதவ வேண்டுமே தவிர, சாதாரணக் காரியங்களுக்காகப் பயன்படுத்தக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும். அவர்களை எனக்கு மிக நன்றாகத் தெரியும். இன்னும் தெளிவாகச் சொன்னால் என்னுடைய பிரதிநிதி அவர்தான். நான் வாணியம்பாடித் தொகுதி மக்களின் பிரதிநிதியாக இருந்தாலும் நான் குடியிருக்கிற பெரியமெட் தொகுதியின் பிரதிநிதியாக டாக்டர் ஹாண்டே அவர்கள்தான் இருக்கிறார்கள். 1967-ஆம் ஆண்டிலே எங்களுக்குக் கட்டளையிடப்பட்டது. திருமதி அனந்தநாயகி அவர்களுக்குத்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1972 ஆகஸ்ட் 1

தெரியும். அண்ணா அவர்களும், காயிதே மில்லத் அவர்களும் கட்டளையிட்டார்கள் டாக்டர் ஹாண்டே அவர்களுக்காக நாங்கள் அந்தத் தேர்தலிலே தெருத்தெரு வாக அலைந்தோம், ஏன், திருமதி அனந்தநாயகி அவர்களுடைய சுடுசொ களையும் தாங்கியிருக்கிறோம். டாக்டர் ஹாண்டே அவர்கள் நிதானப் போக்கு உடையவர்கள்தான். என்னவோ தெரியவில்லை, காலம் மாறுகிறது, மேலது கீழும், கீழது மேலும் செல்கின்ற கொடுமையான காட்சியைப் பார்க்கிறோம்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டுவந்ததைப்பற்றி நான்கூட நினைத்துப் பார்த்தேன். ஏதோ பெரிய குற்றச்சாட்டுகளை அள்ளிவீசப் போகிறார், அதைக் கேட்டு அமைச்சர்கள் எல்லோரும் திணறப்போகிறார்கள் என்று நினைத்தேன். நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறபோது மக்களுடைய வாக்குறுதிகளை மீறி, உணவு இல்லை, இருக்கை இல்லை, உடையில்லை, கல்வி இல்லை, மக்களுக்கு மனமகிழ் சாதனங்கள் இல்லை, சுதந்திரமாக இருக்க வழிவகைகள் இல்லை என்று குற்றச்சாட்டுகளையெல்லாம் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவைகள் ஒன்றையும் சொல்லவில்லை டாக்டர் ஹாண்டே அவர்கள். நாட்டிற்கு என்ன தேவை என்று சொல்லவில்லை. அவர்கள் சொல்லியதெல்லாம், இந்தத் துப்பாக்கிச் சூடு தமிழகத்தில் நடந்தது, விவசாயப் போராட்டம் என்ற பெயரிலே போராட்டம் நடத்தப்பட்டதே அந்தப் போராட்டத்தை இந்த அரசு எப்படிச் சமாளித்தது என்ற ஒரு அடிப்படையிலேயும், அரசினுடைய குறை பாடுகள் நிர்வாகத்திலே மிக அதிகமாக இருக்கிறது என்ற அடிப்படையிலேயும், கட்சியினுடைய நிர்வாகிகள் அரசினுடைய நிர்வாகங்களிலே குறுக்கிடுகிறார்கள் என்பதற்கான உதாரணங்களும், இவைகளைத்தான் அவர்கள் எடுத்துச் சொன் னார்களே தவிர, எப்படி இந்த ஆட்சி, கலைஞர் கருணாநிதி அவர்களுடைய தலைமையிலேயிருக்கின்ற இந்தத் தகைமைசால் ஆட்சி தமிழக மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை, எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம், எல்லா மக்க ளுக்கும் படிப்பு, எல்லா ஊர்களிலும் நல்ல சுகாதார வசதி, உணவுத் தட்டுப் பாடு இருந்த நிலைமையை மாற்றி எல்லா மக்களுக்கும் கேட்கின்ற நேரத்திலே உணவு, எல்லா மக்களுக்கும் சுதந்திரம், அவர்கள் விரும்பும் வாழ்க்கையை நடத்தக்கூடிய சூழ்நிலை ஆகிய இந்தச் சூழ்நிலைகளையெல்லாம் பெற்றுத் தராத முறையிலே எப்படி இந்த அரசு இயங்குகிறது என்று எடுத்துச் சொல்லியிருந் தால் நாங்கள் மகிழ்ச்சியடைந்திருப்போம். ஆனால் ஹாண்டே அவர்கள் அவைகள் எதையும் சொல்லவில்லை. மக்களுக்கு வேண்டியதைப்பற்றி அவர் களுக்குக் கவலையில்லை, அரசியலில் தங்களை ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டு மென்பதே அருமை நண்பருடைய கவலையாகிவிட்டிருக்கிறதே என்று கவலை யடைகிறேன்.

1972 ஆகஸ்ட் 10]

டாக்டர் எச். வி. ஹாண்டே : மக்களுடைய அடிப்படைத் தேவைகளை மிகமிக உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்ற காரணத்தினால்தான், மக்கள் தமிழ் நாட்டில் தைரியமாக, சுதந்திரமாக வாழ வேண்டுமென்பதற்காகத்தான் இம்மாதிரியான தலையீடு தவறு என்று சொன்னேன். மக்களுடைய தேவை எனக்கு நன்றாகத் தெரியும். எனக்குத் தெரியும் என்பது அவர்களுக்கும் தெரியும்.

திரு. எம். ஏ. லத்தீப் : ஆகையால் இந்தத் தீர்மானத்தை நம்முடைய ஹாண்டே அவர்கள் அரசியல் காரணங்களுக்காகத்தான் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் மிகுந்த பணிவன்புடன் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆனால் அமைச்சரவையை நடத்துவது, அரசியலை நடத்துவது என்றால் அதற்கு முறை ஒன்று இருக்கிறது. அந்த முறையோடு நடத்த வேண்டும். நான் ஏற்கனவே சொன்னேன், "ஷேடோ கேபினெட்" என்று வைத்திருக்கிறார்கள் என்று. ஆகையால் அந்த வகையிலே பொறுப்பை ஏற்க நாம் எப்பொழுதும் தயாராக இருப்போம் என்று இருப்பதும் அரசியல்தான். ஆனால் அதற்காக அமைச்சரவைக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறதோ, அதே பொறுப்பு நமக்கும் இருக்கிறது என்று நினைக்கக்கூடியவர்கள் எதிர்க் கட்சிகளாக, எதிர்க்கட்சித் தலைவர்களாக இருக்கவேண்டும். பிறகு இந்தப் பிரச்னை ஏன் எழுந்தது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

விவசாயிகள் சுடப்பட்டார்கள், விவசாயிகளில் சிலர் மாண்டார்கள், 14 பேர் மாண்டார்கள். இதற்குக் காரணம் என்ன என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். சாதாரணமாக பகுத்தறிவு நமக்கு இருக்கிறது. ஒரு ஆட்சி, அதுவும் மக்களால் பெரும்பான்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பெரும் பான்மை பெற்றிருக்கும் ஒரு பெருமை மிகுந்த ஆட்சி, மக்களைச் சுட்டு வீழ்த்த வேண்டுமென்றும், போலீசாரை எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளுங்கள் என்றும் சொல்லியிருக்குமா என்று பார்க்கவேண்டும். ஒரு கட்சி, மக்களுடைய வாக்குகளைப் பெற்று ஆட்சி நடத்தக்கூடியவர்கள், போலீசாரிடம் நீங்கள் மக்களைச் சுட்டு வீழ்த்துங்கள் என்று கட்டளை யிட்டிருக்குமா, அவ்வளவு மனிதாபிமானமற்றவர்களா இங்கே இருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். அவர்கள் சொன்னார்கள், நம்மு டைய நல்லசேனாதிபதி சர்க்கரை மன்றாடியாரிலிருந்து பாளையக்காரர்கள், பட்டயக்காரர்கள் இவர்களைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். சர்க்கரை மன்றாடியார் போன்றவர்கள் 1995 ஏக்கர் நிலத்தை மாட்டுப் பண்ணைக்காக வைத்துக்கொள்வதற்கு அன்றைய ஆட்சி ஒதுக்கித் தந்திருந்தது, சட்டத்

திலே ஒரு ஓட்டை வைத்தது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் இன்றைய ஆட்சி, கலைஞர் அவர்களுடைய தலைமையிலேயிருக்கும் இந்த ஆட்சி தமிழ் நாட்டிலே இந்த நாட்டினுடைய ஜீவாதாரமான பொருளாதாரத்திற்குப் பாராமாயிருக்கும் விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் வாழ்கையிலே வளம் கண்டிடவேண்டும், அவர்கள் வாழ்க்கையில் புரட்சி ஏற்பட வேண்டும், மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் இதுவரையிலே 20 ஆண்டுகளாகச் சாதிக்க முடியாத சாதனைகளை நாம் 6 ஆண்டுகளிலே சாதித்திருக்கிறோம் என்றால், அதற்குக் காரணம் நம்முடைய அரசின் முன்னேற்றமான திட்டங்கள், சீர்திருத்தமான திட்டங்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அத்தகைய சீர்திருத்தமான திட்டங்களைக் கொண்டு வந்ததால் தான் இன்றைக்கு இந்த எதிர்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நாம் பத்திரிகைகளிலே படித்து மட்டுமல்ல, நிலச்சீர்திருத்த உச்சவரம்புச் சட்டம் சம்பந்தமாகத் தமிழ்நாடு முழுவதும் எல்லா மாவட்டங்களுக்கும் நான் சென்று வந்திருந்தேன்.

அருமை நண்பர்கள் பலர் இங்கே இருக்கிறார்கள். மாண்புமிகு சக சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்கள்கூட அங்கே என்னைப் பார்த்திருக்கிறார்கள். என், நம்முடைய அருமை நண்பர் திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் உண்ணாவிரதம் வைத்துக்கொண்டிருந்த நேரத்திலே கோவையிலே நான் இருந்தது அவர்களுக்குத் தெரியும். அதுமட்டுமல்ல, கோவையிலே திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் பங்களாவில் தங்கியிருந்தபொழுது, இந்தக் கூட்டாய்வுக் குழு உறுப்பினர்கள் தங்கியிருந்தபொழுது, அங்கே விவசாயச் சங்கம் என்று வைத்திருக்கும் அந்தச் சங்கத்தின் பிரதிநிதிகள் எங்களில் சிலரைச் சந்தித்துப் பேசியது நினைவிற்கு வருகிறது. அவர்கள் என்ன பேசினார்கள் என்பதைச் சொன்னால், அவர்கள் இல்லாத இந்தச் சபையில் சொல்வது அழகல்ல என்பதால் சொல்லாமல் விட்டுவிடுகிறேன். என் இதைச் சொல்கிறேன் என்றால், மிஸ்டர் சி. சுப்பிரமணியம், நம்முடைய மத்திய அமைச்சர், மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. என்ன கேள்வி கேட்கப்பட்டது? இங்கேயெல்லாம் இவர்கள் சொன்னார்கள், 10½ காசு அதிகம் என்று. அதைக் குறையுங்கள் என்று சொன்னார்கள். அங்கு அவர்கள் என்ன சொல்லிவிட்டார்கள்? தலையிலே குட்டுவது மாதிரி சொல்லிவிட்டார்கள். உத்தரப் பிரதேசத்தைப் பார், பஞ்சாப்பைப் பார், 15 காசு, 25 காசு, 13 காசு, 16 காசு என்று இருக்கிறதே, நீ அங்கேபோய் 10½ காசு, 12 காசு அதிகம் என்று சொன்னால் இங்கே அவர்கள் நம்மீது சாடுவார்கள், ஆகையால் சும்மா உட்கார் என்று மேலே

யிருப்பவர்கள் குட்டினார்கள். சுப்பிரமணியம் சொல்லியிருக்கிறார், மற்றவர்கள் சொன்னால் கவலையில்லை. என் இதைச் சொல்கிறேன் என்றால், திட்டமிட்ட செயல் என்பதற்காகச் சொல்கிறேன். எங்கள் எதிர்ப்பைக் காட்டுவது இந்த மின் கட்டணத்தைத் தமிழக அரசு உயர்த்திவிட்டது என்பதற்காக அல்ல, இன்றைக்கு தமிழகத்திலேயிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு தன்னுடைய ஆட்சி பலத்தை வைத்துக்கொண்டு எதிர்க்கட்சியாகிய எங்களை வளர விடாமல் தடுக்கிறார்கள், இது சுப்பிரமணியம் சொல்கிறார்கள். எங்களை வளர விடாமல் தடுக்கிறார்கள், ஆகையால் இந்த எதிர்ப்பு என்று சொல்கிறார்கள். நிதானம் உள்ளவர்கள், தமிழ்நாட்டிலுள்ள நிதானம் உள்ளவர்கள் இதைச் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். சாதாரணமாக இந்த மின் கட்டண எதிர்ப்புத்தான் என்றால் ஆட்சேபணை இல்லை. ஆனால் I question their very bona fides. அதுதான் இங்கேயிருக்கிறது. ஆகையால் இவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்? நாம் வளர்வதற்கு வழி என்ன, நாம் வளர வேண்டுமானால் ஏதாவது ஒரு முறையிலே நாட்டிலே குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும். அப்படிக் குழப்பத்தை ஏற்படுத்தினால் அமைதியைக் காக்க சர்க்கார் கடமைப்பட்டு இந்த அரசு ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்கும். மிகவும் நிதானமாக இந்த அரசு இருக்கிறது. கருணாநிதி என்பவர்—அவர்கள் பேசுவதை நான் சொல்கிறேன்—மிகவும் நிதானமான ஆள், அவரிடம் ஜாக்கிரதையாக அணுக வேண்டும், ஏதாவது நாட்டிலே குழப்பம் ஏற்படும் வகையில் இயங்கினால்தான் சாதிக்க முடியும் என்று எண்ணியிருக்கிறார்கள்.

அதிலே யார் இருக்கின்றார்கள்? நான் கோவையிலேயிருந்து அரசாங்க பஸ்ஸிலே வந்துகொண்டிருந்தேன், இந்தப் போராட்டம் நடந்துகொண்டிருந்த பொழுது. அங்கே 10 பேர் பஸ்ஸிலே ஏறினார்கள். எங்கே செல்கிறீர்கள் என்று நான் அவர்களைக் கேட்டேன். நாங்கள் வேலூருக்குப் போகிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். ஏன் வேலூருக்குப் போகிறீர்கள் என்று நான் கேட்டேன். 10 பேர் ஜெயிலிலே இருக்கிறார்கள், பார்க்கப் போகிறோம் என்று சொன்னார்கள். நீங்கள் யார், உங்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது என்று ஒருவரைக் கேட்டால் 40 ஏக்கர் இருக்கிறது என்றும், இன்னொருவர் 50 ஏக்கர் இருக்கிறது என்றும், இன்னொருவர் 150 ஏக்கர் இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். என்ன 150 ஏக்கரா என்று கேட்டதற்கு தனித்தனியாகப் பிரித்து எங்கள் குடும்பத்திலே வைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். யார் என்று தெரியாமல் பஸ்ஸில் வந்திருக்கிற சாதாரண வழிப்போக்கர்கள்

விவசாயிகள் என்று சொல்லக்கூடிய அவர்கள் இவ்வளவு பெரிய நிலச்சுவாந்தார்களாக இருந்துகொண்டு, அவ்வளவு பெரிய நிலச்சுவான்தார்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. பொதுவாக நான் கேட்கிறேன், துப்பாக்கிச் சூடு பற்றி எங்களுக்குத் தெரியாதா? நமது துணைத் தலைவர் அவர்கள் இங்கு இல்லை என்று நினைக்கிறேன். திரு. எல். கணேசன் அவர்கள் இருக்கிறார்கள். துப்பாக்கிச் சூடு இந்த நாட்டில் நடந்தது பற்றி நாங்கள் அறியாததா? 1965-ல் நடத்தப்பட்ட மகா கொடுமையான காட்சி இந்த நேரத்தில் ஞாபகம் வருகிறது. தமிழ் நாட்டைச் சேர்ந்த மாணவர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு, சென்னையில் மத்திய சிறையில் ஒரே அறையில் போட்டு அடைக்கப்பட்டு இருந்த நிலைமையை எல்லாரும் அறிவார்கள். அவர்களுக்குப் போடப்பட்ட உணவு என்ன தெரியுமா? எந்த இடத்தில் உரத்திற்காகப் பயன் படுத்த வேண்டும் என்று மண் போட்டு கழிவுப் பொருள்கள் மூடிவைக்கப் பட்டிருந்தனவோ, அந்த இடத்தில் வளர்க்கப்பட்ட கீரைகளைக் குழம்பாகச் செய்து, சாதாரணமாக மாடுகள் கூட சாப்பிடமுடியாத மக்காசோளத்தில் கூழ் செய்து அதை நம்முடைய மாணவர்களுக்குக் கொடுத்தார்கள். அதை எடுத்துக் கொண்டு அப்படியே நான் பக்தவத்சலம் அவர்களிடம் சென்று கேட்டேன். துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும். அவர் இப்பொழுது இங்கு இல்லை. பக்தவத்சலம் அவர்களிடத்தில் நான் சென்று கேட்டபொழுது, ஏன் இப்படி என்று கேட்டதற்கு, அவர்களுக்கெல்லாம் பிரியாணி போடுவார்கள் என்று நினைத்தீர்களா என்று சொல்லி, அவர்களைப் பிசைந்து விடுவேன் "ஐ வில் கிரஷ் தெம்" என்று கூறினார்கள். நமது துணைத் தலைவர் திரு. பி. சீனிவாசன் அவர்கள் அப்பொழுது இவர்களால் தேடப்பட்டு வெளியே விரட்டப்பட்டு ஏதோ ஒரு இடத்தில் இருந்தால் நம்முடைய பெயர் வருகிறதே என்று அவர்கள் விஜயவாடாவில் இருந்தார்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இவர்கள் இப்பொழுது மக்கா சோளக் கஞ்சி கொடுக்காமல் அரிசிச் சோறு போடுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: அவர்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். அந்தக் காலத்தில் நிலைமை எப்படி இருந்தது என்பதைத் தான் சொல்லப் போகிறேன். திரு. தங்கமணி அவர்கள் திரு. பக்தவச்சலத்திற்காக இவ்வளவு தூரம் பரிந்து பேசுவது பற்றி மகிழ்ச்சி. நான் என்ன சொல்

கிறேன் என்றால் துப்பாக்கிப் பிரயோகத்திற்குக் காரணம் என்ன? வன்முறைச் செயல். பெத்துநாயக்கன் பேட்டையில் (திருமதி த. ந. அனந்தநாயகி: பெத்துநாயக்கன் பாளையம், ஊர் பெயர் தெரியாமலேயே கனம் அங்கத்தினர் பேசுகிறார்கள்.) சென்னையைச் சேர்ந்தவனாதலால் பெத்துநாயக்கன் பேட்டை என்று வருகிறது. பெத்துநாயக்கன் பாளையத்தில் போலீஸ்காரர்கள் லாரிக்கு உள்ளே இருந்து சுட்டார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். லாரிக்குள்ளேயிருந்து சுட்டார்கள் என்று குற்றச்சாட்டைச் சொன்னார்கள். சாதாரணமாகக் காமன்சென்ஸ் உள்ளவர்களுக்குத் தெரியும், லாரிக்கு உள்ளே யிருந்துகொண்டு துப்பாக்கிப் பிரயோகம் நடக்கிறது என்றால், அதனுடைய ரேஞ்சு எவ்வளவு இருக்கும் என்று யோசித்துப் பார்க்கவேண்டும். என்.சி.சி.-யில் இருந்தால் கூட போதும், மிலிடரியில் இல்லாவிட்டால் கூட பரவாயில்லை. ரேஞ்சு எவ்வளவு இருக்கும். அதுவும் திரையிடப்பட்ட போலீஸ் வேன். உள்ளேயிருந்துகொண்டு துப்பாக்கி வைத்து சுட்டால் ரேஞ்சு எவ்வளவு இருக்கும். நான் பெத்துநாயக்கன் பேட்டைக்குப் போயிருந்தேன். (ஒரு உறுப்பினர்: பெத்துநாயக்கன்பாளையம்).

திரு. கே. டி. கே. தங்கமணி: நண்பர் அவர்கள் போலீஸ் லாரியைப் பார்க்கவேண்டும். போலீஸ் லாரியில் பல துவாரங்கள் உண்டு. அந்தத் துவாரங்களில் துப்பாக்கியை வைத்துத்தான் சுட்டிருக்கிறார்கள். அப்படியிருக்கக்கூடிய போலீஸ் லாரியை நண்பர் அவர்கள் பார்க்கவேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப்: துவாரங்கள் இருப்பதாகவே எடுத்துக்கொள்வோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் தலையிடக் கூடாது என்று நினைக்கிறேன். இருந்தாலும், லாரியில் உள்ளேயிருந்து சுட்டார்கள். அந்த லாரியைப் பார்த்தவர்களுக்குத் தெரியும். விஷயம் தெரியாமல் பேசுவது நல்லது அல்ல.

திரு. எம். ஏ. லத்தீப்: நம்முடைய பெரியவர் திரு. கே. டி. கே. அவர்கள் துவாரங்கள் இருக்கின்றன போலீஸ் லாரியில் என்று சொல்கிறார்கள். அந்த துவாரங்களில் துப்பாக்கியை நுழைத்து . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்துவிடவேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப் : ஒரு முக்கியமான பாயிண்டு சொல்கிறேன். துவாரங்களில் வைத்து எவ்வளவு தூரம் துப்பாக்கியைத் திருப்ப முடியும்? லாரியில் இருந்து சுட்டார்கள் என்றால் என்ன அர்த்தம்? ஆயிரக்கணக்கான பேர்கள் ஒரு போலீஸ் லாரியைத் தாக்கினார்கள். தாக்கியவர்கள் விவசாயிகள் அல்ல. விவசாயிகள் என்ற பெயரை வைத்துக்கொண்டு அங்கே இருந்த நாசகாரிகள், சமூக விரோத சக்திகள் போலீஸ் லாரியைத் தாக்க முயற்சி செய்தார்கள். பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தான் சொல்கிறேன். நிகழ்ச்சி நடைபெற்றதற்குப் பிறகு நான் நெல்லை மாவட்டத்தில் இருக்கிற முக்கியமான நகரங்களுக்கும் சென்றிருந்தேன். இராமநாதபுரத்திலுள்ள முக்கியமான நகரங்களுக்கும் சென்றிருந்தேன். துப்பாக்கிச் சூடு நடந்த இடங்களுக்குச் சென்றிருந்தேன். அதற்கு சாட்சி என்னோடு கூட காங்கிரஸ்காரர்களும் இருந்தார்கள். அமைச்சர் திரு. ப. உ. சண்முகமும் இருந்தார்கள். பலரும் இருந்தார்கள். அங்கே நேரடியாகக் கேட்டுவிட்டுத் தான் இங்கே பேசுகிறேன். பெத்துநாயக்கன்பேட்டையில் (ஒரு உறுப்பினர் : பொத்துநாயக்கன்பாளையம்) பொத்துநாயக்கன்பாளையத்தில் போலீஸ் லாரியைப் பலாத்காரமாகச் சமூக விரோத சக்திகள் தாக்கியிருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அங்கு இருந்தவர்கள் எல்லோரும் சமூக விரோதிகளா?

THIRU M. A. LATHEEF : Mr. Speaker, Sir, that is why I have been very careful, doubly careful in my remarks. I did not say that the lorry was attacked by the farmers. I had been very much careful in my expressions. I may be bad in my Tamil. But my imagination, my recollection is not bad. I said that when I had been to Peddanaikenpalayam, after getting careful evidence from the people, I was just.....

THIRU K. T. K. THANGAMANI: Mr. Speaker, Sir. This is not correct. When the action concerns the lives of people, here we are hearing to this speech where the hon. Member says he is speaking from imagination. That cannot be allowed.

THIRU A. SUBRAMANIAM : Mr. Speaker, I am afraid the imagination of the hon. Member, Thiru Latheef is running riot.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, he does not even know the name of the place correctly; how can he speak about the incidents there?

THIRU M. A. LATHEEF : You are not the authority to allow me, Mr. K. T. K. here. I take great objection to it. He should withdraw that. Who is he to allow me? He is not the person. You are the only authority in this House, Sir.

THIRU K. T. K. THANGAMANI : I would like to know from the Hon. Speaker whether he can speak from imagination when it concerns the lives of nine people, when people talk so glibly from imagination.

THIRU R. PONNAPPA NADAR : Sir, Mr. Latheef is an hon. Member who is well-versed and a lawyer member. He should not style the assembly as unlawful. There is no enquiry. If there is a judicial enquiry, there will be a verdict. We can know whether it was anti-social element or not. Therefore, now most of his arguments are not relevant.

THIRU M. A. LATHEEF : Mr. Speaker, I am glad that at least our hon. Leader of the Congress Party.....

THIRU K. KANDASWAMY : It was stated that certain references should not be made. But so long we had been hearing members making charges against the Government with all seriousness. If they had got the courage, why should they not face a judicial enquiry? After having given it in writing that they do not want a judicial enquiry by a High Court Judge, if they speak now about serious shouting, loss of lives and property on what basis do they speak, I want to know.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையினுடைய அலுவல்கள் இத்துடன் முடிவடைகின்றன. மீண்டும் திரு. லத்தீப் அவர்கள் தொடர்ந்து ஐந்து நிமிடங்கள் நாளை பேசலாம். பேரவை மீண்டும் நாளை காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders.

192. Notification issued with R. Dis. No. 20609/72, Rural Development, dated the 21st April 1972, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920, relating to building regulations in the entire area of

Gummidipoondi Town Panchayat in Chingleput District. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

193. Notification issued with G.O. Ms. No. 694, Rural Development and Local Administration, dated the 3rd April 1972, in regard to an amendment to the Madras Khadi and Village Industries Board Rules, 1960. [Laid on the table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

194. Notification issued with G.O. Ms. No. 1398, Revenue, dated the 9th May 1972, in regard to certain amendments to Rules 5, 6 and forms 1 to 3 of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965. [Laid on the table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

195. Annual Report of the Tamil Nadu Public Service Commission, 1970–71, issued with G.O. Ms. No. 1233, Public (Services-A), dated the 6th May 1972. [Laid on the table of the House under Article 323 (2) of the Constitution of India.]

B. Reports, Notifications and other papers.

33. Notification issued with G.O. Ms. No. 1480, Revenue, dated the 29th June 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of a settlement deed in favour of the American College Governing Council, Madurai.

34. Notification issued with G.O. Ms. No. 1671, Revenue, dated the 5th June 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899, in respect of the sale deed in favour of the Tamil Nadu Electricity Board Employees Co-operative Housing Society, Cuddalore.

35. Notification issued with G.O. Ms. No. 1909, Revenue, dated the 29th June 1972 in regard to remission of stamp duty chargeable in respect of a mortgage deed to be executed by Thiru V. Krishnamurthi, I.P.S., in connection with the house building advance received by him from the Government of Kerala.

@ 36. The constitution (Thirty-first Amendment) Bill, 1972—As introduced in Lok Sabha.

@ 37. The constitution (Thirty-first Amendment) Bill, 1972—As passed by Lok Sabha.

@ 38. The constitution (Twenty-eighth Amendment) Bill, 1972—As passed by the Houses of Parliament.

@ 39. Lok Sabha Debate on the constitution (Thirty-first Amendment) Bill, 1972.

@ 40. Rajya Sabha Debate on the constitution (Twenty-eighth Amendment) Bill, 1972.

@ 41. The Tamil Nadu Excise (Amendment) Bill, 1972 with Annexure.

@ 42. The Tamil Nadu Agricultural Labourer Fair Wages (Amendment) Ordinance, 1972 (Tamil Nadu Ordinance No. 2 of 1972).

@ 43. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1972 (L.A. Bill No. 17 of 1972).

@ 44. The Tamil Nadu Inam Estates and Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1972. (L.A. Bill No. 18 of 1972).

@ Despatched to Members on 2nd August 1972.

[157ம் பக்கத்தில் 42-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினவிற்குரிய விடையைக் காண்க.]

Acquisition of land for Salem Steel Plant.

On the recommendation of Messrs. M. N. Dastur and Company Private Limited, Calcutta, the Government of India advised the State Government in November 1963 that an extent of 7,500 malai area pending firm selection of the site for the plant. marshalling yard, township and ancillary industries in the Kanjamalai area pending firm selection of the site for the plant. Accordingly the State Government ordered in February 1964 that an extent of about 21,000 to 22,000 acres of land located in certain villages of Salem, Sankari and Omalur taluks in Salem district be acquired for the public purpose, viz., for the establishment of a Steel Plant near Salem, under Part II of the Land Acquisition Act, 1894. The notifications under section 4 (1) of the Land Acquisition Act, 1894 were published in the *Fort St. George Gazette* between January and March 1964. The declarations under section 6 of the said Act were published in January 1969. In all, the State Government actually notified an extent of 24,514.26 acres covering 55 villages in and around Kanjamalai hills in Salem district. The considerations which influenced the notification of such a large extent were :

(1) to prevent unco-ordinated and ill-planned development in the region,

(2) to keep the neighbourhood free both for future expansion and for the prevention of slums, encroachments in the vicinity,

(3) to have access to the hill all round, and

(4) to enable the State Government to provide for a rapid development of the area later on as the acquisition at the then marked values would be beneficial to the Project economics.

2. In September 1969 the Government re-examined their earlier decision regarding the notification of land for Salem Steel Plant pursuant to the representations received from the villagers affected by the notification to the land and from the local M.L.As. and ordered in January 1970 the release of an extent of 7,482.09 acres of land from the notification in consultation with the Dastur and Company. The actual extent of land under notification as on

8th January 1970 was only 16,984 acres. Again in April 1970 the Government had to examine further the request of the villagers of Edanganasalai, Elampillai and Perumagoundanpati villages and from the local M.L.As. and ordered in June 1970 the release of 128.01 acres of land from the notification as these areas were well built up lands having semi industrial complex. The actual extent of land now under notification for the Salem Steel Plant is 16,836 acres only.

3. The Site Selection Committee appointed by the Government of India recommended in November 1970 that an extent of about 4,000 acres (1,785 hectares) of land might be needed for the various needs of the plant. Subsequently it was indicated that the requirement of land will be as shown below :—

		Area	
		In acres.	*In hectares.*
I	Plant site including slag dumb	2,750·00	1,112·886
II	Township	900·00	364·217
III	Railway marshalling yard and exchange yard.	300·00	121·406
IV	Ancillary industries	460·00	186·155
		4,410·00	1,784·664

4. Out of the area earmarked for the plant site, an extent of 43.38 acres (8 hectares) had already been acquired during the September–November 1970 for the inauguration of the Project. A portion of the plant area comprising 1,145.28 acres of patta lands and 208.87 acres of poramboke lands has been acquired as the first phase of acquisition on the request of the Government of India. The work was started in August 1971 and completed in May 1972. The Government of India have requested the State Government in April 1972 that as and when lands are acquired for the Salem Steel Plant the houses, trees, standing crops and other salvageable materials might be disposed of by auction after giving due publicity, the sale proceeds credited to the Central Government and after the site is cleared of all trees, structures, etc., the area covered by the first phase of acquisition be handed over to the Project Engineer, Hindustan Steelworks Construction, Limited, who would take over the land on behalf of the Government of India.

5. The orders from the Government of India for the II phase of acquisition of land have since been received. The entire area required by the Government of India will be acquired in a phased programme in two to three years. The question of releasing the balance of lands under notifications but not needed for Salem Plant purposes will be considered in consultation with the Government of India after all the requirements of land for the Project purposes are met.

சேலம் உருக்காலைத் திட்டத்திற்கான நிலத்தைக் கையகப் படுத்தல்.—கல்கத்தா திரு. எம். என். தஸ்தூர் அண்டு கம்பெனி, பிரைவேட், லிமிடெட் நிறுவனத்தின் பரிவுரையின்மேல் உருக்காலைத் திட்டம் அமைக்கப்படுவதற்கு இடம் உறுதியாகத் தெரிந்தெடுக்கப்படும்வரையில், உருக்காலைக்காகவும், சரக்கு வண்டி இருப்புப்பாதைப் பிரிவுகளுக்காகவும், நகரியத்துக்காகவும். துணைத் தொழில்களுக்காகவும், 7,500 ஹெக்டேர் (18,500 ஏக்கர்) நிலம் கஞ்சமலைப் பகுதியில் அரசுக்கு வேண்டுமென அறிவிக்கப்படலாம் என்று மாநில அரசுக்கு இந்திய அரசு 1963 நவம்பரில், ஆலோசனை கூறியது. அதற்கிணங்க, 1891-ம் ஆண்டு நிலம் கையகப்படுத்தல் சட்டத்தின் பாகம் II -ன் கீழ், பொதுக் காரியம் ஒன்றிற்காக, அதாவது சேலத்திற்கருகாமையில் உருக்காலை ஒன்றை நிறுவும் காரியத்திற்காக, சேலம் மாவட்ட, சேலம், சங்கரி, ஓமலூர் வட்டங்களிலுள்ள சில கிராமங்களில் அமைந்திருக்கும் சுமார் 21,000 முதல் 22,000 ஏக்கர் நிலம் வரை கையகப்படுத்தப்பட வேண்டுமென்று மாநில அரசு 1964 பிப்ரவரியில் ஆணையிட்டது. 1894-ம் ஆண்டு நிலம் கையகப்படுத்தல் சட்டத்தின் 4 (1) பிரிவின் கீழ் அறிவிப்புகள் தமிழ்நாடு அரசிதழில் 1964 ஜனவரி, மார்ச் திங்களுக்கு இடையில் வெளியிடப்பட்டன. மேற்சொன்ன சட்டத்தின் 6-வது பிரிவின் கீழ் 1969 ஜனவரியில் அறிக்கைகள் வெளியிடப்பட்டன. மொத்தத்தில் மாநில அரசு, சேலம் மாவட்டம் சஞ்சமலைப்பகுதியிலும், அதனைச் சுற்றிலும், 55 கிராமங்களில் அடங்கியுள்ள 24,514.26 ஏக்கர் நிலத்தை அரசு கையகப்படுத்தக் கருதியிருப்பதாக அறிவித்தது. இத்துணை பெரும் பரப்பளவிற்கு நிலங்கள் அறிவித்ததற்கு கீழ்க்கண்டவையே காரணங்களாகும் :—

(1) அந்த வட்டாரத்தில் ஒருங்கிணையாத திட்டமிடப்படாத வகையில் மேம்பாடு ஏற்படுவதைத் தடுத்தல்.

(2) எதிர்கால வளர்ச்சிக்காகவும், அண்மையில் குடிசைப் பகுதிகள் அமைவதையும் நில ஆக்கிரமிப்புகள் ஏற்படுவதைத் தடுப்பதற்காகவும் அண்டையிலுள்ள பகுதியைத் தடையேதுமின்றிப் பேணி வருதல்,

(3) மலையை எப்போதும் சென்றடைவதற்கான வசதி.

(4) பின்னர் அப்பகுதியின் விரைவான வளர்ச்சிக்கு வகை செய்வதை மாநில அரசுக்கு இயலுமாறு செய்தல்; ஏனெனில் இப்போது நிலவும் நிலவர மதிப்பில் நிலத்தைக் கையகப் படுத்தினால் திட்டத்திற்கு ஆதாயமுள்ளதாயிருக்கும்.

2. நிலங்கள் அறிவிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட கிராம மக்களிடமிருந்தும், அந்த இடத்து சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களிடமிருந்தும் வரப்பெற்ற முறையீடுகளையொட்டி, சேலம் உருக்காலைத் திட்டத்திற்கான நிலத்தைக் கையகப்படுத்துவதாக அறிவிக்கும் தனது முந்திய முடிவை 1969 செப்டம்பரில் அரசு மறு ஆய்வு செய்தது. அதன்மேல் தஸ்தூர் அண்டு கம்பெனி நிறுவனத்தைக் கலந்தாலோசித்து, அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள பரப்பிலிருந்து 7,482.09 ஏக்கர் நிலத்தை நீக்கவேண்டுமென்று 1970 ஜனவரியில் அரசு ஆணையிட்டது. 1970 ஜனவரி 8-ம் நாளன்றுள்ளவாறு அறிவிக்கப்பட்ட உண்மையான நிலப்பரப்பு 16,964 ஏக்கரேயாகும். இடங்காணுசாலை, இளம்பிள்ளை, பெருமா கவுண்டன்பட்டி ஆகிய கிராமங்களிலுள்ள மக்களின் வேண்டுகோள் குறித்தும், உள்ளூர் சட்டமன்றப் பேரவை உறுப்பினரிடமிருந்து வரப்பெற்ற வேண்டுகோள் குறித்தும், 1970 ஏப்ரலில் அரசு மேற்கொண்டு ஆய்வு செய்யவேண்டி வந்தது. அதன்மேல், இந்த நிலங்களில் கட்டிடங்கள் கட்டப்பட்டவையாகவும், ஓரளவு தொழில்கள் அமைந்துள்ளவையுமான 128.01 ஏக்கர் நிலத்தை அறிவிப்பிலிருந்து நீக்குவதற்கு 1970 ஜூன் திங்களில் அரசு ஆணையிட்டது. சேலம் உருக்காலைத் திட்டத்திற்காக தற்போது அறிவிப்பின்கீழ் உள்ள நிலப்பரப்பு 16,836 ஏக்கரேயாகும்.

3. இந்திய அரசால் அமைக்கப்பட்ட உருக்காலைக்கான இடத் தேர்வுக்குழு உருக்காலையின் பல்வேறு தேவைகளுக்கு சுமார் 4,000 ஏக்கர் (1,785 ஹெக்டேர்) பரப்பு நிலம் தேவைப்படுமென 1970 நவம்பரில் பரிவுரை செய்தது. தேவைப்படும் நிலத்தின் பரப்பு கீழ்க்கண்டவாறு இருக்குமென்று பின்னர் குறிப்பிடப்பட்டது :—

	பரப்பளவு	
	ஏக்கரில்.	ஹெக்டேரில்.
1 கனிப்பொருள் சேமித்து வைக்கப்படும் இடம் உட்பட, உருக்காலையின் அமைப்பிடம்	2,75·000	1,112·886
2 நகரியம்	900·00	364·217

3	சரக்கு வண்டி (இருப்புப் பாதைப் பிரிவுகள் சரக்குகள் பரிமாற்றக் கூடம்	300·00	121·406
4	துணைத் தொழில்கள்	460·00	186·185
	மொத்தம் ..	4,410·00	1,784·664

4. தொழிற்சாலை அமைப்பிடத்துக்காக ஒதுக்கப்பட்ட நிலப் பகுதியில் 43.38 ஏக்கர் (8 ஹெக்டேர்) நிலம் திட்டப் பணியைத் தொடங்குவதற்காக 1970 செப்டம்பர்-நவம்பர் திங்களில் ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டது. இந்திய அரசின் வேண்டுகோளின்பேரில், நிலம் கையகப்படுத்தும் பணியின் முதல் கட்டமாக 1,145.28 ஏக்கர் பட்டா நிலங்களும், 203.87 ஏக்கர் புறம் போக்கு நிலங்களும் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இப்பணி 1971 ஆகஸ்டு திங்களில் தொடங்கப்பட்டு, 1972 மே திங்களில் முடிக்கப்பட்டது. இந்திய அரசு, மாநில அரசை 1972 ஏப்ரலில் பின்வருமாறு கேட்டுக்கொண்டது :—

சேலம் உருக்காலைக்குத் தேவையான நிலங்களைக் கையகப் படுத்தும் போது அந்நிலங்களிலுள்ள வீடுகள், மரங்கள், விளைந்து வருகிற பயிர்கள், மற்றும் பிரித்து எடுக்கக்கூடிய பிற பொருட்களைத் தக்கவாறு விளம்பரப் படுத்திய பிறகு, ஏலத்துக்கு விட்டு ஒருவகை செய்ய வேண்டும்; அவ்வாறு விற்று வந்த தொகையை மத்திய அரசின் கணக்கில் வரவு வைக்க வேண்டும்; நிலத்திலுள்ள மரங்கள், கட்டுமானங்கள் முதலிய அனைத்தையும் அப்புறப் படுத்திய பிறகு, நிலம் கையகப்படுத்தப்படுவதில் முதற் கட்டமாகக் கையகப் படுத்தப்பட்ட நிலப்பகுதியை, இந்துஸ்தான் உருக்கு கட்டுமான நிறுவனத் திட்டப் பொறியாளரிடம் ஒப்படைக்க வேண்டும். அவர் இந்திய அரசின் சார்பில் அந்த நிலத்தை ஏற்றுக் கொள்வார்.

5. இரண்டாவது கட்டத்தில் நிலம் கையகப்படுத்துவதற்கான ஆணைகள் இந்திய அரசிடமிருந்து கிடைத்துள்ளன. இந்திய அரசுக்குத் தேவைப்படும் நிலம் முழுவதும் படிப்படியாக இரண்டு மூன்று ஆண்டுகளில் கையகப்படுத்தப் படும். சேலம் உருக்காலைக்குத் தேவையான நிலமனைத்தும் கையகப் படுத்தப் பட்ட பிறகு, அறிவிப்பின் கீழ்க் குறிப்பிட்டுள்ளவையும் சேலம் உருக்காலைத் திட்டத்திற்குத் தேவையற்றவையுமான எஞ்சியுள்ள நிலங்களை அறிவிப்பி லிருந்து விலக்குவது குறித்து இந்திய அரசுடன் கலந்தாலோசிக்கப்படும்.

. . . . .

தமிழ் நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1972 ஆகஸ்ட் 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதல் ஐந்து கேள்விகள் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும். இப்பொழுது கேள்வி எண் 61 எடுத்துக் கொள்ளப் படுகிறது.

Working conditions of hotel workers

* 61 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the One Man Commission which went into the conditions of Hotel Workers has submitted its report,

(*b*) if so, whether it will be laid on the Table of the House; and

(*c*) the steps proposed to be taken to implement the recommendations?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) & (உ) ஓட்டல் தொழில் தனி அலுவலரின் முக்கியப் பரிந்துரைகள் இந்தப் பரிந்துரைகளைச் செயல்படுத்த அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் உட்பட அரசு பிறப்பித்த ஆணையின் படியொன்று * பேரவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. கே. டி. கே தங்கமணி : இந்த ராஜன் கமிட்டியினுடைய சிபார்சினை அவைமுன் அமைச்சர்வர்கள் வைத்திருப்பதைப் பற்றி மகிழ்ச்சி. அதன் அடிப் படையில் ஏற்கெனவே இருக்கக்கூடிய சட்டத்திற்குத் திருத்த மசோதா கொண்டு வரப்படுமா? அப்படியானால், எப்பொழுது கொண்டு வரப்படும்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ராஜன் கமிட்டியினுடைய பரிந் துரையைப் பரிசீலனை செய்து, அதற்குப் பிறகு நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

* 455-467-ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சடிக்கப்பட்டுள்ளது.

[1972 ஆகஸ்ட் 11

திரு. கே. டி. கே தங்கமணி: ஏதாவது ஒரு திருத்த மசோதாவின் அடிப்படையில் அது நிறைவேற்றப்படுமா? அல்லது, வேறு எந்த முறையிலாவது நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இதுபற்றி இப்போது திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை.

அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

*62. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) குளித்தலை வட்டம், கருப்பத்தூர் புதுப்பட்டி அரிசன மக்களுக்கு வீட்டு மனை வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) கருப்பத்தூர் புதுப்பட்டி கிராமத்தில் உள்ள 27 அரிசனங்களுக்கு வீட்டு வசதி அளிக்க கருப்பத்தூர் கிராமத்தில் புல எண் 31-ல், 2.22 ஏக்கர் பரப்பளவுள்ள புன்செய் பட்டா நிலங்களை நிலம் கையகப்படுத்தல் சட்டத்தின் 4 (1) பிரிவின் கீழ் உள்ள முன்மொழிவு அறிவிப்பு வரைவு சமூக நலத்துறையின் 15-12-1971 நாளிட்ட 2270-ஆம் எண் அரசு வாலாய ஆணையில் ஏற்கப்பட்டு, 29-12-1971 நாளிட்ட பாகம் 11 பிரிவு 1 தமிழ்நாடு அரசிதழில் 1491 பக்கத்தில் (ஆங்கிலம்) வெளியிடப்பட்டது. பிரிவு 6 விளம்பரம் மாவட்டாட்சியரிடமிருந்து இன்னும் வரவில்லை. அதைப் பெற்றதும் தக்க நடவடிக்கை மேற்கொண்டு அரசிதழில் வெளியிட வகை செய்யப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த நிலத்தின் மதிப்பீட்டின் விவரத்தை அறியலாமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மதிப்பீடு எவ்வளவு என்று தற்போது குறிப்பில் இல்லை. 4 (1) நோட்டிபிகேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. மதிப்பீட்டின் விவரம் தற்போது இல்லை.

*63 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், சிந்தல்வாடி கிராமம் வெட்டுக்கட்டியிலுள்ள அரிசன, பின் தங்கிய மக்களுக்கு வீட்டு மனைக்கு உரிய நிலத்தை கையகப்படுத்த எப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது?

1972 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) குளித்தலை வட்டம், சிந்தல்வாடி கிராமம் வெட்டுக்கட்டியிலுள்ள 17 அரிசனக் குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்க இக்கிராமத்தில் புல எண் 178/4-ல் 1.43 ஏக்கர் புன்செய் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய திருச்சி மாவட்டாட்சியரால் 27-7-1970 இல் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(இ) நில ஆர்ஜித விதிகளின்படி பிரிவு 4 (1) முன்மொழிவும் பிரிவு 6 விளம்பர வரைவும் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் பிரசுரமாகிய பின் குளித்தலை அரிசன நல தாசில்தாரால் 19-2-1972 அன்று சம்பந்தப்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்கு ஈட்டுத் தொகையும் வழங்கப்பட்டது. மேலும் நிலத்தை 19-2-1972 அன்று அரசால் கையகப்படுத்தப்பட்டது.

இதற்குரிய அரிசன காலனி அமைப்பு வரைபடம் (Lay-out Plan) விரைவில் தயாரித்து அரிசன மக்களுக்கு பட்டா வழங்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: சிறிது காலமாகவே நிலத்தைக் கையகப்படுத்தும் நடவடிக்கை தாமதமாகவே நடந்து வருகிறது. இந்த நடவடிக்கையைத் துரிதப்படுத்துவதற்கான முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: துரிதப்படுத்தியதன் விளைவாகத்தான் விரைவிலே பட்டா அளிக்கக்கூடிய நிலை வந்திருக்கிறது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே சுதந்திரமடைந்து 25 ஆண்டுகளாகி, அதனுடைய வெள்ளி விழாவினைக் கொண்டாடும் ஒரு பெரும் பேற்றைப் பெற்றிருக்கிற இந்த நேரத்தில்கூட, இந்த நாட்டிலே குடியிருப்பதற்கு வசதி இல்லை என்று பொதுவாகக் கூறப்படுகிற பரிதாபமான தன்மையில், தமிழகம் பூராவிலும் அரிசன மக்கள் குடியிருப்பு மனைக்காக ஆங்காங்கு விண்ணப்பங்கள் போடுகின்ற தன்மைகள் குறித்து குறைகள் கூறப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் தமிழகத்திலே முழு ஆய்வு செய்து, எந்தெந்த அரிசனக் குடும்பத்திற்குக் குடியிருப்பு மனைப் பட்டா இல்லை என்று ஆராய்ந்து, பொதுவாக எல்லா மக்களுக்கும் குடிமனைப் பட்டா வழங்குவதற்கு அரசிடம் குறிப்பு இருக்கிறதா, அது எப்பொழுது செயல்படுத்தப்படும் என்பதை நான் அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஏழை அரிசன மக்களுக்கு வீட்டு மனை தரவேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில் இப்பொழுது அரசுக்குச் சொந்தமான நிலத்தையெல்லாம் நிலமில்லாத ஏழைகளுக்குக் கொடுக்கின்ற வகையில் ஏறத்தாழ ஐந்து லட்சம் பேருக்குக் கொடுத்திருக்

கிறோம். அதிலே ஒரு லட்சம் பேர் ஏழை அரிசன மக்களாவார்கள். ஆனால், பட்டா நிலத்தை ஆர்ஜிதம் செய்து விலை கொடுத்து வாங்கும் திட்டத்தின் மூலமாக சில தன்மைகள் ஏற்படுகின்றன. நிலச் சொந்தக்காரர்கள் அந்த நிலங்களை கொடுக்க மறுத்து, வழக்கு மன்றத்திற்குச் சென்று விடுகிறார்கள். கிராமங்களில் அப்படிப்பட்ட நிலைமை யெல்லாம் இல்லாத அளவுக்கு ஏற்படுமானால் நிச்சயமாக விரைவிலே அவைகளை எடுத்து வீட்டு மனை கொடுக்க முடியும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in addition to giving house-sites for Harijans, there is a large demand for houses. Also, thousands of Harijans are living in huts which catch fire and burn very quickly. Panchayats and Panchayat Unions are not interested in providing houses for them. So, may I know from the Hon. Minister for Harijan Welfare whether the Government will take suitable steps urgently to provide them houses?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவசரக் காலச் சட்டமும், அரிசன மக்களுக்கு நிலம் யைகப்படுத்தித் தருவதற்காக இன்றைக்கும் கையாளப்பட்டுக்கொண்டுதான் வருகிறது. வீடு கட்டும் திட்டம் நலத் துறை மூலமாக கட்டிக் கொடுக்கப்பட்டு வருகிறது. எண்ணிக்கை அதிகமாக இருக்கிறார்கள். அதற்கேற்ற அளவு நிதி நிலை இல்லை. எனவேதான் கொஞ்சங் கொஞ்சமாகக் கட்ட வேண்டியிருக்கிறது. பூர்த்தியாக இன்னும் கொஞ்சம் நாளாகும்.

திரு. எம். சுரேந்திரன் : அரிசன மக்களுக்கு வீட்டு மனை வழங்குவது என்ற முடிவுக்கு வந்த பிறகு, அரிசனங்கள் எத்தனை பேர்கள் வீடில்லாமல் இருக்கிறார்கள், அதற்காக எவ்வளவு நிலம் வேண்டும், அதிலே புறம்போக்கு நிலம் எவ்வளவு, பட்டா நிலம் எவ்வளவு எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற விவரங்களை யெல்லாம் இந்த அரசு தயார் செய்திருக்கிறதா ? அல்லது, இனி மேலாவது தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட கணக்கு எடுக்குமாறு நலத்துறையின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தமிழகத்தில் ஒருசில இடங்களில் குடிமனைப் பட்டா வழங்கும் நேரத்திலே அந்தக் கிராமத்திலிருக்கின்ற நிலச்சுவாந்தார்கள் அந்த நிலங்களைக் கொடுக்கத் தயங்குகிறார்கள்; மறுக்கிறார்கள். இதுதான் காலதாமதத்திற்கு முக்கியமான காரணமாக அமைந்திருக்கிறது. இந்தத் தாமதத்தைப் போக்க 'கம்பல்சரி அக்விசிஷன்' என்ற முறையில் கட்டாய ஆர்ஜிதம் செய்யத் தீவிர நடவடிக்கையை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஒருவருக்கு உடமையாக இருக்கும் சொத்துக்களை அரசு கட்டாயமாக எடுக்கும் நிலை இல்லை. கொடுக்க வேண்டும் என்று அவர்களைக் கேட்கின்றோம். அவர்களுக்கும் அதே நேரத்தில் 'கொடுக்க மாட்டோம்' என்று சொல்லவும், அதற்காக வழக்கு மன்றம் செல்லவும் உரிமை இருக்கிறது. வழக்கு மன்றம் சென்று விட்ட பிறகுகூட, அவர்களுக்கு நிறைய நிலம் இருக்கிறது, எனவே அரிசன மக்களுக்காக எடுக்கும் நிலத்தைக் கொடுக்கலாம் என்று வழக்கு மன்றத்தில் தீர்ப்புக் கூறப்பட்டாலும், அல்லது எதிராகத் தீர்ப்புக் கூறப்பட்டாலும், அரசுக்குத் தேவைப்பட்டால் அந்த இடங்களை எடுத்துத்தான் வருகிறது. கட்டாயமாக எடுக்க வேண்டும் என்ற நிலை இல்லை. பொது நலனைக் கருதி எடுக்கக்கூடிய சட்டம் இன்று எல்லாத் துறைக்கும் இருக்கிறது. இதுபோல அரிசன மக்களுக்கு வீடு கட்டுவதற்கு, பொதுமக்கள் நன்மைக்காக இருக்கக்கூடிய சட்டத்தின் கீழ் நிலத்தை எடுத்துக் கொண்டுதான் வருகிறோம்.

திரு. த. சோனையா : அரிசன மக்களுக்குக் குடியிருப்பு மனைப் பட்டா வழங்குவதற்காக நில ஆர்ஜிதம் செய்கின்றபோது காலதாமதம் ஆகிறது. அந்த 'பேப்பர்' சென்னைக்கு வந்து செல்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, நில ஆர்ஜிதம் செய்து நிலத்தை எடுக்கின்ற அதிகாரத்தை அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களுக்கே கொடுக்க அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : குறிப்பிட்ட ஒரு நிலத்தை எடுத்தாக வேண்டும் என்று மாவட்ட ஆட்சியாளர் அவர்கள்தான் முடிவு செய்து, அதை எடுக்கிறார்கள். அதிலே தகராறுகள் ஏற்படும்போதுதான் நிலச் சொந்தக்காரர்கள் தங்களுடைய குறைகளைக் கூறுகிறார்கள். மாவட்ட ஆட்சியாளர்தான் நிலத்தை எடுக்கவோ, நிலச் சொந்தக்காரர்களுக்குப் பணம் வழங்கவோ எல்லா உரிமையும் படைத்தவர்கள். சில நேரங்களில் நிலச் சொந்தக்காரர்களின் எதிர்ப்பு வரக்கூடிய நிலை ஏற்படும்போது, அது குறித்து மாவட்ட ஆட்சியாளர் அரசுக்குத் தெரிவிக்கின்றார்கள். அப்படிப்பட்ட நேரங்களில் அரசு ஒப்புதல் வழங்குகிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Why is it that the Government have not issued Pattas to those Harijans who have been allotted developed plots in Madras City?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : துணைத் தலைவரவர்களே, சென்னையிலே பட்டா வழங்கப்படுவது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஏற்கெனவே பட்டா வழங்கப்பட்டிருக்கலாம். அரிசன மக்கள் வாழுகின்ற சில இடங்கள் அரிசன நல இலாகாவுக்குச் சொந்தமாக

[1972 ஆகஸ்ட் 11

இருக்கின்றன; சில இடங்கள் சொந்தமாக இல்லை. மேலும் அரசுக்குச் சொந்தமான நிலங்களை பட்டா செய்து கொடுப்பதை விட, 'ஸ்லம் போர்டு' மூலமாக வீடுகளைக் கட்டிக் கொடுத்து விடலாம் என்று இருப்பதால், இப்போது பட்டா செய்து கொடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: துணைத் தலைவரவர்களே, சில இடங்களில் அரிசனங்கள் குடியிருப்புக்காக நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்று சொல்லி கிட்டத்தட்ட 5, 6 ஆண்டுகள் ஆகியும் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, வீடு கட்டப்படவில்லை. காரணம் கேட்டால், கீழே இருந்து மேலேயும், மேலே இருந்து கீழேயும் எழுதிக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதனால் அரிசனங்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இல்லாமல் போய் விடுகிறது. எனவே, அதில் துரிதமான நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நான் முதலிலேயே கூறினேன். தனிப்பட்டவர்கள் நிலத்தை எடுக்கும்போது நிலச் சொந்தக்காரர் கொடுக்க மறுக்கிறார்கள். மறுப்பதற்கு அவர்களுக்கு உரிமையும் இருக்கிறது. சில இடங்களில் அதிகாரிகள் நிலச் சொந்தக்காரர்களைச் சமாதானம் செய்து, இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்காக நிலம் கொடுங்கள் என்று சொல்லி பெற்றுக் கொள்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் நிலச் சொந்தக்காரர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்கிறார்கள். அது சம்பந்தமாக தீர்ப்பு வழங்கப் படுவதில் அதிகமான காலதாமதம் ஏற்படுகிறது. வழக்கு மன்றத்தில் கால தாமதம் ஏற்படுவதால் இந்த மாதிரி வழக்குகளுக்கு ஒரு தனி நீதிபதியை நியமிப்பது பற்றி சட்டத் துறை பரிசீலனை செய்து வருகிறது. அந்தந்த வட்டாரங்களிலுள்ள சட்ட மன்ற உறுப்பினர்களும் நிலச் சொந்தக்காரர்களை அணுகி சமாதானம் செய்து, அவர்கள் நிலத்தைக் கொடுக்க வழி செய்வார் களானால் தகராறு இல்லாமலேயே, நிலச் சொந்தக்காரர்கள் வழக்கு மன்றத் திற்குச் சென்று 'ஸ்டே ஆர்டர்' வாங்காமல் இருந்தால், துரிதமாக நிலம் ஆர்ஜிதம் செய்து, வீடுகள் கட்டிக் கொடுக்கலாம்.

*64 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி நகரத்திலுள்ள வாமடம் வடலூர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனைக்குரிய நிலத்தை கையகப்படுத்தும் நடவடிக்கை எப் போது மேற் கொள்ளப்பட்டது?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது?

1972 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) 1964-ஆம் ஆண்டு வாமடம் வடலூரிலுள்ள 100 அரிசனங்களுக்கு வீட்டுமனை வசதி அளிக்க அரசு ஆணை (நிலை) எண் 2753 (உள்துறை) நாள் 29-8-1964-ல் திருச்சி மாவட்டாட்சியருக்கு நில ஆர்சித கருத்துரு அனுப்புமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

(இ) அவ்வாறே மாவட்டாட்சியர் 1966-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில், இரும்பெரிய வடலூர் கிராமத்தில் 5-78 ஏக்கர் பரப்புள்ள இரும் நிலங்களை ஆர்ஜிதம் செய்ய கருத்து ஒன்று அரசுக்கு அனுப்பினார். நில ஆர்ஜித நடை முறை விதிகளின்படி இரும் நிலங்களை ஆர்ஜிதம் செய்யக் கூடாது என அரசு சுட்டிக்காட்டியதாலும், கருத்துரு அனுப்பியபின் நில சொந்தக்காரர்கள் தேர்ந்தெடுத்த நிலங்களில் வீடுகள் கட்டியாதலும் திருச்சிராப்பள்ளி மாவட்டாட்சியர் பெரிய வடலூர் கிராமத்தில் வார்டு 3, பிளாக் 2-ல் 1.07 ஏக்கர் நன்செய் நிலமும், தென்னூர் கிராமத்தில் வார்டு 2, பிளாக் 39-ல் 4.72 ஏக்கர் நன்செய் நிலமும் ஆக மொத்தம் 5.78 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களைத் தேர்ந் தெடுத்து மாற்றுக் கருத்துரு அரசு ஒப்புதலுக்காக 1972-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அனுப்பி வைத்தார். இந் நில ஆர்ஜித மொத்தச் செலவு 15 சத வீதம் உபரித் தொகையுடன் சேர்த்து ரூ. 5,80,088 ஆகியதென்றும், இதில் ரூ. 40,000 மானியமாகவும் ரூ. 40,000 கடனாகவும் அரசு கொடுக்க அரசு ஆணை (வாலாயம்) எண் 222 (ச.ந. துறை) நாள் 13-2-1969-ல் ஒத்துக்கொண்டது என்றும் மாவட்டாட்சியர் கூறியுள்ளார். நில ஆர்ஜிதத்தின் மீது செலவான ரூ. 5,00,000-ஐ அரிசனங்கள் நபர் ஒருவருக்கு வரும் 5,000-த்தை கட்ட முடியுமா என அரசு வினவியதற்கு அறிக்கை இன்னும் மாவட்டாட்சியரிட மிருந்து கிடைக்கவில்லை. நில ஆர்ஜிதம் இந்த நிலையில் தேங்கியுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, திருச்சி நகரத்திலுள்ள வாமடம் வடலூர் மக்களுக்காக நிலம் கையகப்படுத்துவது சம்பந்தமாக அரசுக் கும் அந்தப் பகுதி மக்களுக்கும் இடையே கிட்டத்தட்ட 15 ஆண்டுக் காலமாகத் தொடர்பு இருந்து வருகிறது. அதற்காக மக்கள் ஒரு பகுதி பணத்தைக் கொடுப்பதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இனிமேலாவது அதில் துரித நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: பொதுமக்கள் பணம் கொடுப்ப தாக எழுதிக் கொடுத்திருக்கும் தகவல் இப்போதுதான் கனம் அங்கத்தினர் மூலமாக எனக்குத் தெரிய வருகிறது. மேலும் அவர்கள் மாவட்ட ஆட்சி யாளரை அணுகி அந்தத் திட்டத்தை விரைவிலேயே சர்க்காருக்கு அனுப்பினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

கேளிக்கை வரிச் சலுகையளிக்கப்பட்ட திரைப்படங்கள்

*65 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970-71 ஆம் வருடத்தில் கேளிக்கை வரிச் சலுகை கோரி பெறப்பட்ட மொழிவாரி திரைப்பட விண்ணப்பங்கள் எத்தனை?

(இ) அவற்றில் எத்தனை ஏற்றுக் கொள்ளப்பட்டன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இந்தி 11; பஞ்சாபி 1.

(இ) எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை.

திரு. அ. தேவேந்திரன்: துணைத் தலைவரவர்களே, சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களை பரப்புகின்ற திரைப்படங்களுக்கு இப்படிப்பட்ட வரிச் சலுகை அளிக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்படி வரிச் சலுகை அளிக்கப்படுவது உண்டு. ஆனால் இந்த வினாவுக்குச் சம்பந்தப்பட்ட படங்களுக்கு அளிக்கப்பட வில்லை.

திரு. எம். தேவராசன்: துணைத் தலைவரவர்களே, வேறு மொழிகளிலுள்ள படங்களுக்கு வரிச் சலுகை அளிக்கப்படும்போது, இதுவரை எந்த ஒரு தமிழ்ப் படத்திற்கு வரிச்சலுகை அளிக்கப்படாததற்கான காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் கொடுத்த தக்வலில் எந்தப் படத்திற்கும் வரிச்சலுகை அளிக்கவில்லை என்பதுதான்.

THIRU A. SUBRAMANIAM: May I know what are the criteria followed by the Government in the matter of grant of these concessions?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதற்கு என்று தனித் தகுதி ஒன்றும் இல்லை. சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட படமாக இருந்தால், சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பம் வந்தால் அதை அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அகில இந்திய அடிப்படையிலும், தமிழகத்திலும் சிறந்தப் படங்களாகத் தேர்ந்தெடுக்கப்படும் படங்களுக்கும், சிறந்த நடிகர்கள் என்று தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நடித்த படங்களுக்கும் இப்படிப்பட்ட வரிச் சலுகை அளித்து மேலும் அவர்களை ஊக்குவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அவ்வாறு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று மனு வந்தால், அதன் தகுதி அடிப்படையில் அரசு அதைப் பரிசீலனை செய்து முடிவெடுக்கும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: There is great demand for Telugu films in southern districts since thousands of telugu people live there. If they see telugu films they feel happy. So, will the Hon. Minister consider the question of showing some concession for the exhibition of telugu films in southern districts?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நமக்கு மொழியைப் பற்றி பிரச்சனை இல்லை. ஆனால் படத்தின் கருத்தையும், தகுதியையும் பார்த்து வரி விலக்களிப்பது பற்றி முடிவெடுக்கப்படும்.

திரு. கு. காமாட்சி: துணைத் தலைவரவர்களே இப்போதெல்லாம் 'அட்ல்ட்ஸ் ஒன்லி' என்ற படங்களுக்குத்தான் அதிக வசூலாகிறது. எனவே அந்த மாதிரிப் படங்களுக்கு கேளிக்கை வரியை இரட்டிப்பாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அடிக்கடி அந்தப் படங்களுக்குப் போகும் அங்கத்தினர்களுக்காக வரியை இரட்டிப்பாக்கும் உத்தேசம் இல்லை (சிரிப்பு).

Tax on sale of food and drinks.

*66 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether the Government are aware that sales tax is being collected from consumers by some leading Hotels?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம். உணவு, பான விற்பனைகளுக்கு விற்பனை வரி உண்டு. ஆகவே உணவகங்கள் அத்தகைய விற்பனைகளுக்கு வரி வசூலிப்பது சட்டத்திற்குப் புறம்பானது அல்ல.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசுத் துறையிலும், நகராட்சிகளிலும் நடத்தக்கூடிய பயனிகள் விடுதிகளில் அளிக்கப்படும் உணவு வகைகளுக்குக் கூட வரி வசூலிக்கப்படுகிறது. அதையாவது ரத்து செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்படி எங்கு வசூலிக்கப்படுகிறது என்ற தகவல் என்னிடம் இல்லை. அப்படி இருந்தால் அதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ச. சங்குமுத்து தேவர் : துணைத் தலைவர் அவர்களே, ஒரு பொருளை மற்றொருவரிடம் லாபத்தைக் கருதி விற்பதற்கு விற்பனை வரி வசூலிக்கப்படுவது தவறல்ல. ஆனால் உணவிற்கு பெரிய ஓட்டல்களில் வரி வசூலிக்கப்படுவது அவ்வளவாக நல்லதல்ல. ஆகவே, அத்தகைய வரி வசூலிப்பை ரத்து செய்ய அரசு வழி செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 25,000 ரூபாய் வரை விற்று முதல் வருமானம் பெறக்கூடியவர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஒரு லட்சம் ரூபாய் வரையில் கம்பவுண்டிங் வரி செலுத்தலாம் என்று சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் வியாபாரம் செய்பவர்களுக்கு சலுகை அளிக்கும் உத்தேசம் இல்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, this rule of slab system of levying sales tax, if applied to hotels which are generally efficient and good become inefficient and bad hotels. Because good hotels supply good food, people go there. Can the Government consider abolition of the slab system in respect of hotels and at least completely abolish sales-tax in view of the fact that in some of the hotels one has to put off the fans to avoid iddilies flying away. Can the Government think of abolishing sales tax?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : காற்று அடித்து பறக்கக் கூடிய அளவுக்கு எந்த ஹோட்டலிலும் இட்டிலி இல்லை. மாண்புமிகு உறுப்பினர் எல்லா ஹோட்டல்களுக்குமே விற்பனை வரி ரத்தைக் கோருகிறார். அப்படி விற்பனை வரியை ரத்து செய்யும் உத்தேசம் இல்லை. எல்லா ஓட்டல்களுக்கும் சமமாகப் போடுகிற உத்தேசமும் இல்லை. இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிற சலுகை நீடிக்கும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, சேல்ஸ் டாக்ஸ் போடும்போது ஓட்டல்காரர்கள் அதை சாப்பிடுபவர்களிடம் வசூலித்து விடுகிறார்கள். அப்படியின்றி ஓட்டல்காரர்களே தங்களுடைய லாபத்தில் இருந்து அதைத் தர வேண்டும் என்பதாகச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது விற்கப்படும் பண்டங்களின் மீது விதிக்கப்படுகிற வரியாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களது கேள்வியை இப்போது எடுத்துக் கொள்வோம். கேள்வி 56.

அரசுக் கல்லூரி பேராசிரியர்கள்

* 56 வினா—திரு. க. நாகராஜன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுக் கல்லூரிகளில் பேராசிரியர்களைத் தெரிந்தெடுக்க, பின்பற்றப்படும் முறை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கலைக் கல்லூரிகளில் ஒவ்வொரு இயல் பிரிவிலும் உள்ள நிலையான பேராசிரியர்கள் பதவிகளிலும் 50 விழுக்காடு நேரடியாக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வுக்குழு மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் செய்யப்படுகிறது. எஞ்சிய பதவிகள் அந்தந்தப் பிரிவிலுள்ள பேராசியர் பதவிக்குரிய கல்வித் தகுதி பெற்று, பணியும் நடத்தையும் திருப்திகரமாக உள்ள உதவிப் பேராசிரியர்களுக்கு பதவி உயர்வு கொடுத்து நிறைவு செய்யப்படுகின்றன. அண்மையில் அந்த இயல் கற்றுக் கொடுக்க தகுதி பெற்ற பயிற்சிக் கல்லூரி உதவிப் பேராசிரியர்களையும் பதவி உயர்வுக்குக் கவனிக்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

பயிற்சிக் கல்லூரிகளைப் பொறுத்தவரை பேராசிரியர் பதவி மாவட்டக் கல்வி அலுவலர் வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளதால் நேரடி நியமனம் செய்வதில் சில சிக்கல்கள் உள்ளன. எனவே நேரடி நியமனம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எல்லாப் பதவிகளும் பயிற்சிக் கல்லூரி உதவிப் பேராசிரியர்களுக்கு பதவி உயர்வு கொடுத்து நிறைவு செய்யப்படுகின்றன. அண்மையில் அரசு பிறப்பித்த ஆணையின்படி, பி.டி. பட்டம் பெற்ற கலைக் கல்லூரி உதவிப் பேராசிரியர்களின் தகுதிகளும் இப் பதவிகளைப் பொறுத்தவரை பரிசீலிக்கப்படும்.

திரு. க. நாகராஜன் : அரசுப் பணியாளர்கள் தேர்வு மூலம் க்ரூப் 1, க்ரூப் 2, க்கு ஆட்கள் தேர்ந்தெடுக்கிறபோது எழுத்து மூலத் தேர்வு ஒன்றும், நேர்முகத் தேர்வு ஒன்றும் வைக்கப்படுகிறது. ஆனால் மிக்க தகுதியும், திறனும் தேவைப்படுகிற கல்லூரி பேராசிரியர்கள் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறபோது நேர்முகத் தேர்வு ஒன்றுதான் நடத்தப்படுகிறது. இவர்களுக்கும் எழுத்து மூலத் தேர்வு ஒன்றையும் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல்லாண்டுகள் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்களாகப் பணியாற்றியவர்களைத் தேர்ந்தெடுக்கிற சூழ்நிலையில் எப்படித் தேர்ந்தெடுக்கிறவர்கள் டாக்டரேட் பட்டம் பெற்றவர்களாக

[1972 ஆகஸ்ட் 11

இருக்கிற காரணத்தினாலும் எழுத்து மூலத் தேர்வு அவர்களுக்குத் தேவையில்லை என்று கருதப்படுகிறது. எப்படியும் இதைப்பற்றி முடிவு செய்ய வேண்டியது அரசுப் பணியாளர்கள் தேர்வுக் குழுவே.

திரு. கே. டி. கே. தங்கமணி: உதவிப் பேராசிரியர்களாக இருக்கக்கூடியவர்களுக்கு 50 சத விதம் பேராசிரியர்கள் ப்ரமோஷன் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். இவர்கள் நான்கைந்து வருஷம் பேராசிரியராகப் பணியாற்றி வந்தாலும் கூட இவர்களும் சர்வீஸ் கமிஷன் மூலமே முடிவில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று இருக்கிறதே, இது முரண்பாடு இல்லையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: உதவிப் பேராசிரியர்களாக இருக்கக்கூடியவர்களை தற்காலிகமாகத்தான் பேராசிரியராக நியமிக்கிறோம். தற்காலிகமாக இருக்கக்கூடியவர்கள்தான் சர்வீஸ் கமிஷன் மூலம் ரெகுலரைஸ் பண்ணப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

திரு. நா. வீராசாமி: பேராசிரியர்கள் பதவிகளுக்கு 50 சத விதம் உதவிப் பேராசிரியர்களாக இருக்கக்கூடியவர்களை ப்ரமோட் பண்ணுவது என்றும், 50 சத விதம் நேரிடையாகத் தேர்ந்தெடுப்பது என்றும் இருக்கிறது. இதன் காரணமாக பதவியில் இருப்பவர்கள் பதவி உயர்வு பெறுவது அதிக அளவில் குறைகிற காரணத்தினால் இந்த விகிதாசாரத்தை மாற்ற உத்தேசமுண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது அந்த விகிதாசாரத்தை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது.

திரு. ஆ. பரந்தாமன்: திறமை, தகுதிகளை மதிக்க வேண்டிய அவசியத்தின் காரணமாக தனியார் கல்லூரிகளுக்கும் பேராசிரியர்களைத் தேர்ந்தெடுக்கிற பொறுப்பினை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அது போன்ற செயல்தான் கேரளாவில் அரசாங்கத்திற்கும், தனியார் கல்லூரிகளுக்குமிடையே தகராறை உண்டாக்கியிருக்கிறது. ஒரு பேராசிரியராகப் பணியாற்றக்கூடியவருக்கு என்ன என்ன தகுதி இருக்க வேண்டும் என்பதை நாம் நிர்ணயித்துவிடுகிறோம். தங்களுடைய கல்லூரிகளுக்கு பேராசிரியர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிற உரிமை அவர்களுக்கே விடப்பட்டு இருக்கிறது. கனம் உறுப்பினர் சொல்வது போன்ற நிலைமை எதிர்காலத்தில்தான் படிப்படியாக வர வேண்டும்.

புலவர் சி. பழனிச்சாமி: பல்கலைக் கழகங்களோடு இணைந்துள்ள தனித் தமிழ் கல்லூரிப் பேராசிரியர்கள் சம்பளமும், அரசினர் கலைக் கல்லூரி பேராசிரியர்கள் சம்பளமும் ஒரே விகிதத்தில் இருக்கிறதா? இல்லை என்றால் இந்த முரண்பாட்டுக்குக் காரணம் என்ன?

1972 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தனிக் கேள்வி வேண்டும்.

திரு. க. நாகராஜன்: உதவிப் பேராசிரியர்கள் நியமனத்திற்கே நேர்முகத் தேர்வோடு, எழுத்து முகத் தேர்வு ஒன்றையும் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதைப்பற்றி அரசுப் பணியாளர்கள் தேர்வுக் குழுதான் முடிவு செய்ய வேண்டும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: அரசுத் தேர்வுத் துறையின் மூலம் 50 விழுக்காடு நேர்முகமாக பேராசிரியர்கள் நியமிக்கபடுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சிறுபான்மை வகுப்பினர்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் ஏதேனும் உண்டா? அது நடை முறையில் கையாளப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நடைமுறையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 விழுக்காடு, பிற்பட்ட இனத்தவர்களுக்கு 31 விழுக்காடு என்கிற விகிதம் கையாளப்பட்டு வருகிறது.

திரு. வீ. இராசகோபால்: உதவிப் பேராசிரியர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள் என்று அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எம்.ஏ., எம்.எஸ்சி. படித்தவர்கள் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் முதலிலும், இரண்டாவது வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் இரண்டாவதாகவும் நியமிக்கப்படுவதற்குச் சில தகுதி விதிமுறைகள் இருக்கின்றன.

திரு. கோவை செழியன்: அரசாங்கம் நேரிடையாக 10 ஏ (1) இன் கீழ் தற்காலிகமாக உதவிப் பேராசிரியர்களை நியமிக்கிறார்கள். ஐந்தாறு வருஷங்களுக்கு மேல் இதுபோல வேலை செய்து வருகிறவர்களைக் கூட சர்வீஸ் கமிஷன் ரெகுலரைஸ் செய்வதில்லை. இது போன்று நியமிக்கப்பட்டவர்கள் சர்வீஸ் கமிஷன் ரெகுலரைஸ் செய்தாக வேண்டும் என்று ஏற்படுத்த முடியுமா? இது போன்று அரசினர் பாலிடெக்னிக்குகளில் 10 ஆண்டு 12 ஆண்டு பணியாற்றிய பிறகு சர்வீஸ் கமிஷன் ரெகுலரைஸ் செய்யாமல் அவர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த முறை ஒத்து வாராது. ஒன்று சர்வீஸ் கமிஷன் மூலமாகவே தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறவர்களைத்தான் முதலாகவே நியமிக்க வேண்டும் என்று வைத்துக் கொண்டு விட வேண்டும். அதில் ஏற்படுகிற காலதாமதத்தின் காரணமாக கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்கள் இல்லாமல் இருக்கக் கூடாது என்கிற அடிப்படையில் நாம் 10 ஏ (1) இன்

கீழ் தற்காலிகமாக பேராசிரியர்களை நியமிக்கிறோம். இப்படி நியமிக்கப்படுகிறவர்கள் பின்னால் சர்வீஸ் கமிஷன் மூலம் ரெகுலரைஸ் செய்யப்பட வேண்டியிருக்கிறது. தகுதி உள்ளவர்களை எல்லாம் ரெகுலரைஸ் செய்து விடுகிறார்கள். தகுதியில்லை என்றால் அவர்கள் தள்ளிவிடுகிறார்கள். இந்த முறை இருக்கிற காரணத்தினால்தான் கல்லூரிகளில் பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் இல்லை என்கிற நிலை இருக்கிறது. அதோடு அவர்கள் சர்வீஸ் கமிஷன் மூலமாகவே தேர்ந்தெடுக்கப்படுகிற சூழ்நிலையும் இருக்கிறது. 10 ஏ (1) மூலமாக நியமிக்கப்படுகிறவர்களை எல்லாம் சர்வீஸ் கமிஷன் ரெகுலரைஸ் செய்தாக வேண்டும் என்றால்—சர்வீஸ் கமிஷனே அவர்களை நியமிக்க வேண்டாம். அரசாங்கமே நேரிடையாக நியமிக்க வேண்டும் என்று செய்து விடலாமே. இது சரியல்ல.

திருப்பூர் அரசினர் மகளிர் கல்லூரிக் கட்டடம்

* 57 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் L. R. G. நாயுடு அரசினர் மகளிர் கல்லூரிக்கு புதுக் கட்டடம் கட்டும் வேலை எப்போது துவங்கும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : திருப்பூரில் உள்ள அரசினர் மகளிர் கலைக்கல்லூரிக்கு ரூ. 13.35 லட்சம் செலவில், முதல் நிலை கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு ஏற்பு அளிக்கப்பட்டுள்ளது. வேலைகள் விரைவில் துவங்கப்படும்.

திரு. சு. துரைசாமி : அந்தப் பள்ளிக் கட்டடத்தைக் கட்டுவதற்கான வேலைகளை இந்த ஆண்டே துவங்கி அடுத்த கல்வி ஆண்டிற்குள்ளாக கட்டடத்தைக் கட்டி முடிக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தப் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்காக ரூ. 13.35 லட்சம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பொதுப்பணித் துறை டெண்டர் போன்றவற்றைக் கோரி மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். வருகிற கல்வியாண்டிற்குள் கட்டடத்தைக் கட்டி முடிக்க வேண்டுமென்ற முறையில்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. ரா. ரா. முனுசாமி : தகுதி பெற்ற உயர்நிலைப் பள்ளிகள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்த அடிப்படையில் தகுதி பெற்றிருக்க வேண்டுமென்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தகுதி அல்ல, வானொலிப் பெட்டிக்குத் தகுதி என்று வைக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த வானொலிப் பெட்டிகளை வாங்கலாம் என்று பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்ன விலைக்குள் வாங்க வேண்டுமென்றும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் வானொலிப் பெட்டிகளை வாங்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister whether all the high schools have been provided with radio sets in Tamil Nadu?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பெரும்பாலான பள்ளிகள் வானொலிப் பெட்டிகள் பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு பள்ளியிலும் 'ஆடியோ விஷுவல் எஜிகேஷனுக்கு' என்று தனிக் கட்டடம் வகுக்கிறார்கள். அந்தக் கட்டடத்திலிருந்து வானொலிப் பெட்டி வாங்க முழு அதிகாரமும் அளிக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்தப் பள்ளிகளில் வாங்கவில்லையோ அங்கெல்லாம் கூட கட்டாயமாக வாங்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : ஆடியோ விஷுவல் எஜுகேஷன் இருக்கும் ஹையர் எலிமென்டரி ஸ்கூலில் இந்தத் திட்டத்தைப் புகுந்த அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : உயர் துவக்கப் பள்ளிகளிலும் பல இடங்களில் இப்போதே வானொலிப் பெட்டிகள் இருக்கின்றன. ஏற்கெனவே அந்த முறையில் பாடங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

திரு. ப. முத்துசாமி : ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் நடைபெறும் ஹையர் எலிமென்டரி ஸ்கூல்களில் ஊராட்சிப் பொது நிதியிலிருந்து வானொலி வாங்கித் தர அனுமதி அளிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது தனியாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. இப்போது அந்தந்தப் பள்ளிகள் வாங்குகின்ற தனிக் கட்டடத்திலிருந்து வானொலிப் பெட்டிகள் வாங்கலாம் என்று அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. பள்ளிச் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் நன்கொடையாகவும் வானொலிப் பெட்டிகளைப் பெறலாம்.

திரு. நா. வீராசாமி : பொது அறிவு வளருவதற்கு ஒலி பரப்பும் செய்திகள் மத்திய அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படுகிறதா அல்லது நம்முடைய மாணவர்களுக்கு எற்றாற்போல் கல்வி இலாகா பங்கு கொண்டு இப்படி இப்படி செய்திகளை ஒலி பரப்ப வேண்டுமென்று நிர்ணயிக்கப்படுகிறதா? இப்போது நம்முடைய

அரசு கல்வி இலாகாவுக்கு இதிலே பங்கு இல்லை என்றால் இனிமேலாவது அந்த முறையில் செய்திகளை நிர்ணயித்து ஒலி பரப்புவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: திருச்சி, சென்னை வானொலி நிலையங்கள் தமிழகத்தின் கல்வித் துறையைக் கலந்து கொண்டு பாடத் திட்டங்களுக்கேற்ப தகுந்த ஆசிரியர் பெருமக்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலமாகப் பாடங்களைப் பயிற்றுவிக்கின்றார்கள். வானொலி நிலையத்தால் தமிழகக் கல்வித் துறையினரைக் கலந்து கொண்டு பாடத் திட்டத்திற்கு ஏற்றாற்போல் வானொலி மூலம் பாடங்களை நடத்தி வருகிறார்கள்.

திரு. ஆ. பரந்தாமன்: இப்படி உயர்நிலைப் பள்ளிகளில் வானொலிப் பெட்டிகளை அமைக்கின்ற நேரத்தில் சினிமாப் பாடல்களைக் கேட்காமல் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையை அரசு பிறப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பள்ளிகளில் பாட நேரங்களுக்கு ஏற்ற வகையில் ஒதுக்கப்பட்ட நேரங்களில்தான் வானொலி மூலம் பாடங்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இடையிலே சில நேரங்களில் சினிமா பாடல்கள் வந்துவிடக் கூடும். பொதுவாக பாட நேரங்களில் பயன்படுத்துவதற்காக இந்த வானொலிப் பெட்டிகள் வைக்கப்பட்டிருப்பதால் பொதுவாக பாடம் பயிற்றுவிப்பதற்கு மட்டுந்தான் பயன்படுத்தப்படும்.

திரு. கோவை செழியன்: பொதுவாக பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் வானொலி மூலமாகவும், வகுப்புகளிலும் ஆசிரியர்கள், பேராசிரியர்கள் பாடம் சொல்லித் தரும்போது சிலபேர் 'போர்' அடிக்கிறார்கள். அதனால் மாணவர்கள் சரியாகக் கவனிப்பதில்லை. ஆகவே, ஒவ்வொரு பாடத்தைப் பற்றியும் சினிமா எடுத்து மாணவர்களுக்குப் போட்டுக் காட்டினால் அவர்கள் நல்ல முறையில் கவனிப்பார்கள். சேரன் செங்குட்டுவன் கனக விசயர் தலைமேல் கல் வைத்தான் என்பதைப் படத்தில் காட்டினால் மாணவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள். அந்த முறையை அரசாங்கம் பின்பற்றுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த முறை இப்போதும் பின்பற்றப்பட்டு வருகின்றது. கல்வித் துறையினர் பூகோளம், வரலாறு, அறிவியல், பொருளியல் ஆகியவை பற்றி எல்லாம் சிறு சிறு டாக்குமெண்டரி பிலிம்கள் வைத்திருக்கிறார்கள். எந்தெந்தப் பள்ளிகளில் திரைப்படக் கருவிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் அந்தப் படங்களை வழங்கும் முறையில் பள்ளிக் கல்வி இயக்குநரகத்திலே அதற்கான படங்கள் இருக்கின்றன. தூதுவர் அலுவலகங்கள் போன்றவற்றிலும் இத்தகைய படங்கள் வைத்திருக்கிறார்கள். அவற்றையும் பயன்படுத்திக்கொள்ளும் நிலை இருக்கின்றது.

எல்லாப் பள்ளிக்கூடங்களும் இந்தப் படங்களைக் காட்டுகின்ற அளவுக்குத் திரைப் படக் கருவிகள் வாங்கக்கூடிய வசதிகளைப் பெற்றில்லை. வசதி இருக்கின்ற பள்ளிகளில் இது நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

திரு. ஏ. எம். இராஜா: டெல்லி யூனிவர்சிடியிலிருந்து ரேடியோ மூலம் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். இரவு பத்து மணிக்கு மேல் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. நம்முடைய தமிழ்நாட்டிலும் மதுரை யூனிவர்சிடி மூலம் தனியாகவே பி.ஏ., எம்.ஏ., தேர்வுகளை எழுதலாம் என்று அனுமதிக்கப்பட்ட நிலையில் மதுரைப் பல்கலைக் கழகத்தின் மூலம் ரேடியோவின் வாயிலாக காலை ஆறு மணிக்குப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்க வழி வகைகளைச் செய்ய அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மதுரைப் பல்கலைக் கழகத்தில் அஞ்சல் மூலம் பாடம் சொல்லிக் கொடுக்கும் முறை சென்ற ஆண்டில் புகுத்தப்பட்டது. அந்தப் பல்கலைக் கழகம் வானொலி மூலமாகப் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்றால் மதுரையில் வானொலிக் கூடம் அமைய வேண்டும். தற்போது சென்னையிலும், திருச்சியிலும்தான் வானொலிக் கூடங்கள் இருக்கின்றன. அதற்கான காரியங்கள் எந்த அளவுக்கு சாத்தியப்படும் என்று ஆராய்ந்து பல்கலைக் கழகத்தினர் முயற்சிகளை எடுப்பார்களானால் அதற்குத் துணையாக இருக்க அரசு முயலும்.

உயர்நிலைப் பள்ளிகளுக்கு 'வானொலிப் பெட்டிகள்'

* 58 வினா—திரு. சா. சா. முனுசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடைபளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள உயர்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் வானொலிப் பெட்டி வைத்து அதன் மூலம் மாணவ, மாணவிகளுக்குப் பொது அறிவு வளரச் செய்கின்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) தமிழகத்திலுள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளும் தகுதி அளிக்கப்பட்டுள்ள, வானொலிப் பெட்டியினை நிர்ணயிக்கப்பட்ட நிலையினில் வாங்கிக் கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. பள்ளி மின்னமைதியற்றிருந்தால் கூட மின்கல வானொலிப் பெட்டிகளைப் பெறுவதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி நிதி ஆதாரங்கள்

*55 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வெங்கட்டரமணன் கமிட்டி தமிழ்நாடு அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) அறிக்கை அரசு பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா: அதை விரைவில் பரிசீலித்து செயல்படுத்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இது பற்றி இரண்டு மூன்று கூட்டங்களில் வைத்து முதலமைச்சர் அவர்களால் பரிசீலிக்கப்பட்டது. இப்போது துறை அளவில் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. மறுபடியும் இது நிதித் துறை மூலமாக ஆராயப்பட்டு பிறகு முடிவுகள் மேற்கொள்ளப் படும்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, has this Committee which is called a High Power Committee, gone into the entire question of mismanagement, maladministration, wasteful expenditure and financial indiscipline like diversion of loan funds to revenue account and many other things that are happening in the Madras Corporation or has the Committee been apppointed to find out additional resources only?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அந்தக் குழுவிற்கு டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் பல வகைகளிலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

1. The Committee shall go into the financial estimates of revenue and expenditure of the Corporation of Madras over the years 1969–74, keeping in view the possibility of raising additional taxes, collecting existing taxes promptly and eliminating sources of leakage of revenue and wasteful expenditure:

2. The Committee will suggest ways and means of bridging the gap that may remain between such estimates of revenue and expenditure, as it accepts;

3. The Committee will also examine the capital budget of the Corporation, the likely requirements of capital resources over the five years of the Fourth Five-Year Plan and suggest means of obtaining these resources.

4. The Committee will examine the requirements of cash resources of the Corporation, explore the prospects of raising funds from institutions such as the Life Insurance Corporation of India and Commercial Banks through debentures and special purpose bonds. The Committee will advise on the terms and conditions on which—

(*a*) the proceeds of such debentures should be utilised.

(*b*) the loans given by Government of Tamil Nadu should be repaid.

5. The Committee will generally advise on the measure needed to tighten up assessment and collection of taxes and non-tax revenues in the Corporation.

6. In making its report, the Committee will bear in mind the suggestions of the Special Officer, Local Finance Enquiry Committee.

7. The Committee will make an interim report within two months of its constitution so as to tide over the current difficulties of the Corporation. It will also advise Government specifically on the objects and purposes for which the money borrowed by the Corporation, by issuing Municipal Debentures and Stock Certificates of the nominal value of Rs. 1 crore and deposited in the Indian Bank, will be used.

இப்பொழுது அந்தக் குழு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதுதான் பரிசீலனையில் இருந்து வருகிறது. விரைவிலே அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதற்கு மேல் என்ன விளக்கம் வேண்டும்? கிட்டத்தட்ட 20 கேள்விகளுக்கான விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. இரா. இராமலிங்கம்: தமிழ்நாட்டிலேயுள்ள நகராட்சி மன்றங்களின் நிதி வசதிகள் சமாளிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. எனவே தமிழ் நாட்டில் உள்ள நகராட்சி மன்றங்களின் நிதிவசதிகளைப் பெருக்கக்கூடிய முறையிலே அதைப்பற்றி ஆராய குழு அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி தனியாக முயற்சியெடுக்கப்பட்டு எப்படி அவற்றின் நிதிவசதிகளைப் பெருக்கலாம் என்பதை அந்தத் துறையினர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதற்கென ஒரு தனிக் குழு அமைக்கப்பட்டு இருக்கிறதா என்ற விவரம் இல்லை. அதைப்பற்றிய முயற்சியை உள்ளாட்சித் துறையினர் மேற்கொண்டிருக்கிறார்கள்.

DR. H. V. HANDE : Is it not a fact that several of the amounts which have been earmarked for a particular item of work by the Corporation after getting sanction of Government that it is going to be spent for a particular item of expenditure, shifted that expenditure to another item later on without knowledge of Government. Is it not a fact that on several occasions the Corporation has shifted that amount for another item of work? If so, has it been brought to the attention of Government ? Have the Government pulled up the Corporation and taken necessary action so that such wrong thing do not take place in future in the Corporation ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஒரு இனத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையை இன்னொரு இனத்திற்கு ஒதுக்கக் கூடாது என்று முறை இருக்கிறது. அப்படிச் செய்யப்படுமானால் அதைத் தடுத்து நிறுத்தி, அப்படிச் செலவழிக்கக் கூடாது என்றுதான் அரசாங்கம் கட்டுப்படுத்திக் கொண்டு வருகிறது. அதற்கான வகையிலேதான் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது.

Taxes on vehicles in Mayuram Municipality.

* 60 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for **Education and Local Administration be pleased to state—**

(*a*) whether it is a fact that the Mayuram Municipality has requested the Government to permit it to do away with the levy of cycle tax;

(*b*) if so, whether the Government have turned down the request; and

(*c*) the reasons therefor ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) மாயூரம் நகராட்சிக்கு சைக்கிள் மற்றும் மாட்டு வண்டி, ஜட்கா வண்டிகளுக்கு வரி தள்ளுபடியின் மூலம் பெருந்தொகை இழக்க நேரிடுவதால் மாயூரம் நகராட்சியின் வேண்டுகோளை அரசு ஏற்கவில்லை.

THIRU N. DENNIS : May I know from the Hon. Minister whether such a levy has been abolished in Madras Corporation ? Then why a similar thing has been disallowed to this Municipality? Would it not amount to interference in the autonomy of local bodies ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சிலபல நகராட்சி மன்றங்களிலே சைக்கிள் வரி நீக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட வரிகள் நீக்கப்படுவது அந்தந்த நகராட்சி மன்றங்களின் பொது வருமானத்தைப் பொறுத்து அது போதுமான அளவுக்கு இருந்தால் அது நீக்கப்படுகிறது. அப்படியில்லாமல் வருமானம் பற்றுக்குறையாக இருந்தால் அப்படிப்பட்ட நிலைமையில் இதையும் எடுத்துவிட்டால் மேலும் நிதிப்பற்றுக்குறை அதிகமாகத்தான் ஏற்பட்டு கஷ்டப்பட வேண்டிய நிலை இருக்கும். மாயூரம் நகராட்சியைப் பொறுத்த வரையில் சைக்கிள் வரி 6 மாதத்திற்கு 2 ரூபாய் என்று வசூலிக்கிறார்கள். இந்த வரியும், இதைப் போன்ற வண்டிகள் மூலம் வருகின்ற வரியும் சேர்த்து மொத்தம் 10 ஆயிரம் ரூபாய் வருமானம் வருகிறது. எனவே நிதிப் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கின்ற நகராட்சி மன்றங்களில் இப்படிப்பட்ட இழப்பு வேண்டாம் என்று கருதித்தான் ஏற்றுக்கொள்ளவில்லை. போதுமான நிதிவசதிகள் இருக்கின்ற நகராட்சிகளில் இது அனுமதிக்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் நகராட்சி பற்றுக்குறையான நகராட்சி என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அங்கே ஆளுங் கட்சியாக இருக்கிற கட்சி தேர்தலுக்கு முன்பு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் சைக்கிள் வரியை ரத்து செய்வோம் என்று சொல்லி தேர்தலில் ஈடுபட்ட காரணத்தால் அவர்கள் இப்பொழுது அப்படித் தீர்மானம் போட்டு மாட்டிக் கொண்டு விழிப்பது அரசாங்கத்துக்கு தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த நகராட்சி சைக்கிள் வரியை நீக்கவேண்டுமென்று தீர்மானம் போட்டு அனுப்பியிருப்பது உண்மைதான். ஆனால் நகராட்சியின் நிதிவசதியைப் பொறுத்துத்தான் அந்தத் தீர்மானத்தை அனுமதிப்பது பற்றி அரசாங்கம் முடிவு செய்யும். நிதிப்பற்றுக்குறை இருக்கிற நிலையில் அரசாங்கம் அதை அனுமதித்தால் மேலும் நிதி இழப்புதான் ஏற்படும். எனவே அந்த வகையில் நகராட்சி தீர்மானம் போட்டு அனுப்பியிருந்தாலும் அதை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 67 . . . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I have been asking for a question for quite some time. I think the table light there is hiding me and as such I am not able to catch the eye of the Hon. Deputy Speaker.

MR. DEPUTY SPEAKER : The hon. Member can put her question.

திருமதி த. ந. அனந்தநாயகி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக நகராட்சி மன்றங்களிலே கிடைக்கிற நிதிகள் ஒழுங்காக யாருக்குப் போய்ச் சேரவேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை என்ற புகார்கள் மக்களிடையே நிறைய இருந்து வருகின்றன. எனவே, பொதுவாக ஒரு குழுவை அமைத்து எப்படி யெல்லாம் நிதி எங்கெங்கே போய்ச் சேருகிறது, சேர வேண்டியவர்களுக்குச் சேருகிறதா என்பதை யெல்லாம் ஆராய்வதற்காக ஒரு குழுவை அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது அவையெல்லாம் கவனிக்கப்படுகிறது. ஆனால் தனிக் குழு அமைக்கப்பட்டிருக்கிறதா என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

Export of 'Illmenite'

* 67 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether Illmenite sand, a rare earth mineral is allowed to be exported to Japan and other Western Countries from Tuticorin; and

(b) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தூத்துக்குடித் துறைமுகத்திலிருந்து ஐக்கிய அரசு (யூ. கே.)க்கு மட்டும் தான் 'இல்மெனைட்' ஏற்றுமதியாகியுள்ளது.

(இ) 1969-70, 1970-71 ஆகிய ஒவ்வொரு ஆண்டிலும் 10,000 கிலோ கிராம் அளவுள்ள ரூ. 1,350 மதிப்புள்ள இல்மெனைட் ஏற்றுமதியாகியுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : இதில் நம்முடைய சர்க்காருக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது ? இதைப் பயன்படுத்தி இங்கேயே தொழிற்சாலைகள் ஆரம்பிக்க அரசு முயற்சி யெடுத்திருக்கிறதா ? மத்திய சர்க்காருக்கு இதுபற்றி வற்புறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறதா ? அப்படி என்றால் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தப் பொருள்களை எடுக்கும் பொழுது, நமக்கு மைனிங் லீசென்ஸ்க்காகக் கிடைக்கின்ற வருமானம்தான் கிடைக்கிறது. ஏற்றுமதி மூலம் கிடைக்கின்ற வருமானம் எல்லாம் மத்திய அரசுக்குத்தான் போய்ச் சேருகிறது. இல்மெனைட், டைட்டேனியம் சம்பந்தபட்ட பொருள்களைத் தயாரிப்பதற்காக இந்தியன் ரேர்எர்த்ஸ் கம்பெனியை—மத்திய அரசாங்கத்தினுடைய கம்பெனியை கேட்டிருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த இந்தியன் ரேர்எர்த்ஸ் கம்பெனி நம்முடைய அரசாங்கத்தை அணுகி எலக்ட்ரிசிடி கன்செஷன் ரேட்டிலே தரவேண்டுமென்று ஏதாவது வினாக்கள் எழுப்பியிருக்கிறதா ? அப்படி யென்றால் என்ன நடவடிக்கை அதன்மேல் எடுக்கப்பட்டிருக்கிறது ? நான் கேள்விப்படுகிற வரையிலே கேரள அரசாங்கத்தில் முன்பு சவரையிலிருப்பதை மணவாளக்குறிச்சிக்கு மாற்ற வேண்டுமென்று சொல்லப்பட்டு வந்தது. அதைப்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதை இங்கே பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நல்ல கருத்தை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதை வரவேற்கிறேன். அந்தத் தொழிற்சாலைக்குக் குறைந்த விலையில் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லியது பாராட்டுக்குரியது. இது பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்களால் அடாமிக் எனர்ஜி கமிஷனுடைய தலைவருக்கு, மின்சாரம் குறைவான விலைக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாட்டிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே இந்தத் தொழிற்சாலை வரவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : இல்மெனைட், மோனோசைட், போன்ற பொருட்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மணவாளக்குரிச்சியில் ஏராளமாகக் கிடைக்கின்றன. இவற்றை நாம் அயல்நாடுகளுக்கு அனுப்பிக் கொண்டு இருக்கிறோம். அங்கிருந்து பல்வேறு பொருள்கள் செய்து நமக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். நாம் வாங்கிக் கொண்டிருக்கிறோம். இதுபோன்ற மூலப்பொருட்களைக் கொண்டு என்ன என்ன பொருட்கள் செய்வதற்கான பேக்டரியை இங்கேயே

ஏற்படுத்த வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசாங்கத்தை அணுகியிருக்கிறதா? இல்லை யென்றால் இனிமேலாவது அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுதுதான் அதற்குப் பதில் அளித்தேன்.

முந்திரித் தொழிற்சாலை

*68 வினா—**திரு. செ. சதாசிவம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் அரசாங்கத்தாலும் பொதுமக்களாலும் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் முந்திரி சாகுபடி செய்யப்படுவதால் அந்த ஜில்லாக்களில் ஏதாவது ஒரு இடத்தில் முந்திரிக் கொட்டை உடைக்கும் தொழிற்சாலையும் உடைக்கப்பட்ட முந்திரி தோலிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலையும் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அவைகள் எப்போது ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பன்னுருட்டியில் இரண்டு நவீன முந்திரி தொழிற்சாலைகள் அமைக்கும் சாத்தியக்கூறு பற்றி தமிழ்நாடு விவசாய தொழில் கழகம் மத்திய அரசு சிறு தொழில் பணிமனை இயக்குநருடனும், தமிழ்நாடு தொழில் வணிகத்துறை இயக்குநருடனும் கலந்து ஆராய்ந்து வருகிறது. விஷயம் இன்னும் ஆரம்ப நிலையிலேயே இருந்து வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், எத்தனை நாட்களுக்கு இந்த ஆராய்ச்சி நடக்கும்? எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விரைவிலேயே முடிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவில் முந்திரிக் கொட்டை உடைக்கும் பல தொழிற்சாலைகள் இப்பொழுது இயங்கிக் கொண்டு இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விளக்கம் கொடுக்காதீர்கள், கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: அதில் தொழில் செய்யும் தொழிலாளர்கள் முந்திரிக் கொட்டையிலிருந்து வரும் எண்ணெயினால் பாதிக்கப்பட்டு பல நோய்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, இதை மாற்ற அதனை நடத்தும் முதலாளிகள் இந்த நோய்கள் பரவாமல் தடுக்க மாற்றுத் திட்டங்களைச் செய்ய வேண்டும் என்று இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் புதிய தகவல் ஒன்றைத் தருகிறார்கள். அதைப்பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. என். கணபதி: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கந்தர்வக் கோட்டையைச் சுற்றி நிறைய முந்திரித் தோட்டங்கள் இருக்கின்றன. அவைகளைப் பயன்படுத்தி அங்கே முந்திரித் தொழிற்சாலையை ஆரம்பிக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எங்கெங்கே இப்படிப்பட்ட வசதி வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் பரிசீலிக்கலாம்.

திரு. செ. சதாசிவம்: தலைவரவர்களே, உடையார்பாளையத்தில் ஏராளமான சர்க்கார் காடுகள் இருப்பதால் அங்கே ஒரு ஆராய்ச்சி சாலையும், உடைப்புச் சாலையும் ஆரம்பிக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் முந்திரி வளர்கிறது.

கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி

*69 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறிவியல் கண்ணாடிப் பொருட்களை உருவாக்கும் பயிற்சி நிலையம் ஏதேனும் தமிழகத்தில் தற்போது செயல்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதில் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்?

(உ) பயிற்சி நிலையத்தை விரிவாக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம். கிண்டியில் ஒரு பயிற்சி நிலையம் செயல்படுகிறது.

(இ) ஒரு அணியில் 20 மாணவர்களுக்கு மேற்படாமல் இரண்டு அணிகளில், மாணவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு பயிற்சி பெறுகிறார்கள்.

(உ) பயிற்சி சம்பந்தப்பட்ட வரையில் விரிவாக்கும் திட்டம் இல்லை.

[1972 ஆகஸ்ட் 1.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தப் பயிற்சி நிலையத்தில் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு விலைமதிப்புள்ள அறிவியல் கண்ணாடிப் பொருட்கள் உருவாக்கப்படுகின்றன என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பயிற்சி நிலையம் பெரும்பாலும் பயிற்சி கொடுக்க இருக்கும். ஆனால் சென்னையிலே இருப்பது மட்டும் உற்பத்தியை அதிகப்படுத்த முயற்சியெடுக்கிறோம். எவ்வளவு உற்பத்தி என்ற விவரம் இல்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, out of the trainees, how many are girl students ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மொத்தம்தான் இருக்கிறது. ஆண், பெண் விவரம் இல்லை.

*70 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரவக்குறிச்சி வட்டாரத்தில் கண்ணாடித் தொழிற்சாலை ஒன்றை நிறுவும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

விசைக் கலப்பைகள்

*71 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறிய வயல்களில் உபயோகிக்கத் தக்க பல காரிய விசைக் கலப்பைகளை (power fillers) தமிழகத்திலேயே தயாரிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலையைத் தஞ்சையிலேயோ, திருச்சியிலேயோ அமைக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : "சதர்ன் இண்டஸ்டிரியல் கார்ப்பரேஷன்" என்ற நிறுவனம் 10,000 பவர் டில்லர்ஸ் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு, திட்டத் தட்ட 40 இலட்சம் ரூபாய்க்குத் திட்டமிட்டு அதற்கான அனுமதியை மத்திய சர்க்காரிடத்தில் கேட்டிருக்கிறது. வந்தவுடன் இடத்தைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

1972 ஆகஸ்ட் 11]

THIRU M. A. LATHEEF : Sir, tillers used for agricultural purposes are manufactured in the Agricultural Engineering Workshop at Washermanpet, but full utilisation is not made, from that factory. May I know if the Government would consider sympathetically to just boost up production level in the workshop and also have power tillers manufactured in the same factory?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நடக்கும் தொழிற்சாலையைப் பற்றித் தனிக் கேள்வி வேண்டும். இது, பவர் டில்லர்ஸ் உற்பத்திக்கான புதிய அனுமதியைப் பற்றிச் சொன்னேன். இதிலே 'எக்ஸ்பேன்ஷன்' பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். அதுபற்றித் தகவல் வந்தால் பரிசீலிக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், மாண்புமிகு தொழில் அமைச்சரவர்கள் எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும் என்ற கேள்விக்குப் பதில் தரவில்லை. எந்த மாவட்டத்தில் என்று திட்டவட்டமாகத் தெரிவிப்பார்களா ? மேலும், ஏற்கனவே உற்பத்தி செய்யும் பவர் டில்லர்களுக்கே சந்தையில்லை என்ற நிலையிருக்கும் பொழுது, மேலும் அனுமதியைக் கொடுத்து உற்பத்தியைப் பெருக்கினால் அதற்கான மார்க்கெட்டிற்கு என்ன செய்வார்கள் ? அதைப்பற்றி முன்னரே ஆராய்ச்சி நடத்தியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் சொன்ன பதிலை அவர்கள் கவனிக்க வில்லை என்று நினைக்கிறேன். அனுமதி கிடைத்த பிறகு அவர்கள் கேட்ட மாவட்டத்திலே வைக்கலாமா என்பதைப்பற்றிப் பரிசீலிக்கப்படும் என்று சொன்னேன். உற்பத்தியைப் பொறுத்தவரையில், பவர் டில்லர்ஸ்க்கு அனுமதியைக் கொடுப்பதற்கு இந்திய நாட்டிலுள்ள தேவையைக் கணக்கிட்டுக் கொடுக்கிறார்கள். இப்பொழுது கேரளா மாகாணம், இன்னும் சில மாகாணங்களில் இந்த பவர் டில்லர்ஸ் உற்பத்தி இருக்கிறது. ஜப்பானிய நிபுணர்களோடு பேசியதில் தமிழ்நாட்டில் பவர் டில்லர்ஸ் பயன்படுத்த முடியுமா என்று ஆராயப்பட்டது. அதில் இரண்டு கருத்துக்கள் இருந்தன. பெரிய டிராக்டர்களைப் பயன்படுத்தலாம், பவர் டில்லர்ஸ் அதிகம் பயன்படுத்த முடியாது என்ற கருத்து இருக்கிறது. ஆகவே மத்திய சர்க்காரின் சிபார்சின் அடிப்படையில் முடிவெடுக்கப்படும்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Minister whether there is any application from the private sector for the starting of power tillers factory and if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் இப்பொழுது சொன்னது பிரைவேட் செக்டார் தான்.

[1972 ஆகஸ்ட் 11

THIRU B. VENKATASWAMY : Sir, may I request the Hon. Minister to say whether there is any proposal to bring down the rate of power tiller by reducing the cost of production ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிற்சாலை வந்தவுடன் எப்படி உற்பத்திச் செலவைக் குறைத்து விலையைக் குறைக்கலாம் என்று பரிசீலிக்கலாம்.

காவிரி, வெண்ணறு பாசன மேம்பாடுகள்

*72 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் கல்லணை காவிரி-வெண்ணறு ஆகிய நதிகளைச் சீரமைத்து அபிவிருத்தி செய்ய அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்தப் பணிகள் எப்போது செயல்படுத்தப்படும் ?

(உ) அதற்காகும் செலவுத் தொகை எவ்வளவு மதிப்பிடு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ), (இ) & (உ) ஆம். 1972-73-ஆம் ஆண்டில் தொடங்கி அடுத்த நான்கு ஆண்டுகளில் ரூ. 1,288.33 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் பழைய காவிரி கயவாய்ப் பகுதியின் பாசன ஏற்பாட்டினைப் பழுதுபார்க்கவும், புதுப்பிக்கவும் உரிய விரைவுத் திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்கு அரசு அண்மையில் ஒப்புதல் வழங்கியுள்ளது. 1972-73-ல் செலவிடுவதற்கு ரூ. 244.50 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கல்லணையிலிருந்து பிரிந்து, வெண்ணறு-காவிரி ஆகியவற்றால் பயன்பெறுகின்ற, பழைய காவிரி கயவாய்ப் பகுதியின் பாசன ஏற்பாட்டைக் காலத்திற்கேற்ப மாற்றி அமைத்தலும் அடங்கும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்காக இது வரையில் அரசு செலவழித்த தொகை எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த ஆண்டு செலவு செய்ய ஒதுக்கிய தொகை ரூபாய் 244.50 லட்சம் என்று சொன்னேன். வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதுவரையில் செலவிட்ட தொகைக்கான கணக்கு இப்பொழுது இல்லை.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, இந்தத் திட்டம் திருச்சி மாவட்டத்தில் காவிரியாற்றிலிருந்து பிரியும் கால்வாய்களுக்கும் பொருந்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது காவிரி, வெண்ணறு ஆகிய நதிகளைப் பொறுத்த திட்டமாகும்.

1972 ஆகஸ்ட் 11]

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, இந்தக் கால்வாய் சீரமைப்பு வேலைகள் முழுவதும் முடிவடையாமல் அரைகுறையாக இருப்பதால் தண்ணீர்ப் பாசனம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கால்வாயையும் எடுத்துக் கொண்டு வேலையை ஒரே ஆண்டிலே முடிப்பதற்கு அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒரே ஆண்டில் முடிப்பது சாத்தியமில்லை என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். எனவே தான் தான்காண்டுத் திட்டமாகப் போட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

*73 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் வடிகால் சீரமைப்புக்காக உலக வங்கி கடன் தர முன் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : காவிரி கயவாய்ப் பகுதியில், வடிகால் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ரூ. 680 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் பெருந்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் பழைய காவிரி கயவாய்ப் பகுதி திட்டத்தைப் புதுப்பித்தல் குறித்த திட்ட அறிக்கையில் இது சேர்க்கப்பட்டுள்ளது. இது 1969-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் இங்கு வந்திருந்த உலக வங்கி ஆய்வுக் குழுவின்முன் வைக்கப்பட்டது. திட்ட அறிக்கை, மத்திய நீர் மின்சார ஆணைக் குழுவின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் வடிகால் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று பல்லாண்டு காலமாக கேட்டுக்கொண்டு வருகிறார்கள். அதை நிறைவேற்றாமல் இம்மாதிரி காலந்தாழ்த்துவது அந்த மாவட்டத்தினுடைய விவசாய அபிவிருத்திக்குப் பாதகமாக இருக்கிறது அல்லவா ? ஆகவே உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தீவிர முயற்சியெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1972-73-ஆம் ஆண்டில் தொடங்கி அடுத்த நான்கு ஆண்டுகளில் சுமார் 12 கோடியே 88 லட்சம் ரூபாய் செலவில் காவிரி கயவாய்ப் பாசனத் திட்டங்களை விரிவாக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வடிகால் பிரச்னையைப் பொறுத்தும் சில திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மேற்கொண்டும் துரிதப்படுத்தப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்தக் காவேரி டெல்டாப் பகுதியை சீரமைப்புச் செய்ய எவ்வளவு ஆண்டுகளுக்கு முன் முயற்சி எடுக்கப்பட்டது? எவ்வளவு ஆண்டுக் காலம் ஆய்வில் இருந்தது? அது முடிவு அடைய எவ்வளவு ஆண்டுக் காலம் ஆகும் என்று தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எனக்குத் தெரிந்தவரையில் 1968-69-ல் பரிசீலிக்கப்பட்டது. 1969-ல் இது மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது சில திட்டங்களைப் பொறுத்த வரையில் நம் அரசு நான்கு ஆண்டுகளுக்குள்ளாக நிறைவேற்ற ஏற்பாடு செய்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி நேரம் ஏற்கனவே முடிந்து விட்டது. சிறிது நேரத்திற்குத்தான் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறது. நாற்பது பேர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

பொன்னனியாறு திட்டம்

*74 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், பொன்னனியாறு திட்ட வேலை எப்போது துவக்கப்பட்டது?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது?

(உ) இதனால் எத்தனை ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) 26—6—70 அன்று வேலை துவக்கப்பட்டது.

(இ) தற்போது வேலை துரிதமாக நடந்து கொண்டிருக்கிறது.

(உ) இதனால் புதியதாகப் பாசன வசதி பெறும் நிலம் 1830 ஏக்கர். மேலும் தற்சமயம் பாசனத்தில் உள்ள 271 ஏக்கருக்கு நம்பகமான பாசன வசதி அளிக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: என் தொகுதியில் பஞ்சப்பட்டியில் ஒரு ஏரி இருக்கிறது. அதில் தண்ணீர் பஞ்சம் நிறைய இருக்கிறது. ஆகவே இதை சற்று நீட்டினால் அந்த ஏரிக்கு தண்ணீர் வர வாய்ப்பிருக்கும். சில ஆயிரம் ஏக்கர்கள் வினை நிலமும் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி கேளுங்கள், பேச்சாக ஆரம்பித்துவிட்டீர்களே.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: ஆகவே இந்தத் திட்டத்தை பஞ்சப்பட்டிக்கு நீட்டித்துத் தர அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே அத்திட்டம் பற்றி முடிவு செய்யப்பட்டு வேலை தொடங்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்களின் கருத்து சாத்தியமானதாக இருந்தால் பரிசீலித்துப் பார்க்கலாம்.

'அதிகாரி' கண்மாய்

*75 வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றிய எல்லைக்குள் உள்ள அதிகாரி கண்மாயினை மராமத்து செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) ஒப்பு அறிவிப்புகள் உறுதிப் படுத்தப்பெற்றபின், வேலை துவங்கப் பெறும்.

திரு. நா. வெ. குருசாமி: தற்சமயம் அந்தக் கண்மாயில் வேலை நடந்து கொண்டிருக்கிறது கடந்த ஒரு மாத காலமாக. ஆனால் அந்தக் கால்வாயை வெட்டும்போது சிலர் இடையூறு செய்கிறார்கள். அவர்கள் மீது அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்து அந்தக் கால்வாயை விரைவில் சீரமைக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இடையூறுகள் நடைபெறுத அளவிற்கு உறுப்பினர் அவர்கள் ஒத்துழைப்பு தந்து நடவடிக்கைகள் எடுத்தால் அதிகாரிகள் விரைவாக நிறைவேற்றித் தருவார்கள்.

Aruppukottai Tank

* 76 Q.—THIRU SOWDI S. SUNDARA BHARATHI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any permission was given by Public Works Department authorities to cut open the bund of Aruppukottai

Periakanmoi tank and drain the water in the tank to the detriment of ayacut lands in the month of May, 1972 to the contractor who has undertaken to deepen the tank; and

(b) if not, the action taken in the matter ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) : 1972-ம் ஆண்டு மே மாதம் அருப்புக்கோட்டை கண்மாய் பொதுப்பணித் துறையினரால் தகுந்த அளவிற்கு செப்பனிடுவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. நெற்பயிர் அறுவடைகள் ஆகி பக்குவ நிலையில் இருந்தால் மண் வேலை செய்வதற்கு ஏது வாக கண்மாயில் உள்ள சிறிதளவு நீர் வற்றும்படி செய்யப்பட்டது. எந்தப் பயிரும் ஆரம்ப நிலையில் இல்லாமலும் பாசனம் தேவையில்லை என்ற நிலையிலும் இருந்தால் நிலங்களுக்கு பாதகமெதுவுமில்லை.

வேளாண்மைக் கல்லூரிக்கு மாணவர்கள் தேர்வு

* 77 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயக் கல்லூரியில் மாணவர்கள் எந்தெந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : எம்.எல்லி. படிப்பிற்கான நிபந்தனைகள். வயது 19 ஆண்டும் ஆறு திங்களுக்கும் மேல் இருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்டதொரு பல்கலைக் கழகத்தில் வேளாண்மை பட்டப்படிப்பில் முதல் வகுப்பு அல்லது இரண்டாவது வகுப்பில் தேறியிருக்க வேண்டும். பட்டப் படிப்பில் மூன்றாவது வகுப்பில் தேறியவரானால் ஐந்துவருடம் வேளாண்மை ஆராய்ச்சியில் அனுபவம் பெற்று குறைந்தது ஐந்து ஆராய்ச்சிகளில் கட்டுரைகள் எழுதியிருந்தால் வேளாண்மை பட்ட மேற்படிப்பிற்கு தகுதியுடையவராகலாம். ஒவ்வொரு மாணவருக்கும் 100 மதிப்பெண் தேவைப்படுகிறது. தற்போது ஹரிஜன மாணவர்களுக்கு 18 சதவீதமும் மற்ற பிற்தங்கிய வகுப்பினருக்கு 31 சதவீதமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பி.எஸ்சி. மாணவர்களுக்கு வயது 15 ஆண்டு ஆறு மாதத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும். சென்னை, மதுரை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அல்லது அங்கீகரிக்கப் பட்டதொரு பல்கலைக் கழகத்தில் புகுமுக வகுப்பில் தேர்வு பெற்றிருக்க வேண்டும் அல்லது அதற்கு ஈடான தகுதி பெற்றிருக்க வேண்டும். மூன்றாம் பார்ட் பௌதீகம், இரசாயனம், தாவரயியல், விலங்கியல், உயிரியல் இவற்றில் இரண்டாவது தகுதி பெற்றவராக மார்க் பெற்றிருக்க வேண்டும். இவற்றிலும் ஹரிஜன மாணவர்களுக்கு 18 சதவீதமும், பிற்பட்ட வகுப்பினருக்கு 31 சதவீதமும் இடங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

MR. DEPUTY SPEAKER : The answer is very comprehensive. I am just wondering ...

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, how many students have applied for the Agricultural College and how many have been admitted and what is the number of seats ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தனிக் கேள்வி போட வேண்டும்.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Sir, the main question relates to the general admission of students to the Agricultural College and the reply of the Hon. Minister relates to the post-graduate studies. So may I know the general principles applied for general admission and for post-graduate studies ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : பி.எஸ்.ஸி. (அக்ரிகல்ச்சர்), எம்.எஸ்ஸி.க்குத் தான் சொன்னேன்.

MR. DEPUTY SPEAKER : He has also referred the admission for B.Sc. Course.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : கடந்த ஆண்டு கோவை விவசாயக் கல்லூரியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 240 மாணவர்களில் ஒரு முஸ்லிம் மாணவர் கூட தேர்ந்தெடுக்கப்படவில்லையென்று அறியவருகிறேன். அது உண்மையா ? அப்படி அது உண்மையாக இருக்குமேயானால் சமுதாயத்தின் ஒரு பிரிவினருக்கு இது அநீதி அல்லவா ? இதைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தகுதி பற்றி சொன்னேனே தவிர மற்ற புள்ளி விவரங்களுக்கு தனிக் கேள்வி போட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தகுதிபற்றி கேளுங்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா : அமைச்சர் அவர்கள் மாணவர்களை தேர்ந்தெடுப்பதற்கு வேண்டிய வயது வரம்பு 19½ வயது என்று சொன்னார்கள். தாழ்த்தப் பட்ட மாணவர்களுக்கு வயது வரம்பை சற்று உயர்த்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : எல்லா மாணவர்களுக்கும் ஒரே விதி இல்லை. தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு மட்டும் தனி விதி என்று அதற்கு விதிகள் உள்ளன. அதன்படி ஆராயப்படும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : வேளாண்மை வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்கள் புதிது புதிதாக வந்து கொண்டிருக்கின்றன. விண்ணப்பதாரர்கள் கிட்டத்தட்ட இரண்டாயிரம் பேர்கள் விண்ணப்பித்தாலும் சுமார் 200 பேர்களுக்குத்தான் இடம் கிடைத்திருக்கிறது. ஆகவே இடங்களை அதிகப் படுத்த அரசாங்கம் அவசர நடவடிக்கை எடுக்குமா ?

மாண்மிகு பேரவைத் துணைத் தலைவர் : இது கூட ரெலவன்ட் அல்ல. உங்களுக்கு விருப்பம் இருந்தால் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தகுதிபற்றி கேட்டார்கள் என்றாலும், மாணவர்களுக்கு அதிக இடம் தரவேண்டும். இவைகளைப் பற்றி சட்டமன்ற உறுப்பினர் தனியாகப் பேசி விளக்கமாக சொன்னால் சர்க்கார் வேண்டிய போதுமான கொள்கையை ஏற்றுக்கொள்ளும். இருக்கிற இடத்தைக் குறைக்காமல் தேர்வு நடத்தியிருக்கிறோம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த ஆண்டு விவசாயக் கல்லூரி மாணவர்களை தேர்ந்து எடுத்த அடிப்படையில் ஒரு பெரிய கோளாறு ஏற்பட்டிருக்கிறது. அதாவது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பின்தங்கிய வகுப்பினர் பட்டியல் அந்த விவசாயக் கல்லூரி தேர்வுக்கான பிராஸ்பெக்டஸ்-ல் சேர்க்கப்படாததால் முக மதியர், ஸி.எஸ்.ஐ. கிறுஸ்தவர்கள் ஆகியோர்களுக்கு இடம் கிடைப்பதற்கு வாய்ப்பில்லாமல் அந்த சமுதாயங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்த நிலையை மேலும் ஏற்படுத்தாதபடி அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இது கேள்வியாகப்படவில்லை. ஏதோ குறை சொல்கிறார்கள். அதை ஆராய்வதற்கான முயற்சியை சர்க்கார் எடுத்துக்கொள்ளும்.

விவசாயப் பாலிடெக்னிக்குகள்

* 78 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாய பாலிடெக்னிக்குகளை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தமிழ்நாட்டில் விவசாயப் பாலிடெக்னிக்குகளை அமைப்பது பற்றிய செயற்குறிப்பு ஒன்றும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். கிட்டப்பா : வேளாண்மைக் கல்லூரிகள் அமைப்பதற்கு சிரமங்கள் அதிகமாக இருப்பதாகக் காணப்படுவதால் இத்தகைய வேளாண்மை வளர்ச்சிக்கான பாலிடெக்னிக்குகளையாவது விரைவில் அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதுபற்றிய யோசனை இப்போது இல்லை என்று முன்பே சொல்லியிருக்கிறேன்.

புதிய கோதுமை ரகங்கள்

* 79 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ்நாட்டில் பயிரிடுவதற்கு ஏற்ற கோதுமை ரகங்கள் ஏதேனும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டில் மலைப்பிராந்தியங்களில் பயிரிடுவதற்காக "சப்பேர்டு எலர்மா" என்ற ரகமும், சமநிலை இடங்களில் பயிரிடுவதற்காக "கல்யாண் சோனா" என்ற ரகமும் பரிந்துரைக்கப்படுகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த ரக கோதுமைகள் எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்த இடங்களில் பயிரிடலாம் என்று ஆராய்ச்சி மேற் கொள்ளப்பட்டதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தமிழ்நாட்டில் நீலகிரி, கொடைக்கானல், ஏற்காடு, கொல்லிமலை இந்த நான்கு இடங்களில் பயிரிட, 1,250 ஏக்கரில் பயிரிடப்படுகிறது.

THIRU B. VENKATASWAMY : Sir, as far as the Hosur taluk is concerned, it is situated at an altitude of 30,000 feet. So, may I know from the Hon. Minister whether such kind of wheat has been introduced so far in the Hosur taluk and if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நான் சொன்ன நான்கு இடங்களில் இப்போது ஏற்பாடாகியிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் நீண்ட நாட்களாக ஹோசூர் பற்றி சொல்லிவருகிறார்கள். அதுபற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

[1972 ஆகஸ்ட் 11

ஒலி, ஒளிக்காட்சிகள்

*80 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை பெரிய கோவிலில் மாமன்னன் ராஜ ராஜ சோழன் வாழ்க்கை வரலாற்றை ஒலி, ஒளிக்காட்சியாக நடத்த இவ்வரசு மத்திய அரசுக்கு கோரிக்கை ஏதேனும் விடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இல்லை.

திரு. அ. தேவேந்திரன்: இனிமேலாவது அப்படிப்பட்ட உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இந்தக் கேள்வி ஒலி, ஒளிக் காட்சியைப் பற்றி அமைந்திருக்கிறது. தஞ்சை பெரிய கோவிலில் மாமன்னன் ராஜ ராஜ சோழன் வாழ்க்கை வரலாற்றை ஒலி, ஒளிக் காட்சியாக நடத்த இவ்வரசு மத்திய அரசுக்கு கோரிக்கை ஏதேனும் விடுத்துள்ளதா என்பது கேள்வி. 6 கால பூஜை நடக்கின்ற கோவில்களில் ஒலி, ஒளிக் காட்சி ஏற்படுத்துவதில் சில சங்கடங்கள் இருப்பதை ஏற்கனவே நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம். ஆகவே, அந்த வகையில் தஞ்சை பெரிய கோவிலில் ராஜ ராஜ சோழன் வாழ்க்கை வரலாற்றை ஒலி, ஒளிக் காட்சியாக நடத்த ஏற்பாடு செய்வது தற்பொழுது கஷ்டமான சூழ்நிலையில் உள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி: பொதுவாக திருக்கோவில்களில் ஒலி, ஒளிக் காட்சிகள் நடத்துவது அவ்வளவு சரியல்ல என்று சொல்லப்படுவதால் தனியாக அதற்காக கூடங்கள் அமைத்து அந்தக் கூடங்களில் ஒலி, ஒளிக் காட்சிகளை ஏற்பாடு செய்வதற்கு ரீஸம் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, ஒலி, ஒளிக் காட்சி 6 கால பூஜை நடக்கின்ற கோவில்களில் ஏற்பாடு செய்வதிலே கஷ்டங்கள் இருக்கின்றன. அதைத் தான் அம்மையார் திரும்பவும் வற்புறுத்துகிறார்கள். நம்முடைய தமிழ் நாட்டின் சரித்திரமும், கோவில்களின் சரித்திரமும் பின்னி இணைந்து இருக்கிற காரணத்தினால் ஒலி, ஒளிக் காட்சிகளை கோவில்களில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று பல பேர்கள் விரும்புகிறார்களே தவிர, அது ஆஸ்திகர்களுக்கு கஷ்டமில்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 11]

திரு. ஏ. சுப்பிரமணியம்: பழைய கால கட்டடத்துக்குள்ளே ஒலி, ஒளிக் காட்சி அமைப்பதன் மூலம் அந்தக் கட்டடத்திற்கு சேதம் ஏற்படக்கூடும் என்று சில மாதங்களுக்கு முன்னால் மேல் நாட்டு நிபுணர்கள் அறிக்கை விடுத்திருந்ததை அமைச்சர் அவர்கள் பரிசீலித்துப் பார்த்தார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: கோவில்களை புதுப்பிப்பதனால் கட்டடங்கள் கெட்டுவிடுகின்றன என்ற எண்ணம் தான் வெளியிடப்பட்டிருக்கிறதே தவிர ஒலி, ஒளிக் காட்சி ஏற்பாடு செய்வதன் மூலம் கட்டடங்கள் கெட்டு விடுகின்றன என்று எந்த விதமான அறிக்கையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

*81 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether it is a fact that the Union Government have agreed to instal the "ஒலி, ஒளி" exhibition in Madurai Meenakshi Temple; and

(b) if so, the steps taken to start the exhibition?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) ஆம், மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ரூ. 18 லட்சம் செலவில் ஒரு ஒலி, ஒளிக் காட்சிக்கு அனுமதி தந்திருப்பதாக 1970-ம் ஆண்டு அக்டோபர்-நவம்பரில் மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. இருந்தாலும், தனிப்பட்டவர்களிடத்திலிருந்தும், சங்கங்களிடமிருந்தும் ஒரு வழிபாட்டு இடத்தை அதற்கு உபயோகப்படுத்தக் கூடாது என்ற முறையீடு வந்ததன் பேரில், மதுரையில் வைக்கப்பட இருந்த அந்த ஒலி, ஒளிக் காட்சியை மாமல்லபுரத்திற்கு மாற்றுவதாக 1971-ம் ஆண்டு மே திங்களில் மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் 6 கால பூஜைக்குப் பாதகம் இல்லாத முறையில் ஒலி, ஒளிக் காட்சி நடத்த முடியும் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அம்மாதிரி கூடாது என்று எந்த ஸ்தாபனங்கள் அரசுக்கு தெரிவித்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சேலத்தில் நடைபெற்ற ஆஸ்திக இந்து மத மகாநாட்டின் சார்பாக ஒரு தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பினார்கள். மத்திய அரசு ஒலி, ஒளிக் காட்சியை அப்படிப்பட்ட கோவில்களில் வைக்கக்கூடாது என்று மாற்றி, பல்லவ சரித்திர

சம்பவங்கள் நிறைந்த மாமல்லபுரத்தில் அதை வைக்கவேண்டும் என்று விரும்பினார்கள். அதன் பேரில் ரூ. 18 லட்சம் அவர்களும், ரூ. 2 லட்சம் நாமும் போட்டு, ஆக ரூ. 20 லட்சம் அளவில் அதற்கான வேலைகள் துவங்க இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.டி.கே. தங்கமணி : ஆஸ்திகர்கள் சங்கம் அல்லது ரெகுலாக கோவிலுக்குப் போகக்கூடியவர்கள் இதற்கு ஆட்சேபணை பண்ணியதாகத் தெரியவில்லை. ஒலி, ஒளிக் காட்சியைப் பார்க்கிறபொழுது எப்படி டெல்லி ரெட்ஃபோர்ட்டில் அது இருப்பது பிரயோசனகரமாக இருக்கிறதோ, அதே மாதிரி சரித்திர சம்பந்தமான சம்பவங்கள் நிறைந்த கோவில்களுக்குள்ளே நடத்துவது திருப்திகரமான முறையில் அமையும் என்பதை மீண்டும் ஒரு முறையாவது மத்திய அரசுக்கு இந்தக் காரணத்தைக் காட்டி வலியுறுத்துவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அவர்கள் மதுரையில் வைக்கவேண்டும் என்று மீண்டும் வற்புறுத்திக் கேட்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள். செங்கோட்டையில் எந்த விதமான பூஜையும் நடப்பதில்லை. அங்கு ஒரு மசூதி மட்டும் தான் இருக்கிறது. வடக்கே இருக்கிற கலாசாரம் வேறு, தெற்கே இருக்கும் கலாசாரம் வேறு என்று வலியுறுத்தச் சொல்லியாவது மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் அந்த ஒலி, ஒளிக் காட்சியை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. கு. திருப்பதி : 6 கால பூஜை நடப்பதற்கு ஆட்சேபணை இருக்கிறது என்றால், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த திருமலைநாயக்கன் மஹாலில், அல்லது அங்கே இல்லாவிட்டால் அதற்காக ஒரு புதிய கட்டடத்தையாவது அமைத்து, அங்கே ஒலி, ஒளிக் காட்சியை ஏற்படுத்துவதற்கு அபிப்பிராயம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மதுரையில் திருமலை நாயக்கன் மஹால், மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆகிய இரண்டும் தான் சரித்திர பிரசித்தி பெற்ற இடங்கள். வேறு எந்த இடத்திலும் ஒலி, ஒளிக் காட்சியை வைத்தால் சரித்திர சம்பந்தமான விவரங்களைச் சொல்லி அந்தக் காட்சியை அருமையாக அமைக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்று திருமலை நாயக்கன் மஹாலில் வைக்கவேண்டும், அல்லது மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் வைக்கவேண்டும். வேறு எந்த இடத்திலும், புதியதாக கட்டடம் கட்டி ஒலி, ஒளிக் காட்சி அமைத்தால் அது சிறப்பு அடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். முத்தையா : ஒலி, ஒளிக் காட்சியை ஆஸ்திகர்கள் எதிர்க்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாஸ்திகர்கள் அதை ஆதரிக்கிறார்கள் என்றால், இந்த சர்க்கார் எதற்கு ஆதரவு கொடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இதில் ஆஸ்திக நாஸ்திக வாதத்திற்கு ஒன்றும் இடமில்லை. மத்தியப் பேரரசு இதிலே தலையிட்டு ரூ. 18 லட்சம் தந்து அதற்கான வேலைகள் தொடங்க இருக்கின்றன. அந்த வகையிலே கோவில்களில் அந்தக் காட்சியை வைக்கக்கூடாது என்று அவர்கள் வற்புறுத்துகிறார்களே தவிர, ஆஸ்திக, நாஸ்திக வாதத்திற்கு இதில் எந்தவிதமான இடமும் இல்லை. வாய்ப்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பூம்புகாருக்கு சுற்றுலா பேருந்துகள்

*82 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பிற்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விடுமுறை நாட்களில், சென்னையிலிருந்து பூம்புகாருக்குச் சுற்றுலாப் பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பூம்புகார் பட்டணத்தில் பண்டைத் தமிழர்களுடைய கலாசாரத்தை பிரதிபலிப்பதற்கான நிலையில் தமிழக அரசு குறிப்பாக அங்கு நல்ல கலைக் கூடங்களுக்கு சிறந்த வாய்ப்புகளை உருவாக்கிவைக்குமா ? இனிமேலாகிலும் அந்தப் பகுதிக்கு அதைச் செய்து கொடுக்க அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, பூம்புகார் பட்டணத்தில் சிலப்பதிகாரத்தின் வரலாற்றைக் கூறுகின்ற சம்பவங்களை வடித்து வைக்கின்ற ஒரு ஏற்பாட்டை தமிழக முதல் அமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். அது முடிந்த பிறகு வேண்டுமானால், திரு. கிட்டப்பா அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : கேரள மாநிலத்திலுள்ள கண்ணகி கோட்டத்தில் சேரன் செங்குட்டுவன் படைத்த கண்ணகி சிலை இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த சிலையை இந்தக் கலைக் கூடத்தில் கொண்டு வந்து வைப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அதைப் பற்றி குறிப்பு ஒன்றும் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கலைக் கூடத்தில் பழைய கலை நிகழ்ச்சிகளை தொடர்ச்சியாக நடத்துவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: கலைக் கூடம் அமைக்கப்பட்ட பிறகு அதைப்பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்.

டாக்ஸி டிரைவர் பேரில் வழக்குகள்

* 83 வினா—**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள வாடகை டாக்ஸி டிரைவர்கள் பொதுமக்களிடம் சரியாக நடந்து கொள்ளாததால் புகார் பேரில் 1970-71-ல் எத்தனை டிரைவர்கள் பேரில் கேஸ் போடப்பட்டது?

(இ) அவர்களில் எத்தனை வாடகை டாக்ஸி டிரைவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

	1970	1971.
(அ) சென்னை நகரில் உள்ள டாக்ஸி டிரைவர்கள் பொதுமக்களிடம் முறையாக நடந்து கொள்ளாதது, வாடகைக்கு ஓட்ட மறுப்பு, இன்னும் அதிகப்படியான கட்டணங்களை கேட்டல் போன்ற புகார்களுக்காக தொடரப்பட்ட வழக்குகள் மொத்தம்.	429	392
(இ) அவற்றுள் அபராதம் விதிக்கப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை.	411	372

திரு. கே. ஏ. வகாப்: தலைவர் அவர்களே, டாக்ஸி டிரைவர்களில் எல்லோரும் என்று சொல்வதற்கில்லை, சில பேர்கள் பிரயாணிகளிடம் தகாத முறையில் நடந்துகொள்கிறார்கள். கணக்கைப் பார்த்தால் கூட, அதற்காக போடப்பட்ட வழக்கு அதிகமாகிக்கொண்டு வருகிறது. அவர்களை கட்டுப்படுத்தி, மேலும் அவர்கள் பிரயாணிகளிடம் ஒழுங்கான முறையில் நடந்து

கொள்வதற்கு வழக்குத் தொடர்வது என்ற அடிப்படையில் இல்லாவிட்டாலும், ஒழுக்க முறையில் கல்வி அடிப்படையில் அவர்களுக்கு ஒழுக்க முறையை கற்பித்து, பிறகு லைசென்ஸ் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழக்குகள் அதிகரித்து வருவதாகச் சொன்னார்கள். 1970-ல் 429 வழக்குகளாக இருந்தது, 1971-ல் 392 வழக்குகளாக குறைந்திருக்கிறது. ஆகவே, வழக்குகள் குறைந்துவருகின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையைக் கருத்தில் கொண்டு டாக்ஸி டிரைவர்கள் நல்ல முறையில் நடந்துகொள்ளவேண்டும் என்று அதற்காக அந்த சங்கங்களில் இருப்பவர்கள் முழு ஒத்துழைப்பு தந்து வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

Smoke emitted by buses

* 84 Q.—**THIRU SASANGUMUTHU THEVAR:** Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the police in Madras City have apprehended Government Transport buses in their drive to check the emission of smoke; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) புகையை வெளியிட்டவாறே சென்றதாக அரசுப் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த 18 வண்டிகளை 26—9—1971-ல் காவல் துறை கைப்பற்றி 4—10—1971-ல் எழுத்து மூலமான அறிக்கையொன்றை அனுப்பியது.

திரு. ஏ. க. துரைசாமி: தலைவரவர்களே, இப்போதெல்லாம் அரசாங்கப் பஸ்களிலிருந்து வரும் புகை குறைந்து தனியார் பஸ்களிலிருந்தும் லாரிகளிலிருந்தும் வரும் புகை அதிகமாகியிருப்பது அரசுக்குத் தெரியுமா? இது பற்றி அரசாங்கத்தால், நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அரசாங்க பஸ்களானாலும் தனியார் பஸ் அல்லது லாரிகளானாலும் ஏராளமான புகையைக் கக்கிக்கொண்டு வரும்போது அது உடல் நலத்திற்கு உகந்தது அல்ல என்று பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதற்கு நான் முதலில் சொன்ன பதிலே ஒரு எடுத்துக்காட்டு என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

[1972 ஆகஸ்ட் 11

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, what are the methods taken by the State Transport Department to stop this emission of smoke ? Will the Government set an example to others in this matter ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசாங்கப் போக்கு வரத்துத் துறையில் இயங்கும் பஸ்களைப் பொறுத்தவரையில் இந்த விஷயத்தில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறோம். அவைபற்றி இந்த மன்றத்தில் கூட பல தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அரசாங்க போக்குவரத்துத் துறை பஸ்கள் இதில் ஒரு முன் உதாரணமாக இருக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பியதற்கு என் நன்றி.

(Mr. Speaker in the Chair.)

THIRU B. VENKATASWAMY : Sir, according to scientists, due to air-pollution, the air is spoilt in every town of the State. May I know from the Hon. Minister the special arrangements made so as to control this air-pollution?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, air-pollution is not a peculiar problem to our State alone. It is all over the world, threatening human existence. Even in the United States, many cities are facing air-pollution, water-pollution, etc. As far as our State Transport system is concerned, we are already considering reconditioning of injectors, etc. to minimise intensity of emission of smoke.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, the Hon. Minister said that the State Transport Department has taken all steps to check the emission of smoke. If that were correct, why should the police take action against drivers? How many vehicles have been reconditioned, how many more have to be reconditioned? Can the Hon. Minister give specific answers to these?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Mr. Speaker, Sir, I do not have the specific details with me now. The State Transport Department is seized of the problem and necessary steps are taken to control emission of smoke. But it is not always possible to achieve cent per cent perfection in everything. There is always the element of human error.

திரு. நுரை முருகன் : தலைவரவர்களே, தனியார் துறை வண்டிகள் பலவற்றில் டீஸல் எண்ணெய்க்குப் பதிலாக கெரோசின், எண்ணெயை

1972 ஆகஸ்ட் 11]

உபயோகிக்கும் காரணத்தினால்தான் அவற்றிலிருந்து அதிகமாகப் புகை வருகிறது என்ற காரணத்தை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதுவும் ஒரு காரணமாக அமைகிறது.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, அதிகமாகப் புகைவிடும் வண்டிகளைப் பிடிக்க எந்தெந்த அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கின்றது ? எந்த அடிப்படையில் அவற்றைப் பிடிக்கின்றார்கள் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : போக்குவரத்துத் துறைக்கும் காவல் துறைக்கும் அந்த அதிகாரம் இருக்கிறது.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, பொதுவாக டீஸல் எண்ணெயில் இயங்கும் பஸ்களிலிருந்தும் லாரிகளிலிருந்தும் புகை வருவது சகஜம். அது தவிர்க்க முடியாத ஒன்று. எனவே, வரும் புகையை மேல்நோக்கி விடுவதற்கான வழி முறைகளை அரசு ஏற்பாடு செய்யுமா ? இப்போது அரசுப் பேருந்துகளில் சிலவற்றில் அந்தமாதிரி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதனால் எந்தவிதமான கெடுதலும் ஏற்படுவதில்லை. அதேபோல் எல்லா அரசு பஸ்களிலும், தனியார் பஸ், லாரிகளிலும் புகை மேல்நோக்கி போவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : டீஸல் வண்டிகள் புகை விட்டுச் செல்லும் என்பதில் யாருக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. புகை அதிகமான அளவிற்கு விடக்கூடாது என்றுதான் போக்கு வரத்துத் துறை அக்கரை காண்பித்து வருகிறது. மேல்நோக்கி புகை போக்கிகளை வைத்துக்கொள்ளலாமா என்று சென்னையில் மட்டும் பரீட்சார்த்தமாகப் பார்த்து வருகிறோம். மாவட்டங்களிலே இது தேவையில்லை என்று கருதப்படுகிறது. நெருக்கடியான நகரங்களிலேதான் இது பிரச்னையாக இருக்கிறது. எனவே சென்னையில் அத்தகைய முறைகளை கையாளலாமா என்று அரசாங்கம் பரீட்சார்த்தமாகப் பார்த்து வருகிறது.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, மேல்நாடுகளில் பஸ்கள் மின்சாரத்தால் இயக்கப்படுவதால் புகைவருவதில்லை. அதுபோன்று சென்னையிலும் பேருந்துகளை மின்சாரத்தால் ஓட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பஸ்களை மின்சாரத்தால் ஓட்டப்படும் முறை இப்போது ஆராய்ச்சி நிலையில் தான் இருக்கிறதே

தவிர மேலை நாடுகளில் "கமெர்ஷியல் ஸ்கேலில்" வியாபார ரீதியில் ஓட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. ஒரு வேளை மின்சக்தியால் ஓடும் ட்ராம்களை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகின்றார்களோ என்று கருதுகிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: அமைச்சர் அவர்கள் இது மேலைநாடுகளில் ஆராய்ச்சி நிலையில்தான் இருக்கிறது என்று கூறுகின்றார்கள். ஆனால் மாஸ்கோவில் இப்படிப்பட்ட மின்சார பஸ்கள் ஏராளமாக ஓடுகின்றதை நானே பார்த்திருக்கின்றேன். எனவே அதுபற்றி ஆராயலாம். இடையிலே, இப்போது வண்டிகளிலிருந்து வெளிப்படும் புகையை ஃபில்ட்டர் செய்து அதைக் கேடற்றதாக்கி வெளியே விடுவதற்கான முறையை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விருபுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அப்படி ஒன்றும் யோசனை இல்லை.

Bus terminus at Mylapore

* 85 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there are proposals to shift the bus terminus from Kapaleeswarar temple tank to the P.S. High School playgrounds in Mylapore, Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இப்போது இந்த பஸ் டெர்மினஸில் போதுமான இடமில்லை. பி.எஸ். உயர்நிலைப்பள்ளியில் உள்ள விளையாட்டுத் திடலில் இப்போது எக்ஸிபிஷன்தான் நடத்தப்படுகிறது. எனவே அந்தத்திடலில் ஒரு பக்கத்திலாவது இந்த பஸ் டெர்மினஸை மாற்ற அரசு முன் வருமா? அப்படி ஒரு திட்டம் பரிசீலிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இப்போதைக்கு அந்தத் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்

(அ) 25-வது சுதந்திர தினவிழா நிகழ்ச்சி விபரம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஒரு அறிவிப்பு.

நம் நாட்டின் 25-வது சுதந்திர தின விழா வரும் ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி நாடெங்கிலும் கொண்டாடப்பட இருப்பது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாருக்கும் தெரியும். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நம்மிடம் இந்நாட்டின் ஆட்சி ஒப்படைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி 1947-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 14-ம் நாள் நள்ளிரவு 12 மணிக்கு நடைபெற்றது.

எனவே வரும் ஆகஸ்டு திங்கள் 14-ம் நாள் இரவு இவ்விழாவினைக் கொண்டாட, தமிழ் நாடு சட்டப்பேரவை மண்டபத்தில், சட்டப் பேரவை, சட்ட மன்ற மேலவை ஆகிய இரு அவைகளின் உறுப்பினர்களின் கூட்டம் நடக்க இருக்கிறது. இக்கூட்டத்தில் தமிழ் நாட்டு ஆளுநர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், சட்டப்பேரவைத் தலைவர் அவர்களும், சட்ட மன்ற மேலவைத் தலைவரவர்களும், சட்டப் பேரவை முன்னவர் அவர்களும் மற்றும் கட்சித் தலைவர்களும் உரையாற்றுவார்கள்.

நிகழ்ச்சி விவரம் பின்வருமாறு:

ஆகஸ்டு, 14 1972—

இரவு 10-30 மணி ..	உறுப்பினர்களும் அழைப்பிதழ் பெற்றவர்களும் தத்சம் இருக்கையில் அமருதல்.
10-40 ,, ..	ஆளுநர் அவர்கள் தலைமைச்செயலகக் கட்டிடத்திற்கு வந்து பேரவைத் தலைவர் அறைக்குச் செல்லுதல்.
10-45 ,, ..	பேரவைத் தலைவருடனும், சட்டமன்ற மேலவைத் தலைவருடனும், ஆளுநர் அவர்கள் சட்டப்பேரவை மண்டபத்தை அடைதல்.
10-45 முதல் 11-59 வரை ..	தமிழ்த் தாய் வாழ்த்து
	சொற்பொழிவு—
	ஆளுநர் அவர்கள்
	மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
	மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர்
	மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர்.
	மாண்புமிகு சட்டப் பேரவை முன்னவர்.
	மற்றும் கட்சித் தலைவர்கள்.

ஆகஸ்டு 15, 1972—

நள்ளிரவு 12-00 மணி முதல் 12-02 வரை	இரண்டு நிமிட மௌன அஞ்சலி.
12-02 மணி முதல் 12-04 வரை	நாட்டு வணக்கம்.
12-15 மணி	ஆளுநர் தலைமைச் செயலகத்தைவிட்டுப் புறப்படுதல்.
	நிகழ்ச்சி முடிவுற்று சட்ட மன்ற உறுப்பினர்களும், மற்றவர்களும் புறப்படுதல்.

இந் நிகழ்ச்சிக்கான அழைப்பிதழ்கள் அச்சடிக்கப்பட்டு எல்லோருக்கும் அனுப்பப்படுகின்றன.

இப்பேரவையில், பேரவைத் தலைவரின் இருக்கைக்கு வலப்புறம் முன் வரிசையில் மாண்புமிகு அமைச்சர்களும், இடப்புறம் முன் வரிசையில் கட்சித் தலைவர்களும் அமர இடம் ஒதுக்கப்படும். மற்ற உறுப்பினர்கள் இந்த இரண்டு வரிசை தவிர மற்ற எந்த இடத்திலும் அமரலாம்.

எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் தம் ஒத்துழைப்பை நல்கி விழா சிறப்புடன் நடக்கச்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அலுவல் ஆய்வுக்குழு தீர்மானித்தப்படி, பேரவைக் கூட்டம் 12—8—1972 சனிக் கிழமைக்குப் பின் 17—8—1972 வியாழனன்றுதான் நடக்கும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

(ஆ) மதுரைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மேலும் ஒரு அறிவிப்பினைத் தர விரும்புகிறேன்.

மதுரைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் (செனேட்டில்) இப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்துவரும் (1) திரு. பெ. மலைச் சாமி, (2) திரு. வீ. மலைக்கண்ணன், (3) திரு. கா. மு. கதிரவன், (4) திரு. சொ. காவேரிமணியம் ஆகியோரின் பதவிக்காலம் 22—8—1972 ஆம் நாளுடன் முடிவடைவதால் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் ஏற்பட இருக்கும் நான்கு வெற்றிடங்களுக்கு தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து நால்வரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு மதுரைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் விதிமுறைப்படி பகுதி வாரி அடிப்படையில் (Proportional Representation) இத் தேர்வு நடைபெறுவதில்லை. எனவே வேட்பாளர்கள் நியமனக்காள்களை 17—8—1972,

வியாழக்கிழமை காலை 11 மணிக்குள் சட்டப்பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 17—8—1972 வியாழக்கிழமை, மாலை 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 18—8—1972, வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது நான்கு இடங்களுக்கு மேற்படுமாயின் 19—8—72 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்குமிடையே சென்னை கோட்டையிலிருக்கும் உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

3. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்கள் கொடுத்திருக்கும் அமைச்சரவைமீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதும், திரு. தங்கமணி அவர்கள் கொடுத்திருக்கும் அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின் மீதும் மூன்றாம் நாளாக இன்றும் விவாதம் தொடர்ந்து நடைபெறும்.

இந்த நேரத்தில் மன்றத்திற்கு ஒன்றைக் கூறுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதம் அலுவல்குழுவின் தீர்மானப்படி நாளையோடு முடிவுற வேண்டும். அப்படி முடிவுறுவதானால் நம்மிடத்தில் இன்னும் 6½ மணி நேரம் தான் உள்ளது. ஆனால் இன்னும் நிறையபேர் பேசவேண்டியிருக்கிறது. இந்த நேரம் போதாது. எனவே, இன்றைக்கு மாலையிலும் இந்த மன்றத்தை வைத்துக்கொள்ளலாம் என்று எதிர்க் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடாரும், திரு. தங்கமணி அவர்களும், திருமதி அனந்தநாயகி அவர்களும் என்னிடம் தெரிவித்தார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், அவை முன்னவர் அவர்களையும் கேட்டு, அதுபற்றி தெரிவிப்பதாகச் சொன்னேன். அவர்களிடம் கேட்டதில் முதலமைச்சரவர்களும், அவை முன்னவர் அவர்களும் இன்று மாலை 4 மணி முதல் 7 மணி வரை இந்த மன்றத்தை நடத்துவதற்கு இசைவு தெரிவித்துள்ளார்கள். எனவே மன்றத்தின் நிகழ்ச்சிகள் இன்று காலையிலிருந்து மாலை 1½ மணி வரையிலும், பின் மாலை 4 மணியிலிருந்து 7 மணி வரையிலும் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாளைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்ற டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. தங்கமணி அவர்களும் பேசுவதோடு விவாதம் முடிவுறும்.

எல்லோருமே இந்த விவாதத்தில் பங்குகொள்ள வேண்டுமென்று விரும்புவதால் மன்றத்தின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். பொதுவாக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டாலும், அல்லது வேறு எந்தத் தீர்மானம் கொண்டு வந்தாலும் இந்த இந்தக் கட்சிக்கு இவ்வளவு இவ்வளவு நேரம் ஒதுக்குவது என்ற மரபு இருக்கிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் இருந்தாலும், எதிர்க் கட்சிகளுக்குப் பாதி நேரம், ஆளும் கட்சிக்குப் பாதி நேரம் ஒதுக்குவது என்பது விதிமுறையில் இல்லாவிட்டாலும் மரபாக இருக்கிறது. அந்த மரபின்படி கழிந்த இரண்டு நாள் விவாதத்தில்—ஆறு ஆறரை மணி நேரத்தில்—ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களில் திரு. அரங்கண்ணல் ஒருவர்தான் பங்குகொண்டிருக்கிறார். எதிர்க் கட்சியிலுள்ள எல்லோரும் இந்த விவாதத்தில் பேசவேண்டுமென்று விரும்புகிறார்கள். என்றாலும் அவர்களுக்கே அதிக நேரம் ஒதுக்குவது முறையாகாது. எனவே, இருக்கின்ற மரபின்படி இன்று இந்த விவாதத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நேரத்தில் ஆளும் கட்சிக்குப் பாதி நேரமும், மற்ற கட்சிகளுக்குப் பாதி நேரமும் ஒதுக்க விரும்புகிறேன்.

இப்போது என்னிடம் 22 பேர்கள் இந்த விவாதத்தில் பங்குகொள்ள பெயர் கொடுத்திருக்கிறார்கள். அதிலே சில தலைவர்களின் பெயர் இல்லை. இன்று காலையில் மட்டும் சட்டமன்றம் நடப்பது என்றால் இருக்கிற மூன்று மணி நேரத்தை ஒதுக்குகிறபோது 183 பேர்களைக் கொண்ட தி.மு.கழகத்திற்கு 1½ மணி நேரமும், 13 பேர்களைக் கொண்ட காங்கிரஸ் (ஓ)வுக்கு 20 நிமிடமும், 8 பேர்களைக்கொண்ட சி.பி.ஐ-க்கு 20 நிமிடமும், பார்வேர்டு பிளாக்கிற்கு 15 நிமிடமும், முஸ்லீம் லீகிற்கு 10 நிமிடமும், சுதந்திராக் கட்சிக்கு 10 நிமிடமும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு 15 நிமிடமும் வரும்.

ஆனால் இன்று மாலையும் மூன்று மணி நேரம் இந்த மன்றம் நடைபெற இருப்பதால் இந்த விவாதத்திற்கு இன்றைக்கு 6 மணி நேரம் கிடைக்கிறது. எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 3 மணி நேரமும், காங்கிரஸ் (ஓ)வுக்கு 40 நிமிடமும், சி.பி.ஐ-க்கு 40 நிமிடமும், பார்வேர்டு பிளாக்கிற்கு 30 நிமிடமும் முஸ்லீம் லீகிற்கு 20 நிமிடமும், சுதந்திராக் கட்சிக்கு 20 நிமிடமும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு 20 நிமிடமும் ஒதுக்கலாம் என்று இருக்கிறேன். அதோடு தமிழரசு கழகத்திற்கும் கொஞ்சம் நேரம் ஒதுக்கப்படும். இப்படி நேரம் அதிகமாக்கப்பட்டிருப்பதால், இன்றைய விவாதத்தில் யார் யார் பங்கு கொள்ள இருக்கிறார்கள் என்பதற்கு அந்தந்தக் கட்சிக்காரர்கள்

கூடி, இன்னும் 15 நிமிடங்களுக்குள்—என்னிடம் கொடுக்கப்பட்டுள்ள 22 பேர்கள்—பட்டியலில் திருத்தம் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நீங்களே ஒரு ஒழுங்கை ஏற்படுத்திக்கொண்டுவிட்டால் என் பேரில் யாருக்கும் குறை ஏற்படாது.

பேசுகிற உறுப்பினர்களும் ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள், தங்கள் உரையை முடித்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு அதிகமாக யார் சென்றாலும்—ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், கட்சித் தலைவர்களாக இருந்தாலும், அமைச்சர்களாக இருந்தாலும்—மாண்புமிகு முதல் அமைச்சரைத் தவிர, காரணம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட நேரவரம்பை மீறுவதில்லை, அவர்களுடைய திறமையையும் ஆற்றலையும் நாம் அறிவோம்—யாராக இருந்தாலும் அனுமதிக்கமாட்டேன்; மணி அடித்து விடுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு உறுப்பினர்கள் பேசும்போது அவசியமானால் ஏதாவது விபரங்களை அளிப்பதற்கு அமைச்சர்கள் குறுக்கிடலாமே தவிர, மற்ற நேரங்களில் குறுக்கிட வேண்டாமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இன்றைக்கு மாத்திரம் ஆளும் கட்சியினர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மூன்று மணி நேரத்தில் ஒரு மணி நேரத்தைக் குறைத்துக்கொண்டு, அந்த ஒரு மணி நேரத்தை எதிர்க் கட்சிகளுக்கு வழங்க நான் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரின் இந்த தாராள மனப்பான்மைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேமாதிரி மற்றக் கட்சிகளும் தங்கள் தங்கள் கட்சியில் இருந்து பேச இருக்கிற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொண்டு, அவர்கள் கட்சி சார்பாக பேசுகிறவர்களுக்கு கொஞ்சம் அதிக நேரத்தைக் கொடுக்கும் வகையில் இன்னும் 15 நிமிடங்களுக்குள் என்னிடம் கொடுத்திருக்கும் பெயர் பட்டியலை திருத்தி கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்திய தேசிய காங்கிரசுக்கு நீங்கள் ஒதுக்கியிருக்கிற நேரம் 20 நிமிடம்தான். அதற்குள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது எதைப்பற்றி, எத்தனை பேர் பேச முடியும்? நேற்றைக்கு திரு. தங்கமணி அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் மணிக்கணக்கில் பேசினார்கள். ஆகவே, கொஞ்சம் அதிகமாக எங்களுக்கு நேரம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆளும் கட்சியிலிருந்து ஒரு மணி நேரத்தை நாங்கள் கொடுக்கிறோம். அதுவும் இன்றைக்கு மட்டும்தான். அதில் கொஞ்ச நேரத்தை இவர்கள் பயன்படுத்திக் கொள்ளட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாராளமாக நடந்துகொண்டிருக்கிறார்கள். அதற்கு அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஒரு மணி நேரத்தில் கொஞ்ச நேரத்தை இந்திய தேசிய காங்கிரசுக்கு ஒதுக்குகிறேன்; தாராளமாகப் பேசுங்கள். இதுதான்னுடைய தீர்ப்பு.

அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நேரத்திற்குள் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் உரையை முடித்து, என்னோடு ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்போது முதலில் முஸ்லீம் லீகைச் சேர்ந்த திரு. லத்தீப் அவர்களைப் பேச அழைக்கிறேன். அவர் ஐந்து நிமிடத்திற்குள் தம் பேச்சை முடித்துக்கொண்டால் நல்லது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, ஒரு சின்ன விளக்கம் கேட்க விரும்புகிறேன். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு 3 மணி நேரம், எதிர்க் கட்சிகளுக்கு 3 மணி நேரம் என்று ஒதுக்கி இருப்பதாகச் சொன்னீர்கள். எதிர்க் கட்சியில் உள்ளவர்களில், நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆளும் கட்சியோடு சேர்ந்து எதிர்க்கிறவர்களையும் சேர்த்து 3 மணி நேரம், நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரிக்கிறவர்களுக்கு 3 மணி நேரம் என்று ஒதுக்கி இருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளும் கட்சி என்றால் தி.மு.க.வை மட்டும்தான் குறிக்கும். ஆளும் கட்சி என்று சொல்லும்போது அதில் தோழமைக் கட்சிகள் சேரமாட்டார்கள். ஆளும் கட்சிக்கு பாதி நேரம் என்றும், ஆளும் கட்சிக்கு அப்பாற்பட்ட கட்சிகளுக்கு பாதி நேரம் என்றும் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீங்களே கூட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை முடிவில் எதிர்க்கலாம். எப்படியும் நான் ஒதுக்கி இருப்பது, நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரிப்பவர்கள், எதிர்ப்பவர்கள் என்று அல்ல.

THIRU K. KANDASWAMY : Sir, on a point of clarification. For the Forward Block no opportunity was given yesterday and day before yesterday for participation in the debate. So, I request the Hon. Speaker to generously allot more time for it to-day.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பார்வேட் ப்ளாக் கட்சியின் சார்பில் 2 பேர்கள் பேச முன்வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அரை மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்களது "அதிக நேர நிதியில்" இருந்தும் கொஞ்சம் அனுமதிக்கலாம். இப்போது திரு. லத்தீப் அவர்கள் தம் பேச்சைத் தொடர்வார்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : நேற்றையதினம் நான் பேசுகின்றபோது நாட்டில் வன்முறை நடைபெற்றால் எந்த அரசும் அதைப் பார்த்துக் கொண்டு இருக்காது. நாட்டில் அமைதியை நிலைநாட்ட ஒவ்வொரு அரசும் கடமைப்பட்டிருக்கிறது. அதற்காகச் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். ஒரு சில சம்பவங்களைப் பற்றியும் நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சூலை 5 ஆம் தேதி கோவையில் நடைபெற்ற நிகழ்ச்சி எந்த அளவுக்கு வன்முறைகள் கையாளப்பட்டன என்பதற்கு எடுத்துக்காட்டு. கோவையில் சில முஸ்லிம் பெருமக்கள் தங்கள் தங்கள் கடைகளைத் திறந்துவைத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். ஒரு ஜவுளி கடை—ஒரு முஸ்லிம் பிரமுகருக்குச் சொந்தமானது. அவர் சேலைகளையும், மற்ற ஜவுளிகளையும் வெளியில் அலங்காரமாகத் தொங்கவிட்டு—கடையைத் திறந்து வைத்திருக்கிறார். அந்தக் கடையில் மாட்டப்பட்டிருந்த சேலைகளை, துணிகளை எல்லாம் பறித்து, எறிந்து கடைக்குள்ளும் வைக்கப்பட்டிருந்த துணிகளை எல்லாம் சூறையாடி, அங்கிருந்து கடை சம்பந்தப்பட்டவர்களை கடையில் இருந்து வெளியேற்றிருக்கிறார்கள். இப்படி கோவையில் மட்டுமல்ல பல இடங்களில் நடைபெற்று இருக்கிறது.

அதுமட்டுமல்ல, ஊர்வலமாக வந்தவர்கள்—கோவையில் கோட்டைப் பகுதி என்கிற இடம் இருக்கிறது—அங்கே முஸ்லிம் பெருமக்கள் தான் அதிகமாக வசிக்கிறார்கள்—அவர்களது வீடுகளை எல்லாம் கற்களால் தாக்கியிருக்கிறார்கள். அங்கே ஒரு விறகுக் கடை இருக்கிறது, முஸ்லிம் பெருமக்களுடைய கடை—அங்கே இருந்த கட்டைகளை எல்லாம் எடுத்துக் கொண்டு அங்கே இருந்த மேசை நாற்காலிகளை உடைந்தெறிந்திருக்கிறார்கள். கடையில் வைத்திருந்த நூற்று அறுபத்தாறு ரூபாய் சில்லரையை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல—திருநெல்வேலி, ஆத்தூர் பகுதியில் குறிப்பாக முஸ்லிம்கள் வாழக்கூடிய பகுதியில் . . . . .

திரு. என். மருதாசலம் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சவ ஊர்வலத்தின்போதுதான் சோடா புட்டிகள் எல்லாம் வீசப்பட்டனவே. தனிர மறியல் அமைதியாகத்தான் நடந்தது—அதுவும் விவசாயப் பெருமக்கள் ஏதோ

முஸ்லிம் பெருமக்களுக்கு விரோதமாக காரியங்களைச் செய்தது போலச் சொல்கிற தகவல்கள் எல்லாம் சரியானது அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். வன்முறையைத் தூண்டிவிட்டதே தி.மு.க. தொண்டர்களும், முஸ்லிம்களும்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு உறுப்பினர்தான் உண்மைக்கு மாறாகச் சொல்கிறார்கள். என் இதைச் சொல்கிறேன் என்றால் சாதாரண விவசாயிகளது போராட்டமாக இது இல்லை—விவசாயிகள் இதுபோன்ற காரியங்களைச் செய்தார்கள் என்றும் சொல்லவில்லை. விவசாயிகள் என்ற பெயரால் சமூக விரோத சக்திகள் இதுபோன்ற வன்முறைச் செயல்களில் இறங்கி நாட்டின் அமைதியைக் குலைக்க முற்பட்டுவிட்டன. எதிர்க் கட்சிகள் ஆட்சியை மாற்ற நியாயமான முறைகளைக் கையாளக்கூடாது என்று சொல்லவில்லை. இன்றைக்கு எதிர்க் கட்சிகளாக இருக்கிறவர்கள் நாளை ஆட்சிக்கு வரலாம், ஆனால் ஆட்சியில் உள்ள ஒரு கட்சியை பலாக்காரத்தின் மூலம், வன்முறையின் மூலம் அகற்றிவிடுவதற்கு இதுபோன்ற தீய முயற்சிகள் மேற்கொள்வது என்று வந்துவிட்டால் நாட்டில் ஜனநாயகமே தேவையில்லை.

* * * *

அரசு தவறாக நடந்துகொண்டால் அதை எடுத்துச் சொல்லி கண்டிப்பதற்குத்தான் எதிர்க் கட்சிகள் இருக்கின்றன. அதை நியாயமான முறைகளில் எடுத்துச் சொல்லி காரியங்கள் செய்வார்களானால் நாங்களும் அதற்கு ஆதரவு கொடுக்கத் தயாராய் இருக்கிறோம். ஆனால் வன்முறைச் செயல்களில் ஈடுபடுவது, தவறான குற்றச்சாட்டுகளை எல்லாம் முன் வைப்பது என்பது சரியல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். என்றாலும் பேரவைத் தலைவர் காலம் பற்றி கடுமையான கட்டளை பிறப்பித்திருக்கிற காரணத்தினால் ஒரே ஒரு கருத்தைச் சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு நாங்கள் பாதகமானவர்கள் அல்ல. அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை எல்லாம் நாங்களும் ஆதரிக்கிறோம். ஆனால் வன்முறையை ஏற்படுத்தி அதன்மூலம் நாட்டில் அமைதியைக் குலைத்து, செம்மையான முறையில் நடைபெற்று வருகிற ஆட்சியைக் குலைக்க தீய சக்திகள் முற்பட்டால் அதற்கு நாங்கள் சாதகமாக இருக்க முடியாது. அந்த மாதிரியான போக்கு வளருமானால் இந்த நாட்டிற்கு ஜனநாயகமே தேவையில்லை . . . . . :(மணி அடிக்கப்பட்டது)

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

திரு. கே. என். குமாரசாமி : அவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கட்சியின் சார்பாக இந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்ததை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம், கடந்த ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் மே மாதத்தில் இருந்து தமிழ்நாட்டிலே அரசாங்கத்தின் செயல்கள் மிகவும் மாறுபட்டே வந்திருக்கிற நிலைமைகளை இந்தச் சபையில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினருடைய கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். நாம் ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டவர்கள். சட்டசபை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கையில் இருக்கிறது. விவசாயிகள் தங்களுடைய கோரிக்கைகளை எடுத்து வைத்தபோது முதல் அமைச்சர் அவர்கள் கடந்த ஏப்ரல் மாதத்திலே விவசாயிகளுடன் பேசி கிட்டத்தட்ட நான்கு பிரச்சினையில் முடிவு செய்துகொள்ள முடியும், பாக்கி இருக்கக்கூடிய பிரச்சினைகளை கொள்கை அளவில் ஏற்றுக்கொள்வதாகப் பத்திரிகையில் அறிக்கை விடுத்தார்கள். அத்த அறிக்கை வெளியிடப்பட்டதற்குப் பின்னாலே கடந்த மே மாதம் முதல் தேதியன்று பொள்ளாச்சியிலே நடந்த கூட்டத்திலே, மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கமாட்டோம் என்று முதலமைச்சர் அவர்கள் கூறியதன் விளைவுதான் இந்தப் போராட்டம் ஏற்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எந்த முதலமைச்சர் பிரச்னைக்கு முடிவுக்கு வந்துவிட்டு பிறகு மே மாதம் முதல் தேதியன்று அதை மறுத்ததற்குப் பிறகுதான் போராட்டமே தோன்றியது. அதற்குப் பிறகு மே மாதம் 19-ஆம் தேதியன்று விவசாயிகள் போராட்டத்தைத் துவங்கினார்கள். கிட்டத்தட்ட அதிலே ஆயிரம் இரண்டாயிரம் பேர்களை கைதுசெய்தார்கள். விவசாய சங்கத்தைச் சேர்ந்த அத்தனை தலைவர்களையும் சிறைசெய்து விட்டார்கள். நான் பார்த்திருக்கிறேன், கடந்த இருபத்தைந்து ஆண்டுக் காலமாக 151 பாதுகாப்புச் சட்டப்படி கைதுசெய்வது முக்கியமான சில தலைவர்களைத்தான் கைதுசெய்வார்கள். ஆனால் அன்றைக்கு சாதாரண விவசாயிகளையெல்லாம் கைதுசெய்து, போலீசார் மூலம் இந்த இயக்கத்தை எப்படியாவது நசுக்கிவிட வேண்டுமென்ற அளவிற்கு சிறையில் போட்டார்கள். ஒரு தனிதமான பிரச்னைகளும் இல்லை என்று ஆக்கிவிடவேண்டுமென்ற அளவுக்கு அடக்குமுறை அவிழ்த்துவிடப்பட்டது. அதற்குப் பிறகு மே மாதம் 27 ஆம் தேதி பெரிய அர்த்தால் நடந்தது. ஒரு நாள் அர்த்தால் நடைபெற்றது. அவ்வளவுதான். மறுநாள் வழக்கம்போல் வேலை தொடங்கப்பட்டது. மறுநாளும் நினைத்திருப்பார்களானால் அவர்கள் செய்திருக்கலாம். ஆனால், அவர்கள் அப்படிச் செய்யவில்லை. காரணம், மக்களிடையே இருந்த உணர்வை மதித்தார்கள்.

ராஜாஜியினுடைய, முதலமைச்சர் மீது மத்தியப் புலனாய்வு அறிக்கையை வெளியிட வேண்டுமென்ற அறிக்கையை, கண்டிக்க வேண்டுமென்ற முறையிலே சூன் மாதம் இரண்டாம் தேதி நடைபெற்ற கண்டனக் கூட்டத்திலே என்ன பேசப்பட்டது. அங்கே அன்றைக்குப் பெண்கள் தலைமைதாங்கி ஊர்வலம் வந்தது. ஆனால் அவர்கள் ராஜாஜியைக் கண்டிக்கிற அளவுக்கு ஊர்வலம் நடத்தினார்கள் என்றால் அதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை. அமைதியாக ஊர்வலம் நடத்தவில்லை. அந்த ஊர்வலத்திலே வந்தவர்கள் ஆயுதங்களைத் தாங்கி வந்தார்கள். விவசாயிகள் ஸ்தாபனத்தை அந்த ஆயுதங்களைக் கொண்டு தாக்கினார்கள். அலைஓசை, குமுதம் போன்ற பத்திரிகை இடங்களை ஆயுதங்கள் கொண்டு தாக்கினார்கள். அன்றைக்கே பலாத்காரமான சூழ்நிலை ஆரம்பிக்கத் தொடங்கிவிட்டது. ஒவ்வொரு ஜில்லாவிலும் சூலை 2 ஆம் தேதியோ அல்லது அதற்கு முன்போ செயல்வீரர்கள் கூட்டம் என்ற அளவிலே நடத்தினார்கள், அதன்மூலம் அவர்கள் வன்முறைகளைத் துவங்கினார்கள். ஆனால் விவசாயிகள் அமைதியான முறையிலே போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். தொடர்ந்து அந்தப் போராட்டம் 48 நாட்கள் எந்த வன்முறையும் இன்றி நடந்தது. ஆகவே விவசாயிகள் வன்முறையாளர்கள் என்று கூறுவதற்கான எந்தனிதமான அதாரிட்டியும் கிடையாது. சூன் மாதம் ஒரு போராட்டம் நடந்தது. அதிலே கிட்டத்தட்ட 15 ஆயிரம் பேர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். சூன் மாதம் 7 ஆம் தேதி 15 ஆயிரம் விவசாயிகள் வண்டி ஊர்வலம் நடத்தினார்கள். வண்டிகளை விட்டுவிட்டு அவர்கள் மாலையிலே வீடு திரும்புகிற நேரத்திலே அவர்களை போலீசார், வண்டிகளை நிறுத்தக் கூடாது, கடுமையான விளைவுகள் ஏற்படும், என்று சொல்லி எச்சரிக்கை செய்தார்கள். அவர்கள் எங்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்கிற வரையிலும் நாங்கள் வண்டிகளை எடுத்துச் செல்லமுடியாது என்று தெரிவித்துவிட்டார்கள்.

அதற்குமேல்தான் இரவு 7 மணி இருக்கும். மாவட்ட ஆட்சித் தலைவர் என்னைக் கூப்பிட்டுவிட்டு இந்தப் பிரச்னையைப் பேசித் தீர்த்துக்கொள்ளலாமே என்று சொன்னார்கள். அதற்கு நான் விவசாயிகள் சங்கம் பேசுவதற்குத் தயாராகத்தான் இருக்கிறது, ஆனால் அரசாங்கம்தான் பேச்சுவார்த்தைக்கு முன்வரவில்லை என்று சொன்னேன். பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று சொன்னார்கள், எங்களிடத்திலே பேசவேண்டாம், சிறைக்கோட்டத்திலே விவசாயிகள் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களை அழைத்துப் பேசுங்கள் என்று சொன்னேன். பிறகு என்னிடம் கலெக்டர் அவர்கள் கேட்டார்கள், யார் யாரோடு பேசவேண்டுமென்று. நான் 15 பெயர்கள் கொண்ட லிஸ்டை கொடுத்தேன். அதை வாங்கிக்கொண்டு அவர்கள் டெலிபோனிலே அந்த லிஸ்டை படித்தார்கள், பிறகு என்னிடம் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று

சொன்னார்கள். நான் சரி என்று சொன்னேன். ஆனால் கலெக்டர் அவர்கள் உடனே ஒப்புதல் கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள். நான் சொன்னேன், சிறைச்சாலையிலே இருப்பவர்களை விடுதலைசெய்ய வேண்டுமென்று. அவர்கள் சொன்னார்கள், முதலமைச்சர் அவர்கள் திருவாரூர் போவதற்கு பயணத்திற்கு தயாராக இருக்கிறார்கள். சீக்கிரம் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். நான் அதே டெலிபோனை வாங்கி பேசினேன் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: என்னோடு பேசினீர்களா? இது அபாண்டம். என்னோடு பேசவேயில்லை. மாதவனோடு பேசினதாக தாங்கள் தினமணி, எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்திருக்கிறீர்கள்.

திரு. கே. என். குமாரசாமி: நாங்கள் அவர்களை சிறைச்சாலையில் சித்திரவதை செய்யவில்லை. வழக்கமாகப் பேசி முடிவு செய்வததற்குப் பிறகு விடுதலை செய்துகொள்ளலாம் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் எந்த எம்.எல்.ஏ.வோடு பேசுவதையும் கௌரவக் குறைவாக நினைப்பதில்லை. திரு. கே. என். குமாரசாமி அவர்களோடோ அல்லது வேறு எந்த உறுப்பினரோடு பேசுவதையும் நான் கௌரவக்குறைவாக நினைப்பதில்லை. இதிலே நான் கௌரவம் பார்ப்பதில்லை, பேசுவதாலே என்னுடைய கௌரவம் ஒன்றும் குறைந்துவிடப் போவதில்லை. ஆகவே அவர்கள் இல்லாத ஒன்றை சொல்கிறார்கள். அவர்கள் மாதவனோடு தான் பேசினார்கள் என்று பத்திரிகைக்குச் செய்தி சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது அதை மாற்றிச் சொல்வது சரியல்ல.

திரு. கே. என். குமாரசாமி: முதலமைச்சர் அவர்களோடு பேசுகின்ற பொழுது . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: என்னோடு பேசியதாகச் சொல்கிறீர்கள். ஆனால் மாதவனோடு பேசியதாக பத்திரிகைக்கு அறிக்கை கொடுத்திருக்கிறீர்களே, என்ன காரணம்?

திரு. கே. என். குமாரசாமி: அதை இரண்டாவதாகச் சொல்கிறேன். நாம் பேசுவதற்கு நேரம் நிர்மானிக்கவேண்டும் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மறுநாள் பத்திரிகையில் மாதவனோடு நீங்கள் பேசியதாக செய்தி கொடுத்திருக்கிறீர்களே என்ன காரணம்?

திரு. கே. என். குமாரசாமி: நான் என்னுடைய ஸ்டேட்மெண்டிலே அது சம்பந்தமாகவும் கொடுத்தேன். ஆனால் அவர்கள் அதை விட்டுவிட்டார்கள்.

பத்திரிகையில் வருவதையெல்லாம் முழுவதையும் ஆதாரவாக எடுத்துக் கொண்டால் நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். கலெக்டர் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தலாம் என்று சொல்லிவிட்டார்கள். நான் தேதி நிர்ணயிக்க வேண்டுமென்று சொன்னேன். அவர்கள் 10 நாட்களிலே பேச்சுவார்த்தை வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். நான் இரண்டு நாட்களிலே வைத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னேன். அப்படியானால் முதலிலே சொல்லியிருக்க வேண்டுமே இப்பொழுது முதலமைச்சர் அவர்கள் திருவாரூர் போய்விட்டார்களே என்று சொன்னார்கள் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கலெக்டரிடத்திலே தாங்கள் என்ன எழுதிக்கொடுத்தீர்கள்?

திரு. கே. என். குமாரசாமி: அது உங்களிடத்திலேயே இருக்கிறது. . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: என்ன எழுதிக்கொடுத்தீர்கள் என்பதைத் தாங்களே சொல்லுங்கள்.

திரு. கே. என். குமாரசாமி: போராட்டத்தை நிறுத்துவதாகவும் ஏப்ரல் பேச்சுவார்த்தை தொடரவேண்டுமென்றும், தேதி நிர்ணயம் அதற்காகச் செய்யவேண்டுமென்றும் எழுதிக்கொடுக்கப்பட்டது. ஆகவே, தேதி தீர்மானிக்கும் விஷயத்தில் கலெக்டரைக் கேட்டபொழுது . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கடிதத்தில் முதலமைச்சர் பேச்சு வார்த்தைக்கு ஒப்புக்கொண்டதால் போராட்டத்தை நிறுத்திவிட்டோம் என்று எழுதிக் கொடுத்தீர்களா?

திரு. கே. என். குமாரசாமி: போராட்டத்தை நிறுத்துவது என்றும், முதலமைச்சருடன் கடந்த ஏப்ரல் மாத பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவது என்றும், குறிப்பாக பேச்சுவார்த்தைக்கான தேதியைத் தீர்மானிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆகவே, அதற்குப் பிறகு கலெக்டர் தொழில் அமைச்சர் மாதவன் அவர்களோடு டெலிபோனில் பேசினார்கள். முதலில் உடனடியாகத் தேதியைத் தீர்மானித்துக் கொள்ளலாம் என்றும், 10 நாட்களில் வைத்துக் கொள்ளலாம் என்றும் சொல்லப்பட்டது. நான் தொழில் அமைச்சர் மாதவன் உடன் டெலிபோனிலே பேசி பிறகு இரண்டு நாட்களிலே வைத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னேன். திருவாரூருக்கு முதலமைச்சர் சென்றுவிட்டதால் திருவாரூரிலிருந்து முதலமைச்சர் இரண்டு நாட்களில் சென்னைக்கு வந்துவிடுவார்; உடனடியாக சென்னைக்கு வந்து

பேச்சுவார்த்தை தொடங்கலாம் என்று சொன்னார்கள். சரி என்று சொல்லி விட்டு செக்ஷன் 151-இன் கீழ் கைது செய்யப்பட்ட 257 பேர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று சொன்னோம். டி.ஐ.ஜி. விடுதலை செய்கிறோம் என்று சொன்னார்கள். மேலும் ஸ்ரீவில்லிபுத்தூரில் கைது செய்யப்பட்ட பெண்களை விடுதலை செய்திருக்கிறார்கள். அதுபோல் இங்கேயும் கைது செய்யப்பட்ட பெண்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். ஸ்ரீவில்லி புத்தூரில் அவர்கள் போலீஸ் கஸ்டடியில் இருந்தார்கள், ஆகவே விடுதலை செய்தார்கள். இங்கே எஃப்.ஐ.ஆர். கோர்ட்டிலே போட்டு ரிமாண்டில் இருப்ப தால் கோர்ட்தான் விடுதலை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். பேச்சு வார்த்தைக்குப் பிறகு விடுதலை செய்யலாம் என்று சொன்னார்கள். சரி என்று சொன்னேன். மறுநாள் விடுதலை செய்யப்பட்டார்கள். தலைவர் மீண்டும் கலெக்டருடன் பேசும்பொழுது சென்னைக்குப் புறப்படுங்கள், பேச்சு வார்த்தை நடத்தி சுமுகமாகத் தீர்த்துவிடலாம் என்று சொன்னார்கள் நானும் சரி என்று சொன்னதற்குப் பிறகு சென்னைக்குப் புறப்படுவதற்கு ஆயத்தம் செய்தார்கள். திருவாரூரிலிருந்து சென்னைக்கு வந்தபிறகு போராட்டத்திற்கும் பயந்து கொண்டு தாங்களாகவே நிறுத்திவிட்டு வருகிறார்கள் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: போராட்டத்தைப் பயந்து கொண்டு நிறுத்திவிட்டார்கள் என்று எந்தப் பத்திரிகையிலேயாவது வாசகத்தைக் காட்ட முடியுமா?

திரு. கே. என். குமாரசாமி: தினத்தந்தி, மாலைமுரசு பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உங்கள் அறிக்கையிலே இருப்பதைச் சொன்னேன். கலெக்டரிடத்தில் கையெழுத்துப்போட்டுக் கொடுத்திருக்கிறீர்களே, அதிலே இருக்கிறது.

The Agriculturists' Association representatives agreed to call off their agitation with immediate effect.

The Chief Minister has already discussed the problems raised by the Association with them and with members of the Legislature of Coimbatore District.

The discussion with them will now continue shortly.

(Signed) K. N. Kumaraswami. M.L.A.

(,,) Ponnuswami. B.A, B.L.

(,,) Subbiah

(,,) U. R. Narayanaswami, H. M. S.

(,,) T. Thalai Gounder.

ஆகியோர் கையெழுத்துப் போட்ட கடிதம். இதில் நீங்களே சொல்லியிருக்கிறீர்கள் 'கால் ஆப்' பண்ணிவிட்டோம் என்று. மறுநாள் பத்திரிகையில் 'கால் ஆப்' செய்யவில்லை, சஸ்பெண்ட்தான் என்று சொல்லியிருக்கிறீர்கள். நிருபர்கள் கேட்டபொழுது, பேச்சுவார்த்தைக்கு ஒப்புக்கொண்டதால் போராட்டம் நிறுத்தப்படவில்லை, ஏனென்றால் நான் பேச்சுவார்த்தைக்கு மறுப்பவன் அல்ல, போராட்டத்தை நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தைக்கு வர இருக்கிறார்கள், திரு. குமாரசாமி அவர்கள் வந்தபிறகு தேதி நிர்ணயிக்கப்படும் என்றுதான் சொல்லியிருக்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: உங்கள் அறிக்கையிலே என்ன சொல்லியிருக்கிறீர்கள்?

மாண்புமிகு போலைத் தலைவர்: குமாரசாமி அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், தெளிவாக இருக்கிறது. நீங்கள் ஒரு விவரத்தைச் சொன்னீர்கள். அதை மறுத்து முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். போராட்டம் நிறுத்தப்பட்டது, பேச்சுவார்த்தை தொடரும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதில் தெளிவாக இருக்கிறது. ஆகவே பின்னிப்பின்னி அதையே சொல்வதை விட்டுவிட்டு வேறு ஒரு விவகாரத்திற்குப் போகலாம், இன்னும் ஒரு நிமிஷம் தான் இருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இதிலே தெளிவாக . . .

மாண்புமிகு போலைத் தலைவர்: நீங்கள் கையொப்பமிட்ட அறிக்கை இருக்கிறது. அவர்களுக்கும் உங்களுக்கும் இருக்கின்ற விவகாரம் எல்லாம், முதலமைச்சர் சொன்னதால் வாபஸ் பெறப்பட்டதா என்ற கருத்தைப் பற்றிப் போராடிக் கொண்டிருக்கிறீர்கள். அப்படி ஒரு எண்ணம் இல்லை என்று அவர்கள் சொன்னார்கள். சொன்னதோடு உங்கள் கையெழுத்தையும் ஆதாரமாக காண்பித்தார்கள். எனவே அடுத்த பாயிண்டுக்குப் போகலாம்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், போராட்டத்தைத் தாங்களாகவே நிறுத்திக்கொண்டு, இந்தப் பிரச்னையிலே பேச வருகிறார்கள், நான் ஒன்றும் அழைக்கவில்லை என்று. அப்படியென்றால் கலெக்டர் அங்கே கூப்பிட்டதும் பொய்யா? அப்படியானால்

பேசியதும் பொய்யா? 151-இன் கீழ் கைது செய்யப்பட்ட 257 பேர்களை விடுதலை பண்ணியதும் பொய்யா, விடுதலை செய்தோம் என்று சொல்வதும் பொய்யா? அங்கே நடந்த நிகழ்ச்சிகள் அத்தனையும் பொய்யா? எழுதிக் கொடுத்தது ஒன்றைமட்டும் காட்டினால் போதாது, யதார்த்தமான சூழ்நிலையில் என்ன நடந்தது என்பதுகூட மறைக்கப்படுமானால் நான் ஒன்றும் சொல்லத் தயாராகவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் அவைகளைப் பொய் என்று சொல்லவில்லை. பொய் என்ற வார்த்தை பார்லிமெண்ட்ரி முறை அல்ல என்றாலும் அவர் சொன்னதால் திருப்பிச் சொல்கிறேன். நான் அப்படியெல்லாம் சொல்லவில்லை, பொய் என்று சொல்லவில்லை. இன்னும் சொல்லப்போனால் கமிட்டிக் கூட்டம் நடத்த வேண்டும், அதில் முதலமைச்சர் அறிவித்திருக்கும் சலுகைகளைப்பற்றி விவாதிக்க வேண்டும், கமிட்டி உறுப்பினர்கள் சிறைச்சாலைகளில் இருக்கிறார்கள், அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று திரு. சின்னதுரை அவர்கள் தந்தி கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தந்தியை மதித்து கமிட்டிக் கூட்டம் நடத்தி சலுகைகளைப் பரிசீலனை செய்யுங்கள் என்று விடுதலை செய்தது இந்த அரசாங்கம் தான்; ஒவ்வொரு முறையும் அது பொய்யா, அது பொய்யா என்று கேட்டார்கள். இந்த அரசாங்கம் நிதானமாகவும், அதேநேரத்தில் மிகுந்த பெருந்தன்மையுடனும், பிடிவாத குணம் இல்லாமலும் நடந்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது. அதேபோல நிருபர்களிடத்திலே சொன்னேன், போராட்டத்தை நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள், நான் பேசுவதற்கு ஒப்புக்கொண்டதற்காக என்று சொல்வது சரியல்ல, ஏனென்றால் நான் என்றைக்கும் பேசுவதற்கு மறுத்தது இல்லை, எனவே நான் பேச ஒப்புக்கொண்டேன் என்று அதோடு இணைப்பது தவறு, பேச ஒப்புக்கொள்வது வேறு விஷயம், போராட்டத்தை நிறுத்தியது இன்னொரு விஷயம், பேசத் தயார், இன்னும் தேதி நிர்ணயிக்கப்படவில்லை என்று எல்லாப் பத்திரிகைகளிடத்திலும் சொல்லியிருக்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, எனக்குக் கொஞ்சம் நேரம் அதிகமாகக் கொடுக்க வேண்டும், மற்ற சம்பவங்களைப் பற்றி அதிகமாகச் சொல்லவேண்டும். இந்தப் பிரச்னையிலே நாம் என்ன பார்த்தோம். கடந்த ஏப்ரல் மாதத்திலே ஒரு முதலமைச்சர் கொள்கையை ஏற்றுக்கொண்டு பத்திரிகைகளுக்கு ஸ்டேட்மெண்ட் விட்ட பிறகு அது முடியாது என்று சொன்னதை நான் இது வரையில் பார்த்ததில்லை. முதலமைச்சர் ஒப்புக் கொண்டு பிறகு மாட்டேன் என்று சொன்னதால் விளைவுகள் ஏற்பட்டன என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். அதற்காகவேதான் இந்தப்

[திரு. கே. என். குமாரசாமி] [1972 ஆகஸ்ட் 11

பிரச்னை: கடந்த ஏப்ரல் மாதத்தில் விவசாயச் சங்கப்பிரதிநிதிகளிடம் 4 பிரச்னைகளைத் தெளிவாக முடிவாகத் தெளிவு செய்துகொள்வோம், பாக்கிப்பிரச்னைகளைக் கொள்கை ரீதியிலே ஒப்புக் கொள்கிறேன் என்று சொன்னதாகப் பார்த்தேன். பிறகு பொள்ளாச்சி கூட்டத்தில் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மன்றாடியாரிடமும் மற்றவர்களிடமும் கொள்கை ரீதியில் எல்லாவற்றையும் ஒத்துக்கொள்கிறேன், அதுவரையில் மின் கட்டணத்தைக் கட்டிவிடுங்கள், பேச்சுவார்த்தை முடிந்தபிறகு அதிகமாகக் கட்டியிருந்தால் அட்ஜெஸ்ட் செய்து கொள்ளலாம், எனவே வரிகொடா இயக்கம் என்ற முறையில் ஆரம்பிக்க வேண்டாமென்று சொன்னேன். அவர்களும் அதை ஒத்துக்கொண்டு போனார்கள். ஆனால் மே மாதம் கோவைக்குச் சென்ற பொழுது போராட்ட அறிவிப்பைச் செய்து மின் கட்டணத்தை கட்ட வேண்டாம் என்ற முடிவைக் கண்டு கோவையில் நான் பேசியபொழுது ஒப்புகொண்டபடி அவர்கள் செய்யாததால் பேசுவதற்கு இப்பொழுது இடமில்லை என்று அப்பொழுதே சொன்னேன்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, அவர்கள் முதலமைச்சர் கூப்பிட்டு இந்தப் பிரச்னைக்கு முடிவுக்கு வந்தபிறகு போராட்டம் துவங்கியது நியாயமா என்று கேட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உங்களோடு இரண்டு முறை பேசியிருக்கிறேன். இதே சட்டசபை உள்ள இந்த மண்டபத்தில் கவர்னர் அறையில் இரண்டுமுறை பேசியிருக்கிறேன். அப்பொழுது, என்ன குமாரசாமி, என்னுடைய பிறந்தநாளை துக்க தினமாகக் கொண்டாடுவதாக அறிவித்திருக்கிறீர்களே என்று கேட்டபொழுது அதற்காக நீங்கள்கூட வருத்தப்பட்டீர்கள், இதை விட்டு விடுங்கள் என்று சொன்னீர்கள். பிறகு ஒருநாள் இரண்டு மணிக்கு வெளியே கிளம்பிக்கொண்டிருந்த சமயத்தில் திரு. சுப்பிரமணியம் அவர்களை, நான் வெளியே கிளம்பிக்கொண்டிருந்தபொழுது கவர்னர் அறையின் வாசலிலே நின்றுகொண்டிருந்தார்கள்—எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு மயக்கமுற்ற நிலையில் பசிக்களைப்போடு நான் இருந்த நேரத்திலும் அவர்களைப் பார்த்தபிறகு, 2 மணிக்குப்பிறகு சுமார் முக்கால்மணி நேரம் அவர்களோடு பேசியிருக்கிறேன். ஆகவே நான் பேசுவதற்கு யாரிடத்திலும் என்றைக்கும் மறுத்ததில்லை.

1972 ஆகஸ்ட் 11]

திரு. கே. என். குமாரசாமி: முதலமைச்சரவர்கள் கோட்டையிலே என்னுடன் பேசவில்லை. நான் வரவேயில்லையே உங்களைச் சந்திக்க, இதுவரையிலும் பார்த்ததேயில்லையே, எங்கே பார்த்தேன்? 3-ஆம் தேதி நான் சென்னைக்கு வரவேயில்லையே? பார்க்கவும் இல்லை. நீங்கள் நன்றாக ஞாபகப் படுத்திப் பாருங்கள். போராட்டம் ஆரம்பித்தபிறகு அவர்களுடைய அறைக்கு எப்பொழுதுதாவது நான் வந்தது உண்டா? அவருடைய பிறந்த தின விழா 3 ஆம் தேதி. 3 ஆம் தேதிக்குப்பிறகு சந்திக்கவே இல்லையே உங்களை. முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், பிறந்த நாளை ஏன் துக்க நாளாகக் கொண்டாடினீர்கள் என்று கேட்டதாகச் சொன்னார்கள். என்னிடம் அப்படிக் கேட்டிருந்தால் அதற்கான சமாதானங்களை நான் சொல்லியிருப்பேன். காரணம், விவசாயிகள் சிறையில் சோளக் கஞ்சி கொடுத்ததால் வயிற்றுப்போக்கு உண்டாகியிருக்கிறது, ஆகவே கஞ்சியை மாற்றிக் கொடுக்கச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். சோளக் கஞ்சிக்குப் பதிலாக கோதுமைக் கஞ்சி கொடுப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாக கலெக்டர் அவர்கள் சொன்னார்கள். விவசாயிகளுக்கு சோளக் கஞ்சிக்குப் பதிலாக கோதுமைக் கஞ்சி, கொடுக்க மறுத்துவிட்டார்கள். அன்றையதினம் செய்தியில் முதலமைச்சரின் பிறந்த நாளை முன்னிட்டு ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு அளிக்கப்படும் என்ற செய்தியைப் படித்தார்கள். முதலமைச்சர் பிறந்த நாள் விழாவுக்காக அறுசுவை உணவு அளிக்கப் படுகிறது, எங்களுக்குக் கோதுமைக் கஞ்சி கூட இல்லையென்று கூறிவிட்டார்களே என்று கூறி அவர்கள் வந்து பார்க்கின்றவர்களிடமெல்லாம் முதலமைச்சர் பிறந்த தினத்தைத் துக்க தினமாகக் கொண்டாடுகிறோம், வெளியிலேயும் கொண்டாட வேண்டுமென்று சொல்லி விட்டார்கள். அன்றைய தினம் நடந்த விவசாயிகள் கூட்டத்தில் தலைமை வகித்தேன். அந்தக் கூட்டத்தில் விவசாயிகள் உண்ணாவிரதம் இருக்கப் போகிறோம் என்றும், முதலமைச்சர் பிறந்த தினத்தைத் துக்க தினமாகக் கொண்டாடப் போகிறோம் என்றும் பிடிவாதமாகத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். நான் சொன்னேன் என்று முதலமைச்சர் சொல்லுவது சரியல்ல. எனக்கு முதலமைச்சர் பேரிலோ அல்லது வேறு யார் பேரிலோ விருப்பு, வெறுப்பு கிடையாது. அரசியல் ரீதியாக பிரச்சனைகளை அணுகும்போது அரசியல் ரீதியாக எதிரிகளாக இருக்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: என்னுடைய பிறந்த நாளைத் துக்க தினமாகக் கொண்டாடியதைப் பற்றிக் கவலை இல்லை. எந்த நல்ல நிகழ்ச்சிக்கும் திருஷ்டிபரிகாரம் தேவை. திருஷ்டி கழிந்ததற்காக உள்ளபடியே நான் திரு. குமாரசாமி அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறேன். அவர்களுடைய தலைமையில் நடந்த கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்

பட்டிருக்கிறது என்பதை அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவ்வளவுதான்.

திரு. கே. என். குமாரசாமி: கலெக்டர் அவர்களிடத்தில் சொன்னேன். அதற்குப் பின்னால் கூட பத்திரிகையில் ஸ்டேட்மெண்ட் விட்டு நான் சொன்னதாக எடுத்துக்கொள்ளக் கூடாது; அவர்களுடைய மகாசபை தீர்மானித்தது என்று கூறியிருக்கிறேன். இதைப்பற்றி எப்படி எடுத்துக் கொண்டாலும் சரி மன சாட்சிக்கு விரோதமாக நடக்க நான் தயாராக இல்லை.

'பந்த்' ஜூலை 5-ம் தேதி நடைப்பெற்றது. இதற்கு முன்பு கடந்த ஜூன் மாதம் 26-ம் தேதி ஒரு பந்த் நடைபெற்றது. அப்போது வன்முறை எதுவும் கிடையாது. கடந்த மாதம் 5-ம் தேதி பந்த்; 4-ம் தேதி திராவிட முன்னேற்றக் கழக முக்கிய பிரமுகர்கள் சமூக விரோதிகள் என்று சொல்லப்படுகின்ற ரௌடிகளிடத்தில் ஆயுதங்களைக் கொடுத்து ''5-ம் தேதி கடை திறக்கவில்லை என்றால் 6-ம் தேதி நடப்பதே வேறு; 5-ம் தேதி கடை திறக்கவில்லை என்றால் என்றைக்குமே திறக்கக்கூடாது' என்ற முறையிலே கூவிக்கொண்டு செல்லச் செய்தார்கள். எல்லா விவசாயிகளும் ஜெயிலுக்குள்ளே இருக்கிறார்கள். முன்னணி வீரர்கள் யாருமே வெளியிலே கிடையாது. பந்த் அன்று நான் சிங்கநல்லூர் சங்கத்தில் இருந்தேன். அவரவர்கள் அவரவர்களுடைய ஸ்தாபனத்திலேதான் இருந்தார்களே தவிர வெளியே போய் 'பந்த் நடத்துங்கள்' என்று சொல்லவில்லை. ஐ.என்.டி.யு.சி. யினர் அவர்களுடைய ஸ்தாபனத்திலே இருந்தார்கள், கம்யூனிஸ்ட் கட்சியினர் அவர்களுடைய ஸ்தாபனத்திலே இருந்தார்கள். யாரும் வெளியே வரவில்லை. 5-ம் தேதி பிளேட்டில் 11 மணிக்கு வான் வருகிறது. அவர்கள் இறங்கி வீடு புகுந்து தாக்குகிறார்கள் என்று கேள்விப்பட்டு அங்கே சென்று பார்த்தால் அங்கே போலீசார் இருக்கிறார்கள், ஜனங்கள் இருக்கிறார்கள், ரௌடிகள் என்று சொல்லப்படுகின்ற கூட்டம் வீடு புகுந்து தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். பத்து பேர் அடிபட்டு ரத்தம் போய்க் கொண்டிருக்கிறது. போலீசாரைக் கேட்டால் 'நாங்கள் என்ன செய்ய முடியும்' என்று கூறினார்கள். அந்த ரௌடிகளுக்குப் பாதுகாப்பாகத் தான் போலீசார் இருந்தார்கள். பொதுமக்களுக்கு எந்தவிதப் பாதுகாப்பும் கொடுக்கவில்லை. அடித்தவர்களை ஏன் கைது செய்யவில்லை என்று கேட்டதற்கு நீங்கள் என்ன செய்ய முடியும் என்ற முறையிலே பேசினார்கள். அடிப்பட்டவர்களுக்கு ரத்தம் போகிறது. அந்த இடத்திலே டெபுடி சூப்பரின்டென்டென்ட் இருக்கிறார்கள். அந்தச் சமயத்தில் ஒரு லாரியிலிருந்து 50 பேர் ஆயுதம் தாங்கிக் கொண்டு இறங்குகிறார்கள். நான் நேரடியாக டி.எஸ்.பி யிடம் கேட்டேன். இப்படி லாரியில் ஆயுதம் தாங்கிக் கொண்டு வந்து இறங்கு

கிறார்களே 'நீங்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறீர்களே, என்று கேட்டேன். அவர் என்னைப் பார்த்து தயவுசெய்து அமைதியாக இருங்கள் என்று சொல்லி விட்டு அவர்களைப் போகச் சொன்னார்களே தவிர கைது செய்யவில்லை. இதற்குப் பிறகு ஜனங்கள் 'அந்த சமூக விரோதக் கும்பலுக்குப் பாதுகாப்பு 'நமக்குப் பாதுகாப்பு இல்லையே' என்று பெண்களும் மற்றவர்களும் கண்ணீர் விட்டுக் கதறினார்கள். இரவு 12 மணியோடு பந்த் முடிந்துவிடும், கவலை இல்லாமல் தைரியமாக இருங்கள் என்று சொன்னேன்.

அந்தச் சமயத்தில் ஐயம்பாளையத்தில் துப்பாக்கிப் பிரயோகம் என்று செய்தி வந்தது. அங்கு சென்று பார்த்தால் போலீசாரைக் காணவில்லை. ஜனங்கள்தான் இருந்தார்கள். அந்த ரோட்டில் கிட்டத்தட்ட 15 கட்டை வண்டிகளைக் குறுக்கே வைத்திருந்தார்கள். அங்கு பஸ் போக்குவரத்தே இல்லை. தவிர அது கிளை ரோடு. அங்கு போய் இப்படிப்பட்ட ரகளை என் நடந்தது? போலீசார் வேண்டுமென்றே ஒரு பஸ்ஸைக் கொண்டு வந்து வழி விடவேண்டுமென்று சொன்னார்கள். அப்போது பெண்கள் மறியல் செய்தார்கள். கண்ணீர்ப் புகை விட்டார்கள், தடியடி செய்தார்கள். பெண்கள் கலைந்து சென்றார்கள். அப்போது ஒரு பெண் அங்கு நின்று கொண்டு 'நீங்கள் நாசமாகப் போகமாட்டீர்களா?' என்று சொன்னார். உடனே இன்ஸபெக்டர் பெண்ணின் மயிரைப் பிடித்து லாரியில் ஏற்றினார். ஆத்திரம் அடைந்த ஜனங்கள் முன்னுக்கு வர, துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. துப்பாக்கி குண்டு தலையைத் துளைத்துச் சென்றிருக்கிறது, வயிற்றில் துளைத்துச் சென்றிருக்கிறது. பி.ஏ. அட்மிஷன் ஆகும் மாணவன் ராமசாமி வயிற்றில் அடிபட்டு குண்டு மறுபக்கம் சென்றிருக்கிறது. இரண்டு பர்லாங்கு தூரத்தில் கவலை இறைத்துக் கொண்டிருந்த விவசாயி குண்டடிப் பட்டிருக்கிறான். மண்டையில் அடி. பெண்கள் குண்டடிபட்டிருக்கிறார்கள். இந்தமாதிரி துப்பாக்கிப் பிரயோகம் அவசியந்தானா என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

ஒவ்வொரு பஸலிலும் பெட்ரோலையும், டீசலையும் தனியாக ஊற்றி எடுத்துக் கொண்டு போய் கட்டை வண்டிகளில் ஊற்றி தீ வைக்க முயற்சித்தார்கள். பேரூர் மேல்புரம் பகுதியில் போலீசாரே பெட்ரோலைக் கட்டை வண்டிகள் மீது ஊற்றி தீ வைத்தார்கள். மாட்டைப் பிடித்துக்கொண்டு போன ஆரிசனை அடித்தார்கள். ஏழைகள் பலர் போலீசாரால் தாக்கப்பட்டு பதினைந்து நாட்களுக்கு வேலைக்குப் போகாமல் பயம், பீதி கொண்டிருந்தார்கள். கூலி வேலைக்குக் கூடப் போக முடியாமல் அவர்களுடைய வீட்டு பெண்டு பிள்ளைகள் எப்படி வாழ முடியும்?

கர்சமடையில் தாக்கப்பட்டிருக்கிறார்கள். சிறுமுகையில் பகிரங்கமாக மத்தியான வேளையில் டி.எம்.கே. தொண்டர்கள் என்று சொல்லிக்கொண்டு ஏச்.எம்.எஸ் ஆபீசுக்குள் நுழைந்து தாக்கியிருக்கிறார்கள். ஜன்னல்கள் உடைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அளவுக்குப் பலாத்காரம் விளையாடியது. இந்த நிலைமைகள் 5-ம் தேதி நடந்தது. இறந்துபோன பிணத்தைக் கொடுக்கும்படி ஜில்லா கலெக்டரைக் கேட்டால் 'நீங்கள் போய் எடுத்துக்கொண்டு வாருங்கள்' என்று சொன்னார்கள்.

(மணி அடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் இதுவரை அரை மணி நேரம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் . . . .

திரு. கே. என். குமாரசாமி: ஃபைவ் மினிஸ்டரே 10 நிமிடங்கள் எடுத்துக் கொண்டார்கள் . . . . (மணி அடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருப்பூர் துரைசாமி இப்போது பேசுவார்.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் எதிர்க்கட்சியினரால் கொண்டு வரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் கடுமையாக எதிர்த்து, எனது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன்.

இந்த மன்றத்தில் பேசிய உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளேதான் செல்வாக்கு பெற்றிருக்கிறதே தவிர வெளியே அதற்கு செல்வாக்கு இல்லை என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். இந்தப் போராட்டம் நடந்திருக்கிற நிலையில், கோவை மாவட்டத்தில் எந்தப் பகுதியில் விவசாயிகள் போராட்டம் பெரிய அளவிற்கு தீவிரமாக இருந்ததோ அங்கு வெள்ளமடை ஊராட்சி மன்றத்திற்கான தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் பங்கெடுத்துக் கொண்டது. அங்கு விவசாயிகள் சங்கத்தின் பெயரிலும் பங்கு எடுத்துக்கொண்டனர். வெற்றி யாருக்கு? திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்தான் அங்கு ஊராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

கோவை வட்டத்தைச் சேர்ந்த நரசாபுரம் ஊராட்சி மன்றம், கோவனூர் ஊராட்சி மன்றம், நாய்க்கன்பாளயம் ஊராட்சி மன்றம் தேர்தல்களில்—விவசாயிகள் போராட்டம் கடுமையாக நடந்த இடங்களில்—அங்குள்ள பொதுமக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினரை ஆதரித்து விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்களை தோற்கடித்து மகத்தான வெற்றியை திராவிட

முன்னேற்றக் கழகத்தினருக்குத் தந்து பொதுமக்கள் தாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத்தான் ஆதரிக்கிறோம் என்பதை தெளிவாக நிலை நாட்டியிருக்கிறார்கள் என்பதை பணிவோடு இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. இந்த அரசு அணுகிய முறை பற்றி பலரும் பேசினார்கள். அதுகுறித்து பலர் பேச இருப்பதால் நான் சுருக்கமாக ஒரு கருத்தை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். விவசாயிகள் சங்கத்தின் கோரிக்கைகளில் ஒன்று பம்ப் செட்டுக்கும், உரத்திற்கும் இருக்கிற வரிகளைக் குறைக்க வேண்டும் என்பது. இந்தக் கோரிக்கையை தமிழ்நாடு அரசு செய்ய முடியுமா என்பதை இந்தப் போராட்டத்தை நடத்திய எல்லாக் கட்சியினரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சென்னை ஸிம்ப்ஸன் போராட்டத்தின் போது வந்த அமைச்சர் குமாரமங்கலம் அவர்களும், கோவையைச் சார்ந்த அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களும் இந்த விவசாயிகள் போராட்டத்தில் உள்ளடக்கியிருக்கிற பம்ப் செட்டிற்கும், உரத்திற்குமான வரிகளைக் குறைக்கிற காரியத்தில் என் மத்திய அரசில் முயற்சி எடுத்திருக்கக்கூடாது? தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்கள் அணுகிய முறை தவறு என்று சொல்லக் கூடிய இவர்கள் மத்திய அரசு இதில் தலையிட வேண்டுமென்று ஏன் கேட்டிருக்கக்கூடாது? உங்கள் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய நிதி அமைச்சர் திரு. சவான் அவர்கள் கோவைக்கு வந்திருந்தார்கள். அவர்கள் கோவைக்கு வந்திருந்தபோது நானும் நம் தொண்டாமுத்தூர் தொகுதி உறுப்பினர் திரு. மாணிக்கவாசகம் அவர்களும், அவினாசி உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்களும், சத்தியமங்கலம் உறுப்பினர் திரு. எஸ். கே. சுப்பிரமணியம் அவர்களும் சென்று, ஒரு மகஜர் கொடுத்தோம். அங்கு பம்ப் செட்டுகளுக்குப் போடப்பட்டிருந்த வரியைக் குறைக்க வேண்டும் பெட்டிகளுக்குப் போடப்பட்டிருந்த வரியைக் குறைக்கவேண்டும் என்று கேட்டிருந்தோம். இவை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நெருக்கடியானவை என்று குறிப்பிட்டிருந்தோம். ஆனால் இன்றுவரை எந்த மத்திய அமைச்சரும் எங்கள் யாரையும் கூப்பிட்டுப் பேசவில்லை.

ஆனால், இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நமது முதல் அமைச்சர் அவர்கள் எவ்வளவோ முறை அணுகி பேசியிருக்கிறார்கள். எவ்வளவோ சந்தர்ப்பம் அளித்திருக்கிறார்கள் என்பது நாடு தெளிவாக அறிந்திருக்கக்கூடிய காரியமாகும். சிறைச்சாலைகளில் உள்ள தலைவர்களை விடுதலை செய்து பேச்சுவார்த்தைக்கு அழைத்தோம். ஆனால் மத்திய

[திரு. சு. துரைசாமி] [1972 ஆகஸ்ட் 11

அமைச்சர்கள் ஏன் அப்படி எங்களைக் கூப்பிட்டிருக்கக்கூடாது? பல்வேறு கட்சியினர் நம் அரசை குறை கூறுகிறார்கள். எப்படி போராட்டத்தை நடத்தினார்கள்? நாட்டு மக்கள் கண்டிக்கத்தக்க முறையில் அது அமைந்திருந்ததா இல்லையா?

1967-க்குப் பின்னால் மேற்கு வங்கத்தில் கேரோ செய்ய ஆரம்பித்தார்கள். அப்போது இதே இடத்தில் இருந்த எதிர்க்கட்சித் தலைவர் என்ன சொன்னார்? கேரோ போராட்டத்தை அனுமதிக்கக்கூடாது, அதைத் தடை செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசவில்லையா? ஆனால் இன்று நடைபெற்றிருப்பது என்ன? கோவையில் கட்டை வண்டிப் போராட்டம் நடந்தது. கடந்த ஜூன் 7-ம் தேதி அன்று கட்டை வண்டிகளை நகரம் முழுவதும் நிறுத்திவிட்டார்கள். யுத்த காலத்தில் கூட, நெருக்கடியான நேரத்தில் கூட, மருத்துவ மனைக்குச் செல்ல எல்லோரையும் அனுமதிக்கிறார்கள். மருத்துவம் செய்துகொள்ள அனைவருக்கும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள். ஆனால் இங்கு அப்போது மருத்துவ மனைகளைச் சுற்றிலும் ஏராளமான கட்டை வண்டிகளை நிறுத்தி யாரும் மருத்துவம் பார்த்துக் கொள்ள முடியாத அளவிற்கு மிகப் பெரிய அராஜகத்தை விவசாயிகள் சங்கத்தின் பெயரால், பல ரௌடிகளும் சேர்ந்து கொண்டு அந்த போராட்டத்தில் 7-ம் தேதி திருப்பூரிலும் கோவையிலும் எல்லாயிடங்களிலும் கட்டை வண்டிகளை நிறுத்தினார்கள். மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்ல முடியவில்லை. பள்ளிகளுக்குச் சென்ற குழந்தைகள் திரும்பி வரும்போது தடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

எந்த அளவிற்கு அராஜகத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றால், போராட்டம் நடந்தபோது மதுரை மாவட்டத்தைச் சார்ந்த ஆட்சித் தலைவர் சம்பந்தப்பட்ட இடத்திற்கு செல்லும்போது மாவட்ட ஆட்சித் தலைவரை மறித்து நிறுத்தியிருக்கிறார்கள். போலீஸ் அதிகாரிகளை மறித்து நிறுத்தியிருக்கிறார்கள். அதைக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. கக்கன் வரவேற்றிருக்கிறார்கள். அந்தப் போராட்டத்தை காங்கிரஸ் கட்சியும் அதோடு சேர்ந்திருக்கிற எல்லாக் கட்சிகளும் ஆதரிக்கின்றன. காந்திஜி அவர்கள் போராட்டம் நடத்தினார்கள் என்றால் ஒவ்வொரு போராட்டத்திலும் தன்னைத் தானே வருத்தி மக்களுக்காக பாடுபட்டார். ஆனால் இன்று காங்கிரஸ் கட்சியின் போராட்டம் பொது மக்களை கொடூரமான நிலைக்கு ஆளாக்கி பொது மக்களுக்கு தொல்லை கொடுக்கிற முறையில் இந்தப் போராட்டம் நடைபெற்றிருக்கிறதே தவிர எந்த அளவிற்கு அது அமைதியாக நடந்தது என்று சொல்லுங்கள்?

1972 ஆகஸ்ட் 11] [திரு. சு. துரைசாமி]

ஐந்தாம் தேதி போராட்டம், அதற்கு முன்பு நடந்த போராட்டம்: இவை குறித்து ஒரு சம்பவத்தை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். 1970-ம் ஆண்டு மத்திய அரசு ஊழியர்கள் ஒரு மாத கால அடையாள வேலை நிறுத்தம் செய்தார்கள். அவர்களது கோரிக்கை சம்பளக் கோரிக்கை. அன்று மத்திய அரசு ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வேலை நிறுத்தத்தில் பங்கெடுத்துக் கொள்வது என்பது ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு ஒப்பான காரியமாகும் என்று கூறி பாதுகாப்பு சட்டத்தின்கீழ் பல பேர்களை கைது செய்தார்கள். ஆனால் இங்கு விவசாயிகள் சங்கத் தலைவர்கள் என்ன கூறியிருக்கிறார்கள்? மத்திய அரசு ஊழியர்கள், மாநில அரசு ஊழியர்கள் இவர்கள் வேலைக்குப் போகக் கூடாது, ரெயில் ஓடக் கூடாது, பஸ் ஓடக் கூடாது, எதுவும் நடக்கக்கூடாது என்று சொன்னால் அது எதற்காக? அன்று அவர்கள் சொன்னார்கள், ஆட்சியை கவிழ்க்கக்கூடிய சதி என்று. இப்படிப்பட்ட சதியைச் செய்வதன் மூலம் இந்த நாடு முழுவதும் எதிர்க்கட்சிகள் வசம் இருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக இருக்கிறது என்று உருவாக்குவதற்கு நீங்கள் முயற்சி செய்தீர்கள்; ஆனால் நாட்டு மக்கள் அதை நம்பவில்லை.

சென்னையிலும், தமிழ்நாடு முழுவதும் அன்று எல்லாயிடங்களிலும் கடைகள் திறந்து வைக்கப்பட்டிருந்தன. பொது மக்கள் அரசிடம் எதிர்ப்பு காட்டவில்லை. அதனால் உங்களுக்கு கோபம் ஏற்படுகிறது. அதனால் பலவிதமான அசம்பாவிதங்களைச் செய்ய நீங்கள் முன்னுக்கு வருகிறீர்கள்.

திரு. குமாரசாமி அவர்கள் பல காரியங்களை எடுத்துச் சொன்னார்கள். கோவை போராட்டத்தில், ஊர்வலத்தில் நானும் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறேன். யாரும் ஆயுதம் ஏந்திச் செல்லவில்லை, எந்தக் கடைக்கும் யாரும் சென்றதில்லை. ஐயம்பாளயத்தில் போலீஸ் கூடியிருக்கும் மக்கள் மீது முதலில் கண்ணீர் புகை போட்டார்கள். பிறகு தடி எடுத்து கலைக்க முயற்சித்தார்கள், பிறகுதான் சுட்டார்கள்.

திரு. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டார்கள், இந்த அரசு கொல்வதற்கு சுடக்கூடிய அரசு என்று குற்றஞ்சாட்டினார்கள். நான் சொல்கிறேன், அப்படிப்பட்டதொரு எண்ணம் இந்த அரசுக்கு இருக்குமானால் எதற்காக முதலில் கண்ணீர் புகை போட்டிருக்க வேண்டும், எதற்காக பிறகு தடியடிப் பிரயோகம் நடத்தியிருக்க வேண்டும்? இவையெல்லாம் பயன் அளிக்காது போனதன் காரணமாகத்தான் போலீஸார் தங்களைப் பாதுகாத்து கொள்வதற்காக சுட்டார்களே தவிர மக்களை சாகடிக்க வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு என்றைக்குமே இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : ஐயம்பாளயத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக போலீஸ் அநியாயம் செய்திருக்கிறது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் பஞ்சாயத்து தலைவர் திரு. சுந்தரம் அவர்கள் ராஜிநாமா செய்திருக்கிறார்கள்—போலீஸ் கொடுமையைக் கண்டித்து என்பதை துரைசாமி அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரு. சு. துரைசாமி : விலகிய உறுப்பினர் சொந்தக் காரணத்திற்காகத் தான் விலகியிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறாரே தவிர போலீஸ் அக்கிரமங்கள் காரணமாக அல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

5-ம் தேதி போராட்டம் சம்பந்தமாக எடுத்துக் கூறினார்கள். 70-ல் பெருமாநல்லூரில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. அப்போது முதல் அமைச்சர் அவர்கள் மின்சாரக் கட்டணத்தைக் குறைத்தார்கள். துப்பாக்கிப் பிரயோகத்திற்கு முன்பே குறைத்திருக்கக்கூடாதா என்று கூறப்பட்டது. பல பேர்கள் சாகடிக்கப்பட வேண்டுமென்று தூண்டிவிடப்பட்டிருக்கிறார்கள். "கட்டை எடுத்தால் பட்டை எடுப்போம்" என்று பேசினார்கள் இல்லையா? சொல்ல முடியாத வார்த்தைகளை பேசியிருக்கிறார்கள். அதனால் ஏற்பட்ட நிலை தான் இது. அந்தப் போராட்டத்தின்போது கோவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலையம் தாக்கப்பட்டிருக்கிறது. தோப்பக்குளம் மைதானத்தில் இருக்கக்கூடிய இடம். அங்கு யார் யார் இருந்திருக்கிறார்கள்? மாவட்டச் செயலாளர் திரு. ராஜமாணிக்கம், எம்.எல்.ஸி., திரு. தண்டபாணி, எம்.பி., திரு. ராமநாதன், எம்.எல்.ஸி., திரு. ரங்கனாதன், எம்.எல்.ஏ., ஆகியோர் அங்கு இருந்திருக்கிறார்கள். இரண்டாயிரம் பேர்கள் சேர்ந்து கொண்டு அதைத் தாக்க வந்தார்கள். கம்யூனிஸ்ட் கட்சிக் கொடியை வைத்துக்கொண்டு வந்தார்கள். இந்த சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். அவர்களைத் தாக்கிக் கொலை செய்வதற்காக முயற்சித்தார்கள். அவர்கள் தப்பித்து வேறு வழியாகச் செல்லவேண்டிய அவசியம் அங்கே ஏற்பட்டது. (திரு. கே. டி. கே தங்கமணி : இதெல்லாம் 5-ம் தேதியா, அதற்கு முன்னாலா) 6-ம் தேதி அன்றைக்கு இந்தக் காரியங்களெல்லாம் நடைபெற்றன. அது மட்டுமல்ல. 6-ம் தேதி அன்றைக்கு தி.மு.க. செயலாளர் கடை தாக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் திரு. கோபால் அவர்கள் . . . . (திரு. கே. என். குமாரசாமி எழுந்திருந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுகின்ற உறுப்பினர் அவர்கள் உட்கார்ந்தால் தான் நீங்கள் எழுந்திருக்க முடியும். இப்படி ஒவ்வொருவரும் மற்றவர் பேசும்பொழுது குறுக்கிடுக் கொண்டிருந்தால் எப்படி?

The hon. Member Thiru Kumarasami had his chance. Unless the Member (Thiru Duraisami) yields, another Member cannot rise up and speak. பல்லடம் உறுப்பினர் அரை மணி நேரம் எடுத்துக் கொண்டார். திருப்பூர் உறுப்பினரும் அதேமாதிரி அரை மணி நேரம் எடுத்துக்கொள்ளட்டும். பேரவைத் தலைவர் சொல்வதை யாரும் கேட்பதாகத் தெரியவில்லை. திரு. குமாரசாமி அவர்கள் அரை மணி நேரம் பேசினார்கள். திருப்பூர் துரைசாமி அவர்களும் அதேமாதிரி பேசட்டும். துரைசாமி அவர்கள் இன்னும் 20 நிமிஷம் பேசலாம்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் போல கோவையில் கணபதி என்ற இடத்தில் பேரறிஞர் அண்ணா சிலையை உடைத்தெறிந்தார்கள். சட்டமன்ற உறுப்பினர் கோபால் அவர்களை விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தாக்கியதோடு மட்டுமல்லாமல் அவரிடமிருந்து பொருளையும் பறித்துக்கொண்டனர். ஈரோடில் நடேசன் என்ற தி.மு.க. மாவட்ட உறுப்பினர் கடையைத் தாக்கி படு சேதம் விளைவித்தனர். கருவூரில் கழகத் தோழர்களின் தையல் கடை, மக்கடை தாக்கப்பட்டு, தகர்க்கப்பட்டன. கோவையில் மாலை முரசு, தினத்தந்தி பத்திரிகை நிலையங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன. திருப்பூர் தனலட்சுமி மில்ஸ் தி.மு.க. தொழிற் சங்கத் தலைவர் ராமசாமி கம்யூனிஸ்டு தோழர்களால் தாக்கப்பட்டார். சிங்காநல்லூரில் தி.மு.க. தோழர்கள் தாக்கப்பட்டனர். காரமடையில் தோழர் ரங்கநாதன் தாக்கப்பட்டார். பன்னிமடையில் தோழர்கள் கந்தசாமி, முத்து ஆகியோர் தாக்கப்பட்டனர். பிளமேட்டில் கழகத் தோழர்களின் கடைகள் தாக்கப்பட்டன. அத்தியூரிலும் கழகத் தோழர்களின் கடைகள் தாக்கப்பட்டன. இப்படிப்பட்ட காரியங்களை விவசாயச் சங்கங்கள் என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு, விவசாயச் சங்கம் என்ற போர்வையை போர்த்திக் கொண்டு, அங்கே இருக்கின்ற பல்வேறு அரசியல் கட்சிக்காரர்கள், அவர்களோடு இருக்கிற ஏனைய ரௌடிகளையும் சேர்த்துக்கொண்டு அந்தக் காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொடுமையான காரியங்களைச் செய்துவிட்டு, இங்கே வந்து தி.மு.க. என்முறையை தூண்டிவிட்டது என்று பேசுவது எந்த அளவுக்கு பொருத்தமானது என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் சிம்ப்ஸன் பிரச்னையைப் பற்றி விவாதிக்கையில் தி.மு.க. தொழிற் சங்கத்தை வளர்க்க அரசாங்கத்தைப் பயன்படுத்தி, அந்த இயக்கத்தை வளர்த்துவருகிறது என்ற ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். தி.மு.க. தொழிற் சங்கத் துறையில் ஏறத்தாழ 1958-ம் ஆண்டு முதல் நேரடியாக

ஈடுபட்டு வந்திருக்கிறது என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். தி.மு.க. செய்த காரியங்களினால் இன்றைக்கு தமிழ் நாடு முழுவதிலும் தி.மு.க-விற்கு நல்ல அந்தஸ்தும், செல்வாக்கும் ஏற்பட்டிருக்கிறது. அதைக் காண சகிக்காதவர்கள் இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அதேசமயத்தில் ஊழல்கள் என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற மேலவை உறுப்பினர், சிண்டிகேட் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. ஈசுவரமூர்த்தி அவர்கள் கோவையில் பள்ளிக்கூடம் நடத்துகிறார்கள். அந்தப் பள்ளிக் கூடத்தில் 15 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். 15 ஆசிரியர்களில் 10 ஆசிரியர்களை நிறுத்திவிட்டார். அங்கே இருக்கிற டேபிள், நாற்காலிகளையெல்லாம் கடன் கொடுத்ததற்காக அட்டாச்மெண்டு செய்துவிட்டார்கள். அங்கே ஊழல் ஏற்பட்டிருப்பதுதான் அதற்குக் காரணம். அங்கே படிக்கின்ற 300 மாணவர்கள் மேலும் தொடர்ந்து படிப்பதற்கு வழியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சாரக் கட்டணத்தைப்பற்றி ஒரு கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய தமிழ்நாட்டில் கும்பகோணத்தில் மின்சார நிறுவனம் தனிப் பட்டவரிடத்தில் இருக்கிறது. இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்லிக்கொண்டிருக்கிற திரு. ராமசாமி அவர்களின் பொறுப்பில் இருக்கிறது. அவர் ஒரு யூனிட்டு மின்சாரத்திற்கு 18 பைசா வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் கரும்புக்கு, அங்கே சென்று யாரும் போராடக் காணோம். என் அங்கு போய் போராடவில்லை என்பது நமக்குத் தெரிய வில்லை. சமதர்மம் பேசுகிறார்கள். இந்த அரசாங்கம் நாட்டுடமையாக் கியதை எதிர்த்து உயர் நீதிமன்றம் போகிறார்கள். சோஷலிஸத்தை இவர்கள் நாட்டுக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் பார்க்கிறோம். இதையும் இந்த நாடு தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற் காகத் தான் நான் இதை இங்கே தெரிவித்தேன்.

சுதந்திராக் கட்சித் தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் தாக்கப்பட்டார்கள், பொய் வழக்குப் போடப் பட்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய மூன்னாள் விவசாய அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்கள் தேவிகுளம், பீர்மேடு தமிழ் நாட்டுடன் சேரவேண்டும் என்பதற்கான போராட்டத்தை தாங்கள் அமைதியாக நடத்திய காலத்தில் ஒரு கடையிலே போய் ரூ. 7 அல்லது 9 திருடிக்—கொள்ளை அடித்தார் என்று அவர் மீது—ஒரு பொறுப்பு வாய்ந்த சட்டமன்ற உறுப்பினர் மீது—காங்கிரஸ் கட்சி அரசாங்கம்

அப்பொழுது வழக்கு போடவில்லையா? அப்படியிருக்கும்பொழுது, நீங்கள் கேட்கிறீர்கள் அநியாயமாக இந்த ஆட்சி வழக்கு போடுகிறது என்று. பொறுப்பு வாய்ந்த சட்டமன்ற உறுப்பினரின் மீது காங்கிரஸ் கட்சி அப்பொழுது வழக்கு போட்டது என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, பேரவைத் தலைவர் அவர்களே, நான் இறுதியாக என் உரையை முடிப்பதற்கு முன் ஒரு கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படியெல்லாம் நடந்துகொண்டிருக்கிறது என்று சொல்லும் மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எந்தத் திட்டத்தை உருப்படியாகச் சொல்லி இருக்கிறார்கள்? இந்த அரசாங்கம் இந்தக் காரியங்களைச் செய்யவேண்டும், இந்தக் காயரிங்களை இப்படித்தான் செய்ய வேண்டும் என்பதாக எந்த ஒரு சந்தர்ப்பத்திலாவது, இந்த ஆட்சிக்கு சரியான பொறுப்புள்ள எந்தக் காரியத் தையாவது சொல்லியிருக்கிறார்களா என்றால், எந்த ஒரு காரியத்தையும் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லவில்லை. அவர்கள் எதிர்க்கட்சி என்று கருதிக்கொண்டிருக்கிறார்கள். அந்த மனப்பான்மையை மாற்றிக்கொள்ள வேண்டும். இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கடுமையாக எதிர்த்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. சொ. காவேரிமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கடுமையாக எதிர்த்து ஒரு சில கருத்துக்களைக் கூற விழை கிறேன்.

உண்மையாகவே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆதாரமற்றது, தேவையற்றது, தெளிவற்றது என்பதை இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உணர்வார்கள் என்று நான் கருதுகிறேன். என்னுடைய அருமை நண்பர் திரு. லத்திப் அவர்கள் சொல்லியதுபோல இதிலே புதுமையும் இல்லை, உண்மையும் இல்லை. உண்மையில்லை என்பதற்காக நான் ஒரு சில ஆதாரங்களைக் கூற விழைகிறேன். இது எதற்காகக் கொண்டு வரப்பட்டது என்பதை இங்கே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாகச் சொல்லிக்கொள்ள நான் விழைகிறேன்.

குறிப்பாக, அரசியல் நோக்கத்தின் காரணமாகவும், விளம்பர லாபத்தைக் கருதியும் இந்தத் தீர்மானம் இங்கே கொண்டுவரப்பட்டது. பெருமதிப்பிற் குரிய மாண்புமிகு ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். மதுரை மேயர் அவர்கள் அவர்களுடைய தொகுதியில் பலாத்காரத்தை, வன்முறையை

தூண்டினார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்கு மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்வேன். மேயர் அவர்கள் அங்கே பேசியது என்ன என்பதை இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் உணர வேண்டும். வன்முறை நடக்கக்கூடாது; வன்முறை தலை காட்டக்கூடாது என்பதை மனதில் அடிப்படையாக வைத்துத் தான் அவர்கள் சில கருத்துக்களை அங்கே எடுத்துக் காட்டினார்கள். குத்தப்பட்டார்கள் தி.மு.க.-வில் இருக்கின்றவர்கள், வெட்டுக்கு ஆளானார்கள் தி.மு.க.-வில் இருக்கின்றவர்கள் பழி வாங்கப் படுகிறார்கள், தி.மு.க.-வில் இருக்கின்றவர்கள், கடைகள் சூரையாடப்படுகின்றன, அவர்கள் உயிர்கள் பறிக்கப்படுகின்றன என்பதைப்பற்றி அடிப்படையாக வைத்து, அங்கே பலாத்காரம் ஏற்படக்கூடாது, தலைதூக்கக்கூடாது என்ற கருத்துக்களை அடிப்படையாக வைத்து தெளிவாகப் பேசினார்கள். மதுரை முத்து அவர்கள் மேயர் பொறுப்பை ஏற்றிருக்கக்கூடிய மதுரை மாநகரத்திலும், சென்னை மாநகரத்திலும் ஹர்த்தால் அன்று எவ்விதமான அசம்பாவிதமும் ஏற்படவில்லை என்பதை இங்கே நினைவு கூற விரும்புகிறேன். அவ்வாறு வன்முறை தூண்டப்பட்டிருக்குமானால், என்னவெல்லாம் நடைபெற்றிருக்கக் கூடும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க முடியும். அப்படிப்பட்ட எந்த விதமான முயற்சியிலும் ஈடுபடவில்லை. அப்படியிருக்கும்பொழுது இந்த அவையிலே இல்லாத மாண்புமிகு மதுரை மேயர் அவர்களைப்பற்றி குறை கூறியிருப்பது குறித்து என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே பேசிய பெருமதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மதுரை மாநகரத்தில் நடைபெற்ற மிகச் சிறப்பு வாய்ந்த மகாநாட்டிற்குப் பலரையும் துன்புறுத்தி, வற்புறுத்தி வசூல் செய்யப்பட்டது என்ற குற்றச்சாட்டை இங்கே குறிப்பிட்டார்கள். அது மட்டுமல்ல, மதுரை மேயர் அவர்களும், அவரைச் சார்ந்தவர்களும் குடித்து விட்டு தெரு வீதிகளில் வந்தார்கள் என்றெல்லாம் குற்றச்சாட்டைச் சாட்டினார்கள். பெருமதிப்பற்குரிய கே. டி. கே. தங்கமணியை எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் எப்பொழுதும் உண்மைக்கு மாறாக எதையும் சொல்லமாட்டார்கள். அப்படியிருந்தும் வேண்டுமென்றே தொடுத்து உண்மைக்கு மாறான சில செய்திகளை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள்.

மதுரை மாநாடு மிகச் சிறந்த முறையில் நடைபெற்றிருக்கிறது என்ற காரணத்தினாலும் பல லட்சக்கணக்கானவர்கள் அங்கே கூடியிருந்தார்கள் என்ற காரணத்தினாலும் மதுரை மாநகரே ஒரு பெரிய தேவலோகம் போலக் காட்சியளித்த காரணத்தினாலும் அங்கே ஒரு வாரத்திற்கு முன்பே மக்கள்

இந்த விழாவினைக்காண கூட ஆரம்பித்து விட்டார்கள் என்ற காரணத்தினாலும் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக, கசப்பத்தன்மை காரணமாக நமது மதிப்பிற்குரிய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் இங்கே உண்மைக்கு மாறான கருத்தை வெளியிட்டிருக்கின்றார்கள் என்று கருதுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, நான் லாரியில் வந்தவர்களைத் தான் குறிப்பிட்டேன். எனக்குத் தெரியும், அவர் குடிக்க மாட்டார் என்று. லாரியில் வந்தவர்கள்தான் குடித்துவிட்டு ஆயுதபாணிகளாக வந்தார்கள். முதலில் போலீஸ் அதிகாரிகள் கொண்ட ஒரு ஜீப்பும் பிறகு காரில் பெரியவர்களும் பின்னர் லாரிகளில் ஆயுதபாணிகளாக, குடித்தவர்கள் வந்தார்கள் என்று தான் சொன்னேன். ரிப்போர்ட்டைப் பார்த்தால் இது தெரியும்.

திரு. சொ. காவேரிமணியம் : அவர் பேசும் நேரத்தில் நான் இங்கே அமர்ந்திருந்தேன். ஒவ்வொரு வார்த்தையையும் தெளிவாகக் கேட்டுக் கொண்டு தான் இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்தான் சொல்லுகிறாரே?

He is the final authority regarding his statement.

திரு. சொ. காவேரிமணியம் : அந்த அளவிற்குச் சிறப்பாக நடைபெற்ற மாநாட்டின் மீது ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாகத்தான் இங்கே வேண்டாத சிலவற்றைச் சொல்லுகின்றார் என்று பகிங்கரமாக நான் குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

அது மட்டுமில்லை, நமது பொதுவுடைமைக் கட்சித் தலைவர் மேலும் குறிப்பிட்டார்கள், நமது மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் தங்களை உலகத் தலைவராக விளம்பரப்படுத்திக்கொள்ள விரும்புகிறார் என்று. 'விளம்பரப் படுத்திக்கொள்ள விரும்புகிறார்' என்று சொல்லுவது தவறானது என்று தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆனால் அதே நேரத்தில் நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள முடியும், எங்கள் தலைவர்கள்தான் உலகத்தில் சிறந்த பட்டங்களை வாங்கியிருக்கின்றார்கள். உலக மகா கவிஞர் என்ற பட்டத்தை எங்கள் மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள் பெற்றிருக்கின்றார்கள். இதைக்காட்டிலும் சிறந்ததொரு பட்டத்தை யேல் பல்கலைக்கழகத்திலிருந்து எங்கள் எல்லோரது இதயத்தில் வீற்றிருக்கும் அண்ணா அவர்கள் பெற்றிருக்கின்றார்கள். இதையெல்லாம் நான் சொல்லித் தெரியவேண்டியதில்லை, எங்கள் தலைவர்களுக்கு விளம்பரம் தேவையில்லை. ஆனாலும் வேறு

நோக்கங்களுக்காக எங்களைப்பற்றி வேறுவிதமாக விளம்பரப்படுத்தப்பட்டது என்பதைப் பொதுவுடமைக் கட்சி நண்பர் புரிந்துகொள்ள வேண்டும் என்று மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாநாட்டிற்காக யாரையும் வற்புறுத்தி வசூலிக்கவில்லை என்பதை அந்த மாநாட்டின் செயலாளர் என்ற முறையில் நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். அங்கே உள்ள கடை உரிமையாளர்கள், மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பிலுள்ள வட்டச் செயலாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நண்பர்கள் எல்லோரும் தாங்களாகவே முன் வந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநாட்டிற்காக நன்கொடையை அளித்திருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் மறந்துவிட்டு, 'நாங்கள் வற்புறுத்திப் பணம் வசூல் செய்தோம்' என்று உண்மைக்கு மாறான கருத்தைப் பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு கே. டி. கே. அவர்கள் சொல்லுகிறார் என்பதில் நான் என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இவ்வாறெல்லாம் அவர்கள் சொல்லுவதற்குக் காரணம் ஒரு காலத்தில் மதுரை என்றால் மதிப்பிற்குரிய இராமமூர்த்தி அவர்களையும் கே. டி. கே. அவர்களையும்தான் எண்ணத்தோன்றுமேயன்றி வேறு ஒருவரையும் எண்ணத் தோன்றாது. இன்றைக்கு அந்த அளவிற்குச் செல்வாக்கு இல்லாத காரணத்தினால் பெரு மதிப்பிற்குரிய மேயர் அவர்களைத் தனிப்பட்ட முறையில் தாக்க வேண்டும் என்று வந்திருக்கின்றார்கள் என்று நினைக்கிறேன். இன்னும் சொல்லப்போனால், 'மதுரை என்ன மேயர் முத்துவிற்குச் சொந்தமா' என்றுகூட கேட்டார்கள். உண்மையில் முன்பு மதுரை 'முத்து' என்று இருந்தது மாறி இன்றைக்கு முத்து மதுரை என்று ஆகியிருக்கிறது என்று சொன்னால் அதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும். இன்றைக்கு அவர்தான் மேயராக இருக்கின்றார்கள். பொதுமக்கள் எல்லோரும் சேர்ந்து, 'நீங்கள்தான் மேயராக இருக்க வேண்டும்' என்று சொல்லிய காரணத்தினால் தான் அவர்கள் மேயராக இருக்கின்றார்கள்.

இன்னும் ஒன்றைக்கூடச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு காலத்தில் பொதுவுமைக் கட்சியின் கோட்டையாக இருந்தது மதுரை. அந்தக் காலத்தில் அங்கே என்ன நடைபெற்றது என்பதைச் சற்று இங்கே சொல்ல ஆசைப் படுகிறேன். அந்தக் காலத்தில் பழைய காங்கிரஸ் அரசியல் வாதியான என். எம். ஆர். சுப்பராமன் அவர்களுடைய கார் வழி மறிக்கப்பட்டு, அவர் தாக்கப்பட்டு அவரது காருக்கும் பெருஞ்சேதம் விளைவிக்கப்பட்டது. அது மட்டுமில்லை, அரிசனங்களுக்காக வாதாடிய வைத்தியநாத ஐயர் அவர்களுடைய வீடு நொறுக்கப்பட்டது, அவரும் தாக்கப்பட்டார். அதைத்

தொடர்ந்து வெள்ளைச்சாமி என்ற தொழிலாளர் வெட்டிக் கொலை செய்யப் பட்டார். நீதி மன்றத்திற்குக் கொண்டுசெல்லப்பட்ட இராவணன், கிருஷ்ணன் என்ற இரண்டு தொழிலாளர்கள் வெட்டிக் கொலை செய்யப் பட்டார்கள். இன்னும் சொல்லப்போனால், நகை வியாபாரம் செய்துகொண்டு இருந்த இராமனுதன் செட்டியார் கொள்ளையடிக்கப்பட்டு பல்லாயிரக் கணக்கான விலை மதிப்புடைய பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன. மதுரை நகரில் மிகச் சிறந்த விழாவெனக் கொண்டாடப்படுவது சித்திரைத் திருவிழா. அந்த விழாவினையொட்டி வைகையாற்றங்கரையில் லட்சக் கணக்கான மக்கள் கூடுவார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் ஆற்றில் வெள்ளம் வருகிறது என்று வீண் பீதியைக் கிளப்பிவிட்டு, கூடியிருந்த மக்கள் அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டு இருக்கும் நேரத்தில் அவர்கள் கொள்ளையடிக்கப் பட்டார்கள். இதெல்லாம் நடந்தது எப்போது? யார் காலத்தில் நடந்தது? இந்த அக்கிரமங்களும் அராஜகங்களும் யார் காலத்தில் நடந்தது? நீங்கள் கொடிகட்டிப் பறந்த காலத்தில்தான் நடந்ததே தவிர திராவிட முன்னேற்றக் கழகம் செல்வாக்குப் பெற்றுள்ள மதுரையில் இவை நடைபெறவில்லை என்பதை பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எனவே இந்தத் தீர்மானம் தெளிவற்றது, உண்மைக்கு முற்றிலும் புறம் பானது என்று கூறி எனது எதிர்ப்பினைத் தெரிவித்து என் உரையை முடிக் கிறேன், வணக்கம்.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, it is with great responsibility that the leaders of the opposition have jointly brought forward a No-Confidence motion against the ruling party. Sufficient emphasis has been given to the atrocious murder of about 70 people by the ruling party forces, whether it is the police or otherwise, whether intentional or not. It is worse than Calcutta Black-hole and Jallianwala Bagh. Seventy people have been murdered and the people of Tamil Nadu are agitated over the gruesome act. I am not going to deal with it further, for, sufficient has been said already.

Now, Sir, the duty of the opposition is to co-operate with the Government, they say. When the ruling party had profusely made promises to do many things and do not carry out their promises, it is the bounden duty of the opposition parties to oppose the Government and topple the Government, if necessary by all democratic methods—I emphasise democratic methods.

[Thiru K. M. Subramaniam] [1972 ஆகஸ்ட் 11

Sir, this Government promised that they would give if they come to power one measure a rupee of rice. Did they give one measure a rupee of rice? Instead of that, now we are giving three rupees a measure. What is their promise and what is their execution?

Again, they said—yesterday the hon. Member Thiru Rama Arangannal said that the revenue of the State has increased from 194 crores to 394 crores. Is it not a shame that when they stood for election they said that they would reduce the taxes and when they got into power they have increased the taxes by subtle means? And within seven years, they have increased the revenue to 200 crores. Leave alone that.

Since the time is limited, I am only touching upon important points. You have introduced prohibition (Interruption). Yes, scrapped prohibition. I am sorry for the slip of the tongue. Well, generally the D.M.K. takes advantage of slips only rather than action. Now having scrapped prohibition, they get Rs. 40 crores of revenue by auction. Leaving alone foreign wines, if the Government should get Rs. 40 crores, that means there should be business for 400 crores and that means—I do not say all the four crores of the people of Tamil Nadu are drunkards—at least two crores of people are drinking toddy and that is 400 crores of rupees worth of liquor. To that extent the consuming power of the people is going down. The whole thing is a fraud on the people. If they had announced that they were going to scrap prohibition at the time of going to the election, they could now scrap prohibition. But having made profuse promises then and having gained power and having come to the Legislature, to scrap prohibition is something which is absolutely undemocratic to say the least.

Now, Sir, leaving alone all these, let us take the revenue increase. The Hon. Minister for Revenue has increased sales tax in a subtle way, ultimately with an increase beyond expectations. If you increase by one percent, the entire turnover is equal to four per cent and prices have increased because of that. You have increased sales tax, bus fare, electricity rate and many other things. They say they had given up land tax.

1972 ஆகஸ்ட் 11] [Thiru K. M. Subramaniam]

What is the land tax they have given up. It is only the basic land tax they have given up. Instead of that, they have increased water cess and other forms of tax on land. When such is the case, they cannot say that they have given up the land tax. These are the things that need great and deep thinking.

Now, Sir, take the unemployment problem. They have not solved the unemployment problem. In 1971 the number of persons registered in the Employment Exchange was 4,60,000 and in 1970 it was 4,04,000. Thus there is an increase of 56,000 unemployed persons. So the unemployment problem is increasing every day. Sir, apart from the unemployed persons registered in the Employment Exchange, what is the number of persons thrown out of employment on account of the labour dispute in the Simpson Group of Companies? How many persons are suffering on that account for the last six months? Hundreds of employees are without job and without food. Even the last tumblers in their houses have been sold and many persons came and represented to me about it. Sir, the Government may take satisfaction in saying that they have done everything and that it is only the Opposition Parties which are inspiring the strke. If the Government cannot solve the strike problem, they will have to get out. About 16,000 persons are starving, and how can the Government be self-complacent and say that it is only the Congress that has inspired the strike? Irrespective of the party question, the efficiency of the Government depends on their achievement and not on their excuses. What is the achievement of the Government? Though they have been saying that the Simpson Company would be open to-day or tomorrow nothing has been done so far. I leave it at that.

Coming to law and order problem, as soon as the 1971 election results were published, no Brahmin could walk on the streets of Theagaraya Nagar and even Nadars also came under the category . . .

THIRU S. KANDAPPAN : Sir, I rise on a serious point of order. The hon. Member has stated that soon after the elections of 1971 neither Brahmins nor Nadars could walk on the streets. This must be expunged from the official proceedings and the hon. Member must apologise.

MR. SPEAKER : Why?

THIRU S. KANDAPPAN : He should substantiate it.

Mr. SPEAKER : Why had they chosen Brahmins for molestation?

THIRU K. M. SUBRAMANIAM : I do not know.

Mr. SPEAKER : You must have information . . .

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, I know that tufts of many Brahmins were cut. One Brahmin was stabbed and so many things had happened.

Mr. SPEAKER : When the hon. Member speaks in the Assembly, it is better that he should substantiate it. The hon. Member has stated that Brahmins had been attacked and molested. He may not withdraw it but he should substantiate it. He must take responsibility when he makes statements like that.

THIRU K. M. SUBRAMANIAM : In the Assembly I do not want to make an unnecessary statement.

Mr. SPEAKER : Can the Hon. Member substantiate it?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : In my constituency such incidents like cutting of tufts took place and then I brought it to the notice of the Hon. Chief Minister.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்ததைச் சொல்கிறேன். அவர்கள் இந்தக் கட்சியைவிட்டு தேசிய காங்கிரஸுக்குப் போனபின்னால் நாடார்கள், அவர்களுடைய வீட்டுக்குப் போய் தொல்லை கொடுப்பதாக என்னிடம் புகார் கொடுத்திருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நாடார்கள் என்று நான் சொல்லவில்லை. நாத்திகம் பத்திரிக்கையிலே அப்படி எழுதியிருக்கிறார்கள் என்று சொன்னேன். அவர்களுடைய தொல்லைகளிலிருந்து எனக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று சொன்னேன். நாடார்கள்தான் என்னைத் தாக்குகிறார்கள் என்று நான் சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாடார்கள் தாக்குகிறார்கள் என்று நிச்சயமாகச் சொன்னார்கள். என்னுடைய தொகுதியாகிய மைலாப்பூர் மக்கள் என்னை எதிர்க்கவில்லை. அங்குள்ள நாடார்கள் தான் என்னைத் தாக்குகிறார்கள், தொல்லை கொடுக்கிறார்கள் என்று என்னிடம் சொன்னார்கள். அப்படி என்னிடம் புகார் கொடுத்தார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : எனக்குத் தொல்லை கொடுப்பதில் நாடார்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள் என்று சொன்னேன். என் தொகுதி மக்கள் என்னை வெறுக்கவில்லை. அங்கிருக்கின்ற கட்சித் தலைவர் மார்த்தாண்டத்தின் தூண்டுதலால் நாடார்கள் என்னைத் தாக்குகிறார்கள். அங்கே சிவாஜி ரசிகர் மன்றம் ஒன்று இருக்கிறது. அந்த மன்றத்தின் பெயரால் என்னைத் தாக்குகிறார்கள் என்று சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சிவாஜி ரசிகர் மன்றம் என்ற பெயரால், நாடார்கள் என்னைத் தாக்கிவருகிறார்கள் என்று சொன்னார்கள். சிவாஜி உங்களுக்கு உறவினராயிற்றே (சிரிப்பு). அவர்கள் எப்படி உங்களைத் தாக்குவார்கள் என்று கேட்டேன். அவர்கள் தாக்கவில்லை. அவர்கள் பெயரால் நாடார்கள் வந்து தாக்குகிறார்கள் என்று சொன்னார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : முதலமைச்சர் அவர்கள் சொல்வதைத் தெளிவாகச் சொல்லவேண்டும். அதற்காக நான் ஒன்றும் பயப்படவில்லை.

THIRU V. KRISHNAMOORTHY : Sir, on a point of order. When the Prime Minister came to receive funds from the Hon. Chief Minister, she was sitting by my side. I asked for clarification from her. She stated that only Nadars were agitating against her for joining the Congress. So, now how can she go back?

திருமதி த. ந. அனந்தநாயகி : பக்கத்திலே இருந்து பேசினேம் என்றால் பேசியது எல்லாவற்றையும் தெளிவாகச் சொல்லலாமே. ஏன் தவறாகத் தெரிகின்ற பகுதியை மட்டும் சொல்லவேண்டும்? சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி சொல்ல வேண்டும். இப்பேர்பட்ட நண்பர்களிடம் இனி பேசும்போது டேப் ரிக்கார்டர் கொண்டுபோய் வைத்துவிட்டுத்தான் பேசவேண்டும் போலிருக்கிறது. என்னுடைய தொகுதி மக்கள் நான் தேசிய காங்கிரஸில் சேர்ந்ததை வரவேற்கிறார்கள். ஆனால் அங்கே இருக்கின்ற நாடார்கள்தான்—அம்பட்டன் வாராவதி பக்கத்திலிருக்கிற விறகுக்கடைக்காரர்கள்தான்—நான் தேசிய காங்கிரஸில் சேர்ந்ததை எதிர்க்கிறார்கள்; என்னைத் தாக்குகிறார்கள்; இந்தப் பிரச்சனையில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று சொன்னேன் (சிரிப்பு). (குறுக்கீடு) சொல்வதைத் தெளிவாகச் சொல்லுங்களேன். எனக் கொன்றும் பயமில்லை.

THIRU V. KRISHNAMOORTHY : Is it not communal?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : It is not communal. I am explaining my stand.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இந்த சபையிலே ஒவ்வொரு ஜாதியைப் பற்றியும், எந்த ஜாதியினர் என்ன சொல்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்று விவாதிப்பது பொருத்தமாக இருக்காது. அதை அனுமதிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நான் தேசிய காங்கிரசைச் சேர்ந்தது பற்றி என் தொகுதியிலுள்ள சில நாடார்கள் தான் என்னை எதிர்க்கிறார்கள். அவர்கள்தான் என்னைத் தாக்குகிறார்கள், எனக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டேன். இருக்கக்கூடிய நாடார்கள் அத்தனைபேரும் என்னைத் தாக்குகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. அப்படியிருந்தால் ஏன் உங்கள் கட்சியிலும் (தி.மு.க.) நாடார் சமுதாயத்தைச் சேர்ந்த ஆசைத்தம்பி இருக்கிறாரே அவர் இப்படித் தாக்குகிறாரா என்று அவரைப்போய் கேட்பதுதானே.

THIRU R. PONNAPPA NADAR : Sir, so far as the speech made by the hon. Member, Thiru K. M. Subramaniam is concerned, he has made only a general statement. He did not incite communal tension. Some persons have taken up such a thing. It is better that we should not indulge in communal politics and we do not talk ill of one particular community. We should not malign the name of one community. I belong to a particular community and that is not a sin which I have committed. I think it is in fairness that we should not create bickerings at this srage.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த சாதிப் பிரச்சினை கிளம்புகிற அளவுக்கு திரு. சுப்பிரமணியம் அவர்கள் தம் பேச்சைத் தொடங்கியிருக்க வேண்டியதில்லை. பிராமண நண்பர்கள், நாடார் நண்பர்கள் பயங்கரமான அளவுக்குத் தாக்கப்படுவதாகச் சொன்னார்கள். அன்றைக்கும் சொன்னேன். இன்றைக்கும் சொல்கிறேன். இந்த அரசு பிராமணர்கள் ஆனாலும், நாடார்கள் ஆனாலும் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களானாலும் எல்லோருக்கும் தகுந்த பாதுகாப்பை அளித்துக்கொண்டுதான் வருகிறது. இந்த அரசு தொடர்ந்து பாதுகாப்பை அளித்துக்கொண்டு வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்தச் சட்டசபையில் நாடார் வகுப்பைச் சேர்ந்தவர்கள் 16 பேர்கள் இருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது நாடார்கள் பயந்துகொண்டிருக்கிறார்கள் என்பதாக திரு. சுப்பிரமணியம் சொன்னது அந்தச் சமூகத்தையே இழிவுபடுத்துவதாக இருக்கிறது. அதை அவர் திரும்பப்பெறவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் தம் பேச்சைத் தவறாக ஆரம்பித்துவிட்டார்கள். ஆரம்பத்திலேயே திரு. தங்கமணி தடுத்திருந்தால் பிரச்சினை இவ்வளவு தூரம் வளர்ந்திருக்காது.

THIRU K. T. K. THANGAMANI : I was not present at that time.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்போது திரு. தங்கமணி சபையில் இருந்தார்களா, இல்லையா என்பதை நான் கவனிக்கவில்லை. பிராமணர்களும், நாடார்களும் மொலஸ்ட் செய்யப்படுகிறார்கள் என்று திரு. சுப்பிரமணியம் குறிப்பிட்டுவிட்டார். இதை அனந்தநாயகி அம்மையார் மைலாப்பூருக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள். (சிரிப்பு) பொதுவாக இங்குள்ளவர்கள் எல்லாம் முதலியார் என்றோ, நாடார் என்றோ, ஐயர் என்றோ சாதி அடிப்படையில் யாரும் கருதுவதில்லை. எல்லோரும் சமமாகத்தான் கருதப்படுகிறார்கள். பேச்சைத் துவங்கியவர் தவறான உணர்ச்சிகளைத் தூண்டும் நிலைக்கு இழுத்துப்போய்விட்டார். இதுபற்றி நான் பெரிய ரூலிங் எதுவும் கொடுக்க முடியாது. திரு. தங்கமணி அவர்கள் பேசும்போதுகூட நேற்று, நாயக்கர்கள் இருந்தார்கள், படையாச்சிகள் இருந்தார்கள் என்று குறிப்பிட்டார். பொதுவாக எந்த ஒரு சாதியைப்பற்றியும் இழிவுபடுத்தும் நிலையில் யாரும் பேசக் கூடாது. என் கவலை எல்லாம்—யார் குற்றம் செய்தார்கள் என்பது அல்ல—யாரோ ஒரு சிலர் குற்றம் செய்ய அதற்காக அந்தச் சமூகத்தையே இழிவுபடுத்தும் முறையில் பேசுவது நல்லது அல்ல. திரு. சுப்பிரமணியம் அவர்கள் இந்த விஷயத்தை விட்டுவிட்டு அடுத்த விஷயத்திற்குப் போகும்படியாக நான் அவரைத் தொடர்ந்து பேச அழைக்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : I do not mean any offence to any Government. I am not going to speak on that subject. I do not represent any particular community. I represent the entire community in my constituency. I wanted to talk how law and order is working in this State. I shall explain. On 5th July there was 'bandh'. What happened ? All Congressmen from my constituency under the excuse that they are likely to act and to create riot, all of them were arrested. Others went about the streets actually threatening the shop-keepers that if they closed on that day, they would be closing the shop for ever and that they would not re-open afterwards. Some closed the shops. About 20 to 30 people closed the shops. Next day, on the 6th night, a drum full of tar was melted in front of the police station (three policemen were watching, I have made a complaint to the police

station) and on all the shops which did not open on 5th, tar was smashed. Is this law and order ? How many instances I can quote? I do not want to waste my time by quoting indefinitely.

Ministers go on saying there is no corruption. I do not think Ministers are corrupt. I cannot prove they are corrupt. But I say definitely that there is corruption in administration. The massive victory in 1971 has intoxicated the party to such an extent that even the smallest DMK man is thinking that he is the Hon. Minister, that he is the sub-inspector of the police station, that he is the District Superintendent of Police. He gives orders and administration is afraid to disobey him. Of course, the Hon. Chief Minister has issued orders that DMK partymen should not interfere in administration. But what is happening? In the higher ranks, in the MLA level, there may not be interference. But in the lower ranks of DMK, everybody knows what is happening. Take my own constituency. The T. Nagar police station is almost DMK sub-station. If this sort of thing is allowed, where is law and order ?

(Mr. Speaker sounded the gong.)

I have lost 10 minutes. Others have interrupted.

MR. SPEAKER : You are also gaining. You have taken more time.

THIRU K. M. SUBRAMANIAM : We are spending Rs. 95 crores, it is said on Education. But the recent survey of the Hyderabad Institute has revealed that the spending by Tamil Nadu Government on education is a total waste and that there is no improvement in education. Yesterday some members from the other side were boasting of achievement of this State in education. In 1967 there were 30,000 elementary schools in the State. Today the number is only 32,000. In five years, they have increased only 2,000 elementary schools. What is the use of opening more colleges ? What is the use of having high schools unless you open more elementary schools, which form the basis ?

Now we have several autonomous boards. One is the Water Supply and Drainage Board. We have been asking from time to time for decentralisation of administration. Instead of panchayats and municipalities doing the work, the entire work is now taken away by Government, by this Board. Since it is a Board,

an autonomous Board, there is no Service Commission to make recruitment and all supporters of DMK are being employed in the Board, people who worked for DMK MLAs' victory in the recent elections, are being employed in the Board.

I say so far as finance is concerned, there is absolute financial chaos. I am referring to the Madras Corporation. Previously if the Corporation wanted loan, they have to prepare an estimate, get it passed by the Council and then come to Government, with an application for loan. Today the Corporation can submit simply an application. Nobody knows what is the estimate. ...

THIRU S. KANDAPPAN : On a point of Order, Sir, The hon. Member has referred to the Tamil Nadu Water Supply and Drainage Board. He has alleged that recruitment is taking place without any sort of regulation and discipline. I am afraid that it is totally misleading. First of all, the establishment was there even before the formation of the Board. There is little scope for any fresh recruitment. I am sorry that a senior member and responsible member should be talking in this vein without verifying the facts. I totally refute his saying that the Board has made numerous recruitments without any discipline. I am sorry that such an allegation should be made against an autonomous Board.

THIRU K. M. SUBRAMANIAM : The very fact it is an autonomous Board shows that the Service Commission has no control over its recruitment.

MR. SPEAKER : That does not mean that it is making irregular recruitment.

THIRU K. M. SUBRAMANIAM : When there is no recruitment by the Commission, the possibility which I have alleged is there. We are human beings. If Service Commission is there, it is different. If there is control it will be good; otherwise, it may be good, bad or indifferent. The present Chairman of the Board is good and he explained the recruitment, but tomorrow somebody else may come and what will be the position? That is my point.

MR. SPEAKER : Mr. Subramaniam, do you mean to say that if that is not within the purview of the Public Service Commission, everything will be irregular ?

THIRU K. M. SUBRAMANIAM: There is a possibility. Whether it is the Corporation, whether it is a Board or an autonomous body, when it is not controlled by the Public Service Commission, it has been found to have led to irregularities. So there is that possibility. I did not say that there was bad recruitment how. Today, he is the chairman and he is a good man, nobody disputes it. But tomorrow what happens? (Thiru S. Kandappan stood in his seat).

MR. SPEAKER: He has corrected his statement.

THIRU S. KANDAPPAN: It is not as if I want to clear my position. My argument is that the very constitution of the Board whether it is the water board or any other board is such that there cannot be any irregularity.

MR. SPEAKER: Anyhow he has corrected his statement.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: May I invite the attention to the plea of the J. Es of the Public Works Department? The J. Es are left alone and in the Water Board which is born only yesterday, only Engineers far junior to them are taken and they become A.Es. This has been put up in posters and the problem is there. The Chairman of the Board cannot say that his hands are clean.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இத்தகைய குற்றச்சாட்டு பொருத்தமற்றது என்பதற்காக நான் விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு போர்டிலே பணியாற்றுவதற்கு அப்படி விரும்புகிறவர்கள் மட்டுமே பணியாற்ற எடுக்கப் படுகிறார்கள். விரும்புகிறவர்களுக்கு, விரும்பிப் பணியாற்றி வருகிறவர்களுக்கு இடையேதான் சீனியாரிடி கணக்கில் கொள்ளப்படுமே தவிர விரும்பாதவர்களும், விரும்பி அதில் பணியாற்ற முன் வாராதவர்களுக்கு அந்த சீனியாரிடியிலே இடம் இல்லை. ஹவுஸிங் போர்டாக இருந்தாலும் அல்லது வேறு எந்த போர்டாக இருந்தாலும் விரும்பி அங்கே பணியாற்ற வருகின்றவர்களைத்தான் பணியாற்றச் செய்யமுடியுமே தவிர விரும்பாதவர்களைப் பணியாற்றச்சொல்ல முடியாது. விரும்பாதவர்கள் தாங்கள் பணியாற்றும் துறையிலேயே இருந்தால் தங்களுக்கு நல்லது என்று கருதி விரும்பாதவர்களைக் கட்டாயப் படுத்துவது இல்லை. அவர்களுக்கு போர்டிலே உள்ள பணியில் சீனியாரிடி கிடைக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. த. ந. அனந்தநாயகி: அப்படியென்றால் எல்லோரையுமே அவர்கள் விருப்பப்படித்தான் போட்டுக்கொள்வார்கள். அவர்களுக்கு எல்லாம் சீக்கிரம் ஏ.இ. போஸ்ட் வந்துவிடும். ஆனால் பேசன்ட் டிபார்ட்மெண்டாக இருக்கிற பி.டபிள்யூ.டி.யில் பணியாற்றுகிறவர்கள் எல்லாம் கடைசிவரையில் ஜூனியர் எஞ்சினியர்களாகத்தான் இருக்க வேண்டுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, 1967-க்கு முன்னாலே திரு. வெங்கட்டராமன் அவர்கள் அமைச்சராக இருந்தபொழுது ஹவுஸிங் போர்டில் யார் யார் நிலைப்படுத்திக்கொண்டு இருந்தார்களோ அவர்களுக்குத் தான் உயர்வுக்கு வாய்ப்பு அளிக்கக்கூடிய முறைதான் இருந்தது. இப்பொழுதும் அந்த முறைதான் தொடர்ந்து இருந்து வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஏற்கனவே இருந்தமுறைதான் தொடர்ந்து இருந்துவருகிறது என்றால் அதற்கு நீங்கள் இருக்கவேண்டாமே? வெங்கட்டராமனே இருக்கலாமே.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பொதுமக்கள் அதைத் தீர்மானித்து தான் பல பேர்களை வீட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பொதுமக்களுக்கு விருப்பம் இல்லாத நிலைமையில்தான் இந்தச் சபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பொதுமக்கள் தீர்மானிப்பதற்கு குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுக்காலம் இருக்கிறது.

(Thiru S. Kandappan stood in his seat)

MR. SPEAKER: He has corrected his statement.

THIRU K. M. SUBRAMANIAM: I have corrected it.

MR. SPEAKER: The ball is not in your court. He wants to explain.

திரு. செ. கந்தப்பன்: குடிநீர் வாரியம் சம்பந்தப்பட்ட வரையில் ஒரு விதி இருக்கிறது. அதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசுத் துறைகளிலிருந்து, குடிநீர் வாரியத்தில் பணியாற்றுவதற்கு விரும்புகிறவர்கள் இருந்தால் அவர்களுக்கு 60 நாட்கள் காலம் தந்து அந்தக் காலத்திற்குள் அவர்கள் அப்படிப்பட்ட விருப்பத்தைத் தெரிவிக்கலாம் என்று நோடிபிகேஷன் கொடுத்து கேட்கப்பட்டது. யார் யார் எல்லாம் விருப்பம் தெரிவித்து இருந்தார்களோ அவர்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். ஏற்கனவே மற்ற துறையிலிருந்து பணியாற்றியவர்கள் டெபுட்டேஷன் என்ற அளவிலே இங்கே பணி

யாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(Dr. Hande stood in his seat).

MR. SPEAKER : I am not permitting you, Mr. Hande. Dr. Hande will resume his seat. This is not a general discussion. Thiru Subramaniam will continue.

THIRU K. M. SUBRAMANIAM : I think I have failed to discharge my duty, explaining it properly. I did not mean recruitment alone; I mean the very creation of the Board was against the spirit of decentralisation of administration and reduction of expenditure. That is what I have been after. Not only that, it may be that in the modern conception centralisation is attempted, whether it is the Panchayats, whether it is the Municipalities or any other body, you take away water supply, drainage and roads. You take away one by one, leaving only sweeping the streets to them. Nothing else. That is what is happening today under this administration. Sir, that is why I am opposed to this method. Formerly, whatever was done was done through proper authorities and after proper technical supervision.

Now, Sir, I come to the most important thing and that is about State Autonomy. State Autonomy.....

MR. SPEAKER : No, no. Thiru K. Rajaram will now speak.

* திரு. கே. ராஜாராம் : மதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, விசித்திரமான அரசியல் சூழ்நிலையில் வேடிக்கையான ஒரு தீர்மானம் இங்கே வந்திருக்கிறது. இந்தத் தீர்மானத்தை எதிர்த்துத் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்ன நண்பர்களோடு சேர்ந்து நானும் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இணைத்திட விரும்புகிறேன். 16, 17 மாதங்களுக்கு முன்புதான் இந்த நாட்டு மக்கள் ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அந்தத் தீர்மானத்தின் விளைவுதான் எதிர்க்கட்சி என்று சொல்லிக் கொள்கிறவர்களை எங்கே என்று தேடிப்பிடிக்கக்கூடிய நிலையிலே, அளவிலே சிறுத்து காரத்திலே குறைந்து வலிவிழந்து ஒளியிழந்து களையிழந்து, பலனைப்பட்டு இங்கே இயங்கிக்கொண்டு இருக்கிறார்கள். அப்படி ஒரு ஒளியிழந்த, வலுவிழந்த, கலையிழந்த, பலனைப்பட்ட எதிர்க்கட்சி இந்த மன்றத்திலே இடம்பெற்றிருந்தாலும், மக்களுடைய பேராதரவைப்பெற்று பெரும் சக்தியாக இன்றைய தினம் உருப்பெற்றிருக்கிற திராவிடக் முன்னேற்றக் கழகப் பேரரசு டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் ஜனநாயக வழிநின்று

எதிர்க்கட்சிகளுக்கு—நாங்கள் எல்லாம்கூட பொருமைப்படத் தக்க அளவில் அதிகப்படியான சலுகைகளை வாரி வழங்குவதை இந்த மன்றம் அறியும், அவர்களும் அறிவார்கள் மாற்றாரை மதிக்கின்ற மனவளத்தோடு இந்த அரசு நடைபோடுவதை எல்லோரும் அறிவார்கள். "உங்களுக்கு இத்தகைய மனவளம் இருக்கலாமா?" "நீங்கள் இத்தனை உயர்-ஜனநாயகப் பண்பினை காட்டலாமா?" என்று கேட்பதைப்போல அதனாலேதான் உங்கள்மீது நம்பிக்கையில்லை எங்களுக்கு என்று சொல்லுவதுபோல இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

இந்தத் தீர்மானத்திற்குப் பின்னாலே இருப்பவர்களைப் பார்க்கும் போது வேடிக்கையாக இருக்கிறது. கொள்கை முரண்பாடு கொண்டவர்கள், லட்சியத்திலே இணைப்பில்லாதவர்கள் யார் ஏமாந்தால் யாருடைய காலை எப்பொழுது எப்படி வாரலாம் என்று நேரம் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் இப்படி தங்களுக்குள்ளேயே நம்பிக்கையில்லாதவர்கள் எல்லாம் இணைந்து எங்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். பாராளுமன்ற ஜனநாயகம் எதிர்க்கட்சிகளுக்கு அளித்துள்ள வலிமையான ஆயுதம்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம், அந்த வலிமையான ஆயுதத்தைக்கூட நேரம் அறிந்து காலம் அறிந்து பயன்படுத்தும் போது தான் அதற்குரிய பலனுண்டு பயனுமுண்டு. அதாவது பாரதத்தில் வருகின்ற நாகாஸ்திரத்தைப்போன்றது, இந்த ஆயுதம். கர்ணன் கையில் கிடைத்த நாகாஸ்திரம் எப்படிப் பயன் இல்லாமல் கெட்டதோ அதைப்போல இன்று எதிர்க்கட்சிகளுக்குக் கிடைத்திருக்கும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அவர்கள் வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள். கர்ணன் வீசிய அஸ்திரமாவது அரச்சுனனது கிரீடத்தைத் தொட முடிந்தது. ஆனால் இந்த எதிர்க்கட்சிக்காரர்கள் வீசக்கூடிய இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் டாக்டர் முதலமைச்சரவர்களைத் தொடக்கூடப் போவதில்லை. இந்த அரசை உரசக்கூடப் போவதில்லை என்பதை நம்மைவிட அவர்கள் நன்றாக அறிவார்கள். நான் இப்படிச் சொல்வதால் ஏதாவது வலதுசாரி கம்யூனிஸ்ட்கட்சிக்காரர்களையும், இந்திரா காங்கிரஸ்காரர்களையும் கர்ணனுக்கு ஒப்பிட்டுப் பேசுவதாகக் யாரும் கருத வேண்டாம். பாவம் கர்ணன் நல்லவன், நன்றி உள்ளவன், சேர்ந்த இடத்திலிருந்து செஞ்சோற்றுக் கடனைத் தீர்த்தவன், ஒரு உதாரணத்திற்காகத் தான் சொன்னேன்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் இன்று இவ்வளவு அவசரம் அவசரமாக வந்திருக்க வேண்டிய அவசியமென்ன? புத்தனுக்கு போதி மரத்தடியில் ஞானோதயம் வந்தது போல், தண்ணீர் தொட்டிக்குள் ஆர்க்கிமிடிசுக்கு திடீரென மிதவை தத்துவம் பிறந்ததுபோல் இவர்களுக்கு ஒரு நம்பிக்கையில்லை

என்று ஒரு தீர்மானத்தை இன்றைக்குத் திடீரென்று உணர்வு பிறந்து நம்மீது எதிர்க் கட்சிக்காரர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். இதற்கு அவசர அவசியம் என்ன? ஒரு நிலையான பேரரசு ஒரு நிம்மதியான பேரரசு, அமைதியான பேரரசு இந்த நாட்டிலே உருவாக்கப்பட்டு தி.மு.க.-வால் உலவவிடப்பட்டிருக்கிறதே அதனால் இவர்களுக்கு நம்பிக்கையில்லையா? இதனாலேதான் எதிர்க்கட்சிகாரர்கள் எங்கள் மீது நம்பிக்கை இழந்து விட்டார்களா? வேளாண்மைத்துறையிலே கோடிக் கணக்கில் செலவிட்டு பசுமைப்புரட்சியை உண்டாக்கியும், புஞ்சைக்கு தீர்வையை ரத்து செய்து; நஞ்சைக்கும் 5 ஏக்காவுக்குமேல் தான் அடிப்படையில் தீர்வை என விதித்து பலவிதமான புரட்சிகரமான விவசாய சட்டங்களால் விவசாயிகளை வாழவைக்க இந்த அரசு முயற்சிகள் எடுத்ததே அதனால் எதிர்க்கட்சிகளுக்கு இந்த அரசாங்கத்தின்மீது நம்பிக்கை இல்லையா? கண் சிகிச்சை முகாம் திட்டம், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம் என்று யாருமே எண்ணிப் பார்க்காத அந்த அரிய திட்டங்களை செயல்படுத்தியதே இந்த அரசு அது பிடிக்கவில்லை. குடிசை வாரியத்தின் மூலம் குடிசைவாழ் மக்களுக்கு ஏற்றம் பெறும் எழில்மிகு திட்டங்கள் உருவாகி செயல்படுத்தப்பட்டனவே இவைகள் உங்கள் நெஞ்சங்களைத் தொடவில்லையா? இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்ததற்கு இந்த நல்ல காரியங்கள்தான் காரணமா? என்ன காரணம்? காரணம் என்னவென்று கேட்டால் விவசாயப் போராட்டமாம். துப்பாக்கிச் சூடாம்; பிணங்களாம், இதுதான் காரணம் என்று சொல்கிறார்கள். யார் அந்தப் போராட்ட விவசாயிகள்? எங்களுக்குத் தெரியாதா? பட்டக்காரர்களும், பாளையக்காரர்களும், மிட்டாக்களும், மிராசுகளும், இணைந்து போட்ட கொட்டம்தானே அது? ஏழை விவசாயிகளைப் பகடைக் காய்களாக வைத்து ஆடிய சதுராட்டமல்லவா அது? இந்த விவசாயிகள் யார்? காலையிலே கோழி கூவுவதற்கு முன்னாலே எழுந்திருந்து, தோளிலே கலப்பை தூக்கிச் சென்று வயல்களிலே முழங்கால் சேற்றிலே இறங்கி மாட்டுக்குப் பதில் ஏர்பிடித்து உழுகின்ற ஏழை விவசாயி எவன் அந்தப் போராட்டத்தில் உள்ளுணர்வோடு கலந்து கொண்டான்? கோவையிலே எத்தகைய விவசாயி? 2,000 ஏக்கர்களுக்கு மேல் வைத்திருக்கின்ற மல்லாடியார் அங்கே போராட்ட தளபதி. சேலத்தில் 800 ஏக்கர்களுக்கு மேல் வைத்திருக்கின்ற பெரிய காட்டூர் கவுண்டர் போராட்ட நாயகன். எங்கள் பகுதியில் 500 ஏக்கர்கள் வைத்திருக்கின்ற மதுரப்பாக்கம் செட்டியார்கள் இவர்கள்தானே போராட்ட வீரர்கள்? எங்கள் ஊரில் நான் போராட்டத்தின் பொழுது பார்த்தேனே வண்ணவண்ணக் கார்கள், விதவிதமான கார்கள், அம்பாசிடர் கார்கள், பியட் கார்கள் இவைகளிலே வந்தார்கள் ஏழை விவசாயிகள்! போராட்டத்திலே இறங்கினார்கள். எந்த ஏழை விவசாயி போராட்டத்திலே கலந்து கொண்டான்?

வன்முறை நடந்தது, துப்பாக்கிச் சத்தம் கேட்டது, பிணங்கள் விழுந்தன என்றெல்லாம் சொன்னார்கள். அந்தப் பிணங்கள் விழுந்தன என்பதை நான் மறுக்கவில்லை. அவர்கள் ஏழைகள் என்பதையும் நான் மறுக்கவில்லை. அவர்கள் ஏழைகள் என்பதால் தான் இந்த அரசு 5,000 ரூபாய் மானியமாகக் கொடுத்தது. ஆமாம் யாரும் கேட்காமலே. இங்கே டாக்டர் ஹண்டே அவர்கள் உருக்கமாக பேசினார்கள். நம்முடைய கட்சியின்மீது அவருக்கு நிறைய அன்பு உண்டு. அதுவும் கலைஞரிடம் தனி அன்பு கொண்டவர்கள். அவரே நீண்ட நாட்கள் அரசாட்சி செய்ய வேண்டுமென்று கூட அடிக்கடி சொல்வார்கள். அத்தனை அன்பு; ஆனால் எங்களுக்கு அவர் பேச்சில் சந்தேகந்தான். என்? அவர்கள் கேட்டார்கள், இந்த 'பந்த்' இப்பொழுதுதான் நடக்கிறதா? மறியல் இப்போது தான் நடந்ததா? ஏற்கெனவே நடைபெறவில்லையா? தி.மு.க.-வினர் மறியல் செய்ய வில்லையா? என்றெல்லாம் கேட்டு அத்தோடு நின்று விட்டார்கள். உண்மையிலேயே அரசியல் நேரி உள்ளவராக இருந்திருந்தால் துப்பாக்கிச் சத்தம் இப்போதுதான் கேட்டதா? இதற்கு முன்பு கேட்கவில்லையா? பிணங்கள் இப்போதுதான் விழுந்ததா? இதற்கு முன்பு விழவில்லையா என்றும் கேட்டிருக்க வேண்டும். அப்படி கேட்டிருந்தால் அவர்களது அரசியல் நாகரீக உணர்வைப் பாராட்டியிருக்க முடியும். ஆனால் குற்றம் சொல்வதற்கு என்றே அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள், அதற்குத் தானே இந்தத் தீர்மானம்?

வன்முறைகள் நடந்தன, யாரால் நடந்தது, அதுதான் பிரச்சனை, இங்கே கூடப் பேசியவர்கள் மதுரையிலே ஒரு தி.மு.க. பெரியவரின் பின்னால் சென்று அராஜகம் நடத்தி கடையைத் திற என்று சொன்னார்கள் என்று நடவாததையெல்லாம் சொன்னார்கள். உண்மையில் நடந்தது என்ன? என்னுடைய பகுதியில், மிகச் சிறிய பகுதி, அதில் கூட மிகச் சாதாரண பின்புகேட் பிரமுகர் ஒருவர் கூட்டம் போட்டு "கடைகளை யாராவது திறந்தால் சூறையாடுவோம். கொள்ளையடிப்போம், சைக்கிள் ரிக்ஷாக்கள் ஓடினால் சங்காத்தை உடைப்போம், பஸ்கள் ஓடினால் தடுப்போம்" என்று பயங்கரமான அராஜகவாதிகள் போல பேசினார். இப்படித்தான் பல பகுதிகளிலும் வன்முறையாளர் பேசினர். துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டே தீருவோம், கண்ணீர்ப்புகையை சந்தித்தே திருவோம் என்ற ஒரு திட்டத்தோடு வன்முறை வெறியாட்ட நிலையை கட்டுக்கடங்காத நிலைமையை உருவாக்கிவிட்டு அங்கே துப்பாக்கி வெடித்து பிணங்கள் விழுகின்ற நிலையிலிருந்தபோது அதற்கு காரணமாகி விட்டவர்களே இன்று முதலைக் கண்ணீர் விடுகிறார்கள். குழந்தையின் பெல்லிய தோலை திருகி விட்டுவிட்டு இன்று ஏன் வேகவேகமாக தொட்டிலை ஆட்டிக்கொண்டிருக்கிறீர்கள்? உண்மையிலேயே மனச்சாட்சியிருந்தால் நெஞ்சிலே கை வைத்துச் சொல்லுங்கள். விவசாயிகளுக்காகவா போராடினீர்கள்? ஆசிரியர்கள் போராட்டம் வந்தபோது தொழிலாளர் போராட்டத்தின்

போது மாணவர்கள் கிளர்ச்சியில் இந்த நிழலில் நீங்கள் பதுங்கவில்லையா? இந்த ஆட்சிக்கு எதிராக நீங்கள் ஒவ்வொரு முறையும் செயல்படவில்லையா? ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் தேர்தல் களத்தில் தோற்று ஓடியவர்கள், அதில் புறங்கண்டு போனவர்கள், இன்று திராவிட முன்னேற்றக் கழகம் பெரும் சக்தியாக இருக்கிறது என்பதைக் காணப் பொறுதவர்கள். அந்தப் பொறாமையிலிருப்பவர்கள் இன்றைக்கு இந்த ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்று ஒன்றாக இணைந்து இந்த அரசுக்கு எதிராக எடுத்துவரும் பல்வேறு முயற்சிகளில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒரு நுணை முயற்சிதானே தவிர இது ஜனநாயக உரிமையைப் பிரயோகிக்கும் முறை அல்ல என்ற குற்றத்தைச் சாட்ட விரும்புகிறேன். நீங்கள் எப்படிப்பட்ட நிலைமையிலே இந்த அரசைக் கவிழ்க்க விரும்பினாலும் டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்வதைப் போல இந்த திராவிட முன்னேற்றக் கழகப் பேரரசு ஒரு கட்டுமரம் என்பதனையும் அதனை கவிழ்ப்பது ஏலாத காரியம் என்பதனையும் நீங்கள் உணரவேண்டும். திராவிட முன்னேற்றக் கழக அரசு மணல் வீடு அல்ல, கையால் அழித்து விடுவதற்கு. அட்டையால் எழுப்பப்பட்ட வீடு அல்ல, காற்றடித்தால் சரிந்து போவதற்கு. இது மக்கள் சக்தி மீது எழுந்த இரும்புக் கோட்டை, எஃகுக்கோட்டை? மக்கள் நம்பிக்கையை இழந்து விட்டார்கள் எங்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வேடிக்கையாகவே கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட தீர்மானங்களை எதிர்கட்சிக்காரர்களாகிய நீங்கள் கொண்டு வருவதால் மக்கள் உங்கள் மீது வைத்திருக்கிற கொஞ்சநஞ்ச நம்பிக்கையும் இழந்து எதிர்காலத்திலே எதிர்க்கட்சிகளே இல்லாமல் போய்விடுகின்ற ஒரு துர்ப்பாக்கியமான நிலைக்குக் கொண்டு சென்று விடுவீர்களோ என்ற அச்சத்தை எங்களுக்கு தராதீர்கள் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏதோ தங்களது மன அரிப்பைத் தீர்த்துக் கொள்வதற்காக மட்டுமே இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து தங்களுடைய மிகப் பெரிய அரசியல் மனவளத்தைக் காட்டிக் கொண்ட எதிர்க்கட்சிகளுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, விசித்திரமான அரசியல் சூழ்நிலையில் என்று வர்ணிக்கப்பட்ட இந்த நிலைமையில் இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேச விரும்புகிறேன். அதற்குக் காரணம், இந்த விசித்திரமான அரசியலில் ஒரு விசித்திரத்தைக் காண்கிறோம். இத்தனை நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்ட பிறகும், மன்றாடியார்களும், பாளையக்காரர்களும் கவுண்டர்களும் இந்த அரசாட்சியிலே இருக்கிறார்களே, அது வேடிக்கையாகக் கூட இருக்கிறது. இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வருவது நாட்டு

மக்களை ஏமாற்றுவதற்காகவா அல்லது அதை அமல் படுத்துவதற்காகவா என்று இந்த நாட்டு மக்களுக்குத் தெரிவதற்கு நல்ல சந்தர்ப்பமாகத்தான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் கொண்டு வந்த சட்டங்களை உண்மையிலேயே அமல் நடத்தி வெற்றி கண்டிருக்குமானால் இன்னமும் ஆண்டான் அடிமைகள், நிலப்பிரபுக்கள் என்று இருக்க மாட்டார்கள். கேரளாவிலே அந்த நிலை மாற்றப்பட்டது. இங்கே சட்டம் இருக்கிறது, ஆனால் இந்த சாமானியர்களின் அரசு அந்தச் சட்டத்தை அமல் படுத்த மாட்டோம் என்ற சூழ்நிலையில் விசித்திரமான நிலையைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே விவசாயிகளின் 11 அம்சக் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு அமைச்சர் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பிறகு இது நிலப்பிரபுக்கள் போராட்டம் என்று சொன்னால் ஒன்று இந்த ஆட்சி நிலப்பிரபுக்களின் பக்கம் போய்விட்டது என்று அர்த்தம். அப்படியில்லையென்றால் இது மக்களை ஏமாற்றுகின்ற வேலை என்று அர்த்தம். இதில் எது உண்மை என்பதை முதலமைச்சரவர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் 11 அம்சக் கோரிக்கைகளைப்பற்றி அழைத்துப் பேசுவதற்கு முதல் அமைச்சரவர்கள் இவ்வளவு அடம் பிடித்து, பல கோர சம்பவங்களைத் தடுப்பதற்கு பதிலாக அவைகளை நிகழவைத்து இருப்பது ஏன்?

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட கோரிக்கைகள் திடீரென்று ஏற்படவில்லை. கோவை மாவட்டத்திலே மின் கட்டணப் போராட்டம் நடக்கின்ற நேரத்திலே, இராமநாதபுரத்து விவசாயிகள் எங்களுக்குக் கடன் நிவாரணம் வேண்டும், பருத்தி போன்றவைகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கும்பொழுது அதற்காகக் கவனம் செலுத்தாமல் யாரோ ஆலைப் பத்திரிகைக்காரர்கள் தங்களை ஆதரிக்கிறார்கள் என்பதற்காக, இப்படி விலை வீழ்ச்சி ஏற்பட்டு, பாதிக்கப்படும் விவசாயிகளைக் கவனிக்காமல் இருந்ததன் விளைவாக ராஜபாளையத்திலும், ஸ்ரீவில்லிப்புத்தூரிலும் 5-ஆம் தேதி பந்த் நடந்தது. அப்பொழுது பலரும் சிறையில் இருந்தோம். அப்பொழுது புதிய ஜனநாயக முறை கடைப்பிடிக்கப்பட்டது. 25-வது சுதந்திர வெள்ளி விழாவைக் கொண்டாட இருக்கிறோம். அந்த வெள்ளி விழாவில் தங்கள் கட்சியிலும் விருது பெறுபவர்கள் இருப்பார்கள் என்று நம்புகிறேன். அப்படியில்லாவிட்டாலும் பாவாயில்லை. அதைக் கொடுக்கின்ற பாக்கியமாவது தங்களுக்கு இருக்கிறது.

ராஜபாளையத்தில் பொன் விழா மண்டபம், காந்திஜி நூற்றாண்டு விழா படிப்பகம் இருக்கின்றன. காந்திஜி அந்த ஊருக்கு வந்திருந்தார் என்ற ஞாபகத்திற்காகவாவது அவைகள் இருக்கக்கூடாதா? அதற்காக அந்த சிலை

வைக்கப்பட்டிருப்பது பாவமா? பொன் விழா மண்டபத்திற்குத் தீயிட்டு, கண்ணாடிகளை உடைத்தார்கள். அதை நீங்கள் வந்து பார்க்க வேண்டும். தீயிட்டார்கள், அப்பொழுது போலீசார் பக்கத்தில் இருந்தார்கள். ஆனால் தீ வைத்தவர்களின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

இதைப்போல் காங்கிரஸ் அலுவலகம் தாக்கப்பட்டது, மற்றக் கட்சிகளின் கொடிகள் அகற்றப்பட்டன. ஸ்ரீவில்லிப்புத்தூரில் செயற்குழுக் கட்டடம் தாக்கப்பட்டது. மாதவன் அவர்கள் அங்கு வந்திருந்தபோது அதைப் பார்த்திருந்தால் நன்றாகயிருந்திருக்கும். அவர் பார்பர் ஷாப்பை சென்று பார்த்தார். பிராந்திக் கடையைச் சென்று பார்த்தார். அதோடு அவரது அலுவல்கள் முடிந்து விட்டன என்று அவர் வந்துவிட்டார்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எந்த பார்பர் ஷாப் என்று தெரியவில்லை. அப்படி யாரையும் சென்று நான் பார்க்கவில்லை. பிராந்திக் கடை என்று சொல்கிறார்கள். ஒருவேளை முன்னாள் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மகன் வைத்திருக்கிற பிராந்தி ஷாப்பை நினைவுபடுத்துகிறார்கள் என்று நினைக்கிறேன். அங்கொன்றும் நான் செல்லவில்லை. அதை வைத்திருக்கிறவரின் தகப்பனாரை அவர் வீட்டில் சென்று சந்தித்தேன்.

திரு. க. சுப்பு: அது சாராயக் கடை, பிராந்தி ஷாப் அல்ல.

THIRU R. PONNAPPA NADAR: All these allegations should be avoided.

இப்படி இன்னிலுவேட் செய்வது நல்லதல்ல.

திருமதி த. ந. அனந்தநாயகி: தகப்பனார் ஒரு கட்சியாக இருக்கலாம், மகன் வேறு கட்சியாக இருக்கலாம். மகன் சாராயக் கடை வைத்திருக்கலாம்.

திரு. க. சுப்பு: அவர் பேரன் கடை. அமைச்சர் வந்து பார்த்த சாராயக் கடைக்கு ஒரு பிரமுகரும் கூட வந்திருந்தார்கள். நான் கூட வீட்டில் இருந்தேன். இந்தச் செயற்குழுக் கட்டடம் மூன்று மணி நேரமாகத் தாக்கப்பட்டது. போலீசும் கூட இருந்தது. மூன்று மணி நேரம் ஒரு அலுவலகம் தாக்கப்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம், காங்கிரஸ் கட்சி அலுவலகம் இவையெல்லாம் தாக்கப்பட்டிருக்கின்றன போலீஸ் முன்னிலையில். தாக்கியவர்கள் அந்த ஊர்க்காரர்கள், அவர்கள் அங்கேயே இருக்கிறார்கள். போலீஸ் அவ்வளவையும் பார்த்துக் கொண்டிருக்கிறது. எங்கே சட்டம்? எங்கே ஒழுங்கு? சட்டம், ஒழுங்கு, அமைதி இவை எந்த அளவிற்கு பாதுகாக்கப்பட்டிருக்கின்றன என்பதை நெஞ்சில் கை வைத்து நாங்கள் சொல்வதற்கு முன்பு நீங்களே சொல்லுங்கள். அதை உங்கள் மனச்சாட்சிக்கு விட்டு

விடுகிறேன். கட்டடங்கள் தகர்க்கப்பட்டிருக்கின்றன. கொடிகள் எரிக்கப்பட்டிருக்கின்றன. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களின் வீடு தாக்கப்பட்டது, எங்கள் வீடு தாக்கப்பட்டது, எங்கள் அலுவலகம் தாக்கப்பட்டது. ஆள்கள் இல்லாத நேரத்தில் தாக்குவது சரியா. சட்டப்படி அதற்காக யாரையாவது கைது செய்திருக்கிறீர்களா என்று கேட்கிறேன். இருந்தாலும் இங்கு சட்டம் இருக்கிறது, ஒழுங்கு இருக்கிறது என்பதை நம்பித்தான் ஆகவேண்டும், ஏனெனில் இங்கு நீங்கள் 183 பேர்கள் இருக்கிறீர்கள், ஆளும் கட்சியினரோடு தோழமைக் கட்சியினரும் இருக்கிறார்கள். ஆகவே அப்படி இருப்பதாக நம்பித்தானாக வேண்டும். எவ்வளவு பேர்களை கைது செய்திருக்கிறீர்கள் அதற்காக என்று கேட்கிறேன்.

இரண்டு குழுக்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டு சேதம் ஏற்பட்டிருக்கிறது என்றால் ஏற்றுக் கொள்ளலாம். 5-ம் தேதி பந்தில் கடைகள் அடைக்கப்பட்டன. ஆதரிப்போர் இருக்கலாம், இல்லாமல் இருக்கலாம். போராட்டத்தை ஆதரிக்கிற கட்சியைச் சேர்ந்தவர்களின் கடைகள் குறி வைக்கப்பட்டு தகர்க்கப்பட்டிருக்கின்றன. ஜாலியன்வாலாபாக் என்று சொல்லமுடியாது, அங்கு 106 பேர்கள் சுடப்பட்டார்கள், இங்கு பெத்தநாய்க்கன்பாளையத்தில் அந்த அளவிற்கு இல்லை. கடைகள் பல சூறையாடப்பட்டிருக்கின்றன, வீடுகள் பல சூறையாடப்பட்டிருக்கின்றன. மூடப்பட்ட கடைக்காரர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப் போவதாக ஒரு மிரட்டல். ஹிட்லர் ஆட்சியில் பாராளுமன்றக் கட்டடத்திற்கு தீ வைக்கப்பட்டு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் மீது வழக்கு தொடுத்ததாக சரித்திரத்தில் படிக்கிறோம். இங்கு தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இரண்டு தரப்பிலும் அங்கு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வழக்குகள் எல்லாம் வாபஸ் வாங்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. தொடர்ந்து இரு தரப்பிலும் நடவடிக்கை எடுக்கலாமா, விட்டு விடலாமா?

திரு. க. சுப்பு: முதல் அமைச்சர் அவர்களது தகவல் சரியல்ல. கைது செய்ததாக ரிக்கார்ட் செய்யச் சொல்லி கையெழுத்து வாங்கச் சொல்லியிருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் அவர்களுக்கு சரி என்று நினைப்பதைச் செய்யலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இரு தரப்பிலும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள், இன்னின்ன செக்ஷன்ஸ்படி என்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. நான் கேட்பது அந்த வழக்குகளை தொடர்ந்து நடத்தலாமா அல்லது விட்டு விடலாமா?

திரு. க. சுப்பு : கைது செய்யப்பட்டதாக ரிக்கார்ட் செய்யப்பட்டிருக்கிறது. நடவடிக்கை எடுக்காதது மட்டுமல்ல, சம்பவங்கள் நடந்தபோது ஒருவராவது கைது செய்யப்பட்டிருக்கிறார, அப்படி ஒருவரையாவது சுட்டு விரல் கொண்டு சுட்டிக்காட்ட முடியுமா. இப்போது டிபென்ஸுக்காக கேஸ்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. வேண்டுமென்றே வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. இப்படிச் செய்வதால் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளலாமே தவிர நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது. ஸ்ரீவில்லிபுத்தூருக்கு சட்ட அமைச்சர் வந்திருந்தபோது, சட்டத்தைப் பாதுகாக்கக்கூடிய அமைச்சர் வந்திருந்தபோது கடைகளைத் தகர்த்த நபர்கள் அனைவரோடும் அவர்கள் வந்தார்கள். கடைகளை சூறையாடியவர்களோடு, வீடுகளை சூறையாடியவர்களோடு அமைச்சர் ஊர்வலம் வருகிறார் என்றால் போலீஸ் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்களா. போலீஸ் சூப்பிரன்டென்டென்ட் சொல்கிறார்கள், போலிசை பாராட்டுவதாக. ஏதோ நடந்து விட்டது என்று சொல்லுங்கள், ஆனால் ஒன்றுமே நடக்கவில்லை என்று சொல்ல முடியாது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திராவிட முன்னேற்றக் கழக கட்சிக்காரர்கள் கடைகள் நொறுக்கப்பட்டனவா இல்லையா?

திரு. கே. டி. கே. தங்கமணி : காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சார்ந்தவர்களின் கடைகள் எவ்வளவு நொறுக்கப்பட்டன? ஸ்ரீவில்லிபுத்தூரில் கம்யூனிஸ்ட் கட்சி ஆபீஸ், காங்கிரஸ் (ஓ) ஆபீஸ், இந்திரா காங்கிரஸ் ஆபீஸ் பூராவும் நொறுக்கப்பட்டதுண்டா, இல்லையா ? அம்மாதிரி வேறு சம்பவங்கள் ஸ்ரீவில்லிபுத்தூரில் நடந்திருக்கிறதா இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொன்னால் நலமாகயிருக்கும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நன்றி. இருதரப்பிலும் செய்திருப்பதாக முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருவரும் செய்திருக்கிறார்கள். இருவர் மீதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவை இருப்பது சரியா அல்லது விட்டுவிடலாமா?

திரு. கே. டி. கே. தங்கமணி : தாக்கப்பட்டிருப்பதை அவர்கள் போய் பார்த்தார்களா என்பதுதான் கேள்வி. ஸ்ரீவில்லிபுத்தூரில் எந்த சட்டமன்ற உறுப்பினராலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவராலும் சரி இன்று கூட போய் பார்த்தால், மனிதத்தன்மை கொஞ்சமாவது இருக்குமென்று சொன்னால், இந்த அளவிற்கு காட்டுமிராண்டித்தனமான அளவிற்கு நடந்திருக்கிற விஷயங்களைக் கண்டிக்காமல் இருந்தால் அவர்களை உண்மையில் சாதாரண அளவிற்குக் கூட மனிதப் பண்பு இல்லாதவர்களாகத்தான் கொள்ளமுடியும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மணி, சாமி என்று கலை நிகழ்ச்சிகள் நடத்துகிறவர்கள், மிச்சப்படுகிற பணத்தில் 8,000 ரூபாய்க்கு ஒரு வீடு கட்டி அது அடியோடு அழிக்கப்பட்டு நொறுக்கப்பட்டு அவர்கள் ஓட்டலில் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள், காங்கிரஸ், கம்யூனிஸ்ட்கள் செய்த காரியத்தினால், ராஜபாளையத்தில்.

திரு. கே. டி. கே. தங்கமணி : போலீஸ் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் உள்ள கடை சூறையாடப்பட்டு சாமான்கள் எல்லாம் கிணற்றில் போடப்பட்டிருப்பது நியாயமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இரு தரப்பிலும் கைதுசெய்யப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. வாபஸ் வாங்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. தொடர்ந்து நடத்த அனுமதிக்கப்பட்டால் நடத்தலாம், தாராளமாக நடத்தலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : எந்தெந்தக் கேஸகளை வாபஸ் வாங்கவேண்டுமென்று தெளிவுபடுத்தியிருக்கிறோம். மறியல் செய்தவர்கள், தடுப்புக் காவல் சட்டப்படி கைது செய்யப்பட்டவர்கள் ஒரு அம்சம். போலீஸ் படு கொலைகள் நடந்திருக்கின்றனவே அதற்கு எதிர்ப்பாக பல பேர்கள் மீது கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன, அது ஒரு அம்சம். இந்த விவகாரங்கள் தவிர ஆபீஸ்களை தாக்கியவர்கள்மீது, வீடுகளை தாக்கியவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டு அதை நடத்தியதற்கு நியாயம் கற்பிப்பதற்காக கேஸ்கள் போடப்பட்டுள்ளதை, அப்படிப்பட்ட கேஸ்களை வாபஸ் வாங்கவேண்டுமென்று சொன்னோம். ஆபீஸ்களைத் தாக்கியவர்கள், வீடுகளைத் தாக்கியவர்கள் இவர்களில் ஆளும் கட்சிக்குச் சாதகமாக இருக்கக் கூடியவர்கள் யாராவது கைது செய்யப்பட்டார்களா ? யார் மீதாவது கேஸ் போடப்பட்டதா ? எங்களிடம் லிஸ்ட் இருக்கிறது. புகார் கொடுக்கப்பட்டுள்ளது. கம்ப்ளெயின்ட்ஸ் கீழேதான் போடப்பட்டிருக்கின்றன. யார் மீதும் நடவடிக்கை எடுத்ததாகவோ அல்லது கைது செய்யப்பட்டதாகவோ தெரியவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வழக்குகள் வாபஸ் பற்றி விளக்கம் தந்ததற்கு நன்றியுள்ளவனாக இருக்கிறேன். எந்தெந்த வழக்குகள் வாபஸ் வாங்க வேண்டும் என்று பட்டியல் கொடுத்திருக்கிறார்கள். துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமான வழக்குகள், மறியல் சம்பந்தமான வழக்குகள் இவை வாபஸ் வாங்கப்பட வேண்டுமென்று உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது தவிர ஆபீஸ் இடிக்கப்பட்டது, வீடு இடிக்கப்பட்டது போன்ற இப்படிப்பட்ட வழக்குகள் தொடர்ந்து நடைபெறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஏற்கனவே கேஸ்கள் வாபஸ் வாங்கப்பட்டன என்று சொல்லி பலரைத் தேடி தொந்தரவு பண்ணுகிறார்கள் மானமதுரையில் என்பது தெரியும். எங்கள் பேரில் கேஸ் போட்டு நடத்துவதைப் பற்றி எந்த விதமான பயமும், அச்சமும் எங்களுக்கு இல்லை.

திரு. ச. சுப்பு: முதலமைச்சர் அவர்கள் நடுநிலைமையில் இருந்து சொல்ல வேண்டும். ஒரு கட்சியாக நின்று கொண்டு பேசக்கூடாது. கைது செய்து விட்டதாக இப்போது கையெழுத்து வாங்குகிறார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரும்போது சந்திக்கத் திறமையாகச் செய்திருக்கிறார்கள். அந்தத் திறமையைப் பாராட்டுகிறேன். நடுநிலைமையில் நின்று உண்மையில் தாக்கப்பட்டவர்கள் யார், பாதிக்கப்பட்டவர்கள் யார் என்பதை மனசாட்சியோடு தெரிந்து கொள்வதற்கு விசாரணை செய்ய முன்வரவேண்டும். ராஜபாளையத்தில் வீட்டை இடித்துவிட்டதாகக் கூறினார்கள். அந்த நண்பர்கள் இந்தப் போராட்ட காலத்தில் மக்கள் மத்தியில் பேசியதும், பாடல்கள் பாடியதும் எந்த அளவுக்கு இருந்தது என்பதை ரகசியப் போலீஸ்காரர்களை வைத்து நீங்களே பாருங்கள். அவர்களைப்போய் உங்கள் கட்சிப் பாடகர்கள் என்று ஏற்றுக் கொண்டிருக்கின்றீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்கள் அப்படிப் பாடிய காரணத்தால் அந்த வீடு இடிக்கப்பட்டது என்பதை ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள். நன்றி.

திரு. க. சுப்பு: அவர்கள்தான் உங்கள் இயக்கப் பாடகர்கள் என்று நீங்கள் ஏற்றுக்கொண்டால் அதற்காக நன்றி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எங்களுக்குக் கட்சிகளைப் பற்றித் தெரியும். எவ்வளவு நன்றியுடையவர்கள் எந்தெந்தக் கட்சியில் இருக்கிறார்கள் என்று தெரியும்.

திரு. க. சுப்பு: நம்முடைய நன்றி சாதாரண மக்களை விட்டு விட்டு வேறு பக்கத்தில் போய்விட்டது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். திடீரென்றாக ஆட்சிக் கட்டிலில் இருப்பதற்காக எப்போது வேண்டுமானாலும் கை தூக்க வேண்டுமென்றால் அதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தேர்தலில் மட்டுமல்ல, என்ன வாங்கிக் கொண்டீர்கள் என்பதும் தெரியும்.

திரு. க. சுப்பு: வாங்கிக் கொண்டவர்கள் கொடுத்தால் திருப்பி வாங்கிக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீங்களே வாங்கிக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. க. சுப்பு: இந்தக் குற்றச்சாட்டு கடுமையான குற்றச்சாட்டு. நான் என்ன வாங்கிக் கொண்டேன்? யாரிடத்தில் வாங்கிக் கொண்டேன்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கம்யூனிஸ்டு கட்சிக்கு ஆதரவு மாத்திரமல்ல; பணமும் கொடுக்கப்பட்டது.

திரு. க. சுப்பு: என்னுடைய உரிமையைப் பாதுகாக்க வேண்டும். கம்யூனிஸ்டு கட்சியைப் பற்றிச் சொல்லுவதற்கு நான் பொறுப்பாளி ஆக முடியாது. நான் என்ன வாங்கிக் கொண்டேன்? மற்றவற்றுக்கு என்னைப் பொறுப்பாளியாக்க முடியாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உங்கள் தொகுதிக்காக உங்கள் கட்சியின் சார்பில் வாங்கப்பட்டது.

திரு. க. சுப்பு: அதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். ஆதாரம் ஏதாவது இல்லாவிட்டால் வாபஸ் வாங்கவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இல்லாமல் வரமாட்டேன். (ஆரவாரம்.)

புதுக்கோட்டை தொகுதிக்கு ஏ. ஆர். சுப்பையா, எம்.எல்.ஏ.வுக்காக 5,000 ரூபாய் திராவிட முன்னேற்றக் கழகத்திடமிருந்து வாங்கப்பட்டது.

"திரு. நாராயணன், முகவை மாவட்ட கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்,

1971 பொதுத் தேர்தலில் ராஜபாளையம் தொகுதியில் எங்கள் கட்சித் தேர்தல் செலவுக்காக கழகத்திடமிருந்து ரூ. 5,000 மட்டும் பெற்றுக்கொண்டேன்.

அன்புள்ள,
(ஒ—ம்) நாராயணன்"

THIRU K. T. K. THANGAMANI: Sir, I want to know the propriety.

தேர்தல் காலத்தில் அவர்கள் சொல்ல வேண்டும்—எந்தெந்தக் கட்சியிடமிருந்து வாங்கினார்கள் என்று. ஏழு கட்சிக் கூட்டணி இருந்தது. இந்திரா காங்கிரஸ் இருந்தது; இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி இருந்தது. ஒவ்வொரு கட்சியிடமிருந்தும் திராவிட முன்னேற்றக் கழகம் வாங்கியதா அல்லது வாங்காமலே இருந்தார்களா? தாங்கள்தான் எல்லோருக்கும் கொடுக்கக்கூடிய அன்னதாதா

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 ஆகஸ்ட் 1

என்ற நிலைமை ஏற்படுகிறது என்பதில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் பொதிந்திருக்கிறது. தங்களுக்கு இருக்கக்கூடிய மெஜாரிடியின் மூலமாக எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றில்லை. ஆதாரத்தைக் காட்டுகிறேன், மறுத்து விடுங்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். கட்சிகளுக்குள்ளே நன்றிப் பிரச்சினை பேசினால் ஒவ்வொரு கட்சியும் அப்படிப் பேசிக் கொண்டிருக்கலாம். கோவையில் திராவிட முன்னேற்றக் கழக நகரச் செயலாளர், வட்டச் செயலாளர் கையெழுத்திட்டு எங்களுடைய கட்சியிலிருந்து, என்னிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டதற்கு ஏசிது முதலமைச்சர் அவர்களுக்குத் தேவையானால் எவ்வளவு வேண்டுமானாலும் காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுப்பு அவர்கள்தான் இந்தப் பிரச்சினையைக் கிளப்பியதே . . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நண்பர் சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். அந்தந்தத் தொகுதியில் வேலை செய்தவர்களுக்கு அவர்களுடைய செலவுகளுக்காகக் கொடுத்தது வேறு, தொகுதிச் செலவுக்காகக் கொடுக்கப்பட்டது வேறு. சுப்பிரமணியம் அவர்கள் கேட்டதாகச் சொல்லவில்லை. அவர்கள் வாங்குகின்ற அளவுக்கும் இல்லை, கொடுக்கவும் இல்லை. வாங்கியவர்களுடைய கையெழுத்து இருப்பதைச் சொன்னேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: கம்யூனிஸ்டு கட்சி திராவிட முன்னேற்றக் கழகத்திடம் பணம் வாங்கித்தான் பிழைக்க வேண்டுமென்ற நிலைமையில் இல்லை என்பதை கட்சியின் தலைவர் என்ற முறையில் தெரிவித்துக் கொள்கிறேன். யார் என்ன வாங்கினார்கள் என்பதெல்லாம் இருக்கட்டும். தேர்தலில் ஏழு கட்சிக் கூட்டணி இருந்தது. அதிலே ஒரு கட்சி ஆட்சிக்கு வந்த நிலையில் எந்த அளவுக்கு மற்றக் கட்சிகளைக் கலந்து கொண்டு கொள்கைகளை வகுக்கிறார்கள்? இந்திரா காங்கிரஸ் கட்சியை வெளியேற்றினார்கள். யாரைக் கலந்து கொண்டு செய்தார்கள்? கடைசியில் மற்றக் கட்சிகளை வேட்டை நாய்கள் என்று சொல்லுகிறார்கள், விஸ்வாசம் கிடையாது என்று கூறுகிறார்கள். இதுதான் அரசியல் பண்பா? அவர்கள் கட்சியை வேண்டுமென்றால் குடும்பப் பாசத்தோடு வளர்த்திருக்கலாம். எங்களுக்கு குடும்பப் பாசம் எல்லாம் இல்லை. கொள்கை அடிப்படையில்தான் எங்கள் கட்சி நிற்கும். தேர்தல் காலத்தில் நடந்த இப்பேர்ப்பட்ட விஷயங்களைப் பெரிதுபடுத்திச் சொல்லுவது, அதை இந்தச் சட்டமன்றத்தில் உபயோகப்படுத்துவது முதலமைச்சர் போன்றவர்களுக்கு அழகல்ல என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எனக்கு என்ன அழகாக இருக்க வேண்டுமென்பதை நிர்ணயிப்பது தங்கமணி அவர்கள் அல்ல; பொதுமக்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். நான் எப்படி நடக்க வேண்டுமென்பதை நானே கூட நிர்ணயிப்பதில்லை. கட்சியானது கட்டளையிடுகிறது, கட்சியின் கட்டளைகளுக்குத் தலைவணங்கி நிற்கிறேன். நான் எப்படி இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கும் பொறுப்பு தங்கமணி அவர்களுக்கு இல்லை. தவறான காரியங்களாக வெளியில் எவ்வளவோ பேசினார்கள். 'என்ன வாங்கினேன்' என்று கேட்டதால் முதலமைச்சர் என்ற பொறுப்போடு கூற வேண்டுமென்று கேட்டதால், ஆதாரம் காட்டினேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, in this discussion unnecessary details are introduced and it is not fair and just that what had happened during the time of elections should be divulged by any of the parties which formed the United Front. I think it is inappropriate and it is better that we should not indulge in such tactics.

Also I want to bring to the notice of the Chair that approbation and misapprobation are taking place even in the visitors' gallery and that also should be prevented so that this House could maintain decency and decorum which it deserves. I think all Opposition Parties will stick to this.

திரு. எம். சுரேந்திரன்: இந்தச் சர்க்கார் மீது கடுமையான குற்றச்சாட்டாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக்கிறது. தனி நபர்கள் மீது இருக்கிற பிரச்சினைகள் மீது திசைதிருப்பும் முறையைக் கையாள்வது அரசாங்கத்திற்கு நல்லதல்ல. இந்தச் சபையில் கொள்கை ரீதியாக, முறையாக, குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்வது தான் சரியானதாக இருக்குமே தவிர, இந்தமாதிரி முறைகளைக் கையாள்வது சரியல்ல.

MR. SPEAKER: There is no point of order.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டுமென்று சொன்னதிலிருந்து இதெல்லாம் வந்தது. தேர்தலிலே வெற்றி பெற்றதற்குப் பெரும்பான்மையான பொறுப்பு திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களுக்கு உண்டு. அதை நான் மறுத்துச் சொன்னது கிடையாது. முதலமைச்சர் அவர்களும், எம்.ஜி.ஆர். அவர்களும் என்னுடைய தொகுதிக்கு வந்தது நான் ஜெயித்ததற்குக் காரணம் என்று பகிரங்கமாக ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆதாரத்தோடு சொல்ல வேண்டுமென்று

சொன்னதற்கு 5,000 ரூபாய் கொடுத்ததாகச் சொன்னார்கள். அவர்கள் பணமாகக் கொடுத்திருக்கலாம், எங்கள் கட்சித் தோழர்கள் வேலை பார்த்து இருக்கலாம். அப்படிக் கொடுத்ததற்காக இந்த அரசாங்கத்திற்கு நன்றி உடையவர்களாக இருக்க வேண்டுமென்றால் கொள்கை பூர்வமாகக் கூட எதிர்ப்பைத் தெரிவிக்காமல் ஆதரிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்களா? அப்படி முதலமைச்சர் அவர்கள், உலக மகா கவிஞர் அவர்கள், எதிர்பார்ப்பது சரிதானா? அப்படியானால் மதுரையில் நடைபெற்ற மாநாட்டுக்கு எங்கிருந்தெல்லாம் நிதி வசூல் செய்யப்பட்டது?

ஜி. ஆர். கோவிந்தராஜுலு, டெக்ஸ்மோ ராமசாமி, டி.பி.எப். துரைசாமி, மெட்ராஸ் போர்ஜிங்ஸ், ராமகிருஷ்ண ஸ்டீல்ஸ், இந்தியா சிமெண்ட்ஸ்-சங்கரி, மேட்டூர் கெமிகல்ஸ், சேஷசாயி பேப்பர் போர்டு, வசந்தா மில்ஸ், சிங்காரப்பா, வெங்கடசாமி நாயுடு, மால்கோ, ஏ.சி.சி., ஆஸ்பெஸ்டாஸ், பிரிமியர் மில்ஸ், மருதமலை முருகன் டெக்ஸ்டைல்ஸ் ஆகியவர்களிடமிருந்து நிதி வசூல் செய்திருக்கிறார்கள். கோவையில் ஒவ்வொரு சினிமா தியேட்டர் அதிபர்களிடமிருந்தும் 250 ரூபாய் வாங்கி இருக்கிறார்கள். அதற்கான ரசீதுகளை எல்லாம் என்னால் காட்ட முடியும். அப்படி எல்லாம் வாங்கியதன் காரணமாகத்தான் சினிமா தியேட்டர்களை தேசியமயமாக்கும் கொள்கை நிறைவேற்றப்படாமல் இருக்கின்றதா? இந்தமாதிரி நன்கொடை பெற்ற காரணத்தால் இந்தத் தொழில் அதிபர்களுக்கெல்லாம் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டுமென்றால் அது சாதாரண மக்களிடத்தில், ஏழை மக்களிடத்தில் நன்றியுடையவர்களாக இருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டாது.

சன் பேப்பர் மில், அமைச்சர் ஆதித்தனார் அவர்கள் குடும்பத்திற்குச் சொந்தமானது. அவர்கள் நான்கு லட்சம் ரூபாய் மின்சாரக் கட்டணம் பாக்கி செலுத்த வேண்டியிருக்கிறது. என்ன செய்துவிட்டார்கள்? பேப்பர் விற்கவில்லை. ஸ்டாக் இருந்துகொண்டிருக்கிறது. ரூ. 4 லட்சம் கொடுபடாமல் பாக்கியிருக்கிறது. அதைப்போல ரூ. 71 லட்சம் ஸாகூர் ஜெயினிடத்தில் பாக்கியிருக்கிறது. ரூ. 40 லட்சம் தள்ளிக்கொடுத்து விட்டார்கள். பாக்கிக்கு நீண்ட காலத் தவணை கொடுத்திருக்கிறார்கள். இதையெல்லாம் எடுத்துச் சொன்னால் கேட்கமாட்டார்கள். விவசாயிகள் என்ன ஜமீன்தார்களா? அவர்களிடத்தில் கெடுபிடி வசூல் செய்வது மிகவும் பொருத்தமற்றது. இனிமேலாவது இந்த ஆட்சியில் இருக்கக் கூடியவர்களும், முதல் அமைச்சர் அவர்களும் இதை நிதானமாகப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும்.

11 அம்சக் கோரிக்கைகளை வைத்துப் போராடினார்கள். மே மாதம் 19-ம் தேதியிலிருந்து ஜூலை மாதம் 19-ம் தேதி வரை 60 நாட்கள் போராடினார்கள். பிறகு பிரச்னைகள் பேசித் தீர்க்கப்பட்டு ஒரு ஒப்பந்தம் எற்பட்டது என்பதை அரசு

மனதில் கொள்ளவேண்டும். மீண்டும் மீண்டும் மிட்டா மிராசுதார்கள், பட்டதாரர்கள் என்று பேசிக்கொண்டிருப்பதில் என்ன அர்த்தம்? அரசு ஒப்பந்தத்தின்படி ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய கொள்கையை அமல் நடத்துவதில் அக்கறை செலுத்தவேண்டும். போலீஸ்காரர்களும் அராஜகர்களோடு ஒன்றாகச் சேர்ந்துகொண்டு பொது மக்களுடைய உயிருக்கும் உடைமைக்கும் ஊறு விளைவிக்கக்கூடாது. பல அராஜகங்கள் நடைபெறுகின்றன.

சூற்றச்சாட்டை கவர்னர் அவர்களிடத்தில் கொடுத்தாலும் சரி, மத்திய அமைச்சரிடத்தில் கொடுத்தாலும் சரி, மாநில அமைச்சரிடத்தில் கொடுத்தாலும் சரி, அதிலே பொதுவாக இருக்கக்கூடிய காமன் ஸீபேக்டர் போலீஸ் ரௌடி எலிமெண்டுகளோடு சேர்ந்துகொண்டு இப்படிச் செய்கிறார்கள், இது சரியா என்பதைப் பரிசீலித்துப் பார்க்கவேண்டும். இப்படிச் செய்தோம், அப்படிச் செய்தோம் என்று சொல்வதில் என்ன அர்த்தம்? இரண்டு தரப்பினர் மீதும் வழக்குப் போட்டிருக்கிறோம் என்றால் என்ன அர்த்தம்? மாவட்டச் செயலாளர், கம்யூனிஸ்டு செயலாளர், காங்கிரஸ்காரர் எல்லோர் மீதும் வழக்குப் போட்டிருக்கிறோம் என்று எதிரும் புதிருமாக வழக்கு சிருஷ்டித்துக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அப்படிச் செய்வது பாசிஸ்டு மெத்தேடு தான். இட்லர் ஆட்சியில் கூட அப்படிச் செய்ததில்லை. ஏதோ முன்பு செய்தது தவறு என்றால், பரவாயில்லை, வருந்துகிறோம் என்று சொல்லிவிட்டு, ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதில் அரசு அக்கறை செலுத்தவேண்டும். விவசாயிகள் அத்தனை பேர்களும் ஏதோ சமூக விரோத சக்திகள் என்று சொல்வதில் அர்த்தமேயில்லை. அதில் வழக்கறிஞர்களும் இருக்கிறார்கள், நீதிபதிகளின் குழந்தைகளும் இருக்கிறார்கள், மாணவர்களும் இருக்கிறார்கள், ஆசிரியர்களும் இருக்கிறார்கள், இப்படிப்பட்டவர்களையெல்லாம் சமூக விரோத சக்திகள்....

THIRU M. A. LATHEEF : On a point of order.

THIRU K. SUPPU : I am not yielding. The point of order is a guise.

THIRU M. A. LATHEEF : I am on a point of order.

THIRU R. PONNAPPA NADAR : The member should address the Chair.

THIRU K. SUPPU : Where is the point of order?

THIRU M. A. LATHEEF : You must protect my right, Sir.

MR. SPEAKER : Both hon. Members may first resume their seats.

பாயின்டு ஆப் ஆர்டர் இருந்தால் மட்டும் லத்தீப் அவர்கள் பேசலாம். கொஞ்சமாவது அது பாயின்டு ஆப் ஆர்டருக்குப் பொருத்தமாக இருக்க வேண்டும். சபையின் நடவடிக்கைகளை அப்ஸ்ட்ரக்ட் செய்வதற்காகப் பேசுவதாக இருக்கக்கூடாது. பாயின்டு ஆப் ஆர்டர் இருந்தால் என்ன என்று சொல்லுங்கள்.

THIRU M. A. LATHEEF : The hon. Member has given a wrong information; so far as my statement is concerned, when I said anti-social elements took part in some agitation in Pedda-naickenpalayam, I meant anti-social elements alone and nothing else. I was very careful to say that in incendiarism and anti-social acts, the farmers did not take part. That was my statement which is on record. But he is twisting my statement and says that I said something about farmers. I still say that I did not say anything about farmers. I am entitled to protect my right.

THIRU K. SUPPU : Where is the point of Order?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்டு ஆப் ஆர்டர் அல்ல. இந்த மாதிரி உறுப்பினர் அவர்கள் விளக்கம் சொல்லவேண்டுமானால், பேசிக் கொண்டிருக்கிற உறுப்பினர் முடித்தபிறகு இப்படி அவர் பேசும்பொழுது சொன்னார் என்று கூறி அதற்கு சாந்தமாக விளக்கம் கொடுப்பதுதான் பொருத்தமானதாக இருக்கும்.

திரு. துரைமுருகன் : இந்தச் சபையிலே பாயின்டு ஆப் ஆர்டர் என்று சொல்லிவிட்டு எழுந்திருந்து பேசினால், அது பாயின்டு ஆப் ஆர்டர் இல்லையென்றால் அந்த உறுப்பினருக்கு தகுந்த தண்டனை கொடுக்கவேண்டும். லத்தீப் அவர்கள் எழுந்திருக்கக் கூடாது என்று சொல்வதில் பயன் இல்லை. எல்லோரும் தான் பாயின்டு ஆப் ஆர்டர் என்று சொல்லி எழுந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதை அனுசரிக்கவேண்டும். சுப்பு அவர்கள் இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடவேண்டும்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, நேரத்தைக் கொஞ்சம் கூட்டிக் கொடுங்கள். வன்முறைச் செயல்கள் தமிழகத்தில் இடம் பெற்றுவிட்டது, சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று ஆளுநரிடத்தில் விலாசம் தெரியாதவர்கள் விண்ணப்பம் கொடுக்கக்கூடாது என்ற மனப்பான்மை மாறவேண்டும். விலாசம் இல்லாதவர்களின் விலாசத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்குத்தான் நம் நாடு சுதந்திரம் அடைந்தது. ராஜா ஸர், ராவ் பகதூர்,

திவான் பகதூர்கள்தான் கவர்னரைப் பார்க்கலாம் என்றிருந்தது நிலைமை அந்தக் காலத்தில். ஆனால் சுதந்திரத்திற்குப் பிறகு தெருவிலிருக்கும் குப்பனும், சுப்பனும் கூட கவர்னரைப் பார்த்து விண்ணப்பம் கொடுக்கலாம். விலாசம் இல்லை, பிளாட்பாரத்தில் இருக்கிறான் என்றால் அவனிடம் விண்ணப்பம் வாங்கக் கூடாதா கவர்னர் அவர்கள்? கவர்னர் அவர்கள் பிளாட்பாரத்திற்குப் போய் மனுக்களை வாங்கவேண்டும். அந்த நிலைமை இந்த நாட்டில் உருவாக வேண்டும். அதற்காகத்தான் நாம் சுதந்திரம் பெற்றிருக்கிறோம். இந்த ஆண்டு வெள்ளி விழா கொண்டாடப்போகிறோம். (மணி அடிக்கப்பட்டது.)

இறுதியாக ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். செய்த தவறுகளை தவறு என்று ஒத்துக்கொண்டால் பரவாயில்லை. இனிமேலாவது அம்மாதிரி நடக்காமல் பார்த்துக்கொள்கிறோம் என்றாவது சொல்லவேண்டாமா? 15 பேர்கள் இறந்திருக்கிறார்கள் என்றால், முதுகுளத்தூரில் சுடவில்லையா என்று கேட்பது? வரக்கூடிய ஒவ்வொருவரும் இப்படி கேட்டுக்கொண்டே போவதா? காங்கிரஸ்காரர்கள் முதுகுளத்தூரில் சுடவில்லையா? தி.மு.க. வினர் பெத்தநாயக்கன்பாளையத்தில் சுடவில்லையா என்று வரக்கூடியவர்கள் சுடுவதற்கு உரிமையைக் கேட்பதா? அவர்கள் சுட்டார்கள், ஆகவே, நாங்களும் சுடுவோம் என்று உரிமை கேட்பதா? சபையில் உள்ள 183 பேர்களும் சேர்ந்துகொண்டு சுடுவதற்கு உரிமை வேண்டும், அவர்கள் சுட்டார்கள், என்று தீர்மானம் போடுங்களேன்? அதேமாதிரி ஏதேதோ கற்பனை செய்துகொண்டு மதிப்பிற்குரிய ஆசிரியர் திரு. காவேரிமணியம் அவர்கள் ஏதோ கம்யூனிஸ்டுகள் திருடிவிட்டதாகச் சொன்னார்கள். அதை நிரூபிக்க முடியுமா? திருடு என்றாலும் மதுரை பெரிய மனிதர் முத்துவுக்குத் தெரியாமல் நடந்துவிட முடியுமா? அதை நிரூபிக்க முடியுமா?

திரு. கே. கந்தசாமி : ஆன் எ பாயின்டு ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேசும்பொழுது மதுரையில் கௌரவமிக்க மேயருக்குத் தெரியாமல் எதுவும் நடந்துவிட முடியுமா என்று பேசிகிறபொழுது, அது நல்ல வாதமாக இருந்தாலும், அந்த வாதத்திலே திருடு கூட என்று சொல்கிறார்கள். அது ஆட்சேபனைக்குரியது. அதை நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : நான் சொல்வதைத் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். மதுரையில் இருக்கக்கூடிய ரொம்பப் பெரிய மனிதர் முத்து அவர்கள், அவருக்குத் தெரியாமல் எதுவும் நடந்து விடுமா என்று தான் கேட்டேன். கம்யூனிஸ்டுகள் களவாடினார்கள் என்று மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்கள் கடுமையாகக் குற்றம் சாட்டினார்கள். கம்யூனிஸ்டுகள் திருடினார்கள்

என்றால், அதை நிரூபிக்க முடியுமா, யார் என்றாவது சுட்டிக்காட்ட முடியுமா? ஆதாரமில்லாமல் நண்பர் அவர்கள் இப்படிப் பேசுவது முறையா? முதுகுளத்தூரில் சுட்டார்கள் என்றால் அது துப்பாக்கி, பெத்தநாயக்கன்பாளையத்தில் சுட்டார்கள் என்றால் அது சோளத் தட்டையா? தவறு செய்யட்டும், தவறு என்று தெரிந்தவுடன் அதை ஒத்துக்கொள்ளவேண்டும். அப்படியில்லாமல், ஒரு கேள்வி போட்டால், அதற்கு எதிர்க் கேள்வி போடுவதாலா பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்? ஒப்பந்தம் ஏற்பட்டவுடன் அதை அரசாங்கம் அக்கறையோடு அமல் நடத்தும் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள். 11 அம்சக் கோரிக்கைகள் ஒத்துக்கொள்ளப்பட்டன. ஆனால், இன்றைக்கு நடப்பது என்ன? ஒப்பந்தத்திற்குப் பிறகு கூட வசூல் கெடுபிடி நடந்துகொண்டிருக்கிறது. மோட்டார் செட்டுகளையும் மாடுகளையும் ஜப்தி செய்கிறார்கள். ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர், கோவில்பட்டி ஆகிய இடங்களில் இருந்து இம்மாதிரி புகார்கள் வருகின்றன. அரசு ஒப்புக்கொண்ட ஒப்பந்தத்தை உள்ளத் தூய்மையோடு அதிக அக்கறை செலுத்தி அமல்படுத்த வேண்டும். அப்படிச் செய்யாமல் ஒப்பந்தத்திற்கு விரோதமாக ஏதேதோ வாதங்களை அடுக்கிக் கொண்டு, வேடிக்கையாக வேண்டாத பிரச்னைகளை யெல்லாம் எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள். ஒப்புக்கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்ற அக்கறை எடுத்துக் கொள்ளாத நிலையில், இந்த அரசின் மீது கொண்டுவந்திருக்கக் கூடிய நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. சொ. காவேரிமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகின்ற நேரத்தில் கம்யூனிஸ்டு கட்சி செல்வாக்குடன் இருந்த நேரத்தில் மதுரை நகரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி சொன்னேன். அது சம்பந்தமாக பல கம்யூனிஸ்டு நண்பர்களும், ஆதரவாளர்களும் அன்று கைது செய்யப்பட்டார்கள். நண்பர் சுப்பு அவர்கள் ஒரு வழக்கறிஞர். நானும் 7 ஆண்டு காலமாக ப்ராக்டீஸ் செய்கிறேன். வேண்டுமானால் தக்க ஆதாரங்களைத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். யார் யார் கைது செய்யப்பட்டார்கள், அந்த வழக்கு என்ன என்பதைப் பற்றி சொல்லலாம்.

இதைச் சொல்லுவதற்குக் காரணம் மதுரையில் நமது பெருமதிப்பிற்குரிய முத்து அவர்கள் மேயராக இருக்கும் இந்தக் காலத்தில் எந்தவிதமான அசம்பாவிதமும் ஏற்படவில்லை என்பதைச் சுட்டிக் காண்பிப்பதற்காகவும் பொதுவுடைமைக் கட்சியினர் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் எப்படிப்பட்ட நிகழ்ச்சிகளெல்லாம் நடைபெற்றிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காண்பிப்பதற்காகவும்தான் சொன்னேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, அந்த நேரத்தில் நாங்கள் பலரும் சிறையில் இருந்தோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, வழக்கில் தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருந்தால் அதைக் குறிப்பிடலாம். வழக்கினைப் பதிவு செய்துவிடுவதாலேயே சொல்லிவிடுவது என்றால், அப்போது உங்கள் காலம் சென்ற தலைவர் ஏழு ரூபாய் திருடியதாக காங்கிரஸ்காரர்கள் கேஸ் போட்டார்கள், வழக்கு பதிவு செய்தார்கள் என்றார் இப்போது. அதை ஏற்றுக்கொள்ளுகிறீர்களா. அரசியலில் எதிர்தரப்பிலுள்ள தலைவர்களை இழிவுபடுத்துவதற்காக பல வழக்குகள் போடப்பட்டன. ஆனால் போட்டவை எல்லாம் ஏற்றுக்கொள்ளுகிறீர்களா? விவசாயப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், ஆதரித்தவர்கள் மீது எல்லாம் வழக்குகள் போடப்படவில்லையா? போட்டதாலேயே அந்த வழக்குகள் உண்மையாகிவிட்டதா?

* **திரு. கே. கந்தசாமி:** பேரவைத் தலைவரவர்களே, இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் தமிழக கழக அரசின் மீது எதிர்க்கட்சியினர் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கும் முறையில் பார்வேர்டு ப்ளாக் கட்சியின் சார்பில் எனது கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நான் இங்கே பேசுவதற்கு முன்பு பல கோணங்களிலே இதைப் பற்றி பல நாட்களாக யோசித்துப் பார்த்தேன். 'எந்த அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை கொண்டு வந்திருக்கின்றார்கள்' என்று சிந்தித்துப் பார்த்தேன். கடந்த இரண்டு நாட்களாக இங்கே பேசப்பட்டு வந்ததையும் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். கடந்த காலங்களிலே இப்படிப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்ட நேரத்திலே அவற்றை பார்வையாளர்களில் ஒருவனாக கேட்டுக்கொண்டு இருந்திருக்கிறேன். பல கடுமையான குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அரசு என்னென்ன விவகாரங்களில் எந்தெந்த நிலையில் தவறியிருக்கிறது, எப்படி எப்படி சட்டம்-ஒழுங்கைப் பாராமரிக்கத் தவறிவிட்டது, அரசு அதிகாரங்கள் எந்தெந்தத் துறையில் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்ற புள்ளிவிவரங்களோடு பேசுவார்கள், கேட்டிருக்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆனால் நம்முன் உள்ள தீர்மானத்தின் மீது பல எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசினார்கள், கேட்டேன். பெருமைக்குரிய, கௌரவத்திற்குரிய திரு. கே.டி.கே. அவர்கள் 1957-ம் ஆண்டில் முதுகுளத்தூர் விவகாரம் நடந்த காலத்தில் அவர் கட்சிக்குத் தலைவராக இருந்த, இன்று எங்களோடு இல்லாவிட்டாலும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு அடிப்படையாக வெளியிலிருந்து இயங்கி வரும் திரு. எம். கல்யாணசுந்தரம் அவர்கள் முதுகுளத்தூர் சம்பவங்களையொட்டி அன்றைக்கு எங்கள் தெய்வத் தலைவர் தேவர் அவர்கள் மீது பழி சுமத்தப்பட்டதைக் கண்டிக்கும் வகையில், அந்த அரசுக்கு எதிராக நம்பிக்கை

யில்லாத் தீர்மானத்தை கொண்டு வந்தார்கள். அன்றைக்கு அவர் பேசிய பேச்சுக்கும் இன்றைக்கு அவர் கட்சியைச் சார்ந்த பெருமதிப்பிற்குரிய தலைவர் பேசும் பேச்சுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதைப் பார்க்கிறேன். அன்றைக்கு அரசு சட்டது முறைதானா என்று, சட்ட முறை எப்படிப் பட்டது, சுடுவதற்கு அவசியம் இருந்ததா என்ற அடிப்படை எழுந்தது. அன்றைக்கு சட்ட நிலையைப் பார்க்கும்போது அன்றைக்கு நடைபெற்ற விசாரணைக்காக வெங்கடேஸ்வரன் என்ற அதிகாரியை நியமித்தார்கள் அரசின் சார்பிலே ஒரு தலைப்பட்சமாக. அவர் 'ஐந்து பேரை பட்டபகலில் கையைக் கட்டி' சுட்டதாகச் சொல்லியிருக்கிறார். போலீசாரே கையைக் கட்டிச் சுட்டதாகச் சொல்லியிருக்கிறார். சுட்ட முறை தவறு என்று ஆயிற்று. கூட்டத்தில் தாக்கப்பிற்காகச் சுடுவது என்ற நிலையை விட்டு மக்களை கையைக் கட்டிப் போட்டு சுட்டதாக அங்கே குறிப்பிட்டிருக்கிறார். சுட்ட முறை தவறு என்று அன்றைக்கு குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் இன்று நம்முன் உள்ள தீர்மானத்தின் மீது பேசும் தலைவர்கள் வேறு நிலையில் பேசுகின்றார்கள். சுட்டது உண்மைதான் என்பதை ஏற்றுக்கொண்டு சுடுவதற்கு யார் காரணம் என்ற நிலையை பரிசீலிக்கும்படி இப்போது இம்மன்றத்தின் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். பல கட்சியினைச் சேர்ந்தவர்களும் தலைவர்களும் நடந்து முடிந்த விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று செயல் கமிட்டிகளை அமைத்துக் கொண்டு செயல்படும் நேரத்தில், மாண்புமிகு குமாரசாமி அவர்கள் தலைமையில் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்ததாகவும் அந்தச் சந்திப்பில் அவர் ஏற்றுக்கொண்ட முடிவினை கூட இருந்த சிலர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் கேள்விப்பட்டேன். பிறகு வரும்போது மன்றுடியார் போன்ற நிலப்பிரபுக்கள், அரசின் நில உச்சவரம்புச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் விவசாய வருமான வரிச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், சர்வோதய சங்கத்தில் சேர எப்போது மனுக் கொடுக்கலாம் என்று காத்துக் கொண்டு இருந்தவர்களும், இவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து இந்தப் பிரச்சனையைப் பெரிதாக்கி தங்களுக்குச் சாதகமான ஒரு சந்தர்ப்பத்தினை உருவாக்க நினைத்தார்கள். அதோடு எங்களோடு தோழமை பூண்டிருந்த கே. டி. கே. போன்றவர்கள், சுப்பு போன்றவர்கள்—இவர்கள் இன்னும் எங்களோடு இருப்பதாகச் சொல்லுகின்றார்கள், அவர்கள் எங்களோடு இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பவில்லை, கொள்கைக்காக இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள் பாராட்டுகிறோம். ஆனால் கடைபிடிக்கும் கொள்கை மக்களுக்குரிய கொள்கையாக இருக்க வேண்டுமேயன்றி மக்களுக்கு விரோதமான கொள்கையாக இருக்கக்கூடாது என்பதுதான் எங்கள் கருத்து. இன்றைக்கு கலைஞர் அவர்கள் பதவியில் இருப்பதால் நாங்களும், முஸ்லீம் லீக் கட்சியும் கழகத்தோடு ஒட்டிக்கொண்டு இருக்கிறோம் என்று யாரும் எண்ணவேண்டாம், அப்படிப்பட்ட அற்பபுத்தி

எங்களுக்கு இல்லை என்பதை நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பதவிக்கு வருவதற்கு முன்பும் நாங்கள் இணைந்திருந்தோம். சிலர் குறிப்பிட்டுக் காண்பித்தார்கள், ஏதோ நாங்கள் சுயபலம் இல்லாதவர்கள் என்று மறைமுகமாகச் சொன்னார்கள். நேரடியாகச் சொல்லவில்லை. அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுகிறேன், இப்போது நாம் சுதந்திர வெள்ளி விழாவினைக் கொண்டாட இருக்கிறோம். ஆனால் 1967 வரையில் ஆளப்பட்டவர்கள் இன்று மக்களிடமிருந்து தூக்கியெறியப்பட்டார்கள். கடந்த காலத்தில் நடந்த அட்டகாசங்களையும் வன்முறைகளையும் நீங்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். பெருமைக்குரிய கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள், 'பிராமணர்களுக்கும், ஆஸ்திகர்களுக்கும் பாதுகாப்பில்லை' என்று. இந்த மன்றத்திற்கு சமர்ப்பித்துக் கொள்ளுகிறேன், மதிப்பிற்குரிய காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில்தான் திருச்சியில் பல பிராமணர்களுடைய பூணூல் அறுக்கப்பட்டது. இது தெரியாதா? அன்றுதான் தேசிய பாரம்பரியத்தில் வந்த வைத்தியநாத ஐயர் மேலமாசி வீதி வழியாக வரும்போது பிள்ளையார் கோவில் முன்பு தாக்கப்பட்டார். அன்று உங்கள் ஆட்சியில்தானே தாக்கப்பட்டார்? இதை மறந்திருந்தால் மதிப்பிற்குரிய கே. எம். எஸ். அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். அன்றைக்கு கலைஞர் இருந்தாரா, கழக அரசு இருந்ததா? எனவே, இன்றைக்குச் சொல்லப்படும் குற்றச்சாட்டுகள் பல சோஷலிசத்தை விரைவில் செயல்படுத்த வேண்டும் என்று செயல்பட்டு வரும் கலைஞர் ஆட்சிக்குக் களங்கம் கற்பிக்க வேண்டும் என்று அரசியல் நோக்கோடு கற்பிக்கப்படும் உண்மைக்குப் புறம்பான காரணங்களாகும். இன்று நமது மாண்புமிகு அமைச்சர் ஆதித்தனார் அவர்கள் பதில் சொன்னார்கள், அவருக்கே பொறுக்க முடியாமல். "என் சமுதாயத்தைக் குறிப்பிடுகிறீர்களே, இதோ நான் இருக்கிறேன்" என்று. மாண்புமிகு அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள், 'ஆசைத்தம்பி இருக்கிறார்' என்று. என் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் கடந்த காலம் போலன்றி, இந்த அரசு ஜாதி மதங்களைக் கடந்த நிலையில் எப்படி ஒரு தாய் தன் குழந்தைகளுக்கு பாரபட்சம் காட்ட மாட்டாளோ அதுபோன்று கலைஞர் ஆட்சி நடைபெறுகிறது என்பதைச் சுட்டிகாட்டுவதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன். நமது சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டதற்கு பதில் சொல்லும் வகையில் இவற்றைக் குறிப்பிட்டேன்.

கடந்த கால சரித்திரத்தைச் சற்று திரும்பிப் பாருங்கள். இன்றைக்கு நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் வேதனைக்குரியதுதான், விசனத்திற்குரியதுதான். இப்படிப்பட்ட நிலை உருவாகிவிடுமோ என்று அச்சப்பட்டோம். நமது நிலை பற்றி பார்வர்டு பிளாக் கட்சியின் மத்தியக் குழு கூட்டம் ஜூன் 20-ம் தேதி நடந்தது. குழுவின் பரிசீலனைக்கு இது வைக்கப்பட்டது. 'நீங்கள் தோழமைக் கட்சியாக இருக்கின்றீர்கள், இருந்தாலும் இந்தப் பிரச்சனையில்

அவர்களோடு சேர்ந்துவிட்டால் நியாயம் சொல்லுவதில் நாம் தவறிவிடுவோம், எனவே பொதுவான நிலையை மேற்கொள்ள வேண்டும், எப்படி கிராமத்தில் சிக்கலைத் தீர்ப்பதற்கு பஞ்சாயத்து வைத்து முயற்சிப்பார்களோ அதுபோன்று நீங்கள் நியாயம் சொல்ல வேண்டும்' என்று கேட்டார்கள். எனவேதான் எங்கள் பெருமைக்குரிய தலைவர் மூக்கையாத் தேவர், எ. ஆர். பெருமாள், சின்னப்ப கௌண்டர், சக்தி மோகன் ஆக ஐந்து பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. கலைஞர் அவர்கள், 'நாங்கள் எப்போதும் யாரையும் சந்திக்கத் தயாராயிருக்கிறேன், இன்று மட்டுமில்லை, என்று சொல்லுகின்றீர்களோ, எங்கு சொல்லுகின்றீர்களோ, அங்கே சந்திக்கத் தயாராயிருக்கிறேன்' என்று வெளிப்படையாக பட்டவர்த்தனமாகச் சொன்னார்கள்.

நாங்கள் ஐந்து பேரும் போராட்டக் குழுத் தலைவரைத் தேடிச் சென்றோம். பல தலைவர்களைச் சந்தித்தபோது, 'எங்களுக்கு அரஸ்ட் வாரண்ட்' பிறப்பித்திருக்கிறார்கள். அதனால் நாங்கள் வெளியே உலாவ கூட முடியாமல் இருக்கிறது என்று சொன்னார்கள்.' உடனே நாங்கள் கலைஞர் அவர்களைச் சந்தித்து அவர்கள் போலீஸ் கைது செய்து விடுவார்கள் என்ற பயத்தில் இருக்கிறார்கள், அதனால் அவர்கள் 'ஃபிரியாக' வெளியே வருவதற்கு வகை செய்யுங்கள், ஐ.ஜி. அவர்களுக்கு இன்ஸடரக்ஷன் கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டோம். அவர்கள் எங்கு வேண்டுமானாலும் போகலாம், எந்த இடத்தில் வேண்டுமானாலும் பேசலாம், அதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று கலைஞர் அவர்கள் சொன்னார்கள்.

அதன் பிறகு நாங்கள் மன்றாடியாரைச் சந்திப்பதற்காக அவருடைய பங்களாவுக்கு 3, 4 தடவைகள் சென்று பார்த்தோம். கடைசியில் 4-ந் தேதி இரவு 12 மணிக்கு பார்க்க முடிந்தது. கலைஞர் அவர்கள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும், எந்த இடத்தில் வேண்டுமானாலும் பேசத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள் என்ற விபரத்தைத் தெரிவித்தோம். அதை ஒரு மாஜி எம்.எல்.ஏ.—கவுண்டர்—ஏற்றுக்கொண்டார். இந்தப் போராட்டமே தேவையில்லை. விவசாயிகளின் கோரிக்கைகள் பலவற்றை ஏற்கனவே அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இன்னும் பல மத்திய அரசோடு தொடர்பு கொண்டு தீர்க்கப்பட வேண்டும். ஆகவே இப்போது இந்தப் போராட்டம் தேவையில்லை. ஏற்கனவே இதை ஒரு அரசியல் பிரச்சனையாக மாற்றி, இதை வைத்து ஒரு சிக்கலை உண்டாக்க விருக்கிறார்கள். வேண்டாத இந்தச் சிக்கலில் எங்களையெல்லாம் சிக்க வைத்து விட்டார்கள். இந்தச் சிக்கலிலிருந்து எப்படியாவது எங்களை நீங்கள் விடுவிக்க வேண்டுமென்று, எங்கள் தலைவர் மூக்கையாத் தேவர் அவர்களின் கையைப்பிடித்து கண்ணீர் விட்டு, கெஞ்சிக் கேட்டுக்கொண்டார் திரு. ஜம்பையா கவுண்டர்.

கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தோம். பிறகு மன்றாடியார் அவர்கள் எங்கள் தலைவர்களை கலந்து கொண்டு பேசுகிறேன் என்று சொன்னார்கள். பின் 4 மணிக்கு அவரைச் சென்று பார்க்கிறபோது அவர் வீட்டிலே இல்லை. அங்குள்ளவர்களைக் கேட்டதில் எப்போது வருவார் என்று எங்களுக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டார்கள். அதன் பிறகு போராட்டக் குழு செயலாளர் நாராயணசாமி நாயுடு அவர்களைச் சந்திக்கச் சென்றோம். முடியவில்லை. பிறகு ஊருக்குப் போகலாம் என்று புறப்படுகிறபோது, எங்கள் தலைவர் மூக்கையாத் தேவர் அவர்களை, இரண்டு டாக்டர்கள் வந்து சந்தித்தார்கள். 'ஐயா, தலைவரவர்களே, நீங்கள் இருக்க வேண்டும். எப்படியாவது கலைஞர் அவர்களைச் சந்திக்க வேண்டும். போராட்டம் வேண்டாம். நாராயணசாமி நாயுடு அவர்கள் மிகவும் பயந்து போய், ஒரு இடத்தில் மறைந்து இருக்கிறார்கள். நாங்கள் அவரை சந்தித்துப் பேசிவிட்டு, இன்னும் ஒரு மணி நேரத்தில் வந்து சொல்கிறோம்' என்று சொல்லிவிட்டுப் போனவர்கள் இன்று வரை வரவில்லை.

பல மாடமாளிகைகளில் ஆங்கிலேயர் காலத்தில் பல மர்மங்கள் நடப்பதாக கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்தப் போராட்டக் குழுத் தலைவர்கள் மாளிகையில் என்ன மர்மம் நடக்கிறதோ தெரியவில்லை. தூரதிருஷ்டவசமான இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறக் கூடாது என்பதற்காக அதற்கு முந்திய நாள் மீண்டும் மன்றாடியார் மாளிகையில் அவரைச் சந்திக்கச் சென்றோம். அவரைப் பார்க்க முடியவில்லை. அதற்கு முன்னால் அவரைச் சந்தித்தபோது, 'எங்கள் தலைவர்களை இன்னும் சந்திக்கவில்லை, எனக்கு 100, 200 டெலிபோன் செய்திகள் வந்திருக்கின்றன. எந்த நேரத்திலும், எந்த இடத்தில் வேண்டுமானாலும் சந்திக்கத் தயார் என்று கலைஞர் அவர்களுடைய 'பிரின்டெட் லெட்டர் பாடில்' அவரே எழுதி கையெழுத்துப் போட்டுக் கொடுக்க வேண்டும், அப்போதுதான் சந்திக்க முடியும்' என்று சொல்கிறார்கள், என்று மன்றாடியார் தெரிவித்தார்கள்.

நீங்கள் கேட்டுக்கொண்டபடி கலைஞர் அவர்கள் கோட்டையில் உங்களைச் சந்திக்கத் தயாராக இருக்கிறார்கள். பிரச்னைகளைத் தாராளமாக பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். இன்று கூட எங்களிடம் பேசியிருக்கிறார்கள். இந்தச் செய்தி மெயில், அலை ஓசை, முரசொலி போன்ற பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது என்று சொல்லி பத்திரிகைகளையும் காட்டினோம். பத்திரிகையில் வந்தால் போதாது, நீங்கள் எழுதிக் கொடுங்கள் என்று கேட்டார்கள். 'எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் நான் போராட்டக் குழுவுடன் பேசத் தயாராக இருக்கிறேன்' என்ற கலைஞரின் வாசகத்தை எழுதிக் கொடுத்தோம். அதற்குப் பின்னால் 10 மணிக்கு போனால், 'நீங்கள்

ஏதாவது எழுதிக் கொடுப்பீர்கள், அதை நாங்கள் நம்பமாட்டோம், கலைஞரே எழுதி கையெழுத்துப் போட்டுக் கொடுக்க வேண்டும்; இல்லையென்றால் முடியாது' என்று சொல்லிவிட்டார்கள்.

இவ்வளவு முயற்சிகளுக்குப் பின்னால், அவர்கள் கலைஞரைச் சந்தித்துப் பேசுவதற்கு ஒப்புக்கொண்டிருப்பார்களானால், இவ்வளவு உயிர்ச்சேதம், பொருள் சேதம் நம்முடைய நாட்டில்—தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்காது. இவ்வளவு முயற்சிகளுக்குப் பின்னால் இன்றைக்குக் கேட்கிறார்கள், ஏன் போராட்டக் குழுவினரைச் சந்தித்துப் பேசியிருக்கக்கூடாது என்று. போராட்டக் குழுவிலுள்ள ஒருவர் சொன்னார், "போராட்டம் தேவையில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன், இருந்தாலும் எங்களையெல்லாம் நம்பி பல விவசாயிகள் போராட்டத்திலே இறங்க முடிவு செய்து விட்டார்கள். நான் இப்போது வேண்டாம் என்று சொன்னால் அவர்கள் என்னைத் தெருவிலே நடக்க விடமாட்டார்கள். ஆகவே முடிவு செய்யப்பட்டபடி போராட்டம் நடக்கும் கலைஞரே எழுதி கையெழுத்துப் போட்டுக் கொடுத்தால் நாங்கள் பேசுவதற்கு வருகிறோம், இல்லை என்றால் வரமாட்டோம்" என்று.

இவ்வளவு நடந்ததற்குப் பின்னால்தான், போராட்டக்காரர்களின் கௌரவப் பிரச்சனையினால்தான் இன்றைக்கு இந்த 15 பேர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தில் இறந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள்தான் இன்றைக்கு கலைஞர் அவர்களுடைய கௌரவப் பிரச்சனையால்தான் இந்த துர்ப்பாக்கியம் ஏற்பட்டது என்று சொல்லுகிறார்கள். இதையெல்லாம் நான் என் விபரமாக இங்கே சொல்கிறேன் என்றால், சமாதானக் குழுவில் நான் இடம் பெற்றிருந்ததால் தான், அதை இந்த மன்றத்திற்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். சில தனிப்பட்ட நிலச்சொந்தக்காரர்கள்—நிலக் குபேரர்களின் தனிப்பட்ட கௌரவப் பிரச்னையால் இன்றைக்கு இவ்வளவு உயிர்ச் சேதமும், பொருள் சேதமும் ஏற்பட்டிருக்கிறது என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

போராட்டக் குழுத் தலைவர்களை சந்தித்தீர்களா, பார்த்து பேசினீர்களா என்று கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக இரவு 12 மணிவரையில் கடற்கரை மணலில் காத்துக்கொண்டிருந்த கலைஞர் அவர்களைப் பார்த்துக் கௌரவப் பிரச்சனைவாதி என்று மாளிகைவாசிகள் சொல்கிறார்கள். அது நாட்டு மக்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறார்கள்? மக்களுக்கு நன்றாகத் தெரியும். இன்னும் சட்டம், அமைதி, ஒழுங்கு குலைந்துவிட்டது என்றெல்லாம் சொல்கிறார்கள். போலீசார் வேண்டுமென்றே சுட்டுக் கொன்றார்கள் என்று சொல்கிறார்கள். யாரை எந்த இடத்தில் வேண்டுமென்று சுட்டுக் கொன்றார்கள். அப்படி

எதுவுமே கிடையாது. அவர்கள் கட்டை வண்டிகளை ரோட்டிலே நிறுத்தி வைத்தார்கள். பெட்ரோலை ஊற்றி கார்களை எரித்தார்கள். போராட்ட தினத்தன்று அருப்புக்கோட்டையில் கிழவர் ஒருவர் டீ கடையில் இருக்கும் போது மயங்கி விழுந்து செத்தார். அவரையும் போராட்டத்தில் இறந்தவர்கள் பட்டியலோடு சேர்த்து விட்டார்கள்.

இங்கே இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்களுக்குத் தங்களுக்குள்ளேயே நம்பிக்கை இருக்கிறதா என்பது சந்தேகந்தான். இந்த அரசாங்கத்திற்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதனால் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரக்கூடாது என்று சொல்லவில்லை. கொண்டுவருவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. கொண்டுவரலாம்; ஆனால் அது ஜனநாயக மரபுக்கு உகந்ததாக இருக்க வேண்டும்.

மதிப்பிற்குரிய கல்யாணசுந்தரம் போன்றவர்கள் இந்தக் கழக அரசுக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று சில மாதங்களுக்கு முன்பே முயற்சி செய்து வந்ததை நான் நன்றாக அறிவேன். கழக அரசின் சோஷலிசத் திட்டத்தினால் தனக்கு இனி அரசியல் உலகில் வேலை இல்லை; அதனால் சர்வோதய இயக்கத்தில் சேரவேண்டுமென்று விரும்பிக் கொண்டிருந்த காமராஜருக்கு ஒரு புகலிடமாக இருந்து விட்டது இந்த துரதிர்ஷ்டமான போராட்டக் குழு. அப்படிப்பட்டவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இந்தப் போராட்டத்தை மிகைப்படுத்தி, கழக அரசைக் கவிழ்க்கப் பார்த்தார்கள். உண்மையில் ஏழை விவசாயிகள் நெஞ்சில் கை வைத்துப் பார்க்க வேண்டும், ஏழை விவசாயிகளுக்காகப் பாடு படுகிறவர்கள் என்றால் தங்கள் சொந்த கௌரவத்தை விட்டுப் பேசப்போயிருக்க வேண்டும். அப்படி ஏன் போகவில்லை? ஏழை எளியவர்களுக்காக நல்ல பல திட்டங்களை உருவாக்கி வருகிற கலைஞரோடு ஒரு பொது இடத்தில் உட்கார்ந்து பேசக் கூடாதா? எங்களைக் கூப்பிட்டுப் பேசவில்லை என்கிற கௌரவத்தை ஏன் பாராட்டியிருக்க வேண்டும்? ஆக நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை இன்றைக்குக் கொண்டு வர அடிப்படை உரிமையே இவர்களுக்கு இல்லை என்பது என் கருத்து. இது சரியா, தப்பா என்பதைப் பின்னால் பேசுகிறவர்களே ஆலோசித்துச் சொல்லட்டும்.

துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. பதினைந்து உயிர்கள் பலியிடப்பட்டிருக்கின்றன. அது கழக அரசால் அல்ல. துப்பாக்கிச் சூடு வேண்டுமென்றே நடத்தப்பட்டது என்று யார் சொல்வது? திரு. சுப்பு போன்றவர்கள், கே. டி. கே. போன்றவர்கள் சட்டம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். அரசு மீது

நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, ஒரு பெரிய குற்றத்தைச் செய்து விட்டவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள யாரை ஏமாற்றுவது? நியாயம் புலப்பட வேண்டும் என்பதற்காக ஜுடிஷியல் என்குயரி வேண்டும் என்று நான்கு மாவட்ட நீதிபதிகளை உடனே கலைஞர் அவர்கள் நியமித்தார்களே. மனிதாபிமான உணர்ச்சியோடுதானே நியமித்தார்கள். நீதி விசாரணை நடைபெற்றிருந்தால் உண்மை புலப்பட்டிருக்கும். சமாதானப் பேச்சில் கலந்து கொண்டவர்கள் ஏன் நீதி விசாரணை வேண்டும் என்பதை வற்புறுத்தவில்லை, மாவட்ட நீதிபதிகளைக் கொண்ட விசாரணையோ, சுப்ரீம் கோர்ட் நீதிபதி விசாரணையோ தேவையில்லை என்று ஏன் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். நீதி விசாரணை என்று நடைபெறுமானால் தங்களது சதித் திட்டங்கள் எல்லாம் வெளியாகும். பதினைந்து உயிர்களைப் பலியிட்ட தங்களது கோரச் செயல் வெளிப்பட்டு விடும். அப்புறம் மக்கள் நம்மைத் தலைவர்களாக மதிப்பார்களா; அரசியல் உலகத்திலேயே இல்லாமல் போய்விட வேண்டிய நிலை அல்லவா வந்துவிடும் என்கிற அச்சத்தில்தானே நீதி விசாரணையே வேண்டாம் என்று கொடுத்துவிட்டு வந்தார்கள். வேண்டாம் என்று எழுதிக் கொடுத்து விட்டு வந்தார்கள்.

(திரு. க. சுப்பு குறுக்கீடு).

MR. DEPUTY SPEAKER : If it is a point of order the Hon. Member can raise it, otherwise, no.

திரு. க. சுப்பு : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். நாட்டில் உள்ள மனித உயிர்கள் எல்லாம் அரசாங்கத்திற்குச் சொந்தம். அந்த உயிர்கள் துப்பாக்கிச் சூட்டினால் பறிக்கப்பட்டிருக்கிறபோது அரசாங்கத்திற்குச் சொந்தமான உயிர்கள் பறிக்கப்பட்டதற்கு அரசாங்கமேதானே நீதி விசாரணை நடத்தியிருக்க வேண்டும்? அதை பேரப்பொருளாக ஆக்கி பேச வேண்டிய நிலை எதற்காக?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது பேரம் பேசக்கூடிய பொருள் அல்ல என்பதை உடன்பாடுபெற்றிப் பேச வந்த தலைவர்கள் சொல்லியிருக்க வேண்டும்.

திரு. க. சுப்பு : பேரப்பொருளாக் வைத்திருக்க வேண்டியதில்லையே. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மந்திரி குமாரி—இல்லை பராசக்தி சினிமா வசனத்திலேயே எழுதியிருப்பவர் ஆயிற்றே.

திரு. கே. கந்தசாமி : கடந்த கால சினிமாச் சரித்திரங்களை எல்லாம் நினைவு வைத்துக்கொண்டிருக்கிற திரு. சுப்பு அவர்கள் saviours and champions of the farmers' cause என்று சொன்ன அவர்களிடம் நினைவுறுத்தியிருக்க வேண்டும்? ஏன் அதைச் செய்யவில்லை என்று கேட்கிறேன்? தாங்கள் செய்த

சதி, தாங்கள் செய்த தவறு மக்களுக்குப் புரிந்துவிடுமே என்றுதான் நீதிபதிகள் விசாரணை வேண்டாம் என்று சமாதானம் பேச வந்த தலைவர்கள் ஒத்துக் கொண்டார்கள் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். பந்தை நடத்தியே தீருவோம் என்று கொடி தூக்கி, படுகொலை செய்துவிட்ட கக்கன் அவர்கள், "நாங்கள் பண்ணியது கொலை, நாங்கள் பண்ணியது உயிர்ச்சேதம்" என்பதை உணர்ந்ததாகத்தானே அர்த்தம்—நீதி விசாரணை வேண்டாம் என்று ஒத்துக் கொண்டதற்கு?

THIRU R. PONNAPPA NADAR : On a point of order, Sir. The hon. Member said that Mr. Kakkan hid himself somewhere and things like that. I do not think any legal estoppal is operating. If any aspersions are cast against a pesron, he should be present in the House. Otherwise, he is not in a position to defend himself. What transpired in the Conference, only the participants may know, the Chief Minister may know and I think that there is no reason or rhyme in reiterating that something had been agreed and therefore nobody in this House should rake up things connected with the incident. The point about judicial enquiry raised by my learned friend is incorrect and it is out of order. And he should not speak bringing in allegations against persons who are not inside the House and therefore not able to defend themselves.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கந்தசாமி அவர்கள் பேசும் போது வெளியில் உள்ள தலைவர்களைப்பற்றி உள்ளே இழுக்க வேண்டாம். இங்கேயே எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

திரு. கே. கந்தசாமி : நான் இல்லாத குற்றச்சாட்டைச் சொல்லவில்லை.

THIRU K. NAGARAJAN : Mr. Speaker, Sir, in such a case, the members of the Opposition Parties also should not bring in the Hon. Mayor of Madurai. I do not think that is also correct. He is not in the House and he cannot defend himself. Why should they refer to him here?

MR. DEPUTY SPEAKER : It is not correct, it is wrong.

திரு. கே. கந்தசாமி : அவர்கள் மீது இல்லாத குற்றச்சாட்டை நான் சொல்லவில்லை. அவர்கள் தலைமையில் நடத்தப்பட்ட அஹிம்சைப் போராட்டம் முடிந்தது—இன்றைக்கு சர்வோதயத்திற்குச் செல்ல இருக்கிறவர்களைத்தான் குறிப்பிட்டேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அரசியல் காழ்ப்பு உணர்ச்சியின் பேரில் முதுகுளத்தூர் சம்பவங்களைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். மறுமுறையும் விசாரிப்பதில் ஆட்சேபணை இருக்காது. அன்றைக்கு அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு திராவிட முன்னேற்ற கழகம் அவர்களுக்கு ஆதரவாக இருந்தார்கள் என்று நினைத்துப் பேசினார்கள் என்றால் 'மூட சொர்க்கத்தில்' வாழ்கிறார்கள் என்றுதான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: சார் ஆன் பாயிண்ட் ஆப் ஆர்டர். திராவிட முன்னேற்றக் கழகம் தங்களை ஆதரிப்பதாக நினைப்பது 'உங்களை நீங்களே ஏமாற்றிக்கொள்வதாக ஆகும்' என்கிறார்கள். அதை முழுமையாக மறுக்கிறேன். 1955-இல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தபோது அறிஞர் அண்ணா அவர்கள் என்ன பேசினார்கள் என்பதை நான் இரவு முழுவதும் படித்துப்பார்த்தேன். நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை முழுக்க முழுக்க ஆதரித்துப் பேசி யிருக்கிறார்கள். வேண்டுமானால் அதனை இங்கே படித்துக் காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. உட்காருங்கள்.

திரு. கே. என். குமாரசாமி: சார், ஆன் ஏ பாயிண்ட் ஆப் ஆர்டர். நீதி விசாரணை நடத்தினால் தங்கள் பேரில் குற்றம் வந்துவிடுமே என்று நீதி விசாரணை வேண்டாம் என்று சம்மதித்ததாக திரு. கந்தசாமி கூறினார்கள். அதேமாதிரி 70-ஆம் வருஷம் நடந்த . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதிலே என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது? திரு. கந்தசாமி ஒரு அமைச்சர் அல்ல. அமைச்சர்களில் யாராவது அத்தகைய குற்றச்சாட்டைச் சொன்னால் நீங்கள் மறுத்துப் பேசலாம். திரு கந்தசாமி பேசுகிறார் என்றால் அது அவர் கருத்து. உங்கள் தரப்பில் இருந்து பேசுகின்றவர்கள் பின்னர் அவர் சொன்னதை வேண்டுமானால் மறுத்துப்பேசட்டும். அதற்காக பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்ப வேண்டியதில்லை. மறுக்க போதிய அவகாசம் உங்களுக்கும் இருக்கிறது.

திரு. கே. கந்தசாமி: கொடுத்த சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்தவில்லை. பயன்படுத்தாததற்குக் காரணம் தன்பயம் தான். அறிஞர் அண்ணா அவர்கள், தேவர் அவர்களை எனக்குத் தெரியாது, நான் அவர்கள் கட்சியைச் சேர்ந்தவன் அல்ல, அவர்கள் கொள்கையைச் சார்ந்தவனும் அல்ல என்று கூறி, நம்பிக்கையில்லை என்று தெரிவிக்கக் கூடிய தீர்மானம் வருகின்றபொழுது,

கட்சியில் உள்ள சூழ்நிலை காரணமாக நடுநிலைமை வகிக்கிறோம் என்றுதான் சொன்னார்கள். அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் சரி என்று சொல்லவில்லை, கீழத்தூவலில் 5 பேர்களின் வைகளை; கண்களை கட்டிச் சுட்டது சரியென்று சொல்லவில்லை. அதை அவர்கள் வன்மையாகக் கண்டித்தார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தத் தலைவர்கள் போராட்டத்திற்கு முன்பு நாட்டுக்குப் பாதகமான நிலைமை வரும் என்பதை முன்னிட்டு சமாதானம் பேசியிருக்க வேண்டும். அதைவிடுத்து, போராட்டத்தையும் நடத்தி, வெற்றிவிழாக் கொண்டாடுவோம் என்கிறார்கள், கூட்டம் எங்கே, குற்றாலத்திலே பார்த்தேன் நானும், ஆஹா! பல உயிர்களைப் பலிகொடுத்ததற்குக் கொண்டாட்டமா? நான் சொல்லிக் கொள்கிறேன், இன்றைக்கு ஏழை எளிய மக்களுக்கு ஒரு அரசு என்று சொன்னால் அது கலைஞர் அவர்களுடைய அரசுதான், கலைஞர் அவர்களால்தான் நடத்த முடியும். இந்த அரசுதான் நிலைக்கமுடியும், வருகிற பதினைந்து ஆண்டுகளுக்கு இந்த அரசுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றவர்கள் கனவுகளைக் காணட்டும், மக்களுக்குக் கொள்கைகளை எடுத்து உரைக்கட்டும், ஜனநாயகரீதியாகப் போராடட்டும், மக்களுடைய சக்திக்கு எதிராக வன்முறைகளைக் கையாண்டு, அதற்காக ஏழை விவசாய மக்களை, தொழிலாளர்களை மாணவர்களைத் தூண்டிவிடாதீர்கள். தூண்டிவிட்டால் தோல்வியைத்தான் சந்திப்பீர்கள். தங்களுக்குள்ளே நம்பிக்கையில்லாதவர்களால்தான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. நம்பிக்கையில்லாக் கூட்டத்தினரால், கொள்கையால், கொடியால் முரண்பாடு கொண்டவர்கள் இன்றைக்கு அரசியல் காரணத்திற்காகத்தான் கொண்டுவந்திருக்கிறார்கள். நம்பிக்கையில்லை என்பது சட்டப்பூர்வமாக மட்டும் ஒத்துக்கொள்ளக் கூடியதல்ல. மக்கள் மன்றம் இருக்கிறது. நீதி விசாரணை வேண்டாம் என்று சொன்னவர்களுக்கு தங்கள்மேலேயே நம்பிக்கையில்லை, பயம் வந்துவிட்டது. ஒரு குற்றவாளி நீதிபதிக்கு முன்னால் பேச பயந்துகொண்டு போலீஸ் பொய்கேஸ் போடுகிறான் என்று சொல்வதைப் போன்று இருக்கிறது. இந்த அரசுக்கு தமிழகத்திலே ஜாதியை, மதத்தை, மண்ணைக் கடந்த அளவிலே எத்தனை ஆதரவு இருக்கிறது என்பதை சமீபத்திலே மதுரையம்பதியிலே நடைபெற்ற மாநாட்டிலே பல லட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருக்கிறார்களே அதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். கலைஞர் அவர்கள் ஏழை எளியவர்கள் உள்ளத்திலே இருக்கிறார்கள், பிச்சைக்காரர்கள் உள்ளத்திலே இருக்கிறார்கள். பெருநோயாளிகளுக்கு அவர்கள் ஆஸ்பத்திரிகளைக் கட்டியிருக்கிறார்கள். அன்டு தி லாஸ்ட் என்று ரஸ்கின் எழுதியதை காந்தி படித்தார்கள். அதைச் செய்துகாட்டுவது கலைஞர் அவர்கள்தான். பெருநோயாளிக்கு பல நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். இப்படி கலைஞர் அவர்கள்

பல நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். எனவே கலைஞர் அவர்களுடைய அரசு நம்பிக்கைக்குரியது, ஆளுவதற்குத் தகுதி உடையது, எனவே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் எதிர்க்கப்பட வேண்டியது என்று எனது கட்சியின் சார்பாகக் கூறி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவடைந்து மீண்டும் மாலை நான்கு மணியளவில் பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

மாலைக் கூட்டத் தொடர்.

இடைவேளைக்குப் பிறகு பேரவை மீண்டும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் மாலை 4-00 மணிக்கு கூடியது.

* THIRU B. VENKATASWAMY: Mr. Deputy Speaker, Sir, I rise to say a few words on the no-confidence motion brought by our party leader and Thiru K. T. K. Thangamani. At the outset I want to state that people have lost their confidence on this Government for so many reasons that I am going to give later.

First of all, I know and everybody knows that this Government is having a big majority and nobody can bring this Government down or pull this Government down. However, it is the duty of healthy opposition to bring to the notice of Government the defects of the ruling party and how the people outside feel about it. There is a proverb in Telugu which says that every man thinks he is perfect but it is for other men to point out the defect. Like that, the Opposition party is there to point out the defects of the ruling party so that we can have a very clean and good Government in Tamil Nadu. With that object I am rising here. I want to bring some important facts to the notice of Government.

Regarding agricultural farmers agitation on the day of "bandh" so many people have been shot at Perianaickenpalayam, nine people have been shot dead; I was also at Central Jail, Salem at that time. I came to understand that police have used the 'strong rifle' which can go to the range of one mile. I do not understand the reason behind it. They have not used lathi charge or tear gas. No warning was given. Purposefully the Police have shot the people and nine people have been shot dead.

Regarding Dharmapuri district, the police have committed have there, especially in certain villages. In Palayampudur village, the havoc is worse. I had been there personally after my release. About 40 ladies have been beaten severely by the police, robbed of their jewels. Even their 'thalis' have been snatched away brutally. I came to understand that in all about Rs. 20,000 worth of jewels have been snatched away by the police. This kind of thing has taken place in our State. Instead of protecting the people, if the police themselves begin to steal, there is no end to such evils. People will have to suffer a lot.

Regarding my arrest I want to bring in some important legal points. I have been arrested under Indian Penal Code Section 120 (b), Section 117, Section 148, Section 431 and Section 126 of the Railway Act. I am a legislator. I am a responsible man in my constituency. Section 117, Indian Penal Code is abetting commission of an offence by the public or more than ten persons. This involves imprisonment upto three years or fine or both. Section 120 (b) is criminal conspiracy to commit an offence punishable with imprisonment upto two years. Same punishment is provided for abetment of the offence which is the object of conspiracy. Section 148 Indian Penal Code is rioting, armed with deadly weapons. Section 431 is doing mischief rendering any public road, navigable river etc., impassable. This is punishable with imprisonment upto five years. Above all is the Section 126 of the Railway Act. Actually I was charged with committing this offence at 2-30 a.m. At that time I was sleeping in my house. The police came. I opened the door and asked them 'what is the matter'. They told me 'You are arrested'. I knew that because I was in the action committee of this agitation for Dharmapuri district. I went away with the Police. What I say is these offences had been imposed on me with a view that I should be spoiled. When the police came they took away some 'mochu' (Telugu word) 'small weapon in the houses, in order to bring the charge later on that I was armed with deadly weapons. That is how they foist the cases on people, by letting in some evidence or other. What I say is this kind of thing should be put an end to. Some member was saying that even during the Congress regime, the late Hon. Mr. Govindaswamy was charged with such offences. Let it be any Government. Government must see that these kind of charges are not foisted on innocent people.

[Thiru B. Venkataswamy] [1972 ஆகஸ்ட் 11

Sir, I am least bothered about me. But even those who were walking on the street have been taken away and charged under some section or other. This thing should be investigated and the Government should see that such things do not occur hereafter.

Then I want to point out another thing. The people in Hosur have been telling that a police lorry came and the policemen asked the people whether they were going to Sulagiri. When they replied in the affirmative they took them in the lorry on the understanding that they would be dropped at Sulagiri. But they brought those pepole to the police station at Hosur and locked them up there. They were crying in the police station. This is what the policemen had done there. When I asked the Policemen why they had done so, they had stated that a quota had been fixed and that they should arrest 50 or 60 persons. This state of affiairs had prevailed at that time and I would be very happly if action was taken against the persons who had done that mischief. If mischief was actually done, they should be punished. But the poor people should not be arrested like that.

In my own village at about 2-30 in the night they went to a house and broke open the doors. A member of the Panchayat Board was also taken into custody. When the Lady members questioned the action of the police, they have beaten her and torn her jacket. It is a great shame to the Government that the police had acted in that fashion and committed atrocities in the name of the Government. This matter I am bringing to the notice of the Government and I hope the Hon. Chief Minister will take necessary action in the matter.

Even in Palyampudur, the people have been mercilessly beaten and in the houses of Harijans pots and drums had been broken mercilessly like veri-attam. Law of jungle prevailed in Dharmapuri District on bandh day.

MR. DEPUTY SPEAKER: The Hon. Member has already taken 13 minutes.

THIRU B. VENKATASWAMY: Five more minutes.

Regarding the juidicial enquiry, the Hon. Chief Minister has stated that after the compromise was entered into, there was no need for it. But I feel that even though the Action Committee has

[Thiru B. Venkataswamy] [1972 ஆகஸ்ட் 11

accepted the proposal that a judicial enquiry is not necessary, as a perfect and honesty Government, they should come forward to hold the judicial enquiry. After all, the ryots also are your people and they are not your enemies. If the judicial enquiry is held, the people will know who are responsible for this state of affairs. At least that courtesy is necessary so that we can know what the facts are.

Finally, regarding collections to the Defence Fund, in our taluk no receipt is given to any ryot who has subscribed to it. In spite of that, people contributed to it as they thought they had contributed to a national cause. Recently I understand that the amount collected for the Defence Fund has not reached the proper quarters and misappropriations have taken place throughout the State and that also should be enquired into. Also much corruption is taking place. The Hon. Chief Minister can ask, 'Are you in a position to substantiate it'. But the people are talking that so much corruption is taking place. So I request the Government to take note of my remarks. With these words, I conclude my speech in support of the Non-Confidence Motion moved by my leader.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இனி பேசுகிற உறுப்பினர்கள் பத்து நிமிடங்களில் தயவு செய்து பேசி முடித்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. எஸ். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, இன்றையதினம் நாட்டு மக்களிடத்திலே நம்பிக்கை இழந்தவர்கள், ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லாத பலாத்காரவாதிகள் இன்றைக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நான் கடுமையாக எதிர்க்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சேலம் மாவட்டத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகங்கள்பற்றி இன்றைக்கு தமிழ்நாடு எங்கும் பெரிதாகப் பேசப்படுகிறது. அவைகளைப் பற்றி மட்டும் இந்த மன்றத்தின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். 14—6—72 அன்று சேலம் மாவட்டத்தில் விவசாயக் குழுவினர் என்ற பெயரால் சிலர் கூடி கலெக்டர் அலுவலகத்தின் முன்னர், தாலூகா அலுவலகத்தின் முன்னர் மறியல் நடத்துவது என்று முடிவு செய்து 16—6—72ம் தேதி அர்த்தநாரீஸ்வர கவுண்டர் தலைமையில் 127 பேர்கள் கைது செய்யப் பட்டார்கள். அதைத் தொடர்ந்து 30—6—71-ம் தேதி வரையில் பலர் கைது செய்யப்பட்டார்கள். இதில், கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில்

இருந்த 91 பேர்கள் மன்னிப்பு எழுதிக்கொடுத்து போராட்டத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை, தெரியாமல் எங்களைச் சிக்க வைத்துவிட்டார்கள், எங்களை விட்டுவிடுங்கள் என்று மன்னிப்புகோரி 91 பேர்கள் குறுகிய காலத்தில் வெளியே வந்துவிட்டார்கள். அதன் பிறகுதான் 5-ம் தேதி கடையடைப்பு, ஹர்த்தால் என்ற பெயரால் வன்முறைச் சம்பவங்கள் தமிழ்நாடு எங்கும் ஏற்பட்டது என்பதை நாட்டுமக்கள் நன்கு அறிவார்கள். சேலம் மாவட்டத்தில் நரசிங்கபுரம், பெத்தநாய்க்கன்பாளையம், ஆத்தூர், நாமக்கல் ஆகிய பகுதிகளில் வன்முறைச் செயல்கள் அதிக அளவில் தலை தூக்கியது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நரசிங்கபுரத்தில் மாட்டு வண்டிகளையும், கற்களையும் எடுத்து பொதுப் பாதைகளை வழி மறித்துவிட்டார்கள். இதேபோல் பெத்தநாய்க்கன்பாளையத்திலும் செய்தார்கள்.

நேற்றையதினம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. தங்கமணி அவர்கள் பேசும்போது பெத்தநாய்க்கன்பாளையம் சம்பவத்தைப்பற்றி எடுத்துப் பேசினார்கள். வன்முறைச் சம்பவங்கள் எப்படி நடந்தன என்பதை அங்கு சென்று விசாரித்ததாகச் சொன்னார்கள். என் உண்மையை மறைத்து இந்த மன்றத்தில் பேசுகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன். 4-ம் தேதி இரவு 12 மணி அளவில் பெத்தநாய்க்கன்பாளையத்தில் சுமார் ஐநூறு பேர்கள் சேர்ந்து குடித்துவிட்டு சேலம்-சென்னை வரும் பொது பாதையை வழிமறித்தார்கள். பெரிய கற்களை எடுத்துப் போட்டும். கட்டை வண்டிகளைக் கொண்டு வந்து நிறுத்தியும், தார் டின்களைக் கொண்டு வந்து போட்டார்கள். இதனால் போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்பட்டது. அரசாங்க பஸ்கள், லாரிகள் எல்லாம் தடைபட்டு நின்றுவிட்ட செய்தியை ஆத்தூர் போலீஸார் தெரிந்து அவர்கள் உடனே அங்கிருந்து வந்து ராத்திரி 12 மணிக்கு பாதைகளுக்கு முன்பு போடப்பட்ட கற்களையும், மாட்டு வண்டிகளையும் அப்புறப்படுத்தி விட்டு மீண்டும் போக்குவரத்திற்கான வழியை ஏற்பாடு செய்துவிட்டு சென்றுவிட்டார்கள். ஆத்தூரில் சேலம் டி.எஸ்.பி. ஒருவர், இன்ஸ்பெக்டர், சில காவலர்களே ஆத்தூரில் பிறகு தங்கி இருந்தார்கள். காலை எட்டு மணி இருக்கும். மீண்டும் நரசிங்கபுரத்தில் வழி மறித்து விட்டார்கள். இரண்டு அரசாங்க பஸ்களை வழிமறித்து சேதம் விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி ஆத்தூரில் உள்ள டி.எஸ்.பி.-க்கு கொடுக்கப்பட்டது. உடனே அங்கு இருக்கக்கூடிய டி.எஸ்.பி., போலீஸ் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் ஆகியோர் நரசிங்கபுரத்திற்கு வந்திருக்கிறார்கள். அரசாங்க பஸ்களுக்கு சேதம் விளைவிப்பதைத் தடுத்து நிறுத்திவிட்டு, போக்குவரத்திற்கு மீண்டும் வழிவகை செய்துகொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் பெத்துநாயக்கன்பாளையத்தில் பெரிய கலவரம் ஏற்படுகிறது. 4,000 பேர்கள் கூடிக்கொண்டிருக்கிறார்கள். அங்கே போக்கு

வரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுத்தி பலாத்கார செயலில் ஈடுபடுகிறார்கள் என்ற தகவல் நரசிங்கபுரம் காவலர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய டி.எஸ்.பி., இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் ஆகியோர்கள் உடனே பெத்துநாய்க்கன்பாளையத்திற்கு 8-45 மணி அளவில் வந்து சேர்ந்தார்கள். அங்கு அவர்கள் வந்து சேர்ந்த நேரத்தில் பாதையில் இரட்டை மாட்டு வண்டிகளின் சக்கரத்தைக் கழட்டி போட்டுவைத்திருந்தார்கள். டிச்சு கட்டுவதற்கென ஓரமாகப் போட்டு வைத்திருந்த பெரிய பெரிய கற்களை எடுத்துப் பாதை மத்தியில் போட்டும், தார் டின்களைப் போட்டும் வைத்திருந்தார்கள். போலீஸ் அதிகாரிகளும், அதிகாரிகளுடன் லாரியில் வந்த காவலர்களும் அங்கு கூடியிருந்த 4,000 மக்களைப் பார்த்து போக்குவரத்திற்கு இடைஞ்சலாகப் போட்டு வைத்திருந்த சாமான்களையெல்லாம் எடுத்துவிடுங்கள்; போக்குவரத்திற்குத் தடங்கலாக நாம் இருக்கக்கூடாது என்று எவ்வளவோ மன்றாடிக் கேட்டார்கள். மன்றாடிக் கேட்டும் வன்முறையாளர்கள் ஒத்து வராத காரணத்தினால் காவலர்கள் வந்த லாரியில் கழற்றப்பட்டு கிடந்த மாட்டு வண்டிகளுடைய சக்கரங்களையும், கற்களையும், தார் டின்களையும் எடுத்து லாரியில் ஏற்றி ஆத்தூருக்கு லாரியை அனுப்பினார்கள். லாரி கொஞ்ச தூரம் புறப்பட்டுப் போனவுடனே போலீஸ்காரர்களை வன்முறையாளர்கள் சூழ்ந்து கொண்டார்கள். சூழ்ந்துகொண்டதும், 'லாரியில் கொண்டுபோன சாமான்களைத் திருப்பிக் கொண்டுவந்து கொடுக்கவேண்டும், இல்லாவிட்டால் உங்களை விடமாட்டோம்' என்று வழிமறித்துக்கொண்டார்கள். போலீஸாரை வழி மறித்துக்கொண்டவுடன் வன்முறையாளர்கள் தொலைபேசித் தொடர்பையும் ரத்து செய்துவிட்டார்கள். மேலும் ரூரல் டி.எஸ்.பி. அவர்கள் கூட வந்து 5, 6 போலீஸ்காரர்களையும் எவ்வளவு அவமானப்படுத்தவேண்டுமோ அவ்வளவு அவமானப்படுத்தி, பொது மக்களுடைய மத்தியில் கைதிகளைப் போல் அவர்களை அடைத்து வைத்திருந்தார்கள். கூண்டில் உள்ள கிளி போல் அடைத்து வைத்திருந்தார்கள். போலீஸ் அதிகாரிகளை உட்கார வைத்து காலில் அணிந்திருக்கக்கூடிய அணியினால் அடிக்கக்கூடிய அளவுக்கு அவமானம் செய்து இருக்கிறார்கள். போக்குவரத்து தடைபட்டது. நிலைமை என்ன ஆகுமோ என்ற அச்சம். ஆத்தூருக்குத் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியவில்லை. சேலத்திற்கும் தொலைபேசியின் மூலம் தொடர்பு கொள்ள முடியவில்லை. அந்த நேரத்தில் அதன் வழியாக வந்த பாரெஸ்ட் டிபார்ட்மெண்டைச் சேர்ந்த அதிகாரி திரு. காதர் என்பவர் மோட்டார் சைக்கிளில் சேலத்திற்குத் திரும்பி வந்து போலீஸ் கண்ட்ரோலுக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். பெத்தநாயக்கன்பாளையத்தில், போலீஸ்காரர்களை வன்முறையாளர்கள் சூழ்ந்துகொண்டுவிட்டார்கள், உட்கார வைத்திருக்கிறார்கள் அவர்களுக்கு என்ன ஆகுமோ தெரியாது என்று

சொன்னார். உடனே எஸ்.பி. ஆயுதம் தாங்கிய போலீஸ்காரர்கள் 9-20 மணிக்கு பெத்துநாய்க்கன்பாளையம் வந்து சேர்ந்தார்கள். போலீஸ்காரர்கள் எவ்வளவு கண்ணியமாக நடந்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். சில போலீஸ்காரர்களை வன்முறையாளர்கள் சிறைப் பிடித்து வைத்து, அவமானப்படுத்தியிருக்கிறார்கள் என்று தெரிந்தும் சேலத்திலிருந்து சென்ற ஆயுதம் தாங்கிய போலீஸ் படையினர் அந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் பக்கத்திலேயே போலீஸ் வண்டியை நிறுத்திவைத்துவிட்டு ஒரு பர்லாங்கு தூரம் நடந்து வந்து, கூடியிருந்த மக்களைப் பார்த்து, 'கைது செய்து பிடித்து வைத்துள்ள போலீஸ்காரர்களை விட்டுவிடுங்கள் நீங்களாகவே' என்று எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தார்கள். 'கூட்டம் போடாதீர்கள் கலைந்து செல்லுங்கள்' என்று ஆயுதம் தாங்கிய போலீஸ் படையின் டி.எஸ்.பி. (திரு. ராமமூர்த்தி என்று கருதுகிறேன்) கெஞ்சிக் கேட்கிறார், வன்முறையாளர்கள் அவரையும் போலீஸ்காரர்களையும் கொலை செய்யவேண்டும், என்ற நோக்கத்தோடு, எவ்வளவு பலாத்காரத்தில் ஈடுபடலாமோ அதைச் செய்யலாம் என்ற அளவுக்கு வன்முறையாளர்கள் பேசினார்கள். அவர்கள் என்ன பேசினார்கள்? "கருணாநிதி போலீஸ் சுடாது, போலீஸ்காரர்களை அடி, உதை, கருணாநிதிக்கு ஈடுவதற்கு உத்தரவு கொடுப்பதற்கு தைரியம் இல்லை, கருணாநிதி போலீஸ் படை கோழை, கவலைப் படாதே" என்று சத்தம் போட்டார்கள். அதில் வன்முறையாளர் ஒருவர் பெரிய கல்லைத் தூக்கி தலையை நோக்கி அடித்தார். பக்கத்திலுள்ள போலீஸ்காரர் ஒருவர் டி.எஸ்.பி. யினுடைய தலையில் கல் விழும் என்று கருதி டி.எஸ்.பி. அணிந்திருந்த மூக்கு கண்ணாடியைக் கழட்டிவிட்டார். டி.எஸ்.பி. யின் தலையில் பலமான, அடிப்பட்டு ரத்தம் கொட்டிற்று. அப்படி அடிப்பட்டு ரத்தம் சிந்திக் கொண்டிருக்கும்போதும் காயத்தை கையால் பொத்திக்கொண்டு டி.எஸ்.பி. அவர்கள் கெஞ்சி கேட்கிறார். 'எனக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள். உங்களுக்கும் இருக்கிறார்கள். அரசுக்குக் கெட்ட பெயர் தேவையில்லை. இது ஜனநாயகம். ஜனநாயகத்தில் எத்தனையோ வழிகள் உண்டு, பலாத்காரம் வேண்டாம், கலைந்துவிடுங்கள்' என்று அடிபட்ட காயத்தை ஒரு கையால் அமுத்திக்கொண்டு கெஞ்சிக் கேட்டார். முடியவில்லை. அதற்குப் பின்னாலே இவர் சொன்னார். 'நாங்கள் பின்னாலே போய்விடுகிறோம், நீங்களும் கலைந்து விடுங்கள், எங்களை விட்டு விடுங்கள்' என்று சொல்லி, பின்னாலேயே போலீஸ்காரருடன் டி.எஸ்.பி. நகர்ந்து கொண்டிருக்கும்பொழுதே என்ன நடந்தது? ஆடுகளைத் துரத்துவது போல, மாடுகளைத் துரத்துவது போல, அங்கு கூடியிருந்த வன்முறையாளர்கள் கைகளில் கிடைத்த வண்டி முளைக்குச்சிகளை எடுத்து அடித்தார்கள், காலில் அணிந்திருந்த செருப்பையும் கல்லையும் எடுத்து காவலர்கள் மீது அடித்துத் துரத்தினார்கள், காவலர்கள்.

அத்தனை பேர்களும் வன்முறையாளர்களால் விசப்பட்டவைகளை, துப்பாக்கியால் தடுத்துக்கொண்டே பின்னால் நகர்ந்து சென்று கொண்டிருந்தார்கள். ஒரு பர்லாங்கு தூரத்தில் நிறுத்திவைக்கப் பட்டிருந்த லாரியில் ஒவ்வொருவராக போலீஸ்காரர்கள் ஏறினார்கள். அப்படி ஏறிக்கொண்டிருக்கும்போதே டி.எஸ்.பி.-க்குப் பக்கத்தில் ஒரு வன்முறையாளர் நெருங்கி கையினால் டி.எஸ்.பி.-யின் விலா எலும்பைப் பார்த்து குத்தினார், அப்பொழுதுதான் டி.எஸ்.பி.-க்கு ஆத்திரம் ஏற்பட்டு, அதற்குப் பின்னாலே கையில் வைத்திருந்த ரிவால்வரினால் சுட்டார். அதனால் காயமே தவிர, யாரும் உயிர் துறக்கவில்லை. அதற்குப் பின்னாலும் வன்முறையாளர்கள் லாரியை சூழ்ந்துகொண்டு அத்தனை காவலர்களையும் லாரிக்குள்ளே இருக்கும் போதே லாரிக்கு தீ வைத்துக் கொளுத்தி அத்தனை காவலர்களையும் கொளுத்தி விடுவது என்ற நிலையில் திட்டமிட்ட செயல் நடந்தது. அதன்பின் எவ்வளவோ எச்சரிக்கை செய்தும் வன்முறையாளர்கள் ஒதுங்கிக்கொள்ளாததால், போலீஸ்காரர்கள் போலீஸ் லாரியில் இருந்த துவாரத்தில் துப்பாக்கி வைத்து, துப்பாக்கிப் பிரயோகம் நடத்தக்கூடிய அளவுக்கு சூழ்நிலை ஏற்பட்டது. இல்லாவிட்டால் அங்கே காயம் அடைந்த 21 போலீஸ்காரர்களும் டி.எஸ்.பி. ஒருவரும் இன்ஸ்பெக்டர் அவர்களும் செத்திருப்பார்கள், இப்படிப்பட்ட வன்முறைச் செயல்கள் ஒரு திட்டமிட்ட அளவில் நடந்தது எங்கே? பெத்துநாய்க்கன் பாளையம் என்று பேசுகிறார்களே வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சியைக் கேட்கிறேன், உங்களுடைய கட்சி அங்கே செல்வாக்கு பெற்றுள்ள இடம். அங்கே கட்சியில் இருப்பவர்கள் வசதி பெற்றிருப்பவர்கள். அங்கேதான் பெத்துநாயக்கன் பாளையத்தில் இதெல்லாம் நடந்தது, இவ்வளவு கொடுமைகள் நடந்தன. விவசாயிகள் என்ற பெயரால் வன்முறையாளர்கள் நீங்கள் திட்டமிட்டு, சதி செய்து, பலாத்காரச் செயலில் ஈடுபட்ட காரணத்தினால் ஏற்பட்ட துப்பாக்கி பிரயோகத்தைப்பற்றி இங்கே வந்து நீங்கள் நீலிக் கண்ணீர் வடிக்கிறீர்கள். பொது மக்களுக்கு நீங்கள்தான் பதில் சொல்லவேண்டுமே தவிர, இந்த அரசாங்கம் பதில் சொல்லவேண்டியதில்லை. இந்த அரசாங்கம் பதில் சொல்ல வேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்கள்? பெத்துநாயக்கன்பாளையத்தில் மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள். என்ன இருந்தாலும், இவ்வளவு அக்கிரமம் கூடாது. போலீஸ்காரர்கள் கையை எடுத்துக் கும்பிட்டு ரத்தம் சிந்துகிற பொழுதும் கெஞ்சிகேட்டார்கள். பாவிகள் குடித்துவிட்டு வெறியில் தொல்லை கொடுத்தார்கள். அதனால் நமக்கு இந்தக் கதி ஏற்பட்டது என்று தாலி அறுத்த தாய்மார்கள் பிள்ளைகளை இழந்த தாயும் தகப்பனும் கதறுகிறார்கள். அந்த அளவுக்கு வன்முறையை நாட்டில் தூண்டிவிட்டவர்கள் வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள், பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், புதிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் அரத்தநாரீஸ்வர கவுண்டர் இன்றைக்கு அந்தப் போராட்டத்திற்குத் தலைமை தாங்குகிறார். 800 ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரர் அவர். 1966-ஆம் ஆண்டு வனவாசி-பக்கநாடு பகுதியில் 1,500 ஏக்கர் வனஇலாகாவிற்குச் சொந்தமான நிலங்களைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும் என்று அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்களைக் கைவசப்படுத்திக்கொண்டு அந்த 1,500 ஏக்கர், பாரம்பரையாக விவசாயம் நிலத்தில் செய்துகொண்டு குடியிருந்து வந்த 800 விவசாயக் குடும்பங்களையும் காலி செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு அவர்களுடைய வீடுகளுக்கெல்லாம் தீ வைத்துக் கொளுத்தி அவர்களையெல்லாம் லாரியில் ஏற்றிக்கொண்டு போய் 50 மைல், 100 மைல்களுக்கு அப்பால் கொண்டு போய் விட்டுவிட்டு வந்தார். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் 'பன்னெடுங்காலமாக உழுது பயிரிட்டுக் கொண்டுவருகின்றார்கள் ஏழை விவசாயிகள், அவர்களை வெளியேற்றுவது கூடாது, அந்த நிலங்களை அவர்களுக்கே நீண்டகால குத்தகையாகக் கொடுக்கலாம்' என்று முடிவு செய்து பேரறிஞர் அண்ணா அவர்கள், அர்த்தநாரீஸ்வர கவுண்டரால் 50 மைல், 100 மைலுக்கு அப்பால் கொண்டு போய்விடப்பட்ட அந்த விவசாயிகளுக்கே அந்த நிலத்தை பத்தாண்டுக் கால குத்தகைக்கு விட்டார்கள். அதே விவசாயிகளுக்குத்தான் நமது பெருமதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் ஒரு ஆண்டு காலத்திற்கு முன்பு மேட்டூர் பகுதிக்கு வந்த நேரத்தில் 'அந்த நிலங்கள் தங்களுக்கே சொந்தமாக்கப்படவேண்டும்' என்று அவர்கள் கேட்டபோது அப்படியே கொடுக்கப்பட வேண்டும் என்று உத்திரவினைப் பிறப்பித்தார்கள். இது நமது சுப்பிரமணியம் அவர்களுக்குத் தெரியும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, அர்த்நாரீஸ்வர் கவுண்டர் அவர்களோடு சேர்ந்து கொண்டு 'அந்த நிலங்களைக் கொடுக்கக்கூடாது' என்று எதிர்த்தவர்களும் அந்த வரிசையில் இருக்கின்றார்கள். திருவாளர் கந்தப்பனும் திருவாளர் ஆறுமுகமும் கடுமையாக அன்றைக்கு எதிர்த்தார்கள், 'அந்த நிலம் மேய்ச்சல் நிலத்திற்கு வேண்டும்' என்று பகிரங்கமாக நோட்டீஸ் போட்டு, கூட்டம்போட்டுச் சொன்னார்கள். இது வரலாறு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் மேட்டூருக்கு வந்த நேரத்தில் கந்தப்பன் அவர்கள்தான் இந்த வனவாசி—பக்கநாடு நிலங்களையெல்லாம் அதில் பன்னெடுங்காலமாக உழுது வாழ்ந்துவந்த விவசாயக் குடும்பங்களுக்கே பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தார். அது பற்றி அதே கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு, தொடர்ந்து பட்டா செய்து கொடுக்கப்

பட்டு இருக்கிறது. கந்தப்பன் அவர்கள், அவர்களுக்கு ஆதரவாகத்தான் இருந்தார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: நான் சொல்லுவது தாங்கள் முதலமைச்சராக வருவதற்கு முன்பு அவர் எடுத்திருந்த நிலை. 'வேறு வழியில்லை' என்று வந்த பிறகு, கடைசியாக அவர் எடுத்துக்கொண்ட நிலை இது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கடைசியாக வந்த நிலை என்று கூறலாமே தவிர, கந்தப்பன் அவர்கள் ஆரம்பக்காலத்திலிருந்தே அந்தக் குடும்பங்களுக்கு ஆதரவாகத்தான் சொல்லிவந்திருக்கின்றார்கள். வாதத்திற்கு வேண்டுமானால், 'கந்தப்பன் கொடுக்கக்கூடாது என்று சொன்னார்' என்று வைத்துக்கொண்டாலும், கந்தப்பன் அவர்களையே மாற்றி விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலத்தைப் பகிர்ந்துகொடுத்த அரசு இது. ஆனால் இன்றைக்கும் ஆரம்பத்திலிருந்தே எதிர்த்துவந்த அர்த்தநாரீஸ்வர கவுண்டர் அவர்கள் தலைமையில் இயங்குகின்றவர் தாங்கள்.

திரு. எஸ். ஆறுமுகம்: 1962 ஆம் ஆண்டிலிருந்து இந்த சட்ட மன்றத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கிறேன். இந்த மன்ற நிகழ்ச்சிகளைப் பாருங்கள், நான் அர்த்தநாரீஸ்வர கவுண்டருடைய அக்கிரமங்களை எதிர்த்தும் கண்டித்தும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்றும் அன்றையதினம் எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் இதே மன்றத்தில் நான் பேசியிருக்கிறேன். விஷயங்களைத் தவறாகப் புரிந்து கொண்டு நண்பர் பேசுகிறதைப் பார்த்து வேதனைப் படுகிறேன். எடப்பாடி சட்டமன்ற உறுப்பினரும் நானும் கந்தப்பன் அவர்களும் விவசாயிகளுக்கு சாதகமாக வாதாடியிருக்கிறோம். நாங்கள் எடுத்துச் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் பாதிக்கப்பட்ட அந்தப் பொதுமக்கள் பேரறிஞர் அண்ணா அவர்களிடம் அவர்கள் 1967-ல் பொறுப்பேற்றுக்கொண்ட நேரத்தில் மனுக்கொடுத்தார்கள். அண்ணா அவர்கள் உடனே சட்டமன்ற உறுப்பினர் எல்லோரையும் அழைத்து வைத்துப்பேசி நிலைமையை நன்கு தெரிந்துகொண்டு, 'விவசாயிகள் கேட்பது நியாயம்' என்று ஒப்புக்கொண்டு எந்தவிதமான விசாரணையுமின்றி "அவர்களுக்குத்தான் நிலம் கொடுக்கப்படவேண்டும்" என்ற முடிவிற்கு வந்தார்கள், கலைஞர் அவர்கள் பட்டா கொடுத்தார்கள். இந்த உண்மைகள் முழுதும் மதிப்பிற்குரிய சுரேந்திரன் அவர்களுக்குத் தெரியும், ஆனால் அவர் அந்தப் பக்கத்திற்குப் போய் விட்டார்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: அண்ணா அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். உண்மை. ஆனால் அதற்கு இடையூறு செய்தவர்கள் இன்று ஆளும் கட்சியில் இருக்கிறார்கள். அந்த விவசாயிகள் சென்னைக்கு வந்து அண்ணா அவர்கள்

வீட்டிற்கு வந்து, முறையிட்டுக்கொண்டு 'இதில் நியாயம் கிடைக்கவில்லையென்றால் போராட்டம் நடக்கும்' என்று சென்னையில் சுவரொட்டிகள் போட்ட பிறகுதான் அண்ணா அவர்கள் அமல்படுத்தினார்கள். அண்ணா அவர்கள் சொன்னார்கள், ஆனால் இடையிலே பலர் தடுத்தார்கள். இன்று அவர்கள் ஆளும் கட்சியில் இருக்கின்றார்கள்.

திரு. எஸ். ஆறுமுகம்: யார் யார் என்று சொல்லமுடியுமா? சும்மா பொய் சொல்லக் கூடாது. அப்பட்டமான பொய்யைச் சொல்லக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அப்படிப் பேசக் கூடாது. பொதுவாக அந்த வார்த்தையை உபயோகப்படுத்தக்கூடாது.

திரு. எஸ். ஆறுமுகம்: இப்படி வெளியேற்றப்பட்டவர்களுக்கு மீண்டும் நிலம் கொடுக்கப்படும் என்று அறிவித்தபோது, அவர்களுக்குக் கிடைக்காமல் ஒரு சிலர் சங்கத்தை வைத்துக்கொண்டு, தங்கள் சங்கத்தில் உள்ளவர்களுக்குத் தான் நிலம் கொடுக்கப்பட வேண்டும் என்று முயற்சி செய்தார்கள். அதைத் தான் கந்தப்பன் அவர்கள் எதிர்த்தார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படிக் குறுக்கிட்டால் அவர் எப்படி முடிக்க முடியும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நானே சொல்லுகிறேன். சிலர் சங்கத்தை வைத்துக்கொண்டு அந்தச் சங்கத்தின் மூலம் அந்த நிலங்களைத் தாங்கள் பகிர்ந்துகொள்ளலாம் என்று நினைத்தாலும், அதற்கு இடம் கொடுக்காமல் கந்தப்பன் அவர்கள் தடுத்ததுதான் உண்மை. உண்மையான விவசாயிகள் யாரோ, யார் உண்மையிலேயே அவற்றை உழுதுகொண்டு இருந்தார்களோ அவர்களுக்குத்தான் அந்த நிலங்களைப் பகிர்ந்துகொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் முடிவெடுத்தது. அண்ணா அவர்கள் முதலில் அவர்களுக்குப் பத்தாண்டு குத்தகையில் கொடுக்கலாம் என்று எண்ணினார். பின்னர், நான் முதலமைச்சராக வந்தபிறகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், போஸ்டர்கள் போட்டார்கள் என்றெல்லாம். அதெல்லாம் எனக்கு நினைவில்லை. ஆனால் நான் மேட்டூருக்குக் கூட்டத்திற்குப் போயிருந்த நேரத்தில் இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. உடனடியாக அதை ஏற்றுக்கொண்டு இரண்டொரு மாதகாலத்தில் அந்தக் கோரிக்கை அமலுக்கு வந்தது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவுசெய்து குறுக்கிட வேண்டாம். நீங்கள் அடுத்துப் பேச இருக்கின்றீர்கள். அப்போது பேசுங்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: முதலமைச்சர் அவர்கள் உண்மைக்குப் புறம்பாகப் பேசும்போது அதை நான் மறுத்தாகவேண்டும். யார் யார் எப்படி எப்படி இதில் நடந்து கொண்டார்கள் என்பது எனக்குத் தெரியும். இந்தப் பிரச்சனை இங்கே வரும் என்று தெரிந்திருந்தால் அவர்கள் வெளியிட்டிருந்த அந்த நோட்டீசைக் கொண்டு வந்திருக்க முடியும். பொறுப்புள்ள முதலமைச்சர் அவர்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து நீங்கள் பேச இருக்கின்றீர்கள். உங்கள் பெயர் இருக்கிறது. அப்போது நீங்கள் பேசலாம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, வனவாசி-பக்கநாடு நிலங்களில் ஆக்கிரமிப்புச் செய்திருந்தார்கள். செய்தவர்கள் ஐந்து பத்து ஏக்கர் முதல் ஐம்பது ஏக்கர் வரையில்கூட செய்திருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்பது கோரிக்கை. ஆனால் நஞ்சை நிலமாக இருந்தால் ஒன்றரை ஏக்கரும் புஞ்சை நிலமாக இருந்தால் மூன்று ஏக்கர் நிலத்தையும்தான் பட்டா செய்து கொடுக்கலாம் என்று அரசாணை பிறப்பித்திருக்கிறது. அங்கு வந்த நமது முதலமைச்சர் அவர்களும் அந்த அடிப்படையில் பட்டா செய்துகொடுங்கள், மிச்சமுள்ள நிலத்தை நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுங்கள் என்று உத்திரவிட்டார்கள். இதைத் தான் அரசு நிறைவேற்றிவருகிறதே தவிர பட்டா கொடுக்கக்கூடாது ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கே நிலத்தை விட்டுவிட வேண்டும் என்று சொன்னால் அது விவசாயிகளுடைய போராட்டமில்லை, அது முதலாளித்துவப் போராட்டம்.

திரு. எஸ். ஆறுமுகம்: அந்த அளவிற்கு விவசாயப்பெருங்குடி மக்கள்மீது அக்கறை கொண்ட அரசுதான் இந்த அரசு. ஆனால் அவர்களுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு சிலர் போராட்டத்தில் இறங்கினால் அந்தப் போராட்டத்திற்குப் பொதுவுடைமைக்கட்சி என்று சொல்லிக்கொண்டு இருக்கின்றவர்களும் ஆதரவு கொடுத்ததன் நோக்கம் இந்த நாட்டில் ஜனநாயக அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்துகொண்டு வருகிறது. இந்த ஆட்சியை மாற்றுவதற்குப் பலாத்காரம் தவிர வேறு வழியில்லை என்று ஒரு முடிவிற்கு வந்தபிறகு இன்று இவைகள் எல்லாம் திட்டமிட்டுச் செய்யப்படும் காரியங்களே தவிர வேறு ஒன்றும்இல்லை. போராட்டக் காலத்தில் மத்திய அமைச்சர்கள் எல்லாம் இங்கே வந்திருக்கிறார்கள். வந்து எப்படிப்பட்ட

கருத்துக்களைப் பேசியிருக்கிறார்கள்? எங்கள் மாவட்ட மத்திய அமைச்சர் திரு. மோகன் அவர்கள் ஏற்காட்டிற்கு வருகின்றார்கள். அங்கே சிலரை உட்காரவைத்து, நமது மாநில போலீசைக்கூட வெளியேறச் சொல்லிவிட்டு ரகசியமாகப் பேசுகிறார். சோஷலிசத் தத்துவத்தைத்தான் போதிக்கிறாரா அல்லது அது போதாது என்று கம்யூனிஸத் தத்துவத்தைச் சொல்லி, ஒருவேளை இந்திராகாந்திக்கு அவரது அரசுக்கு ஆபத்து ஏற்படுத்துவதற்குத் திட்டம் இடுகிறாரோ என்னவோ எனக்குத் தெரியாது. பின்னால்தான் இந்திராகாந்தி காங்கிரஸ்காரர்கள் அதை உணருவார்கள். இன்றைக்கு கம்யூனிஸ்டு கட்சியிலிருந்த பலர் மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கின்றார்கள். பல மாநிலங்களிலே கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்தவர்கள் இந்திரா காங்கிரசில் இணைந்து அங்கே அமைச்சராக இருக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்கிறதை அவர்களால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை.

இப்படிப்பட்ட செயல்களிலே இன்றைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திரா காங்கிரஸும், இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரிக்கும் மற்றவர்களும் ஈடுபட்டு, திறமையாகச் செயல்பட்டு வருகின்ற கழக அரசின் மீது பழி சுமத்தி வருகிறார்கள். இப்படிப்பட்டச் சம்பவங்கள் தமிழ்நாட்டிலே ஏற்படுவதற்கு இந்தக் கட்சிகள் தான் முழுப் பொறுப்பும் ஏற்கவேண்டும். நீங்கள்தான் மக்களுக்கு பதில் சொல்லவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் மக்களிடத்திலே கொண்டிருக்கிற நம்பிக்கை நிலையானது. மக்கள் இந்த ஆட்சியின் பக்கம் இருக்கிறார்கள். இன்றைக்கு மக்களின் நம்பிக்கையை இழந்திருக்கும் இந்தக் கட்சிகள்தான் இந்த அரசின்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதைப் பார்த்து நான் வேதனைப் படுகிறேன்.

உத்திரபிரதேசத்தில் துப்பாக்கி சூடு. 30 பேர்களுக்குமேல் பெண்கள் கற்பழிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இங்கே நடந்த சம்பவங்களைப்பற்றி சொல்லி, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப்பற்றி விவாதிக்கும்போது எங்கெங்கேயோ உள்ள சம்பவங்களைச் சொல்கிறார்கள்.

திரு. எஸ். ஆறுமுகம்: அப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்ற உத்தரப் பிரதேசத்தில் நீதிவிசாரணை இல்லை. அங்கிருந்து மத்திய அமைச்சர்கள் இங்கே வந்து விசாரணை வைக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். டில்லியிலிருந்து 20 மைல் தொலைவில் உள்ள உத்தரப்பிரதேசத்தை விட்டுவிட்டு, அந்த முதலமைச்சரை நீதிவிசாரணை வைக்கச்சொல்வதை விட்டுவிட்டு, இங்கே வந்து சொல்கிறார்கள். ஏன் அங்கே போய் அதைச் சொல்வதுதானே?

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். அங்கே சந்திராசேகரன் என்பவர் கொலை செய்யப்பட்டார். வழக்கு கோர்ட்டிலே இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: உயிரோடு இருப்பவர்களை எல்லாம் செத்து விட்டார் என்று சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: செத்தவர்களை எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்.

திரு. எஸ். ஆறுமுகம்: அது சம்பந்தமாக வழக்கு கோர்ட்டிலே இருக்கிறது. ஆனால் அந்த வழக்கு சம்பந்தப்பட்ட ரிக்கார்டுகள் காணாமல் போய்விட்டன. இன்றைக்கு வடக்கே அப்படி நடக்கிறது. ஆகவே, அங்கே ஒரு நீதி, தமிழ் நாட்டுக்கு ஒரு நீதியா? தமிழ்நாட்டிலிருக்கிற கழக அரசு மக்களை மதிக்கிற அரசு; மக்களைப் புரிந்து கொண்ட அரசு, சமதர்ம கொள்கைகளைக் கடைப் பிடிக்கிற அரசு தமிழுக்காகப் போராடிய அரசு, இப்படிப்பட்ட இந்த அரசை தமிழ் நாட்டு மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள், விலக்க மாட்டார்கள். இப்படிப்பட்ட இந்த கழக அரசின் மீது கொண்டுவந்திருக்கிற இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை நான் வன்மையாகக் கண்டித்து விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இங்கே இன்னொரு விளக்கத்தையும் கொடுக்க விரும்புகிறேன். மேட்டூர் பகுதியில், நீர்ப்பிடிப்புப் பகுதியில் தண்ணீர் குறையக் குறைய 3000 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்து இருக்கிறார்கள். தண்ணீர் ஏறுகிறபோது காலிசெய்துவிடுவது. தண்ணீர் வற்றும்போது மீண்டும் ஆக்கிரமித்துவிடுவது, இப்படி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கிறபோது அரசாங்கம் விவசாயிகளுக்குத் துரோகம் செய்கிறது என்று உண்மைக்குப் புறம்பான செய்தியைக் கிளப்பிவிடுகிறார்கள். நீர் பிடிப்பு பகுதியில் 20 ஏக்கர், 30 ஏக்கர், 200 ஏக்கர் வரைகூட ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை அரசு அப்புறப்படுத்தி, நீர்ப் பிடிப்பு பகுதியின் மேல் பகுதியில் நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்குப் பட்டா வழங்கியிருக்கிறது. அரத்தநாரீஸ்வரர் கவுண்டர் கூட அங்கே . . .

திரு. கே. டி. கே. தங்கமணி: எந்தப் பிரச்சனையை எடுத்துக்கொண்டாலும் அர்த்தநாரீஸ்வரரை ஏன் இழுக்க வேண்டும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மேட்டூர் நீர்ப்பிடிப்புப் பகுதியில் 50 ஏக்கர், 60 ஏக்கர் என்று 3000 ஏக்கர் வரை ஆக்கிரமித்திருக்கிறார்கள்.

அரசாங்கத்தினால் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நிலங்களை கைப்பற்றி, நீர்ப்பிடிப்பின் மேல் பகுதியில் உள்ள நிலத்தை நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு 1½, ஏக்கர் 3 ஏக்கர் என்ற வீதத்தில் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை இம்மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. ஓ. என். சுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தி.மு.க. அரசின்மீது கொண்டுவந்திருக்கிற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய ஒன்றிரண்டு கருத்துக்களையும், அனுபவங்களையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக நடந்த போராட்டங்களிலே தி.மு.க. அரசானது ஆங்காங்கே பல இடங்களில் வன்முறையை உண்டாக்கியிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டி, அதை ஒரு குற்றச்சாட்டாக நான் கூற விரும்புகிறேன். அடுத்து, போலீஸ் இலாகாவை நிர்வகிக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களுடைய கட்சிக்காரர்கள் செய்யக்கூடிய அட்டூழியங்களை ஆங்காங்கே உள்ள போலீசார் கண்டும் காணாததுபோல் இருந்துவிடுகிறார்கள். அதற்கு தி.மு.க. அரசுதான் காரணம் என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

அடுத்ததாக, ஜனநாயக அமைப்பிலே இருக்கின்ற எதிர்க்கட்சிகளின் அமைப்பை ஒழுங்கீனப்படுத்துவதற்குத் தன்னாலான முயற்சியைச் செய்கிறார்கள் என்று நான் வன்மையாகக் குற்றஞ்சாட்டுகிறேன். அதனால்தான் பெத்தநாயக்கன்பாளையத்திலே துப்பாக்கியால் சுடப்பட்டு, பல உயிர்கள் சாகடிக்கப்பட்டன. அப்படியிருந்தும் போராட்டக் குழுவினர் அமைதியாகவே நடந்து கொண்டனர் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திண்டுக்கல்லிலே ஜூன் மாதம் 3-ம் தேதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டமானது 3, 5, 7, 11 என்ற பல்வேறு தேதிகளில் சாத்வீகமான முறையில் நடைபெற்று வந்தது. அப்படி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது 28-ம் தேதி அன்று விவசாயிகள் சார்பாக ஒரு மாட்டுவண்டிகள் ஊர்வலம் நடத்தவேண்டுமென்று போராட்டக் குழுவின் தலைவர் என்ற முறையிலே எனக்குத் தெரிவிக்கப்பட்டது. 27-ந் தேதியில் நடைபெற்ற சர்வகட்சிகள் கூட்டத்தில் முடிவெடுத்து, அந்தக்கருத்தைப் பொதுக்கூட்டத்தில் வெளியிட்டிருக்கிறோம். அப்படி முன் கூட்டியே தெரியப்படுத்தியிருந்தும் கூட அன்று மாலை 4 மணியிலிருந்து எங்கள் கட்சியிலுள்ளவர்களையும், சர்வகட்சித் தலைவர்களையும் முன் எச்சரிக்கையாகத் தடுப்புக்காவல் சட்டத்தின்படி கைது செய்தார்கள். அது சம்பந்தமாக அன்று ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நானும் இருந்தேன். குடந்தை இராமலிங்கமும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். போலீஸ் பாதுகாப்பும் இருந்தது. அப்படி இருந்தும்கூட

அந்தக் கூட்டத்திலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் கல் எறிந்தார்கள். அப்படி எறியப்பட்ட ஒரு கல் ஒரு துண்டு காகிதத்தில் சுற்றப்பட்டிருந்தது. அந்த காகிதத்தில், "டேய் இராமலிங்கம் நீ உயிரோடு திரும்பிப் போக மாட்டாய்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இப்படி போலீஸ் பாதுகாப்பு இருந்தும்கூட இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றனவே என்று போலீஸ் அதிகாரிகளிடம் சொன்னேன்.

அதற்குப் பிறகு கூட்டம் முடிந்து, இரவு 11 மணிக்கு என்னுடைய மகன் வீட்டிலே குடந்தை இராமலிங்கத்தைத் தங்கச் செய்திருந்தேன். அங்கிருந்து காப்பி, டீ, பலகாரம் எல்லாம் சாப்பிட்டு முடிந்த பிறகு சுமார் 12½ மணி வரை அங்கே இருந்தேன். அதன்பிறகு என் வீட்டுக்கு வந்தேன். அன்று அதாவது இரவு முடிந்து காலையில் விவசாயிகள் போராட்ட மாட்டுவண்டி ஊர்வலம் வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இரவு 12 மணிக்கு பின்னால் நகர எல்லைக்கு அப்பால் சென்று வருகின்ற விவசாயிகளையும் மாடுகளையும், வண்டிகளையும் கைது செய்தார்கள். (சிரிப்பு) கைது செய்தார்கள். உண்மை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாடுகளையும், வண்டிகளையும் கைப்பற்றினார்கள் என்று சொல்லுங்கள்.

திரு. ஓ. என். சுந்தரம்: மாடுகளையும் வண்டிகளையும் கைப்பற்றிப் போராட்டத்தில் கலந்துகொள்ள வந்த விவசாயிகளை கைது செய்தார்கள். வந்தவர்கள் அப்படி கைது செய்யப்படுகின்ற நேரத்தில், அங்கே முனிசிபல் லிமிட்டுக்குப் பக்கத்தில் இரண்டு மூன்று டாக்ஸிகளிலே பலர் இருந்தார்கள். அவர்கள் நிலையை எப்படி வர்ணிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் கையில் வழக்கம்போல் சைக்கிள் செயினும், தடிகளும் வைத்திருந்தார்கள் கைது செய்யப்பட்ட விவசாயிகள் அவர்களை ஏன் கைது செய்யவில்லை என்று போலீஸ் அதிகாரிகளைக் கேட்டபோதும் அவர்களை கைது செய்யவில்லை. அதற்குப்பதிலாக 'யு ஆர் நாட் ரெஸ்பான்ஸிபிள் ஃபார் தட்' என்று சொல்லியிருக்கிறார்கள். கைது செய்யப்பட்ட விவசாயிகள் இதையெல்லாம் சொன்னார்கள். 28-ந் தேதி காலை 3 மணி அளவில் அந்த மூன்று டாக்ஸிகளில் இருந்தவர்கள் யார் யார் என்பதை நாங்கள் தந்திகள் மூலம் ஐ.ஜி.-க்கு தெரிவித்திருக்கிறோம். அந்த விபரம் சகல பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. பொறுப்பான பதவி வகிக்கக்கூடிய நகரசபைத் தலைவர் அந்தக் கோஷ்டிக்குத் தலைமை வகித்திருக்கிறார் என்பதை வேதனையோடு, வெட்கத்தோடு சொல்லிக் கொள்கிறேன். இரவு 3 மணி அளவில் அந்த வீட்டுக்கு இந்தக் கோஷ்டியினர் வந்து வீட்டில் ஏறிக் குதித்து அவருக்குத் துணையாக இருந்த ஊழியனை அடித்துக் காயப்படுத்தி, டாக்சியிலேயே அவனைக் கொண்டுபோய் போலீஸ்

ஸ்டேஷனின் பக்கத்தில் போட்டிருக்கிறார்கள். மறு படியும் அந்த வீட்டிற்கு வந்து கற்களை எல்லாம் எடுத்து வீசி, அங்கிருந்த பெண்களை—தேவ பாஷை என்று கூடச் சொல்லாம்—அதுபோன்ற தகாத வார்த்தைகளை எல்லாம் உபயோகப்படுத்திப் பேசியிருக்கிறார்கள். அதுபற்றி எல்லாம் நான் தந்தி ஐ.ஜி.-க்கு கொடுத்திருக்கிறேன். சம்பல் கொள்ளைக் காரர்கள் தாக்குவதுபோல இவை இருந்திருக்கிறது. இவை கட்சிக்காரர்கள் செய்கிறமாதிரியா இருந்தது? மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் இவற்றை எல்லாம் கண்டித்தார்களா? அதுபற்றி என்ன பதில் சொல்லப்போகிறார்கள்? தக்க பதில் சொல்வார்கள் என்று நம்புகிறேன்.

29, 30 ஆம் தேதிகளில் கல்லூரி மாணவர்கள் எம்.ஏ., பி.எஸ்.ஸி. பி.காம், படிக்கிறவர்கள் எல்லாம் 24 பேர்கள் கையெழுத்திட்டு மறியலில் ஈடுபட போராட்டக் குழுத் தலைவன் என்ற முறையில் என்னிடத்தில் லிஸ்ட் கொடுத்தார்கள். இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் என்னிடம் வந்தபோது கூடச் சொன்னேன், மாணவர்களை இதில் சம்பந்தப்படுத்தக்கூடாது என்பதாக. அவர்களும் என் கருத்தை ஆதரித்தார்கள். ஆக, திண்டுக்கல்லைப் பொறுத்த வரை போராட்டம் விவசாயிகளால்—பல கட்சிக்காரர்களும் இருந்தார்கள்—அமைதியான முறையில்தான் நடத்தப்பட்டது. அப்படி அமைதியாக நடைபெற்று வந்த இடத்தில் 2 ஆம் தேதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கூட்டப்பட்ட கூட்டத்தில் பலர் ஆவேசமான பேச்சுக்களைப் பேசி—5 ஆம் தேதி ஹர்த்தாவின்போது கடைகள் அடைக்கப்பட்டால் கமிஷன் வியாபாரிகள் கைவெட்டப்படும் என்பதாக எல்லாம் சொன்னார்கள். இப்படிப் பகிரங்கமாக வன்முறையைத் தூண்டிவிட்டவர்கள் யார்? இருந்தும் 5 ஆம் தேதி பெரும்பான்மையானவர்கள் கடைகளை அடைத்திருந்தார்கள். மறியலில் ஈடுபட்டவர்கள் அங்கே எங்காவது வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று நிரூபிக்கப்பட்டால் போராட்டக் குழுவின் தலைவன் என்ற முறையில் நீங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும் நான் ஏற்றுக்கொள்ளத் தயார். ஆளும் கட்சியினர்கள்தான் வன்முறையைத் தூண்டிவிட்டார்கள். 4 ஆம் தேதி நள்ளிரவு முதலே தமிழர் படை என்கிற பாட்ச் அணிந்தவர்கள் தெருக்களில் சுற்ற ஆரம்பித்தார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் நான் 5 ஆம் தேதி காலை மருத்துவ மனைக்கு இன்சுலின் ஊசி போட்டுக்கொள்ளச் சென்றபோது என் கண்ணாலேயே காலை பத்து மணிக்குப் பார்த்தேன், தமிழர் படை என்கிற பாட்சை அணிந்துகொண்டு இவர்களது தொண்டர்கள் கும்பலாகப் போய்க் கொண்டிருந்ததை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மதுரையில் நிருபர்களிடம் பேசும்போது, 'தமிழர் படை என்கிற அமைப்பே இல்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். வழக்கம் போலுள்ள ஆயுதங்களை வைத்துக்

கொண்டு அவர்கள் தெருக்களில் திரிந்துகொண்டிருந்ததை நானே பார்த்தேன். அப்படி இருந்தும் 90 சத விதம் கடைகள் திண்டுக்கல் நகரத்தில் திறக்கப்படவில்லை பந்த் வெற்றியா, தோல்வியா என்பது ஒருபுறம் இருந்தாலும் இந்தத் தமிழர் படை தொண்டர்கள் 5-ஆம் தேதி புறநகர்ப் பகுதிகளில் கடைகளை மூடினார்கள் என்பதற்காகச் சிறு கடைக்காரர்களை எல்லாம் தாக்கி அடித்துத் துன்புறுத்தியிருக்கிறார்கள். இதுபற்றி போலீசிலும் புகார் செய்யப்பட்டிருக்கிறது. இப்படிப் பலச் சம்பவங்கள் ஆளும் கட்சியினர் தான் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்கிற குற்றத்தை நான் சாட்டுகிறேன்.

3-ம் தேதி அன்று காலை 9 மணி அளவில் சென்னை கவர்னர் அவர்கள் மதுரை சர்க்யூட் ஹவுசில் தங்கியபோது அவரைப் போய்ப் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நானும் ஒரு சட்டமன்ற உறுப்பினன் என்ற முறையில், விலாசம் இல்லாவிட்டாலும், அந்தக் குழுவோடு சென்றிருந்தேன். நாங்கள் கவர்னரிடம் கொடுத்த மனுவில் முக்கியமாகக் குறிப்பிட்டிருந்தது நான்கு பாயிண்டுகள் தான். பந்த் நடந்தபோது வன்முறைச் செயல் நடைபெற்றது, சிறப்புக் கூட்டத்திற்காக வசூலிக்கப்பட்ட கட்டாய வசூல்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள் பற்றிய பட்டியலில் பல பேர்கள் விடப்பட்டிருந்தது, பொன்னாடை போர்த்துவதற்கு இந்த மகாநாட்டில் திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர்—வனக்கத்திற்குரியவர் நடந்துகொண்ட முறை போன்ற நான்கு குறிப்புகளைத்தான் கொடுத்தோம். அவர்கள் அனுதாபத்தோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் லிஸ்ட் இருக்கிறதா என்று கேட்டார்கள். இருக்கிறது என்று சொன்னதற்கு கலெக்டர் மூலமாக ஆளுநர் அலுவலகத்திற்கு அதை அனுப்பி வைக்கும்படி சொன்னார். எந்த இடத்திலும் கட்டாய வசூல்பற்றி அவர் எதுவும் பதில் சொல்லவில்லை. அதைப்பற்றிய பேச்சும் விரவில்லை. இதைச் சபைக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற காரணத்திற்காக நானும் அந்தக் குழுவினருடன் சென்ற காரணத்தினால் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கடைசியாக ஆளுநர் தெரிவித்தது 'My Powers are limited. So I shall consider this.' என்பதுதான்.

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, on a point of order. Sir, under rule 67, a Member, while speaking must not use the Governor's name for the purpose of influencing a debate. Now the hon. Member is tryiny to influence the debate by using the Governor's name and so, that portion should be expunged.

திரு. ஒ. என். சுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, அது மாதிரியான பிரச்னைகள் வந்த காரணத்தினால் அதை நான் குறிப்பிட வேண்டியதா

பிற்று. சபை விதிகளின்படி தவறாக இருந்தால், நீங்கள் எடுத்துச் சொன்னால் நான் திருத்திக் கொள்ளத் தயார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் ஆளுநர் அவர்களைப்பற்றி இங்கே குறிப்பிடாமல் இருப்பது நல்லது. அவரை இந்த அவையில் எந்த விதமான விவாதத்திற்கும் உள்ளாக்கக்கூடாது.

திரு. கே. டி. கே. தங்கமணி : கவர்னர் அவர்களிடம் மகஜர் கொடுத்திருக்கிறோம். அந்த மகஜரை சர்க்கார் கவனிக்க வேண்டும் என்று சொல்வதற்கு உரிமை உண்டு.

Mr. DEPUTY SPEAKER : Mere reference is all right.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கவர்னர் அவர்களிடம் விண்ணப்பம் கொடுக்கலாம். அந்த விண்ணப்பத்தை அரசு கவனிக்க வேண்டுமென்று சொல்லலாம் என்று கூறினார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் கூறியது அது அல்ல. கவர்னர் அவர்களிடம் வன்முறைச் சம்பவங்கள் பற்றிக் குறிப்பிட்டதாகவும், மற்ற சில பாயிண்டுகளும் குறிப்பிட்டதாகவும், அவர் தாம் செயலற்ற நிலையில் இருப்பதாகக் கூறியதாகவும் இப்படி தன்னுடைய வாதத்திற்குச் சாதகமாக கவர்னர் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர் குறிப்பிட்ட செய்தி உண்மை என்றோ, தவறு என்றோ நான் சொல்லத் தயாராய் இல்லை. தன்னுடைய வாதத்திற்குச் சாதகமாக கவர்னரைப் பற்றிக் குறிப்பிட்டு திசை திருப்புகிற முறையில் பேசக்கூடாது என்பதுதான் சபை விதி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது சட்டசபை நடவடிக்கைக்கு மாறுபட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஆன் ஏ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். இந்த மன்றத்திலே கவர்னர் அவர்களைக் குறிப்பிட்டு பேசுவது முறையல்ல.

'the name of the Governor should not be used to influence the debate' என்ற வகையிலே இருக்கும் என்பதால் அப்படிப் பேசக்கூடாது என்று மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அதே நேரத்திலே நான் துணைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த மன்றத்திலே இரண்டு தினங்களுக்கு முன்பாக மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் பேசும்பொழுது மதுரையிலே காங்கிரஸ் கட்சித் தலைவராக இருக்கும் மாறன் அவர்கள் கவர்னர் அவர்களைச் சந்தித்துப் பேசியதாகவும், சில குற்றச்சாட்டுக்களைச் சொன்னதாகவும், அதற்கு கவர்னர் அவர்கள் அதை நிரூபிக்க முடியுமா என்று

கேட்டதாகவும் சில தகவல்களை முதலமைச்சர் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னால் இந்த மன்றத்திலே கொடுத்தார்கள். அந்த வார்த்தைகளைச் சட்ட மன்றக் குறிப்புகளிலிருந்து தலைவர் அவர்கள் நீக்கிவிடவில்லை. தவறாகவோ, சரியாகவோ அது டீவியேஷன் ஆகிவிட்டது. ஆகவே அந்த வாய்ப்பு முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதைப் போல் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் அந்த வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே வாய்ப்புக் கொடுத்துவிட்டு இன்னொரு உறுப்பினருக்கு அதே வாய்ப்பைக் கொடுக்காமல் விட்டுவிட்டால் அங்கே ஒரு நிலைமையும் இன்னொரு உறுப்பினருக்கு ஒரு நிலைமையும் கொடுப்பது என்ற நிலை ஏற்பட்டால் வேறு நிலைமையில் கொண்டு போய்விடும். நோ கான்பிடன்ஸ் மோஷன் கொடுத்தாலே அதன்மேல் விவாதம் கொஞ்சம் காரசாரமாகத்தான் இருக்கும்.

THIRU K. T. K. THANGAMANI : Sir, with your permission I would like to read Rule 67. It says—

'. . .

'(iv) reflect upon the conduct of the President or Governor or any Court of Justice;

(v) use the Governor's or President's name for the purpose of influencing a debate; . . .'

Sir, using the name of the Governor for the purpose of influencing the debate and bringing in a fact where the Governor is concerned, are two different things. That is why even yesterday I mentioned the constitutional position clearly stated by the Chief Minister of Kerala. Anybody is free to meet the Governor and give a memorandum but he cannot take action on it. The policy has to be decided by the Government and implemented by the Government. So, we, as Members, are at perfect liberty to bring to the notice of this House and through you to the Government that the Memorandum has been given. If the hon. Member wants to read the contents of the Memorandum, he can hand over a copy of it to the Hon. Speaker and if he permits he can read out the contents of the memorandum.

THIRU R. PONNAPPA NADAR : So far as this point is concerned, the learned Member has just referred to certain facts mentioned in the Memorandum. Certain facts mentioned in the Memorandum will not in any way influence the debate, as also the dragging in the name of the Governor.

So far as the contents of the Memorandum are concerned, the hon. Member has mentioned certain points and that does not mean that he is not in a legal position to use that on the floor of the House. Certain observations have been made in this House and that is the reason which has impelled him to clarify that point. That is how this came in and so there is no impropriety or infringement of the rule as stated by the Hon. Minister for Co-operation. Therefore, there is no point of order.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : So far as this rule is concerned, the name of the Governor should not be brought in to influence the debate. But here everybody knows that the Governor was receiving petitions from the public and it was published in the newspapers and the hon. Member is only narrating the fact and his conversation with the Governor. . .

MR. DEPUTY SPEAKER : It depends upon the mode and manner. . .

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இங்கே எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்னைகள், நேற்றைய தினம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்ன காரணத்தால், அந்த முறை அப்படியே தொடரவேண்டும் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். எத்தனையோ பிரச்சனைகளில் சில நேரங்களிலே உண்மை உடனடியாகத் தெளிவாவதில்லை. எந்த நிமிடத்திலே உண்மை தெளிவாகிறதோ அந்த நிமிடத்திலிருந்து தகுந்த முறையைக் கையாள்வதுதான் வழக்கம். பாயின்ட்ஸ் ஆப் ஆர்டர் எழுப்பப்பட்டால் அவற்றிலே எந்த நிமிடத்திலே தெளிவான முறை ஏற்பட்டுவிடுகிறதோ அந்த நிமிடத்தில் இருந்து அந்த முறையைக் கடைப்பிடிப்பதுதான் சட்ட மன்ற உறுப்பினர்களின் கடமையும் உரிமையும் ஆகும். இது ஒன்று. இரண்டாவதாக, ஆளுநர் அவர்களுடைய பெயரைக் குறிப்பிட்டுச் சொல்வது தவறு என்று சொல்லவில்லை. உறுப்பினர்கள் தங்களுடைய வாதத்திற்கு கவர்னர் அவர்களைத் துணைக்கு வைத்துக்கொள்ளக் கூடிய வகையில் பேசக்கூடாது என்பதுதான் சொல்லப்பட்டது. மேதகு ஆளுநர் அவர்களிடம் மகஜரைக் கொடுத்துவிட்டதாகச் சொல்லிவிட்டு பிறகு உங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம். அப்படியில்லாமல் ஆளுநர் அவர்களுடன் நடத்திய வாதத்தை உறுப்பினர்கள் தங்களுடைய விவாதத்திற்குத் துணையாக வைத்துக்கொள்வது முறையல்ல என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆளுநரிடம் கொடுத்ததைப் பற்றி இங்கே குறிப்பிடலாம். ஆனால் ஆளுநர் அவர்களுடன் பேசிய கருத்துக்

களை எடுத்துச் சொல்வது கவர்னர் அவர்களை இங்கே இழுப்பதாகத்தான் போய் முடியும். ஏற்கனவே பேசிய நேரத்திலே கருத்துத் தெளிவில்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் தெளிவான பிறகு தெளிவான முறையைக் கடைப்பிடிப்பதுதான் மரபாகும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : உங்களுக்குச் சாதகமாக இருக்கிற நேரத்திலே கருத்துத் தெளிவு ஏற்படுவதில்லை. ஆனால் . . . . .

MR. DEPUTY SPEAKER : Yesterday the hon. Member could have raised the point of order. . .

DR. H. V. HANDE : Yesterday the point of order was raised அப்பொழுது குறிப்புகளிலிருந்து எடுக்காமல் இருப்பது. ஆனால் இப்பொழுது அப்படிப் பேசக்கூடாது என்று சொல்வது. நடந்தது நடக்கட்டும். இனிமேல் நான் ஒத்துழைப்புத் தருகிறேன். இனிமேல் சரியாக நடந்து கொள்ளலாம்.

Let us not be very sensitive about it.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆளுநர் அவர்களிடம் கொடுத்ததைச் சொல்லலாம். ஆனால் ஆளுநர் குறிப்பிட்டதாகச் சொல்லி அவற்றையெல்லாம் இங்கே கூறுவது சரியல்ல.

திரு. தா. விராசாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், நடந்தது நடக்கட்டும், இனிமேல் சரியாக நடந்துகொள்வோம் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். எதிர்க்கட்சிகள் எல்லாம் கவர்னரை இங்கு இழுத்துச் சொல்ல வேண்டிய கருத்துக்களையெல்லாம் சொல்லியாகிவிட்டது. இந்த நிலையில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள், கவர்னர் பேச்சை வைத்துக் கொண்டு இங்கு பேசக்கூடாது என்ற கட்டுப்பாட்டைப் போடுகிறார்கள். அதற்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒழுங்குப் பிரச்சனைகளிலே கருத்துத் தெளிவு ஏற்பட்டதற்குப் பிறகு தெளிவான முறையைத்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பின்பற்ற வேண்டும். அது அனைவரையும் கட்டுப்படுத்தும்.

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, I will explain my point of order. I have stated that the Governor's name must not be used for the purpose of influencing the debate. The learned Lady Member has stated that the Governor's name was not used

(Thiru Si. Pa. Aditanar) [1972 ஆகஸ்ட் 11

for influencing the debates. If it was not used for the purpose of influencing the debate one way or the other, even then it is not advisable because it is stated in another rule that every speech must be directly related to the matter before the House and so in that case also it becomes irrelevant and it is out of order.

DR. H. V. HANDE : What happened to it yesterday ?

மினிஸ்டருக்கு நேற்று என்ன ஆயிற்று?

(திருமதி அனந்தநாயகி அவர்கள் எழுந்தார்கள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள். விதிமுறைகள் ஒரு புறம் இருக்கின்றன. நாம் அப்படியே அவற்றைக் கடைபிடிக்கிறோம் என்று எப்படிச் சொல்ல முடியும்? ஆனால் விதிமுறைகளுக்கு மாறாக நாம் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்குப் பிறகு நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போன்று அப்பொழுது யாராவது அதைப்பற்றி எழுப்பியிருந்தால் சரியாக இருந்திருக்கலாம். அதைத்தான் நான் ஹாண்டே அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்பியிருக்கிறார்கள். கூடியவரையில் ஆளுநர் அவர்களை இந்தச் சபையிலே இழுக்காமல் இருப்பதுதான் நல்லது. அப்படியில்லாமல் ஆளுநர் அவர்களோடு பேசியதை எல்லாம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் வாதத்திற்குத் துணையாக ஏற்படுத்திப் பேசுவார்களானால், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் நம்மைவிட சுபீரியர் அதாரிடியிடம் அவர்கள் போகிறார்கள், அதைப் பற்றிச் சொல்கிறார்கள் என்பதால், தாங்களும் தங்களுடைய வாதங்களைச் சொல்லக் கூடிய நிலை வரும். ஆகவேதான் கூடிய வரையில் கவர்னரை விவாதத்திற்கு இழுக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒ. என். சுந்தரம் : நேற்று அவர்கள் அதைக் குறிப்பிட்டுச் சொல்லிய காரணத்தினாலேதான் நான் குறிப்பிடவேண்டியதாயிற்று. கவர்னருடைய பெயரை நான் டெனிக்ரேட் பண்ணவோ அல்லது எதிர்த்துப் பேசவோ பயன்படுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழகத்தில் தொழில் அமைதி மிகவும் சீர்கெட்ட நிலையில் இருக்கிறது. ஜூன் மாதம் 22-ஆம் தேதி முதல்வரவர்கள் திருபர்கள் கூட்டத்தில், தமிழ்நாட்டில் தொழில் அமைதி மிகவும் கெட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். ஜூன் மாதம் 26-ஆம் தேதி அன்று சேம்பர் ஆஃப் காமர்சில்

1972 ஆகஸ்ட் 11] [திரு. ஒ. என். சுந்தரம்]

பேசும்பொழுது, 62-வது ஆண்டு விழாவில் பேசும்பொழுது அங்கே, தமிழகத்தில் இன்னும் நடைபெறும் சம்பவங்கள் ஒன்றிரண்டு சம்பவங்களைத் தவிர தொழில் அமைதியாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி முன்னுக்குப் பின் முரணாகப் பேசும்பொழுது நாங்கள் எதை சரி என்று நினைப்பது, நாங்கள் எந்தக் கண்ணோட்டத்தில் பார்ப்பது என்று தெரியவில்லை.

கடைசியாக இந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தவர் செய்த பலாத்காரச் செயல்களைப் பார்க்கும்பொழுது, என்னுடைய தொகுதியிலே நடந்த சம்பவங்களைப் பார்க்கும்பொழுது, எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்கள் எதையும் தாக்கும் இருதயத்தை எப்படி அடைந்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இப்படி வன்முறையைக் கையாளுகின்ற இந்தச் சர்க்காரின் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தை நான் ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆலடி அருணா : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் விழுமிய தலைமையில் இருக்கும் இந்த அமைச்சரவைக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் கொடுக்கப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து என்னுடைய கருத்துக்களை இந்த மேலான அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு ஆசைப்படுகிறேன்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்திருப்பவர்கள் எதற்காக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம், என்கொண்டு வந்திருக்கிறோம், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் முன்மொழிவதால் மக்கள் மத்தியிலே எதை எதிர்பார்க்கிறார்கள் என்பதை ஏற்கனவே விளக்கியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த அளவில், அவர்கள் திட்டமிட்ட அளவிற்கு அல்லது அவர்கள் ஆசைப்படும் அளவிற்கு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் மக்கள் மத்தியிலேயோ அல்லது பத்திரிகைகளின் மத்தியிலேயோ அவர்கள் பரபரப்பை உண்டாக்க முடிந்ததா என்றால் நிச்சயமாக இல்லை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கூர்மையிழந்த கத்திகளை இந்த மாமன்றத்திலே உபயோகிக்கிறார்கள். முதல்வரவர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் எடுத்துக் கூறுகின்ற ஆதாரங்களைச் சந்திக்க முடியாமல் இன்றையதினம் மக்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எவ்வளவு நகைப்பிற்குரிய பொருளாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இனி பேசுகின்றவர்களாவது எதிர்காலத்தில் நம்புவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இன்றைக்கு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பவர்கள் 1971-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இந்தத் தமிழக மக்களைச் சந்தித்த நேரத்தில் எதைச் சொல்லி வாக்குகளைக் கேட்டார்கள்? எந்த

நியாயத்தை மையமாகச் சொல்லி வாக்குகளைக் கேட்டார்கள்? திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும், திராவிட முன்னேற்றக் கழக அரசை நடத்திச் செல்லும் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் தோழமையோடு இருப்போம், துணை தொண்டாற்றுவோம், அவர்களுக்குப் பக்க துணையாக இருப்போம், அவர்களது படை வரிசையாக விளங்குவோம் என்றுதான் வாக்குகளைக் கேட்டார்கள். ஆனால் அப்படி வாக்கு பெற்ற கணிசமான பகுதியினர் மக்களுக்கு நம்பிக்கையை உண்டாக்கிவிட்டு பிறகு துரோக சிந்தனையோடு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் வைத்திருக்கின்றார்கள். எனவே, நாம் மக்களுக்குத் துரோகம் இழைத்தால் மக்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்பதைப்பற்றி அவர்களே தெளிவான முடிவுக்கு வரமுடியாமல் சஞ்சலப்பட்டு வருவதற்காக நான் அனுதாபப்படுகிறேன்.

இந்த அரசு, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரக்கூடிய அளவில் என்ன கொடுமையைப் புரிந்து விட்டது, எந்தத் தவறைப் புரிந்து விட்டது, எந்தவிதத்தில் சோஷலிசத்திற்கு எதிராகச் சென்றது, எந்த வகையில் சட்டம் அமைதியைப் பாதுகாக்கத் தவறிவிட்டது என்பதைத் தீர்மானத்தை முன்மொழிந்த தலைவர்கள் தெளிவாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசாங்கத்தினுடைய பெருமையையும், இந்த அரசாங்கத்தினுடைய ஆக்கபூர்வமான வேலைகளையும், இந்த அரசாங்கம் சோஷலிச சமுதாயத்தை உருவாக்குவதற்காக எவ்வளவு தீவிரமாகச் செயல்படுகிறது என்பதை உண்மையிலேயே உணர்ந்துகொள்ள வேண்டுமானால், இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பல்வேறு மாநிலங்களும் எந்தச் சூழ்நிலையில் இருக்கின்றன என்பதைப் பரிசீலித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஜூன் மாதத்தில் பள்ளிகள், கல்லூரிகள் திறக்கப்பட வேண்டும். ஆனால் ஜூன் மாதம் முடிந்து 2 அல்லது 2½ மாதங்கள் ஆகியும் இன்னும் கேரளாவில் பள்ளிகள் திறக்கப்படவில்லை. ஆனால் அதைப்பற்றி அந்த அரசாங்கத்திற்கு ஆதரவானவர்கள் அல்லது அந்த அரசாங்கத்திற்கு ஆதரவாகக் கொடியைத் தூக்குகின்றவர்கள் ஞாபகப்படுத்திப் பார்த்தார்களா? கேரளாவில் இருக்கும் விபரீதமான, விரும்பத்தகாத சூழ்நிலை இந்த மாநிலத்தில் இருக்கின்றதா? பீஹாரிலும், மேற்கு வங்காளத்திலும் இருக்கின்ற அளவிற்கு பஞ்சம் தலைவிரித்தாடுகின்றதா இந்த மாநிலத்தில்? 70-க்கு மேற்பட்டவர்கள் பஞ்சத்தால் இறந்திருக்கிறார்கள், ஏழ்மையால் இறந்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு வறுமை இந்த மாநிலத்தில் இருக்கிறதா? இந்த அரசாங்கத்தால் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை, உடமையைக் காப்பாற்ற முடியவில்லை என்ற சூழ்நிலை வங்கத்தைப் போன்று இந்த மாநிலத்தில் இருக்கிறதா? அப்படி இருந்து

அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருந்தால் அதிலே ஓரளவிற்குப் பொருத்தம் இருந்திருக்கக்கூடும். அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை.

பக்கத்திலுள்ள மகாராட்டிரத்திலே மூன்று மாதங்களுக்கு முன்பு அரிசனப் பெண்கள் நிர்வாணமாக வீதியிலே நடத்தப்பட்டார்கள், பகிரங்கமாகக் கற்பழிக்கப்பட்டார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்பு மகாராட்டிரத்திலே பெரிய அமளி துமளி ஏற்பட்டதே அந்த மாதிரியான நிலைமை இங்கே ஏற்பட்டதா? வங்கத்தில் இருக்கும் சூழ்நிலை, பீஹாரிலே இருக்கின்ற சூழ்நிலை மகாராட்டிரத்திலே இருக்கின்ற சூழ்நிலை, கேரளாவிலே இருக்கின்ற சூழ்நிலை போன்ற இப்படிப் பட்ட சூழ்நிலைகள் எதுவும் இந்த மாநிலத்தில் இல்லை. மக்கள் நிம்மதியாக இருக்கிறார்கள். நம்பிக்கையோடு இருக்கிறார்கள். நம் அரசைப் பெற்றுவிட்டோம், நல்ல அரசைப் பெற்று விட்டோம் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். அப்படி நம்பிக்கையோடு இருக்கும் நேரத்தில், தங்களுக்கு எதிர்காலம் இல்லை என்ற முடிவிற்கு வந்தவர்கள், 67-தான் போய்விட்டது, 71-வது பலிக்காதா என்று பார்த்தார்கள். 71-ம் போய்விட்டது இனி என்றைக்கும் நாம் தலை தூக்கும் காலம் கிடைக்காது என்று எண்ணி செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு பிணங்களால் பாதை அமைக்க ஆசைப்படுகிறார்கள். இதுதான் அவர்கள் முடிவு. எதிர்காலம் இருண்டுஇட்டதே என்று எண்ணி இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

அவர்கள் இந்த அரசாங்கத்தைப்பற்றி மக்கள் மன்றத்திலே என்ன சொல்கிறார்கள்? இந்த அரசாங்கம் விவசாயிகளுக்கு எதையும் செய்யவில்லை. உழவர் பெருங்குடி மக்களுக்கு எதையும் செய்யவில்லை என்று உண்மைக்கு மாறாக, மனச்சாட்சியைக் கொன்று இந்த மக்கள் மன்றத்திலே சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், இந்தத் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அரசாங்கத்தின் பொறுப்பையேற்றபிறகுதான் நஞ்சைக்கும், புஞ்சைக்கும் அடிப்படைத் தீர்வை ரத்து செய்யப்பட்டது. அதன் மூலம் 3 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வருவாய் இழப்பீடு ஏற்பட்டது. இது விவசாயிகளுக்குச் செய்த நன்மை இல்லையா? 20 ஆண்டுக்காலத்தில் சுமார் 2½ லட்சம் பம்பு செட்டுகள்தான் அமைக்கப்பட்டன, ஆனால் இந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 5 ஆண்டுக்காலத்தில் 3 லட்சம் பம்பு செட்டுகள் அமைக்கப்பட்டன. இது விவசாயிகளுக்குச் செய்த நன்மை இல்லையா? காங்கிரஸ் ஆட்சியில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 5 கோடி ரூபாய்தான் ஏழை விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடனாகக் கொடுக்கப்பட்டது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சுமார் 25 கோடி ரூபாய் வரையில் நீண்டகாலக் கடனாகக் கொடுக்கப்பட்டது. இது ஏழை விவசாயிகளுக்கு இந்த அரசாங்கம் எடுத்த முயற்சியைக் காட்டவில்லையா? இதை எண்ணிப் பாருங்கள். அதே

[திரு. ஆலடி அருணா] [1972 ஆகஸ்ட் 11

அடிப்படையிலே மிட்டா மிராசுகளின் கொட்டத்தை அடக்குவதற்காக 1960-ஆம் ஆண்டில் காங்கிரஸ் அரசு கொண்டு வந்திருந்த சட்டத்திலுள்ள ஓட்டை உடைசல்களை அடைத்து நல்ல நிலச்சீர்திருத்தச் சட்டத்தை உண்டாக்கி நிலச்சீர்திருத்தத்திற்குப் புதிய அமைப்பை, திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறதே, இது ஏழை விவசாயிகளுக்கு இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்ட முயற்சி இல்லையா? இதை எண்ணிப் பாருங்கள். தஞ்சையிலே விவசாயக் கூலியை நிர்ணயிக்க முடியாமல் கடந்த காலத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த நேரத்தில் கணபதியா பிள்ளை குழுவை அமைத்து தஞ்சையிலுள்ள விவசாயிகளுக்குக் கூலி நிர்ணயம் செய்ததே அது ஏழை விவசாயிகளுக்கு இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சியில்லையா?

1947-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டு வரையில் 20 ஆண்டுக்காலத்தில் காங்கிரஸ் நண்பர்கள் சுமார் 2 லட்சத்து 88 ஆயிரம் ஏக்கர் நிலத்தைத்தான் ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்தார்கள். ஆனால் இந்த அரசாங்கம் 5 ஆண்டுக் காலத்தில் 5,29,425 ஏக்கர் நிலத்தை ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறது. இது இந்த அரசாங்கம் விவசாயிகளின் மீது அக்கறை கொண்டிருக்கிறது என்பதற்கு ஆதாரம் இல்லையா என்பதை எண்ணிப்பாருங்கள். இந்த உண்மைகளையெல்லாம் மக்கள் மறந்துவிடுவார்களா, அந்த விவசாய மக்களுக்குத் தெரியாதா என்பதை கம்யூனிஸ்ட் நண்பர்களே, சிந்தித்துப் பாருங்கள்.

இந்த விவசாயப் போராட்டம் எப்படி ஏற்பட்டது? ஆரம்பத்தில் மின் கட்டணத்திற்கு மட்டும்தான் ஏற்பட்டது. அந்தப் பிரச்னையைக் கோவையிலே இருக்கின்ற மிட்டா மிராசுகளும் அல்லது சில அரசியல் கட்சிகளும் செய்த நேரத்தில்—நான் உண்மையை ஒத்துக்கொண்டு பேசுகிறேன்—பலாத்காரம் தலைகாட்டவில்லை, ஆரம்ப கட்டத்தில் ஆவேசம் இல்லை. ஆனால் இந்தப் போராட்டத்தில் எப்படி பலாத்காரம் வந்தது? எப்படி 12 அம்சத் திட்டம் வந்தது? மே மாதத்திற்கு முன் இந்தத் திட்டம் இருந்ததா? மின் கட்டணத்திற்காக இருந்த இந்தப் போராட்டத்தில் எப்படி 12 அம்சத் திட்டம் நுழைந்தது? எண்ணிப் பாருங்கள். இன்றைக்கு விவசாயிகள் சங்கத்தில் கம்யூனிஸ்ட் நண்பர்கள் உள்ளே நுழைந்ததால் இந்தத் திருப்பம் ஏற்பட்டது. வித்து ஊன்றப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி: 12 அம்சத் திட்டம் கம்யூனிஸ்ட்டுகள் நுழைந்ததால் வந்தது என்று உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கு நான் ரொம்பவும் நன்றியுடையவனாக இருக்கிறேன்.

[1972 ஆகஸ்ட் 11

திரு. ஆலடி அருணா: மிட்டா மிராசுதார்களிடமிருந்து போராட்டத்தை கம்யூனிஸ்ட்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி இந்தத் திட்டத்தை வைத்தார்கள். எனவே அவர்களுக்குள் கருத்து வேறுபாடு இருந்தாலும் கருத்து மோதல் எவ்வளவு இருந்தாலும் அந்த 12 அம்சத் திட்டப்படி செயல்பட்டு வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் ஜூலை 5-ம் தேதி அந்தப் போராட்டத்தை நடத்தியவர்கள் நியாய அடிப்படையில் நடந்தார்களா, ஜனநாயக அடிப்படையில் நடந்தார்களா, சர்க்காரின் சட்டதிட்ட விதிகளின்படி அதற்கு மதிப்பளித்து அதன் அடிப்படையில் நடந்து கொண்டார்களா? ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள், முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கக் கூடாதா, இனி நாங்கள் சரியாகச் செய்கிறோம், இனி திருத்திக் கொள்கிறோம் என்று சொல்லக்கூடாதா என்று.

வாதத்திற்காகக் கேட்கிறேன், மதிப்பிற்குரிய தங்கமணி அவர்கள் பேசிவிட்டார்கள், மதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசிவிட்டார்கள். மற்ற நண்பர்கள் எல்லாம் பேசி விட்டார்கள். யாராவது ஒரு நபர், போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் இந்த ஊரில் தப்பாக நடக்கவில்லை. இந்த ஊரில்தான் தப்பாக நடந்தது, இந்த ஊரில் அதிகாரிகள் அடிப்பட்டார்கள், அந்த ஊரில் இல்லை என்று சொன்னார்களா ஒரு கட்டத்திலாவது? இந்தப் போராட்டம் எந்தெந்த ஊர்களில் வெடித்துக் கிளம்பியிருக்கிறது, எங்கெங்கு அமைதி இருக்கிறது என்பதைப் பாருங்கள். நெல்லை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் தென்காசி தாலூகாவில் போராட்டம் இல்லை. என் தொகுதியில் சுமார் 2,000 கடைகள் உள்ளன. அதில் ஒரு கடை கூட மூடப்படவில்லை. காங்கிரஸ் நண்பர்கள் கூட திறந்து வைத்திருந்தார்கள். நான் அவர்களைப் பாராட்டுகிறேன். போராட்டத்தின் பித்தலாட்டத் தன்மையை அவர்கள் தெளிவாகப் புரிந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என் தொகுதியைப் பொறுத்தமட்டில்.

ஆனால் கோவில்பட்டி, சங்கரன்கோவில், ராஜபாளையம் போன்ற இடங்களில் என்ன நடந்திருக்கிறது? திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள், கோவையில் நடந்ததைப்போல் மின் பிரச்சினை அல்ல அவ்விடங்களில், அங்கு பருத்திக்கு விலை இல்லை. உண்மை, ஒத்துக்கொள்கிறோம். பருத்திக்கு விலை இல்லை என்றால் அதற்கும் இந்த அரசுக்கும் எப்படிப் பொருந்தும்? எந்த அளவிற்குப் பொருந்தும்? இந்த சர்க்கார் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லுங்கள். பருத்திக்கு விலை இல்லை என்றால் இந்தச் சர்க்கார்தான் அதற்குக் காரணம் என்று சொல்ல முடியுமா? பருத்திக்கு விலை வேண்டும், நியாயம், ஒப்புக்கொள்கிறோம். ஆனால் சங்கரன்கோவில் விவசாயிக்கு பருத்திக்கு விலை இல்லை, அவன் சங்கநாதம் புரிகிறான். கோவில்பட்டியில் விவசாயிக்கு

பருத்திக்கு விலை இல்லை, அவன் கொதித்து எழுகிறான். ஆனால் திருநெல்வேலியில் உள்ள விவசாயி அமைதியாக இருக்கிறான், காரணம் என்ன? மதுரை மாவட்டத்தில் பருத்தி பயிரிடப்படவில்லையா? மதுரை மாவட்டத்தில் ஜூலை5-ம் தேதி அமைதியாக இருந்ததற்குக் காரணம் என்ன? கம்யூனிஸ்ட் கொடி எங்கெல்லாம் பறக்கிறதோ அங்கெல்லாம் பலாத்காரம் தலை விரித்தாடியிருக்கிறது என்பதைத் தவிர வேறு என்ன காரணம் கூற முடியும்? (ஆரவாரம்) கேட்டால் நாங்கள் பலாத்காரவாதிகளா என்பார்கள். அவர்களது தத்துவத்திற்கு பச்சைத் துரோகம் செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அது அவர்களது தத்துவம். பலாத்காரம் என்பது அவர்கள் பெற்றெடுத்த குழந்தை. அது அவர்களது சித்தாந்தம். ஆனால் அவர்கள் ஜனநாயகத்தின் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு எப்படியாவது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஆட்சியைக் கைபிடிக்க வேண்டும் என்பதுதான் அவர்களது திட்டம். இவர்கள் பலாத்கார வாதிகளாக இல்லாவிடில் விவசாயிகளின் போராட்ட காலத்துவக்கத்தில் பலாத்காரம் ஏற்பட்டிருக்க வேண்டுமே. ஆனால் அப்படி ஏற்படவில்லை. இவ்வளவு விபரீத சம்பவங்களும், இத்துணை வேதனைச் சம்பவங்களுக்கும் வலதுசாரி கம்யூனிஸ்ட்கள்தான் பொறுப்பு என்பதை இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கருப்பு: கம்யூனிஸ்ட்கள் பலாத்காரவாதிகள் என்று சொன்னார்கள். 1967-க்கு முன்னால் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கம்யூனிஸ்ட்கள் தலைமை தாங்கி நடத்தினார்களா அல்லது வேறு யாராவது தலைமை தாங்கி நடத்தினார்களா?

திரு. ஆலடி அருணா: இந்தப் போராட்டத்தில் இவ்வளவு வேகம் காட்டுகிறவர்கள், இவ்வளவு விறுவிறுப்பு காட்டுகிறவர்கள், விவசாயப் பிரச்னை விபரீதமாக மாறியிருக்கிற வேறு மாநிலங்களில் அங்கெல்லாம் இந்தக் கட்சிக்காரர்கள் இருக்கிறார்களே, அவர்கள் எல்லாம் இந்த மாநிலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் இருப்பது போல் அந்தந்த மாநிலங்களில் மட்டும் இருப்பவர்கள் அல்லது குரல் கொடுக்காதவர்கள், அங்கு கம்பீரமாக ஒலிக்காதவர்கள் இங்கு மட்டும் அப்படிக் கம்பீரமாக ஒலிக்கக் காரணமென்ன? அப்படி ஒலிப்பதற்கான தைரியம் கம்யூனிஸ்ட்களுக்கு எப்படி வந்தது? எந்த நிலையில் வந்தது? ஆரம்பத்தில் அந்த ஆத்திரம் வராமல் இப்போது மட்டும் ஏன் வேகம் ஏற்பட்டிருக்கிறது? அதுதான் இந்திரா காங்கிரசுக்கு ஏற்பட்டிருக்கிற திருப்பம். அதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி, இந்திரா காங்கிரசைக் கவிழியாகப் பயன்படுத்திக்கொண்டு மேலே வளரலாமா என்று திட்டம் இட்டுச் செய்கிறார்கள். இதை இந்திரா காங்கிரஸ்காரர்கள், அவர்கள் புத்திசாலித்தனமுள்ளவர்கள் என்றால் . . . .

திருமதி த. ந. அனந்தநாயகி: நீங்கள் பேசுவதைப் பார்த்தால் இந்திராக் காங்கிரசை கம்யூனிஸ்ட்கள் ஏமாற்றிவிடுவார்கள் என்ற முறையில் இருக்கிறது. நீங்கள் அவர்களோடு சேர்ந்திருந்தபோது உங்களையே ஏமாற்றமுடியவில்லை என்றால் எங்களை ஏமாற்றிவிடுவார்களா?

திரு. ஆலடி அருணா: திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கம்யூனிஸ்ட்களால் ஏமாற்ற முடியவில்லை. ஒன்றரை ஆண்டுக் காலம் இருந்து பார்த்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் அவர்களது பாதச் சுவடுகளை ஒழுங்காகக் கண்காணித்து வந்தது. இங்கிருந்துகொண்டு எதிர்காலத்தில் ஒளியை உண்டாக்க முடியாது என்ற ஏமாற்றத்தின் அடிப்படையில் இங்கிருந்து ஓடி ஏமாளிகளின் முகாமைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

போராட்ட காலத்தில் பருத்திக்கு விலை இல்லை என்றால் இன்றைக்கு நிலை என்ன? அதற்கு விலை கூடியிருக்கிறது. காரணம் இந்த அரசின் முயற்சி என்று நான் சொல்லவில்லை. ஒன்றை திரு. தங்கமணி அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். விவசாயப் பொருள்களுக்கு, சில பொருள்களுக்கு சில நேரங்களில் எதிர்பாராத வகையில் நல்ல விலை கிடைக்கிறது. சில சமயங்களில் பிளகாயின் விலை ஏறுகிறது. சில சமயங்களில் வெங்காயத்தின் விலை ஏறுகிறது, சில சமயங்களில் பருத்தி விலை ஏறுகிறது. ஆக உற்பத்தி செய்யப்படுகிற எல்லாப் பொருள்களின் விலையும் ஒரே கட்டத்தில் நாடு பூராவிலும் சீராக இருக்குமென்று சொல்லமுடியாது. இது நாம் உணர்ந்திருக்கும் உண்மை. பருத்திக்கு அதிக விலை ஏற்பட்டு, தக்காளிக்கும் அதிக விலை ஏற்பட்டு, மிளகாய்க்கும் அதிக விலை ஏற்பட்டு, கத்திரிகாய்க்கும் அதிக விலை ஏற்பட்டுவிட்டால் இதே கம்யூனிஸ்ட்கள் சென்னையில் கூட்டம் கூட்டி, "பார்த்தீர்களா பொருள்களின் விலைகள் கைக்கு பிடிக்க முடியவில்லை. பொருள்களின் விலைகள் ஏறியிருப்பதைப் பார்த்தீர்களா" என்று சொல்வார்கள்.

THIRU R. PONNAPPA NADAR: May I request the hon. Member to address the Chair.

திரு. ஆலடி அருணா: உணவுப் பொருள்களின் விலைகள் ஏறுத சமயங்களில் கிராமங்களுக்கு வந்து விவசாயப் பெருங்குடி மக்களே, நீங்கள் கடுமையாக உழைக்கிறீர்கள், ஆனாலும் உங்களுக்கு நியாய விலை கிடைக்கவில்லையே என்று நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள். விலை ஏறிவிட்டால் நகர்ப்புறங்களுக்கு வந்து பண்டங்களின் விலைகள் உயர்ந்து விட்டதைப் பார்த்தீர்களா என்று சொல்கிறார்கள். இதை ஒரு அரசியல் ராஜதந்திரம் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் இதுதான் அரசியல் கலப்படமற்ற முட்டாள்தனம் அல்லது பயித்தியக்காரத்தனம் என்று நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்). நான் தனிப்பட்ட யாரையும் முட்டாள் என்று சொல்லவில்லை. ஒரு தத்துவத்தை பற்றித்தான் குறிப்பிடுகிறேன். முட்டாள்தனமானது என்று,

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: பைத்தியக்காரத்தனம், முட்டாள்தனம் என்று சொல்வதை தாங்கள் ஒப்புக்கொண்டால் நாங்களும் ஒத்துக் கொள்கிறோம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: 'Muttalthanam' is not a parliamentary word. He must withdraw it.

THIRU V. KRISHNAMOORTHI: He is saying it is a 'mad policy'. That is all. It is quite parliamentary.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: உறுப்பினர் அவர்கள் பேசுகிற கருத்தில் மாறுபாடு இல்லை. ஆனால் இத்தகைய கடும் வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் இருப்பது இந்த மன்றத்திற்கு நல்லது.

திரு. ஆலடி அருணா: இந்த அரசின் மீது, ஏழைகளுக்காக இருக்கிற அரசின் மீது, பாட்டாளிகளுக்காகப் பாடுபடுகிற அரசின் மீது, தமிழைக் காப்பதற்காக இருக்கின்ற அரசின் மீது, தன்னம்பிக்கை உணர்வோடு இருக்கின்ற அரசின் மீது அரசியல் பித்தலாட்டம் என்ற முறையில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த அரசின் தலைமை மீது இந்த மன்றம் மட்டுமல்ல, தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தத் தலைமுறையே இந்த அரசின் தலைமையைத்தான் நம்பியிருக்கிறது என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் கலைஞர் அவர்களின் அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பது இது வெற்றிபெறும் என்ற நம்பிக்கை இல்லை என்று தெரிந்தபிறகுதான் இந்த அவையின் முன்னால் வைத்திருக்கிறார்கள்.

இங்கு பேசிய நம் மதிப்பிற்குரிய தங்கமணி அவர்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகிற நேரத்தில் அவர்கள் அவர்களுடைய பாணியில் பேசவில்லை. ஏதோ மதுரை மாநாட்டில் உலக உருண்டையில் முன்னேற்றக் கழகத் தலைவர்களின் படத்தை வைத்து பெருமையடித்துக் கொண்டார்கள் என்று துர்பாக்கியவசமான பத்திரிகை பாணியில் பேச ஆரம்பித்து கடைசியில் ஆவேசமாக நடந்து முடிந்த போராட்டம் இந்த அரசுக்கு ஏற்பட்ட ஒரு கறுப்புப் புள்ளி என்று கூறியிருக்கிறார்கள். நடந்து முடிந்த போராட்டம் இந்த அரசாங்கத்திற்கு கறுப்புப் புள்ளியாக இல்லை என்பது மட்டும் அல்ல. இந்த அரசாங்கத்தை வீழ்த்திவிட வேண்டும் என்று சதித் திட்டம் போட்டவர்களுக்கு இந்த அரசு ஒரு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது என்பதை நான் தெரியப்படுத்திக் கொள்கிறேன். திரு. கே. டி. கே. தங்கமணி

அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன், கறுப்புப் புள்ளி என்பது இந்த அரசுக்கு விழவில்லை. சமதர்மப் பாதையிலே சென்றுகொண்டிருக்கக் கூடிய இந்த அரசை வீழ்த்திவிட வேண்டும் என்று ஜமீன்தார்களுக்குப் பின்னாலே சென்ற கம்யூனிஸ்டு கட்சியின் வரலாற்றுக்கு கறுப்புப் புள்ளி விழுந்திருக்கிறது. இந்த அரசுக்கு கறுப்பு புள்ளி விழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மன்றாடியார் போராட்டத்தில் கலந்துகொண்டார் என்று சொன்ன நேரத்தில் குமாரசாமி அவர்கள் மன்றாடியார் கலந்துகொண்டார் என்பது உண்மை என்று சொன்னார். அவர் உம் போடக்கூடிய அளவுக்கு மன்றாடியாருடைய பங்கு இதில் குறைவாக இருந்ததா? போராட்டத்திற்கு பிள்ளையார் சுழி போட்டது மன்றாடியார். போராட்டத்திற்கு மிக முக்கியமான செயல் திட்டங்கள் உருவாக்கப்பட்டது மன்றாடியார் மாளிகையில் என்பதை இந்த நாடு மறந்துவிடவில்லை. அப்பேர்ப்பட்ட ஜமீந்தார்கள் தலைமை தாங்கித் தான் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். இந்த அரசாங்கத்தின் மீது ஆத்திரம் கொண்டவர்கள், உச்சவரம்பு சட்டத்தினால் பாதிக்கப்பட்ட ஜமீன்தார்கள்தான் போராட்டத்தை முன் நின்று நடத்தியுள்ளார்கள் என்பதை மிகத்தெளிவாக உணர்த்திவிட்டார்கள்.

இங்கே பேசிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் உருக்கமாகப் பேசினார்கள். அண்ணா அவர்கள், முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் சொன்னதையெல்லாம் எடுத்து ஆதாரம் காட்டினார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன், அவர்கள் மிக நன்றாக உணர்வார்கள். மாநாமதுரை துப்பாக்கிச் சூடு எப்படி நடந்தது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த வாகித் கட்சி செயலாளர் கடைக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். இது காலையிலே 5½ மணிக்கு நடந்தது. கடையைத் தாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு முதல் நாள் இரவு வைகை ஆற்றுக்குள்ளே கூடி இருந்து திட்டமிடப்பட்டு கடையைத் தாக்க வேண்டும் இந்த சந்தர்ப்பத்தை வைத்து, வாகித் உயிரை வாங்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறார்கள். முதல் நாள் இரவு முகவை மாவட்டத்தில் களத்துமேட்டில் முக்கியமான கம்யூனிஸ்டு தோழர் தங்கியிருக்கிறார். கீழப்பசலையில் அதிகாலையில் 5½ மணிக்கு கடையை மூடவேண்டும் என்று அரிவாள், வேல் கம்பு இவைகளை தூக்கிக் கொண்டு எதற்காகப் போனார்கள் என்பதை மதிப்பிற்குரிய கே. டி. கே. தங்கமணி அவர்களுடைய யூகத்திற்கே விட்டுவிடுகிறேன். துப்பாக்கிச் சூடு நடந்தது. அதற்கு முக்கிய காரணம் முதல் நாள் இரவு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த முக்கியமான தோழர் நடத்திய சதிதான் என்பதை மிகவும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். போலிஸ் அதிகாரிகள் போய் அந்த வாகித் என்ற தி.மு.க.வை

சேர்ந்தவரை விசாரணை செய்து கொண்டிருக்கிற நேரத்தில், கூட்டத்தில் ஒருவன் சொல்லுகிறான் 'உங்களுக்கெல்லாம் எத்தனை நாட்களுக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுக்க முடியும்? குடும்பத்தை கருவறுத்துவிடுவோம், விடமாட்டோம்' என்று சொல்லுகிறான். இப்பொழுது கூட அந்த வாகித் என்ற தோழருடைய உயிருக்கு ஆபத்து இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் மிகப் பெரிய கூட்டம் போட்டு போலீசார் மீது கல்லை எறிந்து, நிலைமை எல்லை மீறிய சமயத்தில்தான் போலீஸ்காரர்கள் தற்காப்புக்காக சுட்டார்கள்.

திரு. கே. டி. கே. அவர்கள் பேசும்பொழுது நாடு முழுவதும் பந்த் இருக்கும்பொழுது திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களும் என் கடைகளை மூடக்கூடாது என்று கேட்டார். நடந்தது என்ன ஒரு தேசிய போராட்டமா? அது என்ன சீனர்களையோ, பாகிஸ்தானியர்களையோ எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டமா? அன்னியனை எதிர்த்து நடத்தப்பட்ட விடுதலைப் போராட்டமா? கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடக்கிற காலத்தில், அந்த ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நாலைந்து கட்சிகள் சேர்ந்து பந்த் நடத்தினால் கம்யூனிஸ்டு கட்சி நண்பர்கள் அதில் பங்கு கொண்டால் நீங்கள் அவர்களின் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்காமல் விடுவீர்களா? தி.மு.க. தோழர்கள் உங்கள் போராட்டத்தை முறியடிக்க வேண்டும், உங்கள் பந்தை முறியடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கடையை திறக்கத்தான் செய்வார்கள். அவர்கள் கடையைத் தாக்கி வன்முறையைக் கையாண்டு மூடவைப்பது என்றால், வன்முறையை வன்முறையால் சந்திப்பதற்கு தி.மு.க. தயாராக இருக்கிறது. தி.மு.க.வைப் பொறுத்த வரையில் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் வன்முறையை நன்முறையால் தாக்க வேண்டும் என்று எழுதிக் காட்டினார்கள். தாக்கக்கூடியவர்கள் தம்பி அல்ல, தாங்கக் கூடியவர்கள்தான் என்னுடைய தம்பி என்று எழுதினார். வன்முறைக்குப் பதிலாக நாங்கள் வன்முறை செய்ய மாட்டோம். ஆனால் அதே நேரத்தில் வன்முறைக்கு தி.மு.க. நிச்சயம் பணிந்து விடாது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கோவில்பட்டியில் கலைமணியின் கடையை மூடவேண்டும் என்று ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கலைமணி அவர்களின் கடைக்குள் நாட்டு வெடி குண்டுகள் இருந்தன என்று கூடச்சொன்னார்கள். எனக்குக்கூட ஆச்சரியமாக இருந்தது. கலைமணி அவர்களின் ஹோட்டலில் இருந்த போண்டாக்கள் ஒரு வேளை நாட்டுக் குண்டுகளைப் போல அவர்களுக்குத் தெரிந்ததோ என்னவோ என்று சந்தேகமாக இருக்கிறது.

சாத்தூரில் துப்பாக்கிச் சூடு நடந்தது. சட்டமன்ற உறுப்பினர் அழகுத் தேவர் உயிருக்கு ஆபத்து ஏற்பட்ட சூழ்நிலையில் துப்பாக்கிச் சூடு நடந்தது.

காவல் துறை அதிகாரிக்கு தகவல் வந்தது. அங்கே வங்கியின் முன்னால் ஒரு பெரிய கூட்டம் சேர்ந்து வங்கிக்குள் நுழைய முயற்சி செய்தார்கள். இடையிலே போலீஸ் நிற்கிறார்கள். கண்ணீர்புகை விடுகிறார்கள். இரண்டு பக்கமாகப் பிரிந்துபோன கூட்டம் ஒன்றாகச் சேர்ந்து இடையிலே போலீஸ்காரர்களை நெருக்குகிறார்கள். தற்காப்புக்காக போலீஸ் சுடுகிறது. சாத்தூரில் சட்டமன்ற உறுப்பினரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டது. விருதுநகர் சூலக்கரையில் மாட்டு வண்டிகளை குறுக்கே நிறுத்தியிருக்கிறார்கள். சாத்தூருக்குப் போகக் கூடாது என்று தடுக்கிறார்கள். தான் போன பிறகு வேண்டுமானால் மீண்டும் வழியை மறித்துக்கொள்ளுங்கள் என்று கலெக்டர் கெஞ்சிக் கேட்கிறார். பாதையை விடவில்லை. வேறு வழியில்லை. பின்னால் வருகிற நேரத்தில் கல்லை விட்டு எறிந்திருக்கிறார்கள். பக்கத்தில் இருக்கிற மூக்கா நாடார் வாழைத் தோட்டத்திலிருந்து சரமாரியாக கல்மாரி பொழிந்தன. டி.ஐ.ஜி.யும், மாவட்ட கலெக்டரும் சொல்லியும் கேட்காமல் அந்தச் சூழ்நிலையில் வண்டியை எடுங்கள் என்று கலெக்டருடைய ஆணையின் பேரில் வண்டிகளை அகற்றுவதற்கு போன கான்ஸ்டேபிள்களை தாக்க முயற்சிக்கிறார்கள். இந்த நிலையில்தான் துப்பாக்கிச் சூடு நடந்தது. அண்மையிலே ஏதோ தி.மு.க. அரசு இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை தேடிப் பிடித்து அவர்களுடைய உயிருக்கு உலை வைக்கப்பார்க்கிறார்கள் என்ற ஒரு பிரமையை தயவு செய்து உண்டாக்காதீர்கள். வன்முறையை முடுக்கிவிட்டது யார் என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். ஸ்ரீவில்லிப்புத்தூரில் பல இடங்களில் கட்சித் தோழர்கள் வன்முறையால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்த சக்தி, துரை என்பவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். நண்பர் சுப்பு அவர்களுடைய வீடும் தாக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. நான் சுப்புவின் மிக நெருங்கிய நண்பர். அவருடைய வீடு தாக்கப்பட்டது என்றால் அவருடைய கட்சியினரை விட நான் அதிகமாக வருத்தப்படுகிறவன். எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். வன்முறை என்பது இருபக்கத்திலும் கூறு வாய்ந்தது.

திரு. க. சுப்பு : அவர்கள் சொல்லும்பொழுது தி.மு.க. வினர் தாக்கப்பட்டார்கள் என்று சொன்னார். என்னுடைய வீடு தாக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது என்று கூறினார். ஸ்ரீவில்லிப்புத்தூரில் என்னுடைய வீடு தாக்கப்பட்டது என்று சொல்கிறார்களா? இல்லை என்று சொல்கிறார்களா?

திரு. கா. காளிமுத்து : என்னுடைய வாதம் எல்லாம் வன்முறையை ஆரம்பித்து வைத்தவர்கள் உங்களைச் சேர்ந்தவர்கள்தான். ஸ்ரீவில்லிப்புத்தூரில் மேலத்தெருவில் உ கடையை மூடவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். நான் மூடிவிடுகிறேன் என்று கடைக்காரர் பலகையை தூக்கும்பொழுது அவருடைய தலையில் ஒரு கல்லைவிட்டு எறிகிறார்கள். அவர் கையிலிருந்த பலகையால் அவரை

எதிர்த்து அடித்தார். அப்படி கலவரம் ஏற்பட்டிருக்கிறது. வேண்டுமென்றே வன்முறைச் செயல்கள் நடந்திருக்கின்றன. நான் சொல்லியதுபோல் வன்முறைக்கு இரண்டு பக்கமும் கூறு உண்டு. வினையை விதைத்தவன் வினையை அறுக்கவேண்டும். இராஜபாளையத்தில் எங்களுடைய கட்சித் தோழர் சாகி என்ற பாடகர் தாக்கப்பட்டார். மனைவிக்கு மாற்றுத் துணி கூட இல்லாமல் துணிமணிகளையெல்லாம் தூக்கி எறிந்திருக்கிறார்கள். வன்முறை, பலாத்காரம் அந்த அளவுக்கு நடந்திருக்கிறது. அந்த அளவுக்கு வன்முறையை தூண்டிவிட்டிருக்கிறார்கள். மாட்டு வண்டிகளை குறுக்கே நிறுத்தி உள்ளே போலீஸ் நுழைய முடியாதபடி செய்திருக்கிறார்கள். விருதுநகரில் வி.வி.ஆர். கடை தாக்கப்பட்டது. 10,000 ரூபாய் அளவுக்கு சொத்து கொள்ளையடிக்கப்பட்டது. வடிவேலு நாடார், சங்கரபாண்டியன் நாடார் இவர்கள் கடைகள் தாக்கப்பட்டன. மிளகாய்க் கடைக்காரர் சுப்பிரமணியம் கடை தாக்கப்பட்டது.

மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர்களே, உங்களுடைய அலுவலகம் கூட தாக்கப்பட்டது என்ற தகவல் கூட தங்களுக்கு கிடைத்திருக்கும். வன்முறையைத் தொடங்கி வைத்தவர்கள் அந்தப் பகுதியைச் சார்ந்தவர்கள்தான். வன்முறையைத் தூண்டியவர்கள் விவசாயச் சங்கத்தைச் சார்ந்தவர்கள் அல்ல. வேறு யாரோ வன்முறையை தூண்டிவிட்டிருக்கிறார்கள் என்று சொல்லி விடுங்கள். நடந்த சம்பவம் உண்மை அல்ல என்று சொல்கிறீர்கள். அந்த அளவுக்கு வன்முறையை உருவாக்கிவிட்டு, துப்பாக்கிச் சூடு ஏற்படக்கூடிய நிலைமையை உருவாக்கிவிட்டு, தி.மு.க. விற்கு ஒரு இக்கட்டான நிலைமையை உருவாக்கிவிட்டு, உருக்கமான பேச்சைப் பேச கருப் பொருளாக ஆக்கிக் கொள்ள வேண்டாம்.

கடந்த காலத்தில் மொழிப் போராட்டத்தின்போது பக்தவத்ஸலம் அவர்களுடைய அரசினால் 50 பேர் சுடப்பட்டு மாண்டபிறகும் 'அவர் கற்பாறை போல் இருந்தார்' என்று மத்திய அமைச்சர்களே பாராட்டும் அளவிற்கு எங்கள் கலைஞர் அவர்கள் நடந்துகொள்ளவில்லை. உடனே நீதி விசாரணைக்கு உத்திரவிட்டார். இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு உதவித் தொகையாக 5,000 ரூபாய் தரப்படும் என்று உடனே அறிவித்தார். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு முதன்முதலாக அனுதாபச் செய்திகளை வழங்கினார். 'எவ்வளவுபேர் பலியானாலும் பரவாயில்லை, அவற்றின்மூலம் அரசியல் ஆதாயம் தேடிக் கொள்ளலாம்' என்று எண்ணினால் அதை முறியடிப்பதற்கு இந்த அரசு தயாராயிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் வன்முறையைச் சிறிதும் பயன்படுத்தவில்லை. கழகத் தோழர்களுக்கு தலைமைப்பீடம் மிகத் தெளிவாகக் கட்டளையிட்டிருக்கிறது, 'யாரும் வன்

முறையில் ஈடுபடக்கூடாது, வன்முறையைப் பயன்படுத்தி அவற்றின்மூலம் இந்த அரசுக்குக் கலங்கம் உண்டுபண்ணக்கூடாது, என்று கண்டிப்பான ஆணை பிறப்பித்திருக்கிறது. எனவே கழகத் தோழர்கள் எங்கும் வன்முறையில் ஈடுபடவில்லை. ஆனால் இதில் பாதிக்கப்பட்டவர்கள் எல்லாரும் கழகத் தோழர்கள்தான், பாழாக்கப்பட்ட பொருள்கள் கழகத்தினருக்குச் சொந்தமானவை என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆட்சியும் கட்சியும் ஒன்றாக இருக்கிறது என்று அடிக்கடி சொல்லுகிறார்கள். ஆனால் இந்தப் போராட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் கழகத் தோழர்கள். அவர்களில் மூவர் தங்கள் இன்னுயிரை இழந்திருக்கிறார்கள். சிவகங்கையில் கொல்லப்பட்ட முத்து என்ற தோழர் கழகத்தைச் சேர்ந்தவர்தான்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நேற்றுவரையில் முத்து காங்கிரஸ் கட்சியில் இருந்தாரே, என்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தார்?

திரு. கா. காளிமுத்து : முத்து என்பவர் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவரைக் கொலை செய்து இருப்பது கம்யூனிஸ்டு கட்சிக்காரர்களால் அதைச் சொல்லாமல், மிகுந்த அரசியல் நாகரிகத்தோடு, 'கொலை செய்யப்பட்டிருக்கிறார்' என்றுதான் சொன்னேன். ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு அருகில் இராஜா என்பவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அவர் ஒரு கழகத் தோழர். ஆளும் கட்சியாக உள்ள இந்தக் காலத்தில் எங்கள் கட்சித் தோழர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மானமதுரை நிகழ்ச்சிகளை மதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மனதார நினைத்துப் பார்க்க வேண்டும். அங்கே துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர் மானமதுரையைச் சேர்ந்தவர்தான். ஆனால் பக்கத்திலுள்ள கீழப்பசலையைச் சேர்ந்தவர்கள் கம்யூனிஸ்டு கட்சியினரால் தூண்டிவிடப்பட்டு இருக்கிறார்கள். இதையெல்லாம் காரணம் காட்டி 'இந்த அரசின் மீது நம்பிக்கையில்லை, இந்த ஆட்சியின் மீது நம்பிக்கை இல்லை' என்று நீங்கள் சொன்னால், இந்த நாட்டு மக்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நீதியின்பால் நம்பிக்கை உள்ளவர்கள், உண்மையில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள், நேர்மையின் பலத்தில் நம்பிக்கை உள்ளவர்கள்—இவர்களுக்கு இந்த அரசின் மீதுள்ள நம்பிக்கை என்றென்றும் குறையாது என்று கூறி முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவரவர்களே, சபையின் முன்பு உள்ள இரண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானங்களையும் ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல முன்வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பதினைந்து நிமிடங்கள்தான்.

திரு. சோ. அழகர்சாமி: இங்கே பேசிய ஆளும் கட்சியினர் பலர் இந்தக் கிளர்ச்சியின்போது அதில் சேர்ந்திருந்த கம்யூனிஸ்டு கட்சியினரால் பல வன்முறைகளும் பலாத்காரங்களும் தூண்டிவிடப்பட்டதாகச் சொன்னார்கள். எனக்குத் தெரிந்தமட்டில் கடந்த 20 ஆண்டு காலத்தில் பல கிளர்ச்சிகள் நடந்திருக்கின்றன. பலவற்றில் நானும் பங்குகொண்டிருக்கிறேன். ஆனால் இப்போது நடந்து முடிந்த கிளர்ச்சியில் விவசாயிகள் அதிகமாகப் பங்கு கொண்டதுபோல எந்தக் கிளர்ச்சியிலும் அவர்கள் பங்குகொண்டதை இதற்குமுன்பு நான் பார்த்தது இல்லை. அவ்வளவு அதிகமாகப் பங்கு கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்கு என்ன காரணம்? அவர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் என்ன? என்பதை எண்ணி அவற்றைப் போக்க என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை யோசிப்பதற்குப் பதிலாக இந்த அரசு அமைச்சர்களும், தி.மு.க. தலைவர்களும் 'இது மிராசுதாரர்களின் போராட்டம். மிட்டாதார்களுடைய போராட்டம், பட்டயக்காரர் போராட்டம்' என்று சொல்லி, விவசாயிகளை மிகமிகக் கேவலமான முறையில் சொன்னது மட்டுமின்றி விவசாயிகளுடைய நியாயமான கோரிக்கைகளை மிகவும் கொச்சைப்படுத்திப் பேசினார்கள்.

இது மட்டுமில்லை, இந்தப் போராட்டத்தைப் பொறுத்தமட்டில் விவசாயிகளுக்குண்டான கஷ்டங்கள் என்ன என்று சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள விவசாயிகளுடைய கஷ்டங்கள் இந்த சட்டமன்றத்தில் அடிக்கடி சொல்லப்பட்டிருக்கின்றன. முதலமைச்சர் அவர்களிடமும், வருவாய்த் துறை அமைச்சரவர்களிடமும், விவசாயத் துறை அமைச்சரவர்களிடமும் அவர்கள் கஷ்டங்கள் பற்றி அடிக்கடி சொல்லப்பட்டிருக்கின்றன. சொன்ன பிறகாவாது என்ன நடந்தது? 'ஒட்டக் கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்று சொல்லுவதுபோல நிலைமைகள் மோசமடைந்தன. அங்குள்ள விவசாயிகளுக்குள்ள கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. அவர்களுக்கு விளைவு கம்மி, நீர்ப்பாசன வசதிகளும் கிடையாது, பருவ மழை இல்லை, ஆனால் கொடுக்கப்பட்ட கடன்களை அவர்களிடமிருந்து வசூலிப்பதில் கெடுபிடி சிறிதுகூட குறையவில்லை. ஆடுமாடுகள் ஜப்தி, கையிலுள்ள விவசாயப் பொருள்கள் ஜப்தி, பம்புசெட் ஜப்தி, இவைகள் எல்லாம் நடந்தன. இவ்வளவு கொடுமைகளுக்குப் பிறகும், அரசாங்கத்தில் உள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் சொல்லுவதை நம்பத் தயாராயில்லை. அதிகாரிகள் சொல்லுவதையே நம்பிக்கொண்டு விவசாயிகளுடைய கஷ்டங்களைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் என்ன பண்ணுவது சாத்விக முறையில் கோரிக்கையைச் சமர்ப்பித்தார்கள். அதற்குப் பதில் இல்லை.

பிறகு வேறு வழியின்றி விவசாயிகள் தாலுக்கா அலுவலகத்தில் முன்பு மறியலைச் செய்து ஜெயிலுக்குப் போவதற்குத் தயாராக இருந்தார்கள். அதை ஒட்டி முகவை, நெல்லை மாவட்டத்தில் மட்டும் 30 நாட்களுக்கு மேல் சிறையிலும் அடைக்கப்பட்டார்கள். 5,000-க்கும் மேற்பட்ட விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் சிறையில் அடைக்கப்பட்டார்கள். எல்லாக் கட்சியினரும் இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் கூட இருந்தார்கள். தி.மு.க. பஞ்சாயத்துத் தலைவர்களும் இருந்தார்கள். நியாயமான முறையில் பிரச்சனையைச் சந்திப்பதற்குப் பயந்து இந்த அரசு, இந்தப் போராட்டத்தைத் திசை திருப்பும் முயற்சியில் இறங்கினார்கள். இது 'பத்திரிகைப் போராட்டம், பேப்பர் போராட்டம்' என்றெல்லாம் சொல்லி திசை திருப்பினார்கள். எனவே தான் இருபது உயிர்களை இழக்கக்கூடிய காரியங்கள் நடைபெற்றன. கோவையில் நடந்தது என்ன? குடுமி வைத்திருந்து துண்டு போட்டுக்கொண்டு நகரத்திற்கு வந்தால் போதும், விவசாயிகள் என்று அவர்களையெல்லாம் போலீஸார் தாக்கியிருக்கிறார்கள். எந்தப் போராட்ட காலத்திலும் இவ்வளவு எண்ணிக்கையில் விவசாயிகள் தாக்கப்பட்டதில்லை. போராட்டத்தின்போது போலீஸார் எண்ணியிருந்தால் முறையாக அவற்றை ஒழுங்குபடுத்தியிருக்கலாம். ஆனால் இப்போது நடந்த போராட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் போலீசை பக்கபலமாக வைத்துக்கொண்டு தாக்குதல்களை நடத்தியிருக்கின்றார்கள். பல இடங்களிலே விவசாயிகளுடைய வண்டிகள் உடைத்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. மன்னார்குடியில் 39 வண்டிகளை சேதப்படுத்தியிருக்கிறார்கள். சாத்தூர் வட்டாரத்தில் இதுபோலவே சேதப்படுத்தியிருக்கிறார்கள். பெத்தநாயக்கன்பாளையத்தில் சேதப்படுத்தியிருக்கிறார்கள். இவ்வளவிற்குப் பிறகும் விவசாயிகள்தான் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று சொன்னால் என்ன அர்த்தம்? எதிர் தரப்பிலுள்ளவர்களுக்கு யாருக்காவது சேதம் உண்டா? எவ்வளவு தர்ம நியாயமான போராட்டம்? காந்தியடிகள் நடத்தியதுபோல அகிம்சா முறையில் நடந்த போராட்டத்தை எப்படி எப்படியெல்லாம் அடக்க முயன்றார்கள்? எதிர்க்கட்சியினர் அதாவது இன்று ஆளும் கட்சியில் அமர்ந்திருப்பவர்கள் நடத்திய போராட்டங்கள் தெரியும் உங்களுக்கு. அந்தப் போராட்டங்களில் எவ்வளவு பலாத்காரம் நடந்தது தெரியுமா? இவ்வளவு பேரைக் கூட்டுக்கொன்று விட்டு, 'வன்முறைகளில் ஈடுபட்டது எதிர்க்கட்சியினர் தான், அவர்கள் முட்டாள்தனமான கொள்கைகளை வைத்துக்கொண்டு இருப்பவர்கள்' என்று சொன்னால் அதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். இவ்வளவுக்கும் பிறகு அரசாங்கம் என்ன சொல்லுகிறது என்று பாருங்கள். 'கோவில்பட்டி வட்டாரத்தில் நல்ல பருவமழை காரணமாக விளைச்சல் உள்ள காரணத்தினால் அங்குள்ள விவசாயிகளுடைய கடன் மற்ற பாக்கிகளைத் தள்ளி வைக்க வேண்டியதில்லை' என்று செக்ரடரி எழுதியிருக்கிறார்கள். 'விஜயராகவன்'

என்பவர் கையெழுத்துப் போட்டிருக்கிறார். இப்படி விவசாயிகள் போராடித்தான் தீரவேண்டும் என்ற நிலைமைக்கு வந்த பிறகும் இராமநாதபுரம் மாவட்ட அபிவிருத்தி கௌன்ஸிலில் தீர்மானம் போடுகிறார்கள். இதற்கும் செவி சாய்க்கவில்லை. இதற்குப் பிறகுதான் இந்த விவசாயிகள் எல்லாம் மறியல் செய்து சிறைக்குப் போகவேண்டிய நிலை ஏற்பட்டது. இப்படி சிறைபுகுந்த பிறகு வெளியே உள்ளவர்கள் எல்லாம் விவசாயிகளுக்கு ஆதரவாக ஒரு நாள் கடையடைப்பு நடத்துவது என்று தீர்மானித்தார்கள். இது எந்த போராட்டத்திலும் செய்யக்கூடிய காரியம்தான். இது நடத்தப்படக் கூடாது என்று இதற்கு எதிராக ஒரு வன்முறையை நடத்தும் முறையை இந்த ஆட்சியில்தான் பார்க்கிறோம். முன்பு நீங்கள் நடத்திய போராட்ட காலங்களிலே 'கடை திறக்கப்பட வேண்டும், கிளர்ச்சியில் ஈடுபடக்கூடாது' என்று அன்று ஆளும் கட்சியில் உள்ளவர்கள் எதிர்ப் போராட்டம் நடத்தியதாக சரித்திரம் இல்லை. இது வருந்தக்கூடிய போக்குதான். கோவில்பட்டியில் நடந்தது என்ன? கடை யடைக்கப்பட வேண்டும் என்று விவசாயிகள் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் போலீஸும் சேர்ந்துகொண்டு சைகிள் செயின் போன்றவற்றைக் கையில் வைத்துக்கொண்டு தாக்கியிருக்கிறார்கள் விவசாயிகளை. நிலைமை மீறியது என்று போலீஸார் எண்ணும் நேரத்தில் கண்ணீர் புகை, தடியடி என்று ஏதாவது இருந்ததா? எடுத்த உடனே துப்பாக்கிச் சூடுதான். ஒருவர் கொல்லப்பட்டது மட்டுமில்லை. 20 பேருக்கும் அதிகமாக துப்பாக்கி குண்டுகளால் அடிபட்டு காயமடைந்திருக்கிறார்கள். இவ்வளவு பயங்கரமான நிலைமைக்குப் பிறகும் விவசாயிகளுடைய கோரிக்கையில் நியாயம் இருக்கிறதா என்று பரிசீலனை செய்யக்கூடத் தயாராயில்லை. அடக்குவதுதான் முறை என்று மனத்தில் எண்ணிக்கொண்டு மூர்க்கத்தனமாக அவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். சிறையிலே அடைக்க வேண்டும். அதற்கு

(திரு. நா. வீராசாமி தலைமை)

மேல் போராட்டம் நடத்துபவர்களைச் சுட்டுத்தள்ள வேண்டும். இனிமேல் விவசாயிகள் இம்மாதிரியான கோரிக்கைகளை எழுப்பக்கூடாது என்ற முறையிலே இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதனால்தான் சொல்கிறேன், நியாயமான முறையிலே விவசாயிகள் பிரச்சனையில் இந்த அரசாங்கம் நடந்துகொள்ளவில்லை என்று. முன்னால் விவசாயிகள் கேட்பது கோரிக்கையே இல்லை என்று சொன்னார்கள். இத்தனை பேர்களைச் சுட்டுத்தள்ளிய பிறகு, இவ்வளவு பொருள் நஷ்டம் ஏற்பட்ட பிறகு அவர்கள் கோரிக்கைகளை ஏற்று, அரசாங்கம் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கிறது. விவசாயிகள் மீது இப்படி நடவடிக்கை எடுத்துக்கொண்ட அரசாங்கம் பெரிய, பெரிய மனிதர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது. நண்பர் திரு. சுப்பு அவர்கள் சொன்

னார்கள். ஆகித்தனாருக்குச் சொந்தமான பேப்பர் மில்லில் 4 லட்சம் ரூபாய் பாக்கி இருப்பதாகச் சொன்னார்கள். அதை வசூல் செய்வதில் அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது. ஆனால் ஏழை விவசாயிகள் கொஞ்சம் கருணை காட்டுங்கள், கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னால், தடியடியும், துப்பாக்கிச் சூடும் தான் மிச்சம். ஆகவே, இந்த அரசாங்கம் விவசாயிகளுக்கு மிகப்பெரிய துரோகம் செய்துவிட்டது. அதனால் இந்த அரசாங்கத்தின்மீது நம்பிக்கை இல்லை என்று சொல்கிறோம்.

அடுத்து, வ.உ.சி. கல்லூரி மாணவர்கள் ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்கான கல்லூரியை விட்டு வெளியே வந்தார்கள். அந்த நேரத்தில் சமூக விரோதிகள் உள்ளே புகுந்து அவர்களைத் தாக்கியிருக்கிறார்கள் பொருட்களை சேதப்படுத்தியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக கல்லூரி பிரின்ஸிபால் கலெக்டருக்கு தெரிவித்தார்கள். டிப்டி கலெக்டர் அங்கு வந்து பிரின்ஸிபாலோடு பேசி, சமாதானம் செய்து, மன்னிப்பு கேட்டு, மழுப்பிவிட்டுச் சென்றிருக்கிறார்.

விவசாயிகளுக்காகப் பாடுபடுவது இந்த அரசாங்கம் என்று சொல்கிறவர்கள் விவசாயிகளின் கோரிக்கை என்ன என்றுகூட எண்ணிப்பார்க்க மனம் இல்லாமல் அவர்கள் கொடிய அடக்குமுறையைக் கையாண்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டுள்ள பலர் கடந்த தேர்தலிலே தி.மு.க.-வுக்கு, தி.மு.க. கூட்டணிக்கு ஓட்டளித்தவர்கள். நம்முடைய நியாயமான கோரிக்கைக்குக் கூட அரசாங்கம் செவிசாய்க்க மறுக்கிறதே என்று இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். அப்படியும் அவர்களின் கோரிக்கையை இந்த அரசாங்கம் ஏற்காமல் அவர்களை சிறையிலே தள்ளிவிட்டார்கள்.

பொதுவாக ஒரு 'பந்த்' நடக்கிறதென்றால் எடுத்த எடுப்பிலேயே சுட்டுத் தள்ளுவதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கையா? கண்ணீர் புகை கிடையாதா? தடியடிப் பிரயோகம் கிடையாதா? இவைகளுக்குப் பிறகுதானே மற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது வழக்கம். இந்தப் போராட்டத்தில் எடுத்த எடுப்பிலேயே சுட்டுத்தள்ளி, பல உயிர்களைப் போக்கிவிட்டீர்களே. இவ்வளவு மோசமாக வேறு எந்த அரசாங்கம் நடந்திருக்கிறது?

அதுமட்டுமல்ல. இன்றைக்கு தர்மபுரி மாவட்டத்தில் 55 லட்சத்திற்கு மேல் பிணமி கடன் வசூலாகாமல் இருப்பதாகச் சொல்கிறார்கள். வசூலாக வேண்டிய 1¼ கோடி கடனில் 55 லட்சம் பிணமி கடன். கடன் வாங்காத விவசாயிகளைப் போய் நீ கடன் வாங்கியிருக்கிறாய், கடனைத்திருப்பிக் கட்டு என்று சொன்னால் அந்த விவசாயி எங்கிருந்து கட்டுவான்? கட்ட முடியாத அந்த விவசாயியை

கட்ட வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட பினாமி கடன் 55 இலட்சம் இருப்பதாக தர்மபுரி கலெக்டர் தெரிவித்திருக்கிறார். உண்மையாக கடன் வாங்கியவர்களை கண்டுபிடித்து, கடனை வசூல் செய்வதற்குப் பதிலாக ஏழை விவசாயிகளைக் கஷ்டப்படுத்துகிறார்கள். ஆக இந்த வகையிலும் இந்த அரசாங்கம் விவசாயிகளின் நம்பிக்கையை இழந்துவிட்டது என்று கூறிக்கொள்கிறேன்.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல. விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு சரியான நியாய விலை கிடையாது. பொருளை உற்பத்தி செய்த விவசாயி விற்பனை செய்த பொருளை அவனுக்குத் தேவைப்படும்பொழுது வாங்க வேண்டுமானால் கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை. இரண்டு மடங்கு விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. விவசாயப் பொருள்களை உபயோகிப்பவர்களுக்கும் நியாய விலையில் பொருள் கிடைக்கவில்லை. அரசாங்கத்தின் கொள்கையின் காரணமாக இந்த நிலை ஏற்படுகிறது. அதை சீரமைப்பதற்கு இந்த அரசாங்கத்தினால் முடியவில்லை. தக்க நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தவறிவிட்டது.

இப்படிப்பட்ட பல நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடிய விவசாயிகளை அரசாங்கம் இனி இவர்கள் இம்மாதிரியான போராட்டங்கள் நடத்தக் கூடாது என்ற முறையில் கொடும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதனால் இந்த அரசாங்கம் விவசாயிகளின் நம்பிக்கையை முழுக்க முழுக்க இழந்துவிட்டது. ஆகவே இந்த அரசாங்கத்தின் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று கூறி, இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்து, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. வி. பழனிவேலு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, விவசாயிகள் போராட்டம் என்ற பெயராலே சில கட்சிகள் ஒன்று சேர்ந்து நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். பொதுவுடைமை பூங்கா என்று சொல்கின்ற கம்யூனிஸ்டு கட்சியும், சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று சொல்கின்ற சுதந்திரா கட்சியும், சோஷலிஸம் பேசுகின்றவர்களும், மன்னர் மானியம் இருக்க வேண்டுமென்று சொன்ன கட்சிக்காரர்களும் ஆக இந்த நான்கு கட்சிக்காரர்களும் சேர்ந்து விவசாயிகள் என்ற போர்வையிலே புகுந்து கொண்டு, பெத்தநாயக்கன் பாளையத்திலே உள்ள பல உயிர்களை போக்கி விட்டார்கள். பல உயிர்களை அழித்துவிட்டது மட்டுமல்லாமல் பல லட்சக் கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பொருள் சேதத்தையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

போராட்டம் நடத்தக்கூடியவர்கள் கடைகளை அடைக்கச் சொல்லலாம். ஆனால் கடைகளை அடைப்பதும் அடைக்காததும் அவர்கள் விருப்பத்தைப் பொறுத்தது. வண்டிகளை ஓட்ட வேண்டாம் என்று சொல்லலாம். ஆனால் வண்டிகளை ஓட்டுவதும், நிறுத்துவதும் அவர்கள் விருப்பம். சைக்கிளை ஓட்ட வேண்டாமென்று சொல்லலாம். ஆனால் சைக்கிளை ஓட்டுவதும், ஓட்டாமல் இருப்பதும் சைக்கிள் சொந்தக்காரனைப் பொறுத்தது. அப்படி இருக்கும்போது போராட்டக்காரர்கள் அன்று காலையிலிருந்தே பாதையெல்லாம் மதில் சுவர்களை எழுப்பினார்கள். பாதையெல்லாம் மரங்களை வெட்டிப்போட்டு, பெரிய பெரிய கற்களைப் பரப்பி மதில் சுவர்போல் எழுப்பி, போக்குவரத்தைத் தடை செய்தார்கள். அன்று அவர்கள் செய்த கொடுமை கொஞ்சநஞ்சமல்ல. அதற்குக் காரணம் இந்த பொதுவுடைமைப் பூங்காவிலே இருக்கின்ற திரு. கல்யாண சுந்தரம் தான். அவர்கள் அடிக்கடி அங்கு வந்துபோய்க்கொண்டிருந்தார்கள். அவர்கள் வந்து போன காரணத்தினால்தான் அங்கு வன்முறை ஏற்பட்டது. 5-ந் தேதி காலை 5 மணிக்கு 150 பேர்களை இரண்டு லாரிகளில் கொண்டுவந்து அங்கே இறக்கிவிட்டார்கள். அதனால்தான் அங்கு வன்முறைகள் ஏற்பட்டு, துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. வழியெல்லாம் வெட்டிய மரங்களையும், கற்களையும் போட்டு வைத்திருந்தால் போக்குவரத்திற்கு பெருத்த இடைஞ்சல் ஏற்பட்டது. போலீஸார் வந்த கார்கள் அங்கே போகமுடியாமல் தடைப்பட்டன. அப்போது போலீஸார் மீது கற்களை வீசினார்கள். அவர்கள் வந்த ஜீப்களை கவிழ்த்துவிட்டார்கள். ஜீப்புகளுக்கு எண்ணெய் ஊற்றி தீ வைத்தார்கள். போலீஸாரை அடித்தார்கள். மிகப் பயங்கரமான முறையில் அவர்களைத் தாக்கினார்கள். அவர்களுடைய அடியையும், கல்லெறியையும் போலீஸார் தடுத்து, தடுத்து முழங்கை முதல் மணிக்கட்டுவரை பலத்த காயம் ஏற்பட்டது. அந்தப் பகுதி மக்களைக் கேட்டாலும் இதையெல்லாம் சொல்வார்கள். "கம்யூனிஸ்டுகளின் பயங்கர செய்கையினால் எங்களுடைய பிள்ளைகளை நாங்கள் இழக்க வேண்டி வந்துவிட்டது" என்று தாய்மார்கள் கண்ணீர்விட்டுச் சொன்னார்கள். பாதையெல்லாம்—ரோட்டிலே கல்லை உருட்டிவைத்து, மரங்களை வெட்டிப்போட்டு, போக்குவரத்திற்கு இடைஞ்சல் செய்து, போலீஸாரை கொடுமைப்படுத்தி, பல உயிர்களையும் போக்குவதற்குக் காரணமாக இருந்தவர்கள் இந்த மா பாவிகள்—கம்யூனிஸ்டுகள் தான் என்பதைத் திட்டவட்டமாக சொல்லவிரும்புகிறேன்.

அது அல்லாமல் ஆத்தூர் பள்ளிக்கு அருகே 500 தார் டின்கள் இருந்தன. அவற்றை உருட்டிக் கொண்டுவந்து வைத்தார்கள். அங்கே வேல்முருகன் தியேட்டரைத் திறந்து வைத்தார் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அதனால் அந்த தியேட்டரைத் தாக்கினார்கள். அங்குள்ள சிண்டிகேட் காங்கிரஸ்காரர்கள் வன்முறையாளரிடத்தில் சொன்னார்கள், கற்களைக் கொண்டுவந்து

குவிக்காதீர்கள் என்று. கற்களைக் கொண்டுவந்து குவித்தார்கள். வேல்முருகன் தியேட்டரைத் தாக்காதீர்கள் என்றார்கள். ஓகோ, தாக்கவேண்டும் போலிருக்கிறது என்று தியேட்டரைத் தாக்கி கண்ணாடிகளை எல்லாம் நொறுக்கித் தள்ளினார்கள்.

அது மட்டுமல்ல—கழகத் தோழர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ, தி.மு.க.-க்காரர்கள் கண்ணில்பட்டால் அவர்களை எல்லாம் பிடித்துத்தாக்கச் சொன்னார்கள். அப்படிப்பட்டவர்கள்தான் இன்று இங்கு வந்து தாம் ஏதும் அறியாதவர்களைப்போலப் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட உயிர்ச் சேதம் ஏற்பட வேண்டிய நிலைமை யாரால் ஏற்பட்டது? பொதுவுடைமைப் பூங்காவாதிகளால் தான் ஏற்படுத்தப்பட்டது என்றால் மிகையாகாது. அப்படிப்பட்டவர்கள் இங்கே மாய்மாலமாகப் பேசுகிறார்கள். இறந்துவிட்டார்களே, குண்டு அடிப்பட்டுச் செத்தார்களே என்று சொல்கிறார்கள்.

நானும் சேலம் ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்த்தேன். அடிப்பட்டவர்கள் ஒவ்வொருவரிடமும் பத்து நிமிடங்களுக்கு மேல் பேசி அவர்களது கருத்தைக் கேட்டேன். "எப்படி ஐயா இந்த நிலைமை ஏற்பட்டது" என்கிறபோது "கம்யூனிஸ்டுகள்தான் இந்த ஏற்பாடுகளைச் செய்தார்கள். 5 மணிக்கு லாரியில் வந்து இறங்கினார்கள், அதுவரை எந்தவிதமான தீங்கும் ஏற்படவில்லை, அவர்கள் வந்தவுடன் எல்லாம் நடந்துவிட்டது" என்றார்கள். தாய்மார்கள் இங்கே இருப்பதனால் சொல்லக்கூட வெட்கப்படுகிறேன். போலீஸ் அதிகாரி ஒருவரது மர்மஸ்தானத்தைப் பிடித்து நசுக்கியிருக்கிறார்கள். அவர் இன்னமும் ஆஸ்பத்திரியில் காலை அகட்டி வைத்துக்கொண்டேதான் படுத்திருக்கிறார். எல்லாவற்றுக்கும் காரணம் இந்த கம்யூனிஸ்டு தோழர்கள்தான். இப்படி அங்கங்கே இதுபோன்ற மகத்தான காரியங்களை எல்லாம் செய்துவிட்டு, இங்கே பேசுகிறபோது தி.மு.க. காரர்களால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்று அப்பட்டமாகப் புளுகுகிறார்கள். அவர்கள் அம்மாதிரி சொல்வதற்கு என்ன காரணம்? இந்த தி.மு.க. அரசு விவசாயிகளுக்கு நல்லபல காரியங்களைச் செய்து வருகிறது. பம்பு செட்டுகள் போடப்பட்டு அங்கங்கே மின் இணைப்புக் கொடுக்கப்படுவதனால் அவர்கள் எல்லோரும் முன்னேறிவிட வாய்ப்பு இருக்கிறது. ஐந்து குதிரை பவர் மோட்டாரை ஓட்டி ஒரு மணி நேரத்துக்கு தண்ணீர் பாய்ச்ச 45 பைசா, 48 பைசாதான் ஆகிறது. அதே அளவு தண்ணீரை ஆயில் என்ஜின் போட்டு ஓட்டினால் ஒரு ரூபாய் பத்து காசு ஆகிறது. ஏற்றம் கொண்டு இறைத்தால் 5 ரூபாய் செலவாகிறது. 5 ரூபாய் செலவு செய்துகொண்டிருக்கிற நிலையில் விவசாயிகள் விடப்பட்டால் அவர்கள் எந்தத் தலைமுறையில்தான் முன்னேற முடியும்? பிரிட்டிஷ் ஆட்சி முதல் காங்கிரஸ்காரர்களது கடைசிக் காலம் வரையில் 3 லட்சம் பம்பு செட்டுகளுக்குத்தான் மின் இணைப்புக்

கொடுத்தது—தி.மு.க. அரசு இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளேயே 3 லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்துவிட்டது. இன்னும் 6 லட்சம் பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுக்கவும் இருக்கிறார்கள். 1974-க்குள் மின் சப்ளை இல்லாத இடமே இருக்கக் கூடாது என்று திட்டமிட்டு வேலை செய்கிறார்கள். இந்தக் காரியங்களை எல்லாம் செய்து முடித்துவிட இவர்களுக்கு வழிவிட்டால் எந்தக் காலத்திலும் விவசாய மக்களை தி.மு. கழகத்திடம் இருந்து பிரிக்க முடியாது போய்விடும் என்கிற தீய நோக்கத்தோடுதான் திட்டமிட்டு இந்தச் சதிச் செயல்களில் இறங்கினார்கள். . . . (மணி அடிக்கப்பட்டது.)

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 9-ஆம் தேதி அன்று இந்தப் பேரவையில் இந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கை இல்லை என்பதாக திரு. ஹாண்டே அவர்களால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூறவிரும்புகிறேன்.

கடந்த இரண்டு நாட்களாக இங்கே திராவிட முன்னேற்றக் கழக அரசு விவசாயிகளுடைய பிரச்சினையைக் கவனிக்காது துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள் என்கிறவண்ணம் பேசினார்கள். திரு. கே. டி. கே. அவர்கள் கூட பேசும்போது குறிப்பிட்டார். மதுரையில் மகாநாடு நடத்தினார்களே, துப்பாக்கிச் சூட்டினால் இறந்தவர்களுக்கு ஒரு சிறிய அனுதாபமாவது தெரிவித்தார்களா என்று ஏறத்தாழ நிகழ்ச்சி நடந்த மறுநாளோ, அதற்கு அடுத்த நாளோ செயற்குழு கூட்டத்திலேயே சென்னையில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையினர் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றினார்கள். துப்பாக்கிச் சூடு நடந்தது என்று தெரிந்தவுடனேயே நமது மாண்புமிகு மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி நல்ல தொரு அறிக்கையை விடுத்திருக்கிறார்கள்.

இதைச் சொல்வதற்குக் காரணம் காங்கிரஸ்காரர்கள் கடந்தகால வரலாற்றைச் சற்றுத் திரும்பிப் பார்க்கவேண்டும். எப்போதுமே 67-க்கு முற்பட்ட காங்கிரஸ் ஆட்சியைப் பற்றிச் சொல்கிறீர்களே, அவர்கள் ஆட்சியைப் போக்கிவிட்டு நீங்கள் அதனால் தானே வந்திருக்கிறீர்கள், மீண்டும் எதற்காக பழயதைப்பற்றிச் சொல்கிறீர்கள் என்று கேட்பார்கள். நான் மேற்கோள் தான் காட்டுகிறேன். அவர்கள் சுட்டார்கள்; ஆகவே நாமும் சுடவேண்டும் என்கிற எண்ணம் அரசுக்கு வரவேண்டும் என்று சொல்லவில்லை. துப்பாக்கிச் சூடு நடந்தது உண்மைதான். மோட்டாரில் அடிப்பட்டாலும் சாவுதான்—நோய்வாய்ப்பட்டாலும் சாவுதான்—துப்பாக்கிச் சூடு பட்டாலும் சாவுதான். இறந்துபட்டது உண்மை. கடந்தகாலத்தைச் சிந்தித்துப்பாருங்கள். திரு. கே. டி. கே. அவர்களுக்கு அந்த நிகழ்ச்சி தெரியும். ஜவாலியன்வாலாபாக்

[திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி] [1972 ஆகஸ்ட் 11

படுகொலை என்று சொன்னார்கள். பத்திரிகையிலே பார்த்தோம். ஊரில் உள்ள ஊர்க்காரர்கள் அத்தனைபேர்களையும் ஒரு பள்ளியில் பிடித்து, அடைத்து, அதிகாரி வந்தவுடனே, மிலிட்டரிக்கு ஆள் எடுப்பது போல அவர்களுக்குள்ளே வலிமை மிக்க 20 வயது முதல் 25 வயதுக்குள் உள்ள ஐந்து பேர்களைப் பிடித்து கைகளைக் கட்டி, பின்புறமாகச் சுட்டு வீழ்த்தினார்களே —அந்த துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழந்தவர்கள் சவத்தை கொடுக்கா விட்டால் என்ன நடந்திருக்கும் தெரியுமா என்று கேட்டார்கள். மனிதாபி மானத்தோடு இந்தச் சர்க்கார் ஊர்வலம் எடுத்துப்போக சவத்தை கொடுத் திருக்கிறார்கள். ஆனால் அப்போது இறந்து, போஸ்ட் மார்டம் ஆனவுடன் பெற்றோர்களிடம் அந்தச் சவத்தை ஒப்படைக்க கேட்பதற்காக மதுரை சென்றபோது இன்னும் எத்தனைபேர் சாக வந்திருக்கிறார்கள் என்றுதான் போலீஸ் இன்ஸ்பெக்டரும் சரி, கலெக்டரும் சரி கேட்டார்கள். ஒருவர் பிரேதத்தைக்கூட அவரது பெற்றோர்களிடம் கொடுத்ததாகச் சரித்திரம் இல்லை.

ஆனால் அன்றைக்கு அதுமட்டுமல்ல. உளுத்திமடை என்ற கிராமத்தில் ஒரு போலீஸ் லாரி சகதியில் சிக்கிக்கொண்டுவிட்டது. அதைத் தள்ளிவிட வாருங்கள் என்று கிராமத்திலுள்ள மக்களை அழைத்துச்சென்றார்கள். அவர் களும் லாரியைத் தள்ளிவிட்டார்கள். லாரியைத் தள்ளிவிட்டு அவர்கள் திரும்பியபொழுது அவர்கள் எல்லாம் சுடப்பட்டார்கள். அதேபோல ஒரு கிராமத்திலே ஒரு போலீஸ் லாரி வருகிறது, வந்தவுடன் போலீஸ் லாரி வந்திருக்கிறதே, என்ன விஷயம் என்று மக்கள் அங்கே சென்று பார்த்த பொழுது அவர்களையும் சுட்டிருக்கிறார்கள். இவையெல்லாம் நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், அவர்கள் குருவியைப்போல் காக்கையைப்போல் சுட்டுச்சுட்டு மக்களை வீழ்த்தினார்கள். அப்படிச் சுட்டுச்சுட்டு வீழ்த்தியது காங்கிரஸ் கட்சி ஆட்சிதான். இன்றைக்கு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கின்ற கட்சியினர் அன்றைக்கு அதைப்பற்றி கேட்க வாயே திறந்ததில்லை. மதிப்பிற்குரிய அனந்தநாயகி அம்மையார் அவர்கள் அன்றைக்குப் பேசாமல்தான் இருந்தார்கள். நான் ஜாதியைப் பற்றிக் குறிப்பிட விரும்பவில்லை, இருந்தாலும் குறிப்பிடுவதற்காக மன்னிக்க வேண்டு கிறேன். முக்குலத்தோர் . . .

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த நிகழ்ச்சியைப்பற்றி கனம் உறுப் பினர் அவர்கள் இந்தச் சபையிலே ஒரு பத்துத் தரமாவது பேசியிருக் கிறார்கள். மீண்டும் மீண்டும் அதைப்பற்றியே கோரஸ் பாடுவது போல் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அன்று நடந்தது, அதற்கு முன்பு நடந்தது, அதற்கும் முன்பு நடந்தது என்றெல்லாம் பேசிக்கொண்டே போனால் . . . .

1972 ஆகஸ்ட் 11]

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, கோரஸ் பாடுவது என்றால் 10, 15 பேர்கள் சேர்ந்து பாடுவதுதான் கோரஸ் பாடுவது ஆகும். ஆனால் அவர் தனியாக அவருடைய கருத்தைச் சொல்வது எப்படித் தவறாகும்?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : முக்குலத்தோர் இனத்தைப் பற்றி அவர்கள் பத்துத் தடவையாவது பேசியிருப்பார்கள் இதுவரையில். இன்னும் அவர்கள் அதைப்பற்றிச் சொல்லிக்கொண்டே இருக்கவேண்டுமா?

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : அன்றைய தினம் நடந்த அவ்வளவு பெரிய நிகழ்ச்சிக்கு நீதிவிசாரணை போடவில்லை. ஆனால் இன்றைக்கு முதல்வர் கலைஞர் அவர்கள் துப்பாக்கிச் சூடு நடந்த மறு தினமிடத்திலேயே நான்கு நீதிபதிகளைப் போட்டு—எதிர்க்கட்சிக்காரர்களின் கோரிக்கைக்காகக் காத்திராமல்—மனிதாபிமானத்தோடு ஏற்பாடு செய்தார்கள். அதைக் கம்யூனிஸ்டு கட்சியினர் உள்ளபடியே பாராட்டுவதை விட்டுவிட்டு இன்றைக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்கிறார்கள்.

அதேபோன்று ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே இறந்தார்கள், சுடப்பட்டார்கள். அந்த இயக்கம் ஒரு கட்சியைச் சேர்ந்தது என்று குறிப்பிட்டார்கள் கம்யூனிஸ்டு கட்சியினர். ஆனால் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், இந்தத் தமிழ்நாட்டிலே உள்ள ஒவ்வொரு தமிழ் மகனும், தமிழ்மொழி பேசுகின்ற தமிழனும் எந்த விதமான கட்சிச் சார்பும் இல்லாமல் மக்களுடைய எழுச்சியாகத்தான் அந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்ததே தவிர, ஒவ்வொரு தமிழனும் அதை அருந்தொண்டாக, ஒரு பெருந்தொண்டாகத்தான் கருதி ஈடுபட்டார்களே தவிர, அதிலே அரசியல் சூழ்ச்சியோ அல்லது இன்றைய விவசாயப் போராட்டத்திற்கு இருந்த பின்பாட்டுகளோ, அதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்றைய தினம் அதைப்பற்றியும் நீதிவிசாரணை இல்லை. ஆனால் இன்றைய கலைஞர் ஆட்சியில் யாரும் கோரிக்கை விடாமலேயே நீதிவிசாரணைக்கு உத்திரவிடப்பட்டிருக்கிறது. விவசாயப் போராட்டத்தின் பிரதிநிதிகள் சொன்னதன் காரணமாகத்தான் அதைத் தள்ளிப் போட்டார்கள். நீதிவிசாரணை வேண்டுமென்றால் முதலமைச்சர் மீண்டும்கூடப் போடலாம் என்று சொன்னார்கள்.

உறுப்பினர் திரு. காளிமுத்து அவர்கள் மானாமதுரையிலே நடந்ததைப் பற்றிச் சொன்னார்கள். இராஜபாளையத்தில் நடந்ததைப்பற்றி குறிப்பிட்ட திரு. சுப்பு அவர்கள் அதை மறுத்தார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூட கடைகளை அடைக்கவேண்டுமென்று சொன்னால் அடைக்கத் தானே வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் கட்சி ஆட்சியில் இருக்கிற

கோவை மாநிலத்தில் மக்கள் விரும்பாத ஒரு பிரச்னைபற்றி மக்களுக்கு ஒவ்வாத முறையில் ஒரு போராட்டத்தை கிளப்பிவிட்டு, சாலையில் வண்டிகள் போகக்கூடாது, மக்கள் போகக்கூடாது, சினிமா நடக்கக்கூடாது, கடை இருக்கக்கூடாது, ரயில் போகக்கூடாது என்று சொல்கிறார்கள் என்றால் அவர்கள் ஒரு தனியாட்சி நடத்துகிறார்கள், ஒரு தனி சர்க்கார் நடத்துகிறார்கள் என்றுதான் கருதவேண்டும். இங்கே அப்படி அவர்கள் நினைத்தபடி நடக்க வேண்டுமென்று சொன்னால் அவர்கள் என்ன தனி சர்க்கார் நடத்துகிறார்களா? அப்படி நினைத்தபடி நடக்க வேண்டுமென்று சொன்னால், மக்கள் வாழ்கிற நிலை பாதிக்கப்படும், போக்குவரத்து இருக்காது என்ற நிலையில் அதை அரசு கவனிக்க வேண்டாமா என்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை.

மானமதுரையிலே காலையிலேயே ஐந்தரை மணிக்கே ஆரம்பித்துவிட்டார்கள். போலீஸார் ஐந்தாறு பேர்கள்தான் இருந்தார்கள். நிலைமை கட்டுக்கடங்காமல் போக ஆரம்பித்தது. போராட்டம் என்ற பெயரால் ரயில்களை நிறுத்தவும் கடைகளை உடைக்கவும், இதன் காரணத்தினால், என்னுடைய நண்பர் வாஹித் என்பவரின் கடையில் இருந்த அண்டா, சட்டி, பால் போன்ற பதார்த்தங்கள் எல்லாம் தூக்கியெறியப்படவும், சப்-இன்ஸ்பெக்டரைக் கல்லால் அடித்தபிறகும், தன்னுடைய உயிரைப் பாதுகாப்பதற்காக தன்னுடைய மனைவி மக்களுக்காக தான் வாழவேண்டியிருக்கிறது என்ற நிலையில் தற்காப்பிற்காகத்தான் அவர்கள் சுட்டார்களே தவிர, அரசு சுடச்சொல்லி அவர்கள் சுடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ராஜபாளையத்தில் வன்முறை எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை என்று மற்ற கட்சிக்காரர்கள் சொன்னார்கள். ஐந்தாம் தேதியன்று பத்த் என்ற பெயரில் அங்கே பறந்த தி.மு.க. கொடிமரங்களை வெட்டிவெட்டிப் போட்டார்கள். அதுமட்டுமல்ல, எங்கள் உத்தமத் தலைவர் தேவர் அவர்கள் சிலையை உடைத்தார்கள். பி. எஸ். கே. சிலையை உடைத்தாக அவர்கள் சொன்னார்கள். யார் யாருடைய சிலையை உடைத்தாலும் அது தவறுதான். எங்கள் தலைவர் தேவருடைய சிலையை . . .

திரு. க. சுப்பு: ஒரு எக்ஸ்ப்ளனேஷன் சொல்ல விரும்புகிறேன். அங்கே வைக்கப்பட்டுள்ள தேவர் சிலை ஒரு சமூகத்தினரால் மட்டும் வைக்கப்பட்டதல்ல. எல்லோரும் சேர்ந்து வைத்ததுதான். அங்கே அவருடைய சிலையை உடைக்கப்போவதாக யாரோ கதைக்கட்டிவிட்டார்கள். ஆனால் அந்தச் சிலை உடைக்கப்படவில்லை. ஆகவே உண்மையில்லாத செய்தியைச் சொல்ல வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி: ஆனால் அங்கே உள்ள தேவர் அவர்களின் படத்தை தாக்கியபொழுது—கனம் உறுப்பினர் அவர்கள் மனசாட்சியோடு சொல்லவேண்டும்—நான் உதாரணத்திற்காகச் சொல்ல விரும்புகிறேன். ஜாதியில் எனக்கு நம்பிக்கை கிடையாது. அங்கே அந்தப் போராட்டத்தில் ராஜாக்கள் பங்குகொண்டார்கள், நாடார்கள் பங்குகொண்டார்கள், அரிசனங்கள் பங்குகொண்டார்கள், ஆகவே ஜாதி வேறுபாட்டைக் கிளப்பிவிடக்கூடிய நிலைமையில் அந்தப் போராட்டம் அங்கு நடந்தது. அதற்குப் பிறகு கலெக்டர் அவர்களும், எஸ்.பி. அவர்களும் அழைத்து ஐக்கியப்படுத்தினார்கள் என்பதை நாம் பத்திரிக்கையில் பார்த்தோம் . . . .

(திரு. க. சுப்பு அவர்கள் எழுந்தார்கள்.)

ஐ ஆம் நாட் யீல்டிங் சார் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள்.

திரு. க. சுப்பு: இல்லாததைச் சொல்வதனால் நான் அதை மறுத்துப் பேச வேண்டியிருக்கிறது . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். ஒரு உறுப்பினர் பேசும்பொழுது நீங்கள் குறுக்கிட அந்த உறுப்பினர் அனுமதி கொடுத்தால் தான் நீங்கள் பேசலாம். அல்லது பாயின்ட் ஆப் ஆர்டரில் பேசலாம். அல்லது தாங்கள் கூற வேண்டியதை உங்கள் கட்சித் தலைவரிடம் சொல்லிப் பேசச் சொல்லலாம்.

திரு. க. சுப்பு: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உண்மையிலேயே பாயின்ட் ஆப் ஆர்டர் இருந்தால்தான் பேசவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டால் அனுமதிக்கவேண்டியதுதான். ஆனால் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்துவிட்டபிறகு பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் உண்மையில் சொல்லாமல் இருந்தால் அவருக்கு மறுபடியும் பத்து பாயின்ட்ஸ் ஆப் ஆர்டர்வரை கேட்பதற்கு அனுமதி மறுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவருக்கு மட்டுமல்ல, மறுபடியும் யாருக்கும் கொடுக்கக்கூடாது. இந்த பாயின்ட் ஆப் ஆர்டரை எடுத்துவிடுவது கூட நல்லது என்று நினைக்கிறேன்.

திரு. க. சுப்பு : அவர்கள் பேசும்பொழுது ஜாதிப் பிரச்னை என்னுடைய தொகுதியில் இருந்ததுபோல் பேசினார்கள். என்னுடைய தொகுதியில் அப்படியொரு பிரச்னையைக் கிளப்பவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். போராட்டத்திலே கலந்துகொண்டவர்களில் ஜாதி வேற்றுமைகள் கிடையாது. எல்லா ஜாதியினர்களும் இருந்தார்கள். நான் வேண்டுமானால் பட்டியல் தருகிறேன். ஆனால் ஜாதிகளால் நடத்தப்பட்ட போராட்டம் என்று சொல்லி ஜாதிக்கலவரம் நடந்ததுபோல் சொல்வது தவறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அம்மாதிரியான ஒரு கலவரத்தை நண்பர் அவர்கள் ஏற்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். சட்டசபையிலே தவறான தகவல் கொடுப்பது என்றால் என்ன அர்த்தம்? அது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டசபைக்குத் தவறான தகவலைத் தருகிறார்கள் என்றால் அது சரியான தகவலா இல்லையா என்று எப்படி முடிவு செய்யலாம்? நீங்கள் சொல்வது உண்மை என்பதை எப்படி எடுத்துக் கொள்வது?

திரு. க. மு. இராசகோபால் : பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள். வரவர ஒழுங்கைக் கடைப்பிடிக்கும் முறை விட்டுவிடப்பட்டு வருகிறது. நீங்கள் ஏன் நடுவில் எழுந்து பேசுகிறீர்கள்? தலைவர் நிற்கும்பொழுது யாரும் நிற்கக் கூடாது. திரு. சுப்பு அவர்களின் தலைவர் பேசும்பொழுது சொல்லலாம். அது உண்மையான தகவலா, அல்லவா என்று சொல்லலாம். உண்மையான தகவல் என்றால் அதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. என். கணபதி : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், காலையிலே மாண்புமிகு சுப்பு அவர்கள் பேசும்பொழுது ஏதோ தவறான தகவல் கொடுத்துவிட்டார்கள் என்று திரு. லத்தீப் அவர்கள் எழுந்து, பெரிய தகராறுக்கிடையே இடம் கொடுக்கப்பட்டது. இப்பொழுது ஒன்றுமில்லாத சாதாரண விஷயத்தை திரு. சுப்பு அவர்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் மூலம் கிளப்பி விளக்கம் கேட்கிறார்கள். அவருக்கு ஒரு சட்டம், லத்தீப்பிற்கு ஒரு சட்டமா என்பதற்கு தீர்ப்பளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கணபதி எழுப்பிய பாயின்ட் ஆஃப் ஆர்டருக்கு இப்பொழுது பதில் சொல்லியிருக்கிறேன்.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : நான் ஆதாரத்தோடு சொல்கிறேன், பத்திரிகையில் வந்த செய்தி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பத்திரிகைச் செய்தியை ஆதாரமாகக் காட்டக்கூடாது.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் வந்து அமைதியை ஏற்படுத்தினார்கள். அங்கே நாடார்கள், அரிசன மக்கள், முக்குலத்தோர் ஆகியோர் ஒன்று சேர்ந்ததாக வரலாறு இல்லை. அதற்கான காரணத்தை விசாரித்ததில், உண்மையைச் சொல்கிறேன், நேரடியாகப் பார்த்தவரை சொல்கிறேன், உறுதியாகச் சொல்கிறேன், ஏதோ நாடார் வீட்டுப் பெண் கீழே சிகப்பு உடையும், மேலே கறுப்பு ஜாக்கெட்டும் போட்டுக்கொண்டு இருந்தார், நான் இதைச் சொல்வதால் தாய்மார்கள் வருத்தப்பட வேண்டாம்—மேலே உள்ள சட்டையைப் பிடித்து இழுத்திருக்கிறார்கள். அதனால்தான் அந்த இன மக்கள் வெறுப்பு கொண்டு இந்த 3 இனத்தவர்களும் ஒன்று சேர்ந்து விவசாயப் போராட்டம் என்று, ஏற்கெனவே இருந்த வெறுப்பின் காரணமாக தங்கள் இனத்திற்கு, தங்கள் கட்சிக்கு ஆதரவு தேட முற்பட வேண்டுமென்று செய்திருக்கிறார்கள் என்று அந்த ஊரிலிருந்த மக்கள் பேசிக்கொண்டார்கள் என்ற உண்மையான தகவலைச் சொல்கிறேன். அதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

ஆகவே, திராவிட முன்னேற்றக் கழக அரசு மக்கள்மீது வெறுப்பு கொண்ட அரசு அல்ல. சுட வேண்டுமென்று எண்ணக்கூடிய அரசு அல்ல, பொய் வழக்குகள் போட வேண்டுமென்று நினைக்கக்கூடிய அரசு அல்ல, உண்மையிலேயே பொய் வழக்குப் போடக்கூடிய நிலை 1967-க்கு முன்னால் இருந்தது, நிரபராதிகளை ஐ.பி.சி. செக்ஷனில் சேர்த்து; அதிலே நாங்களெல்லாம் இரண்டு, மூன்று ஆண்டுகள் அனுபவித்தவர்கள். அந்தக் காலத்தில் எப்படி வழக்கு போடப்பட்டது என்பது எனக்குத் தெரியும். நான் ஒரு கிராமத்தில்—அந்தக் கிராமத்திற்கு நான் செல்லவேயில்லை—துப்பாக்கிப் பிடித்துச் சுட்டதாகப்போட்டு 3 ஆண்டுகள் புதுக்கோட்டை சிறையிலே இருந்தேன் 1967-க்கு முன்பு. ஆனால் இப்பொழுது பொய் வழக்கு போடும் நிலையில்லை. உண்மையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருபவர்கள் ஒரு ஜாயின்ட் குழு போட்டு வேண்டுமானால், மத்தியஸ்தர்களை வேண்டுமானால் அனுப்பி ஒவ்வொரு ஊரிலும் என்ன நடந்தது என்று பரிசீலித்து பாருங்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஊழியர்கள் போலீசிலே தலையிட்டு அவர்களுக்கு வேண்டியதைச் செய்கிறது என்றும், ஒரு தலைப்பட்சமாக இருக்கிறது என்றும் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மிகமிக வேதனையான நிலை. உலுக்கு ஒரு பக்கம் இடி என்றால் இந்த

[திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி] [1972 ஆகஸ்ட் 11

அரசுக்கு இரண்டு பக்கங்களிலும் இடி. திராவிட முன்னேற்றக் கழகத்தி லுள்ள எங்களைப் போன்றவர்கள் இந்தப் போலீஸ் அதிகாரிகளிடத்திலே நியாயத்தைச் சொன்னாலும் எங்கள் தலையீடுகளைக் கவனிப்பதில்லை. நாங்கள் சொல்லியும் நடக்கவில்லை. எதிர்க்கட்சிகளார்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மீதும், அமைச்சர்கள்மீதும் எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளைக் கவனிப்பதில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே மனசாட்சி யின்படி பாருங்கள். இதற்கு ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்ல வேண்டு மென்றால், தூங்குகின்றவர்களைச் சுலபமாக உசுப்பிவிடலாம், ஆனால் தூங்குகிறவர்களைப் போல் படுத்துக்கொண்டிருப்பவர்களை சுலபத்தில் உசுப்ப முடியாது. ஆகவே, உண்மையிலேயே நியாயமான கோரிக்கைகள் இருந்தால் அவைகளை முதலமைச்சர் அவர்களையும், அமைச்சர்களையும் சந்தித்துக் கூறி, அதை வாதிப்பது இந்த அரசில் கஷ்டம் இல்லை. முன்பிருந்த அரசில் யாருக்கும் பேட்டி கொடுத்ததில்லை. ஆகவே, அந்த அளவில் அரசாங்கம் நல்ல பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு, உண்மை யிலேயே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் மனதார மறுத்து, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு மற்றவர்களும் ஆதரவு தர வேண்டா மென்ற கோரிக்கையைவிட்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அங்கத்தினர் அவர்கள் பேசும்பொழுது எங்கள் கட்சி என்று சொன்னார்கள். அவர் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக சட்டமன்றத்தில் இருக்கிறார்களா என்று அறிய விரும்ப கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மன்றத்திற்கு இன்னும் தகவல் வரவில்லை. அவர் சுயேச்சை உறுப்பினராக இருக்கிறார்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: இன்னும் 32 நிமிஷங்கள்தான் இருக்கின்றன. 4 பேர் பேசுவதற்கு எவ்வளவு நிமிஷங்கள் கிடைக்கும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதற்கு எல்லாக் கட்சித் தலைவர் களும் பொறுப்பேற்க வேண்டும். நான் ஆரம்பத்திலேயே கூறினாலும் கட்சித் தலைவர்கள் இதற்கு ஊக்குவிக்கின்றீர்கள்.

*திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசும்பொழுது இந்தப் பக்கத்திலேயிருக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் சார்பில் மட்டும் அல்லாமல் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தபோதும் அவர்கள் தனிப்பட்டமுறையில் எங்களிடத்தில்

1972 ஆகஸ்ட் 11] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

சொல்லும் விஷயத்தை, ஆளுங்கட்சியில் இருப்பதால் வெளிப்படையாகச் சொல்ல முடியாமல் இருப்பவர்களுக்காகவும் சேர்த்துச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்

(பல குரல்கள்—பாயின்ட் ஆப் ஆர்டர், சார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னது சரியா தவறா என்பது ஒருபுறம் இருக்கட்டும். அதற்காக அத்தனை பேரும் பாயின்ட் ஆப் ஆர்டர்கள் எழுப்பக்கூடாது. பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் ஒருவர் எழுந்து கேட்கட்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதைக்கேட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் ஆத்திரப்பட வேண்டியதில்லை. ஆளுங்கட்சிக்காரர்கள் இதை ஆதரித்தார்கள் என்று அவர்கள் சொல்லும்பொழுது இந்தியாவின் ஆளுங்கட்சி என்ற கருத்தில் சொல்லியிருப்பார்கள். ஆகவே நம்முடைய நண்பர்கள் இதை விட்டுவிடலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்தியாவை ஆளும் கட்சி யைச் சேர்ந்தவன்தான் நான் ஆளுங்கட்சி என்று நான் குறிப்பிடும்பொழுது இங்கே ஆளுகின்ற கட்சியைத்தான் குறிப்பிடுகிறேன். துணைத் தலைவரவர் களே, நேற்று இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு கூறியதை மேற்கோள் காட்டினார்கள். அதனைத் தான் நானும் மேற்கோள் காட்ட விரும்புகிறேன். என்னுடைய நினைவு சரியாக இருந்தால் அண்ணா அவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றவுடன் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் கூறியதாக எனக்கு நினைவு, இங்கே ஏற்பட்டிருப்பது கழகத்தின் ஆட்சிதானே தவிர கழகத்தவர்களுக்கான ஆட்சி அல்ல என்று சொன்னதாக எனக்கு ஞாபகம். அந்த வார்த்தைகளிலே வேறுபாடு இருக்கலாம். ஆனால் அவர்கள் சொன்னதன் கருத்து இது. ஆனால் அந்தக் கருத்திற்கு நேர்மாறாக இங்கே காரியங்கள் நடைபெறுகின்றன என்பதைத்தான் நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன், அதுதான் என்னுடைய குறையும், குற்றச்சாட்டும் ஆகும். அதை வைத்து நான் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே ஏற்கனவே பல விஷயங்கள் நடந்திருக்கின்றன. இப்பொழுது அதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்ததைப்போல் இந்த விவசாயப் போராட்டத்தின் போது நடந்திருக்கிறது. நான் முதலமைச்சரவர்களுக்கு

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1972 ஆகஸ்ட் 11

சொல்லிக்கொள்வேன், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்தப் போராட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்பதைவிட முதலமைச்சர் என்ற வகையிலே இந்தப் பிரச்னையை அணுகியிருந்தால் இந்த விஷயம் இந்த அளவிற்கு முற்றி இருக்காது என்பது என்னுடைய கருத்து. ஆனால் முதலமைச்சர் என்ற முறையைவிட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்ற வகையிலே இந்தப் பிரச்னையை அணுகிவிட்டார் என்பதுதான் நான் கூறுகின்ற குற்றச்சாட்டு. எனக்கு முன்பு பேசிய திரு. ஆலடி அருணா அவர்கள் ஒப்புக் கொண்டார்கள் ஆரம்பத்தில் வன்முறை இருக்கவில்லை என்று. மின்சாரக் கட்டணக் கோரிக்கையைத்தான் வைத்தார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் கூறியதில் ஒரு குறை இருந்தது. கம்யூனிஸ்ட் கட்சி சேர்ந்தபிறகுதான் 12 அம்சக் கோரிக்கை வந்தது என்று கூறினார்கள். அப்படி அல்ல. முதலிலேயே வந்துவிட்டது. ஆனால் அந்தக் கோரிக்கைகளின் தன்மையை வைத்துப் பார்க்காமல் அரசியல் பிரச்னை என்று, அரசாங்கத்தைக் கவிழ்க்கின்ற பிரச்னை என்று கட்டுப்பாடான பிரச்சாரம் மாநிலம் முழுவதும் நடந்ததை அறிந்து வேதனைப்பட்டேன். இது அரசியல் என்று சொல்கிறார்கள். நான் சொல்லிக்கொள்கிறேன், இதை அரசியல் ஆக்கியது ஆளுங்கட்சியே தவிர போராட்டத்தை நடத்தியவர்கள் அல்ல என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஜூன் 7-ம் தேதிக்குப் பிறகுதான் அரசியல் கட்சிகள் என்ற வகையில் சேர்ந்தார்கள். அதற்கு முன்பு வைத்த கோரிக்கைகளில் அரசியல் கிடையாது, பேசிய பேச்சில் அரசியல் கிடையாது. மன்றாடியார் தலைவர் என்று சொல்கிறார்கள். நிலப்பிரபுக்கள் என்று சொல்கிறார்கள். வியப்பாக இருக்கிறது. நிலச்சீர்திருத்தச் சட்டம் வந்து, அதை சிறப்பாக அமல் படுத்தியிருக்கிறோம், என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது நிலப்பிரபுக்கள் இருக்கிறார்கள் என்று சொல்வதில் சிறிதும் பொருத்தம் இல்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மன்றாடியார் அவர்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது என்று உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமா? எந்தப் பாதுகாப்பின்கீழ் நிலம் இருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்களா? இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றிய விவரம் தெரியுமா? மன்றாடியார் அவர்களும், அவர்களது குடும்பத்தாரும், இதில் ஈடுபட்டிருக்கிற பலரும் நிலப்பிரபுக்கள் என்ற ஆதாரத்தை வேண்டுமானால் தருகிறேன். அப்படி இல்லை என்று எந்த ஆதாரத்தை வைத்து மறுக்கிறார்கள் என்பதை தெரிய விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 11]

திரு. ஏ. சுப்பிரமணியம்: திரு. மன்றாடியார் அவர்கள் நிலப்பிரபு இல்லை என்று சொல்ல வரவில்லை. ஏன் நிலப்பிரபுக்களை நிலப்பிரபுக்களாக இவ்வளவு ஆண்டுகளாக வைத்திருக்கிறீர்கள் என்றுதான் கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: விதிவிலக்குகளை ரத்து செய்வதற்கு மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். எல்லாரும் சேர்ந்து பேசி நல்ல பல திட்டங்களைத் தந்திருக்கிறீர்கள். இந்தக் கூட்டத் தொடரிலேயே அது பற்றி விவாதிக்க இருக்கிறோம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மன்றாடியார் அவர்களின் நிலத்தைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது என்பதை நான் உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பேசுகிறவர்களுக்கும் அது உபயோகமாக இருக்கும். அவர் பாவம், பரம ஏழை 1995 ஏக்கர் இருக்கிறது அவர்களது பெயரில். இன்றைய தேதியிலும் அப்படியே இருக்கிறதா என்று கேட்பீர்கள். எப்படி அது முடிந்தது என்று கேட்பீர்கள். ஏற்கனவே இருந்த அரசாங்கம் மாட்டுப் பண்ணை வைக்க விதிவிலக்கு கொடுத்தது. அதை அளிக்க மனு கொடுத்தார்கள். அப்போதிருந்த அரசு 880 ஏக்கர் அளவிற்கு விதிவிலக்கு கொடுத்தது. மிச்ச நிலத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் நோட்டீஸ் கொடுத்திருக்கிறது. பின் மன்றாடியார் அவர்கள் ஹைகோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கி, உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பு வழங்கவில்லை. அது இந்த அரசாங்கம் செய்த தவறு அல்ல, ஏற்கனவே இருந்த அரசாங்கம் செய்த தவறு.

திரு. ஏ. சுப்பிரமணியம்: மீண்டும் கூறுகிறேன். இந்த அரசு வந்து ஐந்தாண்டுகளுக்கு மேலாகிறது. இவ்வளவு காலமாக ஏன் விட்டு வைத்திருக்கிறீர்கள்? எவ்வளவு சீக்கிரமாக எடுத்துக்கொள்கிறீர்களோ அந்த அளவிற்கு அதை நான் வரவேற்பேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அது மாட்டுப் பண்ணைக்கு ஸ்டே. இவ்வளவு காலம் ஏன் காத்திருந்தீர்கள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அந்தச் சட்டம் நாளையதினம் தாக்கலாகிறது. ஒரு மாதத்திற்கு முன்னர் அறிவித்தாகிவிட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி: நிலப்பிரபுத்துவத்தை ஒழித்துக் கட்டுவது என்பதை கொள்கையாக வைத்திருக்கிறீர்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நிலப்பிரபுத்துவத்தை இந்த ஆட்சி இருக்கிற வரையில் ஒழித்துத்தான் தீருவோம் என்பதை உறுதியாகச் சொல்கிறேன். அதுதான் அரசாங்கத்தின் கொள்கை.

[1972 ஆகஸ்ட் 11

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்த விவசாயப் போராட்டம் தொடங்கியதற்குப் பிறகாவது நிலப்பிரபுத்துவத்தை ஒழிப்பது என்பது இவர்கள் கொள்கையாக வந்திருப்பதை நான் வரவேற்கிறேன், மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. சுப்பிரமணியம் அவர்கள் இப்படி ஒரு தவறான தகவலைச் சொல்லக்கூடாது. இந்தப் போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பே பல விதிவிலக்குகளை அகற்றி விடவேண்டிய ஒரு முடிவிற்கு வந்து, இந்த மன்றத்தில் தங்களைப் போன்றவர்கள் சீரிய கருத்துக்களையெல்லாம் இந்த அரசுக்கு வழங்கி, அதன் அடிப்படையில் விதிவிலக்குகளை அகற்றி வருகிறோம். அதில் இது ஒரு கட்டம். அவற்றை விலக்கவேண்டும் என்பதில் இந்த அரசாங்கம் பின்வாங்கியதில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: மன்றாடியார் அவர்களின் காலஞ்சென்ற தம்பி அந்தப் பக்கத்தில் இருந்தவர். அவர் மறைந்துவிட்டார். அந்த இடத்தை நிரப்பவேண்டுமென்று, மன்றாடியாரின் குடும்பத்தைச் சேர்ந்தவர், ஆலை முதலாளி ஒருவரை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நாடாளுமன்ற இடைத் தேர்தலில், பழைய காலத்தில் அந்தக் கட்சிக்காகப் பாடுபட்டவர்கள் இருந்த போதிலும், இவரை நிறுத்தி வைத்து வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள். எனக்கு அவர் பேரில் மதிப்பு உண்டு, மரியாதை உண்டு. நிலப்பிரபுக்கள் . . . .

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பட்டக்காரர் அவர்களுக்கு 1995 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் மோகன்ராஜுக்கு எவ்வளவு ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொல்லமுடியுமா?

திரு. ஏ. சுப்பிரமணியம்: அவரும் ஜமீந்தார் குடும்பத்தைச் சார்ந்தவர் தான். (ஆரவாரம்.) இன்று அவர் ஆலை முதலாளியாகவும் இருக்கிறார்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: எந்த ஆலைக்கு அவர் முதலாளி என்பதை திருப்பிக்கவேண்டும். தவறான தகவல் தயவுசெய்து சொல்ல வேண்டாம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: சோமனூர் அம்பாள் ஆலைக்கு அவரும் அவர் சகோதரர்களும் முதலாளிகள்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: சபையில் உறுப்பினர்களாக இல்லாதவர்களைப் பற்றி இங்கு இப்படிப்பட்ட விவாதம் நடத்துவது நியாயமா?

1972 ஆகஸ்ட் 11]

திரு. ஏ. சுப்பிரமணியம்: கோரிக்கைகள் வைக்கப்பட்டன. அவற்றைப் புறக்கணிக்கிற போக்கினை இந்த அரசு கடைப்பிடித்தது. கோரிக்கைகளை வைத்து அரசியல் பண்ணுகிறார்கள், அரசினைக் கவிழ்க்கப் பார்க்கிறார்கள் என்று ஆளும் கட்சித் தரப்பிலிருந்து பிரச்சாரம் செய்யப்பட்டது. அப்போராட்டம் சிலவிடங்களில் நான்கு நடந்தது, சிலவிடங்களில் நன்கு நடக்கவில்லை. அதுவே என் வாதத்திற்கு ஆதாரம். இந்தப் போராட்டம் எங்கு விவசாயிகள் மிகவும் அல்லல்படுகிறார்களோ, எங்கு கடன் சுமைக்கு ஆளாகியிருந்தார்களோ, எங்கு ஆழமான கிணறுகள் தோண்டவேண்டிய நிலைமை இருந்ததோ, எங்கு மின்சாரத்திற்காக அதிகப் பணம் செலவழிக்க வேண்டிய நிலை இருந்ததோ அவ்விடங்களில் தான் போராட்டத்தின் வேகம் இருந்தது. தஞ்சை போன்ற இடங்களில், காலால் தள்ளி தண்ணீர் பாய்ச்சுகின்ற இடங்களில் போராட்டத்திற்கு வேகம் இல்லை. இதுதான் உண்மை. முதலில் கோரிக்கைகள் வைக்கப்பட்டபோதே அரசு பரிசீலனை செய்து ஏற்றிருக்கலாம். காலம் கடத்தியது மட்டுமல்ல. முதல் அமைச்சர் அவர்கள் என்ன காரணம் என்று சொல்லமுடியாது, விவசாயச் சங்கத் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்த தயார் என்று சொன்னபோது அவர்களை அழைத்து பேசியிருக்கலாம். இதில் கௌரவப் பிரச்னை என்ற முறையில் பார்க்க வேண்டியதில்லை. அழைத்திருக்கலாம், பேசியிருக்கலாம், பிரச்னையைத் தீர்த்திருக்கலாம். நானாக அழைக்க மாட்டேன், அவர்களாக வரட்டும் என்று சொல்லிக்கொண்டு இருந்துவிட்டார்கள். பிறகு கிளர்ச்சி நடந்தது. அதில் வன்முறை இருக்கவில்லை. ஆலடி அருணா அவர்களே அதைச் சொன்னார்கள். மே 26-ம் தேதி ஹர்த்தால் நடந்தபோது ஒரு சிறிய வன்முறை கூட நடக்கவில்லை. பின்னர், ஏற்கனவே நடந்ததுமாதிரி ஒரு பிரசாரம் செய்யப்பட்டது. குண்டு வைத்திருக்கிறார்கள் என்ற செய்தி வந்தது.

இதில் வேடிக்கை என்னவெனில், இந்த ஆட்சியில், வைக்கிற குண்டுகள் வெடிக்காத குண்டுகளாக இருக்கின்றன. இப்படிச் சில செய்திகள் வந்தன. பிறகுதான் வன்முறை நடந்தது. வன்முறைச் செயல்களை யார் செய்தார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். மே மாதம் 23-ம் தேதி பெண்கள் மறியலில் ஈடுபட்டார்கள். அப்படி ஈடுபட்ட பெண்களை போலீசார் வண்டியில் ஏற்றி ஒரு மைல் தொலைவிற்கு சென்று சுற்றிச்சுற்றி வந்து அவர்களை அங்கு விட்டு விட்டார்கள். அதுகுறித்து நான் டி.எஸ்.பி. (எஸ்.பி.) க்கு போன் செய்தேன் ஒன்றும் தெரியாது என்று அவர்கள் சொன்னார்கள். இரவு 12 மணி அளவில் அவர்களை விட்டார்கள். இரண்டு பெண்களை அடித்தார்கள். அலுவலகத்தில் நான் உட்கார்ந்திருந்த போது ஒரு மைல் நடந்து அவர்கள் வந்திருக்கிறார்கள். அப்போதும் போன் செய்தேன். டி.ஐ.ஜி.-க்கு. தெரியாது எனக்கு என்,

சொல்லிவிட்டார்கள். பந்த் நடப்பதற்கு முன்னால்—பந்த் 5-ம் தேதி நடக்கிறது—4-ம் தேதிக்கு முன்னால் 2-ம் தேதி செயல்வீரர்கள் கூட்டம் நடக்கிறது. கொள்கை விளக்கக் கூட்டம் நடக்கிறது. ஜூன் 26-ம் தேதி முதல் அமைச்சர் அவர்கள் இங்கு பேசுகிறார்கள். நேற்று அவர்கள் சொன்னார்கள், வன்முறையை ஆதரித்துச் சொல்லவில்லை என்று அண்ணா வழி நடப்பதாகச் சொன்னேன் என்று சொன்னார்கள. பிறகு பத்திரிகைகளைப் படித்துப்பார்த்தேன். அவர்கள் சொல்லியிருப்பது வன்முறைதான் வேண்டுமென்று சொல்லி கட்டளையிட்டால் முதல் அமைச்சர் பதவியைத் துறந்துவிட்டு அதற்கு தலைமை தாங்கத் தயார் என்று பேசியிருக்கிறார்கள். அண்ணா வழி என்ன வழி என்று சொல்லவில்லை. சொல்லாமல் விட்டு விட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அண்ணா வழி பலாத்கார வழி என்கிறீர்களா? காந்தி வழி என்று சொன்னால் என்ன வழி என்று மக்களுக்குப் புரிகிறதோ அதுபோல் அண்ணா வழி என்று சொன்னால் மக்களுக்குப் புரியும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: அண்ணா வழி என்ற பெயரால், அண்ணா சொன்ன கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற பெயரால் பல காரியங்கள் நடைபெறுகின்றன. அண்ணா வழி என்பதற்கு இப்பொழுது என்ன விளக்கம் சொல்கிறார்களோ தெரியாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நாங்கள் அண்ணா வழி தான் சென்று கொண்டிருக்கிறோம். நீங்கள்தான் அடிக்கடி வழி தவறிப்போளக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: மது விலக்கை ரத்து செய்தவுடனேயே யார் வழி தவறிவிட்டார்கள் என்பது தெரிந்துவிட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உங்கள் காங்கிரஸ் ஆளுகின்ற மஹாராஷ்டிரத்தின் நிலைமை என்ன?

திரு. ஏ. சுப்பிரமணியம்: மாட்டியர்கள் அண்ணா வழி செல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்கள் காந்தி வழியில் செல்கிறார்களா?

திரு. ஏ. சுப்பிரமணியம்: ஆகவே, நீங்கள் வழி தவறி செல்கிறீர்கள் என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். அதன் பிறகு மீண்டும் ஜூன் 7-ம் தேதி மாட்டுவண்டி ஊர்வலத்திற்குப் பிறகு தலைவர்கள் சென்னைக்கு

வருகிறார்கள், பேச்சு வார்த்தைகள் நடத்துவார்கள் என்று பத்திரிகையில் செய்தி வந்தது. அப்படி வந்ததற்குப் பிறகு ஒரு அறிக்கை வருகிறது. அறிக்கை என்ன சொல்கிறது? முதல் அமைச்சர் அறிக்கையிலே சொல்கிறார்கள். "முதல்வர் பேசுவதற்கு ஒப்புக்கொண்டார். அதனால் போராட்டம் நிறுத்தப்பட்டது" என்று பத்திரிகைகளில் வந்த செய்தி தவறானது. தமிழக அரசு மீது உள்ள விரோத மனப்பான்மையால் வெளியிடப்பட்டதேயாகும். "அவர்கள் போராட்டத்தை நிறுத்திவிட்டு என்னை சந்தித்துப் பேசவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கு முன்னாலே ஏற்கனவே கலெக்டர் அவர்கள் சொல்லியிருக்கிற செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. அந்த பத்திரிகையும் எங்கள் பத்திரிகை அல்ல. "மாட்டு வண்டி ஊர்வலத்திற்குப் பிறகு விவசாயப் பிரதிநிதிகள் கலெக்டர் வி. சிவகுமார் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள். போராட்டத்தைக் கைவிடுவதாக விவசாயிகள் சங்கம் ஒப்புக்கொண்டது" என்று 7-ம் தேதி இரவு கலெக்டரை டெலிபோனில் கேட்டபொழுது, "ரெப்ரெசண்டேடிவ் என்று இருப்பதை ரெப்ரெசெண்டெட் என்று பத்திரிகையாளர்கள் தவறாக எழுதிக் கொண்டு சென்று விட்டார்கள். விவசாய சங்க ரெப்ரசெண்டேடிவ்ஸ் என்று தான் இருக்கிறது" என்று அவர் சொன்னார். "அரசாங்கம் கேட்டுக்கொண்டதினால் தான் அவர்கள் நிறுத்தினார்கள். அது தான் உண்மை., நீங்கள் பேசுவதற்கு வாருங்கள்" என்று அழைத்தார். அந்த அடிப்படையிலே தான், போராட்டத்தை நிறுத்தக்கூடாது என்று வரதித்த விவசாயிகளோடு இரவெல்லாம் வாதாடி அவர்களை ஒப்புக் கொள்ள வைத்தோம். முதல் அமைச்சர் அவர்கள் பிறகு சொன்னார்கள். இம்மாதிரி நாங்கள் அழைக்கவில்லை, அவர்களாகவே போராட்டத்தை நிறுத்திவிட்டு வந்தார்கள் என்று. உண்மைக்கு புறம்பாக அறிக்கை விட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் பேச்சு வார்த்தைக்கு மறுத்ததாகச் சொல்வது ஒரு பெரிய குற்றச்சாட்டாகும். அதுவும் அதை நிபந்தனையாக வைத்து போராட்டத்தை நிறுத்திவிட்டோம் என்று சொன்னால் நான் பெரிய குற்றவாளி ஆகிறேன். ஆகவேதான் 'பேச்சு வார்த்தைக்கு ஒப்புக் கொண்டார், அதனால் தான் போராட்டம் நிறுத்தப்பட்டது' என்ற செய்தியை மறுத்தேன், அவர்களோடு எப்பொழுதும் பேசுவதற்குத் தயாராக இருக்கிறேன். "போராட்டத்தை நிறுத்திவிட்டுப் பேச்சு வார்த்தைக்கு வந்திருக்கிறார்கள், நான் பேசுவதற்குத் தயாராக இருக்கிறேன்" என்றுதான் சொன்னேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: முதல்வர் அவர்கள் மிக நல்ல ராஜதந்திரி என்பது எனக்குத் தெரியும், ஆனால் இந்த விஷயத்தில் அவர்கள் அந்த ராஜ தந்திரத்தைக் காட்டவில்லை. கட்சித் தலைவராகச் செயல்பட்டுவிட்டார். நான் அவரைச் சென்று பார்த்தாக முதலமைச்சர் நேற்று கூறினார். நானாகச் செல்லவில்லை. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் 'நீங்கள் முதல் அமைச்சரைப் பாருங்கள், இதைப்பற்றி பேசுங்கள்' என்று சொன்னார். முதலமைச்சரிடம் நான் சொன்னேன், "நீங்கள் இம்மாதிரி அறிக்கை விட்டிருக்கக்கூடாது. பேச்சுவார்த்தைகளுக்கு வந்தபொழுது போராட்டத்தை நிறுத்துவதில் அக்கறை செலுத்தி நல்ல படியாக முடிந்திருக்கவேண்டும். ஆனால் நீங்கள் அந்த வழியில் உங்களுடைய ராஜதந்திரத்தைக் கையாளவில்லை. போராட்டத்தை மீண்டும் நடத்துவதற்கு வழி செய்துவிட்டீர்கள்" என்பதை நானே சுட்டிக்காட்டிச் சொன்னேன். அதன் பிறகு போராட்டம் தொடர்ந்து நடந்தது.

வன்முறை என்று ஆளும் கட்சித் தோழர்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே சொன்னார்கள். வன்முறை நடந்தது என்று சொன்னார்கள். மக்கள் தரப்பில் சில வன்முறைகள் ஆங்காங்கு நடந்திருக்கக் கூடும் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் யார் அதனைத் தொடங்கிவைத்தார்கள்? எப்படி நடந்தது என்பதனை நிச்சயம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஜூலை 4-ம் தேதி அன்று கோவையிலே தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், இவர்களின் தலைமையில் போலீஸ் லாரி, போலீஸ் உதவியோடு ஆயுதங்களோடு பல இடங்களில் ஊர்வலமாக வந்து, கடைக்காரர்களை மிரட்டினார்கள்; ஆனந்தவிகடன், அலைஓசை போன்ற பத்திரிகைகளை கடைகளிலிருந்து எடுத்து நெருப்புவைத்தார்கள். அதைப்பற்றி நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். ஒரு கோஷத்தைச் சொல்கிறார்கள். என்ன? "நாளை கடை அடைத்தால், நீங்கள் என்றைக்கும் கடையை திறக்க முடியாது". இந்தக் கோஷம் கோவையில் மட்டுமல்ல, சேலம், ஆத்தூர், மதுரை இப்படி ஒவ்வொரு இடத்திலும் அதே கோஷம் எழுப்பப்பட்டது. துணைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு கோஷம் மாநிலம் முழுவதும் ஒரே கோஷம் எப்படி வந்தது, ஒரேமாதிரியாக 'நாளை கடை திறக்கவில்லை என்றால், என்றைக்கும் திறக்க முடியாது' என்ற கோஷம், திட்டமிடாமல் எப்படி வந்தது என்று நான் கேட்கிறேன்.

அது மட்டுமல்ல. சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். போலீஸ் துணையோடு அவர்கள் சென்று அந்தக் காரியங்களைச் செய்திருக்கிறார்கள். ஆயுதங்களோடு பல இடங்களில் சென்றிருக்கிறார்கள். பந்த் அன்று பீளமேடு

புதூரில் மாற்று கட்சியினர்களின் வீடுகளில் புகுந்து தாக்கியிருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். 6-ம் தேதி காலையில் பல்லடத்தில் பிணத்தைக் கொடுத்து விட்டோம் என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்களாக பிணத்தைக் கொடுக்கவில்லை. பிணத்தை எடுத்துக்கொண்டு தான் போவோம் என்று சொன்ன பிறகு, தொலைபேசியில் யாருடனோ கலந்து பேசி—யாரோடு பேசினார்களோ தெரியாது—பிறகு பிணத்தை எடுத்துக்கொண்டு போக அனுமதித்தனர்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பல்லடத்தில் இறந்தவரின் சடலத்தை கோவை நகரத்திற்கு எடுத்துச் செல்லவேண்டிய அவசியம் என்ன?

திரு. ஏ. சுப்பிரமணியம்: போராட்டம் நடக்கும்பொழுது, பிணங்களை எங்கே எடுத்துச்செல்வது என்பது போராட்டம் நடத்துபவர்கள் தீர்மானிக்க வேண்டிய விஷயம். ஊர்வலத்தில் வன்முறை வந்தால், அமைதிக்கு இடைஞ்சல் வந்தால் நீங்கள் கேட்கலாம். 1970-ம் ஆண்டு பெருமாநல்லூரில் துப்பாக்கிப்பிரயோகம் நடந்தது. போலீஸ் சூப்பிரெண்டெண்டு பிணத்தைக் கொடுக்க முடியாது என்று சொன்னார், அமைதி கெட்டு விடும் என்று சொன்னார். போலீஸ் காரர் ஒருவர் கூட வராமல், இருந்தால், அமைதி காக்கின்ற பொறுப்பை நான் ஏற்கிறேன் என்று சொல்லி, அதே போன்று அமைதியாக ஊர்வலம் நடைபெற்றது.

அதற்குப் பின்னால் இங்கே நடந்தது என்ன? ஊர்வலம் அமைதியாக வருகிறது. ஊர்வலம் வரும்பொழுது சிலர் சொல்கிறார்கள். துப்பாக்கிப் பிரயோகம் நடக்கிறது என்று ஆட்களை விரட்டுகிறார்கள். ஊர்வலம் நகர்ந்து சென்றுகொண்டிருந்ததே தவிர, ஒன்றும் செய்யவில்லை. அப்படி நகர்ந்து செல்லும்பொழுது, ஆளுங்கட்சியினர் வீடுகளின் மாடிகளிலிருந்து சோடா புட்டிகளையும், கற்களையும் மவுன ஊர்வலத்தின்மீது வீசி எறிந்தார்கள். அங்கே இருந்து கழகத் தோழர்கள் மவுன ஊர்வலத்தை வழிமறைத்து அவர்களை அடித்தார்கள். சென்னையிலும் மவுன ஊர்வலம் தாக்கப்பட்டிருக்கிறது என்று பத்திரிகையில் செய்தி வந்தது . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் கூட நீங்கள் கோவை ஊர்வலத்தைப்பற்றிச் சொல்லும்பொழுது ஒரு வேளை இருக்குமோ என்று சந்தேகப்பட்டேன். சென்னையை ஒப்பிட்டதிலிருந்து புரிந்து கொண்டேன் எப்படி இருந்திருக்கும் என்று.

திரு. ஏ. சுப்பிரமணியம்: 6-ம் தேதி அன்று காலையிலே என்னுடைய அலுவலகம் தாக்கப்பட்டது. கோவை ஜில்லாவில் பஞ்சாயத்து அலுவலகம் தாக்கப்பட்டது. தாக்கப்பட்ட அடையாளங்கள் அப்படியே இருக்கின்றன.

யார் தாக்கினார்கள்? தி.மு.க. நகர மன்ற உறுப்பினர்கள். அவர்கள் வெற்றிக்காக நான் பாடுபட்டேன். நகர மன்ற உறுப்பினர்கள் வங்கியின் தலைவர் தலைமையிலே கழகத் தோழர்கள் தாக்கியிருக்கிறார்கள். அலுவலகத்தின் முன்னால் 18 சைக்கிள்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அந்த சைக்கிள்கள் நொறுக்கப்பட்டிருக்கின்றன. ரூ. 4,000, 5,000-க்கு சேதம் விளைவிக்கப்பட்டிருக்கிறது. ஆபீஸ் போர்டு சேதமாக்கப்பட்டிருக்கிறது. அத்தனையும் நடந்தது, நடக்கும்பொழுது அங்கே போலீஸ் முன்னால் இருந்துகொண்டு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் பிறகு மாலையிலே தான் ஆங்காங்கு சில வன்முறைச் செயல்களை மக்கள் செய்திருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. அதற்கு முன்னால் 6-ம் தேதி மாலை வரையில் எந்த மக்கள் தரப்பிலும் எந்த வன்முறைச் செயலும் கிடையாது என்று நான் சொல்கிறேன்.

அரசாங்கத்தில் இருப்பவர்கள் எந்த வன்முறைச் செயலும் கூடாது என்று சொல்கிறார்கள். நான் அதை முழுமையாக ஆதரிக்கிறேன். நான் பல போராட்டங்களை கோவையில் நடத்தியிருக்கிறேன். வன்முறை தலைகாட்டவில்லை. வன்முறை தவிர்க்கப்படவேண்டும் என்பது எதிர்தரப்பிலுள்ளவர்களுடைய பொறுப்பு மட்டுமல்ல. அரசு அதனைப் பார்த்துக்கொள்ள வேண்டும். அரசே, ஆளுகின்ற கட்சியே வன்முறையை கட்டவிழ்த்துவிட்டு, பெரிய வன்முறைப் போராட்டம் நடந்திருக்கிறது என்று சொல்கிறார்கள்.

துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஒரு வழக்கறிஞர். பர்ஸ்ட் இன்பர்மேஷன் ரிபோர்ட் என்பது எவ்வளவு முக்கியம் என்பது உங்களுக்குத் தெரியும். எஸ்.ஐ.ஆர். முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார். பெத்துநாயக்கன்பாளையத்தில் போலீஸ் ஸ்டேஷன் தாக்கப்பட்டது. அதனால் தான் துப்பாக்கிப் பிரயோகம் என்று. அதற்குப் பிறகு பல அறிக்கைகள் வருகின்றன. போலீஸ் ஸ்டேஷன் இல்லாமல் போலீஸ் ஸ்டேஷன் தாக்கப்பட்டது என்ற செய்தியைக் கொடுத்திருக்கிறார்கள். நமக்குத் தெரியும், போலீஸ் இலாகாவில் எப்படியெல்லாம் செய்வார்கள், ஜோடிப்பார்கள் என்பது நமக்குத் தெரியும். போலீசில் எப்படி எப்படியெல்லாம் வழக்கு சோடிப்பார்கள் என்று நமக்கெல்லாம் தெரியும். இதுபற்றி பல நேரங்களிலே உயர்நீதி மன்றங்களில்கூட எடுத்துக்காட்டி கண்டித்திருக்கிறார்கள். போலீசார் என்றைக்கும் தவறு செய்ததாக ஒப்புக்கொள்ளுவதில்லை. ஐயம்பாளையம் ஒரு சிறு கிராமம். என்ன நடந்தது அங்கே? ஒன்றுமே நடைபெறவில்லை. ஆனாலும் வேண்டுமென்றே போலீசார் ஒரு பெட்ரோல் லாரியை அழைத்துக் கொண்டுபோய் அங்கே நிறுத்திவைத்து விவகாரம் செய்கிறார்கள்.

சட்டம் அமைதியைப் பாதுகாப்பது மட்டும் போலீசாருடைய பொறுப்பல்ல, அதே நேரத்தில் மக்கள் ஆத்திரம் அடைந்திருந்தால் அல்லது மக்கள் கொதிப்படைந்திருந்தால் தந்திரத்தோடு சமாளிக்கவேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு இருக்கிறது. தடியையும் துப்பாக்கியையும் மட்டும் அவர்கள் ஏந்தியிருக்க வேண்டிய பொறுப்பு மட்டுமில்லை, அத்துடன் பொறுமையையும் நிதானத்தையும் அவர்கள் கடைபிடிக்க வேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு இருக்கிறது. அதுமட்டுமில்லை துணைத் தலைவரவர்களே, நம் மாண்புமிகு கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் பேசும்பொழுது ஆளும்கட்சி உறுப்பினர்கள் கொதித்து எழுந்தார்கள், "ஜாதியைப் பற்றிக் குறிப்பிடாதீர்" என்று. நான் சொல்லுவேன் இந்த ஜாதி உணர்வினை யார் தூண்டிவிடுகிறார்கள் என்று. பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராட்டம் நடக்கும்போது நான் சிறைக்குள் இருந்தேன். அப்போது சிங்கநல்லூர் கூட்டத்தில் ஆளும்கட்சியைச் சேர்ந்த மேலவை உறுப்பினர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் பேசுகிறார்கள் அங்கே. என் ஜாதியைக் குறிப்பிட்டுப் பேசுகிறார்கள். நான் ஜாதியை மறந்து வெகு ஆண்டுகளாகிவிட்டன. ஆனால் இவர்கள் பிரச்சனைகளைப் பேசுவதைவிட்டுவிட்டு ஜாதியினைப் பற்றிப் பேசினார்கள். இந்த விவசாயிகள் போராட்டத்தின்போது ஆளும் கட்சியினர் பலர் ஜாதியைக் குறிப்பிட்டுப் பேசினார்கள்.

தொடக்கத்திலிருந்தே பார்க்கிறேன், இதை தவறான வழியில் அணுகியிருக்கின்றார்கள் ஆளும் பொறுப்பில் உள்ளவர்கள். இதில் ஈடுபட்டுள்ளவர்களைப் பழித்துக்கூறி இந்த இயக்கத்திற்கு ஒரு இழுக்கினை உண்டாக்கி இதை ஒழித்துக்கட்டுவது என்ற முடிவோடு இருந்த காரணத்தினால்தான் அரசு ஆரம்பத்திலிருந்தே இந்தக் கோரிக்கைகளை முறையாக அணுக முடியவில்லை, இதன்காரணமாகத்தான் இந்தப்போராட்டம் வலுப்பெற்றுவிட்டது என்ற குற்றச்சாட்டை வேதனையோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்னும் ஒன்றை வேதனையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். துணைத்தலைவரவர்களே, நமது மாநிலத்தைப்பொறுத்த வரையில் ஒரு போக்கு உருவாகியிருக்கிறது. அதாவது மாற்றுக் கருத்துக்களைச் சகித்துக்கொள்ள முடியாத ஒரு போக்கு—எதிர்ப்பினைச் சகித்துக்கொள்ள முடியாத ஒரு போக்கு—இதுதான் பாஸிஸத்தின் தொடக்கம். இந்த வார்த்தையை உபயோகிப்பதற்காகக் கோபித்துக்கொள்ளக்கூடாது. மாற்றுகட்சியினரின் விமரிசனத்தைத் தாங்கிக்கொள்ளமுடியாத போக்கினைப் பார்க்கிறோம். சிறையில் வேண்டுமென்றே எப்படியெல்லாம் கொடுமைப் படுத்தினார்கள்? வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டவர்களுக்கு தண்ணீரே கொடுக்கப்பட

வில்லை. இதுபற்றி அமைச்சர் மாதவன் அவர்களிடம் சொன்னபோது, "வேலூரில் தண்ணீர் பஞ்சமே இல்லையே" "என்றார் "அதனால்தான் கேட்கிறேன், என் குடி தண்ணீர் கூட கொடுக்கவில்லை என்று" என்று நானும் திருப்பிக்கேட்டேன். இதே கேள்வியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பத்திரிகையாளர் கேட்டபோது, அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? 'சிறையில் நிலப்பிரபுக்களுக்கு வேண்டிய வசதிகள் அனைத்தும் கிடைக்குமா' என்ற பொருள்பட பதில் அளித்தார். குடிதண்ணீர் கேட்பது நிலப்பிரபுக்களுக்களான வசதியா? முதல்வர் வாயிலிருந்து இப்படிப்பட்ட பதில் வந்ததே என்று வேதனைப் பட்டேன். சிறைக்குப் போயிருந்த இடத்தில் மொத்தம் 25 ஆயிரம் பேரில் ஒரு சில பெரிய நிலச்சுவான்தாரர்கள் இருந்தார்கள் என்பதை ஒப்புக்கொள்கிறேன். எந்தப் போராட்டத்தில்தான் இருக்கவில்லை? ஆளும் கட்சி நடத்திய போராட்டங்களில் இறங்கியவர்கள் எல்லாரும் பரம ஏழைகள்தானா? ஏழைகள் இருக்கிறார்கள், வசதிபடைத்தவர்களும் இருக்கின்றார்கள். சுதந்திரம் பெற்ற வெள்ளிவிழாவினைக் கொண்டாட இருக்கிறோம். யார் யார் அதில் இருந்தார்கள்? ஏழைகள் இருந்தார்கள், டாட்டாவும் பிர்லாவும் கூடத்தான் இருந்தார்கள். பிரச்சனையின் தன்மையைத்தான் பார்க்க வேண்டுமே தவிர, போராட்டத்திலே சேர்ந்திருக்கின்ற ஒன்றிரண்டு நிலச்சுவாந்தாரர்களை வைத்து இந்த இயக்கத்தையே குறை கூற முற்படுவது நியாயமாகாது. இதை வேறுயாராவது சொன்னால்கூட புரிந்து கொள்ளலாம், ஆனால் நல்ல சாமர்த்தியம் உள்ளவர் ஆழமாகப் பிரச்னையைப் பார்க்கும் திறன்படைத்தவர் அவர் சொல்லும்போதுதான் அவர் வேறு நோக்கோடு இதைப் பார்த்தார், இதை ஒடுக்கிவிட வேண்டும் என்று நினைத்தார் என்று எண்ண இடம் ஏற்படுகிறது. "விவசாயச் சங்கத்தின் சார்பில் நடந்த தேர்தலில் ஒருவர் போட்டியிட்டு வெற்றிபெற்றார், அவரையும் கழகத்திற்குள் இழுத்துக்கொண்டுவிட்டோம், ஆகவே விவசாயிகளை என்ன செய்தாலும் எவரும் கேட்கமாட்டார்" என்று கழகத் தோழர்கள் கொடுத்த தவறான தகவல்களை வைத்துக்கொண்டு மொத்தத்தில் இப்படி நடந்திருக்கிறதோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

முதல்வர் அவர்கள் சொன்னார்கள் "பொய் வழக்கினைப் போட்டிருந்தால் கோர்டில் சந்தித்திருக்கலாமே, என் வாபஸ் வாங்கச் சொன்னீர்கள்" என்று. முதலமைச்சர் அவர்களும் ஒரு காலத்தில் சிறையில் இருந்தவர்தான். போலீசார் நினைத்தால் எத்தனை விதமான வழக்குகளையும் போடலாம். ஆனால் போட்ட வழக்குகளையெல்லாம் நீதி மன்றத்தில் அனைவருமே போய் சந்திப்பது என்றால் முடிகிற காரியமா என்று தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

துணைத் தலைவரவர்களே 'கோர்ட்டுகளில் சந்தித்துப் பார்ப்பதுதானே' என்று சொல்லுவது ஜனநாயகத்திற்குப் பொருத்தமான வார்த்தைகளாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்னும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் துணைத் தலைவரவர்களே. தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்று போலீஸ் என்பது ஆளும் கட்சிக்கு துணையாக நிற்கும் ஒரு அமைப்பாக முக்கால்வாசி மாறிவிட்டது. இந்தப் போராட்டத்தின்போது இதை நன்கு பார்த்தோம். இதைப்பற்றிக் கேட்டால், அதிகாரிகள் சொல்லுகிறார்கள், 'நாங்கள் என்ன செய்ய முடியும், மேலிடத்து உத்திரவு' என்று. ஆளும் கட்சியினர் எதை வேண்டுமானாலும் செய்யலாம், வழக்கு இல்லை. ஆனால் அதே காரியத்தை எதிர்தரப்பினர் செய்தால் வழக்குப்போடுவது என்ற நிலை. வலிவான மாற்றுக்கட்சியினர் இருக்கும் கோவையிலேயே இந்த நிலை என்றால், அப்படி இல்லாத இடங்களில் நிலைமை எப்படி இருக்கும் என்பதை நீங்களே எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம். உதாரணமாக தொழிற்சங்க அரங்கிலுள்ள நிலைமையைச் சற்று சொல்லுகிறேன். தொழிற்சாலைகளில் சில தொழிலாளர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டு இருந்தால் அவர்கள் மாற்றுக் கட்சியினைச் சார்ந்தவர்களாக இருந்தால் அவர்கள் உடனே வெளியே போய்விட வேண்டும். போகவில்லை என்றால் போலீஸ் வந்து அவர்களை கைது செய்து வழக்குப் போடுகிறது. அதே தொழிலாளர்கள் ஆளும் கட்சியினைச் சார்ந்தவர்களாக இருந்தால் போலீசார் அதில் தலையிடுவதில்லை. முன்பும் இதுபற்றி இந்த அவையில் சொல்லியிருக்கிறேன், இப்போதும் சொல்லுகிறேன், இது இன்னும் நீடிக்கிறது என்றால் இது என்ன நிலைமை துணைத் தலைவரவர்களே? "எங்கள் மீது காழ்ப்பு உணர்ச்சி" என்று சில தி.மு.க. உறுப்பினர்கள் இங்கு சொன்னார்கள். எனக்குக் காழ்ப்பு உணர்ச்சி ஒன்றும் இல்லை. ஆனால் மெஜாரிட்டி இருக்கிறது என்ற காரணத்தினால் மற்றவர்களுடைய ஜனநாயக உரிமைகளைப் பறிப்பது என்றால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. வார்த்தைகளால் சொல்லும்போது மிகமிக கெட்டிக்காரத்தனமாகப் பேசிவிடுகிறார்கள், ஆனால் செயலில் வரும் போது உரிமைகள் பறிக்கப்படுகிறதைப் பார்க்கிறோம். ஆளும் கட்சி, அரசு, இரண்டும் ஒன்று என்ற நிலை உண்டாக்கிவிட்டது.

இது மட்டுமில்லை துணைத் தலைவரவர்களே, அரசாங்க நிர்வாகத்தில் ஆளும் கட்சியினரின் தலையீடு அளவில்லாமல் போய்விட்டது. சில ஆளும் கட்சித் தோழர்கள் சொல்லுகிறார்கள், எங்களுக்கும் சிரமமாக இருக்கிறது என்று. நீங்கள் விரும்புவதெல்லாம் நூற்றுக்குநூறு இன்னும் நிறைவேறுவதில்லை என்ற

சிரமமாக இருக்கலாம். ஒரு சில சந்தர்ப்பங்களில் கோபத்தால் அதிகாரிகளைக் கூடக் கேட்டுவிடுகிறேன் 'நீங்கள் எதற்குத்தான் இருக்கிறீர்கள்' என்று. அந்த அளவிற்கு வேதனை ஏற்படுகிறது.

கூட்டுறவுத் துறையில் எனக்கு ஒரு அனுபவம். அன்று நான் தோழமைக் கட்சித்தான், சிங்காநல்லூரில் ஒரு மனைவன வங்கி ஆரம்பிக்க வேண்டும் என்று என் கட்சித் தோழர் ஒருவர் ஸ்பான்சர் செய்தார். அவர் இன்றையதினம் தேசியக் காங்கிரசில் இருக்கிறார். அந்த வங்கியை பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டார். ஒரு வருஷகாலமாக ரெஜிஸ்டர் செய்யமுடியவில்லை. அதிகாரிகளைக் கேட்டால், 'பேப்பர் மேலே இருக்கிறது' என்று சொன்னார்கள். நான் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை அணுகினேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அது என் துறையல்ல, கூட்டுறவுத் துறை ஐந்தாறு அமைச்சர்களிடம் இருக்கிறது. பல முறை எடுத்துச் சொல்லியும் அவர்களுக்கு விளங்கமாட்டேன் என்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பொறுப்பில்தான் இருந்தது. அதுசம்பந்தமாக நானேதான் இந்த சட்ட மன்றத்தில் கேள்வி கேட்டு, அவர்களே பதில் சொன்னார்கள். அந்த பாங்குக்கு தலைவராக யாரைப்போடலாம் என்று இருந்தபோது, தி.மு. கழகத்தைச் சேர்ந்தவரைத் தலைவராகப் போடலாமா என்று கேட்டார்கள். அப்போது நான் சொன்னேன், அதற்கு 'ஸ்பான்சராக' இருந்தவரையே தலைவராகப் போடலாம் என்று. ஆனால் போடவில்லை. மீண்டும் இது பற்றி அமைச்சரவர்களைக் கேட்டேன். டைரக்டர்களை நியமிக்கும் பொறுப்பு இப்போது என்னிடம் இல்லை என்று சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : துணைத் தலைவரவர்களே, கனம் அங்கத்தினர் மீண்டும் மீண்டும் நான்தான் பொறுப்பு என்று என்னைக் காட்டி காட்டிப் பேசுகிறார்கள். அதற்கு நான் பொறுப்பு இல்லை. அது வேறு ஒரு அமைச்சரின் பொறுப்பில் இருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : டைரக்டர்களை நியமிக்கும் பொறுப்பை என்னிடமிருந்து முதலமைச்சரவர்கள் வாங்கிக்கொண்டார்கள் என்று சொன்னார்கள். நான் முதலமைச்சரையும் பார்த்துப் பேசினேன். ஆனாலும் கழகத்தைச் சேர்ந்த ஒருவரை, வங்கிக்காக எதுவும் செய்யாத ஒருவரை அந்த பாங்குக்குத் தலைவராகப் போட்டுவிட்டார்கள். கழகத்தின் ஆட்சி நடைபெறும்போது கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு சில சலுகைகள் செய்யப்படும். அதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. என்னுடைய குறை என்ன

வென்றால், மற்றவர்களுக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருந்தும், தகுதி இருந்தும் அவர்களுக்கு கொடுக்காமல், எல்லாம் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கே கொடுக்கப்படுகிறதே என்பதுதான்.

இன்னொன்று வனவாசி பக்கநாடு பாரஸ்டு பிரச்சனையைப் பற்றி பேசினார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரம் ஆகிவிட்டது. சீக்கிரமாக முடியுங்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இன்னும் ஒரு சில விஷயங்களை கூறி, முடித்து விடுகிறேன். அந்தப் பிரச்சனைக்கு நாங்கள்தான் ஆதரவு தந்தோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தப் பிரச்சனை அவர் முதலமைச்சராக வருவதற்கு முன்பே நடைபெற்றது. அர்த்தநாரீஸ்வரர் கவுண்டர் தான் அதை எதிர்த்தவர் என்றும் சொன்னார்கள். அர்த்தநாரீஸ்வரர் கவுண்டரோடு சேர்ந்து மாண்புமிகு உறுப்பினர் கந்தப்பன் அவர்களும் தான் எதிர்த்துக் கொண்டிருந்தார்கள் என்பது வரலாறு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த விவாதத்தில் நாங்கள், நீங்கள் என்று பேசுங்கள். ஆனால் அப்போது ஒன்றாகச் சேர்ந்து 'நாமாக' இருந்தோம். எனவே, அந்தப் பிரச்சனையில் வேறுபடுத்தாமல் நாம் என்றே சொல்லலாமே.

திரு. ஏ. சுப்பிரமணியம் : நான் சொல்வது நீங்கள் வருவதற்கு முன்னால் நடந்த சம்பவம். 15 வருடங்களுக்கு முன்பு தொடங்கிய சரித்திரம் இது.

திரு. செ. கந்தப்பன் : 1967 தேர்தலுக்கு முன்பு, அப்போதிருந்த ஆட்சியாளர்களின் கொடுமையினால், அங்கே குடியிருந்தவர்கள் நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர். அவர்களை மீண்டும் அங்கே குடியமர்த்த வேண்டும் என்ற பிரச்சனையில் நண்பர்கள் சுப்பிரமணியம், சுரேந்திரன் அவர்களோடு நானும், எனக்கு அருகில் இருக்கும் நண்பர் ஆறுமுகமும் பங்குகொண்டோம். அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு ஏற்கெனவே 3, 4 மாதங்களுக்கு முன்பாகவே நிலத்தை விட்டு, வெளியேற்றப்பட்டு, திண்டாடிக் கொண்டிருந்த மக்களை அங்கு குடியமர்த்தினார்கள். பிறகு கலைஞர் அவர்கள் அவர்களுக்கு பட்டா வழங்கினார்கள். இந்த உண்மை அவர்களுக்கு தெரிந்திருந்தும், நான் எதிர்த்தேன் என்று அபாண்டமான ஒரு பழியை என்மீது சுமத்துகிறார்கள். அப்போது நடைபெற்ற அவர்கள் மாநாட்டிற்கு என்னையும் அழைத்திருந்தார்கள். அந்த மாநாட்டிலேயே இதைப்பற்றி நான் சொல்லியிருக்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : கடைசியாக நான் சொல்ல விரும்புவது . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைப்பற்றி பேசுங்கள். அதற்கு சம்பந்தமில்லாதவைகளைப்பற்றி எல்லாம் பேசி நேரத்தை வீணாக்காதீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவரவர்களே, தங்களுடைய கவனத்திற்கு இந்த நேரத்தில் ஒன்றை கொண்டுவர விரும்புகிறேன். இந்த விவாதத்தில் இன்னும் சில கட்சித் தலைவர்கள் பேசவில்லை. அவர்கள் பேசி முடிக்கவேண்டும். அப்போதுதான் நாளை காலை அவர்களின் உரைகளுக்கு நான் பதில் சொல்லமுடியும். அதற்கு பிறகு தீர்மானத்தை கொண்டுவந்திருக்கிற டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. தங்கமணி அவர்களும் பேசவேண்டும். ஆகவே, இன்னும் எவ்வளவு நேரம் சபையை நீட்டிக்கலாம் என்று கட்சித் தலைவர்களே முடிவு செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சுப்பிரமணியம், நீங்கள் சீக்கிரம் முடியுங்கள். இன்னும் எவ்வளவு நேரத்தில் முடிப்பீர்கள் ? உறுப்பினர்கள் இப்படி அதிகமாக நேரத்தை எடுத்துக்கொண்டால், அவரவர் கட்சித் தலைவர்களின் நேரம் தான் குறையும். அதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : துணைத் தலைவரவர்களே, இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். குறிப்பாக தற்போது நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தில் பலபேர் உயிரிழந்திருக்கிறார்கள். அரசாங்கத்தின் கணக்குப்படி 16 பேர் இறந்திருக்கிறார்கள். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்திருக்கிறார்கள். 25,000 பேர் சிறையிலடைக்கப்பட்டார்கள். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததின் நோக்கமே இந்த அரசாங்கத்தின் இப்படிப்பட்ட ஜனநாயகத்தை பழிக்கின்ற நிலை, ஜனநாயகத்தை அழிக்கின்ற நிலை மாறவேண்டும் ; பல்வேறு துறைகளிலே நடைபெறுகின்ற அட்டூழியங்கள் ஒழியவேண்டும் ; தீய செயல்கள் மாறவேண்டும் என்பதற்காகத்தான். ஆகவே, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நாம் குறிப்பிட்ட நேரம் மாலை 7 மணி வரை பேரவை நடைபெறும் என்று. இப்போது 7 கழிந்துவிட்டது. அதனால் 7½-க்கு முடித்துக்கொள்ளலாமா ? (பல உறுப்பினர்கள் : முடித்துவிடலாம்) எதற்கும் ஒரு வரையறை இருக்கவேண்டும். இன்னும் 15 நிமிடங்கள் பேசி முடித்துவிடுங்கள்.

திரு. நா. வீராசாமி : துணைத் தலைவரவர்களே, எங்களுக்கு ஒதுக்கப்பட்ட மூன்று மணி நேரத்திலும், ஒரு மணி நேரத்தைக் குறைத்துக் கொண்டு, இரண்டு மணி நேரம் போதுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த இரண்டு மணி நேரத்தையாவது நாங்கள் பயன்படுத்திக் கொள்கின்ற வகையில் நேரம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நாளைக் காலையிலும் விவாதம் நடைபெறட்டும் முதலமைச்சர் மாலையில் பதில் சொல்லலாம். எங்களுக்கு ஒதுக்கியிருக்கும் 15 நிமிடம் போதாது. இந்த 15 நிமிடத்தில் பேசவகைவிட பேசாமலே இருந்துவிடலாம் (சில குரல்கள்—இப்படிப் பேசிக்கொண்டே இருந்தால் போதும்).

* திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே எதிரும் புதிருமாக இருக்கின்ற கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்—கலைஞரின் ஆட்சியின்மீது கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்தும், ஆளும் கட்சியிலுள்ள நண்பர்கள் அதை எதிர்த்தும் கழிந்த இரண்டு நாட்களாகவும் இன்றும் , விவாதம் நடைபெற்றிருக்கிறது. நான் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வந்தவுடனே ஏதோ புதுகரமான விஷயங்களைக் கொண்டுவரப் போகிறார்கள், என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்று அச்சப்பட்டேன். பிறகுதான் தெரிந்தது அப்படி ஒன்றும் இல்லையென்று.

டாக்டர் ஹாண்டே அவர்கள் பூனையைப் பிடித்துக்கொண்டுவந்து இதுதான் புலி என்று காட்டினார்கள். திரு. தங்கமணி அவர்கள் எலியைப் பிடித்துக் கொண்டுவந்து இதுதான் யானை என்று காட்டினார்கள். எலியும் பூனையும் உயிருள்ளனவா என்று பார்த்தால் இல்லை. செத்துப் போனவை. உயிரோட்டம் இல்லாதவை. இந்தத் தீர்மானத்தை ஆதரித்து மற்ற நண்பர்களும் சுப்பு, சுப்பிரமணியம் இன்னும் பலரும் இதேவிதமாகத்தான் பேசினார்கள்.

எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் மதுரை மாநாட்டிலிருந்து சிறிது உடல் நலமில்லாமல் வந்து இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு ஒன்றுச் சொல்லிக்கொள்கிறேன், நீங்கள் இந்த விவாதத்திற்குப் பதிலளிக்க வேண்டியதில்லை. நாங்களே பதில் கூறிவிடுகிறோம். ஏனென்றால் இது ஒரு பெரிய பிரச்சனையில்லை. ஒரே பாடலைப் பல ராகத்தில் பாடுகின்ற அரசியல் பாகவதர்களாகத்தான் இவர்கள் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அரசியல் கட்சிகளைப் பார்த்து, எம்.எல்.ஏ. களைப்பார்த்து அரசியல் பாகவதர்கள் என்று சொல்லலாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சும்மா நகைச்சுவைக்காகச் சொல்கிறார். அவ்வளவுதான்.

திரு. துரைமுருகன்: ஹாண்டே அவர்கள் பேசும்போது மதுரை மேயர் முத்து அவர்களைப் பற்றித்தான் அதிகமாகப் பேசினார்கள். அடுத்து சுப்பு, தங்கமணி போன்றவர்களும் சொன்னார்கள். அப்போது எனக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது. இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் மதுரை மேயர் முத்து மீது கொண்டுவரப்பட்டதா அல்லது கலைஞர் ஆட்சிமீது கொண்டுவரப் தங்கமணி போன்றவர்களும் சொன்னார்கள். அப்போது எனக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் மதுரை மேயர் முத்து மீது கொண்டுவரப்பட்டதா அல்லது கலைஞர் ஆட்சிமீது கொண்டுவரப்பட்டதா என்று.

மேலும் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், இந்தத் தீர்மானம் உங்கள் நன்மைக்காகத்தான் கொண்டுவரப்பட்டது என்று. ஆடு நனைகிறதே என்று ஓநாய் கண்ணீர் விட்டமாதிரி இருக்கிறது! அடுத்து உங்கள் மாநாட்டுக்கு வரவர கூட்டம் குறைந்துவிட்டது வசூல் குறைந்துவிட்டது என்று சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடிச் சொல்வார்கள், 'கண்ணாடி வீட்டுக்காரன் கையில் கல்லை எடுக்கக்கூடாது' என்று. எங்கள் மாநாட்டுக்கு தாசில்தார்களை வைத்து பணம் வசூல் செய்ததாகவும் குற்றம் சாட்டினார். அப்படி ஒன்றும் நடைபெறவில்லை.

மதுரை மாநாட்டை அவர் பார்த்திருந்தால் எங்களுக்கு எவ்வளவு கூட்டம் வருகிறது, கூட்டம் குறைந்திருக்கிறதா கூடியிருக்கிறதா என்று தெரிந்திருப் பார்கள். மூன்று லட்சம் பேர்களுக்குமேல் அங்கே கூடி இருந்தார்கள். வேறு பல கட்சிகளும் கூட்டம் நடத்துகிறார்கள். தாசப்பிரகாஷ் ஓட்டலிலும் பிற ஓட்டுக்குப் புறங்களிலும் கூட்டம் நடத்துகிறார்கள். எங்கள் மாநாட்டு மேடை அளவுக்குக் கூட இராது. அப்படிப்பட்ட கட்சிகளுக்கு அகில இந்திய கட்சி என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அகில இந்தியத் தலைவர்களும் அந்தக் கூட்டங்களுக்கு வருகிறார்கள்.

சொல்கிறார்கள், தாசில்தாரை வைத்துப் பணம் வாங்குகிறார்கள் என்று. மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே நான் பெருமையோடு சொல்லிக் கொள்வேன்—இன்றைக்கு அகில இந்தியாவிலுமே சிறப்புக் கூட்டம் போட்டு கட்டணம் வசூலிக்கிற கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான்

இருக்கிறது. வேறு எந்தக் கட்சிக் கூட்டத்திற்கும் நுழைவுக் கட்டணம் என்று வைத்தால் யாரும் வரமாட்டார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டில் கழகத் தோழர்கள் பதினைந்து லட்சம் பேர் இருக்கிறார்கள். கலைஞர் நாளைக்கே ஒரு அறிக்கை விட்டால் ஆளுக்கு ஒரு ரூபாய் என்பதாக பதினைந்து லட்சம் ரூபாய் வசூலாகிவிடும். தாசில்தாரைவிட்டு, மணியக்காரரைவிட்டு, கணக்குப் பிள்ளையைவிட்டு பணம் வசூல் பண்ணுகிற பரிதாபகரமான நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கவில்லை என்பதை நான் மிக திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாவது குற்றச்சாட்டு சிறைச்சாலை சரியில்லை என்பதாகும். சிறைச்சாலை என்பது பைவ் ஸ்டார் ஹோட்டலா? சோபா கம் பெட்டா போட்டிருக்கும்? உங்கள் காலத்தில் இருந்ததைவிட இப்போது மிக நன்றாகத்தான் இருக்கின்றன. காலையில் இட்டிலி கொடுக்கிறார்கள். முன்பு இரும்புப் பாத்திரங்களில் உணவு ஆக்கினார்கள் என்றால் இப்போது பித்தளை பாத்திரங்கள் உபயோகிக்கப்படுகின்றன. (குறுக்கீடு)

இன்னொரு முறை சிறைச்சாலைக்கு வாங்க—எல்லாவற்றையும் பார்க்கலாம். வெளி உலகத்திற்கும் சிறைச்சாலைக்கும் வித்தியாசம் இல்லையா? இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது நான் சிறை சென்றேன். திரு. ஹாண்டே அவர்களுக்கு அந்த அனுபவம் இல்லை. எங்களை எல்லாம் அப்போது அழைத்து வைத்துக்கொண்டு அறிஞர் அண்ணா அவர்கள் ½ மணி நேரம் உபதேசம் செய்தார்கள். நீங்கள் எல்லாம் மாணவர்கள், ஓட்டல்களில் இலைபோட்டுச் சோறுபோடுவதுபோல இங்கே போடுவார்கள் என்று நினைக்காதீர்கள். கொடுத்ததை உண்ண வேண்டும். கஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்பதாக சிறைச்சாலை தத்துவத்தை எடுத்து விளக்கினார்கள். நீங்கள் சிறைச்சாலை தத்துவத்தைப் புரிந்துகொள்ளவில்லை. அவை என்ன பைவ் ஸ்டார் ஹோட்டலா? அதனால்தான் உங்களில் பலர் திரும்பிவந்துவிட்டீர்கள்.

பெருமதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எப்போதும் அமைதியாகப் பேசக்கூடியவர். ஆனால் இந்த முறை என்னவோ அப்படிப் பேசவில்லை. அவர் பேச்சில் காரம் இருந்தது. பொருள் இல்லை. உங்களது மகாநாட்டில் கலைஞரை, நாவலரை எல்லாம் உலகத் தலைவர்கள் என்று போட்டுக் கொள்கிறீர்களே என்றார். நாங்கள் போட்டுக்கொள்கிறோம். அதில் என்ன தவறு? எங்கள் நாவலர் அவர்கள் சொல்வார்கள். "நாங்கள் எங்கள் அண்ணாவை அறிஞர் என்று சொல்லிக்கொள்கிறோம். உங்களுக்கு எல்லாம் குத்துவாளேன் குடைவாளேன்?" என்று கேட்பார்கள். அதைத்தான் நானும் கேட்கிறேன். எங்கள் கட்சி மகாநாட்டில் எங்களது தலைவர்களை எல்லாம்

நாங்கள் உலகத் தலைவர்கள் என்று போட்டுக்கொள்கிறோம். அதில் தவறு என்ன? உங்கள் மகாநாட்டில் கல்யாணசுந்தரத்தை உலகத் தலைவர் என்று போட்டுக்கொள்ளுங்களேன். யார் கல்யாணசுந்தரம் என்று கேட்பான். தொல்காப்பியர் உலகம் என்பதற்கு என்ன இலக்கணம் வகுக்கிறார்? 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்கிறார். எங்களது தலைவர்கள் அறிவாளிகள், எங்களது தலைவர்கள் சான்றோர்கள். வன்முறையாளர்களின் தலைவர்கள் அல்ல, அண்டர் க்ரவுண்டு பேர்வழிகளுக்குத் தலைவர்கள் அல்ல. உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே என்பதாக தொல்காப்பியம் வகுத்துக் கொடுத்த இலக்கணப்படி எங்கள் கலைஞரை உலகத் தலைவரே என்று போட்டு அழைக்கிறோம், எங்கள் நாவலரை உலகத் தலைவரே என்று போட்டு அழைக்கிறோம். பொச்சரிப்பு, பொறாமை—அதை உங்களால் தாங்க முடியவில்லை. எரிச்சலினால் அப்படிப்பட்டதொரு குற்றச்சாட்டைச் சொன்னீர்களே தவிர வேறு முறையில் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

•

அடுத்த குற்றச்சாட்டு என்ன? நீதிவிசாரணை. நீதிவிசாரணை வேண்டும் என்கிறீர்கள், போடட்டுமா என்றால் வேண்டாம் என்கிறீர்கள், போட்டபோது வேறு மாநிலக்காரரைப் போட வேண்டும் என்றீர்கள். இந்த மன்றத்திலே முதுகுளத்தூரில் நீங்கள் சுட்டீர்கள், நாங்கள் இங்கே சுட்டோம், என்று இதில் என்ன தவறு என்று நாங்கள் கேட்கவில்லை.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது எங்கள் நாவலர் ஒரு சின்ன கமிஷனைத்தான் போடவேண்டும் என்று கேட்டார்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது அன்றையதினம் எதிர்க் கட்சித் தலைவராக எங்கள் நாவலர் இங்கே வீற்றிருந்தார். ஒரு சின்ன கமிஷனையாவது போடுங்கள், உண்மை தெரியும் என்றார்கள். திரு. பக்தவச்சலம் அவர்கள் முடியாது என்று சொல்லிவிட்டார்.

எங்கள் நாவலர் அவர்கள் அன்றைக்கு திரு. பக்தவசலம் அவர்களை ஒரு சின்ன கமிஷன் போடச் சொல்லித்தானே கேட்டார். போட்டீர்களா? எங்கள் கலைஞர் துப்பாக்கிச் சூடு நடைபெற்றுவிட்டது என்றவுடனே மனிதாபிமான உணர்ச்சியோடு நான்கு நீதிபதிகளை நீதி விசாரணைக்காகப் போட்டார்கள். அப்போது வேண்டாம் என்றீர்களா என்று குற்றம் சாட்டுகிறீர்களே இதில் நியாயம் இருக்கிறதா?

அடுத்து, வன்முறைகளுக்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் என்கிறீர்களே, இதயத்தில் கைவைத்துப் பாருங்கள். கடந்த மூன்று மாதத்தில் நான் கேட்கிறேன்—வன்முறைக்குக் காரணம் திராவிட முன்னேற்றக்

கழகமாக இருந்திருந்தால் இறந்தவர்கள் யாராக இருக்க வேண்டும்? திரு. ஹாண்டே அவர்கள் சைக்கிள் செயின், பைப் என்று எல்லாம் சொன்னார்கள். வன்முறைக்குச் சொந்தக்காரர்களால் தாக்கப்பட்டு சென்னையில் இறந்தது எங்கள் கட்சியைச் சேர்ந்த பிரதாப சந்திரன். அடுத்து சண்முக ராஜா, சிவகங்கையில் முத்து. மூன்று மாதத்தில் எங்கள் கட்சியைச் சேர்ந்த மூன்று பேர்களைப் பிணமாக்கித் தந்திருக்கிறீர்கள். துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழந்தவர்களுக்கு ஒரு வார்த்தை அனுதாபம் தெரிவித்தீர்களா என்று கேட்டார் திரு. கே. டி. கே. இறந்தவர்களுடைய மனைவிகளை எல்லாம் சென்று பார்த்துப் பேசி வந்ததாகக் குறிப்பிட்டார்கள். நான் கேட்கிறேன், கட்டிளம் காளை, கழகத் தொண்டன் பிரதாப சந்திரன் படுகொலை செய்யப்பட்டு அவன் மனைவி தாலி இழந்து கண்ணும் கண்ணீருமாக அலறி நின்றாளே, அப்போது கண்ணீர்விட்டு ஓடிவந்தீர்களா? சண்முக ராஜா கொலைசெய்யப்பட்டு அவன் மனைவி பூ விழந்து தலைவிரிகோலமாக அழுது புலம்பி நின்றாளே, கண்ணீர்விட்டுக்கொண்டு ஓடிவந்தீர்களா? சிவகங்கை முத்து கொலைசெய்யப்பட்டு அவன் மனைவி பொட்டிழந்து, மஞ்சள் இழந்து குழந்தைகள் எல்லாம் அப்பா அப்பா என்று கதறி அழ துடிதுடித்து நின்றாளே. கண்ணீர்விட்டுக்கொண்டு ஓடிவந்தீர்களா? திராவிட முன்னேற்றக் கழகம்தான் வன்முறையைத் தூண்டிவிடுவதாகச் சொல்கிறீர்களே. உலகத்தில் சிரிக்கமாட்டார்களா? கோவை ஸ்தாபன காங்கிரஸ் கட்டிடத்தை தாக்கியது பற்றிக் குறிப்பிட்டார்கள். அங்கே சோதனை போட்டபோது இரண்டாயிரம் இரும்புத் தடிகள், எதற்காக? சாப்பாடு பொட்டலம் மூவாயிரம் கட்டி வைத்திருந்தீர்களே, எதற்காக? சுப்பு வீடு தாக்கப்பட்டது, சுந்தரம் வீடு தாக்கப்பட்டது என்கிறீர்களே, சாதாரண பாட்டாளி மக்களது வீடுகள் எத்தனை தாக்கப்பட்டிருக்கிறது? சொன்னீர்களா?

விவசாயிகள் போராட்டத்திற்கு முன் 12 அம்சக் கோரிக்கைகளை வைத்தார்கள். போராட்டத்தில் ஈடுபட்டு 12 அம்சக் கோரிக்கைகளை வைத்தார்கள். முன்னாலே 12 அம்சக் கோரிக்கை, பின்னாலே 12 அம்சக் கோரிக்கை என்று சொன்னால் வலது கம்யூனிஸ்டுக் கட்சி போராட்டத்தில் நுழைந்த பின்னர் திசை திருப்பி, கலகம் விளைவித்து, தமிழகத்தை ரத்தச் சகதியாக்கி, அந்தச் சகதியில் மீன் பிடிக்கலாம் என்றுதானே திட்டமிட்டீர்கள்? நாங்கள் வன்முறையைத் தூண்டிவிட்டோம் என்று சொல்கிறீர்கள்.

கட்டை வண்டிகளைப்பற்றிச் சொன்னீர்கள். கட்டைவண்டிச் சமாசாரம் எனக்குத் தெரியும். இரவுக்கு இரவாக கட்டைவண்டிகளைத் திருடி வந்து போட்டீர்கள்? கட்டைவண்டி திருட்டுப்போய்விட்டது என்று போலீஸ்

ஸ்டேஷனில் எத்தனை கம்ப்ளேண்டுகள் ரெக்கார்டு ஆகியிருக்கிறது தெரியுமா? எவ்வளவு கட்டைவண்டித் திருடர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லட்டுமா?

மன்னார்குடியில் நடந்ததுபற்றிச் சொன்னீர்கள். என்ன நடந்தது? ஒரு கர்ப ஸ்திரியை அழைத்து வருகிறான். வண்டியைப்போட்டு வழியை மறித்திருக்கிறீர்கள். பிரசவ வேதனையால் பெண் துடிக்கிறாள். வழிவிடுங்கள். அவசர கேஸ் என்கிறபோது கூட மனிதாபிமான உணர்ச்சியோடு வழிவிடவில்லை. அந்தப் பெண்ணின் கணவன் வெறி ஏறி வண்டியைப் பிளந்து அகற்றி—அந்தப் பெண்ணை உள்ளே கொண்டுபோவதற்குள் அவள் இறந்துவிட்டாள் என்பது கேள்வி, இந்த நிலையில் முத்தண்ணன் பேசினார், குத்துக்குக் குத்து, வெட்டுக்கு வெட்டு என்று.

மதிப்பிற்குரிய திரு. கல்யாணசுந்தரம் சென்னைக் கூட்டத்திலே வந்து என்ன பேசினார்? பலாத்காரத்தில் எங்களை மிஞ்சியவர்கள் யாரும் இல்லை, தெலுங்கானாப் போராட்டம் நடத்தியவர்கள் நாங்கள். எனக்கே துப்பாக்கி சுடத் தெரியும் என்று பேசிய பிறகு இந்த நாட்டில் அவர்கள் அமைதியைக் குலைக்க என்ன என்ன சதித்திட்டங்களை வகுத்தார்கள் என்பது தெரியாதா? வன்முறைச் செயல்களுக்கு எல்லாம் காரணம் வலது கம்யூனிஸ்டுகள் தான். தேசிய காங்கிரஸ்காரர்கள் இல்லையா? சுதந்திராக் கட்சிக்காரர்கள் இல்லையா என்று கேட்கலாம். இந்தக் கட்சிகளில் தலைவர்கள் இருக்கலாம், தொண்டர்கள் இல்லை. முனியாண்டி ஹோட்டலுக்குக் கூட ஊருக்கு ஒரு ப்ராஞ்சு இருக்கிறது. இவர்களது கட்சிக் காரியாலயம் அதுபோலக் கிடையாது. பெரிய போராட்டத்தை நடத்தி விட்டதாக நீங்கள் சொல்கிறீர்கள். ஏர்க்காட்டிலே மோகன் குமாரமங்கலம் வந்திருந்தார். போராட்டத்திட்டம் தீட்டப்பட்டது. அப்போது மட்டும் மோகன் இல்லை என்று வீரபாகு கூறுகிறார். திரு. கல்யாணசுந்தரம், சோஷலிசப் பிதா, பொதுவுடைமைப் பூங்காவை இந்த நாட்டிலே மலரவைக்கப் போகின்றவர், என்ன செய்கிறார் என்றால் பட்டக்காரர் வீட்டில் உட்கார்ந்து பால் சாப்பிடுகிறார், பால் சாப்பிட்டுக்கொண்டு சொல்கிறார், நான் இங்கிருந்து பிரஸ் ரிப்போர்ட் கொடுத்ததாகச் சொல்லிவிடாதீர்கள் என்று சொல்கிறார். இப்படி இந்த அரசை கவிழ்க்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் ஒன்று சேர்ந்துகொண்டு சொல்கிறார்கள், போலீஸ் அடித்துவிட்டான், அடித்து விட்டான் என்று ஒப்பாரி வைப்பதிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறு என்ன இருக்கிறது. மதிப்பிற்குரிய உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் எதையெடுத்தாலும் அர்த்தநாரீஸவரக் கவுண்டர் என்று ஆரம்பித்து அவருடைய அட்வகேட்டாக மாறிவிடுகிறார் . . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஒப்பாரி வைக்கிறார்கள் என்று சொல்லலாமா?

திரு. ஏ. சுப்பிரமணியம்: அட்வகேட்டாக இருக்கிறார் என்று சொல்கிறார், அது முறையல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஒப்பாரி வைக்கிறார்கள் என்றும் பொச்சரிப்பு என்றும் தமிழிலே சாதாரணமாகப் பயன்படுத்தாத வார்த்தைகளை எல்லாம், பொதுமேடைகளிலேகூட பேசாத வார்த்தைகளையெல்லாம், பேசியிருக்கிறார்கள். நீங்கள் அனுமதித்திருக்கிறீர்கள். ஆகவே நான் தலையிட விரும்பவில்லை.

மாண்புமிகு போரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படிப்பட்ட வார்த்தைகளைக் குறைத்துக்கொள்ளுங்கள். அவையெல்லாம் சட்டமன்ற மரபுக்கு ஏற்றவையல்ல.

திரு. துரைமுருகன்: கடையை நீங்கள் திறக்காவிட்டால் எப்பொழுதும் திறக்கவிடமாட்டோம் என்று கோஷமிட்டதாக அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவர்கள் என்ன கோஷமிட்டிருக்கிறார்கள் என்பதுபற்றி எனக்குக் கூட புகார் வந்திருக்கிறது. கடைகளை மூடாவிட்டால் பிறகு என்றைக்கும் கடைகள் மூடித்தான் இருக்கும், ஜாக்கிரதை, மூடவேண்டும், மூடவேண்டும் என்று கோஷம்போட்டுக்கொண்டு சென்றிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஏழை எளிய மக்களுக்குக் குடியிருப்பு மனைகள் வழங்கிய அரசு, குடிசை வாரியம் அமைத்த அரசு, குடிநீர் வாரியம் அமைத்துச் செயல்படுகிற அரசு, கோழைகளை வீரர்களாக்கிய அரசு, ஏழைகளுக்கு அறிவு கொடுத்த அரசு, ஏழைகளைச் சிரிக்கவைத்த அரசு, அவர்களின் சிரிப்பில் இறைவனைக் காண்கின்ற அரசு இதற்கு நாட்டு மக்கள் ஆதரவு இருக்கிறது. அதை எப்படியாவது கவிழ்வதற்காக, இந்த அரசை அழிப்பதற்காக டெல்லியிலிருந்து வலது சாரி கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பணம் வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்த டெல்லியிலிருந்து அவர்களுக்கு பணம் வந்திருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்திலே அறைகூவல் விட்டுச் சொல்கிறேன் . . . .

திரு. கே. டி. கே. தங்கமணி: யாருக்கு எவ்வளவு செக் வந்து இருக்கிறது என்று சொன்னால் நாங்கள் பெற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம்.

திரு. துரைமுருகன்: நான் அதைச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிக்கு டெல்லியிலிருந்து பணம் வந்து இருக்கிறது . . . .

திரு. கே. டி. கே. தங்கமணி: பொறுப்புள்ள உறுப்பினர் பேசுகிறார். அவர்கள் ஒரு கோடி ரூபாய் வந்திருக்கிறது என்று சொன்னால்கூட நாங்கள் மறுக்கப்போவதில்லை. யாருக்கு வந்தது? இன்னாருக்கு வந்தது என்று சொல்லட்டும். பின்னாலே தேர்தல் காலத்தின்போது இந்திரா காந்தி அவர்கள் எவ்வளவு கொடுத்தார்கள் என்பதைச் சொல்கிறோம். யார் வாங்கினார்கள் என்பதை அவர்கள் சொல்லவேண்டும். அவர்கள் இஷ்டம் இருந்தால் சொல்லட்டும்.

திரு. துரைமுருகன்: வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிக்கு டெல்லியிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்ப்பதற்காக பணம் வந்திருக்கிறது . . . .

திரு. கே. டி. கே. தங்கமணி: எங்களுடைய கட்சி வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியல்ல, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியாகும். எங்களுடைய கட்சி வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி என்று சொல்கிறார்கள். அவர்களுடைய கட்சி என்ன, தீவிர திராவிட முன்னேற்றக் கழகமா? அல்லது வலது முன்னேற்றக் கழகமா?

திரு. துரைமுருகன்: திராவிட முன்னேற்றக் கழக அரசை எதிர்த்துப் போராடி அழிப்பதற்காக டெல்லியிலிருந்து பணம் வந்திருக்கிறது. மறுக்க முடியாது, நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. க. சுப்பு: குற்றச்சாட்டு வேண்டுமென்றே சொல்லவேண்டுமென்றால் நாற்றுக்கணக்கான குற்றச்சாட்டுகள் சொல்லலாம். அவர்கள் பணம் டெல்லியிலிருந்து வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். எங்கே யாருக்கு வந்திருக்கிறது என்பதைச் சொல்லவேண்டும், அதை நிரூபிக்க வேண்டும், நான் அதை சேலஞ் ஆக ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: இந்தக் கேள்வியை நீங்கள் கேட்க வேண்டுமென்று தான் நான் எதிர்பார்த்தேன். இந்த அரசாங்கம் அதற்காக ஒரு குழுவைப் போடட்டும், இதைப்பற்றி விசாரணைசெய்வதற்கு ஒரு சுப்ரீம் கோர்ட் நீதிபதியைப் போடட்டும், நான் நிரூபிக்கிறேன். அவர்கள் அப்படித்தானே கேட்கிறார்கள் . . . .

திரு. கே. டி. கே. தங்கமணி: பொய்யை நான்கு முறைகள் சொல்வதாலேயே உண்மையாகிவிடாது. பொய் பொய்தான்.

மாண்புமிகு போலைத் துணைத் தலைவர்: இந்த மன்றத்திலே ஒரு கட்சியைப்பற்றிக் குற்றம்சாட்டும்பொழுது அரசாங்கம் குழு போடட்டும் அதை நிரூபிக்கிறேன் என்று சொல்லமுடியாது. இந்த மன்றத்தினுடைய விதி முறைகளின்படி உறுப்பினர்தான் நிரூபிக்க வேண்டும். இந்த மன்றத்திலே ஆதாரங்களோடு தான் பேசவேண்டும். அப்படியில்லாமல் பேகவது நல்லதல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி: எங்களுடைய கட்சி தி.மு.க.வை அந்தக் கட்சியின் ஆதரவை நம்பி வளரவில்லை. தானாக வளர்கிறது. ஏதோ சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களிலே கூட்டுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆகவே, எங்களுடைய கட்சிக்கு அந்தக் கட்சியின் ஆதரவு தேவையில்லை. எங்களுடைய கட்சி அகில இந்திய ரீதியிலே இருக்கிற கட்சி, உலக ரீதியிலே இருக்கிற கட்சி, கொஞ்சம் அடக்கமாகப் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நானும் அடக்கத்தோடு கே.டி.கே; தங்கமணி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் எந்த கட்சியையும் நம்பி வளரவில்லை. அது தானாக நிற்க முடியும். அதை நிரூபித்தும் இருக்கிறோம். அவர்கள் சொன்னதுபோல் சந்தர்ப்பத்திலே ஒருவருக்கொருவர் சேர்ந்துகொண்டோம். தேர்தல் முடிந்தபிறகு கொள்கையிலே பேதம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு ஒன்றாக இருக்கமுடியாது. திராவிட முன்னேற்றக் கழகம் தன்னந்தனியாக நின்று இயங்கும் இயக்கம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: வேண்டுமானால் அவர்கள் தன்னந்தனியாகத் தேர்தலில் நிற்கட்டும். நின்றால் நான் அதை ஏற்கத் தயாராக இருக்கிறேன். அந்தச் சவாலை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். நான் 1957-ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியையும் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் எதிர்த்து நின்று வெற்றியடைந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களும் சொல்லட்டும், தனியாக நிற்கிறோம் என்று சொல்லட்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திராவிட முன்னேற்றக் கழகம் வலது கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவில், அதை நம்பி, இல்லை. அவர்களை நம்பி இனி தேர்தலில் நிற்காது. அவர்களுடைய சக்தியையெல்லாம் பயன்படுத்தி முடிந்தால் 1976-லே திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிக்க முயற்சி எடுத்துக்கொள்ளட்டும். காலம் வரும், காத்திருப்போம்.

திரு. க. சுப்பு : எந்த அரசியல் கட்சியையும் அழிக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு டெல்லியிலிருந்து பணம் வருகிறது என்ற குற்றச்சாட்டை ஒரு முறையல்ல, பல முறைகள் சொல்லி இருக்கிறார்கள், அதை ஒன்று நிரூபிக்க வேண்டும் அல்லது வாபஸ் வாங்கவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நாங்கள் எல்லாம் 30 வருஷமாக ஒரே கட்சியிலே இருக்கிறோம். அவர்களுக்கு அவ்வளவு முனைப்பு இருந்தால் எங்களுக்கு அந்த முனைப்பு வராதா ? அவர்களாவது ஒன்றரை மாதம் சிறைக்குச் சென்றிருக்கலாம். நான் எட்டு ஆண்டுகள் சிறைசென்றிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அனுபவம் உள்ளவர் இவ்வளவு உணர்ச்சிகளுக்கு இடம்கொடுத்திருக்க வேண்டியதில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திரு. கே. டி; கே; தங்கமணி அவர்களுக்கு ஒன்றை நான் தெரிவித்துக்கொள்கிறேன். சிறைக்குப் போவதுதான் தகுதி என்று வைத்துக்கொண்டால் அவர்களுக்கு என்னை பிடிக்காது, நான் ஒரு தடவைகூட சிறைக்குப் போகவில்லை என்று சொல்லலாம். அவர்களுடைய தியாகத்தை யாரும் குறைத்து மதிப்பிடவில்லை. அதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தியாகத்தைப்பற்றிச் சொல்லியிருக்க வேண்டியதில்லை. துரைமுருகன் அவர்கள் குற்றச் சாட்டுச் சொன்னார்கள், அதை எப்படி நிரூபிக்கப் போகிறார்கள் என்று கேட்டிருக்கலாம். அதைத்தான் சொன்னேன். நாங்கள் சாதாரணமானவர்கள் தான். அவ்வளவு பெரிய தியாகத்தை வைத்துப் பார்த்தால் எங்களுக்கு இருக்கிறதிலே குறைவுதான். ஆனால் நாட்டுமக்கள் தந்து இருக்கிற யோகியதையே போதும் என்று நாங்கள் நினைக்கிறோம்.

திரு. க. சுப்பு : ஒன்று உறுப்பினர் அதை வாபஸ் வாங்க வேண்டும். அல்லது நிரூபிக்க வேண்டும். தாங்கள் ரூலிங் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துரைமுருகன் சொன்ன குற்றச் சாட்டுக்கு அவர்கள் பொறுப்பேற்றுக்கொள்கிறார்களா அல்லது வாபஸ் வாங்குகிறார்களா என்பதுதானே தெரியவேண்டும். அதைக் கேட்கலாம், நீங்கள் உட்காருங்கள். நீங்கள் சொன்ன குற்றச்சாட்டை நிரூபிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறீர்களா என்பதை இந்த மன்றத்திற்கு அறிவிக்க வேண்டும்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, நான் சொன்ன குற்றச் சாட்டை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அதற்காகத்தான் நான் சொன்னேன், அவர்கள் இங்கேயிருப்பவர்கள் யாரையாவது போட்டால் அவர்களிடத்திலே சொல்லுங்கள் என்று சொன்னால் ஒத்துக்கொள்வதில்லை. ஏனென்றால் நீதி விசாரணை என்றால் ஹைகோர்ட் ஜட்ஜை ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள். அதேமாதிரி நானும் சொல்கிறேன், சுப்ரீம் கோர்ட் நீதிபதியைப் போட்டு . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்பதோடு நீங்கள் விட்டுவிட வேண்டும். எப்படி விசாரிப்பது என்ற பொறுப்பு இந்தப் பேரவையைப் பொறுத்தது. வெளியே உள்ள நீதிபதியோ அல்லது உலகத்திலே எவ்வளவு பெரிய நீதிபதியாக இருந்தாலும் அவர்கள் இந்த மன்றத்தில் வந்து விசாரிக்க உரிமை கிடையாது. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில் இதுதான் நீதி மன்றம்.

திரு. க. சுப்பு : எந்த ஆதாரத்தோடு சொல்கிறார்கள். பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு அதோடு போய்விடுவார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தங்கமணிக்கு 10 லட்சத்திற்கு செக் வந்தது என்று சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்கள்என்றால் மேற்கொண்டு பேசத் தேவையில்லை.

திரு. துரைமுருகன் : அடுத்தபடியாக . . . .

DR. H. V. HANDE : On a point of order, Sir, May I submit respectfully to the Chair that whenever any serious allegations are made against a party or persons, without going into the merits or demerits of the allegations, the normal practice in this House has been that it must be proved on the spot. If the ruling of the Hon. Deputy Speaker is followed, namely, that a Committee would be appointed to enquire into it etc., then what would happen? The Hon. Chief Minister has drawn attention to such a situation.

அபாண்டமான குற்றச்சாட்டை உண்மையா இல்லையா என்று, குற்றச் சாட்டைச் சுமத்தியபிறகு

It will be better if the hon. Member, Mr. Duraimurugan, proves here and now. Otherwise, what will happen is this. For instance, the Press will publish and afterwards what is the power

of the Speaker to go into the case and what is the penalty?. All that will have to be faced. This has been discussed in the House several times. The Hon. Chief Minister himself I hope the hon. Member has great regard for the Hon. Chief Minister. has said that whenever such things are brought before the House

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, யாரும் எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லும்பொழுது அந்தக்குற்றச்சாட்டு யார்மீது சொல்லப்படுகிறதோ, எந்தக் கட்சியின்மீது சொல்லப்படுகிறதோ அந்தக் கட்சியின் தலைவர் அதை மறுத்தால் அப்படி மறுத்ததைத்தான் அப்பொழுது ஒப்புக்கொள்ள வேண்டும். மறுபடியும் எப்படி சந்தர்ப்பம் கிடைக்கிறதோ அப்பொழுது அவர் ஆதாரத்தோடு நிரூபிக்கலாமே தவிர, மறுத்ததுதான் அப்பொழுது செல்லுமேதவிர முதலில் சொன்ன குற்றச்சாட்டு நிற்காது. இப்பொழுது மறுக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் சட்டமன்ற நடவடிக்கைகள் தொடரவேண்டுமென்று விரும்புகிறேன். சம்பந்தப்பட்டவர்கள் மறுத்து விட்டால் மறுத்ததுதான் சட்ட மன்றத்தில் நிற்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுது குற்றச் சாட்டைச் சொல்லியிருக்கலாம். அதற்கு ஆதாரம் வேண்டுமென்று தங்கமணி அவர்களும், சுப்பு அவர்களும் கேட்கிறார்கள். ஆதாரத்தை உடனடியாக நான் காட்ட முடியாமல் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று சொல்கிறார். அவர் பின்னால் நிரூபிக்கிறேன் என்று சொல்கிறார். இதே மன்றத்தில் எனக்குக் கவனம் இருக்கிறது, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திர துரை என்பவர் ஒரு அமைச்சர் மீது, அப்பொழுது அமைச்சராகயிருந்த திரு. முத்துசாமி அவர்களின்மீது குற்றச்சாட்டைக் கூறினார்கள். அது கமிட்டிக்குப் போய் அந்த வழக்கு விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டது. அதைப்போல நீங்கள் ஒரு தீர்மானம் கொண்டுவரலாம். பிரிவிலிஜ் கமிட்டிக்குப் போகலாம், அதற்காக முறை இருக்கிறது. அதை விட்டு, இங்கேயே ஆதாரத்தைக் காட்டு என்று சொன்னால் அங்கே வந்து நான் பார்ப்பதா, இங்கே அனுப்புவதா, யார் பார்த்து முடிவு செய்வது? எனவே பொறுப்பேற்றுக்கொள்கிறீர்களா என்று கேட்டதற்கு, தைரியமாக, ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்கிறார்கள். பிறகு சட்ட மன்ற மரபுப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே இந்த விஷயத்தை இதோடு விட்டுவிட்டு திரு. துரைமுருகன் அவர்களைப் பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், நானைக்கு நான் பேசும்பொழுது குற்றச் சாட்டைச் சொன்னால் நிரூபிக்க வேண்டுமென்று சொன்னால் கமிட்டி போடுங்கள், இந்த ஜட்ஜ் வேண்டாம், சுப்ரீம் கோர்ட்

ஜட்ஜைப் போடுங்கள், இன்னொரு ஜட்ஜைப் போடுங்கள் என்று கேட்போம். (குறுக்கீடு) நீங்கள் மாத்திரம் பேசும்பொழுது நானும் பேசித்தான் ஆக வேண்டும். அம்மாதிரி பேசிவிட்டு பிறகு இப்படிச் சொல்லலாம் என்று ஆகிவிட்டது. நான் நாளைக்கு ஒவ்வொரு அமைச்சர்மீதும் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைக் கொண்டு வருவேன். இது வரலாறு காணாத தீர்ப்பாக இருக்கிறது. (குறுக்கீடு) நான் கவலைப்படவில்லை. எந்த நடவடிக்கை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். நாங்கள் இப்படித்தான் நாளையிலிருந்து பேசப்போகிறோம்.

Sir, I am on a point of order. In this very same House on several occasions members have made serious allegations. It is a serious matter and the judgment of the Hon. Deputy Speaker now has dangerous repercussions. From tomorrow every member will start making allegations and we will pursue that from tomorrow

திரு. ரா. ரா. முனுசாமி: உட்காருங்கடா.

THIRU J. JAMES: Who is he to say that? How can he say so, He must withdraw it. Is it the way any member should speak in the House? If he does not withdraw it, we will have to walk out.

THIRU R. PONNAPPA NADAR: Is this in order? How can he say like that in the House? We will walk out.

(Then, Members of the Congress (O), the Indian National Congress, the Communist Party of India (R) and the Swathanthra Parties, walked out of the House).

THIRU V. KRISHNAMOORTHY: Sir, I want to make a submission. This sort of allegation is no new thing.

தேர்தல் காலங்களிலே வெளிநாட்டிலிருந்து பணத்தைப் பெற்று தேர்தல் நடத்தினார்கள் என்று சொன்ன நேரத்தில் அங்கு ஆதாரம் கொடுக்கவில்லை. அதைப்போல.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நண்பர் துரைமுருகன் அவர்கள் பேசும்பொழுது அவர் பேசிய வார்த்தையில் ஏற்பட்ட இந்தச் சிறு விளைவிற்குப் பிறகு, கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பணம் வந்தது என்று ஆரம்பித்த பேச்சிலிருந்து கடைசியாகப் பேசிய தொடர் வரையில் சட்டமன்ற நிகழ்ச்சிகளிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்களின் கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். திரு. துரைமுருகன் அவர்களுடைய பேச்சில் பணம் வந்தது என்று சொன்னதிலிருந்து வெளிநடப்பு செய்த வரையில் உள்ள அத்தனை நிகழ்ச்சிகளையும் சபையின் நடவடிக்கைகளிலிருந்து நீக்கிவிடும்படி கூறுகிறேன். * பத்திரிகைகளிலும் பிரசுரிக்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே, இந்த வகையிலே முன்னேற்றக் கழக அரசு ஏழை எளியவர்களுக்கு, சமுதாயத்திற்குப் பாடுபடும் இந்தச் சர்க்கரை எப்படியும் கீழே இறக்குவதன் மூலம் அகில இந்தியாவிலும் ஒரே குடையின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று நினைப்பவர்களும், வயது ஏறிவிட்டதாலே மீண்டும் ஆட்சி செய்ய முடியாது என்று சொல்லக் கூடிய சில தலைவர்களும், ஜாதிப்பித்துக் கொண்டவர்களும் இந்த அரசை இறக்க முற்பட்டாலும் அது முடியாது. இந்த அரசு ஏழைகளை வாழவைக்கும் அரசு, கலைஞர் தலைமையில் உள்ள அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று சொன்னார்கள். முதலமைச்சரவர்கள் விவசாயிகளை அழைத்து பேசவில்லை, கவுரவப் பிரச்னை பார்க்கிறார் என்று சொன்னார்கள். இந்தச் சர்க்கார் கவுரவப் பிரச்னையாகப் பார்க்கவில்லை. நீங்கள் தான் பார்க்கிறீர்கள். அரசு ஊழியர்கள் சிலர் வேலை நிறுத்தம் செய்தார்கள் பட்டதாரி ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள்; இன்னும் என்.ஜி.ஓ.க்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். இவ்வளவுபேரையும் இந்தச் சர்க்கார் அழைத்து பேசியிருக்கிறது. கோரிக்கைகளைக் கேட்கிறது. முதலமைச்சர் பேசியிருக்கிறார். பிறகு இரகசியக் குறிப்பேட்டு முறை நீக்கப்பட்டிருக்கிறது. எனவே அதைப்போல இன்றைக்குச் சில சலுகைகளை ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகம் யார் கோரிக்கைகளை வைத்தாலும் அவற்றைப் பரிசீலிக்க எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்றைக்கும் பின்வாங்கியதில்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. எங்கள் தோழர்கள் தாக்கப்பட்டார்கள், அவர்கள் வீடுகள் தாக்கப்பட்டன, இங்கு அடி, அங்கு உதை என்றெல்லாம் சொன்னார்கள். ஸ்ரீவில்லிப்புத்தூரிலுள்ள எங்கள் வட்டச் செயலாளரிடம் சொன்னார்

---

*12—8—72-ம் தேதி இப் பகுதிகள் நீக்கப்பட வேண்டியதில்லை. நடவடிக்கைக் குறிப்பில் இடம்பெறும் என மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களால் ஆணையிடப்பட்டது.

கள், உன்னை என்றைக்கிருந்தாலும் வெட்டி தலையைக் கொண்டு வருவேரம் என்று சொல்லியிருக்கிறார்கள். வண்ணார்குடி செயலாளர் தாக்கப்பட்டிருக்கிறார். ஆம்பூரில் எங்கள் கட்சித் தொண்டர் ஒருவரின் கடையைத் தாக்கி அவரையும் அவர் தம்பியையும் காயப்படுத்தியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆபீசில் உள்ள படங்களை எடுத்துச் சென்றிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற ஆசையைக் கொண்டிருக்கிற ஒரு கட்சி. வன்முறையைத் தூண்டியவர்கள்தான், வன்முறைக்கு வித்திட்டவர்கள்தான், வன்முறைக்கு தாலாட்டு பாடியவர்கள்தான் நாங்கள் வன்முறையால் பாதிக்கப்பட்டோம், பாதிக்கப்பட்டோம் என்று ஊர் பூராவிலும் பறைசாற்றுகிறார்கள். சட்ட மன்றத்திலும் பேசுகிறார்கள்.

இந்தப் போராட்டத்திலிருந்து ஒன்று நன்கு தெரிகிறது. யார் யார் அந்தப் பக்கத்தில் இருக்கிறார்கள் என்ற அடையாளம் தெரிகிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மன்றாடியாரோடு இருக்கிறது, அர்த்தநாரீஸ்வர கவுண்டரோடு இருக்கிறது. சுதந்திரா அங்கு போய் சேர்ந்திருக்கிறது. யார் யார் எங்கு சேர்ந்திருக்கிறார்கள் என்பது இந்தப் போராட்டத்திலிருந்து நன்கு புலனாகிறது. நாட்டு மக்கள் அடையாளம் தெரிந்து கொள்ள முடிகிறது. இந்தப் போராட்டதிற்குப் பிறகு நடத்தப்பட்ட மதுரை மாநாடு மட்டுமல்ல, இடைத் தேர்தல்களிலும் நல்லமுறையில் வெற்றி வாகை சூடியிருக்கிறது முன்னேற்றக் கழகம். இந்த நாட்டு மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிறார்கள் கலைஞர் அவர்கள். அவரது தலைமையில் இயங்கும் அரசின்மீது கொண்டு வந்திருக்கும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் புறக்கணிக்கப்பட வேண்டிய ஒன்றாகும் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. செ. கந்தப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பவர்கள் அவர்களுக்கு இருக்கிற பலஹீனம் காரணமாக தங்கள் மீதே நம்பிக்கை இழந்து இந்த அவையை விட்டு வெளியேறியது உண்மையில் வருந்தத்தக்கதாகும். ஒரு கருத்தை நான் உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

இந்த மன்றத்தின் நடைமுறை பற்றி பொதுவாக கவனிக்க வேண்டிய ஒன்று. இந்தச் சம்பவத்தில் யாரோ ஒரு உறுப்பினர் ஏதோ சொன்னதாக அந்த ஓரத்தில் இருந்த நண்பர்கள் சிலர் வேகமாகப் பேசினார்களே தவிர எதைக் குறித்துச் சொன்னார்கள், என்ன சொன்னார்கள் என்று தெரியாத

அளவிற்கு நீங்கள் அதுகுறித்து அறிவிப்பதற்குள்ளாகவே இந்தப் பிரச்னை முடிந்துவிட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொண்டு ஒரு சில வார்த்தைகள் நான் கூற விரும்புகிறேன்.

ஏற்கனவே சொல்லப்பட்ட கருத்துக்கள் நீங்கலாக எனக்குத் தோன்றுகிற முறையில் ஒருசில வாதங்களுக்கு மட்டும் பதில் அளிக்க விரும்புகிறேன். நேற்றையதினம் திரு. தங்கமணி அவர்கள் பேசும்போது வேளாண்மை பிரச்னை குறித்தும், அதையொட்டி நடந்த போராட்டம் குறித்தும் டெல்லியிலிருந்து வருகிற சில பத்திரிகைகள் செய்திகளைத் தரும்போது அவைகள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவாகச் செய்திகளை வெளியிட்டுவிட்டார்கள் என்றும் அப்படி அவர்கள் ஆதரித்து செய்திகள் வெளியிடக் காரணம் அவைகள் பெரிய பெரிய முதலாளிகளின் ஏடுகள் என்றும் டைம்ஸ் ஆப் இந்தியாவைச் சுட்டிக்காட்டி அது ஒரு முதலாளித்துவக் கூட்டத்தை சேர்ந்த ஏடு என்றும், எனவே திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்து செய்திகளை வெளியிட்டுள்ளன என்றும் சொன்னார்கள். நான் கேட்கிறேன். முதலாளிகளின், பெரிய முதலாளிகளின் கைகளிலுள்ள ஏடுகள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு காட்டுகின்றன என்றால், அது உண்மையாக இருக்குமேயானால் 62-ல், 65-ல் திராவிட முன்னேற்றக் கழகம் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டதே, அப்படி ஈடுபட்டு நடத்தியபோது அந்த ஆதரவை கொஞ்சமாவது அந்த ஏடுகள் காட்டியிருக்க வேண்டும். ஆனால் எந்த ஏட்டிலிருந்தும் எந்தவிதமான ஆதரவையும் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்பார்க்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு இந்த ஐந்தாறு ஆண்டுகளில் அவர்கள் சொன்னது போல் இந்த ஏடுகள் என்றைக்கும் இந்த அரசை ஆதரிக்கவில்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தேசிய காங்கிரஸ் கட்சி, ஸ்தாபன காங்கிரஸ் கட்சி இந்த இயக்கங்களுக்குப் பின்பலமாக இருந்து கொண்டு அவற்றிற்கு ஆதரவான செய்திகளை வெளியிட்டிருக்கின்றன அந்த ஏடுகள். அவர்கள் பட்டியலை விட்டு விட்டு வேறு சில ஏடுகளில் குறிப்பிட்டிருப்பதை பற்றி ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'ஹிதவாதா' என்ற பத்திரிகை மத்தியப் பிரதேசத்திலிருந்து வெளியிடப்படுகிற ஒரு ஏடு. சாதாரண ஒரு ஆளால் நடத்தப்படுகிற ஏடு அது. அதற்கும் எந்தவிதமான தொழில் குடும்பத்திற்கும் ஒரு தொடர்பும் இல்லை. அப்படிப்பட்ட ஒரு ஏடு. அதில் வெளியிட்டிருக்கிற ஒரு செய்தியை படித்துக் காட்ட விரும்புகிறேன் தங்கள் அனுமதியோடு

'Indeed we wonder what kind of a farmers' agitation it is that prompts farmers to cut down trees to block the highways and the village link roads. Such acts are unfarmer-like and those who

have sponsored the agitation have not shown due regard even to the damage that the agitation would do to the farmers themselves.

மேலும் சொல்கிறார்கள்.

'We quite understand the urge on the part of the Opposition Parties the Congress, in particular, to capture power, **but by** adopting wrong tactics they have let the country's sympathy go to the ruling D.M.K. instead of deriving any political or other advantage from such an agitation.'

என்று தெளிவாகக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறது. இன்னொரு ஏடு, இந்தியன் ஹெராल்ட். திரு. தங்கமணி அவர்கள் சுட்டிக்காட்டிய பட்டியலில் சேராத ஒரு ஏடு. அதிலிருந்து ஒரு குறிப்பை இம் மன்றத்தின் கவனத்திற்குச் கொண்டு வர விரும்புகிறேன். அவர்கள் தேசிய காங்கிரசைப்பற்றிக் குறிப்பிட்டு இறுதியாக ஒரு வாசகம் எழுதியிருக்கிறார்கள்.

'It is Congress participation in the bandh that is really unfortunate. It is, however, of a piece with the earlier utterances and actions of its leaders. When there was a strike in a group of companies in Madras, Union Ministers had gone there all the way from New Delhi, but instead of reasoning with the workers, they had merely added fuel to the industrial fire. Thereafter, Chief Ministers of far-off States had gone to Tamil Nadu and made **inflammatory speeches against the D.M.K. Government. The** Congress anxiety to dislodge the D.M.K. from power is both understandable and democratic, but the methods that is adopting are neither. If it is able to educate public opinion on the need for **a change of Government in Tamil Nadu, it will be past cavil. But** hitting below the belt is neither fair.'

இந்த ஏடுகளைச் சுட்டிக்காட்டுவதன் நோக்கம், நேற்று அவர்கள் முதலாளித்துவ ஏடுகள் என்பதனால் அவைகள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு தருகிறது என்ற தவறான அடிப்படையில் அந்த ஏடுகளைப் பற்றி விமர்சித்தார்கள். இந்த விமர்சனத்தை அவர்கள் எதிர்காலத்தில் ஒத்துக் கொள்வார்களா என்று கேட்கிறேன். எக்கனாமிக் டைம்ஸ், பைனான்ஷியல் எக்ஸ்ப்ரஸ், அம்ரித்பசார் பத்திரிகா போன்ற பத்திரிகைகள், அவர்களது பட்டியலில் சேராத பத்திரிகைகள், பல இருக்கின்றன. அவைகள் ஏறத்தாழ ஒருமித்த கருத்தைத்தான் இந்தப் போராட்டம் சம்பந்தமாக அரசுக்கு ஆதரவாக எழுதியுள்ளன. திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சி என்பதற்காக எழுதப்பட்டவை அல்ல அவை. இந்திய அரசின் கையில்தான்

இந்தப் பத்திரிகைகளுக்கு கோட்டா வழங்கும் அதிகாரம் இருக்கிறது. ஆனால் இந்த மாநில அரசு அப் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தக் கூடிய அரசு அல்ல. இந்த ஆட்சிக்கு எதிரான போக்கை எடுத்துக் கொண்டிருக்கிற சில ஏடுகள்கூட இப் போராட்டத்தில் நடுநிலை வகித்து அரசுக்கு ஆதரவான தலையங்கங்கள் எழுதியுள்ளன, செய்திகள் வெளியிட்டுள்ளன. அதை இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள அரசியல் தெளிவு உள்ளவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் நம் தமிழகத்தில் உள்ள ஏடுகள்தான், போராட்டத்திற்கு அருகாமையில் இருந்து கொண்டிருக்கிற ஏடுகள்தான், உண்மை நிலையை நன்கு புரிந்து கொண்டிருக்கிற ஏடுகள்தான் அரசியல் நோக்கத்தை மனதில் வைத்துக் கொண்டு உண்மையைத் திரித்து எழுதினார்கள் என்பதை நம்மால் புரிந்து கொள்ளமுடிகிறது. பல நேரங்களில் இங்கு பேசுகிற போது மாநிலசுயாட்சி 'கோரிக்கையைக் கூறி திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகளில் பேசப்பட்ட கருத்துக்களை எடுத்துக் கூறி பிரிவினைக்கு அது வித்திடுகிறது என்று குறிப்பிட்டார்கள். வரலாற்றுச் செய்திகளை சொல்வதைக் கூட கண்டித்து, அதுபோன்ற வரலாற்றுச் செய்திகளைச் சொல்வது மறைமுகமாக பிரிவினைக்குத் தூண்டுவதாகும் என்று சொன்னார்கள். 47-ல் சுதந்தரம் பெற்று 25-வது ஆண்டு வெள்ளிவிழாவைக் கொண்டாட இருக்கிறோம். நாடு சுதந்திரம் அடைந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் 49-ல் நான் சார்ந்திருக்கிற இந்த இயக்கம் தோன்றி வளர்ந்தது. மிகவும் வேகமாக வளர்ந்தது. நியாயமான வாதங்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்துள்ள இயக்கம் எங்கள் இயக்கம் என்பதை இந்தியத் துணைக் கண்டம் ஏன் உலகமே ஒத்துக் கொண்டிருக்கிறது. ஆர்வத்தோடு நம்மைப் பார்க்கிறார்கள். சில கோணங்களில் ஆச்சரியத்தோடு கூட நம்மைப் பார்க்கிறார்கள்.

வளர்ச்சி கட்டம் விரிவாகிக் கொண்டே இருந்த நேரத்தில், மாநில உரிமைப் பிரச்னை வடிவு எடுத்த நேரத்தில் டெல்லி பாராளுமன்றத்தில் இந்த வாதங்கள் எழுப்பியது பற்றி எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. பிரிவினைக் கோரிக்கையை கைவிட்ட பிறகு பார்லிமெண்டில் ஒரு முறை மொரார்ஜிதேசாய் அவர்கள் துணைப் பிரதமராக இருந்த நேரத்தில் இந்திப் பிரச்னையைப் பற்றி ஒரு வாதம் வந்தபொழுது, தி.மு.க. உறுப்பினர்களைப் பார்த்த வண்ணம் சொன்னார்கள் 'நீங்கள் எவ்வளவுதான் முயற்சித்தாலும், இந்தி இந்த நாட்டின் ஆட்சி மொழியாக வந்து தான் தீரும்' என்று குறிப்பிட்டார்கள். அப்பொழுது பாராளுமன்றத்தில் நான் எழுந்திருந்து சொன்னேன், 'அப்படி வந்துவிட்டால் இந்தியா இருக்காது' என்று குறிப்பிட்டேன். அன்றைக்கு இந்திய அரசியல் சட்டத்தின் கீழ் இருக்கிற ஒரு சில சட்டங்களின் கீழ் அந்த வாசகம் தவறான

வாசகமாகும். ஆனால், எந்தச் சந்தர்ப்பத்தில், எந்த அடிப்படையில், எந்த வாதத்தில் என்று பார்க்க வேண்டும். ஒரு சில வார்த்தைகளைச் சொன்னதாலேயே பெரிய இந்தியா என்கிற கற்கோட்டை இடிந்துவிடும், அதிர்ந்து விடும், வார்த்தைகளினால் அந்தக் கட்டடம் அதிர்ந்து விடும் என்று எண்ணினால், இந்திய நாட்டைப்பற்றி நினைப்பவர்கள் இவ்வளவு பலஹீனத்தனமாக இருக்கிறார்களே என்றுதான் பரிதாபப்படுகிறேன்.

இருபத்தைந்து ஆண்டு காலமாக உருவாக்கப்பட்ட இந்த நாட்டின் ஒற்றுமை சாதாரணமாக அடிப்படை வாதங்களை எழுப்பினால் அதிர்ந்து விடும் என்று நினைப்பது அவர்களுடைய பலஹீனத்தைத் தான் காண்பிக்கிறது. உண்மையை எடுத்துச் சொல்வதற்கு அஞ்சுகிறார்கள். கண்மூடித்தனமான வாதங்கள் என்று மனப்பால் குடிக்க ஆசைப்படுகிறார்கள். நடைமுறையில் என்ன இருக்கிறது? 1947-க்குப் பின்னாலே இந்திய துணைக்கண்டம் அரசியல் சட்டம் வந்த பிறகு மாநிலவாரியாகப் பிரச்னைகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. மாநிலங்களுக்கு இடையே கூட பிரச்னைகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. மாநிலங்களுக்கு இடையே நதிப் பிரச்னை, நீர் பங்கீடு பிரச்னை சில மாநிலங்களில் இன்னும் தீர்க்கப்பட வில்லை. இல்லாத இடங்களில் கூட அந்தப் பிரச்னைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. தொழிற்சங்கத் தகராறுகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. இல்லாத இடங்களில் தோற்றுவிக்கப்படுகின்றன.

அதைப்போல நாடாளுமன்றத்தில் ஒரு முறை நடந்ததைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் ரிகார்டு பூர்வமாகச் சொல்கிறேன். பல நண்பர்கள் தங்கள் மாநிலங்களைப் பற்றிப் பேசுகிறபொழுது தங்கள் தங்கள் மாநிலம் புறக்கணிக்கப்பட்டதாக ஒரு முறை பேசினார்கள். அப்பொழுது திரு. சவான் அவர்கள் பாராளுமன்றத்தில் 'ஏதோ மாநில நண்பர்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படியானால் மத்திய அரசின் வருமானம் எங்கே போகிறது' என்று ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அப்பொழுது சில நண்பர்கள் குறிப்பிட்டார்கள். அரசியல் அமைப்பைப் பார்த்தால் ஏதோ மாநிலங்களிடையே அதிருப்தி ஏற்படுகிறது; அந்த அளவுக்கு அரசியல் அமைப்பில் ஏதோ கோளாறு இருக்கிறது, ஒவ்வொருவரும் தன்னுடைய மாநிலம் வஞ்சிக்கப்படுவதாக நினைக்கிறார்கள், மத்திய அரசு என்ன தான் செய்கிறது, பணம் தவறாகச் செலவழிக்கப்படுகிறதா, நீர்வாக வகையில் பணம் ஒழுகிப் போகிறதா என்ற சூழ்நிலை ஏற்படுகிறது என்றெல்லாம் கேட்டார்கள். உலகத்தில் நடு நிலைமையாக உள்ளவர்கள் என்று ஒத்துக்கொள்ளக் கூடிய அரசியல்வாதிகள் ஒத்துக்கொள்கிற பிரச்னைகள்,

அப்படிப்பட்ட பிரச்னைகள், வாதங்கள் எழுப்பப்படுகின்றபொழுது, வரலாறுகளைச் சொல்லும்பொழுது, வரலாற்றுச் சான்றுகளைச் சொல்லும்பொழுது, நடைமுறைச் சான்றுகளைச் சொல்லும்பொழுது, அரசியல் நோக்கத்தோடு வேண்டும் என்றே அது தான் ஏதோ பெரிய பிரிவினை பூதம் என்று பேசப்படுகிறது, எதிர்க்கட்சி நண்பர்களால்.

மதுரை மாநாடு நடந்தது, தர்மபுரி மாநாடு நடந்தது. எந்த மகா நாடாக இருந்தாலும், மாநாடு முடிந்த பிறகு தமிழகத்தில் சில எடுகள் குற்றச்சாட்டுக் கூறவேண்டுமென்றே திட்டமிட்டு குற்றச்சாட்டுக்காக இன்னென்னர் இப்படி இப்படி பேசினர்கள் என்று ஒரு தனி காலமே ஒதுக்குகிறார்கள். சில நண்பர்கள் சொன்னபடி கோரசாக எல்லோரும் அதைப்பற்றிச் சொல்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசியல் நோக்கமே தவிர, வேறு எந்த நோக்கமும் இதற்குச் சொல்ல முடியாது. அரசியல் நோக்கம் தவிர வேறு எந்த நோக்கம் இருக்க முடியும்? ஜனநாயகத்தின் அடிப்படையே வாதப் பிரதிவாதங்கள் தான். அரசியல் கருத்துக்களை, வாதங்களை எழுப்புவதற்கு நீங்கள் அஞ்சுகிறீர்கள், பயப்படுகிறீர்கள் என்று சொன்னால் உங்களுடைய அடிப்படையே பலஹீனமானது என்பதை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முன்னாலே துரை முருகன் அவர்கள் சொன்னமாதிரி வேறு பிரச்னைகளை அதிகமாகச் சொல்கின்ற அளவுக்கு இங்கே வாதங்கள் எழுப்பப்படவில்லை என்பது உண்மை.

ஒன்றுமட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சமீபத்தில் உத்திரப் பிரதேசத்தில் துப்பாக்கிச் சூடு பிரச்னை வந்தபொழுது அந்த மாநில முதல் அமைச்சர் அங்கிருக்கிற போலீஸ் படையை ஸ்டார்ம் போர்ஸ், தாக்குகின்ற படை என்று சொன்னதாக அந்தச் செய்தி பல்வேறு எடுகளிலே வந்திருக்கிறது. தமிழகத்தில் தாக்குகின்ற படை இல்லை என்பது மட்டும் அல்ல. நல்ல வேளையாக முன்பு முதல் அமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் விரும்பாமல் போனாலும் கூட, தமிழகத்தின் நல்ல காலம், அண்ணா மலர்ந்து, கலைஞர் மிளிர்ந்த காலத்தில் போலீஸ் படை என்பது மாறி அது காவல் படை என்று அழைக்கப்பட்டது. தாக்குகின்ற படை தமிழகத்தில் இல்லை. காவல் படை தான் இருக்கிறது. ஸ்டார்ம் போர்ஸ் அல்ல.

ஆயிரக்கணக்கான உதாரணங்கள் கொடுக்கலாம். மாற்றுக் கட்சி அருமை நண்பர்கள் கடந்த இரண்டு நாட்களாகப் பேசியிருக்கிறார்கள். ஒரு நண்பர் சொல்கிறார், தி.மு.க. ஆயுதம் வைத்திருந்தது என்று சொன்னார். சைக்கிள் செயின் வைத்திருந்தார்கள், குண்டான்தடி வைத்திருந்தார்கள், போலீசோடு சேர்ந்து கொண்டு அவர்கள் சில காரியங்களை செய்தார்கள் என்று எதிர்க்

கட்சி நண்பர்கள் சொன்னார்கள். ஒரு நாளைக்குக் கூட ஏதோ ஒரு விஷயத்தை கட்டிக்காட்டி தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் ஆயுதம் தாங்கி இந்தக் காரியங்களைச் செய்தார்கள் என்று கோடிட்டுக் கூடப் பேசவில்லை. பொத்தாம் பொதுவாகப் பேசப்பட்டது. தாக்குதலுக்கு உடந்தையாக நடந்து கொண்டது முன்னேற்றக் கழகம் என்று பேசினார்கள். எங்கள் தரப்பைச் சேர்ந்த துரை முருகன் தெளிவாகச் கட்டிக்காட்டினார். மூன்று பிணங்கள் தி.மு.க.-வில் விழ்ந்தது. அந்தப் பிணங்களைத் தாக்கியது யார் என்று கேட்டார்? எங்கள் தோழர்கள் சாகக்கூடிய முறையில் நாங்களா தாக்கியிருப்போம் என்று கேட்டார். அந்தக் கருத்தை இதுவரையில் நண்பர்கள் மறுத்துச் சொல்லவில்லை. மறுக்கவும் முடியாது.

மிக சாமர்த்தியமாக ஒரு வாதத்தை எதிர்க் கட்சி நண்பர்கள் எடுத்து வைக்கிறார்கள். கலைஞர் ஒரு ராஜதந்திரி, தி.மு.க.வினர் நன்றாகப் பேசத் தெரிந்தவர்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். எங்களைவிட இவர்கள் ஒரு வகையில் வல்லுநர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் ஒத்துக்கொள்கிறேன். காரணம், அவர்கள் மீது இருக்கும் குற்றத்தை எடுத்துச் சொல்வதற்கு முன்னதாக, அவர்கள் மிக நல்லவர்கள் போல ஆகி, எங்கள் மீது குற்றத்தைச் சாட்டுகிறார்கள். சாதாரணமாக நமக்கெல்லாம் தெரியும். சைக்கிளில் செல்பவர் தெருவில் போகும்பொழுது யார் மீதாவது ஏற்றி, அதனால் அவர் கீழே விழுந்துவிட்டால், அந்த சைக்கிளில் வந்தவர் மிக சாமர்த்தியமாக சொல்வார். அடிபட்டு கீழே விழுந்தவர் எழுந்திருப்பதற்கு முன்பே, கைக்கிளில் வந்தவர் 'இப்படியா கண்மூடித்தனமாக வந்து கைக்கிளில் விழுவது' என்று ஆக்ரோஷமாகப் பேசிவிடுவார். அதனால் விழுந்தவன் தான் தான் தப்பு செய்து விட்டோமோ என்று கொஞ்சம் ஒதுங்கிக் கொண்டாலும் ஒதுங்கிக் கொண்டுவிடலாம். அதைப்போல தி.மு.க. ஒதுங்கிக்கொள்ளும் என்று கருதவேண்டாம். அப்படிக் கருதிக்கொண்டு குற்றம் சாட்டலாம் என்பதை மறந்துவிடுங்கள். தாங்கள் நியாயவாதிகளாக மாறி, தி.மு.க.-வை குற்றம் சாட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். படை நடத்துவதில் முந்திக் கொண்டு தாக்குவது என்று ஒரு தத்துவம் உண்டு, மாற்றான் தாக்கிய பிறகு அவனைத் தாக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக நாமே முந்திக் கொண்டு அவனைத் தாக்குவது என்பது போரில் ஒரு நல்ல முறை. அந்த மாதிரி முறையை மாற்றுக் கட்சியினர் கடைப்பிடிக்கிறார்கள். நாங்கள் அம்மாதிரி ஏமாளிகளாக இருந்து கொண்டிருப்போம், தயார் இல்லாமல் இருப்போம் என்று நீங்கள் கருதிக்கொள்ள வேண்டாம். மக்கள் சக்தியால் கட்டப்பட்டது தி.மு.க. மக்கள் வேர்வை. இதற்கு நீராக இருக்கிறது மக்களுடைய ரத்தம் எருவாக இருக்கிறது. பல பேர் தியாக ரத்தத்தினால் கட்டப்பட்ட கோட்டை

இது. நியாயத்தின் அடிப்படையில் கட்டப்பட்ட கோட்டை இது. எண்ணிக்கையைப் பொறுத்து கட்டப்பட்ட கோட்டை அல்ல. நியாயமான கருத்துக்களை வைத்து கட்டப்பட்ட கோட்டை இது. மன்றாடியார் தோட்டத்தில் மலர்ந்த கூந்தலில் சூடுகிற மலர் அல்ல இது. குப்பையில் கிடந்த குண்டுமணி. மன்றாடியாரைப் போல் ஆயிரம் மன்றாடியார் வந்தாலும் எங்களை தகர்க்க முடியாது என்று இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஒரே ஒரு கருத்தை மட்டும் இறுதியாக நான் ரெகார்டுக்காகச் சொல்ல விரும்புகிறேன். முன்னாள் பி.சோ. கட்சியைச் சேர்ந்த சுப்பிரமணியம் அவர்கள் இப்பொழுது இந்திரா காங்கிரஸ் கட்சியில் இருக்கிறார். அர்த்த நாரீசுவர கவுண்டர் மாவட்ட கமிட்டித் தலைவராக இருக்கிறார். அவர் கீழே இருக்கிற காரணத்தினால், நண்பர் சுப்பிரமணியம் அவர்கள் அவரை ஆதரிக்கிறார். அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர் இப்பொழுது இங்கே இல்லை என்பது தான் என்னுடைய வருத்தம். இருந்தாலும் இந்தக் கேள்வியை ரெகார்டுக்காக இங்கே சொல்வது பொருத்தம் என்று கருதுகிறேன். அர்த்தநாரீசுவர கவுண்டருக்கு 700 ஏக்கர் கொண்ட தோட்டம் இருக்கிறது. கடந்த 15, 16 ஆண்டுகளாக நண்பர் சுப்ரமணியம் அவர்களும், அவருடன் இருக்கிற சுரேந்திரன் அவர்களும் பெரிய போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் போராட்டம் என்ன ஆயிற்று என்று இந்த நேரத்தில் கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

4. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders*

196. Notification issued with G.O. Ms. No. 264, Co-operation, dated the 16th June 1972, in regard to an amendment to the **Tamil Nadu Money Lenders Rules, 1959. [Laid on the Table of** the House, under section 22 (3) of Tamil Nadu Money Lenders Act, 1957 (Tamil Nadu Act XXVI of 1957).]

197. Notification issued with G.O. Ms. No. 1516, Revenue, dated the 23rd May 1972, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge on entertainments tax to film show entitled 'Deteline Bangala Desh' [Laid on the Table of the House under sections 16 (4) and 8 (3) of the **Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939) and the Tamil Nadu Local Authorities Finance Act, 1961 (Tamil Nadu Act 52 of 1961) respectively].**

198. Notification issued with G.O. P. No. 1378, Revenue, dated the 5th May 1972 in regard to exemption from sales tax on the sales of goods by certified institutions which function under the direct control of the Khadi and Village Industries Commission, Bombay. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

199. Notification issued with G.O. Ms. No. 3843, **Revenue, dated the 25th November 1971, in regard to setting up of check-**posts at Bommadapalli, Thalli, Krishnagiri Londonpet of Coimbatore Division. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

200. Notification issued with Pro. No. 176197/67-F1, dated the **20th April 1968, in regard to extension of certain provisions relating** to building regulations under Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Veerapanchatram Town Panchayat of Coimbatre district. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

201. Notification issued with Rc. No. 180168/67-F5, **dated the 19th December 1968, in regard to extension of certain provisions** relating to water-supply under the Tamil Nadu District Municipalities Act, 1920, in the entire area of Sattur Town Panchayat of Ramanathapuram district. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

202. Notification issued with G.O. Ms. No. 206, Revenue, dated the 24th January 1972, in regard to an amendment to Rule 16 of the Tamil Nadu Agricultural Lands Records of Tenancy Rights

Rules, 1969. [Laid on the Table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

B. *Reports, Notifications and Other Papers*

15. Notification issued with G.O. Ms. No. 1605, Revenue, dated the 30th May 1972 in regard to concellation of Revenue Department Notification No. 595 of 1969, dated the 30th January 1969, publiched at page 73 in Part II—Section I of the *Tamil Nadu Government Gazette*, dated the 5th February 1969.

இணைப்பு,

[1-ம் பக்கத்தில் 61-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

தொழிலாளர் துறையின் 30—9—1969 நாளிட்ட 210-ம் எண் அரசு ஆணையின்படி.

ஓட்டல் தொழிலாளரின் வேலை நிலைமைகளைக் கருத்தில் கொண்டு நியாயமான குறைந்த அளவு ஊதிய விதங்களை முடிவு செய்ய ஓட்டல் தொழிலுக்கான ஊதியக்குழு ஒன்றை அமைக்கலாம் என்றும், தொழிலாளர்களுக்கு நிகராடை வழங்கவும், உணவுப்படி முதலியவற்றை உயர்த்தவும் தமிழ்நாடு விருந்தோம்பல் நிறுவனங்கள் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்படலாமென்றும் தமிழ்நாடு ஓட்டல் தொழிலாளர் சம்மேளனம் முறையிடு செய்துகொண்டது.

2. இதுபற்றிக் கலந்தாலோசிக்கப்பட்ட தொழிலாளர் நல ஆணையாளர், ஓட்டல் தொழிலின் வேலை நிலைமை குறித்து ஆய்வதற்கென நியமிக்கப்பட்ட தனி அலுவலர், ஓட்டல் தொழிலைப் பற்றி ஆய்கையில், இம்முறையீட்டில் கண்டுள்ள கருத்துக்களை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படலாமெனத் தெரிவித்தார். இதற்கிடையில், ஓட்டல் தொழில் வேலை நிலைமைகளை ஆராய்வதற்கு முத்தரப்புக் குழு ஒன்றை அமைக்குமாறும் கேட்டுக் கொண்டு, 7—6—1967 நாளிட்ட ஒரு முறையீடும் வரப்பெற்றது. இது பற்றிக் கலந்து பேசப்பட்ட தொழிலாளர் நல ஆணையர் ஓட்டல் தொழில் தனி அலுவலர் தனது வேலையை ஏற்கெனவே பாதி முடித்துள்ளபடியால் புதிய முத்தரப்புக்குழு ஒன்றை நியமிப்பதற்குப் பதிலாக நிர்வாகிகள், தொழிலாளர் பிரதிநிதிகளாக முறையே திருவாளர்கள் கே. சுப்ரமணியம், பி. வி. ஸ்ரீநிவாசன் ஆகியோரையும், தனி அலுவலரைக் கூட்டுநராகவும் கொண்ட முறையின் மரபுப்படிக்கான குழு ஒன்று, ஏற்கெனவே தனி அலுவலர் திரட்டிய சாட்சியங்களை ஆய்வதற்கும், வேண்டுமாயின் கூடுதல் சாட்சியங்களைத் திரட்டித் தனது அறிக்கையைப் பணிந்தனுப்பவும் அமைக்கப்படலாம் என்று கருத்துத் தெரிவித்தார். தொழிலாளர் நல ஆணையாது ஆலோசனையை அரசு ஏற்றுக்கொண்டது. இதன் பின்னர், தனி அலுவலர் ஏற்கனவே தனது வேலையை முடித்துவிட்டபடியால், முறையின் மரபுப்படிக்கான குழு அமைக்கவியலாது என்றும், இருப்பினும் தனி அலுவலர் அனுப்பி வைக்க அறிக்கை ஏற்கனவே குறிப்பிட்ட பிரதிநிதிகளின் உதவியைக் கொண்டு பரிசீலிக்கப்பட்டது என்றும் தொழிலாளர் நல ஆணையர் அறிவித்தார். தொழிலாளர் நல ஆணையர் தனி அலுவலரின் அறிக்கையை தமது பரிந்துரைகளுடன் இப்போது அனுப்பியுள்ளார்.

3. தொழிலாளர் நல ஆணையரின் குறிப்புரைகளை யொட்டி ஓட்டல் தொழில் தனி அலுவலரின் பரிந்துரைகளை அரசு ஊன்றிப் பரிசீலித்து பின்வரும் ஆணைகளைப் பிறப்பித்துள்ளது.

தனி அலுவலரின் பரிந்துரைகள்	அரசு பிறப்பித்த ஆணைகள்
(1) ஓட்டல் தொழிலில் வேலையில் இருப்பதைக் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் அட்டவணையில் சேர்த்துக்கொள்ளலாம்.	தனி அலுவலரின் பரிந்துரையை குறைந்த அளவு ஊதிய மாநில ஆலோசனைக் குழுவின் அடுத்து வரும் கூட்டத்தின் முன் வைக்கலாம் என்று தொழிலாளர் நல ஆணையர் செய்த பரிந்துரையை அரசு ஒப்புக் கொள்கிறது.
(2) அதிக வரி மதிப்பிடப்படுவதைத் தவிர்க்கவேண்டி ஊதியப் பதிவேட்டில் கொடுக்கப்பட்டதாகக் காண்பித்துள்ள ஊதியங்களைவிட உண்மையில் கொடுக்கப்படும் ஊதியம் பெரும்பாலும் அதிகமாகவே இருப்பதால் விற்பனை வரி மதிப்பிட விருந்தோம்பல் நிறுவனங்களில் ஊதியப் படிகளைக் கருத்தில் கொள்ளாமல் முற்றிலும் வேறான முறையைப் பின்பற்றலாம்.	இது அரசின் வருவாய்த் துறையில் பரிசீலனையில் உள்ளது.
(3) தொழிலாளர்கள் பணிக்கால அளவில் இடையீடு ஏற்படுத்துவது அடிக்கடி வேலை மாற்றங்கள் செய்வது போன்ற நியாயமற்ற தொழிலாளர் குறித்த பழக்கத்தை அடியோடு நிறுத்துவதற்கு விதிக்கப்பட்ட ஆறு திங்கள் காலம் தொழிலாளர் கடைசியாக வேலையில் சேர்ந்த நாளிலிருந்து பணியில் இடையீடுகள் இருந்தபோதிலும் இரண்டு ஆண்டுக்கால அளவுக்குள் தொடர்ச்சியான ஆறு திங்களாக இருப்ப	இத்தகைய முறைகேடுகளைக் களைந்தெறிய தொழிலாளர் நல ஆய்வாளர்கள் முறையாகச் சரிவர மேற்கொள்ளும் ஆய்வுப் பணி போதுமானது என்று அரசு கருதுகிறது. மேலும் இதுகுறித்து ஆயத்து அறிக்கை ஒன்றை அரசுக்கு அனுப்புமாறு தொழிலாளர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

தனி அலுவலரின் பரிந்துரைகள்.	அரசு பிறப்பித்த ஆணைகள்.
தாக அனுமதிக்கப்படலாம் என்னும் வகையில் தமிழ்நாடு விருந்தோம்பல் நிறுவனங்கள் சட்டத்தில் திருத்தம் செய்யப்படலாம்.	
(4) தொழிற்சாலைகள் சட்டத்தின் 92-வது பிரிவில் சொல்லியதைப்போலவே இச்சட்டத்தின் கீழ் நீதிமன்றங்கள் பெருத்த அபராதத் தொகை விதிக்க இயலும் வகையில் (இச் சட்டத்தின் 23-வது பிரிவு) தண்டனைப் பகுதியைத் திருத்தி வழக்கமாகவும் வேண்டுமென்றே குற்றஞ் செய்பவர்கள்மீது கடுமையான தண்டனை விதிக்கப்படவேண்டும்.	தமிழ்நாடு விருந்தோம்பல் நிறுவனங்கள் சட்டத்தின் தற்போதைய விதித் துறைகள் கடுமையற்றவை என்று சொல்வதற்கில்லை. எனவே இச் சட்டத்தின் 23-வது பிரிவுக்குத் திருத்தம் அவசியமில்லை என்று அரசு கருதுகிறது.
(5) ஓட்டலதிபர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் கருத்துக்களை கருதிப் பார்த்து பின்னர் அரசு, நியாயமான உயர்ந்த அளவு உணவுப்படியை முடிவு செய்யலாம்.	நிர்வாகங்கள், தொழிலாளர் பிரதிநிதிகள் ஆகியோரைக் கலந்து கொண்டு உணவுப்படி வீதங்களைத் திருத்தியமைக்கலாம் என்று தொழிலாளர் நல ஆணையர் அளித்த பரிந்துரையை அரசு ஒப்புக்கொண்டது.
(6) இருபது அல்லது இருபதுக்கு மேற்பட்ட தொழிலாளரைக் கொண்ட விருந்தோம்பல் நிறுவனங்களில் தொழிலாளர்களுக்கு நிகராடைகள் வழங்குவதற்கு ஏற்ற வகையில் தமிழ்நாடு விருந்தோம்பல் நிறுவனங்கள் சட்டத்தின் விதித்துறைகளும் அவற்றின் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளும் தகுந்தவாறு திருத்தப்படலாம். நிகராடை பிரச்சினை குறித்து தொழிலாளருக்குள்ள குறையைப் போக்குவதில், தமிழ்நாடு விருந்தோம்பல் நிறுவனங்கள் சட்டத்தின்	தனி அலுவலரின் பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழ்நாடு விருந்தோம்பல் நிறுவனங்கள் சட்டத்தின் 16-வது பிரிவைத் திருத்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

தனி அலுவலரின் பரிந்துரைகள்.	அரசு பிறப்பித்த ஆணைகள்.
16-வது பிரிவில் செய்யக் கருதியுள்ள கீழ்க்காணும் திருத்தம் இவ்வகையில் செய்யப்படும் மற்றோர் ஏற்பாடாகும் :— "16 (ஏ) மாநில அரசு, அரசிதழில் அறிவிப்பு வெளியிடு அதன் மூலமாக ஒரு விருந்தோம்பல் நிறுவனத்தின் பொதுத் துப்பரவை முன்னிட்டு அதன் வெவ்வேறு வகைத் தொழிலாளர்களுக்கு விதிகளில் குறிப்பிடக் கூடிய எண்ணிக்கையிலும் வகையிலும் நிகராடை வழங்க வேண்டுமென்று அந்த நிறுவனத்தின் அதிபருக்குக் கட்டளையிடும் வகையில் விதிகள் இயற்றலாம்".	
(7) இச்சட்டத்தின் 12-வது பிரிவின் கீழ் வழங்கப்படும் விடுப்பு அல்லாமல் ஓராண்டில் 7 நாள் பிணி விடுப்பு வழங்க இச்சட்டம் திருத்தப்படலாம் அல்லது தொழிலாளர் அரசு காப்புறுதி திட்டத்தின் நன்மைகளை விருந்தோம்பல் நிறுவனத் தொழிலாளரும் பெறும் படிச் செய்யலாம்.	தொழிலாளர் அரசு காப்புறுதித் திட்டத்தைத் தொலைதூரப் பகுதிகளுக்கு நீடிப்பது இயலாததால் தொலைதூரப் பகுதிகளில் உள்ள தொழிலாளருக்கு தொழிலாளர் அரசுக் காப்புறுதி திட்டத்தை நீடிப்பதால் எவ்வித பயனும் ஏற்படாது. இந்தச் சட்டத்திலேயே பிணி/ விடுப்புக்கான விதித்துறையைச் சேர்ப்பதே சிறந்ததாகும்.
(8) 30 தொழிலாளர்களுக்கு மேல் வேலையிலுள்ள ஒட்டல்களிலாவது தொழிலாளர்களுக்கு குடியிருப்பு வசதிகள் அல்லது ஓய்வு அறைகள் ஏற்படுத்தப்படவேண்டுமென வற்புறுத்தலாம்.	விருந்தோம்பல் நிறுவன விதிகளின் 15-வது விதி குடியிருப்பு அறைகளை ஒட்டல் தொழில் சம்பந்தப்பட்ட வேலைகளுக்குத் தொழிலதிபர்கள் பயன்படுவதற்குத் தடை விதிப்பதால் அதைக் கண்டிப்புடன் பின்பற்றப்படுவதைக் கவனித்துக்கொண்டால் தற்போதைக்கு அதுவே போதுமானதாகும் என்று தொழிலாளர் நல ஆணையதுர கருத்தை இவ்வரசு ஒப்புக்கொள்கிறது.

தனி அலுவலரின் பரிந்துறைகள்.	அரசு பிறப்பித்த ஆணைகள்.
(9) தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி, 10 அல்லது பத்துக்கு மேற்பட்ட தொழிலாளருள்ள விருந்தோம்பல் நிறுவனங்களுக்குப் பொருந்தச் செய்யலாம்	இந்தப் பரிந்துரை தனியே அரசின் பரிசீலனையில் உள்ளது.
(10) கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவ விடுதிகளின் ஊழியர்களையும் சேர்த்துக் கொள்ளும் வகையில், தொழிலாளர் என்னும் பொருள் விளக்கத்துக்குத் திருத்தம் கொண்டு வந்த பின்னர் அரசு, அந்த ஊழியர்கள் அனுபவிக்கக் கூடிய தனித் தகுதியை முன்னிட்டு அவசியமெனக் கருதக்கூடிய விலக்குகளை அளிக்கலாம். ஆக, கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த நிறுவனங்களை இத்தகைய விடுதிகளின் ஊழியர்கள், காரணம் காட்டப்படாமலேயே வேலையிலிருந்து நிறுத்தப்பட்டால், மேல்முறையீட்டு அதிகாரிக்கு மேல்முறையீடு செய்து கொள்ளும் உரிமையைப் பெறலாம். இந்த அளவுக்கு அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும். வேலை உறுதி என்ற பாதுகாப்பு அவர்களுக்கு அளிக்கப்படும். ஊழியர்கள் வேலையிலிருந்து தள்ளப்பட்டால் அல்லது வேலையிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது ஆட்குறைப்புச் செய்யப்பட்டால் போதிய இழப்பீடு கொடுக்கப்படுமென்று உறுதிப்படுத்தப்படும்.	தனி அலுவலரின் பரிந்துரையை அரசு ஒப்புக்கொள்கிறது.
(11) தமிழ்நாடு விருந்தோம்பல் நிறுவனங்கள் சட்டம், எந்த ஒரு நகராட்சி நகரியம் அல்லது 11-வது லகை ஊராட்சி இவற்றிலிருந்து 3 மைல் சுற்றளவுக்குள் அமைந்த பகுதிகளுக்கு நீடிக்கக்படலாம்.	தனி அலுவலரின் பரிந்துரையை அரசு ஒப்புக்கொள்கிறது.

[1972 ஆகஸ்ட் 11

மேலே ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை கீழே விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது :—

(1) ஓட்டல் தொழிலில் வேலை, 1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமெனல்.

ஓட்டல்கள், சிற்றுண்டிசாலைகள் முதலியவற்றில் வேலையில் இருப்பதைக் குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் அட்டவணையில் சேர்ப்பது என்னும் கருத்து, 21—12—1970 அன்று நடந்த கூட்டத்தில் குறைந்த அளவு ஊதிய வாரியக்குழு முன்பு வைக்கப்பட்டது. இவ்வேலை, 1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் அட்டவணையில் சேர்க்கப்படலாம் என்று குழு தீர்மானித்தது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(2) விருந்தோம்பல் நிறுவனங்களில் ஊதியப்பட்டியைக் கருத்தில் கொண்டு விற்பனை வரி மதிப்பிடுதல்.

தனி அலுவலர் அறிக்கையில் பொருத்தமான பகுதியை வருவாய்த் துறை வாரியம் தனது சார்நிலைப் பணியாளர்களின் தகவலுக்காகவும் அவர்கள் அவசியமான நடவடிக்கை எடுக்கவும் அனுப்பி வைத்தது.

(3) தொழிலாளர்கள் பணிக்கால அளவில் இடையீடுகள் ஏற்படுத்துவது, அடிக்கடி வேலை மாற்றங்கள் செய்வது போன்ற நியாயமற்ற தொழிலாளர் குறித்த பழக்கத்தை அடியோடு நிறுத்துவது.

தொழிலாளர்களின் பணிப்பதிவேடுகளை ஆழ்ந்து சரிபார்க்குமாறு தொழிலாளர் நல ஆய்வாளர்களுக்குத் தொழிலாளர் நல ஆணையரால் அவசியமான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(4) ஓட்டலதிபர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் கருத்துக்களைக் கருதிப் பார்த்தபின், உயர்ந்த உணவுப்படி அளிக்க ஆலோசனை கூறுதல்.

சென்னை மாவட்டம், மாவட்டத் தலைமையிடங்கள், வட்டத் தலைமையிடங்கள், நகராட்சிகள், நகரியங்கள் ஆகியவை பொறுத்தமட்டில் நாளொன்றுக்கு ரூ. 2.75 என்றும், முதல் வகையின் கீழ் வராத பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் நாளொன்றுக்கு ரூ. 2.50 என்றும் உணவுப்படியை உயர்த்த தமிழ்நாடு விருந்தோம்பல் நிறுவனங்கள் விதிகளின் 21-வது விதிக்கு அவசியமான திருத்தம் தொழிலாளர் துறையில் 5—2—1971 நாளிட்ட 155 ஆம் ஆணையில் வெளியிடப்பட்டுள்ளது.

(5) நிகராடைகள் வழங்கும் ஏற்பாடு.

1972 ஆகஸ்ட் 11]

இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(6) ஓராண்டில் 7 நாள் பிணிவிடுப்பு வழங்குதல் அல்லது விருந்தோம்பல் நிறுவனங்களின் தொழிலாளருக்கும் தொழிலாளர் அரசக் காப்புறுதிச் சட்டத்தைப் பொருந்தச் செய்தல்.

இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(7) முறையான குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.

15-வது விதியின் விதித்துறைகளைக் கண்டிப்பாகச் செயல்படுத்துமாறும், இவ்விதியை மீறுகிற ஓட்டல் அதிபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் அவசியமான நிர்வாகக் கட்டளைகள், தொழிலாளர் நல ஆணையரால், சார்நிலை அதிகாரிகளுக்குப் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(8) தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தை 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட விருந்தோம்பல் நிறுவனங்களுக்கு நீட்டித்தல்.

இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(9) கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவ விடுதிகளின் ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளும் வகையில் தொழிலாளர் என்பதன் பொருள் விளக்கத்தைத் திருத்துதல்.

இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(10) தமிழ்நாடு விருந்தோம்பல் நிறுவனங்கள் சட்டம், ஒரு நகராட்சி, நகரியம் அல்லது II-வது வகை ஊராட்சிகள் இவற்றிலிருந்து 3 மைல் சுற்றளவுக்குள் அமைந்துள்ள பகுதிகளுக்கு நீட்டித்தல்.

தமிழ்நாடு விருந்தோம்பல் நிறுவனங்கள் சட்டத்தின் விதித்துறைகளை ஒரு சில பகுதிகளுக்கு நீட்டித்து, தொழிலாளர் துறையின் 29—3—1971 நாளிட்ட 380-ம் எண் ஆணையில் அறிவிப்பு ஒன்றை அரசு வெளியிட்டுள்ளது.

Copy of G.O. Ms. No. 210, Labour, dated 30th May 1969.

The Tamil Nadu Hotel Workers' Sammelanam represented that a Wage Board for Hotel Industry may be constituted to fix reasonable minimum rates of wages taking into account working conditions of the Hotel Workers and that provision may be made in the Madras Catering Establishments Act for supply of uniform to workers and for enhancement of meals allowance, etc.

2. The Commissioner of Labour who was consulted in the matter, reported that the Special Officer appointed for going into the working condition of the Hotel Industry, has been instructed to take into consideration the points contained in the representation during his study of the Hotel Industry. Meanwhile, a further representation dated 7th June 1967 containing, among others the request for setting up of a Tripartite Committee to go into the working conditions of the Hotel Industry was received. The Commissioner of Labour who was consulted, has suggested that as the Special Officer for Hotel Industry has already gone half way through his work instead of constituting a fresh Tripartite Committee, an informal committee with Thiruvalargal K. Subramanian and P. V. Sreenivasan, as representatives of the managements and the workers respectively, with the Special Officer as the Convenor, might be constituted to go through the evidence already collected by the Special Officer, and also collect, if necessary additional evidence and submit its report. The Government accepted the suggestion of the Commissioner of Labour. The Commissioner of Labour subsequently reported that as the Special Officer had already completed the work, the informal committee could not be formed and that, however the report submitted by the Special Officer was got examined by him with the assistance of the representatives already proposed. The Commissioner of Labour has since submitted the report of the Special Officer along with his recommendations.

3. The Government have carefully examined the recommendations of the Specal Officer for Hotel Industry in the light of the remarks of the Commissioner of Labour and pass the following orders :—

Recommendations of the Special Officer	Orders of Government
1. Employment in the Hotel Industry may be included in the Schedule to the Minimum Wages Act.	The Government accept the recommendation of the Commissioner of Labour that the recommendation of the Special Officer may be placed before the next meeting of the Minimum Wages State Advisory Board.

Recommendations of the Special Officer	Orders of Government
2. As very often the wages actually paid is higher than the wages shown as paid in the wage registers to avoid high tax assessment, a different method of assessing sales tax in catering establishments may be adopted without taking into account the wage bills of the catering establishments.	The matter is under consideration of the Government in Revenue Department.
3. The put an end to the unfair Labour practice of causing breaks in the service of the workers and frequent transfer, the Madras Catering Establishment Act may so amended that the 6 months continuous service prescribed may be permitted to be within a period of 2 years from the date on which the worker was last employed in service irrespective of the interruptions in service.	The Government consider that regular and proper inspection by the Inspectors of Labour should be adequate to meet such Mal-practices, the Commissioner of Labour is requested to examine this further and send a report to Government.
4. A deterrent punishment should be imposed on habitual and wilful offenders by amending the penal clause (Section 23 of the Act) to make it possible for the courts to impuse heavier fines under the Act as in the case of Section 92 of the Factories Act.	The Government consider that no amendment to Section 23 of the Madras Catering Establishment Act is necessaey as the present provisions cannot be said to be lenient.
5. A reasonably higher rate of food allowance may be fixed by Government after taking into account the views of both the employers and employees.	The Government accept the recommendation of the Commissioner of Labour that the rates of food allowance may be revised in consultation with the managements and employees' representatives.

Recommendations of the Special Officer	Orders of Government
6. The provisions of the Madras Catering Establishment Act and Rules may be amended suitably so that uniforms are supplied to workers in Catering Establishments with 20 or more workers. The following amendment proposed to Section 16 of the Madras Catering Establishment Act will be a step in removing the grievance of workers on this issue, of uniform :— "16 (A) The State Government may by notification in the official Gazette, make rules requiring an employer of a Catering Establishment to provide for the Different classes of employees in that establishment, for the sake of general cleanliness such number, any type of dress as may be specified in the rules."	The proposal to amend Section 16 of the Madras Catering Establishment Act on the lines of the recommendations of the Special Officer is already under consideration of the Government.
7. The Act may be amended to provide for the grant of sick leave for 7 days in a year in addition to leave granted under Section 12 of the Act or the benefits of the Employees' State Insurance Act may be extended to workers in Catering Establishments.	The Government consider that extension of the emplayees' State Insurance Act may not be of much help especially in remote areas, to which the Employees' State Insurance Act may not be extended and that it is much better to include a provision for sick leave in the Act itself.
8. The provision of proper living quarters or rest rooms may be insisted upon for the employees at least in hotels employing more than 30 workers.	The Government agree with the Commissioner of Labour that for the present it would be adequate if it is ensured that rule 15 of the Madras Catering Establishment Rules which prohibits employers using living rooms for operations connected with a Catering Establishment is strictly enforced.
9. The employees' Provident Fund Act may be made applicable to catering establishments with 10 or more employees.	The recommendation is separately under the consideration of the Government of india.
10. The Government may after amending the definition of employee so as to include the workers in hostels attached to educational institutions grant such exemptions as is deemad to be necessary in view of the special status they are privileged to enjoy. Thus workers in these hostels which are attached to educational institutions will atleast secure a right of appeal to the Appellate Authority, if there services are terminated without reasonable cause and they will be granted protection to that extent. Security of service will be guaranteed and adequate compensation assured for the workers in case of dismissal, discharge or retrenchment.	The Government accept the recommendation of the Special Officer.
11. The Madras Catering Establishment Act may be extended to areas located within 3 miles of any Municipality, township or Class II Panchayats.	The Government accept the recommendations of the Special Officer.

The action taken on the above accepted recommendations are detailed below :—

1. Employment in the Hotel Industry to be included in the schedule to the Minimum Wages Act, 1948.

The question of including the employment in hotels, restaurants, etc., to the schedule to the Minimum Wages Act was placed before the Minimum Wages State Advisory Board at its meeting held on 21st December 1970. The Board resolved that this employment may be added to the schedule to Minimum Wages Act, 1948. The matter is under consideration of the Government.

2. Assessment of sales tax taking note of the wage bills in the catering establishments.

The Board of Revenue had communicated the relevant portion of the report of the Special Officer to his subordinate Officers for their information and necessary action.

3. To put an end to the unfair Labour practice of causing breaks in the service of the workers.

Necessary instructions have been issued by the Commissioner of Labour to the Inspectors of Labour to have a critical check of the service records of the employees.

4. To suggest incrased rate of food allowance taking into account the views of employers and employees.

In G.O. Ms. No. 155, dated 5th February 1971, of Labour Department, necessary amendment has been issued to rule 21 of the Tamil Nadu Catering Establishments Rules, raising the food allowance to Rs. 2.75 per day in the case of employees in respect of the District of Madras, District Headquarters, Taluk Headquarters, Municipalities and Townships and at Rs. 2.50 per day in respect of Town Panchayats not falling under the former category.

5. Provision of supply of Uniforms.

The matter is under consderation of the Government.

6. Provision sick leave for 7 days in a year or coverage of Employees' a State Insurance Act to the workers in catering establishments.

The matter is under consideration of the Government.

7. The Provision for proper living quarters.

Necessary administrative instructions has been issued by the Commissioner of Labour to the subordinate officers to enforce the provisions of rule 15 strictly and take action against those employers who violate that rule.

8. Extension of Employees Provident Fund Act to catering establishments with 10 or more employees.

The matter is under consideration of the Government.

9. Amending the definition of employees so as to include workers in hostels attached to educational institutions.

The matter is under consideration of the Government.

10. Extension of the Act to areas located within 3 miles of any municipality, township or class II panchayats.

The Government have issued a notification extending the provisions of the Tamil Nadu Catering Establishments Act to certain places in G.O. Ms. No. 380, dated 29th March 1971, of Labour Department.

0—0—0—0—0

தமிழ் நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1972 ஆகஸ்ட் 12.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Courses in Polytechnics

* 86 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the various courses offered by the Polytechnics in this State as on 1st April 1971;

(*b*) the strength under various courses;

(*c*) whether this Government has any programme to introduce new courses in Polytechnics; and

(*d*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : *(அ)—(எ) விவரமான அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.*

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : *துணைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கான பாலிடெக்னிக்குகள் மிகக் குறைவாக இருக்கின்றன. அவற்றை அதிகப்படுத்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?*

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : *துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே மூன்று இடங்களில் பெண்கள் பாலிடெக்னிக்குகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கேற்ற கல்வி அங்கே பயிற்றுவிக்கப்படுகிறது. தேவைப்படுமானால் வேறு இடங்களிலும் ஏற்படுத்தலாம். ஆனால் இப்பேரதே மூன்று பாலிடெக்னிக்குகள் போதுமானவையாக இருந்து வருகின்றன.*

* 87 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the details of the Soviet financial assistance towards expansion of Technological Education in this State during 1972-73?

@ 646-652 ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர், இரா. நெடுஞ்செழியன்: கிண்டி பொறியியல் கல்லூரியில் தொழில் நுட்பக் கல்வியை விரிவுபடுத்த சோவியத் வல்லுநர்களைப் பயன்படுத்திக் கொள்ளவும், ஆசிரியர்களை பயிற்சிக்காக சோவியத் யூனியனுக்கு அனுப்பவும், முதுகலைப் படிப்பு மற்றும் பிஎச்.டி. கல்வித் துறையில் ஆராய்ச்சி வசதிகளை நிறுவ அந்நாட்டிலிருந்து வேண்டிய தளவாடங்களை இறக்குமதி செய்யவும், சோவியத் யூனியன் உதவி கோரி, மத்திய அரசுக்கு இவ்வரசு கடிதம் எழுதியுள்ளது. இதுவரை ஏதும் உதவி கிடைக்கவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Every year hundreds of students are coming out of polytechnics. May I know from the Hon. Minister whether any arrangement has been made to provide them with appointments?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது அப்படிப்பட்ட நிலைமை இல்லை. படித்துத் தேறி வருகிறவர்களுக்குப் போதுமான வேலை வாய்ப்பு கிடைக்கிறது. அதற்காக சில இடங்களில் சாண்ட்விச் கோர்ஸ் என்றும், பிறகு அப்ரென்டிஸ்ஷிப் என்றும் இருக்கிறது. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலை இப்பொழுது இல்லை. இப்பொழுது ஓரளவு வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

Building for Nagercoil Municipal Council

* 88 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to put up new construction to house the Nagercoil Municipal Council; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

வந்தவாசி வட்டாரத்தில் தீவிர வேலைவாய்ப்புத் திட்டம்.

* 89 வினா.—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், வந்தவாசி ஒன்றியத்திற்கு தீவிர வேலைத் திட்டத்தில் (cresh Programme) 1971-72 ஆண்டுக்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது?

(இ) 1972 ஜனவரி மாதம் 13, 14, 15, 16-ந் தேதிகளில் அதில் எத்தனை பேர்கள் வேலை செய்தார்கள்? அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கூலித்தொகை மேலே குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டும் எவ்வளவு ரூபாய்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 1971-72-ல் வந்தவாசி வட்டாரத்திற்கு ரூ. 1.25 லட்சம் ஒதுக்கப்பட்டது.

(இ) 1972-ஆம் ஆண்டு ஜனவரி 13, 14, 15, 16 தேதிகளில் இத்திட்டத்தின் கீழ் பணி புரிந்தவர்களின் எண்ணிக்கைபற்றிய புள்ளிவிவரமும், அந்த நாட்களில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதியங்களும் வருமாறு:—

நாள்.	நபர்கள்.	அளிக்கப்பட்ட ஊதியம்.
(1)	(2)	(3)
1972 சனவரி 13ம் தேதி ..	426	1,278·00
1972 சனவரி 14ம் தேதி ..	427	1,281·00
1972 சனவரி 15ம் தேதி ..	427	1,281·00
1972 சனவரி 16ம் தேதி	427	1,281·00
மொத்தம் ..	1707	5,121·00

பள்ளிகளில் மத போதனை.

* 90 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்வியின் பெயரால் பள்ளிகளில் நடைபெறும் மத போதனைகளை அகற்றிடும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்திய அரசியல் சட்டத்தின் படியும் தமிழ்நாட்டுக் கல்வி விதிகளின்படியும் அரசுக் கல்வி நிலையங்களிலும் உள்ளாட்சி மன்றக் கல்வி நிலையங்களிலும் பொதுவாக மதபோதனை செய்யத் தடை உள்ளது.

அரசால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அரசு மானியம் பெறும் தனியார் கல்வி நிலையங்களிலும் எந்தெந்த மாணவர்கள் (அவர்கள் வயது வராதவர்களாயிருப்பின் அன்னார் காப்பாளர்கள்) மத போதனை பெற ஒத்துக் கொள்கிறார்களோ அவர்களுக்கு மட்டுமே சில நிபந்தனைகளுக்குட்பட்டு மத போதனை அளிக்கலாம்; அத்தகைய மத போதனையை கல்வி நிலைய வேலை நேரத்தில் அளிக்கக்கூடாது.

எந்தக் கல்வி நிலையமாவது மேற்கண்டவற்றை மீறி நடப்பது பள்ளிக் கல்வித் துறைக்கோ அல்லது அரசுக்கோ தெரியப்படுத்தப்பட்டால் அத்துறைகள் தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா : மத போதனை நடத்தப்படுவதைப் போல நாத்திகப் பிரச்சாரமும் நடைபெறுவதற்குக் கல்வித் துறையில் அரசு ஆவன செய்ய முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மத போதனை நடத்துவதற்கு பள்ளி நேரங்களில் இடம் இல்லை. மத போதனை எல்லோருக்கும் நடத்தவும் முடியாது. குறிப்பிட்டவர்கள் இன்ன மத போதனை தங்களுக்கு வேண்டும் என்று எழுதிக் கேட்டு, வகுப்பு நேரங்கள் போக மற்ற நேரங்களில் செய்யலாம் ஆனால், 'நாத்திகம்' என்பது ஒரு மதமாக இல்லை. அது ஒரு சமூகத்தான் இருக்கிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : வேலூரிலுள்ள ஊர்ஹில கல்லூரி போன்றவற்றில் மத போதனை மட்டுமல்ல, மத சம்பந்தமான சினிமாக் காட்சிகளும் காண்பிக்கப்படுகின்றன. அதுவும் பாட நேரங்களில்—திங்கட்கிழமைதோறும் முதல் 'பீரியட்' மதம் பற்றிய படக் காட்சிகளோ மத போதனையோ நடத்துகிறார்கள். இதைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போதே விதிமுறைகள் இருக்கின்றன. மத போதனை விரும்புகிறவர்களுக்கு மட்டும் செய்யலாம். வகுப்பு நேரங்களில் மத போதனை செய்யக்கூடாது. விரும்புகிறவர்களுக்குத் தவிர மற்றவர்களையும் வற்புறுத்தும் நிலை இருக்குமானால் அது பற்றி முறையீடு அளிக்கப்படுமானால் அதன் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 91 முதல் 95 வரையுள்ள வினாக்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வந்தபிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

Sugar Control

* 96 *Q.*—THIRU N. DENNIS :
THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to urge on the Union Government to impose partial control on sugar; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) 1971 நவம்பர் திங்களிலிருந்து சர்க்கரை விலையில் உயர்வு காணப்பட்டதால், மாநில அரசு, மத்திய அரசை, சர்க்கரையின் சில்லறை விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 2-க்கு மேற்படாமல் வரையறுக்குமாறு கேட்டுக்கொண்டதுடன், பொதுமக்களுக்குக் கட்டுபடியாகும் விலையில் சர்க்கரை வழங்குவதற்காக மாநிலத்தின் சர்க்கரைத் தேவைகளை நிறைவு செய்ய, மாநில அரசிற்கு 50 சத விதம் சர்க்கரை கிடைக்கச் செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டது.

Waste lands

* 97 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the extent of total cultivable waste lands in Tamil Nadu, district-war?

THE HON. THIRU P. U. SHANMUGAM : A statement @ is placed on the Table of the House.

உப்பளங்கள்.

* 98 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் உப்பளங்கள் தற்போது எங்கெங்கு இயங்கி வருகின்றன ?

(இ) அவற்றினை நவீன முறையில் செயல்படுத்த அரசு மேற்கொண்டு வரும் நடவக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழ்நாட்டில் செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களின் கடற்கரைப் பகுதிகளில் உப்பளங்கள் இயங்கி வருகின்றன.

(இ) தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்ட உப்பு மற்றும் இரசாயனத் தொழில் வாரியம் நவீன முறையில் உப்பு உற்பத்திக்கான வழிவகைகளை ஆராய்ந்து அரசுக்கு அதன் பரிந்துரைகளை அவ்வப்போது வழங்கும்.

திரு. என் கிட்டப்பா : மாயூரம் தாலுக்காவிலுள்ள தரங்கம்பாடி கடற்கரையில் ஒரு உப்பளத்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

@ 653-ம் பக்கத்தில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எங்கெங்கே வாய்ப்பு வசதிகள் இருக்கின்றனவோ அவைபற்றி இந்த வாரியம் பரிசீலிக்கும்.

திரு. இ. எஸ். தியாகராசன் : செங்கற்பட்டு மாவட்டத்தில் எங்கெங்கே உப்பளங்கள் அமைத்திருக்கிறார்கள் என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்தெந்த இடங்கள் என்கிற விவரம் என்னிடத்தில் தற்போது இல்லை.

* 99 Q.—THIRU R. R. MUNUSAMI :
THIRU S. SANGUMUTHU THEVAR : will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the total quantity of salt produced in Thanjavur district during 1971–72; and

(b) the areas under salt production?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) உப்பு உற்பத்தி புள்ளிவிவரங்கள் ஆண்டு இறுதிக் கணக்குப்படி உப்புத்துறையில் வைக்கப்படுகின்றது. இதன்படி 1971-ம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் உப்பு உற்பத்தி 1,43,037 டன்கள் ஆகும்.

(இ) 6,604.17 ஏக்கர்.

திரு. ரா. ரா. முனுசாமி : துணைத் தலைவர் அவர்களே, உப்பு உற்பத்தி செய்கிறபோது திருநெல்வேலி மாவட்டத்தில் கூட தூத்துக்குடி துறைமுகப் பகுதியில் ஏராளமான முட்காடுகள் இருக்கின்றன. அங்கே தொழிலாளர்கள் உப்பு உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பகுதிகளில் முட்காடுகளை அகற்றி நிலத்தைச் சமப்படுத்தி அங்கே உப்பு உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்கு அந்த நிலத்தை அளிக்க நமது அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : குறிப்பாக, தூத்துக்குடி பகுதியில் திரு. குருநாத் என்கிற ஒரு நிபுணர் நியமிக்கப்பட்டு, அந்தப் பகுதியில் உப்பளங்கள் அமைப்பதற்கு என்ன என்ன சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்திருக்கிறார். அவருடைய அறிக்கையொன்று இருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Industries the total quantity of salt produced in our State, whether that quantity is sufficient for our State or there is possibility of sending some quantity outside?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே வெளி மாநிலங்களுக்கும் வெளி நாட்டுக்கும் அனுப்பக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், தமிழ் நாட்டில் மொத்தம் எவ்வளவு என்ற விவரம் என்னிடம் இல்லை.

இசைக் கருவிகள் உற்பத்தி

* 100 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் கூட்டுறவுத் துறையில் சங்கீதக் கருவிகள் செய்யும் தொழிற்சாலை ஒன்று இயங்கி வருகின்றதா?

(இ) அங்கு எந்தெந்த இசைக்கருவிகள் செய்யப்படுகின்றன?

(உ) இதற்கு கடன் அல்லது மானியத்தொகை ஏதேனும் அரசு வழங்கி வருகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம். இத்தொழிற்சாலை ஒரு தொழிற் கூட்டுறவுச் சங்கமாக இயங்கி வருகிறது.

(இ) அங்கு வீணை, தம்புரா, மிருதங்கம், தபேலா, கஞ்சிரா போன்ற இசைக்கருவிகள் செய்யப்படுகின்றன.

(உ) இச்சங்கத்திற்கு அரசு கடனும் மானியத்தொகையும் வழங்கியுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தமிழ்நாட்டின் பண்டைய இசைக் கருவியாகிய நாயனக் கருவி செய்வதற்கும் அரசு ஆக்கம் அளிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே போதுமான அளவு இருக்கிறது. கூட்டுறவுச் சங்கம் செய்ய முன்வருமானால் அதற்கு உதவி செய்யலாம்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : சிதார், புல்புல்தாரா போன்ற கருவிகளும் அங்கே தயாரிக்கப்படுகின்றனவா? அவைகள் அங்கே தயாரிக்கப்படவில்லையென்றால் இனிமேலாவது தயாரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எது எது வியாபாரம் நடக்குமோ அதையெல்லாம் அங்கே செய்வார்கள். இப்பொழுது அங்கே ஆர்மோனியம், சுருதிப் பெட்டி, மோர்சிங், புல்புல்தாரா போன்ற இசைக் கருவிகளை வாங்கி விற்பனை செய்கிறார்கள். வீணை, தம்புரா, மிருதங்கம், தபேலா, கஞ்சிரா போன்றவைகளை அங்கே அவர்கள் உற்பத்தி செய்கிறார்கள்.

கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள்

* 101 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொழில் கூட்டுறவு துறையில் உ.பாக்டரிகள் தற்போது எத்தனை உள்ளன?

(இ) அவைகளில் லாபத்தில் நடப்பவை எத்தனை?

[1972 ஆகஸ்ட் 12

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழ்நாட்டில் தற்சமயம் ஒன்பது கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன.

(இ) இவைகளில் எட்டு லாபத்தில் நடக்கின்றன. ஒன்று இன்னும் உற்பத்தி துவங்கவில்லை.

திரு. கே. ஏ. வகாப் : துணைத் தலைவரவர்களே, இந்த கூட்டுறவு தேயிலை தயாரிக்கும் தொழிற்சாலையில் தயாரிக்கும் தேயிலை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா? ஏற்றுமதி செய்யப்படுகிறதானால் அதன் தரத்தை உயர்த்தி இன்னும் அதிகமான ஏற்றுமதி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அங்கு தயாரிக்கப்படும் தேயிலை நல்ல தரமாக இருப்பதனால்தான் அந்தத் தொழிற்சாலைகள் லாபத்தில் நடைபெறுகின்றன. இந்தத் தேயிலை கொச்சின் ஹார்பர் வழியாக ஏற்றுமதிக்கு அனுப்பப்படுகிறது.

திரு. எம். தேவராசன் : துணைத் தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இன்னும் புதிதாக எத்தனை பகுதிகளில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இன்னும் அதிகமான கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளைத் தொடங்க வேண்டுமென்று ஒரு மேற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. அவைகளைத் தொடங்குவதற்கு எராளமாக உதவி வேண்டுமென்று 'டீ போர்டை' வற்புறுத்தி வருகிறோம். அவர்கள் அளிக்கின்ற உதவியைப் பொறுத்து இதில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த டீ பாக்டரிகள் தற்போது எங்கெங்கே உள்ளன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீலகிரி மாவட்டத்தில்.

திறந்த வெளிச் சிறைகள்

* 102 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திறந்த வெளிச் சிறைகள் அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தற்பொழுது தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நீலகிரித் தோட்டத்திலும், (2) கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூரிலும், (3) சேலத்திலும் திறந்த வெளிச்சிறைச்சாலைகள் உள்ளன.

1972 ஆகஸ்ட் 12]

இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கை தாலூகாவில் உள்ள முத்துப்பட்டி கிராமத்திலும், செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள வேங்கடமங்கலம் கிராமத்திலும், திறந்தவெளிச்சிறைச்சாலைகள் அமைக்க தமிழ்நாடு சிறைத்துறை தலைவர் செயற்குறிப்புகள் அனுப்பியுள்ளார். அவைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம்

* 103. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம்—மதுரை சாலையை இணைக்கும் வகையில் கரூருக்கு அருகில் அமராவதி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் ஒன்று அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டம் 1972-73-க்கான தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு தேசிய நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு எவ்வளவு என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 12¼ லட்சம் ரூபாய்.

வேலூர்—திமிரி மலைப்பாதை

* 104. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 28-10-70 அன்று நடந்த வட ஆர்க்காடு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், வேலூரிலிருந்து பாலமதி வழியாக திமிரி வரையில் அமைந்திருக்கும் புதிய மலைப்பாதையைச் செப்பனிட ரூ. 3,75,000 விலை ஒதுக்கீடு செய்யும்படி அரசினரைக் கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்த முடிவு என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) அது அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : துணைத் தலைவரவர்களே, இந்த சாலை அமைக்கப்படுவது பற்றி பரிசீலனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள்.

அதை உடனடியாக முடிப்பதற்கு ஏதாவது செயற்குறிப்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த சாலை மலைப் பாதை ஆகும். இதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரும் டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சிலும் சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பாதை பஸ் ரூட் அல்ல. இந்தப் பாதை 8 கிலோ மீட்டர். ஒரு கிலோ மீட்டர் இன்னும் அமைக்கப்பட வேண்டும். அது முடிக்கப்பட பஞ்சாயத்து யூனியன் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இதுபற்றி பரிசீலனை செய்ய தலைமைப் பொறியாளருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அறிக்கை கிடைத்ததும் துரிதமான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, அந்தப் பாதையில் பஸ் போக்குவரத்து இல்லையென்றாலும், பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஏற்கெனவே 6 லட்சம் ரூபாய் செலவாகும் என்று கேட்டு, கலெக்டர் அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறார். அரசாங்கம் அதை ஏற்றுக்கொண்டால், அங்கே பஸ் விடுவதற்கு அதிகாரிகள் தயாராக இருக்கிறார்கள். எனவே, அரசாங்கம் இதில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த சாலைக்கு 3¼ லட்சம் ரூபாய் செலவாகும் என்று தலைமைப் பொறியாளர் தெரிவித்திருக்கிறார். அதை மறுபரிசீலனை செய்வதற்காக திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. அறிக்கை வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

திருப்பூர் கோட்ட அலுவலகம்

* 105. **வினா—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வறட்சிப் பகுதியாகிய பல்லடம் தாலுக்காவில் குளம் குட்டைகள் அமைப்பதற்காக பணியாற்றிய P.A.P. Assistant Engineer. திருப்பூர் டிவிஷனை பொங்கலூர் டிவிஷனுக்கு மாற்றப்பட்டதாகக் கூறப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

Promction for Draftsmen

* 106 *Q.*—THIRU R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Second Grade Draftsmen in the Public Works Department who were transferred from the former

Travancore-Cochin State are debarred from promotion as Grade I Draftsmen ;

(*b*) whether as per G.O. Ms. No. 183, dated 1st February 1972 they are eligible for the promotion; and

(*c*) if so, the steps taken for promoting them?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இவ்வினாவிற்கு இடமில்லை.

வைகை அணைக்கட்டுத் தொழிலாளர்கள்

* 107. **வினா—திரு. நா. வெ. குருசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை அணைக்கட்டுப் பகுதியில் உள்ள தொழிலாளர்களில் பலபேர் இன்னும் தினக்கூலி வாங்கும் ஊழியர்களாகவே உள்ளார்களா?

(இ) ஆம் எனில், அவர்களை நிரந்தர ஊழியர்களாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இப்பொருள் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

Manufacture of Rotary Drills

* 108 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to manufacture rotary drills for the purpose of minor irrigation in this State; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம், ஐயா.

(இ) சென்னை அரசினர் வேளாண்மைப் பொறியியல் பணிக்களரியில் ரூ. 36 இலட்சம் செலவில் 12 மோதல் அதிர்ச்சி வகை துளையிடு கருவிகளும் (Percussion Drills) 3 ரோட்டரி துளையிடு கருவிகளும் Rotary Drills) தயாரிப்பதற்கான அடங்கல் செயற்குறிப்பு ஒன்றை வேளாண்மைத் துறை இயக்குநர் பணிந்தனுப்பியுள்ளார். மேற்சொன்ன செயற்குறிப்பு அரசின் தற்போதைய நிதிநிலை காரணமாக, 1972 அக்டோபர் வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது. இது பின்னர் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

Agricultural Engineering Workshop

*109 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to expand the Agricultural Engineering Workshop at Washermanpet, Madras; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) இந்தப் பணிக்களரியில் கூடுதல் ஆட்களைக் கொண்டும், இயந்திரங்களைக் கொண்டும், விரிவுபடுத்தவும், 12 பேர்க்குஷன் டிரில் கருவிகளையும், 3 ரோட்டரி டிரில் கருவிகளையும் தயாரிப்பதற்காகவும் ரூ. 40.87 லட்சம் செலவில் அடங்கல் திட்டமொன்றை வேளாண்மைத் துறை இயக்குநர் பணிந்தனுப்பியுள்ளார். தற்போதைய நிதி நிலை காரணமாக இத்திட்டம் 1972 அக்டோபர் வரை ஒத்திப் போடப்பட்டுள்ளது. இதன் பிறகு இது ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

பருத்தி சாகுபடி

*110. வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு பல்லடம் வட்டத்தில் எத்தனை ஏக்கர் நிலத்தில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது?

(இ) அதற்கு அரசாங்கம் என்ன உதவிகள் அளித்துள்ளது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ): தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ் பல்லடம் வட்டத்தில் பருத்தி பாசனப் பயிராக 31,220 ஏக்கரிலும் மானாவாரிப் பயிராக 21,720 ஏக்கரிலும் பயிரிடப்பட்டு வந்தது. 1—8—1971 முதல் மத்திய அரசின் முழு ஆதரவுடன் பருத்தி தீவிர அபிவிருத்தி திட்டம் செயல்படத் தொடங்கி, மேற்குறிப்பிட்ட 31,220 ஏக்கர் இப்புதிய திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. எனவே, பல்லடம் வட்டத்தில் தற்போது தீவிர சாகுபடித் திட்டத்திற்குப் பதிலாக மத்திய அரசு ஆதரவுடன் பருத்தி தீவிர அபிவிருத்தித் திட்டம் செயல்பட்டு வருகிறது. மானாவாரி நிலமான 21,720 ஏக்கர்களில் மாநில பருத்திப் பெருக்குத் திட்டம் செயல்படுகிறது.

(இ) இப்புதிய திட்டத்தின் கீழ் பாசன பருத்திப் பயிருக்குக் கீழ்கண்ட அளவுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன:—

1 பூச்சி மருந்துகட்கு	முதல் மூன்று மருந்து தெளிப்புகளுக்கு 25 சதவிகிதம் பின்னர் வரும் தெளிப்புகளுக்கு 12 தெளிப்பு வரை 33-1/3 சதவிகிதம்.	
2 சுளைக்கொல்லி மருந்து கட்கு.	33-1/3 சதவிகிதம்.	
3 விசைத் தெளிப்பான்களுக்கு.	தெளிப்பான் ஒன்றுக்கு 25 சதவிகிதம் ரூபாய் 200-க்கு மேற்படாமல்.	
4 செயல்முறை விளக்கங்களுக்கு.	அரை ஹெக்டேர் பாத்தி ஒன்றுக்கு தேவையான விதை, உரம், பூச்சி மருந்து, முதலிய பொருள்களுக்கு முழு விலையாக ரூ. 200 மட்டும்.	

*111. வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் பருத்தி தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் உள்ள பகுதிகளுக்கு எண்ட்ரின், செமின் போன்ற மருத்துகள் சரிவர கிடைக்காமல் பருத்தி சாகுபடி பாதிக்கப்பட்டது பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) பருத்தி சாகுபடி பாதிக்கப்பட்டதாக ஏதும் தகவல் இல்லை. பூச்சிக் கொல்லி மருந்துகள் விநியோகிப்பதில் கோவையில் செயல்பட்டு வரும் தீவிர சாகுபடித் திட்டத்திற்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. இத்திட்ட நடைமுறையில் பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கான தேவை முக்கியமாக எண்ட்ரின், செவின் மருந்துகளுக்கு எதிர்பாராத அளவுக்கு அதிகமாகி உள்ளது. மேற்கண்ட மருந்துகள் தயாரிக்க தேவையான மூலப் பொருள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டி இருப்பதால் தேவையான மூலப்பொருள் கிடைக்கவில்லை. ஆதலால் விவசாயிகளுக்கு தேவையான அளவு வழங்க முடியவில்லை. ஆயினும் மேற்கூறிய மருந்துகட்கு ஈடாக ஈதைல் பாரத்தின், டி.டி.டி. 50 சத வீதம் போன்ற மருந்துகளை தேவையான அளவிற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இப்போது நம்முடைய பஞ்சாலைகளில், நெட்டிழைப் பருத்தியில்தான் அதிக லாபம் கிடைக்கிறது என்று சொல்

கிறார்கள். ஆகவே, பருத்தி சாகுபடிக்குத் தேவையான பூச்சிக்கொல்லி மருந்துகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வது போல், நெட்டிழைப் பருத்தி விதைகளையும் இறக்குமதி செய்து, உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மூலக் கேள்விக்கும், அங்கத்தினர் கேள்விக்கும் சம்பந்தம் இல்லாவிட்டாலும், அவருடைய கருத்து அரசின் முயற்சியில் இருந்து வருகிறது.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, எண்ட்ரின், செவின் மருந்துகள் பருத்தி சாகுபடிக்கு நல்லது என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆனால் பிளாக் டெவலப்மெண்ட் அதிகாரிகள் ஸ்டாக் இல்லை, நல்லதல்ல என்று சொல்கிறார்கள். மதுரையில் சில இடங்களில் இந்த மருந்துகள் கிலோ 17½ ரூபாய்க்கு தனிப்பட்ட வியாபாரிகளால் விற்கப்படுகிறது. ஆனால் அரசாங்க விலை 10 ரூபாய் தான். தனிப்பட்டவர்களிடம் இந்த மருந்து வகைகள் கிடைக்கின்றன. அரசாங்க அலுவலகங்களில் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். அதன் மர்மம் என்ன என்று அரசாங்கம் அறியுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அந்தவிதமான குறைகள் இதுவரை அரசுக்கு வரவில்லை. அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

டிராக்டர்கள் வழங்கல்

* 112. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத் தொழில் கழகம் மூலம் 1971-72-ம் ஆண்டில் டிராக்டர்கள் கோரி எத்தனை பேர் பதிவு செய்து கொண்டார்கள்?

(இ) அவர்களில் எத்தனை பேருக்கு டிராக்டர்கள் கொடுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) 756 பேர்கள் பதிவு செய்துகொண்டார்கள்.

(இ) 616 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த டிராக்டர்கள் எந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : விவசாயிகளின் விண்ணப்பங்களின் தகுதியைப் பார்த்து வழங்கப்படுகின்றன.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, வெளிநாடுகளில் இருக்கின்ற உறவினர்களால் அன்பளிப்பாக வழங்கப்படும் டிராக்டர் போன்ற விவசாயக் கருவிகளை பெறுவதற்கு வழிவகை ஏதாவது இருக்கிறதா? அப்படியானால் அது எந்த வகையில் நிறைவு செய்யப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அப்படி ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி வருமானால் அது பற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. த. சோனையா : டிராக்டர்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு முழு வானியத் தொகை அடிப்படையில் அளிக்கப்படுகிறதா? அதில் திரிபுவனம் போன்ற ஒன்றிரண்டு ஒன்றியங்களுக்கு அளிக்கப்படவில்லையே, அமைச்சர் தலையிட்டு இதுபோல டிராக்டர்கள் வழங்கப்படாத ஒன்றியங்களுக்கு வழங்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அது பற்றி தனிக் கேள்வி போடவும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : நமது மாநிலத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திற்கும் டிராக்டர்கள் வழங்கப்பட்டுவிட்டனவா? வழங்கப்படாமல் இருந்தால் இனியேனும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கொடுக்காதிருந்தால் அது பற்றி கவனிக்கப்படும்.

Bus taken over by Government

* 113 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state whether the Government have paid compensation for the take over of buses from the private bus owners for the period 1970–71?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1970-71-ஆம் ஆண்டில் தனியார் பேருந்துகள் எதையும் அரசு நாட்டுடைமையாக்கவில்லை. எனவே இழப்பீடு தருவது பற்றிய வினா எழவில்லை.

புறநகர்ப் பேருந்துகளிலிருந்து வருமானம்

* 114. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புறநகர்ப் பகுதிகளில் ஓடுகின்ற அரசுப் பேருந்தின் மூலம் 1970-71-ஆம் ஆண்டில் அரசுக்கு கிடைத்த வருமானம் எவ்வளவு?

[1972 ஆகஸ்ட் 12

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : புறநகர் வழித்தடங்களில் பேருந்து பணிகளை இயக்கியதன் மூலம் 1970-71-ஆம் ஆண்டில் வசூலான மொத்தத் தொகை ரூபாய் 67,57,975 ஆகும்.

திரு. என். கிட்டப்பா : இந்தத் தொகை அதற்கு முந்திய ஆண்டை விட குறைவானதா, அதிகமானதா என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்த விவரம் இல்லை.

Nagercoil–Trivandrum buses

* 115 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) the total number of buses operated by the Tamil Nadu Government between Nagercoil and Trivandrum; and

(*b*) whether night services are to be introduced in this route?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை, நாகர்கோயில்—திருவனந்தபுரம் வழித்தடத்தில் 13 பேருந்துப் பணிகளை நடத்தி வருகிறது. நாகர்கோவில்—திருவனந்தபுரம் வழித்தடத்தை இணைக்கும் கன்னியாகுமரி—திருவனந்தபுரம் வழியே செல்லும் ஒரு பேருந்துப் பணி இதில் அடங்காது.

(இ) இல்லை.

அரசு மருத்துவர்களின் குடியிருப்புகள்

* 91. வினா.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

டாக்டர்கள் தாங்கள் பணிபுரியும் அரசாங்க மனைகளிலிருந்து குறிப்பிட்ட தூரத்திற்குள் தங்கள் குடியிருப்புகளை வைத்துக்கொள்ள வேண்டுமென்ற விதி ஏதேனும் ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தமிழ்நாடு மருத்துவ நடைமுறைச் சட்டத்தின்படி, அரசினர் மருத்துவ மனைகளிலுள்ள மருத்துவ அதிகாரிகள் தங்களுக்கு அரசாங்கக் குடியிருப்பு இல்லங்கள் அளிக்கப்படாவிட்டால், தங்கள் வசதிப்படி நோயாளிகளுக்கு பகலிலோ, இரவிலோ மருத்துவ உதவி அளிக்கத் தயாராக மருத்துவ மனைகளுக்கு அருகிலேயே குடியிருக்க வேண்டும்.

1972 ஆகஸ்ட் 12]

திரு. என். கிட்டப்பா : சில குறிப்பிட்ட இடங்களில் டாக்டர்கள் மருத்துவ மனைக்கு நீண்ட தூரத்திற்கு அப்பால் குடியிருந்து வருவதால் மருத்துவ மனையில் அவசரமாக கவனிக்கப்பட வேண்டிய கேஸ்கள் பாதிக்கப்படுகிற நிலை ஏற்படுகிறது. ஆகவே மருத்துவ மனைக்கு அருகிலேயே குடியிருக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கூடுமான வரையில் மருத்துவ மனைக்கு அண்மையிலேயே டாக்டர்கள் குடியிருக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் மருத்துவ மனைக்கு அருகாமையில் போதுமான இட வசதி இல்லாத காரணத்தினால் அவர்கள் தூரத்தில் இருக்கிறார்கள். மருத்துவ மனைக்கு அருகிலேயே டாக்டர்களுக்கு வீடுகள் அரசாங்கத்தில் கட்டித்தர வேண்டும் என்கிற கொள்கை இருக்கிறது. சென்ற ஆண்டு ஏற்பட்ட யுத்த நெருக்கடி காரணமாக நிதிவசதிக் குறைவினால் அந்தக் கொள்கையை பூரணமாக நிறைவேற்ற முடியவில்லை. நிதிவசதி பெருகப் பெருக வீடுகள் கட்டப்படும்—மருத்துவ மனைகளும், டாக்டர்களும் நெருங்கி வரும்படிச் செய்ய முடியும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

Television Unit for Medical College in City.

* 92 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to set up Closed Circuit Television set in the City Medical College to improve training and educational methods; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) சென்னை அரசு பொது மருத்துவ மனையில் குறிப்பிட்ட ஒரு தொலைவிற்குள் செயல்படக்கூடிய தொலைக் காட்சிப் படப் பிரிவு (closed circuit Television Unit) ஒன்று அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டு, மருத்துவக் கல்வி இயக்குநரிடமிருந்து செயற்குறிப்பு ஒன்று அரசுக்கு வந்துள்ளது. இது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1972-73-ம் ஆண்டு நிறைவேற்றப்படும். இந்தத் தொலைக் காட்சிப் படப்பிரிவை அமைப்பதன் மூலம், அறுவை சிகிச்சைக் கூடத்தில் செய்யப்படும் அறுவை சிகிச்சையின் தொழில் நுட்ப உத்திகள், விவரங்கள் முழுவதையும் தொலைக்காட்சிப் படத்திரையில் தெளிவாகக் காண முடியும். அறுவை சிகிச்சைக் கூடத்திலிருந்து தொலைவில் உள்ள விரிவுரை நடைபெறும் அறையில் அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர் கூறும் விளக்கங்களைத் தெளிவாகக் கேட்க இயலும்.

[1972 ஆகஸ்ட் 12

Documentary films on Public Health.

* 93 Q.—THIRU A. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal with the Government to construct cinema theatres in Government hospitals in order to screen documentary films on Public Health; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) தற்சமயம் எதுவும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மதுரையில் நடமாடும் கண் சிகிச்சைப் பிரிவு

* 94 **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் நடமாடும் கண் வைத்தியசாலை செயல்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் வேலைத் திட்டம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) இந்தக் கேள்வி சில காலத்திற்கு முன் எழுப்பப்பட்டுள்ளது. அப்போதிருந்த நிலவரப்படி சட்டப் பேரவையின் முன் விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களது கண் சிகிச்சை முகாம் திட்டப்படி நடமாடும் வைத்தியசாலை எல்லா மாவட்டங்களிலும் செயல்படுமா? இதன் வேலைத் திட்டம் என்ன? எத்தனை ஆண்டுகள் இது நடைபெறும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தொடங்கப்பட்டிருக்கிற முயற்சி எந்த அளவுக்கு நிதி ஒதுக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு விரிவுபடுத்தப்பட்டு செயல்படும். முன்பு நடமாடும் கண்சிகிச்சை மருத்துவ மனை சென்னையில் ஒன்றும், மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் ஒன்றும் நடைபெற்று வந்தது. அவர்கள் இருபது அல்லது இருபத்து நான்கு காம்புகள் வரை நடத்தி சிகிச்சை வழங்கினர். மேலும் அதனை விரிவுபடுத்த வேண்டுமென்ற முறையில் மதுரையில் 3 நடமாடும் கண் மருத்துவ குழுக்களும், சென்னையில் 2 நடமாடும் மருத்துவக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டு தமிழ்நாடு முழுவதும் கூடுமானவரையில் எல்லாப்

@ 654 -ம் பக்கத்தில் மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1972 ஆகஸ்ட் 12]

பகுதிகளிலும் பணியாற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு அதிகம் செலவாவதால் பொதுமக்களிடம் இருந்தும், பல்வேறு நிறுவனங்களிடம் இருந்தும், பல்வேறு தொழிற்சாலை, கூட்டுறவு அமைப்புகள், சிமெண்ட், சர்க்கரை போன்ற ஆலைகளில் இருந்தும் நிதி உதவி கோரப்பட்டிருக்கிறது. எந்த அளவு ஒத்துழைப்புக் கிடைக்கிறதோ அந்த அளவு முழுப் பணியும் நிறைவேற்றப்படும்

திரு. எம். தேவராசன் : சிகிச்சை பெறுகிறவர்களுக்கு கண்ணாடி போட்டுக் கொள்ள வேண்டுமென்றால் அந்தக் கண்ணாடி இலவசமாக அளிக்கப்படுகிறதா? அல்லது கட்டணம் கண்ணாடிக்கு வசூலிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கண்ணாடி போடுவது இரண்டு கட்டத்தில். ஒன்று கண்ணில் படலம் ஏற்பட்டு, அறுவைச் சிகிச்சை மூலம் பார்வை அளிக்கிறபோது. அதுபோல கண் சிகிச்சை பெற வருகிறவர்கள் பெரும்பாலும் ஏழைகளாக இருப்பதால் அவர்களுக்கு இலவசமாகவே கண் அறுவை சிகிச்சை முடிந்தவுடன் இலவசமாகக் கண்ணாடி வழங்கப்படுகிறது. வேறு சிலருக்கு—கண் பார்வை குறைவு ஏற்பட்டு—அறுவை சிகிச்சை தேவையில்லை—அடிக்கடி டெஸ்ட் பண்ணி கண்ணாடி போட்டுக்கொண்டால் போதுமானதாக இருக்கிற போது—எந்த வகை கண்ணாடி போட்டுக்கொள்ள வேண்டும் என்பது டெஸ்ட் செய்யப்பட்டு குறிப்பு எழுதித் தரப்படுகிறது. அவர்கள் தமது சொந்தச் செலவில்தான் கண்ணாடி வாங்கிப் போட்டுக்கொள்ள வேண்டும்.

திரு. கா. வேழவேந்தன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சென்னையில் 2 நடமாடும் மருத்துவக் குழுக்களும், மதுரையில் 3 குழுக்களும் இருப்பதாகச் சொன்னார்கள். சென்னையில் சிறந்த கண் மருத்துவ மனை ஒன்று இருக்கிறது. இதே போல் மதுரையிலும் இருக்கிறது. அப்படி இருக்கிற போது இங்கேயே இந்த நடமாடும் யூனிட்டுகளை வைக்காது மாவட்ட ரீதியில் யூனியன் சென்டர்களில் எல்லாம் இந்த வசதி ஏற்படத்தக்க வகையில் எதிர்காலத்திலாவது ஏதாவது ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அங்கத்தினர் எழுப்பிய கேள்வியின் நோக்கப்படி இப்போதுள்ள முறையில் தமிழ்நாடு முழுவதும் நிறைவேற்றப்பட்டுத்தான் வருகிறது. ஒரு முகாம் என்று ஏற்படுத்தி நூற்றுக்கணக்கான பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்கிறபோது அவர்கள் ஒரு ஏழு நாட்களாவது அங்கேயே தங்கிச் சிகிச்சை பெறவேண்டியிருக்கிறது. அப்படியின்றி வெளியில் அவர்களை அனுப்பிவிட்டால்—அவர்களது பொருளாதார வசதிக் குறைவினால் சரியாக கவனிக்காது போகிறபோது வேறு சில தொந்தரவுகளுக்கு அவர்கள் உள்ளாக நேரிடும் என்று—அறுவை சிகிச்சை பெறுகிறவர்கள் அந்த இடத்திலேயே ஏழு நாட்களாவது தங்கிப் போக வகை செய்யப்படுகிறது.

அப்படி அவர்கள் தங்குவதனால் அதிக அளவில் டாக்டர்கள், உதவியாளர்கள் அங்கே இருக்கவும் வேண்டியிருக்கிறது. ஆகவேதான் சென்னையில் இந்தக் குழுக்கள் இரண்டு இருந்தாலும் ஒரு தாலுக்கா, இரண்டு தாலுக்காவுக்கு ஒரு இடத்தில் முகாமிட்டு அந்தப் பகுதியில் உள்ள எல்லோருக்கும் சிகிச்சை அளிக்கிறார்கள். சென்னையில் உள்ள இரண்டு குழுக்கள், சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு மாவட்டங்களையும், வடாற்காடு, தருமபுரி மாவட்டங்களையும், மதுரையில் உள்ள மூன்று குழுக்கள் தஞ்சை, திருச்சி, கிழக்கு இராமநாதபுரத்தையும், கோயம்புத்தூர், நீலகிரி, சேலத்தையும், மதுரை, மேற்கு இராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரியையும் கவனித்துக் கொள்ளும் வகையில் திட்டமிடப்பட்டு இருக்கிறது.

Leprosy Hospital at Colachel.

* 95 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that financial assistance is being given to the Colachel Leprosy Hospital in Kanyakumari district; and

(*b*) if so, the details thereof for the years 1970–71–72?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) 1970-71-ம் ஆண்டில் ரூ. 54,054-ம் 1971-72-ம் ஆண்டில் ரூ. 51,894-ம் மொத்த அரசு மானியமாக கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சார்லஸ் பீஸ் நினைவு மருத்துவ மனைக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி(*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதை குறிக்கும்.]

(2) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) 1972-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1972-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை நான் இந்தப் பேரவையின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) நான்காவது திருத்த சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்புக் கட்டுதல்) நான்காவது திருத்த சட்ட முன்வடிவை நான் இந்தப் பேரவையின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இச் சட்ட முன்வடிவை அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

(இ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ்நாடு 1972-ம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவை நான் இந்தப் பேரவையின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இச் சட்ட முன்வடிவை அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

(3) முந்தைய நாள் பேரவை நடவடிக்கை குறித்து முதலமைச்சரின் விளக்கம்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நேற்று மாலை அவை நடந்துகொண்டிருந்தபொழுது டெல்லிக்குச் செல்லுகின்ற—தாமரைத் திரு பதக்கம் வாங்குவதற்காக டெல்லிக்குச் செல்லுகின்ற—விடுதலை தியாகிகளை வழி அனுப்பி வைப்பதற்காக நானும் கல்வி அமைச்சரும், பின்தங்கிய நல அமைச்சரும் புகை வண்டி நிலையத்திற்குச் சென்றிருந்தோம். சென்றிருந்த நேரத்தில் இங்கு பேசிக்கொண்டிருந்த நண்பர் துரைமுருகன் அவர்களுடைய பேச்சைத் தொடர்ந்து சட்டசபையிலே ஏற்பட்டுவிட்ட சிறு விரும்பத்தகாத நிகழ்ச்சிக்கு நான் உள்ளபடியே என்னுடைய பெரு வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் வாக்கு வாதங்களுக்கிடையே நண்பர் ரா. ரா. முனுசாமி அவர்கள் தங்களுடைய இருக்கையில் உட்காருங்கள் என்று சொல்வதற்கு ஒரு தகாத வார்த்தையை சொன்னார் என்றும் நான் கேள்விப் பட்டேன். அது நாம் காத்து வருகின்ற இந்த அவையினுடைய மரபை நிச்சயமாக குலைக்கும்—குலைக்கிறது என்பதை நன்றாக உணர்கிறேன். அதற்காக நண்பர் முனுசாமி அவர்கள் தன்னுடைய வருத்தத்தை தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்று தங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நடந்த நிகழ்ச்சிகளுக்கு வருத்தம் தெரிவிக்கிறேன்.

(4) நடைமுறைக் கேள்வி.

நீக்கப்பட்ட சில பகுதிகளை மீண்டும் நடவடிக்கைக் குறிப்பில் சேர்ப்பது குறித்து.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I would like to raise a point of Order. The point of Order is under Rule 83 (1) which states as follows :—

" Any Member may at any time submit a point of order for the decision of the Speaker but in doing so shall confine himself to stating the point."

It is made easy for me by the kind reference made by the Hon. Chief Minister. Yesterday after the walk out, we understand from the papers to-day (I had no occasion to go and refer to official proceedings), reference to Communist Party and the Communist Party receiving money from Delhi for toppling the

D.M.K Government and the subsequent exchanges have been expunged. I understand that under " expunction " your powers are very well defined. Under Rule 85 the Speaker, after having called the attention of the House to the conduct of a Member who persists in irrelevance or in tedious repetition either of his own arguments or of the arguments used by the other Members in debate or is speaking for the purpose of obstructing business, may direct him to discontinue his speech. Though the Hon. Deputy Speaker asked him not to persist, the hon. Member went on persisting and when he was challenged he must prove it if he is going to make such an allegation he said proof can be given if the matter is referred to Supreme Court Judge. At that point some exchanges were thrown at us by the Food Minister and then the Hon. Minister for Health gave a healthy ruling that if an allegation was made by a Member and if the responsible leader of the party to whom it is addressed says that it is not true, then all these things will go (interruption)—perhaps I may be wrong. He said that then only my version will stand. I say, Sir, that such a ruling will create an extra-ordinary position. I can make all sorts of allegations, foul allegations against the Minister. That will go into the reports and if the concerned Minister will say that it is not true, then according to what the Hon. Health Minister said, the subsequent statement by the Minister will stand. I do not know how this is correct. It will lead to an untenable position. It has never happened in the history of legislature.

In the matter of ' expunction ' I did not have the opportunity to look into our books but only into Lok Sabha rules. Rules 380 of the Lok Sabha Rules says as follows :—

" If the Speaker is of opinion that words have been used in debate which are defamatory or indecent or unparliamentary or undignified, he may, in his discretion, order that such words be expunged from the proceedings of the House. "

There is also very similar provision in our rules. I am just narrating this to help you. The very same point was raised before Lok Sabha and the Speaker has said that if a particular member goes on repeating ' I am helpless and the only thing I can do is to expunge the concerned portions '. He did not want the spell it

[Thiru K. T. K. Thangamani] [1972 ஆகஸ்ட் 12

out further. It has come in for editorial comments and there was a very good editorial in 'Indian Express' saying how the Speaker is helpless and how when a particular Member does not want to help the proceedings of the House the only alternative for the Speaker is to name him and suspend him. That is the extreme punishment that can be imposed. So, Sir, I submit that after the words have been expunged, we stand by precedents. When there was a reference to Kamaraj putting some huge money in Hyderabad bank it was expunged. At the instance of the Chief Minister, it was re-opened and the expunged portion was included in the proceedings, the next day. The Chief Minister has made a reference to what happened yesterday and which has been expunged. I submit, Sir, from the precedents, that the expunged portion may be restored.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, I want to clarify the position. The learned Member quoted something from the Lok Sabha Rules . . .

THIRU K. T. K. THANGAMANI: There is a corresponding rule in our Rules also, giving powers to the Speaker. Identical words have been adopted here also.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: No; not identical words. I am afraid the hon. Member is mistaken. Our Rule says that even if there is anything irregular, if somebody talks against the rules, even then it could be expunged. My learned Friend should see the difference. Anything irregular also can be expunged according to our Rules. Therefore, we are required to maintain a higher standard than Lok Sabha Rules. If anybody says anything against the Rules, that can be expunged. We have put it so purposely.

டாக்டர் எச். வி. ஹாண்டே: சார், நேற்று மாலையில் மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்கள் தலைமை தாங்கிய நேரத்திலே நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி நான் இப்பொழுது பேசவரவில்லை. ஏனென்றால் பல விஷயங்களை எக்ஸ்பஞ்ச் செய்திருக்கிறார்கள். நம்முடைய அவையிலே விவாதங்கள் சரியான முறையிலே நடக்க வேண்டுமென்று சொல்லி, நாம் நல்ல முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற முறையிலே, நான் இப்பொழுது நம்முடைய விதிகள் 83 (1) படி சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். நேற்று மாலையில் நம்முடைய

1972 ஆகஸ்ட் 12] [டாக்டர் எச் வி. ஹாண்டே]

அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நேற்று கனம் உறுப்பினர் அவர்கள் ஒரு விஷயத்தைச் சொன்னார்கள், ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டிற்கு எந்தவிதமான அடிப்படை ஆதாரங்களும் இல்லாமல் ஒரு சிறிய கடிதம்கூட வைத்துக்கொள்ளாமல் பேசினார்கள். நேற்றைய தினம் விவாதம் காரசாரமாக நடக்க வேண்டுமென்ற ஆசை எங்களுக்கு இல்லை, எல்லோரும் நல்ல முடிவே தான் இருந்தோம். There was no MALA FIDE on our part. ஆனால் அமைசர் அவர்கள் சொல்லும் பொழுது, இந்தமாதிரி நிலைமை வந்தால் கட்சியைச் சேர்ந்த யாராவது, கம்யூனிஸ்டு கட்சியாக இருந்தால் அதனுடைய தலைவரும், சுதந்திராக் கட்சியாக இருந்தால் அதனுடைய தலைவரும், அதை மறுத்துவிட்டால் அதுவே போதும் என்று சொன்னார்கள். இப்படி பயங்கரமான ஒரு நிலைமை ஏற்பட்டால் அதனுடைய விளைவுகள் எப்படி ஏற்படும் என்பதை நாம் பார்க்க வேண்டும். இப்படி ஒரு ரூலிங் கொடுத்துவிட்டால், நாளைக்கு ஒவ்வொரு உறுப்பினரும் அப்படிப் பேசுவார்கள், பிறகு மறுத்துவிட்டால் போகிறது என்று பேசுவார்கள். ஆகவே, அது சரியல்ல என்பதைச் சொன்னோம். மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்கள் முடிவாக ஒன்றும் சொல்லவில்லை. பேசுகிற நேரத்திலே எக்ஸ்பஞ்ச் செய்யவில்லை. நாங்கள் அவர்கள் அப்படிச் சொன்னது தப்பு என்று சொன்ன நேரத்திலே . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: டாக்டர் ஹாண்டே அவர்கள் கொஞ்சம் தாமதமாக சபைக்கு வந்தார்கள். அது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் வருத்தம் தெரிவித்து விட்டார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: சபாநாயகராக இருந்தாலும், சேர்மனாக இருந்தாலும் எப்படி இதைப்பற்றி அவருடைய ரூலிங் இருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன் என்றால்—இதைப்பற்றி உடனடியாக ரூலிங் கொடுத்தால் நல்லதாக இருக்கும் என்று நினைக்கிறேன்—நாங்கள் நேற்று வெளிநடப்புச் செய்ததற்குப் பிறகு எக்ஸ்பஞ்ச் செய்திருக்கிறார்கள், நான் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால் யார் பேசினாலும் எக்ஸ்பங்க்ஷன் வேண்டாம், பொது மக்கள் நன்றாகத் தெரிந்து கொள்ளட்டும், கண்ணியக்குறைவாக நாங்கள் நடந்து கொண்டிருந்தால், அல்லது எதிர்க்கட்சிகள் சரியாக பேசவில்லையென்றாலும், அல்லது ஆளுங்கட்சி சரியாகப் பேசவில்லையென்றாலும் அதைப் பற்றியெல்லாம் பொதுமக்கள் தெரிந்து கொள்ளட்டும். இதற்கு லோக் சபா சபாநாயகர் திரு. தில்லான் அவர்கள் கொடுத்திருக்கிற தீர்ப்பே நல்லதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அது நம்முடைய சபாநாயகர் அவர்

களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் என்று நான் கருதுகிறேன்.

நம்முடைய கனம் அமைச்சர் அவர்கள் சொல்லும்பொழுது பாராளுமன்றத்திற்கும் நம்முடைய சபைக்கும் வித்தியாசம் இருக்கிறது என்று சொன்னார்கள், இங்கே அன்பார்லிமெண்டரி வார்த்தைகளை யூஸ் பண்ணுவிட்டாலும் நீக்க முடியும், ஆனால் பாராளுமன்றத்திலே அவைகளைத்தான் நீக்க முடியும் என்று சொல்லி, நம்முடைய மட்டம் பாராளுமன்றம் மட்டத்தைவிட உயர்ந்த மட்டம் ஆக இருக்க வேண்டும் என்பதால்தான் நாம் அப்படிப் போட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். பாராளுமன்ற மட்டம் உயர்ந்த மட்டமா அல்லது இது உயர்ந்த மட்டமா, என்பது வேறு பிரச்னை. பாராளுமன்ற மட்டம் குறைவாக இருக்கின்ற முறையிலே இங்கே இப்பொழுது இது ஹையர் லெவலில் இருப்பதாகச் சொன்னார்கள்.

We want our discussions to be at a higher level than that in Parliament. That means, the Parliament discussion might prove to be at a lower level.

என்றுதான் அர்த்தம் ஆகும். ஆகவே அது உயர்ந்த மட்டமா அல்லது இது உயர்ந்த மட்டமா என்ற பிரச்னைக்குள் நாம் இப்பொழுது நுழைய வேண்டாம். (Interruptions) ஏனென்றால் நாம் உயர்ந்த மட்டத்தில் தான் இப்பொழுது டிஸ்கஸ் பண்ணிக்கொண்டிருக்கிறோம், அதனால்தான் சொல்கிறேன். இப்பொழுது இருக்கிற ரூலிங் பிரகாரம் என்ன ஆகும் என்பதைப் பார்க்க வேண்டும்.

According to our Rules, the Speaker is given wide powers. A member need not have used unparliamentary words. The Speaker can expunge. Such discretionary power is given to the Speaker. The Speaker can expunge anything if he wants. ஸ்பீக்கர் அவர்கள் எதை வேண்டுமானால் எக்ஸ்பஞ்ச் செய்யலாம். நீங்கள் செய்கிறீர்கள் என்று நான் சொல்லவில்லை. அப்படி நான் சொன்னால் என்மீது உரிமைப் பிரச்னை எழுப்பலாம்.

There is wide score for expunging even if there is no use of unparliamentary expressions. ஒரு கட்சிக்கும் இன்னொரு கட்சிக்கும் பாரபட்சம் காட்டக்கூடிய ஒரு வாய்ப்பு இதனால் ஏற்படுகிறது. அந்த வாய்ப்பு இருக்கக்கூடாது என்று கருதுகிறேன். நான் அப்படிச் செய்கிறார்கள் என்று சொல்லவில்லை. அப்படியிருந்தால், அனாவசியமாக ஆளுங்கட்சிக்காரர்

களுடைய பேச்சு எக்ஸ்பஞ்ச் ஆகாமல் இருக்கலாம், நாங்கள் பேசுகின்ற பேச்சுகள், எக்ஸ்பஞ்ச் ஆகலாம். ஆகவே நான் சபாநாயகர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, அன்பார்லிமெண்டரி வார்த்தைகள் வந்தால் மட்டும் எக்ஸ்பஞ்ச் செய்யலாம். மற்றவைகள் எல்லாம் பொதுமக்கள் தெரிந்து கொள்ளக்கூடிய வகையிலே இருக்கட்டும். நேற்றைய தினம் உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டே போனார்கள், மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்கள்கூட ஹெல்த் மினிஸ்டர் சொன்னதற்குப் பிறகு All right, the hon. Member can go to the next point. என்றுகூடச் சொன்னார்கள். அதற்குப் பிறகு கொஞ்சம் வருத்தமான நிகழ்ச்சி நடந்ததால் நாங்கள் வாக் அவுட் செய்தோம். அதற்குப் பிறகு . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் பேசியதை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டுமென்று நீங்கள் கேட்டீர்களா? நீங்கள் நேற்றை தினம் அப்படிக் கேட்டதற்கு, துணைச் சபாநாயகர் அவர்கள் மறுத்தார்களா ?

டாக்டர் எச். வி. ஹாண்டே : அந்தத் தீர்ப்பின்மீது, துணைச் சபாநாயகர் அவர்கள் என்ன சொன்னார்கள். அவர்கள் மறுத்தால் போதும் என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்களுடைய யோசனை தீர்ப்பு அல்ல, சபைத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வகையிலே நடந்தது, as though accepted by the Chair அதற்குப் பிறகு அடுத்த நிகழ்ச்சிக்குச் செல்லுங்கள் என்று சொன்னார்கள். ஒரு உறுப்பினர் ஒரு குற்றச்சாட்டுச் சொல்லிவிட்டால் அதை கட்சித் தலைவர் மறுத்துவிட்டால் போதும் என்று சொல்லப்பட்டது. அதற்குப் பிறகு ஒரு நிகழ்ச்சி நடந்தது. அந்த நிகழ்ச்சி நடந்ததற்குப் பிறகு அதற்காக நாங்கள் வெளிநடப்புச் செய்தோமேதவிர, வேறு எதற்காகவும் வெளி நடப்புச் செய்யவில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நான் சொன்னது கருத்து, தீர்ப்பு அல்ல. அது ஆலோசனையாகக் கூறியது தான். அதைப்பற்றி தலைவரோ அல்லது துணைத் தலைவரோ அல்லது அந்த இடத்தில் யார் இருக்கிறார்களோ அவர்கள் தீர்மானிக்க வேண்டும். நான் சொன்னது, ஒரு கட்சியின்மீது இன்னொரு கட்சியைச் சேர்ந்த அங்கத்தினரோ அல்லது உறுப்பினர்களோ ஒரு குற்றச்சாட்டை எடுத்து வைத்தால் அதனாலேயே அந்தக் குற்றச்சாட்டு உண்மையாகாது என்பதுதான். அந்தக் குற்றச்சாட்டை பொறுப்புள்ள அந்தக் கட்சியின் தலைவர் மறுத்தாலும், அது கேள்விக்குரியது என்று எழுப்பினாலும் அந்தக் குற்றச்சாட்டு சட்டமன்ற நடவடிக்கையிலே இருந்தாலும் உண்மை என்று இன்னொருவர் நிரூபித்ததாக ஆகாது. அது வதந்தியாகத்தான்

ஆகும். ஏற்கனவே நான் 10, 15 ஆண்டுக்காலம் சட்டமன்றத்திலும் மேலவையிலுமாக இருந்திருக்கிறேன். குற்றச்சாட்டுகளை யார்மீது சொன்னாலும் அதை மறுத்தால், மறுத்ததுதான் சட்டமன்றத்தில் உண்மையாக இருக்குமே தவிர சொல்பவர்களின் கருத்து உண்மையாக ஆகாது. திரு. துரைமுருகன் அவர்கள் பேசியது சட்டமன்றத்தில் ஏற்றுக்கொண்டதாக ஆகாது என்ற கருத்திற்காகத் தான் சொன்னேனே தவிர அவர் சொல்லியதை வலியுறுத்திச் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொன்னதல்ல. அது திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது சொல்லப்பட்டாலும், காங்கிரசின்மீது சொல்லப்பட்டாலும் சம்பந்தப்பட்டவர்கள் மறுத்துவிட்டால், இன்னொருவர் நிரூபித்தால் தவிர உண்மையாகாது என்பதற்காகத்தான் தெரிவித்த கருத்தாகும். எனவே, துரைமுருகன் பேசியதை ஆதரிக்க வேண்டுமென்று அமைச்சர் என்ற முறையில் நான் குறுக்கிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அதேபோல் எல்லோருக்கும் நடைபெற்றால் ஒத்துக்கொள்கிறேன்.

THIRU N. VEERASWAMY : Sir, on a point of order.

THIRU K. T. K. THANGAMANI : Sir, before the ruling is given let the House not be diverted by a fresh point of order.

MR. SPEAKER : It may pertain to the point of the hon. Member.

THIRU R. PONNAPPA NADAR : Sir, yesterday something unfortunate and extraordinary had happened and it was really surprising that many Members had been indulging in certain vituperative language which had been taken exception to by the hon. Member, Thiru Thangamani. Certain charges were levelled and there was a heated exchange and in the midst of that exchange it had been asked whether the hon. Member would be in a position to prove those allegations which had been flung at that party. The hon. Member, while accepting that challenge, went on saying that if a Supreme Court Judge were to be asked to conduct the enquiry, he would be in a position to substantiate the allegations made by him. That was the contention put forward by him. He had been persisting in that and that had been objected to. Consequent on the objections raised against it, a heated emotion had taken place inside the House. As a result of that, something unfortunate had

happened and that is now rectified to some extent. But I would once again point out that Members, while they speak, should not indulge in irrelevance or in tedious repetition and that has been referred to in Rule 85. Whether it is irrelevant or repetition, that is a matter for the Presiding Officer to decide and in his discretion he had given certain ruling.

So far as the expunction of the matter is concerned, the point that has been referred to by the hon. Member, Thiru Thangamani, is now pending consideration before this House. I would once again reiterate that if any indecent or unparliamentary or undignified or grossly irregular things had happened inside the House, those things could be expunged at the discretion of the Hon. Speaker. Now the discretion has been exercised by the Presiding Officer. When the Hon. Chief Minister raised the point that when any hon. Member wanted an expunction of those words and if the Chair refused it, a walk-out would be proper and that kind of argument I am not able to follow.

So far as the walk-out is concerned, when the atmosphere inside the House became so oppressive that a further continuance in the House had been rendered impossible, we were impelled to walk out. I feel that if this sort of thing is allowed in an unrestricted and unbridled manner, it would cause a bad name for the Tamil Nadu Legislature. So far as the Tamil Nadu Legislature is concerned, it has been stated that this is a very peaceful House, a model House and we have always been praising eminent Members who had adorned this House for maintaining the decency and decorum of the House. I think that will be continued by the Members. If the sort of things which happened yesterday are allowed to continue, the Opposition which is numerically very little, cannot function effectively. So for protecting us, the Hon. Speaker should give sufficient protection for the Opposition and that is the reason why we say that this is an important matter which requires careful consideration of this House and also by all the Members of this House so that the dignity of the House and the rights of the Members should be upheld and no reflection or unfounded allegation should be flung at the Opposition leaders. So I think it is better that the whole proceedings are de-expunged and the matter may stand as it is and it is for the parliamentarians and

[Thiru R. Ponnappa Nadar] [1972 ஆகஸ்ட் 12

the public to judge how we perform in this House. Once again I request that de-expuntion may be ordered so that the whole thing can form part of the official record. That is the submission which I have to make in regard to this matter.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, Rule 242 says—'The Speaker shall have power to regulate the conduct of business of the Assembly in all matters not provided for in the Constitution or the rules.' இங்கே இருக்கும் சட்டசபை சபாநாயகருக்கு எவ்வளவு அதிகாரங்கள் கொடுக்க முடியுமோ அவ்வளவு அதிகாரங்கள் இந்த ரூலிலே கொடுத்திருக்கிறார்கள். கான்ஸ்டிடியூஷனில் தேவையில்லை, ரூலில் தேவையில்லை, இருந்தாலும் ரெகுலேட் செய்வதற்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். நேற்று நடந்தது என்ன?. கனம் அங்கத்தினர் அவர்கள் இஷ்டத்திற்கு எதையோ சொல்லிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் ஏதாவது சாதாரண பிரச்னைகளைச் சொன்னாலும் ஆதாரம் இருக்கிறதா ஆதாரம் இருக்கிறதா என்று கேட்கக் கூடியவர்கள் All kinds of baseless allegations were flung at the All India party. என்று சொல்லும்பொழுது எங்களுக்குப் பாதுகாப்பிற்கு என்ன இருக்கிறது? ரெவின்யூ அமைச்சரவர்கள் அதைத் திசைதிருப்பி, சேலஞ்சிற்குப் போய் விடக்கூடிய நிலை ஏற்பட்டது. சுகாதார அமைச்சரவர்கள், எதை வேண்டுமானாலும் சொல்லுவார்கள், மறுத்துவிட்டால் போதும் என்று சொல்கிறார்கள். அதைப்போல் நாங்களும் சொல்கிறோம், நீங்களும் மறுத்துவிடுங்களேன். ஆனால் நாங்கள் சொன்னால்மட்டும் ஆதாரம் எங்கே ஆதாரம் எங்கே என்று ஏன் துடிக்கிறீர்கள்? எதிர்க்கட்சிகள் சிறிய எண்ணிக்கையில் இருக்கின்றன என்ற எண்ணத்தில் சட்டசபை நிகழ்ச்சிகளை நடத்துவது ஆபத்து. நேற்றையதினம் ஆண்களையே அப்படிச் சொன்னால் எங்களைப்போன்ற பெண்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கும்? நாங்கள் இருப்பது எண்ணிக்கையில் குறைவாக இருக்கிறோம் என்றால் உட்காருடா என்று சொல்லும் அளவிற்குப் போகிறோம் என்றால் அது மிகவும் வருந்தத் தக்கது. சபாநாயகரவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன், நாங்கள் எண்ணிக்கையில் குறைந்திருக்கிறோம் என்ற ஒரே காரணத்திற்காக, அவர்கள் 184 பேர்கள் இருக்கிறார்கள் என்ற ஒரே எண்ணத்தினாலே எப்படியும் நடத்தலாம் என்று நினைத்திருந்தால் கட்டாயமாக சட்டசபையில் வாதம் என்பது நடைபெற முடியாது.

Sir, under rule 242, the Chair shall exercise all his power under his command. Only then the Legislature can function with some dignity and decorum.

1972 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சரவர்களும், கட்சித் தலைவர்களும் இங்கே பல பிரச்னைகளை எழுப்பினார்கள். ஆனால் திரு. தங்கமணி அவர்கள் ஒழுங்குப் பிரச்னை ஒன்றை எழுப்பியிருக்கிறார்கள். நான் இவ்வளவு நேரம் விவாதமாக அனுமதித்தேன் என்று யாரும் கருதிக்கொள்ளத் தேவையில்லை. பாராளுமன்ற மரபுகள், சம்பிரதாயங்கள், முக்கியமான பிரச்னைகள் அல்லது வேறுமாதிரியான விவகாரங்கள் எதுவாயிருந்தாலும் அந்தப் பிரச்னைகளுக்கு நல்ல விளக்கம் கிடைக்கவும், நல்ல வடிவம் கிடைக்கவும் வாய்ப்பு கிடைத்ததற்கு நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். அதற்குமுன் இங்கே எழுப்பியிருக்கும் பிரச்னைகளைச் சுருக்கமாகச் சொன்னால் நல்லது. இரண்டு மூன்று பிரச்னைகள்தான் இப்பொழுது நம்முடைய தீர்ப்பிற்கு உரிய பிரச்னையாகும். ஒன்று, எக்ஸ்பஞ்ச் செய்த பகுதிகள் மீண்டும் இருக்க வேண்டுமென்பது திரு. தங்கமணி அவர்களின் கோரிக்கை. அதே கோரிக்கையை நம்முடைய திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் மற்றவர்களும் ஆதரிக்கிறார்கள்.

நடுவில் வந்த கோரிக்கை மாண்புமிகு சுகாதார இலாகா அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். ஒரு உறுப்பினர் ஒரு பலத்த குற்றச்சாட்டை சாட்டிவிட்டு பின்னர் அந்தக் கட்சியின் தலைவர் அவர்கள் இல்லை என்று மறுத்துவிட்டால் அது சரியாகப் போய்விடுமா என்பது இன்னொரு பிரச்னை. மூன்றாவதாக, ஒரு உறுப்பினருக்கு உரிமை இருக்கிறது என்பதால் என்ன வேண்டுமானாலும் பேசலாம். எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாத வகையில், கட்டுதிட்டங்களுக்கு உட்படாத முறையில் பேசலாம் என்பது கூடாது. பொறுப்பு இருக்கவேண்டும். இந்த மூன்று பிரச்னைகள்தான் இங்கு எழுப்பப்பட்டிருக்கிற ஒழுங்குப் பிரச்னையில் உள்ள பிரச்னைகள் **என்று நான் கருதுகிறேன். என் தீர்ப்பை நான் சொல்கிறேன்.**

அப்படிச் சொல்வதற்கு முன்பாக நான் ஒருவிதத்தில் சந்தோஷப் படுகிறேன், ஒருவிதத்தில் வருத்தமும் அடைகிறேன். இங்கு பேசியவர்கள் பேரவைத் தலைவருக்குள்ள அதிகாரங்களைப் பற்றி, வரையறை இல்லாத அதிகாரங்களைப் பற்றி, எல்லையற்ற அதிகாரங்களைப் பற்றி, ஜனநாயக அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பற்றி பிரமாதமாக எடுத்துக் கூறினார்கள். ஆனால் நண்பர் ஹாண்டே அவர்கள்தான் உண்மை நிலையைச் சொன்னார்கள். சிலவேளைகளில் பேரவைத் தலைவர் 'ஹெல்ப்லெஸ்' ஆக ஆகிவிடுகிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்களே ஹெல்ப்லெஸ்ஸாக பண்ணிவிடுகிறார்கள். மற்றவர்களும் சிலவேளைகளில் அப்படிப் பண்ணிவிடுகிறார்கள் என்பதையும் நாம் காண்கிறோம். பேரவைத் தலைவருக்குள்ள அதிகாரங்களை வைத்துக்கொண்டு

நான் ஜனநாயக மரபுகளைக் காப்பாற்ற முயல்கிறேன். உறுப்பினர்கள் எல்லோரும் ஜனநாயக மரபுகளைக் கடைப்பிடிக்க வேண்டும். நேற்று எந்தவித மான காரியங்கள் நடந்திருந்தாலும் அவை உண்மையிலேயே வருத்தத்திற் குரியதுதான் என்ற நிலையை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர்களது பெரிய கண்ணியத்தையும், பாராளுமன்ற, ஜன நாயக மரபுகளை காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வையும், அவர்களது நல்ல மனோபாவத்தையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

இன்று எழுப்பப்பட்டிருக்கும் பிரச்னை நேற்றையதினம் துணைச் சபாநாயகர் அவர்கள் இருந்த நேரத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி. நேற்று நடந்த நிகழ்ச்சி இன்று எப்படி எழுந்தது என்றால், முதல் அமைச்சர் அவர்கள் நல்ல வகையில், ஜனநாயக உணர்வோடு முந்திக்கொண்டதால் இப்பிரச்னை வந்திருக் கிறது. நேற்று நடந்த நிகழ்ச்சிகள் குறிப்பேடுகளில் ஏறவேண்டுமென்ற பிரச்னை எழுப்பப்பட்டிருக்கிறது. பேரவைக் குறிப்பேட்டில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஏற்கனவே என்னென்ன விவாதிக்கப்பட்டனவோ அவைகள் எல்லாம் வெளியே வந்துவிட்டது என்ற முறையில் திரு. தங்கமணி அவர்களின் கோரிக்கையை நான் ஏற்று நேற்றையதினம் எக்ஸ்பஞ்ச் செய்யப்பட்ட பகுதிகள் மீண்டும் பேரவைக் குறிப்பேட்டில் ஏற வேண்டும் என்று நான் ஆணை யிடுகிறேன். ஆனால் ஒன்றை தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். பேரவைத் தலைவர் பதவி துரதிரஷ்டவசமானது. நான் கூட யோசித்துக்கொண்டிருக் கிறேன். இந்த அதிகாரங்களை எவ்வளவு நாட்களுக்கு அனுபவிக்கலாம் என்பதுபற்றி யோசித்துக்கொண்டிருக்கிறேன். டாக்டர் ஹான்டே அவர்களின் கருத்து பாராளுமன்ற ஜனநாயக மரபில் மிகவும் முக்கியமானது. எக்ஸ்பஞ்ச் செய்தால் அது எக்ஸ்பஞ்ச் செய்ததாக இருக்கவேண்டும். துணைச் சபாநாயகர் அவர்கள் அல்லது யார் வேண்டுமானாலும் இருக்கட்டும். துணைச் சபாநாயகர் எக்ஸ்பஞ்ச் செய்ய பகுதிகளை இன்று வருகிற தலைவர், "இல்லை, இல்லை இருக் கட்டும்" என்பதும், நாளை வருகிற தலைவர் "இல்லை, கூடாது" என்று சொல் வதும் சரியான தாகாது. ஒரு தடவை எக்ஸ்பஞ்ச் செய்தால் அது எக்ஸ்பஞ்ச் செய்ததுதான். அதற்கு அப்பீலே கிடையாது என்ற ரூலிங்கை நான் முன்னடி கொடுத்த ரூலிங்-க்கு அடுத்தபடியாகக் கொடுக்கிறேன். என் நிலைதான் துர திருஷ்டவசமானது. முதல் நாள் எக்ஸ்பஞ்ச் செய்தது குறிப்பேட்டில் இருக் கட்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் முன்பு ஒருமுறை கேட்டுக் கொண்டார்கள் அப்படிச் செய்யப்பட்டது. ஒருவேளை ஆளும் கட்சிக்கு மட்டும் சாதகமாக அப்படிக் கூறியதாக எண்ணக் கூடாது. அதே கோரிக்கையை இன்று திரு. தங்கமணி அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள்,

எக்ஸ்பஞ்ச் செய்தது மீண்டும் ஏட்டில் சேர்க்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். நேற்று எக்ஸ்பஞ்ச் செய்த பகுதிகள் குறிப்பேட்டில் ஏறுகின்றன. ஆனால், இனிமேல் யார் கொடுக்கிற ஆணையாகட்டும், எக்ஸ்பஞ்ச் செய்தால் அவை மீண்டும் ஏட்டில் ஏறக்கூடாது.

அடுத்தபடியாக, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கருத்து, அவர்கள் யோசனையாகத்தான் சொன்னார்கள். ஒரு உறுப்பினர் ஒரு கருத்தைச் சொல்லி அவரது கட்சியின் தலைவர் அதை மறுத்துவிட்டால் அது குற்றமாக ஆகாது என்று சொன்னார்கள். அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதை ஒரு ரூலிங்காகச் சொல்லவில்லை. துணைச் சபாநாயகர் அவர்கள் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை, உறுப்பினரே தான் சொன்னவற்றிற்கு பொறுப் பேற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். பொதுவாக அந்தக் கருத்து தான் எல்லோருக்கும் நல்லது. திரு. சுப்பு அவர்கள் ஒரு பயங்கரமான கருத்தை எடுத்துச் சொல்லி உடனே திரு. தங்கமணி அவர்கள் அதை மறுத்துவிட்டால் இரண்டுமே இருப்பதாக ஆகிவிடும். உறுப்பினர்களுக்கு உரிமைகள் இருப்பது போல் பொறுப்புணர்ச்சிகளும் உள்ளன. ஆகவே உறுப்பினர்கள் தாங்கள் சொல்வதற்கு பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆளும் கட்சியைச் சார்ந்தவராகயிருந்தாலும் சரி அல்லது எதிர்க்கட்சியைச் சார்ந்தவராகயிருந் தாலும் சரி தாங்கள் சொல்வதற்கு பொறுப்பேற்க வேண்டும்.

நேற்று திரு. துரைமுருகன் ஒன்றைச் சொன்னார்கள். அதை நிரூபிக்க முடி யுமா என்று கேட்டதற்கு சுப்ரீம் கோர்ட் ஜட்ஜை போட்டால் நிரூபிக்கிறேன் என்று கூறியிருக்கிறார்கள். அப்படிப் பேசியது வருந்தத் தக்கது. நான் திரு. துரைமுருகனுக்காகச் சொல்லவில்லை. ஆதாரம் உள்ளவைகளைப் பற்றித்தான் பேச வேண்டும். நேற்றையதினம் நடந்த நிகழ்ச்சிகள் மிகவும் வருந்தத் தக்கவை யாகும். இந்தச் சட்டமன்றத்தின் பெருமையையும், நல்ல உயர்ந்த பாரம்பரி யத்தையும் பாதிக்கும் அளவிற்கு கொந்தளிப்பு ஏற்பட்டதற்கு நான் அவ்வருத் தத்தில் பங்கு கொள்கிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் உதார குணத்தைப் பாராட்டி, அவர்களது பெருமனதைப் பாராட்டி திரு. தங்கமணி அவர்கள் எழுப்பியுள்ள ஒழுங்குப் பிரச்னையில் மீண்டும் நேற்று எக்ஸ்பஞ்ச் செய்த பகுதிகள் பூராவும் நடவடிக்கைகளில் இடம் பெறுகிறது என்று ஆணை யிட்டு இதோடு என் தீர்ப்பை முடிக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தாங்கள் வருத்தத்தோடு சில விஷயங்களைச் சொன்னீர்கள். 'மே'-ல் ஸ்பீக்கரைப் பற்றி சொல்லியிருப்பதைக் குறிப்பிடு கிறேன். தாங்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

"The chief characteristics attached to the office of Speaker in the House of Commons are authority and impartiality. Confidence in the impartiality of the Speaker is an indispensable condition of the successful working of the proceedings and many conventions exist which have as their object not only to ensure the impartiality of the Speaker but also to ensure that his impartiality is generally recognised.

Following the British procedure the Speaker of the Lok Sabha like the Speaker of the House of Commons is the representative of the House itself in its powers, proceedings and dignity. He presides over the debates of the Lok Sabha and enforces the observance of all rules for preserving order in its proceedings. He belongs to no party but he belongs to all parties."

அந்த ஸ்பிரிட்டில் எங்கள் ஆதரவு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் பேசவேண்டாம் என்று தான் நினைத்தேன். மே அவர்கள் சொல்லியிருக்கலாம். ஆல் பார்ட்டி என்று சொல்லியிருக்கலாம். இங்கே நான் இருக்கின்ற நேரத்தில் பாரபட்சம் இல்லாமல் நடந்துகொள்ளலாம். நான் ஒரே பார்ட்டியைச் சேர்ந்தவன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அரசியலில் பேரவைத் தலைவர்கள் பங்கு கொள்ளக் கூடாது என்பதை நான் தலைவர் பொறுப்பேற்ற நாட்களிலிருந்து ஒத்துக் கொள்ளவில்லை. திரு. தங்கமணி அவர்களுடைய பாராட்டுதலுக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஒரு கட்சியிலும் இல்லாதவன் என்பது அல்ல. தி.மு.க.-விலிருந்து துரவாம் பூண்டவன் என்பது அல்ல. இங்கே தலைவர் பொறுப்பை ஏற்று உட்கார்ந்து கொண்டிருக்கிற நேரத்தில் இந்த இடத்தில் மட்டும் தான் நான் பேரவைத் தலைவராக இருந்து, தலைவர் என்று அந்த அளவுக்கு பாரபட்சம் இல்லாமல் நடந்துகொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தது, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின் மீதும் விவாதம் தொடரும்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்டு ஆப் ஆர்டர். நேற்று முதல் அமைச்சர் அவர்கள் என் மீது குற்றம் சாட்டி ஆதாரத்தோடு சொன்னதாக தாங்கள் இப்பொழுது குறிப்பிட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஒரு உதாரணத்திற்காகத் தான் சொன்னேன்.

திரு. க. சுப்பு: பத்திரிகையில் இது பற்றி வந்திருக்கிறது. ஏதோ நாராயணசாமி என்பவர் என்னுடைய தொகுதிக்கும், இன்னொரு தொகுதிக்கும் பணம் பெற்றுக்கொண்டதாகச் சொன்னார்கள். நாராயணசாமி என்று எங்கள் கட்சியில் ஒருவரும் கிடையாது. நான் பணம் வாங்கியதாக பொருள் படக்கூடிய முறையில் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார். அப்படிச் சொல்லியது தப்பு. அதை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று கூட வற்புறுத்தியிருப்பேன். வேறு ஏதோ ஒரு பெயரைச் சொன்னதால் நான் பேசாமல் இருந்தேன். நாராயணசாமி என்று ஒருவரும் இல்லை. நான் வாங்கியதாக பொருள்பட சொன்னார். அந்த அர்த்தம்படும்படி சொன்னார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மீண்டும் வேண்டுமானால் ரசீதைக் கொண்டு வந்து காட்டத் தயாராக இருக்கிறேன். இராமனாதபுரத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்டு தோழர் அறந்தைநாராயணன் என்பவர், எஸ். நாராயணன் என்பவர் ராஜபாளையம் தொகுதிக்கு சுப்புவின் தேர்தலுக்காக ரூ. 5,000 கழகத்திலிருந்து வாங்கியிருக்கிறார். வேண்டுமானால் ரசீதை நாளைக்குக் கொண்டுவந்து காண்பிக்கிறேன்.

திரு. க. சுப்பு: நான் வாங்கியிருக்கிறேன் என்ற அர்த்தத்தில் சொன்னீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்கள் உங்களிடம் கொடுத்திருப்பார் என்று கருதுகிறேன். நீங்கள் வாங்கவில்லை என்றால், அவர்கள் கொடுக்காதது குற்றம்.

5. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்—தொடர்ச்சி.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை என்று கொண்டுவரப்பட்டிருக்கிற தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இதிலே எழுப்பப்பட்ட முக்கியமான பிரச்னை விவசாயிகள் போராட்டத்தில் இந்த அமைச்சர் அவை சரியான முறையில் தீர்வு காணத் தவறிவிட்டது என்பதாகும். அந்தக் கொள்கையைக் கண்டித்து மற்றொரு தீர்மானமும் இந்தப் பேரவையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்னை வந்தாலும், அந்தப்

பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டும் என்று திறமையோடு தீர்வு காணுமல் கட்சிக் கண்ணோட்டத்தோடு, அதனுல் கட்சிக்கு என்ன லாபம் என்ற அடிப்படையிலேயே தீர்வு காண்கிருர்கள் என்பதை மக்கள் வெகு நன்ருகப் புரிந்துகொண்டிருக்கிருர்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்ருல், எந்தப் பிரச்னையாக இருந்தாலும் சரி, விவசாயத் தொழிலாளர்களின் பிரச்னையாக இருந்தாலும் சரி, பட்டதாரி ஆசிரியர்களின் பிரச்னையாக இருந்தாலும் சரி, பஞ்சாலைத் தொழிலாளர்களின் பிரச்னையாக இருந்தாலும் சரி, ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் பிரச்னையாக இருந்தாலும் சரி, ஏழை விவசாயிகளின் பிரச்னையாக இருந்தாலும் சரி, அவர்கள் ஊர்வலம் நடத்தி மகஜர்கள் கொடுத்து, கோட்டையை நோக்கி முற்றுகை போட்டு, சிறைக் கூடங்களுக்குச் சென்று உண்ணு விரதம் இருந்து, இப்படி அத்தனை வகைகளையும் கடைப்பிடித்தாலும் கூட, பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு வேண்டிய துடிப்பு இந்த அமைச்சர் அவைக்கு இல்லை. ஏதோ பிரச்னைகளை தள்ளிப்போட்டுக் கொண்டு எப்படியோ தப்பித்துக்கொள்கிருர்கள். தீர்வு காணவேண்டும், திறமையோடு தீர்வு காணவேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிருர்கள் என்பதே சந்தேகத்திற்குரியது. பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராட்டம் நடந்தது. அது தீர்த்துவைக்கப்படும் என்று சொன்னுர்கள். மாதக் கணக்கில் ஆகியும் அந்தப் பிரச்னை தீர்ந்தப்பாடில்லை. பட்டதாரி ஆசிரியர்கள் சிறைச்சாலைக்குச் சென்ருர்கள் என்ற நல்ல பெயர் இந்த அரசுக்குத் தான் உண்டு. 'எழுத்தறிவித்தவன் இறைவனுகும்'. இறைவன்கள் அத்தனை பேர்களும் சிறையில் இருந்தார்கள். காரணம் என்ன? அவர்களுடைய பிரச்னை தீர்க்கப்படவில்லை. பட்டதாரி ஆசிரியர்களை சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கக்கூடிய அளவுக்கு இந்த அரசாங்கம் பிரச்னையை புரிந்து கொள்ளாத அளவுக்கு போய்க்கொண்டிருக்கிறது நிலைமை. அப்பொழுது சொன்னுர்கள், இரண்டு மாதங்களில் தீர்த்துவிடுவோம் என்று சொன்னுர்கள். இன்னும் தீர்க்கப்படவில்லை. ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் ஐயகோ, நான் அபீஷியல்ஸ் கமிட்டியில் இருந்துகொண்டு அவர்களைப் படாதபாடு படுத்தி வைத்தார்கள். புருஷன் மனைவியைப் பிரித்து 10 நாட்களில் நான்கு, ஐந்து மாறுதல்கள் செய்தார்கள். அந்தப் பிரச்னை இன்னும் தீர்ந்துவிட்டதாகத் தெரியவில்லை. நூற்றுக்கணக்கில் அவர்கள் சிறைக்கூடங்களில் அடைக்கப்படக் கூடிய அளவுக்கு அவர்களுடைய பிரச்னை என்ன என்பதைக் கூட புரிந்து கொள்ள முடியாத அரசு இது. 'மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல்' என்று வள்ளுவர் சொல்லியிருக்கிருர். எவ்வளவு தான் பொருள் முன்வந்து நின்ருலும், அவர்கள் கண்ணுக்கும், கருத்துக்கும் தெரியாத நிலையில் தான்

போய்க்கொண்டிருக்கிறது இந்த அரசு. ஏழை விவசாயிகளுடைய பிரச்னையை எடுத்துக்கொண்டாலும் . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: வள்ளுவர் சொன்னதாகச் சொன்னீர்கள். அது எந்தக் குறள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: திருக்குறளைக் கொண்டு வருகிறேன். படித்துப் பாருங்கள், அந்தக் கருத்து அதில் சொல்லப்பட்டிருக்கிறது. குறளைச் சொன்னுல் கூட குறளுக்கு ஆதாரம் கேட்கிறீர்கள். நாளைக்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: 'மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல்' என்று அதிவீரராமன் தெரிவித்திருக்கிருர். வள்ளுவர் சொன்னதாகத் தெரியவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: அவர் சொன்ன கருத்தையே வள்ளுவரும் சொல்லியிருக்கிருர். அமைச்சருக்கு என்ன இலக்கணம் தேவை என்று சொல்லியிருக்கிருர். நாளைக்குக் குறளைக் கொண்டு வருகிறேன். குறளில் அந்தக் கருத்து சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத்தான் சொன்னேன். குறள் என்று சொன்னுல், உடனே குறள் நம்பர் என்ன என்று கேட்கிறீர்கள். மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல் என்ருலும், எவ்வளவு பொருள் உங்கள் முன்னுல் வந்து நின்ருலும், ஏன் அது உங்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் தெரியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது.

ஏழை விவசாயிகள் என்ன கேட்டார்கள்? ஒரு கையெழுத்து இட்ட அழைப்பு கேட்டார்கள். அதைக் கொடுக்க இந்த அரசாங்கத்திற்கு முடியாதா? அதற்காக எத்தனை தூதுவர்கள், மூக்கையா தேவர், கந்தசாமி, சின்னதுரை, பூவராகன் இப்படி இவர்களையெல்லாம் தூது விட்டு, தூது விட்டு 60 நாள் கழிந்து பிரச்னையைப் பெரிதாக்கிவிட்டார்கள். என்ன கேட்டார்கள்? கந்தசாமி அவர்கள் கூட சட்ட மன்றத்தில் பேசும்பொழுது சொன்னுர். முதல் அமைச்சர் கையெழுத்திட்ட அழைப்புத் தேவை. போராட்டக் குழு என்று ஒன்று அமைத்துவிட்டார்கள். அந்தப் போராட்டக் குழுவுக்கு முதல்வர் கையெழுத்திட்ட ஒரு அழைப்பு அனுப்பினுல் என்ன குறைந்து விடும்? ஆட்சிபீடத்தில் இருக்கக் கூடியவர்கள் தான் கொஞ்சம் எளிமையாக போகவேண்டும். கவுரவப் பிரச்னையாக பார்க்கக் கூடாது. நாட்டை ஆளக்கூடியவர்கள் உட்கார்ந்திருப்பது விக்ரமாதித்யன் சிம்மாசனம் போல, முன்பு இருந்த முதல் அமைச்சர் அவர்கள் மாணவர்களைப் பார்க்கமாட்டேன்

என்று 18 நாட்களாகச் சொல்லியதனால்தான் பிரச்னை முற்றி மாணவர்கள் கொதித்து எழுந்து துப்பாக்கிச் சூடில் போய் முடிந்தது. அதே போன்று இந்த முதல் அமைச்சரும் இருந்ததால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது.

திரு. கே. கந்தசாமி: ஆன் ஏ பாயிண்டு ஆப் ஆர்டர். கனம் அங்கத்தினர் அவர்கள் எங்களை முதல் அமைச்சர் அவர்கள் தூது அனுப்பியதாகச் சொன்னார்கள். தூது இல்லை, சமாதானக் குழு எங்கள் கட்சி சார்பிலே அமைத்துத்தான் நாங்கள் செயல்பட்டோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தூதுக் குழுவுக்கும் சமாதானக் குழுவுக்கும் ஏதோ ஒரு பெரிய வித்தியாசம் கண்டுபிடித்துவிட்டார்கள். This is obstructing my speech.

THIRU K. KANDASAMI: On a point of Order.

MR. SPEAKER: The hon. Member may resume his seat.

THIRU K. KANDASAMI: The hon. Lady member is giving a misleading information. I want to say something by way of clarification.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பாயிண்டு ஆப் ஆர்டர் அல்ல. கிளாரிபிகேஷன் என்றால், விளக்கம் சொல்வது என்றால், அம்மையார் பேச்சை முடித்துவிட்ட பிறகு கடைசியாகச் சொல்லுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அதேமாதிரிதான் இன்றைக்கு ஏழை விவசாயிகளுடைய பிரச்னை. தூது விட்டு, தூது விட்டு, 60 நாட்கள் ஓட்டி, கடைசியில் 25,000 பேர்கள் சிறையில் அடைக்கப்பட்டு, 16 பேர்கள் செத்து மடிந்த பிறகு, மத்திய அரசு பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் நிலைமையை சமாளித்த வழி தவறு என்று அறிவுரை வழங்கியதின் பேரில், கையெழுத்திட்டு ஜூலை.13-ம் தேதி அழைப்புக் கடிதம் வருகிறது, 60 நாட்கள் கழித்து. இதற்கு முன்னாலேயே அந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தால், 16 பேர்கள் உயிர் இழந்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது, துப்பாக்கிப் பிரயோகத்திற்கு அவசியம் ஏற்பட்டிருக்காது, 25,000 பேர்கள் சிறையில் அடைக்கப்பட்டு அவஸ்தைபட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. விவசாயிகள் பிரச்னையை எவ்வளவு குழப்பத்தில் கொண்டு போய் நிறுத்த முடியுமோ அவ்வளவு குழப்பத்தில் கொண்டு போய் விட்டுவிட்டார்கள். இந்த அரசாங்கத்தின் திறமைக் குறைவுக்கு அது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மாத்திரமல்ல. பந்த் நடந்தால் என்ன கெட்டுவிட்டது. பந்த் என்பது ஜனநாயக முறையில் எதிர்க்கட்சிகள் போராட வேண்டிய ஒரு முறை, கடைப்பிடிக்கிற ஒரு முறை. அந்த மாதிரி பந்தை நடக்கவிடக்கூடாது என்பதற்காக கொள்கை விளக்கக் கூட்டங்கள் போட்டு அடிக்கு அடி, குத்துக்கு குத்து, வெட்டுக்கு வெட்டு என்று பேசியிருக்கிறார்கள், வன்முறையை தூண்டியிருக்கிறார்கள். அதே நேரத்தில் நமது முதல் அமைச்சர் அவர்கள் அதற்கு தலைமை தாங்க நான் தயாராக இருக்கிறேன் என்று கூறியிருக்கிறார். வேறு யாராவது கூறியிருந்தால் பரவாயில்லை. முதல் அமைச்சர் அவர்கள் இப்படி பொறுப்பு இல்லாமல் வேண்டுமானால் வன்முறைக்கு தலைமை தாங்க தயாராக இருக்கிறேன் என்று சொல்லலாமா? அப்படியிருக்கும்பொழுது கம்யூனிஸ்டுகளை வன்முறையைத் தூண்டிவிட்டார்கள் என்று பேசுகிறார்கள். அந்த நிலையிலே பந்த் நடந்தால் என்ன செய்ய வேண்டும். மக்களுடைய உடைமைக்கும், உயிருக்கும் எந்த விதமான குந்தகமும் விளைவிக்காதபடி சட்ட இலாகாவின் மூலமும், போலீஸ் இலாகாவின் மூலமும் பாதுகாப்பு கொடுப்பதுதான் அரசுக்கு அழகே தவிர வேறு இல்லை. போலீஸுடன் கூட சேர்ந்துகொண்டு வன்முறையை தூண்டிவிடுவது, 'இன்றைக்கு கடையை மூடினால் என்றைக்கும் கடையை மூட வேண்டியிருக்கும்' என்று மிரட்டி கட்சிக் காரியாலயங்களுக்கெல்லாம் தீ வைத்து, சட்ட மன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்குள் நுழைந்து பல அராசகங்களை நடத்தி, அடக்குமுறையை நடத்திவந்தார்கள். அப்படிச் செய்தால் இந்தப் பிரச்னையை தீர்த்துவிடலாம் அல்லது அடக்கிவிடலாம் என்று கருதுவது ஜனநாயகத்திற்கே குந்தகம் விளைவிக்கக் கூடியதாகும். அந்த எண்ணத்தில் இருந்தால், நீங்கள் எந்தக் கட்டத்திலும் வெற்றி பெற முடியாது என்பதை நினைவில்கொள்ள வேண்டும்.

அந்த மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதற்கு இது ஒரு பெரிய வாய்ப்பு என்ற காரணத்தால்தான் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோமேயொழிய, எண்ணிக்கையில் பெரிய எண்ணிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பதைப் புரிந்துகொள்ளாமல் இதைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று நினைக்க வேண்டாம். நீதி விசாரணை வையுங்கள் என்று கேட்டால், நீங்கள் தானே வேண்டாம் என்று சொன்னீர்கள் என்று சொன்னால் அது எப்படிச் சரியானதாக இருக்கும்? என்னென்ன குற்றச்சாட்டுகளை எல்லாம் போட்டிருக்கிறீர்கள்? ரயிலே போகாத ஊரில் ரயில் தண்டவாளத்தைப் பெயர்க்க சதி செய்தார்கள் என்று குற்றச்சாட்டு—சார்ஜ் ஷீட் போட்டிருக்கிறீர்கள். ஒருவனைக் குற்றவாளி என்று சொல்கிறபோது, எவ்வளவோ பார்த்துத்தான் குற்றம் சாட்ட வேண்டுமேயொழிய, விளையாட்டுத்

தனமாக, யார் மேலும் குற்றம் சாட்டக் கூடாது என்று இருக்கிறபோது, அதுதான் ஜனநாயக அரசாக இருக்க முடியும் என்கிறபோது, ரயிலே இல்லாத ஊரில் ரயிலைப் பெயர்ப்பதற்காக குற்றம் சாட்டி சார்ஜ் ஷீட் போட்டிருக்கிறீர்கள். ஒரு அரசாங்க நிர்வாகத்திலே, இதை விட குருட்டுத் தனமான போக்கு இருக்க முடியுமா என்றுதான் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும், இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்துக்கொண்டுதான் இருக்கின்றார்கள்.

அதேபோல, பெத்தநாயக்கன்பாளயத்தில் என்ன நடந்தது? அந்த ஊரிலேயே மொத்தம் ஆயிரம் பேர்கள்தான் இருப்பார்கள். போலீஸ் ஸ்டேஷனே இல்லாத ஊர் அது. ஒரு நிர்வாகத்திலே இருக்கிறவர்களுக்கு, அந்த ஊரில் போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறதா, இல்லையா என்பது தெரியாதா? அந்த போலீஸ் ஸ்டேஷனே இல்லாத ஊரில் ஒரு ஆயிரம் பேர்கள் இருப்பார்கள். அவர்கள் அத்தனை பேரும் சமூக விரோதிகளா? நண்பர் லத்தீப் சொன்னது மாதிரி அத்தனை பேர்களும் சமூக விரோதிகளாக இருக்க முடியாது. மக்கள் பலம் உங்களுக்கு இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறீர்கள். அப்படி இருக்கிறபோது, அத்தனை பேர்களும் உங்களுக்கு எதிர்ப்பாக இருந்தார்கள் என்று எண்ணிக்கூடப் பார்க்க முடியாது. ஆயிரம் பேர்கள் இருக்கிற ஊரில் ஒரு கிளர்ச்சி என்று சொன்னால், அதை அடக்குவதற்கு, ஆறு பேர்களை சுட்டுத் தள்ளி விட்டுத்தான் அந்தக் கிளர்ச்சியை அடக்க வேண்டுமா? இதை விட இந்த அரசாங்கத்திற்கு பலவீனம் என்ன இருக்க முடியும் என்று மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

உங்கள் உளவு இலாக்கா போலீஸில் எதற்காக இருக்கிறது? எப்படியெப்படி எங்கெங்கே கொந்தளிப்பு ஏற்படும், எந்தெந்த ஊரில் மக்கள் எப்படியெப்படி இருக்கிறார்கள், எங்கெங்கே கொந்தளிப்பு ஏற்படும் என்பதை அறிந்து யோசித்துப் பார்த்து, நான் முன்பு சொன்ன மாதிரி, வரும் பொருள் உரைத்தால் இப்படி ஏற்பட்டிருக்குமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். அப்படியில்லை என்று சொன்னால், அந்த நிர்வாக அமைப்புகளின் குறைகளை இந்த அரசு ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, ஒரு சின்ன ஊரிலே—அதுவும் போலீஸ் ஸ்டேஷன் கூட இல்லாத சின்ன ஊரிலே—ஆயிரம் விவசாயிகள் செய்கிற கிளர்ச்சியை அடக்குவதற்கு போலீசார் சுட்டார்கள்—ஆறு பேர்கள் செத்தார்கள் என்றால், அதுவும் போலீஸ் வேலிலே புகுந்து கொண்டு சுட்டார்கள் என்றால், இந்த அரசு வன்முறையை உண்மையிலேயே கண்டிக்கக் கூடிய ஒன்று என்பதை இங்கே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதுவும், துப்பாக்கியை தொடமாட்டோம், நாங்கள் ஆட்சிக்கு

வந்தால் துப்பாக்கிப் பிரயோகமே இருக்காது, துப்பாக்கியிலிருந்து குண்டே வராது என்று சொன்னவர்கள், நீங்கள்.

ஆனால், இன்றைக்கு விவசாயிகள் போராட்டத்திலே என்ன செய்தீர்கள்? அவர்கள் எல்லாம் என்ன, சமூக விரோதிகளா? விவசாயிகள் என்பவர்கள், நம்முடைய மானத்தைக் காக்கக்கூடிய மக்களின் ஒரு பகுதி அந்த விவசாயிகள் கேட்ட கோரிக்கை என்ன? ஒரு பைசாவை குறையுங்கள், இரண்டு பைசாவைக் குறையுங்கள் என்றுதானே கேட்டார்கள்? அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு இரண்டு பைசாவை குறைத்து விட்டால் குடியா கெட்டு விடும்? அதை விட்டு, ஆந்திராவைப் பார், உத்திரப் பிரதேசத்தைப் பார் என்று சொன்னால், நான் கேட்கிறேன், நீங்கள் என்ன, எல்லாவற்றிற்குமா உத்திரப் பிரதேசத்தையும் ஆந்திரப் பிரதேசத்தையும் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்? இந்தப் பிரச்சினை கோவை விவசாயிகளின் தனிப்பட்ட பிரச்னை. அவர்கள்தான் 1970-லேயே 10 பைசாவாகக் குறைக்கும்படி கிளர்ச்சி செய்து, மூன்று உயிர்களை பலி கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடத்திலே, மீண்டும் இரண்டு பைசாவை ஏற்றுகிறேன் என்று சொன்னால், எப்படி கொந்தளிப்பு ஏற்படாமல் இருக்கும் என்பதை யோசித்துப் பார்த்திருக்க வேண்டும். சகிப்புத் தன்மையோடு இதைப் பேசி, சாமர்த்தியமாக செயல்பட்டிருக்க வேண்டும் இந்த அரசாங்கம். கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்தப் பிரச்னை தனிப் பிரச்னை. தஞ்சை மாவட்டமோ, திருச்சி மாவட்டமோ என்று சொன்னால் ஒத்துக்கொள்ளலாம். அவர்களுக்கெல்லாம், பாதாள கங்கை மாதிரி கிணறு தோண்ட வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், கோவை மாவட்டத்தில், நூறு, இருநூறு அடி ஆழம் தோண்டினாலும் தண்ணீர் இல்லாமல் அவஸ்தைப்பட வேண்டிய நிலையில் உள்ள விவசாயிகள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். கோரிக்கையில் என்ன இருக்கிறது என்பதை யோசித்துப் பார்த்து முடிவு எடுத்திருக்க வேண்டும். அப்படியில்லாமல், எப்படியும் போராட்டத்தை அடக்குவது என்கிற போக்கு இருக்கிற காரணத்தால்தான், இதை பாசிச அரசு என்று சொல்கிறோம்.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், அந்த விவசாயி, மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்பதற்காக மாத்திரம் போராடவில்லை. இரண்டு பைசாவைக் குறைத்தால் போதும் என்று மட்டும் கோரிக்கை இல்லை. அவர்கள் 12 அம்சக் கோரிக்கையை வைத்து போராட்டத்தை நடத்தினார்கள். காங்கிரஸ் காரன் ஆட்சியில் இருந்ததைப் போல மின்சாரக் கட்டணம் இருக்க வேண்டும் என்று போராடிய போது ஒரு அரைப் பைசா குறைத்தீர்கள். அதற்குப்

பிறகு compounding facilities என்று கொடுத்துவிட்டு கிணறு தோண்டுவதற்குக் கடன் கொடுத்தீர்கள். கடனை வாங்கிக் கிணறைத் தோண்டினால் தண்ணீர் வரவில்லை. விவசாயம் நடக்கவில்லை, பணத்தைக் கட்ட முடியவில்லை என்று சொன்னால் அவனுடைய வீட்டில் உள்ள சாமான்களை ஜப்தி செய்கிறீர்கள். எனவே, ஒரு நல்ல அரசாங்கமாக இருந்தால், இந்தப் பிரச்னையில் எப்படி அணுகி இருக்க வேண்டும்? ஒரு கமிஷனை அமைத்து, முடிந்ததைச் செய்கிறோம் என்று சொல்லியிருக்க வேண்டும்

What is their rural indebtedness? What is their indebtedness to co-operative societies?

இதையெல்லாம் பார்த்தீர்களா?

என்ன குறை என்று ஆலோசித்து ஜனநாயகப் பண்புள்ளத்தோடு பிரச்னையை அணுகியிருக்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்யாமல், இதை ஒரு கவுரவப் பிரச்னையாக ஆக்கி, "நீ கட்டை வண்டியென்றால், நானும் கட்டை வண்டி, அடிக்கு அடி, குத்துக்கு குத்து, அடித்து நொறுக்குவேன்" என்று சொல்வது சரியா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நேற்றைக்குப் பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர் வன்முறையைப் பற்றிப் பேசினார். நாட்டில் வன்முறை ஏதாவது நடந்தால் அதை அடக்குவதற்காகத்தான் ஆட்சியில் இருக்கிறீர்கள். ஆனால், இங்கே நீங்களும் சேர்ந்து கொண்டு வன்முறை, வன்முறை என்று கத்தினால், வன்முறையை அடக்க உங்களால் முடியவில்லை என்றுதானே பொருள்? அப்படியானால் இதற்கு இந்தத் தீர்மானமே தேவையில்லையே? உங்களுடைய பேச்சே போதுமே. வன்முறையை நிரூபிப்பதற்கு? வன்முறையை அடக்கினால்தான் நாட்டில் சட்ட ஒழுங்கைக் காப்பாற்ற முடியும். அது எந்த ரூபத்தில் தலை தூக்கினாலும் அதை அடக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. விவசாயிகளின் பிரச்சினையை இந்த நிலையில் பார்த்திருக்க வேண்டும். அப்படியில்லாமல் பிரச்னையை துப்பாக்கிச் சூட்டின் மூலம்தான் சந்திப்பது என்ற நிலை மிக மிக துரதிருஷ்டமானது என்பதைத்தான் நான் இந்த அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி என்ன, ஒரு இரண்டு பைசாவைக் குறைத்து விட்டால் உங்கள் அரசாங்கம் கவிழ்ந்து போய் விடுமா? நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டு விடுமா? அதுதான் கள், சாராயத்தின் மூலம் இன்றைக்கு 40 கோடி வந்திருக்கிறதே. ஒரு இரண்டு பைசாவை குறைத்தால், அதை வேறு எப்படியாவது சரிக் கட்டிக்கொள்ளலாமே இந்த அரசாங்கம். இந்த அரசாங்கத்திற்கு பணம் விரயமே ஏற்படுவதில்லையா? மதுரை மாநாட்டில், லட்சக் கணக்கான மின் விளக்குகள் போடப்பட்டு, அந்த விளக்குகளுக்கு மின்சாரம் வருகின்ற

கம்பத்திலிருந்தே மின்சாரம் சப்ளை எடுக்கப்பட்டது—நான் சொல்லவில்லை, ஏனென்றால், நானு வந்தேன், எனக்கா அழைப்பு அனுப்பப்பட்டது, மதுரைக்கு வரச்சொல்லி,—மதுரை மக்கள் சொல்கிறார்கள். ஐந்து லட்சம் வசூல் என்று சொல்கிறார்கள். மாநாட்டுக்கு வந்தவர்களே 20 லட்சத்திற்கு மேல் என்று சொல்கிறார்கள். மதுரை நகரமே இந்திர லோகம் மாதிரி அலங்கரிக்கப்பட்டது என்று பேசுகிறார்கள். அது மாத்திரமா? ஆறு லட்சம் ரூபாய்க்கு ஏர் கண்டிஷன்ட் ஹோட்டல் உருவாகியிருக்கிறது என்றும் சொல்கிறார்கள். ஆனால் வசூல் மாத்திரம் ஐந்து லட்சம் என்று . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அம்மையார் தேசிய காங்கிரசில் இருந்தபோது, இந்திரா காங்கிரஸ் கட்சியினர் மதுரையில் மாநாடு ஒன்று நடத்தினார்களே, அந்த மாநாடும் இப்படித்தான் நடைபெற்றது என்கிறார்களே, அது பற்றித் தெரியுமா? தெரிந்திருக்காது. காரணம், அழைப்பு வராமல் போகவில்லை என்று சொன்னார்களே! அப்போது அழைப்பு வந்திருக்காது. (கரவொலி).

திருமதி த. ந. அனந்தநாயகி: அந்த மாநாட்டை விட உங்கள் மாநாடு நன்றாக இருந்தது (கை தட்டல்). மக்கள் பலத்தால் அல்ல, எண்ணத்தால் அல்ல, வெறும் அலங்காரத்தால். எந்த அளவுக்கு முடியுமோ, அந்த அளவுக்கு செலவு செய்திருக்கிறார்கள். செய்தித் தாள்களில் பெருமையாக வந்த செய்தி. எப்படி இந்தச் செலவை சரிக் கட்டினார்கள் என்பது தெரியாது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், இவ்வளவு மின்சாரம் வீணாகியிருக்கிறது. இந்த மாதிரி பணம் விரயமாகின்ற போது, விவசாயி—உணவு கொடுத்து மானத்தைக் காக்கின்ற விவசாயி—அவன் இரண்டு பைசாவை இறக்கு என்று சொன்னால், இறக்கிவிட்டால், என்ன நடந்து விடும் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிலையில், விவசாயத் துறையிலே, என்ன பிரச்சினை என்றால், தீர்க்கட்டும், தீர்க்காமல் போகட்டும்—முடிந்த வரையில் துப்பாக்கிப் பிரயோகத்தைத் தடுத்திருக்கலாம். இறந்து போன விவசாயத் தொழிலாளர்கள்—பாவம் 14 உயிர்கள்—நல்ல இளைஞர்கள்—அவர்கள் என்ன குற்றம் செய்தார்கள்? துப்பாக்கியால் சுட்டு மண்டையைப் பிளந்திருக்கிறார்கள். துப்பாக்கிச் சூடு என்று சொன்னால், எப்படிப் பிரயோகப்படுத்த வேண்டும் என்று முறை இருக்கிறது. முதலில் ஆகாயத்தைப் பார்த்து சுட வேண்டும். பிறகு முட்டிக்குக் கீழே சுட வேண்டும். 'Shoot to scare and then

you must shoot to kill.' முதலில் பயமுறுத்துவதற்காக வானத்தை நோக்கி சுட வேண்டும். ஆனால், மண்டையை நோக்கிச் சுட்டிருக்கிறார்கள். என்ன காரணத்திற்காக துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது? துப்பாக்கிச் சூடு என்றால், காலை நோக்கி நடத்த வேண்டும். ஆனால் விவசாயிகளின் மண்டையை நோக்கிப் பாய்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, இந்தத் துப்பாக்கிச் சூட்டில் கையாள வேண்டிய முறைகள் கையாளப்படவில்லை என்பதை இங்கே உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு சென்னை நகரில் இருக்கின்ற சிம்ஸன் பிரச்சனையை எடுத்துக்கொள்வோமானால் கடந்த 10 மாதகாலமாக அது மூடப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 15 ஆயிரம், 16 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை இழந்து கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பம் எல்லாம் —மனைவி மக்கள் எல்லாம் படும்பாடு சொல்ல முடியாததாக இருக்கிறது. அவர்களுக்கு இதுவரை வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க இந்த அரசாங்கத்தினால் முடியவில்லை. இந்த லட்சணத்தில் தொழிலாளர் அரசு இது என்று சொல்லிக்கொள்கிறீர்கள். நான் இதைச் சொல்லும்போது உடனே உங்கள் முதலமைச்சர் சொல்வார். அதற்காகத்தானே அறுவர் குழு அமைக்கப்பட்டது. அதிலே நீங்கள் கன்வீனராக இருந்தீர்களே. உங்களுக்கே தெரியாதா நிலைமை என்று சொல்வார்கள். அறுவர் குழுவில் என்னை நியமித்தால்தான் எனக்கு அங்குள்ள சில உண்மை விபரங்கள் தெரியவந்தன.

எந்தப் பிரச்சனையை எடுத்துக்கொண்டாலும் நீங்கள் கட்சிக் கண்ணோட்டத்தோடுதான் பார்க்கிறீர்கள். எங்கே இடம் கிடைக்கும்? எப்படி நாம் உள்ளே நுழையலாம் என்றுதான் நீங்கள் நினைக்கிறீர்களே தவிர, பிரச்சனைகளின் உண்மையானக் காரணங்களை அறிந்து, அதற்குத் தக்க பரிகாரம் காண வேண்டுமென்ற எண்ணம் இல்லை, உங்களுக்கு. அப்படி நடந்துகொண்டதனால்தான் வன்முறைகள் வளர்ந்தன, சிம்சன் கம்பெனியிலே அதன் எதிரொலிதான் உங்கள் கட்சியைச் சார்ந்த ஒருவனே—பிரதாப் சந்திரன்—கொலை செய்யப்பட்டிருக்கிறான். ஒரு பிரச்சனையை அணுகும்போது, அங்கே எந்தக் கட்சி இருக்கிறது, கம்யூனிஸ்டு இருக்கிறதா, காங்கிரஸ் இருக்கிறதா என்று பார்க்காமல் எந்தக் கட்சியாக இருந்தாலும் நியாயமான முறையில் அணுக வேண்டும். யார் தவறு செய்தாலும் அவர்களை அடக்கி ஒடுக்க வேண்டும். தவறு செய்பவர்கள் நாம் அடக்கப்படுவோம், ஒடுக்கப்படுவோம் என்ற உணர்வை அடையும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுதான் உண்மையான அரசாங்கம்; நீடித்து நிற்கும் அரசாங்கமாக இருக்க முடியும்.

நல்ல சம்பளம் வாங்கிக்கொண்டிருந்த சிம்ஸன் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 16 ஆயிரம் பேர் இப்போது வேலையில்லாமல் தெருவிலே திரிகிறார்கள். திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் தராசுபிடித்து திராட்சைப் பழம் விற்கும் காட்சியைத்தான் பார்க்க முடிகிறது. அவர்களுக்கு அந்த தராசு பிடித்துப் பழக்கமில்லாததால் அந்த வேலையையும் செய்ய முடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள், இன்னொரு கம்பெனியில் தகராறு; அதாவது நேற்றைக்கு முன்தினம் அடிசன் கம்பெனியில் வேலை நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது. இன்று காலை பி. அண்டு சி. மில் மூடப்பட்டதாகத் தெரிகிறது. இந்த அரசாங்கத்தின் கொள்கை இப்படியே போய்க்கொண்டிருந்தால் தமிழ்நாட்டை எங்கே கொண்டுபோய் விடுமோ எனக்குத் தெரியாது.

சிம்ஸன் தொழிற்சாலை திறக்கப்படுவதற்காக பேச்சுவார்த்தை நடத்துவதாகச் சொல்கிறார்கள். பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்று சொல்லி அங்கு என்னதான் பேசுகிறார்களோ தெரியவில்லை. ஏன் இப்படி பேச்சுவார்த்தை என்று சொல்லி காலங்கடத்த வேண்டும்? எந்தக் கட்சியினர் தவறு செய்தாலும் தக்க முறையில் தண்டித்து, வேலை செய்வோருக்கு வழிசெய்து கொடுக்க வேண்டியது ஒரு அரசாங்கத்தின் பொறுப்பா இல்லையா? அரசாங்கத்திற்கு அந்தப் பொறுப்பு இருக்குமானால் ஏன் தயக்கம் காட்ட வேண்டும்? பேச்சுவார்த்தையில் இப்போது இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியும் தி.மு.க. வோடு இணைந்திருப்பதாகத் தெரிகிறது. எனக்கு ஒரு சந்தேகம். உங்கள் முதலமைச்சர் இடதுசாரி கம்யூனிஸ்டுகளுக்கு அன்பு காட்டி வருகிறாரோ என்று. ஏனென்றால் இப்போது பி. ராமமூர்த்தி இந்தப் பிரச்சனையை தீர்த்து விடலாம் என்று சொல்லியிருக்கிறாராம். ஆனால் அங்குள்ள தொழிலாளர்கள் அதனால் எப்போது உதைவிழுமோ என்று கவலை கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, குசேலரை ஒரு கொலைக் குற்றத்திற்காக கைது செய்திருக்கிறார்கள். அவர் பங்களூரிலிருந்து சென்னைக்கு கொண்டுவரப்பட்டார். ஆனால் அவர் சென்னைக்குக் கொண்டுவரப்படக் கூடிய செய்தி மாலைமுரசு, தினத்தந்தி போன்ற பத்திரிகைகளில் செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். ஒரு 'அக்கியூஸ்ட்டை' கொண்டு வரும்போது, அந்த செய்தி வெளியே தெரியலாமா? அவர் 4 மணிக்கு சென்ட்ரல் ஸ்டேஷன் வந்து சேருகிறார் என்று குறித்த காலம் நேரத்தோடு செய்தி வெளியிடுகிறார்கள். ஒரு கொலைக் குற்றவாளிக்கு வரவேற்பு கொடுப்பதற்காகவா அப்படி செய்ய வேண்டும்? அந்தக் குற்றவாளியைக் கொண்டு வருவதற்கு ஒரு 'வான்' கிடையாதா? ரயிலில் தானா கொண்டு வரவேண்டும்? அதையும் எல்லோருக்கும் தெரியப்படுத்தித்தானா கொண்டுவரவேண்டும்? நம்பூதிரிபாட் கூட அவரைப் பார்த்துச் சென்றதாக அறிந்தேன். என்

நம்பூதிரிபாட் இடமிருந்து சர்டிபிகேட் வாங்குவதற்காகவா அப்படிச் செய்தீர்கள்? திறமையான ஒரு அரசாங்கமாக இருந்தால், இந்த மாதிரியான செய்திகள் வெளியாகாமல் அல்லவா பார்த்துக்கொள்ளும்? இந்த ஒன்றே போதுமே உங்கள் ஆட்சியின் திறமையைக் காட்ட.

கடந்த 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியிலே தொழில் மயமாகப் பூத்துக் குலுங்கிய தமிழ்நாடு இன்று வறண்டு, துவண்டு காணப்படுகிறதே. அதை இல்லை என்று உங்களால் சொல்ல முடியுமா? நாங்கள் இந்த மாதிரியான குற்றச் சாட்டுக்களைச் சொல்லும்போது, "நாங்கள் 184 பேர்கள் இருக்கிறோமே நீங்கள் என்ன சொன்னால் எங்களுக்கு என்ன" என்று நீங்கள் சொல்லலாம். ஒன்றை மட்டும் உங்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். உங்களுக்கு ஓட்டளித்த ஏழை மக்கள், பாட்டாளி மக்கள் முச்சந்தியிலே உங்களைச் சந்திக்கத்தான் போகிறார்கள். அவர்கள் உண்மையான தங்கள் பிரச்சனைகளைச் சொன்னால் அவர்களை சைக்கிள் செயினால் தாக்குவது, தடியால் அடிப்பது இதுதானே இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவதாகச் சொல்லி ஓட்டு கேட்டீர்கள். கொஞ்சநாள் சில இடங்களிலே போட்டீர்கள். அதையும் எப்போது கைவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில் தேசிய நெருக்கடி வந்தது. அதைக் காரணமாகக் காட்டி படியரிசித் திட்டத்தையும் கைவிட்டீர்கள். எண்ணெய் விலை ஏறிக்கொண்டே போகிறது. விலைவாசி விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கிறது. அன்றைக்கு 3 ரூபாய் 4 ரூபாயாக இருந்த எண்ணெய் இன்றைக்கு 8 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. 3 ரூபாய்க்கு எண்ணெய் விற்கப்படும்போதுதானே நீங்கள் விலைவாசி போராட்டம் நடத்தினீர்கள், கலெக்டர் ஆபீஸ் முன்னால் மறியல் செய்தீர்கள். இப்பொழுதாவது, உங்கள் ஆட்சி வந்தப் பிறகாவது அதற்கு ஒரு பரிகாரம் கண்டீர்களா? முன்பு இருந்ததைவிட விலை ஏறிக்கொண்டே போகிறதே தவிர இறங்கக் காணோமே. ஆனால் ஒன்று மட்டும் செய்திருக்கிறீர்கள். ஒரு உயிருக்கு என்ன விலை என்று நிர்ணயித்திருக்கிறீர்கள். பொருள்களுக்கு விலை நிர்ணயிக்கப்படவில்லை. துப்பாக்கிச் சூடா. உயிர் போய்விட்டதா? இந்தா அதன் விலை ரூ. 5,000. இதைத்தான் இன்று நீங்கள் செய்துகொண்டிருக்கிறீர்கள்.

எதிர்க்கட்சிகள் என்ன சொன்னாலும் அதைப்பற்றி இந்த அரசாங்கம் கவலைப்படுவதாகவே தெரியவில்லை. அதற்குப் பதிலாக எதிர்க்கட்சிக்காரர்களை எந்தெந்த நேரத்தில், எந்தெந்த இடத்தில் எப்படி எப்படி தாக்குவது என்று தான் திட்டமிடுகிறீர்கள். உடனே உங்களுக்கு பாதுகாப்பு தரவில்லையா என்று கேட்கலாம். எனக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டது. அதற்காக நான் முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் (சிரிப்பு). நான் நன்றி மறப்பவள் அல்ல (மீண்டும் சிரிப்பு).

கடந்த தேர்தலின்போது குடந்தை இராமலிங்கம் தாக்கப்பட்டார். ஒரு எம்.எல்.ஏ. யின் வீட்டில் இருக்கும்போது வீடு புகுந்து தாக்கப்பட்டார். விவசாயிகள் போராட்டத்தின்போது சுப்பு, கிருஷ்ணசாமி நாயுடு போன்றவர்கள் வீடுகள் எல்லாம் தாக்கப்பட்டிருக்கின்றன. பொறுப்புள்ள தலைவர்கள் வீடுகள், எம்.எல்.ஏ.-க்களின் வீடுகள் எல்லாம் தாக்கப்படுகின்றன. போலீசார் அதையெல்லாம் கண்டும் காணாததுபோல் இருக்கிறார்கள். எம்.எல்.ஏ.-க்களின் நிலையே அப்படியானால் சாதாரண ஏழை எளிய மக்களின் நிலை என்னவாகும் என்பதை அவர்கள் எண்ணிப்பார்க்க மாட்டார்களா? போலீஸார் ஏதாவது நடவடிக்கை எடுக்கத் தொடங்கினால், நடவடிக்கையா எடுக்கிறீர்கள் தலைமைச் செயலாளர் ராயப்பாவின் நிலை உங்களுக்குத் தெரியுமா என்று கேட்கிறார்கள்; அவர்களை மிரட்டுகிறார்கள். அதனால் அதிகாரிகள் சரியான நடவடிக்கை எடுக்க முடியவில்லை. பத்திரிகைகளிலே கண்டித்து செய்தி வெளியிட்டால் உடனே அந்த பத்திரிகை அலுவலகம் தாக்கப்படுகிறது. பத்திரிகை அலுவலர்கள் தாக்கப்படுகிறார்கள். பத்திரிகை மீது வழக்குத் தொடுக்கிறார்கள். குற்றஞ்சாட்டியவர்கள் மீது வழக்குப் போடுகிறார்கள்.

சட்ட அமைச்சர் ஊரான திருப்பத்தூரில் உள்ள ஒருவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு நடந்துகொண்டிருக்கும்போது அதை வாபஸ் வாங்கிக்கொண்டார்கள். அப்படிப்பட்ட வழக்குகளை ஏன் அரசாங்கம் போட வேண்டும். ஏழை எளிய மக்களைப் பயமுறுத்துவதற்காகத்தான் என்று நான் சொல்கிறேன். வழக்கைப் போட்டுவிட்டு கோர்ட்டுக்குப் போ என்றால், கோர்ட்டுக்குப் போவது சாதாரண விஷயமா? கோர்ட்டுக்கும், வக்கீல் வீட்டுக்கும் நடந்து நடந்து கால் ஓய்ந்து விடுமே; அவன் உயிரே போய்விடுமே (குறுக்கீடு). ஆமாம். 5, 6 வருடம் ஒரு வழக்கு நடந்தால், அதற்குள் நடந்து, நடந்து அவர் உயிரே போய்விடும். நானும் ஒரு வக்கீல்தான். அதனால் எனக்கும் அது தெரியும் (சிரிப்பு). தண்டவாளம் இல்லாத ஊரிலே ஒருவன் தண்டவாளத்தைப் பெயர்த்தான் என்று வழக்குப் போடுகிறார்கள். அங்கே ஏது தண்டவாளம் என்று கேட்டால் கோர்ட்டிலே போய் சொல் என்கிறார்கள். ஆகஸ்ட் 1, 1967-ல் ஒரு வழக்குப் போட்டார்கள். இப்போது 1972 ஆகஸ்டு நடக்கிறது. 5 வருடங்களுக்கு மேலாகியும் இன்னும் அந்த வழக்கு கோர்ட்டிலே இருக்கிறது. இப்படி பல தொழிலாளர்கள் மீது வழக்குப் போட்டிருக்கிறார்கள். உண்மையிலே தொழிலாளர் நன்மையைக் கருதும் அரசாங்கமாக இருந்தால் இப்படிச் செய்வீர்களா? வழக்குப் பதிவு செய்தாலும், சம்பந்தப்பட்டவர் குற்றவாளியா இல்லையா என்று முடிவு செய்ய சீக்கிரமாக அந்த வழக்கை முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லவா? தேசியத் தோழர்கள் யார்மீது சந்தேகம் வந்தாலும் சரி, அவர்களைக்

கண்டவுடனே பிடித்து வழக்குப் போடுகிறார்கள். கேட்டால் கோர்ட்டிலே பார்த்துக்கொள் என்கிறார்கள். எங்காவது போராட்டம் என்றால் தேதியத் தோழர்களின் வீடுகளில் புகுந்து குத்து, உதை என்கிறார்கள். கோர்ட்டுக்குப் போனால் அப்புறம் என்ன நடக்கும் என்பதைப் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். இந்த மாதிரிான செய்கை மிக மிக ஆபத்தானது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வியாசர்பாடியிலே ஒரு அமைச்சரின் உறவுக்காரர் போலீஸ் அதிகாரியாக இருக்கிற காரணத்தினால், அங்கே உள்ள ஒரு பர்மா அகதி அநியாயமாக அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அம்மையார் அவர்கள் பொய்யான தகவலையே சொல்லிப் பழக்கப்பட்டவர்கள். உண்மைக்கு மாறானதையே இப்போதும் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் யாரையும் குறிப்பிட்டுச் சொல்ல வில்லையே. நீங்கள் ஏன் அதற்குப் பதில் சொல்கிறீர்கள் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வியாசர்பாடி என் தொகுதியில் இருக்கிறது. அதனால் நான் அதற்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. அங்கே இருக்கும் போலீஸ் அதிகாரி எனக்கு உறவினர் என்று சொல்கிறார்கள். அது தவறான தகவல் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நாங்கள் முதல் **அமைச்சர்** அவர்களிடத்திலே மனுக் கொடுத்திருக்கிறோம். பர்மா அகதி ஒருவரை குற்றம் சுமத்தப் படாத அளவில் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று அடித்துக் கொலை செய் திருக்கிறார்கள். அதற்கு என்ன பரிகாரம்? அந்த இன்ஸ்பெக்டரை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டோம் என்கிறார்கள். இதுதானா முறை? தான் செய்த தகாத காரியத்திற்கு அவன் வீட்டிற்குச் சென்று அணு அணுவாக வேதனைப்பட்டு சாக வேண்டாமா? ஆனால் உங்கள் ஆட்சியில் நடப்பது என்ன? வேறு ஸ்டேஷனுக்கு மாற்று—முடிந்தால் நல்ல வசதியான ஸ்டேஷனுக்கு மாற்று—யாருக்கும் தெரியாது போக்கூடிய இடத்திற்கு ஒரு பிரமோஷனைக் கொடுத்து மாற்று என்கிற இந்த முறையில்தானே காரியங்கள் நடந்து கொண் டிருக்கின்றன. இது மிக மிக வருந்தத்தக்கது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்த ஊழலைச் சுட்டிக் காட்டினாலும் அந்த நேரத்தில் இது போல ஒரு பரிகாரத்தைச் செய்துவிட்டுத் தப்பித்துக்கொள்கிறீர்கள்.

அன்றைய ஆட்சிக்காலத்தில் எருக்கஞ்சேரியில் மின்சார வாரியத்திற்காக நிலம் வாங்கப்பட்டதில் ஏற்பட்ட ஊழலைப்பற்றி—அன்றைக்கு இந்த அவை யிலே எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்தவர்—இன்றைய முதல்வர் இப்படி நடக்கலாமா என்று இங்கே பேசினார்கள். அதன்பேரில் பப்ளிக் அக் கவுண்ட்ஸ் கமிட்டி அதற்கு யார் பொறுப்பாளி என்பதை எல்லாம் பரிசீலித்து ரெஸ்பான்சிபிலிடியை பிக்ஸ் பண்ணி ரிப்போர்ட் கொடுத்து எத்தனை ஆண்டு கள் ஆகின்றன? அதன்மீது நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? அதைப்பற்றி இந்த அவைக்கு ஏதாவது அறிவித்திருக்கிறீர்களா?

திருவாரூர் மார்க்கெட்டிங் சொசைடியில் 1½ கோடி ரூபாய்க்கு கோணிப் பைகள் காணாமல்போய் இருப்பதை திடீர் சோதனையில் கண்டுபிடித்தார்களே, அதற்கு இன்றையவரை என்ன பரிகாரம் தேடினீர்கள்?

One-and-half crore worth of gunny bags.

இன்னும் கூட்டுறவுத்துறையில் என்ன என்ன ஊழல்கள் நடைபெற்று வரு கின்றன. கூட்டுறவுத்துறை அமைச்சரே மினி மார்க்கெட்டிங் சொசைடி யைத் திறந்து வைக்கும்போது சொல்கிறார், கணக்கைக் கொண்டுவந்து காட் டுங்கள் என்கிறோம், 3 நாளாகக் கேட்கிறோம், கணக்கை வாங்க முடியவில்லை என்கிறார். இப்படிச் சொல்வது கூட்டுறவு அமைச்சரே. கணக்கை கேட்டு வாங்கிப் பார்க்க முடியாத நிலையில், பணத்தைக் கேட்டு எங்கே வாங்கப் போகிறார்கள் ?

(Interruption) It is under investigation? how long? how many years?

எந்த இடத்தில் நடந்திருக்கிற ஊழல்களாக இருந்தாலும் வழக்கை எங்கே துரிதப்படுத்தி நடத்தியிருக்கிறீர்கள் ? காலவரையின்றி தாமதப் படுத்துவது. மணலியில் என்ன ஆயிற்று? மணலி எண்ணை சுத்திகரிப்பு ஆலைக்காக இனும் எஸ்டேட் நிலத்தை வாங்குகிறார்கள். செட்டில்மெண்டுகூட ஆகவில்லை. நஷ்ட ஈடு கொடுத்துவிட்டார்கள். எதிர்க்கட்சியில் உள்ள நாங்கள் எண்ணிக்கையில் குறைவாக இருக்கிறோம், மீறி எதையும் செய்வோம் என்ற நிலைமையில் போய்க் கொண்டிருந்தால் நீதி விசாரணை நடக்காமல் இருக் கலாம் இந்த அநீதிகளை எல்லாம் உங்களால் மக்கள் மன்றத்தில் மறைக்க முடியாது.

திருநெல்வேலி காலேஜில் மாணவர்கள் தண்ணீர் வசதி கேட்டுத்தான் வேலை நிறுத்தம் செய்தார்கள். பேப்பர்களிலே வந்துகொண்டிருந்தது. கல்லூரியை மூடிவிட்டீர்கள்.. இன்னும் கல்லூரி திறக்கப்படவில்லை அங்கே தண்ணீர் வசதி செய்துகொடுக்கக்கூட நேரம் இல்லையா? தண்ணீர் வசதி செய்துகொடுக்கக் கூட எண்ணம் இல்லையா? இப்படிப்பட்ட நிலைமையில்தான் வெட்டர்னரி காலேஜ் இருக்கிறது. எந்த நிலையில் நாட்டுமக்கள் எப்படி உங்கள் ஆட்சி மீது நம்பிக்கை வைத்திருப்பார்கள்?

நான் ஒன்றுதான் உங்களுக்குச் சொல்ல விருப்பப்படுகிறேன். உங்கள் ஆட்சியில்—நீங்கள் என்ன என்ன வாக்குறுதிகளை மக்களுக்குக் கொடுத்தீர்களோ அவற்றை நிறைவேற்றவில்லை. ஜனநாயக ரீதியாக எழுப்பப்படுகிற பிரச்சினைகளுக்கும் உங்களால் ஜனநாயக ரீதியில் தீர்வு காண முடியவில்லை. அடக்கு முறைகளினால் தீர்வு காண முற்படுகிறீர்கள், இது சரியான முறை அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டக் கல்லூரி மாணவர்கள் தேர்தல் என்ன ஆயிற்று? பர்ஸ்ட் கிளாஸ் மாணவர்கள் எங்கே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்? வடிகட்டின திறமை என்ற முறையில் தேர்டு க்ளாஸ் மாணவர்களை எல்லாம் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். ஒரு பிராமண மாணவனுக்கு கூட சீட் கொடுக்கப்படவில்லை. ஒரு மாணவனுக்குகூடவா இடம் கொடுக்கக் கூடாது?

Justice must seem to be done.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சட்டக் கல்லூரியில் உள்ள 700 இடங்களில் 29 இடங்கள் பிராமண மாணவர்கள் பெற வேண்டும், 35 இடங்களை பிராமண மாணவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நேற்றுவரை எனக்குக் கிடைத்த தகவல் ஒருவர் கூட இடம்பெறவில்லை என்பதுதான். 35 பேர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதற்கு நன்றி.

விவசாயிகளுடைய பிரச்சினையை எடுத்துக்கொண்டாலும், தொழிலாளர்களுடைய பிரச்சினையை எடுத்துக்கொண்டாலும் நீங்கள் ஜனநாயக ரீதியில் அவற்றை அணுகி நல்லமுறையில் தீர்ப்பதற்கு முற்படுவதில்லை, பெரும் அளவு நிர்வாகம் சீர்குலைந்து வருகிற நிலையில் மக்களைத் திசை திருப்பிவிடுவதற்காக பிரிவினை என்று பேசி சட்டத்தின் கரத்தில் அகப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக மாநில சுயாட்சி என்ற போர்வையில் விஷ வித்துக்களை நாட்டில் தூவி வருகிறீர்கள். மதுரை மகாநாட்டில் முன்னால் முதலமைச்சரை வைத்துக்

கொண்டே பொறுப்புள்ள சட்டசபை உறுப்பினர்களே பேசுகிறார்கள். ஒருவர் சொல்கிறார், 'பிரிவினையைக் கைவிடவில்லை, ஒத்தித்தான் போட்டிருக்கிறோம்' என்று. இன்னொருவர் பேசுகிறார், 'இராணுவம் தான் வரட்டுமே, என் கை கத்திக்கு ஈடு கொடுக்குமா?" என்கிறார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: "வரட்டும் இராணுவம் என் கை கத்திக்கு ஈடு கொடுக்குமா?" என்று பேசியது யார் என்று சொல்ல முடியுமா?

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் பத்திரிகைகளில் வந்ததைத்தான் சொல்கிறேன்.

I don't have first-hand information. I did not attend. I am not a D.M.K. Member.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அங்கிருந்து இங்கு வந்திருக்கிற போது, இங்கும் வரலாம். (பலத்த சிரிப்பு)

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் அங்கே இருந்து இங்கே வந்ததிலே என்ன தப்பு இருக்கிறது? நீங்களும் தான் அங்கிருந்து, அங்கிருந்து, இங்கே வந்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அம்மையார் அவர்கள் தங்களுக்குள் கட்சி வித்தியாசம் இல்லை என்பதுபோலச் சொல்கிறார்கள். அதை பொன்னப்ப நாடார் ஒத்துக்கொள்கிறாரா?—அவரை இக்கெட்டில் மாட்ட வேண்டும் என்பதற்குக் கேட்கவில்லை. விஷயம் தெளிவுபடட்டும் என்பதற்காகத்தான் கேட்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: I will not walk into the trap of the Hon. Chief Minister.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதில் இருந்து திரு. பொன்னப்ப நாடார் அதை ஒத்துக்கொள்ளவில்லை என்று தெரிகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: எங்களைப்பற்றி நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். நீங்கள் உங்கள் கட்சி லட்சியங்களைப் புரிந்துகொண்டால் போதும். மாநில சுயாட்சி, மாநில சுயாட்சி என்று பேசி வருகிறீர்களே, ராஜமன்னார் கமிட்டி ரிப்போர்ட்டை சட்டசபையில் வைத்து விவாதித்தீர்களா? ஒரு குழு ஒன்றைப் போட்டீர்களே, அவர்களது அறிக்கையைப்பற்றிப் பரிசீலனை செய்

தீர்களா? மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தரப்பட வேண்டும் என்றால் என்ன என்ன அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்கிறீர்கள்? ராஜமன்னார் கமிட்டியில் நூறு கோடி ரூபாய்க்குட்பட்ட திட்டங்கள் எல்லாம் மாநிலத்தில் இருக்க வேண்டும் என்கிறார், அதை கேட்கிறீர்களா? கன்கரன்ட் லிஸ்டில் இருக்கிற எல்லா சப்ஜெக்டும் ஸ்டேட் லிஸ்டுக்கே வரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அதைக் கேட்கிறீர்களா? திட்டவட்டமாக இன்ன வேண்டும் என்று எங்கே கேட்கிறீர்கள்? அன்றைக்கு 'அடைந்தால் திராவிடநாடு இல்லாவிட்டால் சுடுகாடு' என்று சொல்லிச் சொல்லியே மக்களை ஏமாற்றி வந்தீர்கள், முடிவில் அதைவிட்டுவிட்டீர்கள். இன்றைக்கு 'அடைந்தால் மாநில சுயாட்சி இல்லாவிட்டால் தனியாட்சி' என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே தவிர—கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது, எங்கே வரையறையாக இன்ன இன்ன வேண்டும் என்று தெளிவுபடுத்தியிருக்கிறீர்கள்? மாநாட்டிலே ஒருவர் குறிப்பிடுகிறார், நாங்கள் நினைத்தால் ஒரு தீர்மானம் போட்டுத் தனியே பிரிந்து விடுவோம் என்று. தீர்மானம் போட்டுவிட்டால் தனியே பிரிந்துவிட முடியுமா? நீங்கள் 184 பேர்கள் இருக்கிறீர்கள் என்கிற காரணத்தினாலே எங்களை வேண்டுமானால் பயமுறுத்தி வாக்கவுட் செய்ய வைத்துவிட்டீர்கள். முதல் அமைச்சரை உட்கார வைத்துக் கொண்டே—பிரிவினையைப் பற்றி ஒருவர் பின் ஒருவராகப் பேசினீர்களே, பாவம், முதலமைச்சர் அவர்களுக்கே மயக்கம் வந்துவிட்டது—மதுரை மாநகரில்!

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உடல்நலக் குறைவு உடையவர்களைக் கேலி செய்வதே உங்கள் வழக்கம், பழக்கம், வாடிக்கை.

திருமதி த. ந. அனந்தநாயகி: உங்களையும் மீறி உங்கள் கட்சிக்குள் இருக்கிறவர்கள் உங்களை வைத்துக் கொண்டே அந்தக் கருத்தைச் சொல்லி முதல் அமைச்சர் என்ன சொல்கிறார் பார்க்கலாம் என்று பேசுகிறார்கள். நீங்கள் அவர்கள் பிடியில் இருந்தும் தப்பிக் கொண்டுவிடுகிறீர்கள். பாராட்டுகிறேன். மக்களைத் திசை திருப்பிவிட மாநில சுயாட்சிக் கோரிக்கையைத் தவிர வேறு இல்லை. எந்தக் காரியத்தை எடுத்தாலும் கட்சிக்கண்ணோட்டத்தோடுதான் செய்யப்படுகிறது. அதிலே கட்சித் தலைவரும் நீங்கள் தான் ஆட்சித் தலைவரும் நீங்கள் தான். எல்லாக் காரியங்களும் கட்சிக் கண்ணோட்டத்தோடுதான் நடக்கிறது.

This Government is a Government of the D.M.K., for the D.M.K, by the D.M.K.,

என்பதாகத்தான் அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிறதே தவிர வேறு இல்லை. வட்டங்கள் ஆளுகின்றனவே தவிர சட்டங்கள் ஆளவில்லை என்று தெரிவித்து நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முழுமனதோடு ஆதரித்து என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டு வந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஃபார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் முழுக்க முழுக்க எதிர்த்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வந்திருக்கக் கூடிய டாக்டர் ஹாண்டே சுதந்திரா கட்சியைச் சேர்ந்தவர். அந்த சுதந்திராக் கட்சியை ஸ்தாபித்தவர் பெருமதிப்பிற்குரிய, அரசியல் மேதை என்று சொல்லப்படுகின்ற இராஜாஜி அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அந்த இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது இந்த சட்டமன்றத்திலே நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அவர்மீது இந்த சட்டமன்றம் நம்பிக்கை வைத்திருக்கிறதா என்று அவர் பெரும்பான்மையாக இருக்கிற கட்சி ஆளுகிற பொழுதே, அவர் முதல்வராக இருக்கிற பொழுதே நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். ஆளுகின்ற அரசு மீது, நம்பிக்கை இல்லையென்று மக்கள் பிரதிநிதிகள் வாயிலாக, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருகின்ற மரபைத்தான் சட்டமன்றங்களிலே கேள்விப்பட்டிருக்கிறோம். அந்த மரபுக்கு மாறாக, இராஜாஜி அவர்கள் முதல்வராக இருந்தபொழுது நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதற்கு என்ன காரணம்? 1952-ம் ஆண்டு தேர்தல் முடிந்தபொழுது, தேவர்குலத் திருமகன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் அருப்புக்கோட்டை நாடாளுமன்ற தொகுதியிலும் முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியிலும் நின்று, ஒரு சேர வெற்றி பெற்றிருந்தார்கள். ஒருவரே இரண்டு இடங்களிலும் இருக்கமுடியாது என்ற காரணத்தினால், அருப்புக்கோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, சட்டமன்ற உறுப்பினராக இருக்க முடிவு செய்தார். அதன் காரணமாக, அருப்புக்கோட்டை நாடாளுமன்ற தொகுதிக்கு மறு தேர்தல் வந்தது. எதிர்க் கட்சியின் சார்பாக, திரு. எம். டி. ராமசாமியை நிறுத்தினார்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பாக இராஜாத்தி குஞ்சிதபாதத்தை நிறுத்தினார்கள். அந்தத் தொகுதிக்கு இராஜாஜி

அவர்கள் பேச வந்திருந்தார்கள். பேசிக் கொண்டிருந்தபொழுது அந்த அம்மையாருக்கு ஓட்டுப் போடுங்கள் என்று சொல்ல மறந்துவிட்டார்கள். மேடையிலிருந்த ஒருவர் அதை நினைவுபடுத்தியவுடனே, இராஜாஜி அவர்கள் துரிதமாக ஒன்று சொன்னார்கள். இந்தத் தேர்தல் என்பது வேறு ஒன்றுமே இல்லை. ஒரே ஒரு பிரச்னை தான். நான் முதல்வராக வந்திருக்கிறேன். நான் வேண்டுமா, வேண்டாமா என்று தீர்ப்பு கூறுவதுதான் அருப்புக்கோட்டை நாடாளுமன்ற தேர்தல். நான் வேண்டுமென்று சொன்னால் இராஜாத்திக்கு ஓட்டுப் போடுங்கள், வேண்டாமென்று சொன்னால், எம். டி. ராமசாமிக்கு ஓட்டுப்போடுங்கள் என்று சொன்னார். மக்கள் வேண்டாமென்று சொல்லி விட்டார்கள். ஒரு பெரிய அரசியல் மேதை, இந்தியாவிலே மிக உயர்ந்த பதவி என்று சொல்லக் கூடிய கவர்னர் ஜெனரல் பதவியை வகித்தவர், மத்திய அரசாங்கத்திலே மந்திரியாக இருந்தவர், கவர்னராகக் கூட இருந்தவர், முனிசிபாலிட்டி சேர்மன் பதவியிலிருந்து, இந்தியாவின் மிக உயர்ந்த பதவி யான கவர்னர் ஜெனரல் பதவி வரை வகித்தவர், மக்கள் அவரை வேண்டா மென்று சொன்ன பிறகு, இந்தச் சபையிலே நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வந்தார். எதை வைத்துக்கொண்டு? நியாயத்தை வைத்துக்கொண்டு அல்ல. அன்றைக்கு இந்தச் சட்டசபையிலே 375 பேர் இருந்தார்கள். அந்த 375 பேரில் 152 பேர்கள் தான் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நின்று வெற்றி பெற்றவர் கள். மீதி 223 பேரும் எதிர்க் கட்சிகளின் சார்பிலும் சுயேச்சையாகவும் நின்று வெற்றி பெற்றவர்கள். எப்படியோ மெஜாரிட்டியாக்கி முதலமைச்சராக ஆனார்கள். தனக்கு மெஜாரிட்டி இருக்கிற காரணத்தாலே இங்கே நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வந்தால் நிச்சயமாக வெற்றி பெற முடியும் என்று, வெளியே மக்கள் நம்பிக்கையில்லை யென்று சொன்னாலும், சட்டமன்றத்தில் நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வந்த இராஜாஜி அவர்கள் ஸ்தாபித்த கட்சி யின் மூலம் இந்தத் தீர்மானம் வருகிறது இந்த சட்டமன்றத்தில்.

அடுத்தபடியாக, இந்தத் தீர்மானத்தை நம்முடைய இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்காரர்களும், நம்முடைய ஸ்தாபனக் காங்கிரசாரும், இந்திரா காங்கிர சாரும் ஆதரிக்கிறார்கள். இந்திரா காங்கிரசாரும், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சிக்காரர்களும் நேற்றுவரையில் நம்முடைய கூட்டணியிலே இருந்தவர்கள். 1971-ம் ஆண்டு பொதுத் தேர்தல் நேரத்திலே ஒன்றாயிருந்து, இந்த இராஜாஜி அவர்களையும், காமராஜ் அவர்களையும் காட்டமாகத் தாக்கிப் பேசி மக்கள் மத்தியிலே வாக்கு பெற்றவர்கள்தானே இவர்கள். எந்த ஸ்தாபனக் காங்கிரசும் எந்த சுதந்திராக் கட்சியும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக் கிறதோ அந்த ஸ்தாபனக் காங்கிரஸ்காரர்களையும் சுதந்திராக் கட்சியின

ரையும் எதிர்க்க வேண்டுமென்று தீவிரமாக வேலை செய்தவர்கள் இன்றைக்கு, கூட்டணியை விட்டு விலகிய காரணத்தாலே, இந்த தி.மு.க. அரசாங்கத்தைப் பற்றி மக்கள் மத்தியிலே எப்படியும் ஒரு அதிருப்தியை ஏற்படுத்தி, இந்த அரசாங்கம் சீரான முறையில் செயல்படவில்லை என்று நிரூபித்து காட்டி அதன் மூலம் இந்த ஆட்சியை கவிழ்த்துவிடலாம் என்று செயல்படுகிறார்கள். என்றைக்குப் பிரிந்தார்களோ அன்றிலிருந்தே செயல்பட்டு வருகிறார்கள்.

விவசாயிகளுக்கு விரோதமாக இந்த அரசாங்கம் போய் விட்டது என்றெல்லாம் பேசினார்கள். ஆரம்பத்திலே இருந்து நிலைமைகளை நாங்கள் தொடர்ந்து நன்றாகக் கவனித்து வருகிறோம். முதலமைச்சர் மீது அவர் கள் சொன்ன குற்றச் சாட்டு, முதலமைச்சர் சந்தித்துப் பேச மறுக்கிறார் என்பது. அதுதான் எங்களுக்குக் கிடைத்த தகவல், முதலமைச்சர் விவசாயப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச மறுக்கிறார். அவர், பேசுவதற்கு சம்மதித்திருப்பாரேயானால், பிரச்னைகளை சுமுகமாகப் பேசி தீர்த்திருக்க முடியும் என்று சொன்னார்கள். அதற்காக, நாங்கள் பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பிலே மூக்கையா தேவர் அவர்கள் தலைமையிலே ஒரு குழுவை நியமித்து, நானும் நம்முடைய வழக்கறிஞர் கந்தசாமி அவர்களும், சக்தி மோகன் அவர்களும் உட்பட மொத்தம் 5 பேர் உறுப்பினர்களாக இருந்தோம். முதலமைச்சர் பேசுவதற்கு—சுமுகமாகப் பேசுவதற்குத் தயாராக இருந்தும், சித்தமாக இருந்தும், அதற்காக நாங்கள் குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில், மணிக்காணக்காகக் காத்திருந்தும் அவர்கள் வரவில்லை. இதன்மூலம் அந்த முதல் குற்றச்சாட்டு பொய்யாகிவிட்டது என்பது நிரூபணமாகி விட்டது. விவசாயப் பிரதிநிதிகளோடு பேசுவதற்கு முதலமைச்சர் தயாராக இல்லை யென்று குற்றச் சாட்டுத் தவறான குற்றச்சாட்டு. பேசுவதற்கு முதல்வர் தயாராக இருந்தும் அவர்கள் தயாராக இல்லை.

நம்முடைய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் தங்கமணி அவர்கள், மூக்கையா தேவர் அவர்கள் இரண்டு பேர்களையும் தங்களிடத்திற்கு அழைத்திருந்தால் நாங்கள் வந்திருப்போம் என்று சொன்னார்கள். அவர் எந்த காரணத்திற்காக அப்படிச் சொன்னாரோ எனக்குத் தெரியாது. முதலமைச்சர் பேச மறுக்கிறார் என்றதற்கு அவர் பேசுவதற்குத் தயாராக இருக்கிறார் வாருங்கள் என்று நாங்கள் அழைத்தோம். ஆனால் அவர்கள் வரவில்லை. அன்றைக்கே பிரச்னை யைப் பற்றி பேசி இருப்பார்களேயானால், இவ்வளவு துப்பாக்கிச் சூடுகள், அசம்பாவிதங்கள், நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்காது. இந்த அசம்பாவிதங் களுக்கு முன்னாலேயே பேசி முடிவு எடுத்திருக்க முடியும். அவர்கள்

ஏற்கனவே ஒரு முடிவை எடுத்து விட்டார்கள். அதனால் வரவில்லை. அந்த முடிவை எடுத்த பின்னர் அந்த முடிவிற்கு மாறுதலாக அவர்கள் வரத் தயாராக இல்லை. அது என்ன முடிவு? எப்படியாவது, இந்த 5-ந் தேதி பந்தை நடத்தியாக வேண்டும். இந்த 5-ந் தேதி பொது வேலை நிறுத்தம் நடந்தாக வேண்டும். இந்த பந்தின் மூலம் எப்படியாவது 10, 12 பிணங்கள் விழ வேண்டும். அந்தப் பிணங்களை வைத்துக் கொண்டு இந்த அரசுக்கு விரோதமாக மக்களைத் திரட்ட வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருந்தார்கள். அதற்கு விரோதமாக, இந்த சமரசப் பேச்சுவார்த்தைக்கு வர அவர்கள் தயாராக இல்லை. பேச்சு வார்த்தைக்கு உடன்படுவதில் என்ன தவறு இருக்கிறது என்று எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

இன்றைக்கு டாக்டர் கலைஞர் முதல்வராக இருக்கலாம். நாளை இன்னொருவர் முதல்வராக வரலாம். ஆனால் அந்த முதல்வர் என்ற பீடத்திற்கு, முதலமைச்சர் பதவிக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையை, சிறப்பை, ஜனநாயகமாபைக் கொடுக்க மறுப்பார்களானால் எப்படி ஜனநாயகம் சிறப்பாக இருக்கும். முதல்வர் அவர்கள் ஆளுகின்ற பொறுப்பை ஏற்றிருக்கின்றார்கள். மக்களுக்கு ஏற்படுகின்ற குறைபாடுகளை, குறைகளை முதலமைச்சரிடம் பேச வேண்டும். அவர் அதை ஏற்கட்டும் அல்லது மறுக்கட்டும். பேசுவதற்கே தயாராக வராமல் பேச்சு வார்த்தைக்கே தயாராக இல்லாமல், 5-ம் தேதி பொது வேலை நிறுத்தத்தை ஏற்பாடு செய்துவிட்டு, அந்த பொது வேலை நிறுத்தத்திலே தி.மு. கழகத்துக்காரர்கள் ஆயுதங்களை வைத்து, ரௌடிகளை வைத்து, வன்முறைகளைச் செய்தார்கள் என்று சொல்வது எவ்வளவு பெரிய அபாண்டம்?

துப்பாக்கியால் சுட்டதைப்பற்றிப் பேசினார்கள். நான் ஒன்று கேட்கிறேன் அவர்கள் இதயத்தில் கைவைத்துச் சொல்லட்டும், போலீஸார் கையிலே துப்பாக்கி எதற்காகக் கொடுத்திருக்கிறோம்? துப்பாக்கி தேவைதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வன்முறையாளர்கள் தலைதூக்கும் பொழுது, சமூக விரோதிகள் நாட்டின் அமைதியைக் குலைக்கும்பொழுது, சட்டம் ஒழுங்கு சீர்குலைக்கப்படுகின்ற நேரத்திலே துப்பாக்கியினால்தான் அந்த ஆபத்தான நிலைமையிலிருந்து நாட்டைக் காப்பாற்ற முடியும். துப்பாக்கியால் சுடவே கூடாது என்றால்; அவர்கள் கையில் துப்பாக்கியைக் கொடுக்காமல், ஒரு தம்புராவையும் சப்ளா கட்டையுமா கொடுத்து பஜனை பாடச் சொல்வது? துப்பாக்கி அவர்கள் கையில் கொடுக்கப்பட்டு இருப்பதே, வன்முறையாளர்கள் தலைதூக்கினால், அல்லது அமைதிக்குக் குந்தகம் விளைகின்ற நிலைமை ஏற்பட்டால், துப்பாக்கிப் பிரயோகம் இருக்கத்தான் செய்யும்.

சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தத் தயங்கக் கூடாது. அப்படி நடத்தாவிட்டால் நாட்டில் சட்டம் ஒழுங்கே குலைந்துவிடும். அந்த வகையில்தான் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றத்தான் போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினார்கள். துப்பாக்கிப் பிரயோகம் நடத்தாமலேயே எந்த ஒரு இடத்திலேயாவது அமைதியை நிலைநாட்டியிருக்க முடியும் என்று உங்களால் சொல்ல முடியுமா?

நான் கோவைக்குப் போயிருந்தேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரையில் பார்த்தேன், குளக்கரையில் பார்த்தேன், சாத்தூரில் பார்த்தேன். இங்கேயெல்லாம் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படாமல் இருந்திருந்தால் வன்முறைகள் தலைதூக்கி பல கொடுமைகள் விளைந்து, அதன் காரணமாக உயிர்கள் பலிபோய் இருக்கும். ஆகவேதான் அவர்கள் இதை வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்தார்கள். கம்யூனிஸ்ட் கட்சியினரை நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். எனக்குத் தெரியாது, 14 பேர்கள் இறந்தார்களே, அதிலே அந்தக் கட்சிக்காரர் ஒருவராவது உண்டா? அப்படிப்பட்ட துரதிஷ்டம் . . . .

திரு. கே. டி. கே. தங்கமணி: கம்யூனிஸ்ட் கட்சியின் நண்பர்கள் இரண்டு பேர்கள் இருக்கிறார்கள். அது வேண்டுமானால் துரதிருஷ்டமாக இருக்கலாம்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள கம்யூனிஸ்டுகளைப்பற்றி எனக்குத் தெரியும். 1942-ஆம் ஆண்டு ஆகஸ்டு போராட்டத்திலேயிருந்து கம்யூனிஸ்டு கட்சியில் உள்ளவர்களோடு அரசியல் ரீதியாக தொடர்பு உள்ளவனாக இருந்திருக்கிறேன். 1948-ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் அகில உலக இளைஞர் மாநாடு என்று ஒரு மாநாடு அருப்புக்கோட்டையில் நடந்தது. அப்பொழுது வாக்குரிமை வயது வந்தவர்களுக்கு எல்லாம் இல்லை, சொத்துள்ளவர்களுக்கும், படித்தவர்களுக்கும் தான் வாக்குரிமை இருந்தது. அப்பொழுதுதான் நான் நகராட்சி மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருந்தேன். அப்பொழுது, சுதந்திரம், ஜனநாயகம், சமத்துவம்' என்ற இந்த மூன்றுக்கும் பாடுபடும் இளைஞர் ஸ்தாபனம் அது என்று சொன்ன காரணத்தினாலே நான் அப்பொழுது இளைஞனாக இருந்த காரணத்தினால் அதனால் ஈர்க்கப்பட்டிருந்தேன், அப்பொழுது நடந்த அந்த மாநாட்டிற்காக நான் எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்வதற்காக பொறுப்பு எடுத்துக் கொண்டு நடத்தினேன். அந்த மாநாடு நாளைக் காலை நடக்க இருக்கிறது. ஆனால் அதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னால் என்னுடைய வீட்டுக்கு அவர்கள் வந்தார்கள். போலீஸ்

ஸ்டேஷனைத் தாக்க வேண்டும், துப்பாக்கிகளைப் பறிமுதல் செய்ய வேண்டும், போலீஸ் தாக்கினால் எதிர்த்தாக்குதல் நடத்த வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். நான் சொன்னேன், நீங்கள் சொன்ன கொள்கைகள் வேறு, உலகத்தின் சுதந்திரம் எங்கு பாதிக்கப்படுகிறதோ அங்கு சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டும், சமத்துவம் எங்கு பாதிக்கப்படுகிறதோ அங்கு சமத்துவத்தை ஏற்படுத்த வேண்டும், உலக இளைஞர்கள் ஸ்தாபனம் என்று சொன்னதால்தான் நான் அதற்கு ஒப்புக் கொண்டு எல்லா ஏற்பாடுகளையும் செய்து அவர்களுக்காக முனிசிபல் பள்ளியில் தங்க ஏற்பாடு செய்து சினிமாக் கொட்டகையில் கூட்டம் நடத்த ஏற்பாடுகளை எல்லாம் செய்தேன், ஆனால் இன்றைக்கு நீங்கள் போலீஸ் ஸ்டேஷனைத் தாக்க வேண்டும் எதிர்த் தாக்குதல் நடத்த வேண்டும் என்று சொன்னால் அந்தக் கண்மூடித்தனமான புரட்சிக்கு நான் தயாராக இல்லை என்று சொன்னேன். அதற்காக என்னைப் பேடி என்று எண்ணிவிடாதீர்கள். நீங்கள் துப்பாக்கி வைத்திருந்தால் என்னிடம் துப்பாக்கியைக் கொடுத்தால் நான் தயார். ஆனால் அவர்கள் என்ன செய்தார்கள் என்றால் தேங்காய்க்குள் பாம் வைத்திருந்தார்கள். எனக்குத் தெரியாமலேயே என்னுடைய வீட்டிலே தண்ணீருக்குள் பாம் வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். தண்ணீரில் இருக்கும்பொழுது வெடிக்காது, வெளியே எடுத்தால் வெடித்துவிடும். நான் அதை அவர்களிடமே கொடுத்தனுப்பினேன். அந்த பாம் வெளியேறிய பிறகு போலீஸ் லாரி அங்கே வருகிறது. இப்படி கம்யூனிஸ்டு கட்சியினர் எந்தப் போராட்டமாக இருந்தாலும் வன்முறையை வைத்துக் கொண்டு சாமர்த்தியமாக நடத்தி அதிலே அவர்கள் சிக்காமல் பின்னால் வருகிறவர்கள் சிக்கிக்கொள்ளுமாறு வைத்துவிடுவார்கள். அப்படிச் செய்வதில் அவர்கள் கைதேர்ந்தவர்கள். இது 1948 ஆம் ஆண்டு நிகழ்ச்சி. காரணம் அவர்கள் அப்படியே பயிற்றுவிக்கப்பட்டவர்கள், அதிலேயே பழக்கப்பட்டவர்கள் என்பதுதான்.

கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்தக் கட்சியின் உறுப்பினர்களாக இருக்கின்றவர்கள் எத்தனை பேர்கள் என்று கேட்டேன், ஒன்றிரண்டு பேர்கள் இருப்பதாகச் சொன்னார்கள். இருக்கலாம். விவசாயிகளுடைய போராட்டத்தில் கோரிக்கைகளை நிச்சயமாகப் பேசித் தீர்த்திருக்க முடியும். இவர்கள் இராமநாதபுரம், சாத்தூர் போன்ற இடங்களில் என்ன பிரச்சாரம் செய்தார்கள் என்றால், இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்த அரசை கவிழ்க்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆனால் தகுந்த காரணம் கிடைக்கவில்லை. நாம் தகராறு செய்து, சட்டம் ஒழுங்கைக் கெடுத்து விடுவோமானால் அதை வைத்துக் கொண்டு அந்த அம்மையார் அவர்கள் இந்த அரசைக் கலைப்பார்கள்,

நீங்கள் தாராளமாக இதிலே ஈடுபடுங்கள், மத்திய அரசு இதற்கு உதவி செய்யும். இங்கே உள்ள அரசுக்கு போலீஸ் வந்தால், மத்திய அரசு போலீஸ் 24 மணி நேரத்தில் வந்து உதவி செய்யும். இதற்காக மத்திய சி.ஐ.டி. இங்கே பரவலாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. கொஞ்சங்கூடப் பயப்பட வேண்டாம், அச்சம் வேண்டாம் என்று அவர்கள் துணிவு கொடுத்தார்கள்.

விவசாயிகள் விவசாயிகள் என்று சொன்னால் நாங்கள் எல்லாம் விவசாயிகள் இல்லையா? நான் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதியாகிய காரியாபட்டித் தொகுதியில் 336 கிராமங்கள் இருக்கின்றன. ஒரு பேரூராட்சிகூடக் கிடையாது, நகரமே இல்லாத தொகுதி. அங்கே இருப்பவர்கள் எல்லாம் சாதாரண விவசாய மக்கள்தான். 1970 ஆம் ஆண்டுதான் ஒரே ஒரு பேரூராட்சி ஏற்பட்டது. அங்கேயுள்ள 336 கிராமங்களிலும் எந்தவித தொழிலும் கிடையாது. விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்கள்தான் 100-க்கு 99 பேர்கள் இருக்கிறார்கள். அந்தத் தொகுதியிலே எந்தவிதமான அசம்பாவிதமும் கிடையாது. கட்டைவண்டிகளை நிறுத்தவில்லை. காரணம், அந்தத் தொகுதியில் உள்ளவர்கள் விவசாயிகள், விவசாயிகளாக இருக்கிறார்கள். வேறு ஒரு பகுதியிலே உள்ள விவசாயிகளும் விவசாயிகள்தான். வேறு ஒரு பகுதியிலே உள்ள விவசாயிகள் தூண்டிவிடப்பட்டார்கள், தைரியம் கொடுத்தார்கள், தவறான பாதையைக் காட்டினார்கள், அதனுடைய விளைவுதான் துப்பாக்கிப் பிரயோகமே தவிர, வேறு இல்லை. ஆனால் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததற்காக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது சரியல்ல. துப்பாக்கியை உபயோகப்படுத்தாமல் இருந்தால் சட்டம், ஒழுங்கு பாதுகாக்கப்பட்டிருக்கும் என்று சொல்ல முடியாது. முன்னாலே நீதி விசாரணை கேட்டோம் என்றால், அப்பொழுது சுட்டவர்கள் மக்களைத் துரத்தி வந்து சுட்டார்கள். பள்ளிக்கூடத்திலே இருந்தவர்களை, வயல்களிலே இருந்தவர்களை, பேசிக் கொண்டிருந்தவர்களை, திண்ணையில் உட்கார்ந்திருந்தவர்களை அழைத்துவந்து சுட்டார்கள், அதற்காக நீதி விசாரணை கேட்டோம். இங்கே போலீசார் அப்படிச் சுட்டார்கள் என்று சொல்ல முடியுமா? அப்படிச் சொல்ல முடியுமா? எந்தக் குற்றத்தையும் செய்யாத மக்களைச் சுட்டுக் கொன்றதால் நீதி விசாரணை கேட்டோம். இங்கே சட்டம் ஒழுங்கிற்குப் பாதகம் ஏற்பட்ட பிறகு அதைப் பாதுகாப்பதற்காகத் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. அதற்கும் நீதி விசாரணையா? அதைக்கூட யார் மறுத்தார்கள்? நீதி விசாரணை நீதி விசாரணை என்று சட்டமன்றத்தில் கேட்கிறீர்களே? அதை யார் மறுத்தார்கள்? முதல்வரவர்கள் உங்களைக் கேட்காமலேயே நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்தார்கள். துப்பாக்கிப்

பிரயோகம் நடந்த இடங்களில் நீதி விசாரணை நடக்கும், நீதிபதிகளை உயர்நீதி மன்ற நீதிபதி நியமிப்பார் என்று சொல்லவில்லையா? அவ்வாறு முதல்வர் அறிவிக்கவில்லையா, பத்திரிகைகளில் பார்க்கவில்லையா? பிறகு பேச்சுவார்த்தைகளின்போது நீதி விசாரணை வேண்டாமென்று நீங்கள் ஒத்துக் கொண்டீர்கள். அப்படி ஒத்துக்கொண்ட பிறகு கையெழுத்துப் போட்டு விட்டு அங்கே போய், ஏன் இதை ஒத்துக் கொண்டீர்கள் என்று மக்கள் கேட்பார்களே, கேட்கிறார்களே அதற்குப் பதில் சொல்ல முடியவில்லை என்ற பிறகு வெளி மாநில நீதிபதிகளை வைத்து விசாரிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அதைக் கேட்டோம் அதை மறுத்தார்கள். அதனால்தான் நாங்கள் நீதி விசாரணை வேண்டாமென்று சொன்னோம், இங்கேயுள்ள நீதிபதிகளை வைத்து விசாரித்தால் நியாயம் கிடைக்காது என்று சொல்கிறார்கள். இது நியாயம்தானா, முறையான பேச்சுதானா? இங்கே தமிழக நீதிபதிகளை வைத்து விசாரித்தால் நீதி கிடைக்காது என்று சொல்வது என்ன நியாயம்? அதே கருத்தை இன்னொரு கோணத்தில் இருந்து கூறுகிறேன், வெளி மாநில நீதிபதிகளை வைத்து விசாரிக்க வேண்டுமென்று சொன்னால் வெளிமாநிலங்களில் இந்திரா காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலங்களின் நீதிபதிகளை வைத்து விசாரித்தால் இங்கே எப்படி எங்களுக்கு நீதி வழங்குவார்கள் என்று சொல்ல முடியாதா? அதுவும் வேண்டாம், இதுவும் வேண்டாம், சர்வதேச நீதிபதிகளை வைத்து விசாரிக்க வேண்டுமென்று சொல்வதா? அரசியல் கட்சிக்காரர்கள், ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு அப்படித்தான் ஒத்துக் கொண்டோம் என்று மக்களிடம் தைரியமாகச் சொல்லுங்கள். ஏன் அப்படி வந்துவிட்டீர்கள் என்று மக்கள் கேட்பார்கள், வெளி மாநில நீதிபதிகளை வைத்து விசாரிக்க வேண்டுமென்று சொன்னோம், அவர்கள் மறுத்தார்கள், அதனால் வேண்டாம் என்று சொல்லிவிட்டு இங்கே வந்து நீதிவிசாரணை வேண்டுமென்று கேட்பது சரியான முறைதானா. இது சரியான அரசியல் நோக்கம் ஆகாது. நீதி விசாரணை வேண்டுமென்றால், நீங்கள் ஒப்புக்கொள்வதற்கு முன்பே நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்து விட்டார் முதல்வர் அவர்கள். அதை அப்பொழுதே ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். அன்றைக்கு வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்று சொன்னார்கள். நேற்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. தங்கமணி அவர்கள் பேசும்பொழுது அந்த வழக்குகள் மீண்டும் நடைபெறும் என்று முதல்வரவர்கள் அறிவித்தார்கள். முதல்வரவர்களின் கருத்தை, அந்த நேரத்தில் சொல்லப்பட்ட அந்தக் கருத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே துப்பாக்கிப் பிரயோகம் நீங்கலாக, கட்டிடங்கள் இடித்தது, அலுவலகங்கள் தாக்கப்பட்டது போன்ற மற்ற வழக்குகளை வாபஸ் பெற வேண்டுமென்று முடிவு செய்திருக்கும்

பொழுது நேற்று ஏதோ ஒரு நிகழ்ச்சியில் முதல்வரவர்கள் அறிவித்தார்கள். தயவு செய்து முதல்வரவர்கள் அந்தக் கருத்தை மாற்றி எல்லா வழக்குகளையும் வாபஸ் பெறப்பட்டது என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நேற்று மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி, அவர்கள் பேசும்பொழுது அந்த வழக்குகள் நடைபெறலாம் என்று சொன்னதால் அதை ஏற்றுக் கொண்டேனே தவிர வேறல்ல, உடன்பாட்டில் அன்றைக்கு ஏற்றுக் கொண்டபடி, நடைபெற வேண்டாமென்று நம்முடைய பார்வர்ட் பிளாக் கட்சித் தலைவர் கூறியதை நான் இப்பொழுதும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: வாபஸ் வாங்க அறிவித்தது குறித்து நன்றி. அடுத்தபடியாக, எனக்கு முன்னால் பேசிய அம்மையார் அவர்கள் எதை எதையோ பேசினார்கள். வன்முறையில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் அப்படிச் செய்யலாமா, இப்படிச் செய்யலாமா, கட்டிடத்தைத் தாக்கலாமா என்றெல்லாம் கேட்டார்கள். நான் அதைப்பற்றி விரிவாகப் பேச வேண்டியதில்லை. எனக்கு நன்றாகத் தெரியும், டெல்லியிலே ஐந்தர்மந்தர் கட்டிடத்தையும், கல்கத்தாவிலே சின்டிகேட் அலுவலகத்தையும் அவர்கள் கைப்பற்ற அகிம்சாபூர்வமான முறையில், உண்ணாவிரதமிருந்து பட்டினி கிடந்து சாகக்கூடிய நிலையில் காந்திய முறையில் போராடி அவைகள் கைப்பற்றப்பட்டன என்ற உண்மை நாட்டிற்கும் உலகத்திற்கும் தெரியும். ஐந்தர்மந்தர் பற்றிய விவகாரத்தில் நீதிமன்றத்திலே தீர்ப்பளிப்பதற்கு முன்னாலேயே அங்கே போனவர்களெல்லாம் ஒரு கையிலே உத்திராட்சமும், ஒரு கையிலே கமண்டலமும் இவைகளை வைத்துக் கொண்டு இந்திரா காங்கிரஸிற்கு இந்த அலுவலகத்தைத் தர வேண்டும், இப்படி இருப்பது சரியல்ல, கொடுக்காவிட்டால் சாகும்வரையில் உண்ணாவிரதம் இருப்போம் என்று உண்ணாவிரதம் இருந்து சாகும் தருவாய்க்கு வந்த பிறகு, செத்துப் போவார்கள் என்ற நிலைக்கு வந்த பிறகு அந்தக் கட்டிடத்தைப் பெற்றார்கள் அல்லவா! (குறுக்கீடு). அம்மாதிரியான ஒரு கட்சியின் நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசும்பொழுது அதனுடைய வரலாற்றையும் சிந்திக்க வேண்டும். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சார்ந்திருக்கும் கட்சிக்குள்ள ஒரு பாரம்பரியத்தை மனத்தில் வைத்து, அந்தப் பாரம்பரியத்தின் அங்கமாக இருக்கிறோம் என்ற நிலையில் அவர்கள் பேச வேண்டும். வன்முறையாளர்கள் யார்? தூண்டிவிட்டவர்கள் யார்? தெரியாதா? அந்தச்

[திரு. ஏ. ஆர். பெருமாள்] [1972 ஆகஸ்ட் 12

சரித்திரத்தைச் சொன்னால் பொன்னப்ப நாடார் அவர்கள் உடனே எழுந்து விடுவார்கள், முதுகுளத்தூரைப் பற்றியே பேசுகிறார்கள் என்று. கொஞ்சம் அவருக்கு வேகம் வரும். அதனால் விட்டு விடுகிறேன். எப்பொழுதும் அந்தப் பாட்டுத்தானா, அதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சத்தம் போடுவார்கள்.

முதுகுளத்தூரில் என்னென்ன செய்யப்பட்டது என்பது இந்தச் சட்ட மன்றத்தில் பலமுறை பேசப்பட்டது. வன்முறையை நடத்தியவர்கள் யார்? அதுதான் கேள்வி. இங்கே அமைதியாக ஹர்த்தால் நடத்துகிறோம் என்றால் எதற்காக இத்தனை பெரிய ஏற்பாடு? எனக்குத் தெரியும், அருப்புக் கோட்டைத் தாலுக்காவில், சாத்தூர் தாலுக்காவில், ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலுக் காவில் எப்படிப்பட்ட உணர்ச்சிகள் எழுப்பப்பட்டன என்பது தெரியும். அந்த உணர்ச்சிகளை எப்படி உருவாக்கினார்கள் என்பதும் தெரியும். இல்லாது போனால் எங்கே வந்தது குழப்பம்? எங்கே நடந்தது துப்பாக்கிப் பிரயோகம்? இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எந்தெந்தப் பகுதிகளிலே யெல்லாம் பாவலாக இருக்கிறார்களோ அங்கே யெல்லாம் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது? இல்லையா? மானமதுரையில் கிழப்பசலை, சின்னகனவூர் போன்ற இடங்களி லிருந்து வந்தவர்கள் புகுந்தார்கள். 1946-ம் ஆண்டில் ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் நேரு அவர்கள் ஒரு இடத்திற்குப் போயிருந்தார், அங்கே உள்ளே விடாமல் இரண்டு பயனட்டுகள் தடுத்தார்கள். அவர்களைத் தட்டிவிட்டு உள்ளே நுழைந்தார். அந்த நிகழ்ச்சி வேறு மாதிரியாகக் கூறப்பட்டது. பயனட்டுகள் குத்திவிட்டார்கள் என்று சொல்லப்பட்டது. பிறகு பொது வேலை நிறுத்தம் நடந்தது, அப்பொழுது நான் காங்கிரஸ் காரியதரிசியாக இருந்தேன். அப்பொழுதும் கடையை அடைத்தார்கள், தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்திற்கு வேண்டுகோள் விடப்பட்டது, அந்த நகரமே ஸ்தம்பித்து இருந்தது. இப்பொழுது அப்படியா நடந்தது? கடையைத் திறக்காமல் போடுங்கள் என்று வேண்டுகோள் வைக்கலாம், ஆனால் அரிவாள் கம்புகளோடு வேல் கம்புகளோடு சென்று கடையைப் பூட்டுகிறாயா என்ன என்று ஆத்திரத் தோடு தாக்கினார்கள். இதுவா ஹர்த்தால், இதுவா பந்த்? அப்படி நீங்கள் மட்டும்தான் வன்முறையால் அடக்க முடியுமா? அதே மாதிரி வன் முறையை உபயோகித்து கடையைத் திறக்க வைக்க முடியும் என்ற நிலையில் வன்முறை வாராதா? அந்த வன்முறையை உபயோகிப்பது உங்களுக்கு மட்டும்தான் சொந்தமா? ஆகவே, முறையோடு நீங்கள் பிரச்னையைப் பார்த்திருந்தால் முறையாகப் பிரச்னை தீர்க்கப்பட்டிருக்கும். வன்முறையில் கடையை மூட வைக்க முடியும் என்றால் கடையைத் திறக்க வைக்கவும் வன் முறை வாராதா? அப்படி இம்மாதிரி ஏற்பட்டால் போலீசார் துப்பாக்கிப்

1972 ஆகஸ்ட் 12] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

பிரயோகம் செய்யும் நிலைமை வாராதா? இப்படித்தான் தொடங்கியது வன் முறை? நீங்கள் அமைதியாக அறிக்கையை விட்டுவிட்டு, வேண்டுகோள் விட்டுவிட்டு, நோட்டீசைப் போட்டுவிட்டு, பந்த் நடப்பதற்கு ஒரு நாளைக்கு முன்பு கூட்டம் போட்டு, வியாபாரிகளே கடைகளை அடையுங்கள், தொழிலாளர் களே வேலைக்குப் போகாதீர்கள் என்று வேண்டுகோள் விடுத்து விவசாயி களுக்கு ஒத்துழைப்புத் தாருங்கள் என்று கேட்டுக் கொண்டு வீட்டிலேயே இருந் தார்களா? வீதிவீதியாகச் சுற்றினார்கள். நான் அப்பொழுது சென்னையிலே இருக்கிறேன். 11 மணிக்குத் தொலைபேசி மூலம் கேட்டேன்.

ஒரு மணிக்கு கேட்டேன், எல்லாக் கடைகளும் திறந்திருக்கின்றன, பூட்ட வில்லை என்று சொன்னார்கள். மூன்று மணிக்குக் கேட்டேன், அவ்வளவு கடைகளும் பூட்டப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். ஒரு மணிக்கு கேட்டபோது பூட்டவில்லை என்று சொன்னீர்களே, இப்போது எல்லாக் கடை களும் பூட்டப்பட்டிருக்கின்றனவே என்று சொல்கிறீர்களே என்று கேட்டதற்கு அவர்கள் சொன்னார்கள், அங்கிருந்து ஆட்கள் வந்து கலாட்டா செய்கிறார்கள், ஆகவே வியாபாரிகள் பயந்து கொண்டு கடைகளை அடைத்திவிட்டார்கள் என்று சொன்னார்கள். நிர்ப்பந்தப்படுத்தி, பயமுறுத்தி நாட்டுமக்களுக்கு முன் விவசாயிகள் பிரச்னையை வைக்க முடியாது.

உழவர் பெருமக்கள் நல்ல உள்ளம் படைத்தவர்கள்தான், அவர்களைப் போல் நல்ல உள்ளம் படைத்தவர்களைப் பார்க்க முடியாது. அப்பேர்ப்பட்ட மக்களுக்காக வாதாடும்போது நேர்மையின் அடிப்படையில், நியாயத்தின் அடிப்படையில் கோரிக்கைகளை வைத்து வாதாடும்போது இப்படிப்பட்ட முறைகள் தேவையில்லை. ஏன் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்? இந்தத் தீர்மானம் நிச்சயமாக நிறைவேறாது என்பது அவர்களுக்குத் தெரியும். நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சியை கவிழ்த்து விட முடியுமா, முடியாது என்பது அவர்களுக்கு உறுதியாகத் தெரியும். பின் ஏன் கொண்டுவந்தார்கள்? இதைக் கொண்டு வருவதால் மூன்று நான்கு நாட்கள் பேசலாம், சட்டமன் றத்தில் பேசுவதன் மூலம் நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தலாம், அதன் மூலம் இந்த அரசுக்கு விரோதமான ஒரு சூழ்நிலையை சிறிது உருவாக்கலாம் என்ற நோக்கோடும்தான் இத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர வேறு அல்ல.

தென் பாண்டி மண்டலத்திலே, இராமநாதபுரம், திருநெல்வேலி பகுதிகளில் தான் அதிகப்படியான துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது. அது நடந்த முப்பது நாட்களில் மதுரை மாநாடு நடந்தது. அலங்காரங்களை வைத்து

நடத்தினார்கள், அதிகாரத்தை வைத்து நடத்தினார்கள், ஆனால் மக்கள் பலம் இல்லை என்று சொன்னார்கள். எனக்கு வயது 48 ஆகிறது. 18-ம் வயதிலிருந்து நான் அரசியலில் இருக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : மக்கள் பலம் இல்லை என்று சொல்லவில்லை. இல்லையென்றால் 184 பேர்கள் வந்திருக்க மாட்டார்கள். நிறைய மக்கள் பலம், நிறைய அலங்காரங்கள் எல்லாம் இருந்தன என்றுதான் சொல்லப்பட்டது.

திரு. ஏ. ஆர். பெருமாள் : 1945-ல் மகாத்மா காந்தியடிகள் மதுரைக்கு வந்தார்கள். அதே ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் கூட்டம். அதையும் நான் பார்த்தேன். 1946-ல் நேரு அவர்கள் ஒரு சுற்றுவளிச் சுற்றுப்பயணம் செய்தார்கள். விடுதலை கொடுக்காவிட்டால் நாட்டில் பெரியதொரு போராட்டம் ஏற்படும் என்று போராட்ட உணர்ச்சியைத் தூண்டிவிடச் செய்யும் சுற்றுப்பயணத்தின்போதும் பார்த்தேன். பின்னால் இருபெரும் தலைவர்கள், ராஜாஜி அவர்களும், தேவர் அவர்களும் சந்தித்துப் பேசினார்கள் தமுக்கம் மைதானத்தில். ஐந்து லட்சம் பேர்கள் வந்திருந்தார்கள். அதையும் நான் பார்த்தேன். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் இந்தக் கூட்டங்களையெல்லாம் காட்டிலும் அதிகப்படியான கூட்டத்தை, உணர்ச்சியை, எழுச்சியை அந்த மதுரை மாநாட்டில்தான் நான் பார்த்தேன். கைபோடும் உலக உருண்டை, பாரிஸ் நகர் கோபுரம், மின் அலங்காரங்கள் இவைகளை வைத்து கூட்டத்தைச் சேர்த்து விட்டார்கள் என்றார்கள். மதுரை மாநகர மக்கள் இதைவிட அபாரமான வேடிக்கைகளைக் கண்டிருக்கிறார்கள். அவற்றைப் பார்க்க வந்தவர்கள் ஒருசிலர் இருக்கலாம். இவ்வளவு லட்சக்கணக்கான பேர்கள் கூடியது அவைகளைப் பார்ப்பதற்காகத்தான் என்று சொல்வது பயித்தியக்காரத்தனமான எண்ணம். அதற்கு அப்பாற்பட்டு ஒரு உணர்ச்சி இருக்கிறது. அதை கூர்ந்து கவனிக்க வேண்டும். அது என்ன உணர்ச்சி? 30 ஆண்டுகளில் நான் அங்கு கண்டிராத ஒரு காட்சியாக இருந்தது அந்தக் காட்சி. எப்படி அந்த உணர்ச்சி வந்தது? அதற்குக் காரணம் யார்? டாக்டர் கலைஞர் அவர்களின் அரசைக் கவிழ்க்க எண்ணுகிறார்கள். விவசாயிகள் கிளர்ச்சிக்குப் பின்னால் துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பின்னால் கலைஞரின் ஆட்சிக்கு எதிரான உணர்ச்சியைப் பரப்பினார்கள். ஆனால் கலைஞரின் ஆட்சிக்கு விரோதமாகச் செல்ல மக்கள் தயாராகயில்லை. இந்த அரசுக்கு விரோதமாக மக்கள் அணிவகுக்கவில்லை. இப் போராட்ட நிகழ்ச்சிகளின் போது முதல்வர் அவர்கள் கையாண்ட முறையை, எடுத்த நடவடிக்கைகளை தென் பாண்டி நாட்டு மக்கள் முழுக்க முழுக்க ஆதரிக்கிறார்கள் என்ற

உணர்ச்சியைக் காட்டுவதற்காகத்தான், கலைஞரின் பின்னால் தென் பாண்டி நாட்டு மக்கள் இருக்கிறார்கள் என்ற காட்சியைத்தான் நான் அங்கு கண்டேன். (ஆரவாரம்). வீரம் செறிந்த பூமி அது. நியாயத்திற்கு உயிர் கொடுத்த பூமி அது. உண்மைக்காக ரத்தத்தைச் சிந்திய பூமி அது. அந்தப் பூமியில் பிறந்து வாழ்ந்த மக்கள் கலைஞரின் பின்னால் நியாயத்திற்காக, உரிமைக்காக குரல் கொடுக்க அல்லது உயிர் கொடுக்கவே திரண்டு வந்தார்கள். அந்தக் காட்சியை நான் மதுரை மாநாட்டில் கண்டேன். அதற்குப் பிறகும் இந்த அரசின்மீது நம்பிக்கையில்லை என்று சொல்லித் தீர்மானம் கொண்டு வந்தால் (ஆரவாரம்) எனக்குப் புரியவில்லை.

ஆக, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து என் கட்சி சார்பில் சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்லிவிட்டேன். திரு. தங்கமணி அவர்கள் சொன்னதற்கு மட்டும் ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தேவர் அவர்களோடு எனக்கோ அல்லது கழகத்திற்கோ ஒரு தொடர்பும் எப்போதும் இருந்தது கிடையாது, பற்றோ பாசமோ இருந்ததில்லை என்று அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேசும்போது எனக்கோ, அல்லது கழகத்திற்கோ தேவரின்மீது பற்றோ பாசமோ இருந்ததில்லை, எங்களுக்குள் உறவோ பற்றோ கிடையாது என்று சொல்லியிருக்கலாம். அப்படிச் சொல்லியிருந்தாலும் கூட, அவர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எவ்வளவு தவறானவை என்று சொல்லியிருக்கும் அந்தப் பாராவை மட்டும் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

'இப்போதுதான் எனக்கு ஒரு தபால் வந்தது. அது ஒரு பத்திரிகை. ரங்கூன் நகரத்தில் கடல் கடந்து நிற்கும் தமிழர்கள் முத்துராமலிங்கத் தேவரின் பிறந்த தின விழாவைக் கொண்டாடும் அழைப்பிதழ். அவரைப் பற்றி இப்போது வெறுத்து ஒதுக்கத்தக்கவராகப் பேசிக் கொண்டிருக்கிறோம். அங்கே அவர்கள் உள்ளத்தில் வைத்துக் கொண்டாடுபவராக இருக்கிறார். உலகத்தார் வைத்திருக்கின்ற கருத்து இன்றையதினம் இந்த ராஜ்ய ஆட்சியாளர் வைத்திருக்கின்ற கருத்தாகத்தான் இருக்கவேண்டும் என்பது இல்லை. அவர்கள் கருத்தே நாம் வைக்க வேண்டும் என்பது இல்லை. ஆனால் உலகத்தார் வைக்கின்ற கருத்துக்கு மதிப்பு அளிக்க வேண்டும். உலகத்தார் எல்லாம் போற்றுகின்ற உத்தமராக முத்துராமலிங்கத் தேவர் இருப்பாரானால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவரோடு கலந்து பேசி ஒரு சமாச சூழ்நிலையை அந்தப் பிராந்தியத்தில் உண்டு பண்ண என் முயற்சிக்கக் கூடாது? தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். தேவர் அவர்களோடு எங்களுக்கு தொடர்பு இருந்ததில்லை என்று பேசியிருந்தாலும், தேவர் அவர்கள் இறந்தவுடன் அவர் உட

லுக்கு அருகில் அண்ணாவை அழைத்துச் சென்றவன் நான். அன்று அனுதாபக் கூட்டத்தில் அவர்கள் பேசினார்கள். அப்போது புரட்சி நடிகர் அவர்களும் வந்திருந்தார்கள். அண்ணா அவர்கள் தேவர் அவர்களைப்பற்றி எப்படியெல்லாம் பேசினார்கள் தெரியுமா? பேசியது மட்டுமல்ல, இறுதியாக ஒரு வேண்டுகோள் விடுத்தார். சிங்கத்தைப்போல் இருந்த தேவர் திருமகன் எனும்பும் தோலுமாக ஆகிவிட்ட இந்த நிலைக்குக் கொண்டுவந்து சாகடித்த காங்கிரஸ் ஆட்சியை 67 தேர்தலில் முறியடித்தே தீருவோம் என்று தேவர் அவர்கள் பேரில் சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். அந்தக் கட்டளைப்படிதான் திராவிட முன்னேற்றக் கழகமும், பார்வர்ட் ப்ளாக்கும் எந்தச் சோதனையிலும், எந்தச் சூழ்நிலையிலும் பிரிக்க முடியாத அளவிற்கு இருந்து வருகின்றன. வோட்டு போடும்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நடுநிலைமை வகித்தார்கள், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து பேசியிருக்கிறார்கள். நடுநிலை வகிக்கக் காரணம் இருக்கிறது. நீங்கள் கழகத்தை நம்புகிறீர்களே, அவர்கள் உங்களை எப்படி நடத்தியிருக்கிறார்கள் தெரியுமா என்று கேட்பதினால் எல்லாம் எங்களைப் பிரித்துவிட முடியாது. நான் உறுதியாகச் சொல்கிறேன். உண்மையாகச் சொல்கிறேன், தெளிவாகச் சொல்கிறேன். அதற்குப் பின்னால் தென்பாண்டிய லட்சக்கணக்கான மக்களை, பின்தங்கிய மக்களை, ஏழை எளிய மக்களை, கிராமந்திரங்களில் வாழும் சாதாரண சாமான்ய மக்களை காக்கின்ற ஒரே அரசு, சிந்தித்து முடிவு கட்டிய ஒரே அரசு கலைஞர் அரசு ஒன்றுதான். அகத்திற்கு 400 கண்டார், புறத்திற்கு 400 கண்டார், தமிழ் சாதியின் ஒரே அடையாளச் சின்னம். ஏழை எளிய மக்களுடைய தூய பீடம், பின்தங்கிய மக்களுடைய கண்கண்ட தெய்வம் கலைஞர் கருணாநிதி என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எத்தனை இடர்ப்பாடுகள் இருந்தாலும் சரி, பார்வார்ட் பிளாக் கட்சியையும், தி.மு.க.வையும் யாரும் பிரித்துவிட முடியாது. அதே நேரத்தில் இப்படிப்பட்ட உறவு இருக்கிற நேரத்தில், இப்படிப்பட்ட உறுதியான தோழமை இருக்கிற காரணத்தினால், நியாயத்தை எல்லாம் மறந்து, உண்மையை எல்லாம் மறந்து பேசுவோம் என்று முடிவு கட்டிவிடாதீர்கள். மனச்சாட்சியோடு, எது நியாயம் என்று பட்டதோ, எது உண்மை என்று தெரிகிறதோ அதைத் தான் சொல்வோம், சொல்கிறோம். தேவர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள், உறுதியோடு உண்மையைப் பேச வேண்டும், உண்மையை இறுதிவரையில் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்வார்கள். அந்தக் கொள்கை கோட்பாட்டில் வளர்ந்தவர்கள் நாங்கள். தோழமை, உறவு என்று இருந்தாலும், நியாயத்திற்குப் புறம்பாக, உண்மைக்குப் புறம்பாக எதையும் பேசுவோம் என்று யாரும் எதிர்பார்க்க வேண்டாம் என்று கூறிக் கொண்டு, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முழுமையாக எதிர்த்து அமர்கிறேன். வணக்கம்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: பேரவைத் தலைவர் அவர்களே, எனது அருமை நண்பர் ஹாண்டே அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் நம்பிக்கையில்லாதவன் என்ற முறையில் என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன்.

மற்றவர்கள் பிரேரேபிக்காமல், கூட்டுக் கட்சியில் உள்ள காங்கிரஸ் தலைவர்கள், கம்யூனிஸ்டு கட்சியில் உள்ள எனது மதிப்புமிக்க தலைவர் அவர்கள் இவர்கள் இருக்க, ஹாண்டே அவர்களை இந்தத் தீர்மானத்தை பிரேரேபிக்கச் செய்தது (ஒரு குரல்: அவர் முதலில் கொடுத்தார்) (எல்லோரும் கொடுத்தார்கள்) ஆனால் ஹாண்டே அவர்கள் பிரேரேபிக்க வேண்டிய நிலைமை வந்ததைப்பற்றி நான் மிகவும் ஆலோசனை செய்கிறேன். அதைப்பற்றி சிந்திக்கிறேன். ஹாண்டே அவர்கள் பிரேரேபிக்கும்பொழுது சொன்னார், பேசுகிற பொழுது சொன்னார். (குறுக்கீடு) நீங்கள் யாரும் பேசும்பொழுது நான் இடைமறிக்கவில்லை. மிக அமைதியாக இருந்து உங்களுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தேன். காரணம் நான் பேசும்பொழுது நீங்கள் நான் என்ன பேசுகிறேன் என்பதை அமைதியாக இருந்து கேட்டுக் கொண்டிருப்பதற்குத்தான். ஒருவர் பேசும்பொழுது கூட நான் வாய் திறந்து ஒரு வாதமும் சொல்லாமல் அமர்ந்திருந்தேன் என்றால் நான் கொண்டிருந்த அரசியல் நாணயத்தை நீங்களும் கைக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையில்தான். தயவுசெய்து நான் பேசுவதைக் கேளுங்கள். கேட்டதற்குப் பிறகு என்னுடைய பேச்சின் பேரில் உங்களுக்குப் பதில் சொல்வதற்கு உரிமை இருக்கிறது, அதில் தாராளமாகச் சொல்லலாம். நான் அதே மாதிரி உங்கள் பேச்சை பொறுமையோடு கேட்டுக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதை உங்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அடிக்கடி இடை மறிப்பது இருக்கிறதே, அது அரசியல் நாகரிகம் அல்ல. நான் திறந்து சொல்கிறேன். நாகரிகம் அல்ல, எந்தப் புறத்திலும் தான். அப்படிச் செய்வதினால் ஒன்றும் சாதித்து விட முடியாது. பேச்சுரிமை என்பது ஜனநாயக அடிப்படையிலிருந்து கிடைத்திருக்கிறது. அந்த உரிமையைத்தான் நான் இங்கு உபயோகப்படுத்துகிறேன். நான் மிஸ்டர் ஹாண்டே அவர்களை கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன், தலைவர் அவர்களின் சார்பாக.

[திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்] [1972 ஆகஸ்ட் 12

ஹாண்டே அவர்கள் அந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசுகிற பொழுது, இடைமறித்து முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற பொழுது, 'இது என் தலைவிதி' என்று சொன்னார். அவர் மறந்து இருக்க மாட்டார்கள். நீங்கள் எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தீர்கள். அவர் தீர்மானத்தைப் பிரேரேபித்தபொழுது தலைவிதி என்று குறிப்பிட்ட கருத்தை நான் சிந்தித்தேன். இம் மாதிரியான சூழ்நிலையை தனக்கு வந்ததே என்பதை அவர் தலைவிதி என்று சொல்கிறாரோ, தென் துருவமும் வட துருவமும் சேர்ந்து இருக்க வேண்டும் என்று சேர்ந்து தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார் என்பதை தலைவிதி என்று சொல்கிறார்களா அல்லது சுதந்திராக் கட்சியிலிருந்து கொண்டு இப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டியிருந்ததே என்பதை தலைவிதியாகக் கருதுகிறாரா என்பது தெரியவில்லை. எதைத் தலைவிதி என்று கருதுகிறார் என்று புரிந்துகொள்ள முடியவில்லை.

எதுவாக இருக்கட்டும். இந்தத் தீர்மானத்தை அவர்கள் பிரேரேபித்தது ஒரு வகையில் நல்லது. சுதந்திராக் கட்சி இந்தப் பேரவைக்கு இரண்டு பேருபகாரத்தைச் செய்திருக்கிறது. ஒன்று ராஜாஜி அவர்களால் செய்யப்பட்டது. இரண்டு ஹாண்டே அவர்களால் செய்யப்பட்டது. ஒருமுறை மதிப்புமிக்க ராஜாஜி அவர்களே தன்னுடைய சர்க்காரின் மீது நம்பிக்கை இருக்கிறது என்கின்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அன்றைக்கு இந்தத் தொப்பியைப் போட்டுக் கொண்டு பேசிக் கொண்டிருக்கும் நான் இங்கு இல்லை, என்னுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் இங்கு இருந்தார்கள். என்னுடைய கட்சியின் தலைவரை அழைத்து "என்மீது நம்பிக்கை இருக்கிறது என்ற தீர்மானத்தை நான் பிரேரேபிக்கிறேன், உங்கள் கட்சியில் உள்ளவர்கள் தயவு செய்து அந்தத் தீர்மானத்திற்கு வாக்களிக்க வேண்டும்" என்று எங்கள் தலைவரைக் கேட்டபொழுது, ஒரு எம்.எல்.ஏ-யை தூக்கிக் கொண்டு வந்து இங்கே வைத்து வோட்டு அளித்து ஒரு தலைவருடைய அந்த மந்திரி சபையைக் காப்பாற்றிய பாரம்பரிய உணர்ச்சியோடு நான் இங்கே பேசிக் கொண்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, காமராஜ் அவர்கள் முதல்வராக வந்தார். ஆறு மாதங்களுக்குப் பிறகு இடைத் தேர்தல் வந்தது. அந்தத் தேர்தலில் அவர் தோற்கும் கட்டம் இருந்தது. அன்றைக்கு இடதும் வலதும் ஒன்றாக இருந்தது. பிரிவு இல்லாத காரணத்தினால் அவர்கள் எதிர்த்தார்கள். அவர் தோற்றிருந்தால் மந்திரிசபை நிற்காது, கவிழ்ந்திருக்கும். அன்றைக்கு அவர் நேரடியாக எங்கள் தலைவர் காய்தே மில்லத் அவர்களுடைய வீட்டிற்குச் சென்றார்கள். 'நீங்கள் அமைதியை விரும்புகிறீர்கள், இந்த அமைச்சர் அவை

1972 ஆகஸ்ட் 12] [திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்]

யைக் காப்பாற்றுவதற்கு நீங்கள் எனக்கு ஆதரவு கொடுக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். அப்படிக் கேட்டுக் கொண்டது மட்டும் அல்ல. திருப்பூர் மொய்தீன் என் தொகுதியில் இருக்க வேண்டும் என்று அனுமதியையும் பெற்றார். 21 நாட்கள் அவருடன் இருந்து அந்தத் தேர்தலில் வெற்றி உண்டாக்கிக் கொடுத்து, அந்த மந்திரி சபையைக் காப்பாற்றியதற்குக் காரணமாயிருந்தேன் என்பதையும் அந்தக் கட்சித் தலைவர் அவர்களுக்கு நினைவு கூறிக் கொண்டு என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன்.

அடுத்து, எனது மரியாதைக்குரிய திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் இப்பொழுது சார்ந்திருக்கிற கட்சி இந்திரா காங்கிரஸ் கட்சி. தேர்தல் நேரத்தில் அம்மையாருடைய கரத்தையும் பலப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க நாங்கள் அவர்களுக்கு மனப்பூர்வமாக ஆதரவு கொடுத்தோம் என்ற உணர்ச்சியோடு அதையும் உங்கள் சார்பாக அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, எனது அருமைச் சகோதரர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நாம் இருவரும் கூட்டாளிகள். உங்கள் சார்பிலே அனந்தநாயகி அம்மையார் அவர்களுக்கும் சொல்கிறேன். நாங்களும் கூட்டாளிகள். கேரளத்தில் கொஞ்சம் நாட்டம் விடுங்கள். கேரளத்தில் இன்றைக்கு உங்கள் மந்திரிசபை நிலைத்திருப்பதற்குக் காரணமாக இருப்பவர்கள் யார்? தயவு செய்து நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள். உங்கள் மந்திரிசபை நிலைத்திருப்பதற்குக் காரணமாக இருந்தது எந்தக் கட்சியோ அந்தக் கட்சியின் பிரதிநிதி என்ற முறையில் இங்கே நான் நின்று பேசுகிறேன் என்பதையும் தயவு செய்து சிந்திக்க வேண்டும் என்று கூறிக்கொள்வேன். இதை ஏன் சொல்கிறேன்? இன்னொன்றையும் சொல்கிறேன். கேரளத்தில் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறது என்று வைத்துக்கொள்வோம். இடது சாரி கம்யூனிஸ்டு கட்சியினால் கொண்டுவரப்படுகிறது அந்தத் தீர்மானத்தை அவர்கள் காரசாரமாக விவாதிக்கிறார்கள். அப்படி நம்பிக்கையில்லை என்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருகிற பொழுது, ஒரு கிளர்ச்சியை முதலில் நடத்துகிறார்கள். அது தானே வழக்கம், தொடக்கம். முதலில் குழப்பம், அதில் சில பிரேதங்களை உண்டாக்கி அதைத் தூக்கி தோளில் போட்டு, கருணை காட்டுகிறவர்கள் போல் தூக்கிச்சென்று, தாங்கள் ஆதரவு காட்டி, தங்களுக்காக இத்தனை துளி ரத்தம் சிந்தப்படும், இதனால் நம்முடைய கட்சிக்குக் கிடைத்திருக்கிற பலன் என்ன என்று பரீட்சித்துப் பார்ப்பதற்காகக் கொண்டு வருகிற தீர்மானம் இருக்கிறதே, இடதுசாரி கம்யூனிஸ்டு அப்படி முயற்சித்து ஒரு தீர்மானம் கொண்டுவந்தால், அந்தத்

தீர்மானத்தை, அம்மையார் அனந்தநாயகி அவர்களும், மதிப்புமிக்க கே. டி. கே. தங்கமணி அவர்களும், 'நீங்கள் எங்களை ஆதரிக்க வேண்டும்' என்று சொன்னார்களேயானால், நான் கோளத்தில் ஆதரித்தால் அது தர்மம் என்று நீங்கள் ஒப்புக்கொள்வீர்களா என்று நான் கேட்கிறேன். இல்லை. இல்லை. அங்கே நிச்சயமாக இடதுசாரிகள் ஆதரிக்க மாட்டோம். அவர்கள் நம்பிக்கை இல்லை என்று தீர்மானம் கொண்டு வந்தால், நிச்சயமாக ஆதரிக்க மாட்டோம். உங்களோடு தான் இருப்போம். உங்களுடைய மந்திரி சபை நிற்பதற்காக அல்ல. இது எங்களுடைய மரபு. எனது பெருமைக் குரிய சுதந்திராக் கட்சி அங்கத்தினர் திரு. ஹாண்டே அவர்களே, நீங்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை மனப்பூர்வமாக எதிர்க்கிறேன். (சிரிப்பு) காரணம்? என்னுடைய வரலாற்றை அதற்காகத் தான் சொன்னேன். உங்களுக்கும். ஒரு நாட்டின் அமைதியை—ஒரு அமைதியான ஆட்சியை குழப்புவதற்குத் திட்டமிட்டுச் செய்யப்படும் செயலுக்கு என்னுடைய கட்சியையோ, என்னையோ பயன்படுத்திக் கொள்ள முடியாது. நிச்சயமாக. இங்கு குழப்பம் நுழைந்திருக்கிறது. இல்லை என்று சொல்லவில்லை. இங்கே பேசப்பட்ட மூன்று தினங்களில் பேச்சையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன். இதெல்லாம் மேடைகளில் பேசப்பட்ட பேச்சு. இந்தப் பேரவையில் பேசிய பேச்சில் புதிதாக ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனால், நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் பேரால், பேசிய காரணத்தால் தாராளமாக, மனதுக்குத் தோன்றியதெல்லாம் பேசப்பட்டிருக்கின்றன. பிறகு கேட்டால், "அப்படி நான் கேள்விப்பட்டேன்—அப்படி நடந்ததாக சொல்லப்பட்டது—அப்படி இருந்ததாகக் கேள்விப்பட்டேன் என்று சொல்வதற்கு உரிய ஒரு முறையை பின்பற்றி நடந்தது இது. பேரவைத் தலைவரவர்களே, நான் உங்கள் சார்பில் கேட்கின்றேன். இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் இருக்கிறது. நம்பிக்கை இல்லை என்றே வைத்துக் கொள்வோம். எல்லாம் வைத்துக் கொள்வோம் தான். இந்தப் பேரவையில் இருப்பவர்கள் எல்லாம் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவு கொடுத்து, இந்தக் கருணாநிதி மந்திரிசபை டிஸ்மிஸ் செய்யப்பட்டு, இந்த அவையும் கலைக்கப்பட்டதற்குப் பிறகு இந்த நாட்டு மக்கள் யாரை நம்பி ஓட்டளிக்கப் போகிறார்கள்? யார் தகுதி உள்ளவராக இருக்கிறார்கள் என்று சொல்லுங்கள். யார் இருக்கிறார்கள்? உண்டா? பிறகு ஒரு தேர்தல் வந்தாலும், நிச்சயமாக இப்போது இருப்பதை விட நீங்கள் குறைவீர்கள். (கரவொலி) நிச்சயமாக வளரமாட்டீர்கள். அவர்கள் 185 என்று இருப்பதை 195 ஆக மாற்றுவீர்களே தவிர, குறைக்க மாட்டீர்கள்,

இதுதான் நடக்கப் போகிறது. வேறொன்றுமில்லை. அப்படியிருக்க, இதற்கு ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானமா? வேலை இல்லை என்பது தான் என் கருத்து.

அரசியல் நாகரீகப்படி, நாணயமாக, ஒரு ஆட்சியில் இருக்கிறவர்களை—அவர்கள் செய்யும் குறைகளைச் சொல்லி மக்களைத் திருப்பி ஆட்சிக்கு வருவது என்பது தர்மத்திற்கு முரணானதல்ல. அதைக் கூட நான் புரிந்து கொள்ளாதவன் அல்ல. ஆனால் இது தலைகீழ்ப் பாடம். என்ன ஆச்சரியம் இது? பல்லடத்தில் இருந்த பிரேதத்தை கோவைக்கு எடுத்துச் சென்ற பிறகு மீண்டும் பல்லடத்திற்கு எடுத்து வரப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. கோவையிலிருந்து ஒரு ஆள் வந்து பல்லடத்தில் அடிபட்டு விட்டால் அந்த உடலை கோவைக்கு எடுத்துச் சென்றால், அது சரி. ஆனால் பல்லடத்திற்குப் பக்கத்தில் இருக்கிற ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர் அடிபட்டு பிரேதத்தை கோயம்புத்தூருக்கு எடுத்துச் சென்று அங்கே எல்லாம் ஊர்வலமாகக் கொண்டு வந்து பிறகு திரும்பக் கொண்டு வந்து பல்லடத்தில் அடக்கம் செய்யப்படுவது என்பது நல்ல நோக்கத்தோடு தான் செய்யப்பட்டதா? எனக்கு விளங்கவில்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, பல்லடத்திலிருந்து கோவைக்கு கொண்டு வந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது கெட்ட நோக்கத்துக்காக என்று உறுப்பினர் அவர்கள் மனசாட்சிக்கு விரோதமில்லாமல் சொல்லட்டும். அந்தப் பிண ஊர்வலத்தில் லட்சக் கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள். பார்வையிட்டிருக்கிறார்கள். இது கெட்ட நோக்கத்துக்காக என்றால், உறுப்பினர் மனசாட்சிக்கு விரோதமில்லாமல் சொல்லட்டும்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: நான் அந்தக் கூட்டம் குறைவாக இருந்தது என்று சொல்லவில்லை. அந்தப் பிரேதத்தைப் பார்வையிட யாரும் வரவில்லை, இவர்கள் மட்டும் தான் தூக்கிக் கொண்டு போனார்கள் என்று சொல்லவில்லை. அந்தப் பிரேதத்தை கோயம்புத்தூரிலிருந்து—பல்லடத்திலிருந்து முப்பது மைல்கள்—சுமந்து கொண்டு போய் ஒவ்வொரு தெருவாகச் சுற்றி, பிறகு பல்லடத்திற்குக் கொண்டு வந்து அடக்கம் செய்த நோக்கம் நல்லதா? நல்லதா என்று கேட்கிறேன். அவ்வளவு தான். இந்த நோக்கத்தில் தான் இருக்கிறது—இங்கே தான் அந்த வித்து—விஷ விதை—ஊன்றப்படுகிறது. அங்கே இருக்கிறவர்கள் தூண்டிவிடப் படுகிறார்கள். அப்போது தான் கோவையில் கடைகள் மூடப்படுகின்றன—கல்லா உடைக்கப்படுகிறது. இருந்தும், பத்தினிகள் நீங்கள் என்று சொல்கிறீர்கள். சும்மா இருந்தவர்களை

[திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்] [1972 ஆகஸ்ட் 12

யெல்லாம் சுட்டு விட்டார்கள் என்று சொல்கிறீர்கள். எதிர்த் தரப்பிலும், ஆளுந்தரப்பிலும் சொல்கிறார்கள். இந்த அராஜகத்தை செய்தவர்கள் எல்லாம் எங்கேயிருந்து வந்தார்கள்? வானவர்கள் இங்கே வந்து செய்தார்களா? எப்படி அத்தனை வண்டிகள் வந்தன்? வானவர்கள்—வேறு உலகத்திலிருக்கிற வர்கள்—அவர்கள் வந்து செய்தார்களா? அதைச் செய்தது யார்? அந்த உணர்ச்சியை உண்டாக்குவதற்கு அந்த ஊர்வலத்தைப் பயன்படுத்தினார்கள். அவ்வளவு தானே? அந்த ஊர்வலத்தின் பிரதிபலிப்பு என்ன? போராட்டம் பரவலானது. பாமர மக்கள்—அறியாதவர்களிடத்திலே இது சொல்லப் பட்டது. தூண்டிவிடப்பட்டது. இது அவசியமே இல்லை. ஆக, இதை பத்திரிகை எல்லாம் எழுதிப் பார்த்து, பரக்கப் பரக்கப் பேசிப் பார்த்து, ஒரு ரெவல்யூஷனை செய்துப் பார்த்து, போராட்டம் முடிந்த பிறகு—எல்லாவற்றிற்கும் பிறகு பார்த்தால், மிஞ்சியிருப்பது பூஜ்யம். இந்தத் தீர்மானத்தில் இது தான் ரகசியம். வேறொன்றுமில்லை. இந்தத் தீர்மானத்தின் மூலமாக அவர்கள் செய்த கடைசி முயற்சி இது. தைரியமாகப் பேசினார்கள். இன்னும் பேசுவார்கள். சரி. இதற்குப் பிறகு என்ன செய்யப் போகிறீர்கள்? இது முடிந்ததற்குப் பிறகு என்ன செய்யப் போகிறீர்கள்? பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்கிறார் அம்மையார்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தூக்குப் போட்டுக் கொள்ளலாம் என்று சொன்னேன்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: தலைவரவர்களே, உங்களின் சார்பில் நான் சொல்கிறேன் அந்த அம்மையாருக்கு தூக்குமேடைக்குப் போக வேண்டாம் என்று. (சிரிப்பு) அந்தக் குற்றத்தைச் செய்யாதீர்கள் மானம் இழந்தால் தூக்கிடலாம். கடன் பட்டவன் தூக்கிடலாம். கொலைசெய்தவனை தூக்கி விடலாம் நீங்கள் இந்தக் குற்றத்தைச் செய்யாதீர்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்று விட்டால் என்ன செய்வது? அதற்காகத் தான் சொன்னேன். மேலும் ஜெயித்தால் தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வேண்டும் என்று உறுப்பினர் பேசியது ரொம்ப பயமாக இருக்கிறது. எந்த நிலையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரவேண்டும் என்று தெரியவில்லை.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: தலைவரவர்களே, நான் ஒன்றுமே சொல்லவில்லை. நீங்கள் எடுத்து என்ன செய்யப் போகிறீர்கள் என்றுதான் கேட்டேன்.

1972 ஆகஸ்ட் 12]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நீங்கள் தூக்கிலிட வேண்டியதில்லை என்று சொன்னதால் பயப்படத் தேவையில்லை.

திரு. கே. டி. கே தங்கமணி: இதற்கு முன்பு இரண்டு மூன்று தடவை நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அப்படி கொண்டு வரப்பட்ட போதெல்லாம் அவர்களுடைய மெஜாரிடிதான் வெற்றி பெற்றது. அதற்காக நம்பிக்கை இல்லாத் தீர்மானமே கொண்டு வரக்கூடாது என்று சொல்வது சரியல்ல. இதைக் கொண்டு வந்து பேசுகிற போது இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களின் ஆழத்தைக் கொண்டு ஜனநாயகப் பற்றுள்ள நீங்கள் கண்டிப்பாக ராஜினாமா செய்யுங்கள் என்று சொன்னார்களா என்பதைத் தான் நான் அறிய விரும்புகிறேன்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: நான் அதைக் கூறவில்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர வேண்டாம் என்று சொல்லவில்லை. கொண்டு வந்திருப்பது நல்லது. கொண்டு வரவேண்டாம் என்று சொன்னேன்? ஆனால் பலன் என்ன? இப்போது பூஜ்ஜியம். அதை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்ற நோக்கத்தோடு தான் சொல்கிறேன். இப்படிச் செய்திருப்பதை விட, முதல்வருடைய தாராள சிந்தனையைப் பயன்படுத்தி இதை வெறும் விவசாயக் கிளர்ச்சியாக மட்டும் வைத்திருந்தால் அவருடைய தாராள நோக்கத்திற்கு இணங்கியிருந்தால் இப்போது நடந்திருக்கிற அக்கிரமங்கள் எல்லாம் நடந்திருக்குமா? கொலைகள் நடந்திருக்குமா? கொள்ளைகள் நடந்திருக்குமா? தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். உங்களுடைய கேஸ் அது வல்ல. நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். உங்களுடைய போக்கு அதைத் தான் காட்டுகிறது. உள்ளே எதையோ வைத்துக்கொண்டு இதைச் செய்கிறீர்கள் என்பதைக் காட்டுகிறது. எனவே நிச்சயமாக வெற்றி பெறாது. காரணம், வெறும் விவசாயப் போராட்டமாக இருந்திருந்தால், இத்தனை கொலையா? 1½ பைசா போராட்டத்திற்கு இவ்வளவு கொலையா? மனம் நிறைந்த உங்களைக் கேட்கிறேன். இது நியாயம் தானா? இதற்காகவா இத்தனை கொலை? அக்கிரமம் நடந்தது என்று சொல்கிறார்கள். சுட்டுவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். சும்மா இருந்தவர்களையா போலீஸ்காரர்கள் 'டப் டப்' என்று சுட்டுவிட்டார்கள்? (சிரிப்பு) சும்மா உட்கார்ந்து இருந்தவர்களையா 'படார், படார்' என்று சுட்டுத்தள்ளினார்கள் போலீஸ்காரர்கள்? (பலத்த சிரிப்பு) ஒரு குற்றம் செய்யாமல் வரிசையாக நின்றவர்களை—தெருவிலே நின்றவர்களைப் போலீஸ்காரர்கள் சுட்டுவிட்டதுபோல் சொல்கிறீர்களே, அதை எப்படி ஏற்க முடியும்? எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? யாரும் அதை நம்பமாட்டார்கள். அதைப்பற்றி மேலும் அதிகமாக நான்

சொல்லவில்லை; சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. அந்தத் துப்பாக்கிச் சூட்டில் இறந்து, கண்ணீர்விடுகின்ற அவர்களின் குடும்பத்தினருக்கு எனது கண்ணீரைக் காணிக்கையாக்குகிறேன். அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தினால் கணவன்மார்களை இழந்து, விதவையாகி, மஞ்சள், குங்குமத்தை இழந்து நிற்கும் அந்த வீரத்தாய்மார்களுக்கு என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் வேறு ஒன்றையும் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரம் ஆகிவிட்டது. முடித்து விடுங்கள்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: துணைத் தலைவரவர்களே, இன்னும் ஐந்து நிமிடங்கள் கொடுங்கள். அதற்குள் முடித்துவிடுகிறேன்.

முதலமைச்சர் இருந்த கூட்டத்திலே பிரிவினை வேண்டுமென்று பேசினார்கள். எதிர்ப்பவர்களைப்பற்றி கேலியாகச் சொன்னார்கள்; கிண்டலாகச் சொன்னார்கள் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், அப்படி யாரும் சொல்லியிருக்க மாட்டார்கள். நிச்சயமாக பிரிவினை வேண்டும் என்றால், இந்திய உப கண்டத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாடு பிரியத்தான் வேண்டுமென்றால் அவர்கள் பகிரங்கமாகவே சொல்வார்கள். மதுரை மாநாட்டைப் போன்று ஒரு பெரிய மாநாட்டைக் கூட்டிச் சொல்லிவிடுவார்கள். பிளாக் மார்க்கெட்டில் சொல்ல மாட்டார்கள் (சிரிப்பு).

அதே நேரத்தில் உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினை இயக்கமாகிவிட்டது என்று வந்துவிட்டால், அதை எதிர்த்து நீங்கள் தீர்மானம் கொண்டுவந்தால் அப்போது நான் உங்களோடு இருக்கத் தயாராக இருக்கிறேன். (எங்களோடு இருக்கவேண்டாமென்று சிலர் சொல்கிறார்கள்) அப்படியானால் உங்கள் கட்சி எப்படி உருப்படும்? (சிரிப்பு). நான் வருகிறேன் என்கிறேன்; நீங்கள் வேண்டாம் என்கிறீர்கள். அப்படியானால் உங்கள் கட்சி எப்படி வளர்ச்சியடையும்?

திருமதி த. ந. அனந்தநாயகி: நாங்கள் வரவேற்கிறோம். ச ம் போட்டு வரவேற்கிறோம்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: எதற்காக? இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதற்காகவா? அதற்கு சலாம் என்ன? சலாமுக்கு அடுத்த அப்பன் சலாம் போட்டாலும் வரமாட்டேன். நான் மிகத் தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன். நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகம் கேட்பது பிரிவினை

அல்ல. மாகாண சுயாட்சிதான். அதை நாங்கள் வரவேற்கிறோம். எங்கள் கட்சியும் அதை வரவேற்கிறது. ஆகவே, அவர்கள் சொல்வது குற்றம் அல்ல. பாவம் அல்ல. மறுக்கக்கூடியது அல்ல. நான் ஏற்கனவே இங்கே மூன்று சம்பவங்களை உங்களுக்குச் சொல்லியிருக்கிறது. முஸ்லீம் லீக் கட்சி எப்போதும் நல்ல காரியங்களுக்கு விரோதமாக நடந்து கொண்டதல்ல. நாங்கள் எல்லாக் கட்சிகளுக்கும் தோழமையாகத்தான் இருக்கிறோம். அதற்கு மூன்று சம்பவங்களைக் குறிப்பிட்டேன். ஒருதடவை இராஜாஜி ஆட்சியை காப்பாற்றினோம். இன்னொரு தடவை காமராஜருடைய கட்சியைக் காப்பாற்றினோம். இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு கொடுக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழமையை ஏற்று, உங்களுடைய நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை முழு மனதாக எங்கள் கட்சியின் சார்பில் எதிர்க்கிறேன், எதிர்க்கிறேன், எதிர்க்கிறேன் என்று சொல்லி, முடித்துக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: I rise to support the no-confidence motion which is being discussed on the floor of the House. This Ministry headed by Hon. Karunanidhi does not command the confidence of the people. It has lost the confidence of the people. That is the first point.

This Ministry is tainted with the blood of the 17 persons who have lost their lives during the agriculturists' agitation.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சபையிலிருந்து வெளியேறும் உறுப்பினர்கள் ஒவ்வொருவராகச் செல்லலாம். மொத்தமாகச் செல்வதைப் பார்க்கும்போது 'வாக் அவுட்' செய்வது போல் இருக்கிறது. சபையின் அமைதியும் குலைகிறது.

THIRU R. PONNAPPA NADAR: On 5th July 1972 did Archangel Gabriel come to you Mr. Karunanidhi and tell you that you should kill so many people? The repression and oppression which you have let loose has no parallel in history. This happened in Germany when Hitler was in existence. So far as Tamil Nadu is concerned you say that there is a legal and stable Government in Tamil Nadu. I would venture to ask where is law and order that is being maintained by the Ministry headed by the Chief Minister. There is no rule of law so far as Tamil Nadu is concerned. Life and property are at stake and this Government has not succeeded in maintaining law and order. That is the

[Thiru R. Ponnappa Nadar] [1972 ஆகஸ்ட் 12

allegation which I am going to make. That is the reason why I say that you have lost the confidence of the people. I would once again reiterate that a grave emergency existed on account of internal disturbances. What are the internal disturbances happening and which have happened remains to be catalogued. I will come to the point one by one.

This no-confidence motion has been tabled on the ground that the D.M.K. party and its election allies have now separated. Take for example the C.P.I. (Communist Party of India). That C.P.I. has tabled a motion of no-confidence. The Ruling Congress has tabled motion of no-confidence. Similarly our own party has tabled a no-confidence motion and the Swatantra Party also has tabled a no-confidence motion. The purport of the no-confidence motion is that the confidence which you had in 1971 is now lost on account of the agriculturists' agitation. That is the reason why this no-confidence motion is brought forward. Because this Government has lost the confidence of the people in character and outlook this Government has no legal right to exist.

I may be permitted to refer to the election manifesto containing certain norms and principles. I may be permitted to refer to the election manifesto which says :—

"It is a salutary policy to consider the cause of an agitation whether it was by students, workers or agriculturists, and having done so to lend a receptive ear to the demands without standing on false prestige and to what was fair and just."

That is what has been promised to the people in your election manifesto in 1971. Have you confirmed to the election manifesto?

Have you fulfilled the promises? That is the question I am going to ask. The only contribution you have made is the shooting of the people while handling the farmers' agitation. That is the charge I am going to level. You have stood on prestige and if only you had talked to the farmers' representatives in time, these happenings would not have been there. After much blood had been spilt, the issue came to be settled. The peasants are embittered against the Ministry.

1972 ஆகஸ்ட் 12] [Thiru R. Ponnappa Nadar]

Now it has been stated by the Hon. Chief Minister that this bundh was politically motivated and political parties were behind it. He also characterised it as a rich-man's or a feudal agitation. That was the charge and the main argument. They say that Manradiar is a leading land-lord and because he was behind the agitation and organisation, it is a feudal agitation. That is the main point of their argument. I ask, does this Government believe that all of us are the supporters of Manradiar? Do we stand for feudalism? Do we stand for capitalist society? That is the point which I just want to ask. I am sure that I can tell this House without any fear of contradiction that this was a peoples' agitation, not a rich man's agitation and in a large proportion, it was the farmers' agitation and that is the reason why more than 25,000 people have entered the various jails. That is sufficient reason to ponder over this and understand that this is not a rich man's agitation, but the poor peoples' agitation. That is the point I would very much stress.

Sir, the D.M.K. party has been saying that they are the commoners; they call themselves representatives of 'Samaniyars'. I am asking are all your members, members of the Ministry composed of commoners? That is the point which these people will have to think about. Does not your Ministry take in Mr. Adithyan who has no connection with Dina Thanthi; have you not taken people who have vested interests in land?

Take for instance the Hon. Minister for Religious Endowments, Mr. Kannappan. Does he not belong to a rich family? That is the question I am asking you. You say you are socialists. I am afraid you have been ridiculing Kamaraj for his stand for socialism. You say that in the camp of Kamaraj there are Vadapathi Mangalam minors and others, V. S. Thyagaraja Mudaliar and others, Poondi Vandayar and so on and so forth. You say it is with the help of these people, Kamaraj is going to achieve socialism. That was the argument that you were advancing. You have said 'KAKITHA POO MANAKKATHU, CONGRESS SOCIALISM INIKKATHU' and so on and so forth. Now you preach scientific socialism in the noble company of Vadapathi Mangalam who has adorned you with PONNADAI.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வடபாதி மங்கலம் தியாகராச முதலியார், பூண்டி வாண்டையார் எல்லாம் முன்பு காங்கிரஸ் கட்சியில் உறுப்பினர்களாக இருந்தார்கள். இப்போது அவர்கள் யாரும் திராவிட முன்னேற்றக் கழகத்து உறுப்பினர்களாக இல்லை.

THIRU R. PONNAPPA NADAR: They may be your friends and associates. That is what I once again say. He may have an axe to grind. I ask the Hon. Chief Minister when was the land of 4,000 odd acres which he held for the Aruran Sugar Mills resumed? Is it now utilised for cultivation of sugarcane? Has it been resumed? Will the Hon. Chief Minister tell the House when the land was resumed? The Law has been passed . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வடபாதி மங்கலம் தியாகராச முதலியார் எங்களுக்கு நண்பராக இருக்கலாம். ஆனால் கரும்பு பயிர் பண்ணி வந்த 7 ஆயிரம் ஏக்கராவில் 3,500 ஏக்கராதான் அவருக்குச் சொந்தம். பாக்கி குத்தகை நிலம். அவற்றை எல்லாம் கையகப்படுத்த அரசு சட்டப்படி நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிறது. அவர் எங்களது நண்பராக இருப்பதற்கு குற்றம் சாட்ட முடியாது. நிலச்சட்டப்படி அவர் மீது நடவடிக்கை எடுக்காதுவிட்டிருந்தால் குற்றம் சாட்டலாம். இந்த அரசு அப்படிச் செய்யவில்லை. நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவை நடைமுறையில் வந்துகொண்டிருக்கின்றன.

THIRU R. PONNAPPA NADAR: I accuse this Government of inordinate delays in the matter of constituting that Commission. Now the Hon. Revenue Minister says that . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அரசாங்கத் தரப்பில் எந்தவிதத் தாமதமும் கிடையாது. சட்டத்திற்கு உட்பட்டு எத்தனை நாட்கள் நோட்டீஸ் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறதோ 60 நாள், 30 நாள் என்பதாக அந்தச் சட்டத்திற்குட்பட்ட காலம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறதேதவிர அரசாங்கம் எந்தவிதமான கால தாமதமும் செய்யவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: If the Government had been anxious it could have been done even in 1967 itself. Why should they wait till 1972?

THIRU R. PONNAPPA NADAR: Another point which I want to stress is this. They say we are all right-reactionaries, and that is the criticism against us, that has been levelled against us. Are we right-reactionaries? That is a point which I am going to answer next. So far as we are concerned, we have been wedded to socialism and the principles of socialism have been adumbrated by our party and we have accepted the principles of socialism in all its aspects. So far as land ceiling is concerned, I would once again reiterate and urge that urban ceiling should be introduced and ceiling on income should also be introduced. Whether it is done by the Central Government or the State Government, such a thing should happen and happen immediately. Does not your party also take in rich people? I am just saying this. Is your M.L.A., Mr. Palanivel Rajan a poor man? Does he come from a poor family? That is the question I wish to ask. When you live in glass houses, please do not throw stones at others. I would say that there are people in your party who are abundantly rich. Let me cite one instance.—There is one hon. Member just now present in the House a cine actor and he is a person assessed to income-tax and he has to pay a large sum towards income-tax and do you call him a poor man and a commoner. Is this the socialism you preach; Is this the representative character, colour and hue of your party? If you dissect and see we could know what it is. You may say you are a progressive party, but people know who are progressive and who are in your party and all that. I do not want to mention the names of other rich people in your party, who preach from house-tops and say that we are right-reactionaries. That is the reason why this Government has not come forward to implement socialism even though it may make promises; promises will not bring about socialism.

Then I go to the next point, and that is in regard to breakdown of law and order. There was a hartal all over the State of Tamil Nadu on the 5th July 1972. It is the legitimate right of the people to conduct such peaceful hartals and so far as this hartal is concerned, it is nothing new. Hartals do happen; hartals have happened during the time of the British regime; hartals have happened during the time of the Congress regime. And Your party has the credit of throwing chappals against Jawarlal Nehru;

[Thiru R. Ponnappa Nadar] [1972 ஆகஸ்ட் 12

your party has the credit of throwing chappals against K. S. Ramasami. But now you say that the opposition parties are inciting and inducing people to violence. That is the charge you level against us. But we know what happened, we know the incidents that happened during the Anti-Hindi agitation. Was it peaceful? Was it non-violent? Was your agitation against rise in prices conducted by your party peacefully and did no violence spark off then? Is that your contention that your party conducted everything peaceful? That question will have to be considered and decided by the people.

What happened on July 5th and 4th is the point which I would like to emphasise before this House. So far as the 4th July is concerned, before that, all parties had agreed that there should be a bandh, on the 5th July and all political parties joined together and their leaders exhorted the people to co-operate with them. But what happened? Your party-men were parading the streets, threatening the shop-owners that 'if you close down now, you shall never open it' That was the threat hurled against them. I know the incidents and I shall give specific instances for which your own men were responsible and where your own partymen incited people to violence. That is the reason why such things have happened. Many arrests have been made under Section 151 Criminal Procedure Code and 120-B and 126 of the Railway Act. It has been pointed out in this House what is the purport of the Sections that have been introduced in the matter of framing first information reports. I do not want to dwell on the details regarding these cases. On the day of the bandh, persons of the ruling party not only paraded the streets, but they forced people by threats that if they closed their shops, they would have to meet the consequences.

They opened by force closed shops. The police were keeping mum and abetting those people, anti-social elements and rowdies who had incited it. In some places the police and the rowdies joined together and committed atrocities. I would first list out one or two incidents which had happened in the Tirunelveli district.

Sir, Tuticorin is stated to be the citadel of the D.M.K. and that is the place where terrorism reigned on the day of the

1972 ஆகஸ்ட் 12] [Thiru R. Ponnappa Nadar]

Bandh. Some of the shops between the bus stand and the traffic signal were closed on that day, and they were forced open and many things were looted. The anti-social elements were armed with deadly weapons and this had been brought to the notice of the Sub-Collector and the D.S.P. Thiru S. Murugandam, M.P. happened to be present at that time and the miscreants were prevented from doing further damaged. Also the students of the V.O.C. College who took part in the Bandh were attacked by a band of rowdies opposite the College and they entered the College campus and attacked the students with cycle chains, sticks, etc. This had happened in Tuticorin. If these things are allowed to continue, I want to know where is the law and order that is being maintained by the police . . .

திரு. இரா. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலே அப்பாஸ் என்ற கழகத் தோழருடைய கடைதான் சூறையாடப்பட்டது. கடையிலிருந்த ரூ. 4,000, ரூ. 5,000 மதிப்புள்ள பொருள்கள் சூறையாடப்பட்டிருக்கின்றன என்பதைத்தவிர வேறு எந்தவிதமான அசம்பாவிதமும் தூத்துக்குடியிலே நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: I know what will be the result of that case. I am also a lawyer and I know what sort of case is this and where this sort of argument will land. Sir, the rowdies not only attacked the boys but the lecturers and the Principal as well. That is the statement given by the Principal of the V.O.C. College Thiru Sreedhara Menon. You may say that he has uttered falsehood and you may deny that no such incident had happened. The fact is there and the people know what had happened in Tuticorin. Sir, what is the security to our Congress people offered by this Government so far as Tamil Nadu is concerned.

Our friend and one of the leaders of the Congress, Thiru Thangappazham was assaulted with cycle chain. Are you going to deny it? Are you going to say that such a thing has not happened?

திரு. இரா. இராமலிங்கம்: தோழர் தங்கப்பழம் அவர்கள் தாக்கப்பட்டது சம்பந்தமாக தங்கப்பழம் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். தி.மு.க. கழகத்துக்காரர்கள் திட்டமிட்டு இதைச் செய்யவில்லை. நான் அடிப்படை

தற்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லையென்று அவரே நேரடியாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை கனம் பொன்னப்ப நாடார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: I do not ask him. I am only addressing the Chair. If I am interrupted like this, I am prepared to yield a number of times but the only thing is that I may be given full opportunity.

You say that you are the protector of law and order but what had happened in the Tirunelveli district. In the presence of the Police so many things are happening and they are just watching and watching and that is the accusation which I am going to make. There is no law and order. The police have become ineffective as against the D.M.K. Party and that is the charge which I am going to make.

The next incident which I want to narrate is the one that had happened in Rajapalayam, Ramanathapuram district. I say that there was Police Raj. The farmers' agitation was wilfully suppressed with the aid of goondas. That is the charge which I am making against the Government.

On the evening of 5th July 1972 one wonderful incident happened. Mahatma Gandhi Centenary Reading Room established by the late Thiru P. S. Kumaraswami Raja, former Chief Minister of Madras was attacked. Is it because that that was an institution which was a source of annoyance to the public? I think the attack on such an institution is uncalled for and it is a vandalism perpetrated by the anti-social elements and the harm that has been done by the members of the ruling party and the loss sustained by the Reading Room is more than Rs. 10,000. Almirahs were broken open, tables were smashed, books were taken away and periodicals and newspapers were taken away. That is the wonderful thing that has been committed. But what did the Police do? They did nothing. They kept mum. This is the law and order which we are having in the D.M.K. rule and the Government headed by our Hon. Chief Minister. Are we to say that there is law and there is order in Tamil Nadu and that is the question which I once again ask.

Then, Sir, West Ramanathapuram Congress Committee Office was attacked. The Congress Office is not a citadel where there is armoury and where there are deadly weapons. There is no such thing. But why it was attacked. It was a pre-planned attack on an Opposition Party Office. I say that the attack on the Congress Committee Office was motivated and it was done with a purpose. They have destroyed all the records and furniture that were there. Not only that. They have also committed something most atrocious and heinous thing. There were pictures of national leaders and world leaders. What is the mistake that has been committed by these pictures? The pictures were smashed and is it right for the D.M.K. Ministry to say that the pictures of national leaders like Mahatma Gandhi and Jawaharlal Nehru should be defiled? Is this the policy of the D.M.K. and that is the point which the Hon. Chief Minister should consider. If that is the fate of the Opposition, what security have you given to us? Are you going to allow us to function as a democratic opposition or are we going to crush and kill us with your goondaism and that is the reason why I say that we have no confidence in you and your Ministry.

Sir, I may be permitted to narrate an incident which happened in my place and that too in my presence. In Nagercoil we called for a meeting and we exhorted the shop-keepers to close down their shops on 5th July 1972. The shop-keepers agreed to it and the shops were closed in Nagercoil, Karungal Thoduvatti and other places. What is the wonderful thing that has been done by your partymen is the next point. On that day while I was standing near the Town Bus Stand, there arrived a band of D.M.K. men in a Taxi and they were in good numbers. I know the people who are behind them which I do not want to mention here because I do not want to make them big. One municipal councillor came and he threatened the shop-keepers to reopen their shops in my very presence. When they refused they threatened them with dire consequences. Then the police arrived on the spot and some people gathered. What did your pet M.P. do? He came to me and asked so many things. He used all sorts of words in the presence of the police. The Circle Inspector and the Deputy Superintendent of Police were present. Also four police vans and a posse of constables were also present and they all encircled us.

At that time this M.P. came and said 'give me half an hour's time. I will do away with all of you'. That is the threat he gave me. I know what will happen to that threat. If the police are not going to protect, I know the people will protect me. If I don't have that confidence, how can I be in politics? If that is the treatment meted out to me, what will happen to the common people. That is the question I want to ask the Government. The law and order situation is like that. In that area, there has been no provocation at all. But all this is happening. He is the lieutenant of not only the Chief Minister but also the Co-operation Minister as well. He is the President of District Co-operative Bank and he has got a palatial office in the Bank and two rooms are specially reserved for him. This is the seat and place where DMK men gather and that is now functioning as the central office of the DMK of the district. I do not want to say much on that. He is using the car belonging to the bank. He has disposed of his car which has been given by the public, according to his party-men. Whether it has been given by the public or not, I do not want to enter into any controversy. That car bearing No. MDK 3636 had been disposed of. He is using the Bank's car for his own use and for the use of his family and not for use of the bank. That is the quality of your esteemed friend. That gentleman is trying to create difficulties for us. We do not mind his creating difficulties. But he is out to create mischief. He is trying to create violence. We are not afraid. We are prepared to face the consequences. I am only saying what is happening and how the law and order situation is. How can there be security there for the innocent people? That is why I say we have lost confidence in the police and in the Ministry headed by Thiru Karunanidhi.

Another point which I want to stress is regarding the incidents that happened in Madurai. In Madurai there is a para-military organisation called "Tamilar Padai". According to the Hon. Chief Minister it is only a 'shadow' i.e. 'nizhal'. I would say, say, on the other hand, it is 'fire' i.e., 'neruppu'. The Chief Minister has said that it is not in existence. I shall refer to the reply that has been given by the Central Minister to a question and which is reported in the papers. The reply says that the 'Tamilar Padai' is there from 1968 and that Sri Muthu is its President.

What is the function of this 'Tamilar Padai'. I am reminded of the 'Tom Troopers' of Hitler. The Chief Minister has at one time said that this 'Tamilar Padai' is there to maintain order when public meetings of the party are conducted. But what is actually happening is quite different. I wish this 'Tamilar Padai' is banned, since allegations have been made that many innocent people are being threatened by this 'Tamilar Padai'. I hope the Hon. Chief Minister will see to it that this is banned; this military organisation should be banned by this Government or Central Government. That is the point I am making. We know what happened in Coimbatore. They sought the help of military and central reserve police and help of police from other States was also requested: What does this show? What does this indicate? If there is no deterioration of law and order, if there is no internal strife, what is the necessity of calling in the army? That is the point which this August House will have to consider. The conditions prevailing in Coimbatore were so bad and that the agitation sponsored by agriculturists became something like a revolution. The people gathered together and wanted to show their protest against the rule of the present Ministry. In Coimbatore several instances were listed. I do not want to repeat all things. Houses were attacked. What has happened in Rajapalayam is not only instance it happened in other places. In Karamadai in Coimbatore district, a cinema theatre belonging to Kempiah Gowdar, Ex. M.L.A., was attacked by certain anti-social elements. You cannot deny it. Anti-social elements have done havoc in Coimbatore. The very fact that army has been called in shows that these happenings had increased. Not only that. Our M.L.C. Thiru R. Krishnaswamy Naidu's house had been attacked. Many things have been taken away from his House. What is the mischief he has done? He supported the farmers agitation. Is it a sin? Is it unlawful? Is the farmers' organisation an unlawful organisation? All these vandalism had been done and that too with impunity?

The next point is about judicial enquiry. So far as it is concerned, the Hon. Chief Minister said that all party leaders agreed that the cases should be withdrawn and so there was no necessity for judicial enquiry. That is what is now said. But what I say is, if judicial enquiry is ordered, then the amount of

[Thiru R. Ponnappa Nadar] [1972 ஆகஸ்ட் 12

force used by police in putting down this agitation would come out. That is why the judicial enquiry was not ordered. Several rounds had been fired. Totally several rounds have been fired and many people, about 19 people had been injured? What is the necessity for such a force? These things will come out if there is judicial enquiry. I am reminded of the police firing that took place when Pattom Thanu Pillai was Chief Minister of T.C. State and when we agitated for the merger of some places from T.C. State to Tamil Nadu. To quell that agitation, he used police force. There was a meeting in Pudukkadai, which is now in my constituency. We were for merger with Tamil Nadu. The police resorted to what is known as 'covering fire'. That means, that the policemen get into the van, and use their rifle through the slit or whole in the van. The vehicle is moved forward and backward and firing goes on from inside. They exhausted all the ammunitions which they had and many people died, I think 11 people died in that police firing. Several people sustained injuries. After that he was parading there. I do not want to say that after police firing the Ministers should go there and inspect the spot to know first-hand what has happened. But I am going to ask this Government one thing. Sir, so far as Judicial Enquiry is concerned, there is no estoppal operating and I may be permitted to say that your esteemed leader, the late lamented Annadurai has said that a judicial enquiry is needed and I am only citing his precedent before this House, when he staged a walk-out along with his party men in 1957 when the No Confidence Motion was discussed.

MR. SPEAKER: The hon. Member has taken already half an hour. He should try to finish soon. He can have 15 minutes more.

THIRU R. PONNAPPA NADAR: I will be brief and I will only catalogue the main points.

I shall refer to the proceedings of the Assembly when a No Confidence Motion was discussed in 1957 and when voting took place, the leader of their party said that because the Congress Government refused to institute judicial enquiry, they were going to stage a walk-out and the D.M.K. staged a walk-out. That is

1972 ஆகஸ்ட் 12] [Thiru R. Ponnappa Nadar]

in the proceedings of the House. You are all followers, faithful followers of that leader and the Hon. Chief Minister has been always saying that he follows "Anna's Vazhi". I ask him why not follow Anna's foot-steps and institute a judicial enquiry. It may be that all party leaders have agreed against it. But you can gather information as to the cause of firing and other things. I would say, Sir, that this is the second Jallianwala Bagh, for here 56 rounds have been fired while General Dyer fired 100 rounds. That is as far as judicial enquiry is concerned.

Another point which I want to stress is this and that is regarding this Government's attitude towards the Press. Sir, the Press in Tamil Nadu has been crushed by the ruling party is the charge that I am going to level against the Government. The Press is the fourth estate; they want to express their opinion fearlessly; they want to say that Government have committed mistakes or Government has been guilty of lapses and all those things could be ventilated only by the Press. What has happened to the Press in Tamil Nadu? I shall refer to it now. The Alai Osai office was attacked. Is it to the fair name to your Government or is it fair name to your party? Your men have attacked Alai Osai office and they have phoned thrice for police help. But what is the help they got, no help at all arrived and that is the reason why all these untoward things happened. This is not only for Alai Osai, there are other papers also who have suffered. I just invite the attention of the Government to what happenned to Kumudam and Ananda Vikatan and other papers. Let them terrorise the people, but to terrorise the Press is very wrong. For, if the Press is terrorised, it will become docile and there will be no freedom in a democratic State. You say you are wedded to democracy. For democracy, freedom of the Press is vital. Now there is absolutely no freedom of the Press and freedom of the Press has been given the go-by. That is the charge which I am going to level against this Government.

The next point is about the provocative speeches that have been made by the leaders of your party. Sir, one leader of your party Mr. Prathapchandran has been killed. I do not want to refer to the incident. A condolence meeting is held in Kannappar Thidal and the Chief Minister and Worshipful Mayor and M.L.Cs.

participated in that meeting. What was spoken in that meeting? It was like the funeral oration of Antony over the death of Julius Ceaser. That is the type of oration which the Chief Minister has been making. He says he follows Anna's Vazhi. I have got the speech as reported in Murasoli. He is reported to have said that if there was incitement to violence, he was prepared to take up the agitation, throw away his chief ministership and if necessary he would lead the agitation. That was the thing and the Worshipful Mayor said—is reported to have said, I will qualify that—'we should not conduct condolence meetings, others also should conduct condolence meeting. Is that the way ruling party men should speak? Sir, not only Prathapchandran, but another Kannan Iyengar has also been killed. We have got all the sympathy and tears for those persons. It has been stated that our leader Kamaraj did not shed a tear for the life of these people. We have absolutely nothing personal against anybody; this sort of lawlessness and anarchy should not exist. That is the most important thing which I am going to stress. Sir, violence whether it emanates from the ruling party or from some other source should be curbed and curbed at the earliest. That is the important point.

Now, Sir, I want to answer the main allegation that has been made against the Congress Government by the hon. Members of the Forward Block. They have been saying that in Muthukulathur innocent people were killed and so many things. I just invite your attention to the proceedings and I would say that 2,735 houses of Harijans have been burnt down in that agitation and 17 Harijans have been killed and yet these people just shut their eyes and say nothing has happened. Are these people entitled to kill the poor Harijans? That is a matter which this House and this Government may consider. What has been spoken about the incident and in the earliest information report and the telegram that has been sent and all that have been discussed here; there is absolutely no whisper or nothing has been said about innocent people being killed. I would only invite attention of the House to one portion of the speech made by one of your Ministers then sitting in the opposition and that is the speech made by Thirumathi Sathyavanimuthu. She made the following observations.

இவ்வளவு நாட்கள் கழிந்தபின்தானு நடவடிக்கைக்ள் எடுப்பது? அதை முளையிலேயே கிள்ளி எறிந்திருந்தால் இவ்வளவு தூரம் வந்திருக்குமா? நிலைமை இவ்வளவு மோசமாக போயிருக்குமா? அவர் மீது இன்றும் கூட சட்ட ரீதியாக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. தகுந்த செக்ஷன் மூலம் அவரைக் கைது செய்யவில்லை. தடுப்புக் காவல் சட்டப்படிதான் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். நீங்கள் அஞ்சுகிறீர்களா? அல்லது பயந்து கொண்டிருக்கிறீர்களா?

That was the fiery speech which has been made by the Hon. Thirumathi Sathyavanimuthu, then in the opposition. The revered leader of the Forward Block had been just interned under the security proceedings. I would just refer to another speech made by Mr. Chelladurai. I am sorry, P. S. Santhanam who was then one of the members of the D.M.K. party. I shall not refer to details. He said.

உண்மையாக ஒரு ஹரிஜனனை பாதுகாக்கவேண்டும் என்ற உள்ளன்பு சர்க்காருக்கு இருந்திருக்குமேயானல் அப்போதே சட்ட ரீதியிலே ஜாதி துவேஷ தடுப்பு சட்டத்தின் கீழ் தேவர் அவர்களை அரஸ்ட் செய்திருந்தால், அவர் மீது நடவடிக்கை எடுத்திருந்தால் இம்மாதிரியான சம்பவங்கள் ஏற்பட்டிருக்காது. ஆகவே இதற்கு அரசாங்கம்தான் பொறுப்பாளி என்பதை நான் இந்த இடத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

Sir, nothing had happened in Mudukalathur and that seemed to be the chorus that has been sung in this House. Not only now but previously also these things had been stated. It is only to counter that I am going to say that something unfortunate has happened. There were clashes and firings and I do not say that all was well at that time. But these things are unfortunate and I do not want to take the time of the valuable House. Again in another place Thirumathi Sathyavani Muthu had stated that sending of 30 policemen to the village was very insufficient and that was the tenor of the argument at that time. Now they are in a different camp and perhaps that is the reason why they have changed sides.

The next point which I want to stress is with regard to the Industrial unrest that is prevalent in the State. Simpson Group of Companies remain closed and I think some steps have been taken

by the hon. Member, Thiru Arangannal for meeting all the labour leaders but nothing has happened so far. In this connection, I have to narrate one incident. One labour leader who came to the Secretariat to meet the Hon. Chief Minister was attacked by some anti-social elements just outside the Secretariat. That shows that there is no security for the leaders of the Trade Union movement.

In Valparai Estate there was strike for one month from 11th June. Ashok Leyland remained closed for many days and subsequently that has been opened. Now, Sir, "Swadesamitran" was closed and they asked for Bank guarantee and that guarantee was promised by the Government but no tangible result had been achieved. The people who were employed in the 'Swadesamitran' Office are in great difficulties, and many of them are on the verge of starvation and the promises that have been made to them have not been fulfilled and that is the charge that I am making against this Government.

As regards B.T. teachers, what has become of the assurance given by the Hon. Chief Minister that their pay scales would be revised? Nothing tangible has been done. The report of the One-Man Commission has not come out and the teachers are now on the war path.

Sir, City Compensatory Allowance was promised to the N.G.Os.. in the Chingleput district but so far, this Government have failed to extend that concession to that area.

Sir, this Government have been functioning for the benefit of their party members and that is the next charge which I am going to make. There are so many Corporations and Boards. The Agro-Industries Corporation is being manned by your ex-Minister Thiru Subbiah. Then the Tourism Development Corporation is headed by Thiru A. V. P. Asai Thambi, an ex-M.L.A. Then the Water Supply and Drainage Board is being manned by Thiru S. Kandappan, M.L.A. The Slum Clearance Board is being presided over by my hon. Friend, Thiru Arangannal and the Khadi Board by Thiru M. S. Mani. All these are loaves and they have been given for appeasing your partymen and that is the charge I am making against the Government.

So far as nomination to the Committees is concerned, I want to say one thing. In our district there is the Co-operative Spinning Mill. During the Congress regime D.M.K. representatives were there, as also Communist and Congress representatives. Now I ask the Hon. Chief Minister or the Hon. Minister for Industries, whether you want to shut out any representative of the Opposition Parties in these Committees and convert it into your party office as it were.

Then there is a rise in prices and the prices are skyrocketing. You may say that the prices of essential commodities will have to be controlled. Whether you like it or not, there will be a financial crisis and the Central Government are taking steps in regard to that. They are not going to introduce controls but they are going to see that the consumer and essential articles are made available in plenty so that there will not be any shortage or any rise in prices. But what are the steps taken by this Government? The price of rice has risen. When kerosene and so many essential commodities are not available, why speak about pumpsets and fertilisers. You may say that the Central Government are responsible but whoever is responsible the rise in prices will have to be curbed.

Sir, before you came to power you promised cheap rice. What has happened to the one-rupee-a-measure scheme? It has been given a go-by. Through a statement under rule 81 that has been cancelled on the ground that there is an emergency and there is plenty of rice. Even though there is plenty of it, the prices are rising and what is the reason for that? Is it on account of erosion of currency or due to lack of growth?

There are signs of drought in districts like Chingleput and Tirunelveli. What steps have been taken by this Government to meet the situation and that is the charge which I am making against the Government. You may say that there are sufficient buffer stocks for meeting the food crisis but it is better that prompt action is taken early to meet it.

Civil Supplies Corporation is doing a wonderful job. They have asked certain middlemen to mill the paddy and convert it into rice and what has happened in the Thanjavur district? Sir, one

Dakshnimoorthy in Nagapatinam taluk owes 65 tonnes of rice valued at Rs. 50,000. Then one, Govindaraja Chettiar of Thanjavur owes 108 tonnes to the Corporation. The main argument that has been advanced by the Commercial Tax Officer is that a security of only Rs. 10,000 had been taken from these people and that has been published in 'Dina Mani' of 12th July 1972. Sir, if a small security is taken and large quantities of paddy are entrusted to them, how are you going to recover rice from them?

Is sugar available in plenty? The Central Government say that the September quota has been released. They say that sugar is available at Rs. 2 per kilo but in the open market it is sold at Rs. 3.50 and Rs. 4 per kilo and sugar is.....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழ்நாட்டில் சர்க்கரை விலை இரண்டு ரூபாய் அல்ல. விலை ரூ. 1.85 பைசா.

திருமதி த. ந. அனந்தநாயகி: அது ஆளுக்கு ஒரு கே. ஜி. கிடைக்கிறது. வெளியில் ஒரு கிலோ ரூ. 3.26.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆறு கிலோ வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் அப்படிச் சொல்லக்கூடாது. ஒரு கிலோ ரூ. 300-க்கு கீழே வருமானம் உள்ளவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. ஆறு கிலோ வாங்குபவர்கள் ஒரு கிலோ வாங்குபவர்கள் பற்றிச் சொல்லக்கூடாது.

THIRU R. PONNAPPA NADAR: Mr. Speaker, the management of Simpson Group of Companies are planning to shift the companies to a place outside the State and this Government should take strong and effective steps to see that industrial peace is restored there.

The Chief Minister was saying while addressing the meeting of the Chamber of Commerce that there was no industrial unrest. But really there is industrial unrest. There are numerous instances. Take the case of Simpsons. They are trying to shift the headquarters to some other State. If that is done it would be disastrous to Tamil Nadu.

There is widespread discontent among students in so far as the present Ministry is concerned. Students' leaders are being indiscriminately punished. There is no security of life and property

and we should say that are all disillusioned. What you have talked in Madurai Conference is also available. One of your leaders said "if military comes, we will face it. "In this the kind of talk of a leader? Are we at war with the Centre. Another Member said, "if those Central Ministers who criticised us were to come to Tamil Nadu, they should be arrested". Another member said that "if there is toppling move, blood will flow in Tamil Nadu". You are trying to hoodwink the people to fall into your trap. You are not going to be toppled. But you say, "within six months there may be another election." I say, Sir, on behalf of my party, most emphatically that we will face it. We have lost the confidence in the Government headed by Thiru Karunanidhi. In doing so, let me say that we have nothing personal against any leader. All of us know well that law and order position is far from satisfactory. There is internal disturbance and there is no peace and tranquility. It is time to cry halt to this. I say, Sir, just as might is not right, this Government which has split the blood of innocent farmers has no right to exist and continue in office. With these words, I close my speech.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஒட்டியும், மாண்புமிகு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள கண்டனத் தீர்மானத்தை ஒட்டியும் அவரவர்களுடைய கட்சியின் சார்பில் பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு, அதற்கு எதிராக ஆளும் கட்சியின் சார்பிலும், ஆளும் கட்சியின் தோழமைக் கட்சிகளின் சார்பிலும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு, அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் நான் என்னுடைய கருத்துக்களையும் எடுத்துச் சொல்கின்ற வாய்ப்பினை இப்பொழுது பெற்றிருக்கிறேன்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்த அருமை நண்பர் ஹாண்டே அவர்கள் 'இந்தத் தீர்மானத்தின் மூலமாக இந்த அரசை மாற்றி விடலாம் என்கின்ற கருத்தோடு இதை நான் கொண்டுவரவில்லை' என்று சுட்டிக் காட்டி, 'இந்தத் தீர்மானத்தின் மூலம் எடுத்துச் சொல்கின்ற பல குறைபாடுகளை இந்த அரசு உணர்ந்து பார்த்து ஆவன செய்யும் என்கின்ற எண்ணத்தோடு தான் இதைக் கொண்டு வந்தேன்' என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அதி

லிருந்து அவர்களுக்கு இந்த அரசின்மீது நிறைந்த நம்பிக்கை இருக்கிறது என்பதை நான் நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் அடிப்படையில் சில கருத்துக்களை எடுத்துச் சொல்வதன் மூலம் இந்த அரசு அவைகளை ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கையை அவர்கள் மனதில் பதிய வைத்துக்கொண்டு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் நீண்ட நேரம் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை ஒட்டி பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

பொதுவாக இந்த அரசு கடந்த நான்கு ஐந்து ஆண்டு காலத்தில் எங்களை ஆளாக்கிய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையிலே நாங்கள் இயங்கிய காலத்திலும், அவர்களுக்குப் பிறகு இந்த அரசை நடத்திவருகிற இந்தக் காலத்திலும் தமிழ் மாநிலத்தில் எழுந்துள்ள பிரச்னைகளை எந்த எந்த வகையிலே சந்தித்தோம், எந்தெந்த வகையிலே அவைகளுக்குத் தீர்வு கண்டிருக்கிறோம் என்பவைகளையெல்லாம் ஒரு முறை எண்ணிப் பார்ப்பது சாலச் சிறப்புடையது என்று நான் கருதுகிறேன். பல்வேறு பிரச்னைகள் நான்கு ஐந்து ஆண்டு காலத்தில் தமிழகத்தில் எழுந்திருக்கின்றன. மிக முக்கியமாக கோவை நகரத்திலே அந்த மாவட்டத்திலே மூடப்பட்டிருந்த ஆலைகளையெல்லாம் திறக்க வேண்டும் என்பதற்காக ஒரு கோரிக்கை வைக்கப்பட்டு, அந்தக் கோரிக்கையை உடனே நிறைவேற்றக்கூடிய அதிகாரமோ, சக்தியோ அல்லது பல்வேறு வசதிகளோ, வாய்ப்புகளோ மாநில அரசுக்கு இல்லை என்பதை பலமுறை எடுத்து விளக்கியும் கூட, பாதிக்கப்பட்டிருக்கிற தொழிலாளர்களுடைய வயிற்றுப் புயல் அந்தக் காரணங்களையெல்லாம் கேட்கத் தயாராக இல்லாத காரணத்தினாலும், அவர்களுடைய துயரத்தை எப்படியாவது தீர்க்கவேண்டும். மாநில அரசு மத்திய அரசைக் காரணமாகக் காட்டிக் கொண்டிருப்பது சரி அல்ல என்கின்ற வகையிலே அவர்கள் எடுத்து வைத்த பல்வேறு அடிப்படை பிரச்னைகள் ஆராயப்பட்டு, கோவை மாவட்டத்தில் மூடப்பட்ட ஆலைகளுடைய தொழிலாளர்களுடைய பிரச்னையை இந்த அரசு எப்படி கவனித்தது என்பதையும், மூடப்படாமல் இருந்த ஆலைகளில் உள்ள தொழிலாளர்களுடைய பல்வேறு கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்து, கிளர்ச்சிகளில் ஈடுபட்டபொழுது, இந்த அரசு எப்படி அதனை அணுகியது என்பதையும் இந்த அவையிலே இருக்கிற அனைவரும் நன்றாக உணர்வார்கள். ஐ.டி.ஆர். ஆக்டின்படி மூடப்பட்ட ஆலைகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும், அதற்குரிய பங்குத் தொகையை மாநில அரசு தருவதற்குத் தயாராக இருக்கிறது. இருந்தாலும்

மத்திய அரசின் அனுமதி அதற்குக் கிடைத்தாக வேண்டும் என்ற அந்த சூழ்நிலையிலும் மாநில அரசினுடைய பரிதாபகரமான நிலைமையை எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியும், ஆனால் கிளர்ச்சி நிற்க முடியாத அளவுக்கு தொடர்ந்து நடைபெற்றபொழுது, நம்முடைய நண்பர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் எடுத்துக்காட்டியது போல் கோவையிலே உள்ள தொழிற் சங்கத் தலைவர்களை பல முறை அழைத்துப் பேசி, கடைசியாக அதற்குத் தீர்வு காணப் பெற்று, உடனே சில ஆலைகளை திறப்பது என்றும், ஒன்றிரண்டு ஆலைகளை திறக்க மத்திய அரசோடு தொடர்ந்து வலியுறுத்தி வாதாடுவது என்றும் முடிவு எடுக்கப்பட்டு, அதுவரையிலே மூடப்பட்டிருக்கிற ஆலைகளினுடைய தொழிலாளர் நண்பர்கள் துயரால் துடிக்காமல் இருப்பதற்காக, பசியால் அவர்கள் வாடி வதங்காமல் இருப்பதற்காக, அவர்களுடைய குடும்பங்களில் பசிப் புயல் அடிக்காமல் தடுப்பதற்காக, இதுவரையில் இந்தியாவிலேயே எந்த மாநில அரசும் முன்வராத நிலையில், முதல் தடவையாக தமிழ்நாடு அரசு பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரண நிதியாக முதல் அமைச்சர் நிதியிலிருந்து ரூ. 5 லட்சம் கொடுத்தது என்பதையும் இந்த நாடும், இந்த அவையிலே இருக்கிற பெருமக்களும் மறந்திருக்க முடியாது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

பட்டதாரி ஆசிரியர்களுடைய பிரச்னையைப் பற்றிச் சொன்னார்கள். பட்டதாரி ஆசிரியர்களின் பிரச்னையை நாங்கள் பல்வேறு சிக்கல்களுக்கு இடையிலே கவனித்துக்கொண்டிருப்பதாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்திலும், மேல் அவையிலும் பல முறை எடுத்துச் சொல்லியும் கூட, இந்த அரசு கிளர்ச்சி செய்தால் நிச்சயம் செவி மடுக்கும், ஏற்கனவே இருந்த அரசைப் போல் அல்ல இந்த அரசு, அப்பொழுதே கிளர்ச்சி நடைபெற்றநேரத்தில் காது கொடுத்து கேட்கும், அந்தக் கிளர்ச்சியின் தன்மையை ஆராய்ந்து பார்க்க இந்த அரசு நிச்சயம் முன்வரும் என்ற நம்பிக்கையோடு, பட்டதாரி ஆசிரியர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள். அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதாகச் சொன்னார்கள். உண்ணாவிரதம் இருந்த இடத்தில் அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கப்பட்டு உண்ணாவிரதம் அனுமதிக்கப்பட்டது. ஆனால், உண்ணாவிரதத்தை ஒரு சில மணி நேரம் தொடர்ந்து நடத்தி, அதற்குப் பிறகு அங்கிருந்து, பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை மீறிக் கூட கோட்டைக்குள் வருவோம் என்று பட்டதாரி ஆசிரியர்கள் வந்தவுடன் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்டவர்கள் 300 பேர்களும் உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்கள் என்பது மட்டுமல்ல, அவர்களுடைய பிரச்னை தனி நபர் குழுவின் மூலம் விரைவிலே தீர்க்கப்படும் என்பதற்கான உறுதி மொழி அளிக்கப்பட்டு, வேறு சில அலுவலர்கள், வேறு சில அரசுப் பணியாளர்கள் இவர்களுடைய பணிகளிலே, ஊதிய

விகிதத்திலே இருக்கிற முரண்பாடுகள் களையப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் குவிந்த காரணத்தினால் அவைகளையெல்லாம் ஒருசேர சேர்த்துப் பார்த்து, அந்தக் குழுவினுடைய அறிக்கை விரைவிலேயே அறிவிக்கப்படுகின்ற சூழ்நிலையிலே வேகமாக அந்தப் பரிசீலனை நடைபெற்று வருகிறது. தடையுத்தரவை மீறினார்கள் என்பதற்காக யாரும் தண்டிக்கப்படவில்லை. கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதைப் போலவே ஆரம்ப ஆசிரியர்கள். அவர்களது கோரிக்கைகளை இந்த அரசு ஒத்துக்கொண்டது என்று பல முறை சொன்ன பிறகும் கல்வி அமைச்சரும் நானும் பல முறை உறுதி மொழிகள் அளித்த பிறகும் சட்ட சபையிலும் சரி, மேலவையிலும் சரி, இதழாளர்களிடத்திலும் சரி, ஆசிரியப் பிரதிநிதிகளிடத்திலும் சரி, கோரிக்கைகளை ஒத்துக்கொண்டேன் என்று பல முறை சொல்லப்பட்ட பிறகும் அவர்கள் போராட்ட முயற்சியில் இறங்கினார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சரின் வீட்டின் வெளியிலே மறியல் செய்யத் தொடங்கினார்கள். அந்த மறியலிலே கிட்டத்தட்ட 15 நாள் வரை மறியலில் கைது செய்யப்பட்ட ஏறத்தாழ ஆயிரம் ஆசிரியர்களும் உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்கள். ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கோரிக்கைகள்—ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகள்—அவைகளை நாங்கள் நடைமுறைப் படுத்திக்கொண்டிருக்கின்றோம், தொடர்ந்து வருகின்ற சட்டமன்ற கூட்டத் தொடரிலே அவைகளை சட்டமாக்க இருக்கின்றோம் என்பதை எல்லாம் முன்பே எடுத்துச் சொன்னோம். அதைத்தான் மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறோம் என்று சொன்னேன். புதிதாக எந்தக் கோரிக்கையும் நான் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்திலே அவர்களிடத்திலே கோரிக்கைகள் மிச்சம் இல்லை. ஆனாலும், இந்தப் பிரச்னையை இந்த அரசு எவ்வளவு சாந்நிகமாக, எந்த அளவும் அவர்களைப் பழி வாங்கவேண்டுமென்ற உணர்வு இல்லாமல், அதே நேரத்தில் கைதானவர்களை விடுதலை செய்வது மாத்திரமல்ல—ஆங்காங்கே தனியார் பள்ளிகளிலே கூட அவர்கள் மீது ஏதாவது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமானால் அந்த நடவடிக்கைகளை எல்லாம் திருப்பிப் பெறுகின்ற அளவுக்கு அவர்களுக்கெல்லாம் தாக்கீது பிறப்பிக்கப்பட்டது. பிரச்னைகளை இந்த அரசு எப்படி அணுகுகிறது என்பது இதிலிருந்து விளங்கும்.

1970-இல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு பெரிய அளவில் நிலப்பறி இயக்கம் என்று சொல்வேன்—அவர்களுடைய மொழியிலே நில மீட்சி இயக்கம் என்று சொல்வார்கள்—அந்த இயக்கத்தை அவர்கள் நடத்துகின்ற நேரத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இன்றையதினம் விவசாயப் போராட்டத்தினுடைய தலைவர்களில்

ஒருவரான நண்பர் மன்றாடியார் அவர்கள் கூட அன்றையதினம் நிலத்திற்குப் பாதுகாப்பு வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டார் என்பதை இந்த அவை அவ்வளவு சீக்கிரத்தில் மறந்து விடுவதற்கில்லை. அன்றையதினம் நிலக் கிழார்களாக இருந்தவர்கள் அத்தனை பேரும் அந்தப் போராட்டத்தை எப்படி சந்திப்பது என்று பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்பதும் விவசாயத் தொழிலாள நண்பர்கள் ஈடுபட்டிருக்கின்ற அந்த இயக்கத்தில், நிலப்பிரபுக்கள் அவர்களிடமுள்ள ஆட்களைக் கொண்டு அடித்து நொறுக்கி நசுக்குவது என்ற அளவுக்கு இரு தரப்பிலும் பெரிய ரகளை, அமளி ஏற்படுகின்ற அந்தச் சூழ்நிலையில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் நீதிமன்றத்தில் அரசாங்கத்தினுடைய நடவடிக்கை சரியில்லை என்று ஒரு மனு—ஹேபியஸ் கார்பஸ் மனு—அளித்து அந்த மனுவின் மீது கூட நீதிமன்றத்தின் தீர்ப்பு சாதகமாக இல்லை என்றிருந்தும் கூட அரசாங்கம் 20 நாட்களிலேயே நிலப்பறி இயக்கத்தில் ஈடுபட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஊழியர்கள் அத்தனை பேரையும் விடுதலை செய்தது என்பதை நாடும் நன்கறியும், இந்த அவையும் நன்றாக அறியும்.

1970 டிசம்பர் திங்கள் கல்லூரிகளில் தமிழ்ப் பயிற்றுமொழி சம்பந்தமாக ஒரு கிளர்ச்சி ஏற்பட்டு மாணவர்கள் தங்களுடைய அதிருப்தியை தெரிவித்த நேரத்தில், "மாணவர்களா? உங்களை நாங்கள் சந்திப்பதா?" என்று 1965-ஐ நடத்திக் காட்டாமல் அவர்களை எப்படி அணுகிப் பேசி பிரச்னையை தீர்க்க வேண்டுமோ அந்த அளவில் தீர்ப்பதற்கு இந்த அரசு ஆவன செய்து, உயர்திரு லக்ஷ்மணசாமி முதலியார் தலைமையில் ஒரு நிபுணர் குழுவை அமைத்து அந்தக் குழுவின் சார்பிலே ஒரு நல்ல தீர்வு மாணவர்களுடைய பயிற்றுமொழிப் பிரச்னைக்குக் காணப்பட்டது என்பதை நாடு நன்றாக அறியும்.

மின்சார வாரியத்திலுள்ள ஊழியர்கள், அவர்களுக்கு ஊதிய உயர்வு தேவை என்று கோரிக்கை வைத்த நேரத்தில், 4, 5, 6 நாட்கள் அவர்களோடு அமர்ந்து, பேசி, ஏறத்தாழ நான்கு கோடி ரூபாய்க்கு மேல் அவர்கள் சம்பள உயர்வு அதிகமாகப் பெறுகின்ற ஒரு சூழ்நிலையை இந்த அரசின் சார்பில் நாம் உருவாக்கினோம் என்பதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

அரசாங்க ஊழியர்கள், என்.ஜி.ஓ.-க்கள் 1971-ஆம் ஆண்டு இரண்டாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளின்படி ஏறத்தாழ இருபத்தி இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் அவர்கள் பெருகின்ற அளவுக்கு சம்பள உயர்வு இந்த அரசு அளித்தது மாத்திரமல்ல, அந்தச் சம்பள உயர்வில் ஏற்பட்டிருந்த முரண்

பாடுகளை உடனடியாக நீக்குவதற்கு ஒத்துக்கொண்டு நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல இன்றைய அளவும் கூட அவைகளை ஆராய்கின்ற தன்மையில் ஒரு தனி நபர் குழு பணியாற்றி வருகின்றது.

சில மாதங்களுக்கு முன்பு கூட, என்.ஜி.ஓ.-க்கள் ஒரு மாநாட்டில், என்னிடம் அவர்கள் கொடுத்த கோரிக்கை அதே இடத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்டு மாதம் ஒன்றிற்கு பத்து ரூபாய் உயர்வு அளிக்கப்படும் என்று நான் அறிவித்து அதன் மூலமாக ஐந்து லட்சம் அரசாங்க ஊழியர்களுக்கு ஆறு கோடி ரூபாய் செலவழிக்கின்ற அந்தக் கோரிக்கையை அரசாங்கத்தின் சார்பில் ஏற்றுக் கொண்டேன்.

ஏவுலர் சர்ஜன்கள்—அவர்களும் பிரச்னையை முன் வைத்து, என்னை அணுகிய நேரத்திலே, அவர்களிடத்திலே மிகுந்த அக்கறையோடு பேசி, ரூ. 150 என்று இருந்த அந்தத் தொகையை ரூ. 175 ஆக மாற்றுவதற்கு ஒப்புக்கொண்டதோடு, அவர்களுக்கு 102 புதிய பதவிகளையும் உண்டாக்குவதற்காக அரசு சம்மதம் தெரிவித்தது.

பல காலமாக, தமிழ்நாட்டுக் கடற்கரையில்—திருநெல்வேலியிலிருந்து இங்கு வரை—சங்கு எடுக்கின்ற தொழிலாளர்கள் இருக்கிறார்களே, அவர்களுடைய பிரச்னை காங்கிரஸ் காலத்திலிருந்தே எடுத்துச் சொல்லப்பட்டது—அதை, சங்கு எடுக்கின்ற அந்தச் செயலை குத்தகைக்கு விடக் கூடாது, யாரோ சிலர் அந்தச் சங்கு எடுக்கின்ற அந்தச் செயலை குத்தகைக்கு விடக் கூடாது, யாரோ களிடத்திலேயே இந்த உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்திற்கு கோரிக்கை வைக்கப்பட்டபோது, அது பற்றி ஆலோசித்து, இன்றைக்கு சங்கு எடுக்கின்ற அந்த உரிமையை குத்தகைக்கு விடாமல், அந்தத் தொழிலாளர்களுக்கே அந்தச் சங்கை எடுக்கிற உரிமையை அளித்திருப்பது இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை நான் இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுப்பணித் துறையிலும், நெடுஞ்சாலைத் துறையிலும் இருக்கின்ற தொழிலாளர்கள்—அவர்கள் எல்லாம் தங்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கோரிக்கை—இன்று நேற்றல்ல, பல்லாண்டு காலமாக—வைத்திருக்கிறார்கள். பொதுப்பணித் துறையில் உள்ளவர்கள்—அதே போல நெடுஞ்சாலைத் துறையில் உள்ளவர்கள் அதிலும் குறிப்பாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆராய்ந்து முடிவெடுத்து, பொதுப்பணித் துறையிலேயும், நெடுஞ்சாலைத் துறையிலேயும்

ஐந்தாண்டுகளுக்கு மேல் பணியாற்றுகிறவர்கள் நிரந்தரமாகாமல் இருக்கின்ற நிலையில் இருப்பார்களேயானால், அவர்களை பொதுப்பணித் துறையில் 4,218 பேரையும், நெடுஞ்சாலைத் துறையில் 4,257 பேரையும்—மொத்தம் 8,475 பேரையும் நிரந்தரமாக—நிரந்தரமான ஊழியர்களாக ஆக்குவது என்று வசதி செய்து கொடுத்த அரசும் இந்த அரசுதான்.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு கூலி நிர்ணயம் செய்யப்படாத காரணத்தால் அங்கே அடிக்கடி பிரச்னைகள் எழுந்து கொண்டேயிருந்தன. அதன் காரணமாகத்தான் அன்றைக்கு நமது நண்பர் கே. டி. கே. தங்கமணி குறிப்பிட்டார்களே, கீழ் வெண்மணிச் சம்பவம்—தி.மு.க.-வின் ஆட்சியிலே ஒரு களங்கம் என்று—அது திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஏற்பட்ட களங்கம் அல்ல—தமிழ்நாட்டிற்கே ஏற்பட்ட களங்கம்—அந்தக் களங்கத்திற்கும் ஆட்சிக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. வெண்மணியில் ஏற்பட்ட மோதல்—அதன் தொடர்பாக தீ வைக்கப்பட்ட நிகழ்ச்சி—அதிலே விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட போராட்டத்தில் இரு தரப்பிலும் ஏற்பட்ட மோதல்—அதன் தொடர்பாக தீ வைக்கப்பட்ட நிகழ்ச்சி—அதிலே இறந்தவர்கள் 40-க்கும் மேற்பட்டவர்கள். அந்தக் கொடுமை நடந்த உடனே, நானும், அமைச்சர் மாதவனும், அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்களும், மற்ற அமைச்சர்களும் சென்று அந்தக் கொடுமையை நேரில் கண்டோம். அடிபட்டு, சிதைபட்டுக் கிடக்கின்ற விவசாயத் தோழர்களையெல்லாம் மருத்துவ மனைக்கு சென்று பார்த்தோம். ஆனால் அன்றைக்கு இருந்த காங்கிரஸ் தலைவர்கள் சென்றார்கள். சென்று, யார் யார் அடித்தார்களோ, அந்த மிராசுதார்களை எல்லாம் போய்ப் பார்த்துவிட்டு வந்தார்கள். அதுவும் அப்போதே சட்டசபையில் பேசப்பட்டிருக்கிறது. நான் வெண்மணிச் சம்பவத்தைக் குறிப்பிடுவதற்குக் காரணம், அந்த கீழ்வெண்மணிச் சம்பவத்தைப் போல பல சம்பவங்கள் நடைபெறுவதற்கு ஏதுவாக, பழைய காலத்திலே, இரணியன் போன்றவர்கள் தஞ்சை மாவட்டத்தில்—இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் கருப்பையா, கிட்டு போன்றவர்கள் எல்லாம் சுட்டுக் கொல்லப்பட்டது, பெரும் ரணகளம் ஏற்பட்டது—இவையெல்லாம் அந்தப் பகுதியிலே விவசாயத் தோழர்களுக்கு தலைமை தாங்கி நடத்துகின்ற மணலி கந்தசாமி, சுப்பையா, மற்றும் அங்கே இருந்து போராட்டத்தை நடத்துகின்ற மற்றவர்களும் மிக நன்றாக உணருவார்கள் அவர்களுடைய பிரச்னை எவ்வளவு முக்கியமானது என்பதை. இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே கணபதியாப் பிள்ளை குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் முடிவுப்படி கூலி நிர்ணயம் செய்யப்பட்டு,

அந்தக் கூலி நிர்ணயத்தை ஏற்று, இதுவரை அங்குள்ள நிலக்கிழார்கள் விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி வழங்கி வருகிறார்கள். அந்தச் சட்டம் மீண்டும் நீடிப்பதற்காக அந்தச் சட்டத்தை குடியரசுத் தலைவரின் அனுமதியைப் பெற்று, இப்போது அமல்படுத்தப்பட்டு வருகிறது. அதிலே கூட இருக்கிற குறைபாடுகளைப் போக்குவதற்கு, தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயத் தொழிலாளர்களோடு கலந்துபேசி, இம்மாதம் 13-ந் தேதி—நாளை—அங்கு நடைபெறவிருக்கிற முத்தரப்பு மாநாட்டில் விவசாய அமைச்சரவர்கள் தீர்வுகாண இருக்கின்றார்கள். ஆகவே, எந்தப் பிரச்சினையிலும் இந்த அரசு—தொழிலாளர் பிரச்சினையானாலும், விவசாயத் தொழிலாளர்கள் பிரச்சினையானாலும்—அவைகளை தீர்த்து வைப்பதில் மிகுந்த அக்கரையோடு செயல்பட்டு வந்திருக்கிறது என்பதற்காகவே இவைகளையெல்லாம் இங்கே குறிப்பிட்டேன்.

விவசாயத் தொழிலாளர்கள் தாங்கள் குடியிருக்கின்ற குடியிருப்பு மனைகள் தங்களுக்குச் சொந்தமாக வேண்டுமென்று பல ஆண்டு காலமாக போராடி வந்திருக்கிறார்கள். இந்த மாநிலத்தில், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் மாத்திரம் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் நிலவுடைமையாளர்கள் இடத்தில் குடியிருக்கிறார்கள். அந்த நிலவுடைமையாளர்கள் அவர்களை எப்போது காலி செய்வார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது. அந்த வீட்டை பழுதுபார்ப்பதற்கு அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு உரிமை இல்லை. அந்த வீட்டை ஏதாவது ஒரு காரணத்திற்காக அடமானம் வைப்பதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை. அந்த உரிமைகள் அவர்களுக்கு வேண்டும். அந்தக் குடியிருப்பு மனைகள் அவர்களுக்கு சொந்தமாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை கவனிப்பாரற்று புறக்கணிக்கப்பட்டது; புழக்கடையிலே தூக்கி எறியப்பட்டக் கோரிக்கையாக இருந்தது. அந்தக் கோரிக்கையினை நிறைவு படுத்துகின்ற வகையிலே இந்த அரசு சென்ற ஆண்டு சட்டத்தை உருவாக்கி, குடியிருப்பு மனைகளை வழங்க திட்டமிட்டு, இதுவரை தஞ்சை மாவட்டத்திலே 30,000 விவசாயத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு மனைகள் சொந்தமாக்கப்பட்டிருக்கின்றன. மிச்சமுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கும் வரும் செப்டம்பர் திங்கள் 15-ந் நாள் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள் விழா தஞ்சையில் நடைபெறவிருக்கிறது, அந்த விழாவில் வீட்டு மனைகள் சொந்தமாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு—நிலமற்றவர்களுக்கு—வீட்டுமனை இல்லாதவர்களுக்கு இந்த அரசு இந்த 4, 5 ஆண்டுகளில் எந்த அளவுக்கு வசதிகளை வழங்கியிருக்கிறது என்பதை கடந்த 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியோடு ஒப்பிட்டுப்

பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். 1947-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டு வரை—20 ஆண்டுகளில் 69,804 பேர்களுக்கு காங்கிரஸ் ஆட்சியில் வீட்டு மனைகள் பட்டா செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 1967 முதல் 1972—இன்று வரை இந்த 5 ஆண்டு காலத்தில் 3,42,421 பேர்களுக்கு வீட்டுமனைகளை இந்த அரசு பட்டா செய்து கொடுத்திருக்கிறது. நான் இப்போது கொடுத்த இந்தக் கணக்கில் தஞ்சை மாவட்டத்தில் வீட்டுமனைகள் சொந்தமாக்கப்பட்டது சேராது; அது தனிக் கணக்கு.

1947-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டுவரை 20 ஆண்டு காலத்தில் காங்கிரஸ் ஆட்சியில் 288,000 ஏக்கர் விவசாய நிலம் 115,890 பேர்களுக்கு பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. 1967 முதல் 1972 வரையுள்ள 5 ஆண்டு கால கழக ஆட்சியில் 529,400 ஏக்கர் விவசாய நிலத்தை 265,873 பேர்களுக்கு பட்டர் செய்து கொடுத்திருக்கிறோம். இது தவிர இராமநாதபுரம் மாவட்டத்தில் குளம்-கோர்வை நிலங்கள் சுமார் 70,000 ஏக்கர் ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு பட்டா செய்து கொடுக்க ஏற்பாடாகி இருக்கிறது. இது மாத்திரமல்ல. இந்த ஆண்டு மட்டும் காட்டு நிலம் 50,000 ஏக்கர் நிலமற்ற விவசாயிகளுக்கு பட்டா செய்து கொடுக்க ஏற்பாடாகியிருக்கிறது. விவசாயிகளுக்கு கடன் வழங்குவதிலும் இந்த அரசு பின்னடைந்துவிடவில்லை. கூட்டுறவுத் துறை மூலம் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன கடன்—பயிரிட, அதற்குத் தேவையான உரம் வாங்கிவிட அளிக்கப்பட்ட குறுகிய கால கடன் 1966-67-ல் 31 கோடி ரூபாய்; 1967-68-ல் 31 கோடி ரூபாய்; 1968-69-ல் 44 கோடி ரூபாய்; 1969-70-ல் 42 கோடி ரூபாய்; 1970-71-ல் 45 கோடி ரூபாய்; 1971-72-ல் 57 கோடி ரூபாய்; 1972-73-ல் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிற மதிப்பீடு 65 கோடி ரூபாய். விவசாயிகளுக்கு பயிரிட, உரம் வாங்கிட குறுகிய கால கடனாக மாத்திரம் 65 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

நீண்டகாலக் கடனாக 1966-67-ல் 4 கோடி ரூபாய், 1967-68-ல் ஏழரைக் கோடி ரூபாய்; 1968-69-ல் பதினைந்தரைக் கோடி ரூபாய்; 1969-70-ல் பதினாறேகால் கோடி ரூபாய், 1970-71-ல் இருபத்திரண்டேகால் கோடி ரூபாய், 1971-72-ல் 25 கோடி ரூபாய், 1972-73-ல் வழங்க இருக்கின்ற நீண்ட கால கடன்—கிணறு வெட்ட, பம்புசெட்டுகள் போட, நிலத்தை சீர்திருத்த—35 கோடி ரூபாய்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது, ஆளும் கட்சியையும், ஆளும் கட்சிக்குத் தோழமையாக இருக்கின்ற கட்சிகளையும் தவிர, பேசிய உறுப்பினர்கள் எல்லாம் அதிகமான அளவில் குறைப்பாட்டைச் சொன்னார்கள்.

கடன் கொடுக்க முடியாமல் திண்டாடுகிறவர்களிடமிருந்து நிர்ப்பந்தமாக கடன் வசூல் செய்யப்படுகிறது என்பதுதான் அந்தக் குறைபாடு. 15-7-1972 வரை அரசாங்கத்தினுடைய கடனை—தற்காலிக் கடன், நிலவரி போன்ற ரெவின்யூ ரெக்கவரி—கடன் பாக்கியாக இருப்பது 12 கோடியே 81 லட்சமாகும். இப்போது பாக்கியாக இருக்கின்ற கணக்கை மட்டும் நான் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் கிட்டத்தட்ட 19 கோடி ரூபாய்க்கு டோட்டல் பாலன்ஸ்—கடன் பாக்கியாக இருக்கிறது. இந்த 19 கோடியில் ஜூன் மாதம் வரையில் செங்கற்பட்டு மாவட்டத்தில் மட்டும் வசூலாகாமல்—டோட்டல் பாலன்சாக இருப்பது 1 கோடியே 98 லட்சம் ரூபாய். ஆனால் ஜூன் மாதம் வசூலாகி இருப்பது 4 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய்தான்; வட ஆற்காடு மாவட்டத்தில் ஜூன் மாதம் வரை வசூலாகாமல் இருப்பது 2 கோடியே 67 லட்சம் ரூபாய். ஆனால் ஜூன் மாதம் வசூலாகி இருப்பது 2 லட்சத்து 64 ஆயிரம் ரூபாய்தான். தென்னாற்காடு மாவட்டத்தில் டோட்டல் பாலன்ஸ்சாக இருப்பது 1 கோடியே 7 லட்சம் ரூபாய். ஆனால் ஜூன் மாதம் வசூலாகி இருப்பது 6 லட்சத்து 58 ஆயிரம் ரூபாய்தான். தஞ்சை மாவட்டத்தில் ஜூன் வரை வசூலாகாமல் பாலான்ஸ்சாக இருப்பது 22 லட்சம் ரூபாய். ஜூன், மாதத்தில் வசூலான தொகை 2 லட்சம் ரூபாய். இப்படியே ஒவ்வொரு மாவட்டத்திலும் பார்த்தால் மொத்தமாக 12,81,06,149 ரூபாய் டோட்டல் பாலன்ஸ் இருக்கிறது. இதிலே ஜூன் மாதத்தில் வசூலாகி இருப்பது 53,45,113 ரூபாய்தான். ஆக இந்த ஐந்து மாதங்களில் 19 கோடி ரூபாயில் 7 கோடி ரூபாய் அரசாங்க கடன் வசூலாகி இருக்கிறது. 12 கோடி ரூபாய் பாக்கி நிற்கிறது.

இதிலே அதிகமாக ஜப்திகள் செய்யப்பட்டன என்று இங்கே எடுத்துப் பேசப்பட்டது. தமிழ்நாடு முழுவதிலும் இருக்கிற பட்டாதாரர்கள் ஏறக்குறைய 90 லட்சம் பேர்களாகும். 90 லட்சம் பேர்களில் நடைபெற்றிருக்கிற ஜப்திகள் சென்னையில் ஒன்றும் இல்லை. செங்கல்பட்டில் 938, வடாற்காடில் 458, சேலத்தில் 344, தர்மபுரியில் 300, திருச்சிராப்பள்ளியில் 1,846, தஞ்சாவூரில் 551, கோயம்புத்தூரில் 200, நீலகிரியில் 13, மதுரையில் 1, இராமநாதபுரத்தில் 23, திருநெல்வேலியில் 118, கன்னியாகுமரியில் 19 ஆக மொத்தமே 4,846 பட்டாதாரர்களின் மீதுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது—மொத்தமுள்ள 90 லட்சம் பட்டாதாரர்களில், கடன்களைத் திருப்பிச் செலுத்தவில்லை என்பதற்காக இந்த 4,846 பேர்களின் மீதுதான் ஜப்தி போன்ற காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன.

கூட்டுறவுக் கடன்களை எடுத்துப் பார்த்தால்—குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தான் அதிகமாக எடுத்துச் சொல்லப்பட்டது—ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டாரத்தில் மட்டும் கூட்டுறவு சங்கங்கள் 40 இருக்கின்றன. பூவாணி, படிக்காசுவைத்தான்பட்டி, இராமலிங்கபுரம், இராமச்சந்திரபுரம் முதலாக பாட்டக்குளம், டபிள்யூ புதுப்பட்டி ஈறாக தவணை தவறிய பாக்கியுள்ள சங்கங்கள் 11 தான். மற்றவைகள் எல்லாம் குறுகிய காலக்கடனை நீண்டகாலத் தவணையாக மாற்றிக்கொண்டதன் மூலம் அல்லது கடனைத் திருப்பி அடைத்துவிட்ட முறையில் பாக்கியில்லா சங்கங்களாகத்தான் இருக்கின்றன.

அடுத்து, கல்லமநாயக்கன்பட்டி வட்டாரத்தில் அப்பையநாய்க்கன்பட்டி முதல் ஓ. கரிசல்குளம் சிப்பிப்பாறை ஈறாக 49 சங்கங்கள் இருக்கின்றன. இந்த 49 சங்கங்களில் தவணை தவறிய பாக்கி நிற்கும் சங்கங்கள் எதுவும் கிடையாது.

அதேபோல சாத்தூர் வட்டாரத்தில் ஆவடையாபுரம், ஆமத்தூர் முதல் வள்ளியூர், போத்திரெட்டியபட்டி ஈறாக 40 சங்கங்கள் இருக்கின்றன. 30—6—1971 அன்று வரை தவணை தவறிய பாக்கி எதுவும் உள்ள சங்கம் கிடையாது. பாக்கியைச் செலுத்தியிருக்கிறார்கள். அல்லது குறுகிய காலக் கடன் தவணைகள் நீண்டகாலத் தவணைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன.

காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர் கிருஷ்ணசாமி நாயுடு துணைத்தலைவராக இருக்கிற திருவில்லிப்புத்தூர் நிலவளவங்கியை எடுத்துக்கொண்டால் 1971-72 ஆண்டு டிமாண்ட் 14.45 லட்சம். அதில் வசூலாகிவிட்டது 12.50 லட்சம். பாக்கி நிற்பது 1.95 லட்சம்தான். தவணை கடந்த பாக்கி விசிதாச்சாரம் 14.9 சதவீதம்தான். அவர் துணைத் தலைவராக இருக்கிற நிலவள வங்கியைப் பொறுத்தவரை பாக்கிக்காக ஜப்தி செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்ட இடங்கள் நூறு இருக்கும். அவையும்கூட திரு. கிருஷ்ணசாமி நாயுடு கையொப்பமிட்டுத்தான் அந்த நடவடிக்கைகளுமே எடுக்கப்பட்டிருக்கும் என்பது எனக்குக் கிடைத்துள்ள தகவல். அதற்கு ஆதாரம் இல்லை என்றால் நான் திருத்திக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன்.

இந்தக் கடன், மற்றும் விவசாயிகளுக்கு இருக்கி பிரச்சினைகள் ஆகியவைகளை எல்லாம் வைத்து விவசாயிகளுடைய போராட்டம் தொடங்கியது. விவசாயிகளுடைய போராட்டத்தின் விளைவுகள், அதனால் ஏற்பட்ட உயிர்ச் சேதம், விரும்பத்தக்கதாக நிகழ்ச்சிகள் இவைபற்றி எல்லாம்

இந்த மன்றத்திலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உள்ள ஆழ்ந்த கவலையில் எள்ளளவும் என் கவலை குறைந்ததது அல்ல என்பதை மிகுந்த பணிவன்புடன், மனிதாபிமான உணர்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எப்படிச் செத்தாலும், எந்தக் காரணத்திற்காகச் செத்திருந்தாலும் இறந்துவிட்டார்கள் என்றால் அவர்களது குடும்பத்தார் அவர்களை இழந்து விட்டார்கள். அவர்களுக்கு நமது அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவிப்பதுதான் மனிதாபிமான, அரசியல் நாகரிக, அரசியல் பண்பாடு கொண்டவர்களுடைய செயலாகும். நான் மீண்டும் ஒருமுறை இறந்துவிட்டவர்களது குடும்பத்தார்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

யாரோ கூடக் கேட்டார்கள், திரு. கே. டி. கே. என்று நினைக்கிறேன்—துப்பாக்கிப் பிரயோகத்தினால் இறந்தவர்களது குடும்பத்திற்கு ஒரு சிறு வார்த்தையாவது அனுதாபம் தெரிவித்தார்களா என்று. நான் துப்பாக்கிப் பிரயோகம் நடந்துவிட்ட மறுநாளே—நான் மனம் பதறுகிறேன், இறந்துவிட்டவர்களது குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்கிறேன் என்று அறிக்கைவிட்டிருக்கிறேன். பின்னரும் திராவிட முன்னேற்றக் கழகம், முஸ்லீம் லீக், பார்வேர்ட் ப்ளாக், உழைப்பாளர் கட்சி, தமிழரசுக் கட்சி ஆகிய எல்லாக்கட்சிகளின் சார்பில் அனைத்துக்கட்சிக் கூட்டம் நடைபெற்ற அன்றும் கூட இறந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து அவர்களது குடும்பத்திற்கு அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்து நாங்கள் ஒரு தீர்மானத்தையே நிறைவேற்றியிருக்கிறோம். அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியவுடன்தான் மற்ற தீர்மானங்களை அந்தக் கூட்டத்தில் வடித்து எடுத்திருக்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அனுதாபத் தீர்மானம் போட்டதை வரவேற்கிறோம். கீழ்வெண்மணிச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர்களை எல்லாம் சென்று அமைச்சர்கள் பார்த்து வந்தார்களே, அதுபோல இந்த விவசாயிகளின் போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை அமைச்சர்கள் சென்று நேரில் பார்க்கவில்லையே என்றுதான் உண்மையிலே விவசாயிகள் வருத்தப்படுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நாங்கள் கீழ்வெண்மணிக்குச் சென்றோம் என்றால் அங்கிருந்த விவசாயிகளின் நிலைமை வேறு. அவர்கள் துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்டார்கள். இங்கே துன்பத்திற்கு ஆளானவர்கள் தூண்டப்பட்டவர்கள். இவர்களைப் பார்க்க நாங்கள் செல்வதனால் மீண்டும் வன்முறைச் சம்பவம் ஏற்பட்டுவிடக் கூடாது என்றுதான் நாங்கள் செல்ல

வில்லை. என்றாலும் சேதமுற்ற இடத்தை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்கள் நேரில் சென்று பார்த்திருக்கிறார்கள். அவர்களைப் போய் நாங்கள் பார்க்கக் கூடாது என்பது அல்ல. கடந்த பல ஆண்டுக்காலங்களாக —துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழந்து அவர்களது மனைவிமார்கள் கண்ணீரும் கம்பலையுமாக நின்றார்களே, அறுந்த தாலிக் கயிற்றைப் பிடித்துக்கொண்டு கதறி அழுதார்களே, திலகங்கள் அழிந்த நெற்றியை கைகளால் தேய்த்து விட்டுக் கொண்டு புலம்பி நின்றார்களே அவர்களது பரிதாபகரமான நிலைமையைப் பார்த்து அவர்களுக்கு ஒரு ரூபாயாவது நிதி உதவி அளிக்க உள்ளம் இல்லாது உள்ளம் இருக்க வேண்டிய இடத்தில் பள்ளம் பெற்றிருந்தவர்கள்— இந்த நாட்டில் ஆட்சிக் கட்டிலில் வீற்றிருந்தார்கள். இன்றைக்கோ அவர்களே எதிர் பார்த்திருக்கமாட்டார்கள். ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. ஐயாயிரம் ரூபாய் கொடுத்துவிட்டதால் அந்த உயிர் திரும்புமா? அந்த உயிர் திரும்பாது. ஐயாயிரம் அந்த உயிருக்கு மதிப்பு இல்லை. ஆயினும் அவர்களையே நம்பி இருந்த குடும்பம் அவர்களது இழப்பினால் பெரிதும் பாதிக்கப்பட்டு அவதியுறாதிருக்க அரசும் தன் சார்பில் ஒரு பங்கு உதவியினைத்தான் அளிக்கிறது என்று அன்றைக்கே நான் சொன்னேன். திரு. ஹாண்டே கூடச் சொன்னார்கள். நிச்சயமாக இப்போதும் சொல்கிறேன். அந்த உயிருக்கு இந்த ஐயாயிரம் ரூபாய் விலையாகிவிடாது.

இந்தப் பிரச்சினைகள் ஏன் எழுந்தன? விவசாயிகளது கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. முதலில் வைக்கப்பட்ட கோரிக்கைகள் கம்யூனிஸ்டுக் கட்சியும், மற்ற கட்சிகளும் அதனோடு இணைந்த பிறகு திருத்தப்பட்டு புதிய கோரிக்கைகளாக 12 வைக்கப்பட்டன என்று திரு. கே. டி. கே. சொன்னார்கள். அவர்கள் சொன்னது சரியாக இருக்குமோ என்ற எண்ணத்தில் நண்பர் நாராயணசாமி நாயுடு அவர்கள் தலைமையில் ஏற்கனவே எனக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த கோரிக்கைகளையும், இவர்கள் சேர்ந்தபிறகு அனுப்பப்பட்ட கோரிக்கைகளையும் எடுத்துப் பார்த்தேன். எந்த வித்தியாசமும் கிடையாது. முதலிலே எந்த எந்தக் கோரிக்கைகளை அனுப்பி இருந்தார்களோ அதே கோரிக்கைகள்தான் திரு. கல்யாணசுந்தரம் அவர்களும், நாராயணசாமி நாயுடு அவர்களும், ஸ்தாபன காங்கிரஸ் சார்பாக திரு. கக்கன் அவர்களும், தேசிய காங்கிரஸ் சார்பாக திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்களும், சுதந்திராக் கட்சி சார்பாக திரு. ஹாண்டே அவர்களும் சோஷலிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. நல்லசிவம், சின்னதுரை ஆகியவர்களும் கையெழுத்திட்டு அனுப்பியிருந்த கோரிக்கைகள் இருந்தன. கோவை விவசாயச் சங்கத்தின் சார்பாக 5-4-1972-இல் திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் "உயிர்அடிப்படையில்

போடப்பட்ட விவசாய வருமான வரி ரத்து செய்யப் படவேண்டும்" என்று எழுதியிருந்தார் என்றால் இவர்கள் அதையே கைவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதைத்தவிர வேறு எந்த மாற்றமும் இவர்கள் செய்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

இந்தக் கோரிக்கைகளைப்பற்றி எல்லாம் அடிக்கடி பொதுக்கூட்டத்திலும் பேசப்பட்டிருக்கிறது. நிருபர்களிடத்திலும் பேசப்பட்டிருக்கிறது. இங்கேயும் பலர் பேசியிருக்கிறார்கள். ஆகவே, அவற்றுக்குள் நான் ஆழமாகச் செல்ல விரும்பவில்லை.

ஆனால் இந்த விவசாயிகளது போராட்டம் எந்த உணர்ச்சியின் அடிப்படையில் 1971-இல் இருந்தே தொடங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

கோவை ஜில்லா விவசாயிகள் சங்கத்தின் சார்பில் திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் அலுவல்கள் தொடர்ந்து நடத்தப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: '. . . . மின் துண்டிப்பு அறிவிப்பும் விவசாயிகளின் பொறுமையை சோதிப்பதாக இருக்கிறது. கலவரம்—இவைகள் கவனமாக கவனிக்க வேண்டிய பகுதி—கலவரம், வன்முறைச் செயல்கள் ஏற்பட்டால்தான் பிரச்சினைக்கு சர்க்கார் செவி சாய்ப்பது என்றால், விவசாயிகளும் அதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதை வருத்தத்துடனும் ஆனால், அதே சமயத்தில் உறுதியுடனும் தெரிவித்துக் கொள்கிறேன் . . . '. என்று நாராயணசாமி நாயுடு அவர்கள் 1970-லே எனக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். ஆனால் இரண்டு நாள் கழித்து அவர் ஒரு கடிதம் எழுதினார். 'நான் ஏதோ ஒரு மனக் குழப்பத்திலே அதை எழுதி விட்டேன். நீங்கள் அதைப் பொருட்படுத்த வேண்டாம்' என்று இரண்டு நாள் பொறுத்து எனக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதம் என்னிடத்திலே இருக்கிறது.

இந்த 12 அம்ச கோரிக்கைகள் ஒரு உடன்பாட்டிற்கு வந்த பிறகும் இந்த போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்ற எண்ணம் மாநில விவசாயிகள் போராட்டக் குழு நண்பர்களிடத்திலே இருக்கிறதா இல்லையா என்பதை இன்று காலையிலே வந்த தினமணிப் பத்திரிகையைப் பார்த்தால் தெரியும். பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு அதை

இப்பொழுது படிக்கிறேன். 'விவசாயிகள் செயல் குழு கூட்டம்'—'ஒப்பந்த அமலை வற்புறுத்தி தீவிர இயக்கம் நடத்த முடிவு'—இப்படித்தான் தலைப்பு போட்டுள்ளார்கள். ஏதாவது நடக்க வேண்டுமென்பதிலே அவர்களுக்கெல்லாம் அலாதி ஆசை. ஆகவே. 'விவசாயிகள் செயற் குழு கூட்டம்—ஒப்பந்த அமலை வற்புறுத்தி தீவிர இயக்கம் நடத்த முடிவு' என்று தலைப்பு போட்டிருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது? ஒப்பந்தங்கள் அமல்படுத்தப்படவில்லை. அனைத்துக் கட்சித் தலைவர்களும் விவசாயப் பிரதிநிதிகளும் என்னைச் சந்தித்துக் கோட்டையிலே 4, 5 நாட்கள் பேசி, பல மணி நேரங்கள் பேசி—கடைசி நாள் மட்டும் 6 மணி நேரம் பேசினோம் என்று கருதுகிறேன்—ஏற்பட்ட ஒப்பந்தத்தை இந்த அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்று தானே எண்ணத் தோன்றுகிறது. அதிலே கக்கன் அவர்களும், ராமச்சந்திரன் அவர்களும், கிருஷ்ணசாமி, எம்.எல்.சி. அவர்களும், எம். கல்யாணசுந்தரம், எம். கே. டி. ராஜா, எம். ஆதிமூலம், என். எஸ். மன்றாடியார் இவர்களெல்லாம் கலந்துகொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். நாங்கள் என்னென்ன ஒத்துக்கொண்டிருக்கிறோம், என்னென்ன இன்றைக்கு அமல் படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை இன்றைக்கு மன்றத்திலே எடுத்துச் சொல்வது என்னுடைய பொறுப்பு என்று கருதுகின்றேன். ஒத்துக் கொண்ட கோரிக்கைகள் என்னென்ன?

(கோரிக்கை 1) மின் கட்டண உயர்வை ரத்து செய்ய வேண்டும். மின் இணைப்புத் துண்டிப்பைக் கைவிட வேண்டும். வறண்ட கிணறுகளுக்கு மினிமம் சார்ஜ் போட்டிருப்பதை நீக்கவேண்டும் என்பது.

எடுக்கப்பட்ட உடன்பாடு: 100 யூனிட்டுகள் வரையில் ஒரு யூனிட்டுக்கு 12 பைசா என்றும், 100 யூனிட்டுக்கு மேற்பட்டு மின் கட்டணம் யூனிட்டுக்கு 11 பைசா என்றும் நிர்ணயிக்கப்படுகிறது. இது உடன்பாடு. இதற்கான உத்தரவு 1—8—1972-லேயே அரசாங்கம் ஆணையின் மூலமாக பிறப்பிக்கப்பட்டது.

அது மாத்திரமல்ல. 3—8—1972-ல் இன்னொரு ஆணை பிறப்பிக்கப்பட்டு, பாக்கிக்காக போடப்பட்ட வழக்குகளும் வாபஸ் வாங்கப்பட்டன. ஒப்பந்தம் கையெழுத்தானதற்குப் பிறகு, பாக்கிக்காக போடப்பட்ட வழக்குகளும் வாபஸ் வாங்கப்பட வேண்டுமென்று மறுபடியும் என்னை சந்தித்து நாராயணசாமி அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதற்கும், மேலே குறிப்பிட்டபடி, ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மின் துண்டிப்பை மறுபடியும் இணைப்பதற்கு ரூ. 6 செலவாகும். அந்த ரூ. 6 செலவை மின் வாரியம் கேட்கக்கூடாது என்று சொன்னார்கள். அதையும்

ஏற்றுக்கொண்டு உத்தரவு பிறப்பித்தது அரசு. ஆனால் விவசாயிகள் செயற்குழு கூட்டம் தீவிர இயக்கம் நடத்த முடிவு செய்கிறது—பத்திரிகையிலே செய்தி வருகிறது. இவ்வளவுக்குப் பிறகும் ஏதாவது ஒரு அமளியை தமிழ் நாட்டில் ஏற்படுத்த வேண்டுமென்ற அழுத்தமான எண்ணம் அவர்களிடத்திலே ஊறி இருக்கிறது, என்பதற்காகத் தான் இதைச் சொல்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: எதெதெற்காக இயக்கம் நடத்த வேண்டுமென்ற காரணத்தைச் சொல்லியிருக்கிறார்களா? சொல்லியிருந்தால் தயவுசெய்து அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, on a point of order. No newspaper can be read in the House. A copy of it must be given to the Hon. Speaker in advance and he must go through it.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவருடைய அனுமதியோடு அதைப் படிக்கலாம். முதலமைச்சர் அவர்கள் அனுமதி கேட்டிருக்கிறார்கள். நீங்கள் பார்க்க வேண்டுமென்றால் அவர் எழுதியதைக் கொடுக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நேற்று அலை ஓசையைப் படிக்கும்போது படிக்கக்கூடாது என்று சொன்னீர்களே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'பேரவைத் தலைவர் அவர்களே. இன்று 12—8—1972, பதிலளிக்கத் தேவையான புகைப்படங்களையும் —புகைப்படங்களை அவர் இன்னும் காட்டவில்லை—செய்திகளையும் அவையில் காட்டவும் படிக்கவும் அனுமதி வேண்டுகிறேன். அன்பன் மு. கருணாநிதி' என்று அவர்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த முறையை எதிர்க்கட்சி பக்கத்தில் இருப்பவர்கள் இனிமேலாவது பின்பற்றலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ". . . . ஒப்பந்த ஷரத்துக்களில் சிலவற்றை அரசு சரிவர அமல் நடத்தாதது குறித்து வருத்தம் தெரிவித்தது. ஒப்பந்த ஷரத்துக்களை அமல் நடத்துமாறு அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மாநிலம் முழுவதிலுமுள்ள விவசாயிகளை ஒன்று திரட்டி தீவிர இயக்கங்கள் நடத்துவதென குழு முடிவு செய்தது . . ." என்று தினமணி பத்திரிகையில் வந்திருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: நான் செய்தியைப் பார்த்தவரையிலும் இன்னும் பல காரணங்கள் சொல்லியிருந்தார்கள். ஒப்பந்தத்திற்கு மாறாக, விரோதமாக

அரசு என்ன செய்திருக்கிறது என்று சொல்லியிருந்தார்கள். அவற்றையெல்லாம் சொல்லிவிட்டு பிறகு மற்றவற்றை . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதிலே வேறு ஒன்றும் இல்லை. நீங்கள் படித்திருந்தால் சொல்லுங்கள்.

நான் குறிப்பிட்டவையெல்லாம் நிறைவேற்றப்படவில்லை என்பதற்கு அடையாளமா? 1—8—1972-லே ஆணை பிறப்பித்தது நிறைவேற்றப்படவில்லை என்பதற்கு அடையாளமா?

திரு. எம். சுரேந்திரன்: ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பது சரியாக அமல் நடத்தப்படுகிறதா, நடத்தப்பட்டிருக்கிறதா என்று அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எங்கேயாவது குறிப்பிட்டு, மின் கட்டணம் 12 காசு தான் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அதைச்சொல்லுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: ஒப்பந்தம் ஏற்பட்டதற்குப் பின்னால் சங்கரன் கோவில் தாலுகாவில் பல இடங்களில் இந்த மின்சாரக் கட்டணத்திற்காக பியூசை எடுத்திருக்கிறார்கள். அதை மீண்டும் இணைக்க ரூ. 6-ஐ சேர்த்து வசூலித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எங்காவது நடந்திருந்தால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். ரூ. 6 கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று 3—8—1972-லேயே ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே, 100 யூனிட்டு வரையில் ஒரு யூனிட்டுக்கு 12 பைசா என்றும் 100 யூனிட்டுக்கு மேற்பட்டு மின் கட்டணம் யூனிட்டுக்கு 11 பைசா என்றும் வசூலிக்கப்படவேண்டுமென்று 1—8—1972-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

அடுத்து, 'அரசாங்கக் கடன், கூட்டுறவு நிலவள வங்கிக் கடன் உள்பட சகல கடன் பாக்கிகளையும் வஜா செய்ய வேண்டும்' என்ற கோரிக்கை. இதன் மீது 'மாநிலத்தில் எந்தெந்த பகுதிகளில் வறட்சி நிலை இருக்கிறதோ அங்கெல்லாம் கடன்கள் வசூலிப்பதில் கடுமையான நடவடிக்கைகள் கூடாது' என்று ஏற்கன்வே அரசு ஆணை பிறப்பித்திருக்கின்றது. 'மேலும் வறட்சிப் பகுதிகளை கணக்கில் எடுப்பதற்கு ரெவின்யூ போர்டு மெம்பர்கள் மாவட்ட வாரியாக ஆராய்ந்து அந்த அடிப்படையில் விளைச்சல் இல்லாத பகுதிகளில் கடன்

பார்க்கிகளுக்கு தவணை அளிப்பது போன்ற சலுகைகள் வழங்கப்படும். இதற்கிடையில் ஏற்கனவே பிறப்பித்துள்ள அரசு ஆணையின்படி அதிகாரிகள் ஜப்தி போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள், என்று உடன்பாடு செய்திருக்கிறோம். அதற்கு ஏற்ப 1—8—1972-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டு போர்டு மெம்பர்கள் அந்த அந்த மாவட்டங்களுக்குச் சென்று 30—8—1972-க்குள் 'ரிப்போர்ட்டு' களை தர வேண்டுமென்று போர்டு மெம்பர்களுக்கு தாக்கீது தரப்பட்டுள்ளது. இது அமுல்படுத்தவில்லை என்பதற்கு அடையாளமா?

அதைப்போலவே, 'விவசாயப் பண்டங்களுக்கு நம் பிரதிநிதிகளும், சர்க்கார் பிரதிநிதிகளும் சேர்ந்து விலை நிர்ணயம் செய்து அரசாங்கமே கொள்முதல் பொறுப்பை ஏற்று விற்பனை செய்ய வேண்டும்' என்பது மூன்றாவது கோரிக்கை.

'விவசாயப் பண்டங்களுக்கு அரசாங்கமே கொள்முதல் பொறுப்பை ஏற்பதற்கு ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் நிறுவுவதை கொள்கை அளவில் அரசு ஏற்றுப் பரிசீலிக்கும். விவசாய விளைபொருள் விலை நிர்ணயம் செய்வதற்காக விவசாயப் பிரதிநிதிகள் உள்ளிட்ட குழு ஒன்றை அமைப்பது பற்றி பரிசீலிப்பதோடு தேங்கியுள்ள பருத்தி முதலியவற்றைக் கொள்முதல் செய்வது பற்றி மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்' என்பது ஒப்பந்த முடிவு.

மத்திய அரசோடு தொடர்பு கொள்ள வேண்டிய பல கோரிக்கைகள் இந்த 12 கோரிக்கைகளிலே இடம் பெற்றுள்ளதை யாரும் மறந்து விடக்கூடாது.

இந்த மூன்றாவது ஒப்பந்தத்தை அமல் நடத்த எடுத்த நடவடிக்கை இந்திய அரசின் விவசாயத் துறையோடு நாம் தொடர்பு கொண்டதன் மூலம் அங்கிருந்து நமக்கு வந்திருக்கிற தகவல்:

இந்திய அரசின் விவசாயத் துறையிலிருந்து எவ்வாறு பருத்தியை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்வது என சில தகவல்களை மாநில அரசுகளிடமிருந்து கேட்டிருப்பதாகவும் அவைகளை சேகரித்த பின்பு, அவர்கள் ஒரு கூட்டத்தை கூட்டி இது சம்பந்தமாக உள்ள கஷ்டங்களை நீக்கி பருத்தி கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மத்திய அரசினுடைய விவசாயத் துறையினர் அறிவித்து இருக்கிறார்கள். அந்தத் தொடர்பு மீண்டும் தொடர்ந்து நடைபெறும் என்பதையும் நான் அறிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே, 'பயிர் அடிப்படையில் போடப்பட்டுள்ள விவசாய வருமான வரியை கைவிட வேண்டும். புதிதாகப் போடப்பட்டுள்ள நிலவரி,

செஸ் வரிகளைக் கைவிடவேண்டும். விவசாய பம்ப் செட்டுகளுக்கும் ரசாயன உரத்திற்கும் போடப்பட்டுள்ள வரியை ரத்து செய்ய வேண்டும்', இதுவும் நான்காவது கோரிக்கையிலே அடங்கியது. அவர்கள் நான்காவது கோரிக்கையிலே வேறு எதையும் வலியுறுத்தவில்லை.

ஏனென்றால் அவைகளெல்லாம் மத்திய சர்க்காரிடத்திலே பேச வேண்டிய விஷயங்கள். பம்ப் செட்களுக்கு வரி கூடாது, உர வரி கூடாது என்று சொன்னார்கள். நீங்கள் செய்ய வேண்டியவற்றிற்கெல்லாம் மத்திய சர்க்கார் மீது பழி போடுகிறீர்கள் என்று சொன்னார்கள். ஆனால் உட்கார்ந்து பேசுகிற நேரத்திலே நாங்கள் சொன்னதை அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். அவர்கள் குறிப்பிட்ட இந்த வரிகளைக் கைவிடுவதற்கு அரசு சம்மதிக்கவில்லை. அதை அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். ஆனால் சிறிய விவசாயிகளுக்கு விவசாய வருமான வரியில் சலுகை அளிப்பது பற்றி அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் என்ற உடன்பாட்டிற்கு வந்தோம். இந்தக் கூட்டத் தொடரில் அதற்கான சட்டத் திருத்தம் வர இருக்கிறது. அதற்கான மசோதா தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய உடன்பாடு அமல்நடத்தப்படவில்லையென்பதற்கு அடையாளமா இது?

திரு. கே. டி. கே. தங்கமணி: நான்காவது கோரிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட உடன்பாட்டில் இது ஒன்றுதான் சொல்லப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பயிர் அடிப்படையில் போடப்பட்டுள்ள விவசாய வருமான வரியில் கணக்கு வைப்பது கட்டாயமில்லை என்றும், ஏக்கரா வரையறையில்லாமல் கம்பவுண்டிங் முறையில் வரி செலுத்தலாம் என்றும் முன்பு அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகளையொட்டி மேலும் சிறிய விவசாயிகளுக்கு விவசாய வருமான வரியில் சலுகை அளிப்பதுபற்றி அரசு பரிசீலித்து முடிவெடுக்கும். இதுதான் ஒப்புக்கொள்ளப்பட்டது.

பாசனக் கட்டுப்பாட்டை நீக்கி தண்டத் தீர்வை போடுவதைக் கைவிட வேண்டும். இதுதான் ஐந்தாவது கோரிக்கை. ஏற்கனவே இதற்கான—ஏற்கனவே ஏற்கனவே என்று ஒவ்வொரு தடவையும் சொல்வதற்கு காரணம் இவைகளிலெல்லாம் ஏற்கனவே போராட்டத்திற்கு முன்பே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் காட்டுவதற்காகத்தான்—தற்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி இந்தப் பகுதிகளில் விவசாயிகளின் மாநாட்டைக் கூட்டி பரிசீலித்து தக்க முடிவு எடுக்கப்படும். இதற்கேற்ப சபைக்கூட்டங்கள், ஆகஸ்டு 15 நிகழ்ச்சிகளுக்குப் பிறகு மாநாடுகள் கூட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: அரசாங்கத்தினுடைய அறிவிப்பு நேற்றைக்கு வரையில்கூட ஆர்டர் அவர்கள் கையிலே கிடைக்கவில்லை. மின்கட்டணம் சம்பந்தமான ஆர்டர் இன்னும் அவர்கள் கையில் கிடைக்கவில்லை. எங்களுக்கு உத்திரவு வரவில்லை, என்று சொல்லி 12 பைசாவைத்தான் வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதால் பரவலாக அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. ஒரு ஆர்டர் சீக்கிரமாகப் போய்ச் சேருவதற்குக்கூட வழியில்லாமல் இருக்கிறது. அதுமட்டுமல்ல, எட்டாம் தேதி போட்ட உத்திரவும் இன்னும் கையில் கிடைக்கவில்லை. 13-ஆம் தேதி போட்ட ஒப்பந்தம், கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆகிறது. அரசாங்க உத்திரவுகள் போய்ச் சேராத காரணத்தால் அதை வைத்துக் கொண்டு அவர்கள் சொல்லியிருக்கலாம்.. ஆனால் உண்மையிலேயே உத்திரவுகள் போய்ச் சேரவில்லை என்ற சந்தேகம் இருக்கிறது. அந்த சந்தேகம். . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் தான் ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டிருக்கிறேன், தாங்கள் மறுபடியும் இங்கே ஒரு பேச்சுப் பேசுவதற்கு நேரமில்லை. எந்த எந்தத் தேதிகளில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சொன்னேன். ஏதாவது நடக்கவேண்டுமென்று சில பேர்கள் விரும்புகிறார்கள்.

அவர்களுடைய அடுத்த கோரிக்கை பாசனமற்ற பகுதிகளுக்கு உடனடியாக நீர்ப்பாசன உத்திரவாதம் செய்யப்படவேண்டும். அதுவரை அந்தப் பகுதிகளை வறட்சிப் பகுதிகளாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்பது. இதுபற்றி மத்திய திட்டக்குழுவுடனும் கேரள அரசுடனும் தொடர்பு கொண்டு ஆவன செய்யப்படும் என்று முடிவெடுக்கப்பட்டது. கடிதம் எழுதப்பட்டுள்ளது.

ஏழாவது கோரிக்கை, விவசாயிகள், கால்நடைகள், பயிர்கள் பாதுகாப்பு (இன்சூரன்ஸ்) செய்யப்படவேண்டும், என்பதாகும். இது நம்முடைய கையில் இல்லை. மாநில அரசுக்கும் இந்தக் கொள்கை உடன்பாடு உடையது. இதுபற்றி மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும் என்று முடிவெடுக்கப்பட்டது. இப்படி பல விஷயங்கள் நம்முடைய கையில் இல்லை, இந்திய தேசிய காங்கிரஸ் ஆண்டு கொண்டிருக்கும் மத்திய சர்க்காரின் கையில்தான் இருக்கிறது. (திரு. கே. என். குமாரசாமி எழுந்தார்கள்) நேரமில்லை, மன்னிக்கவும். இதிலே எந்த எந்தப் பகுதிகள் என்று தேர்ந்தெடுப்பதற்காக, உடுமலைப்பேட்டை, தாராபுரம், காங்கயம், தாளவாடி, பவானி ஆகிய இடங்களில் ஆராய்ச்சி நடைபெறுகிறது. மாநில அளவிலே நடைபெறுகிற ஆராய்ச்சிகள் முடிவுபெற்று விவரங்கள் சேகரிக்கப்பட்ட பிறகு மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனும் ஒழிப்புச் சட்டத்தில் தகுந்த திருத்தங்கள் செய்து இனும் நிலங்களை உழுதுகொண்டிருக்கும் உழவர்களுக்கே பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்பது அடுத்த கோரிக்கை. இந்தப் பிரச்சினை பரிசீலிக்கப்படும் என்று ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் இது சீக்கிரமாக பரிசீலனை செய்து விடக்கூடிய விசயமல்ல. சட்ட சிக்கல்கள் இருக்கின்றன. இதில் உள்ள சிக்கல்கள் சட்ட இலாகாவால் ஆராயப்படுகின்றன.

ஒன்பதாவது கோரிக்கை, அவர்களால் வலியுறுத்தப்படவில்லை, எனவே நான் அதைப்பற்றிச் சொல்ல விரும்பவில்லை.

பத்தாவது கோரிக்கை, விவசாய வேலைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கும், மரணமடைந்தவர்கள் குடும்பங்களுக்கும் சர்க்கார் நிவாரணமளிக்கவேண்டும் என்பது. விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் இரு தரப்பினரும் மாவட்ட வாரியாக விவசாயத் தொழிலாளர் பொது நல நிதி உருவாக்கவும் அதற்கு அரசின் சார்பில் ஈட்டு நிதி கொடுக்கவும் பரிசீலிக்கப்படும். அதற்கு ஏற்ற வகையிலேதான் லேபர் வெல்பேர் பண்ட் பில் இந்த சட்டசபை கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நாம் இதுபற்றி முடிவு எடுக்க இருக்கிறோம்.

விவசாயத் தொழிலாளர்களுக்கும், கிராமப்புற ஏழை மக்களுக்கும் அரசுச் செலவிலேயே குடியிருப்பு மனை நிலம் வழங்கி வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்றது அடுத்த கோரிக்கை. குடியிருப்பு மனைநிலம் ஏழை மக்களுக்கும் விவசாயத் தொழிலாளருக்கும் வழங்குவது பற்றி மாநில முழுவதும் சட்டம் விரிவாக்க முதலமைச்சர் ஏற்கனவே கலெக்டர் மாநாட்டில் அறிவித்திருப்பதையொட்டி அந்த முயற்சி விரைவுபடுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக செய்யப்பட்ட ஏற்பாடுகளையெல்லாம் நான் இங்கே எடுத்துச் சொல்லி இருக்கிறேன். உள்ளபடியே இவ்வளவு பெரிய திகழ்ச்சிக்குப் பிறகுதான் இந்தக் கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்படவேண்டுமா என்பதுதான் பிரச்னை. உடன்பாடு நிறைவேற்றப்படுவதற்கு முன்பு, என்ன என்ன சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றனவோ அதன் அடிப்படையிலே தான் இந்த பந்த்-க்கு முன்பு, இந்தப் போராட்டத்திற்கு முன்பு வெளியிடப்பட்ட என்னுடைய அறிக்கையிலே காணப்படுகின்ற சலுகைகள்தான் இந்த உடன்பாட்டிலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை அவர்கள் அறிவார்கள், அனைவருக்கும் அது தெரியும். ஆனால், எப்படியோ பெரிய பிரச்னையாக முடிந்துவிட்டது. நடந்த விஷயங்களுக்கு இரு சாராரும் வருந்துகிறோம். இதற்கெல்லாம் யார் காரணம் என்பதை, நான் தயவுசெய்து கேட்டுக் கொள்கிறேன். கொஞ்சம் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

கோவை மாவட்ட விவசாயிகளுடைய பிரச்னையாக ஆரம்பித்தது, அதுவும் ஆழமான கிணறுகள் வைத்திருப்பவர்களுக்கு பாதகம் ஏற்படும் என்று சொல்லி, ஆரம்பித்தது, இன்றைக்கு மற்ற நிலையங்களில் 15 காசு, 16 காசு, 23 காசுகள் என்று மின்கட்டணம் வசூலிக்கப்படுகின்ற நிலைமையில் தமிழ்நாட்டிலே மின் கட்டணத்தை 12 காசு என்று உயர்த்துவதற்குப் போராட்டம் நடத்தக்கூடிய முறையிலே உருவாக்கப்பட்டது. பிரதமர் இந்திரா காந்தி அவர்கள்கூட இந்த அரசு அணுகிய முறைதான் எங்களுக்குக் கவலையைக் கொடுக்கிறது, அந்தக் கோரிக்கைகளில் எங்களுக்கு உடன்பாடு கிடையாது என்று அழுத்தந்திருத்தமாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். மின் கட்டணம் மாத்திரமல்ல, பொதுவாக விவசாயிகளிடத்திலே அதிகமாக வரி வசூலிக்கவேண்டும் என்ற கொள்கையைப் மத்திய அரசு நம்முடைய மாநில அரசுக்கு அனுப்பியது. இது தமிழ்நாடு, நாமோ வேறு என்று சொல்லி இப்படியெல்லாம் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பிரிவினை பேசக்கூடாது. நாம் எல்லாம் ஒரு நாட்டில் இருக்கிறோம். இந்தியா ஒரு நாடு.

திருமதி த. ந. அனந்தநாயகி: முதலமைச்சர் அவர்கள் நான் சொன்னதை சாமர்த்தியமாக நான் ஏதோ பிரிவினை பேசுவதுபோல் மாற்றிச் சொல்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திற்கும் கோவை மாவட்டத்திற்கும் கட்டணத்திலே வித்தியாசம் இருக்கிறது, அதை வைத்துக்கொண்டு தஞ்சை மாவட்டம் வேறு, கோவை மாவட்டம் வேறு என்று பிரிவினை பேசமுடியுமா? தஞ்சை மாவட்டத்திலே விவசாயிகள் கிளர்ச்சி செய்யவில்லை, கோவை மாவட்டத்திலே விவசாயிகள் கிளர்ச்சி செய்தார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தஞ்சை மாவட்டத்திலே அந்தப் பிரச்னை இல்லை என்று சொன்னார்கள். ஆனால் மன்னார்குடியில் தெருவிலே காலைமுதல் மாலைவரையில் கடைகளை மூடவேண்டுமென்று சொல்லி போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். மத்திய அமைச்சர் திரு. சவான் அவர்கள் முதலமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

' My dear Shri Karunanidhi,

You will recall that at the recent meeting of the National Development Council we agreed that it was necessary to explore all possibilities of raising additional resources for the Fifth Five-Year Plan. In this connection, the need for taking appropriate action during the remaining years of the Fourth Plan and, in particular, in the current year, was emphasised.

I am writing this to bring the matter once again to your attention and to urge that timely measures be taken.

Our estimates indicate that for your State a total additional yield of about Rs. 16 crores a year can be expected from the withdrawal of concessions in land revenue (Rs. 3.1 crores).

லேண்ட் ரெவின்யூவைத் திரும்பப் பெறுவதன் மூலம் 3.1 கோடி ரூபாய் ரெவின்யூ வரும். ' surcharge on irrigated land (Rs. 3.5 crores) '.
லேண்ட் ரெவின்யூ மீது சர்சார்ஜ் 1.6 கோடி ரூபாய்
பாசன வசதியுள்ள நிலங்களுக்கு சர்சார்ஜ் 3.5 கோடி ரூபாய்.

' surcharge on consumers ' electricity bills (Rs. 7.2 crores) '.
கன்ஸ்யூமர்ஸ் எலக்ட்ரிசிட்டி பில்லின்மீது சர்சார்ஜ் போடுங்கள். 7.2 கோடி ரூபாய் வரும்

' and surcharge on municipal property tax (Rs. 0.6 crore) '

' The annual yield would go up to more than Rs. 19 crores if the surcharge on irrigated land is increased to Rs. 20 per acre after a year.' என்று சவான் அவர்கள் எழுதுகிறார்கள். 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றிகரமாக்க மாநிலங்கள் நல்ல ரிசோசர்ஸ், வருமானத்தைத் தரவேண்டும், அதற்கெல்லாம் வழிவகைகளாக இதைச் செய்யுங்கள் என்று அங்கிருந்து மாநில அரசுக்குத் தாக்கீது வருகிறது. அந்த அடிப்படையில் 14 கோடி ரூபாய் நஷ்டத்தோடு இயங்குகின்ற மின்சார வாரியம் 1.2 காசு உயர்த்தி அதிலேயும் சலுகைகள் அளித்து, அதிலும் குறிப்பாக சிறிய விவசாயிகளுக்கு பம்ப் செட் வைத்திருக்கும் சிறிய விவசாயிகளுக்கு, 5 குதிரை வேகமுள்ள இயந்திரங்களை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு 12 காசு, 10.8 காசு என்று இரண்டு மூன்று ஸ்லாப் சிஸ்டத்தை அறிவித்த பிறகு அதைப்பற்றி என்னிடத்தில் விவாதிக்க மறுத்து போராட்டத்தைத் தொடங்கியதுதான் இவ்வளவு பெரிய வருந்தத் தக்க நிகழ்ச்சிகளுக்குக் காரணம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்: நடந்தவைகள் இருக்கட்டும். நான் சலுகைகளை அறிவித்த பிறகு ஒரு நாள் அந்தப் போராட்டக் குழுவில் கையெழுத்திட்ட நண்பர் திரு. சின்னதுரை அவர்கள் கோவையிலிருந்து தொலைபேசியின் மூலம் என்னிடத்தில் தொடர்பு கொண்டார்கள். ' நீங்கள் சலுகைகளை அறிவித்திருக்கின்றீர்கள், அந்தச் சலுகைகள் பரிசீலிக்கத் தக்கது என்று நானும் அறிக்கை விட்டிருக்கிறேன்—சின்னதுரை யாரோ எவரோ அல்ல, அந்தப் போராட்டக்

யார் எப்படி தலையிட்டு இந்த அளவிற்குக் கொண்டு வந்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 16-ஆம் தேதி நாடெங்கும் இந்தப் போராட்டம் விரிவடையும் என்று விவசாயப் போராட்டக் குழுவில் முடிவெடுக்கிறார்கள். மாநில கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திலேயிருந்து மாவட்ட கட்சி அலுவலகங்களுக்கு ஒரு கடிதம் பறக்கிறது. என்ன கடிதம்? அந்தக் கடிதத்தில் சுந்தரம் என்பவருடைய கையெழுத்து, மாநில நிர்வாகக் குழுவிற்காக என்று போட்டு சென்னையிலிருந்து சுற்றறிக்கை, 75/9 எண் உள்ள சுற்றறிக்கை எல்லா மாவட்டக் குழுக்களுக்கும் அனுப்பப்படுகிறது. "அன்பார்ந்த தோழர்களே" என்று ஆரம்பித்து, தமிழ்நாட்டில் விவசாயிகள் இயக்க வரலாற்றில் புதிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது—யாருக்கு? கம்யூனிஸ்ட்களுக்கு—தமிழ்நாட்டில் விவசாயிகள் இயக்க வரலாற்றில் புதிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது போன்ற சாதகமான சூழ்நிலைமையில் நமது கட்சிக் கமிட்டிகளும், கட்சி அணிகளும் தீவிரமாக போராட்ட திட்டம் வகுத்து செயலாற்ற வேண்டும்.

எண்ணிப் பாருங்கள், யார் குற்றவாளி? 15 பிணங்கள் விழுந்ததற்கு யார் பொறுப்பாளி? வன்முறைச் செயல்களுக்கு யார் காரணம்? இந்தக் கடிதம் அல்லவா? சாதகமான சூழ்நிலைமை, அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், விவசாயிகள் இயக்க வரலாற்றில் புதிய சூழ்நிலைமை உருவாகியிருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு இது தெரியாது. அவர்கள் உள்ளபடியே இதிலே கலந்து கொண்டிருந்திருக்கிறார்கள். இடையிலே ஊடுருவல்கள் இருக்கும் என்று அவருக்குத் தெரியாது. திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்கும், திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களுக்கும் கூடத் தெரியாது. அவர்கள் இந்தப் போராட்டத்திலே அனுதாப உணர்ச்சியிலே கலந்து கொண்டார்கள். ஆனால் அதில் எப்படிப்பட்டவர்கள் கலந்துகொண்டிருந்திருக்கின்றார்கள்? சாதகமான சூழ்நிலைமை, விவசாயிகள் போராட்டம் ஆரம்பித்திருப்பது சாதகமான சூழ்நிலைமை. ஆகவே நமது கட்சி கமிட்டிகளும், கட்சி அணிகளும் தீவிரமாக போராட்ட திட்டம் வகுத்து செயலாற்ற வேண்டும். இதுதான் காரணம் 17 பேர் படுகொலைக்கு. தொல்லைகள் ஆரம்பித்ததற்கு இதுதான் காரணம், 17 பொட்டுக்கள் அழிக்கப்பட்டதற்கு இதுதான் காரணம், 17 பேர்களின் மஞ்சள் அழிக்கப்பட்டதற்கு இதுதானே காரணம், 17 பேர் கூந்தல் அவிழ்க்கப்பட்டதற்கு வேறு என்ன காரணம்? இதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு, எப்படியாவது யார் நடத்துகின்ற கிளர்ச்சியிலாவது ஒட்ட வைத்துக்கொண்டு கவிழ்க்கப்பட வேண்டுமென்று திட்டமிட்ட செயல்.

துப்பாக்கிப் பிரயோகம் திட்டமிட்டு நடைபெற்றதா? நம் அண்ணன் மொய்தீன் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல் இங்கிருந்து போலீஸார் சென்று சட சடவென்று சுட்டார்களா? திட்டமிட்டா செய்யப்பட்டது? ஆனால் சம்பவங்கள் திட்டமிட்டு நடைபெற்றன. நடைபெற்ற இடங்கள் பற்றி பார்வேர்ட் ப்ளாக் தலைவர் திரு. ஏ. ஆர். பெருமாள் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். எங்கெங்கு கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு மிகுதியாக இருக்கிறதோ அங்கெல்லாம் இப்படிப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. அங்கெல்லாம் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஏதோ ஆதாரங்களை எல்லாம் காட்டினார்கள். என்னிடம் இல்லையா? எவ்வளவோ ஆதாரங்கள் உள்ளன. எவ்வளவு எவ்வளவோ வீடுகள் கொளுத்தப்பட்டிருக்கின்றன: ஜூன் 7-ம் தேதி கோவையில் நடைபெற்ற கட்டைவண்டி போராட்டத்தைப்போல் பர்தோலி சத்தியாகிரஹம் கூட இல்லை என்று பக்தவத்சலம் அவர்கள் பாராட்டுகிறார். காந்திக்குக் கூட அந்த யோசனை உதிக்கவில்லை என்று சொல்கிறார். நான் சொல்லவில்லை, பக்தவத்சலம் சொல்கிறார். இந்தக் கோவை போராட்டத்தில் எப்படித்தான் அந்த யோசனை அவர்களுக்கு உதித்ததோ என்று அவர் சொல்கிறார். கட்டைவண்டிப் போராட்டம் நடைபெற்றிருக்கிறது. கோவை மாநகரம் முழுவதும் இதைப் போல். அம்மையார் அவர்களுக்கு இது எல்லாம் தெரியாது. இதைப் பார்க்க வேண்டும். (ஒரு படம் காட்டப்பட்டது.) இப்படி கட்டைவண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன. ஜூன் 7-ம் தேதி காலையில் அல்லது பிற்பகலில் இருந்து இரவு 10 மணி வரை நிறுத்தப்பட்டிருக்கின்றன. இது போக்குவரத்திற்கு இடைஞ்சல் அல்ல, இது வன்முறை அல்ல என்று வாதாடுகிறார்கள். அன்று காவல் துறையினர் அமைதி காத்தார்கள். அதை அனைவரும் பாராட்டினார்கள். ஆனால் அது ஒரு நாள்தான் நடை பெறும் என்று நான் அறிவித்தேன். ஏனெனில் போலீஸார் எல்லாயிடங்களிலும் அப்படி அனுமதித்தால் பிறகு நாடு காடாகிவிடும், நாடு நாடாக இருக்காது. காட்டுமிராண்டிகள் இடமாகிவிடும். ஆகவே அதை அனுமதிக்க முடியாது என்று சொன்னேன்.

ஜூன் 5-ம் தேதி நடைபெற்றது பந்த். பந்த் அல்லது வேலைநிறுத்தம் என்றால் அவரவர்கள் இஷ்டப்படி வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டும்: அவரவர்கள் இஷ்டப்படி கடைகளை மூடவேண்டும். அவரவர்கள் இஷ்டப்படி போக்குவரத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் பத்திரிகைகளில் என்ன அறிவிப்பு வந்தது? ரெயில் ஓடாது, பஸ் ஓடாது, கடைகள் திறந்திருக்காது என்று வந்திருக்கிறது. என்ன போட்டிருக்க வேண்டும். பஸ்களை ஓட்ட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறோம், ரயிலை ஓட்ட வேண்டாமென்று கேட்டுக்

கொள்கிறோம், கடைகளைத் திறக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம், விவசாயிகளின் போராட்டத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் என்றல்லவா போட வேண்டும். பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் செய்திகள் வருகின்றன. ரயில் ஓடாது, பஸ் ஓடாது, கடைகள் திறந்திருக்காது என்றுதான் போட்டார்கள்.

இதோ பாருங்கள். (ஒரு படம் காட்டப்பட்டது.) விருதுநகரில் வைக்கப்பட்ட கட்டைவண்டிகள். விருதுநகரில் வைக்கப்பட்ட வழித்தடைகள் இதோ. கக்கன் அவர்களே இதை ஒத்துக்கொண்டு ஓரிந்து பத்திரிகையில் ஒரு அறிக்கை வந்திருக்கிறது. கற்களைக் கொண்டு ரோடுகளை மறித்திருக்கிறார்கள். காந்தி அடிகளின் வழியைப் பின்பற்றி வரும் மதிப்பிற்குரிய, மரியாதைக்குரிய கக்சன்ஜி அவர்கள் கூட அதை ஒப்புக்கொண்டு ஓரிந்து பத்திரிகையில் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். பெத்தநாய்க்கன்பாளையம்—ஆத்தூர் சாலையில் வழித்தடைகள் இதோ. (ஒரு படம் காட்டப்பட்டது.) சிமெண்ட் பைப்ஸ் சாலையின் குறுக்கே போடப்பட்டிருக்கின்றன. நாமக்கல் சாலையில் வழித்தடைகள் இதோ. (ஒரு படம் காட்டப்பட்டது.) பெரிய பெரிய பாறைக்கற்களை வைத்து வழி தடைபடுத்தப்பட்டிருக்கின்றது. தஞ்சை முத்துப்பேட்டைக்கருகில் வழித்தடை. (ஒரு படம் காட்டப்பட்டது.) பெரிய பெரிய கற்களை சாலை நடுவில் வைத்து பஸ்கள் தடுக்கப்பட்டன. பெத்தநாய்க்கன்பாளையம்-ஆத்தூர் சாலையில் வண்டிகள் போட்டு தடுக்கப்பட்டிருக்கின்றன. தாக்கப்பட்ட வீடுகள் கொஞ்சநஞ்சமா? பல வீடுகள் தாக்கப்பட்டன.

மணி, சாமி பற்றி சுப்பு அவர்கள் சொன்னார்கள். அவர்கள் உண்மையை ஒத்துக்கொண்டதற்கு நன்றியுடையவனாக இருக்கிறேன். பாட்டு பாடியதற்கு மறுநாள் அவர்கள் வீடு தாக்கப்படுவது என்றால் அது எங்கே போய் நிற்கும்? பிறகு நாட்டில் நல்லாட்சி நடைபெறமுடியுமா? எண்ணிப்பார்க்கவேண்டும். முதல் அமைச்சர் அவர்களும், எம். ஜி. ஆர். அவர்களும் வாராவிட்டால் நான் என் தொகுதியில் தோற்றுப் போயிருப்பேன் என்று கூறியிருக்கிறார். இதே மணி, சாமி அவர்களுக்காக பல கலா நிகழ்ச்சிகளை நடத்திக் கொடுத்திருக்கிறார்கள். சுப்பு அவர்கள் சொன்னார்கள், அவர்கள் பாடிய பாட்டுக்கு அந்த வீடு இடிக்கப்பட்டது என்று. அவர்கள் கலாநிகழ்ச்சிகள் நடத்தி ரூ. 2, ரூ. 3, ரூ. 5 என்று தங்கள் செலவு போக மிச்சப்படுத்தி இரண்டு இளைஞர்களும் இந்த வீட்டைக் கட்டினார்கள். அவர்களின் வீட்டின் நிலையை இப்படியாக்கிவிட்டார்கள். மதுரைக்கு நான் சென்றிருந்தபோது என் காலில் விழுந்து அழுதார்கள். நாங்கள் ஹோட்டலில் தங்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். மனைவி ஊருக்குப் போயிருந்த அந்த நேரத்தில் இப்படியாகிவிட்டது என்று

சொன்னார்கள். முதல் அமைச்சர் என்ற முறையில் நான் இங்கு பேசுவதால் என்னென்ன உதவிகள் செய்யப்போகிறோம் என்று சொல்வதற்கு முடியவில்லை. இருதரப்பிலும் இப்படி நடைபெற்றிருக்கின்றன. மறுக்கவில்லை. ஒருசில யிடங்களை மட்டும் குறிப்பிட்டுப் பேசுவது சரியல்ல. இரண்டு தரப்பிலும் நடைபெற்றிருக்கின்றன. இரண்டு தரப்பிலும் வீடுகள் தாக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: எனது வேண்டுகோள், ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு சென்று அங்கு மூன்று கட்சி ஆபீஸ்களும் எந்த முறையில் தாக்கப்பட்டு எப்படி இடிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவர்கள் பார்த்து அந்த போட்டோக்களையும் இங்கு சமர்ப்பித்தால் ரொம்பவும் உதவிகரமாகயிருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இருதரப்பிலும் என்று சொல்வதற்கு என்ன பொருள்? இரு தரப்பிலும் நடந்திருக்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. அந்தப் படங்களை மட்டும் பாருங்கள் என்று சொல்லவேண்டாம், இந்தப் படங்களையும் பாருங்கள். மன்னார்குடியில் கீழபாளம் என்ற இடத்தில் பக்கிரிசாமியின் தேனீர் விடுதி சேதப்படுத்தப்பட்டிருக்கிற படத்தைப் பாருங்கள். (ஒரு படம் காட்டப்பட்டது.) இதோ முஸ்லீம் லீக் கட்சியின் ஆதரவாளர் அப்துல் ஜலீலின் கடை கோவை வின்சென்ட் சாலையில் சேதப்படுத்தப்பட்டிருக்கிறது. (ஒரு படம் காட்டப்பட்டது.) காரணம் என்ன? இதுபோல் பல நடந்திருக்கின்றன. நான் ஏற்கனவே சொன்னேன், இது அமைதியான சூழ்நிலையில் ஆரம்பமானது என்று. இடையில் சில பேர்கள் புகுந்தார்கள். அவர்கள் என்னைச் சந்திக்கவேண்டுமென்று விரும்பிய நேரத்தில் இடையில் புகுந்து அதற்குத் தடையாக இருந்தார்கள் இவர்கள். திரு. மூக்கையா தேவர் அவர்கள் முயற்சி எடுத்தபோது, திரு. பூவராகன், எம்.பி., அவர்கள் முயற்சி எடுத்தபோது இவர்கள் அதற்குத் தடையாக இருந்தார்கள்! அதனால் விவசாய சங்கக் குழுவினரை சந்திக்கமுடியாமல் போய்விட்டது. டாக்டர் ஹாண்டே அவர்கள் போன் மூலம் பேசியிருந்தால் அது நடைபெற்றிருக்கக்கூடும். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் போன் மூலம் பேசியிருந்தால் அது நடைபெற்றிருக்கக்கூடும். பொன்னப்ப நாடார் அவர்கள் போன் மூலம் பேசியிருந்தால் அது நடைபெற்றிருக்கக்கூடும். யாரை எந்த நேரத்தில் பார்க்க முடியாது என்று கூறியிருக்கிறேன். யாரை ஒதுக்கி வைத்திருக்கிறேன், யாரை மதிக்க நான் தவறியிருக்கிறேன், யாரிடம் நான் கௌரவக்குறையாக நடந்து கொண்டிருக்கிறேன், யாரை நான் புறக்கணித்திருக்கிறேன் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க

பார்க்கவேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் பார்க்க தவறி விட்டார், ஆகவே இப்படி ஏற்பட்டு விட்டது என்றால் அது சரியல்ல. நானும் அல்லது அரசு சார்பில் நாங்களும் விவசாயப் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கு தயாராக இருந்தோம். இடையில் இந்த நந்திகள் இருந்தார்கள். அவர்களால் தான் இந்தச் சேதம் நாட்டுக்கு ஏற்பட்டது என்று எடுத்துச் சொல்லி இதற்குப் பிறகாவது அனைவரும் புரிந்துகொண்டு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எந்தக் கட்சி மீது கொண்டுவரவேண்டும் என்பதை அனைவரும் புரிந்துகொண்டு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (ஆரவாரம்.) இதற்குப் பிறகாவது தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிற ஹாண்டே அவர்கள் அதைத் திரும்பப்பெறுவார்கள் என்று நான் கருதுகிறேன். இந்த மன்றத்தில் கடந்த இரண்டு மூன்று தினங்களாக நடைபெற்ற விவாதங்களில் சூடும் சுவையும் இருந்தாலும், நமது மரபிற்கும், நாம் கட்டிக் காத்துவருகிற கண்ணிய உணர்ச்சிக்கும் களங்கம் ஏற்படாத வகையில் நடைபெற்றிருக்கின்றன. இடையில் ஒன்றிரண்டு எதிர்பாராத சம்பவங்கள் நடைபெற்றிருந்தாலும் காலையில் அதை நிவர்த்தி செய்துகொண்டு விட்டோம். நேரம் அதிகமில்லாத காரணத்தினால் இன்னும் பல விளக்கங்கள் இருந்தாலும் அவற்றை பிறிதொரு காலத்தில் வைத்துக்கொள்ளலாம் என்று கூறி இந்த அளவில் அமைகிறேன்.

DR. H. V. HANDE : The Hon. Chief Minister was also making a number of charges. Charges and counter-charges have been levelled against each other. He says there has been no 'vanmuraicheyalgal'. I say there have been such actions and I will have to prove it. So, some more time may be given. At least 45 minutes.

I once again rise in support of the no-confidence motion and also in support of the censure motion moved by my hon. friend Thiru K. T. K. Thangamani. I am afraid the answers given by the Hon. Chief Minister have not covered all my points . . . .

THIRU R. PONNAPPA NADAR : I think we can have the discussion in the afternoon. It is time for lunch.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் அதைப்பற்றிக் கேட்கலாம் என்று தான் நினைத்தேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாலையில் வைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, மன்றம் மீண்டும் மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

மாலைக் கூட்டத் தொடர் (4.00)

பேரவை மீண்டும் மாலை 4 மணிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே . . . .

DR. H. V. HANDE : Hon. Mr. Speaker, Sir . . . .

MR. SPEAKER : How much time do you want? I think you can finish in half an hour. Already, you have taken much time at the beginning. The Hon. Chief Minister himself has taken only less time.

DR. H. V. HANDE : I will try to finish as early as possible.

MR. SPEAKER : No. You will please arrange your speech in such a way as to wind it up in half an hour. You take thirty minutes.

DR. H. V. HANDE : Sir, at the very outset, I have to state that the reply of the Hon. Chief Minister given in the morning was the most unsatisfactory one and it did not practically cover the very serious allegations that were levelled against this Government by various party leaders and members of the opposition party. The first half an hour that he allotted was for explaining the 'SATHANAIGAL' of this Government, that is, what were the things the Government has been doing. The second half hour or 20 minutes he devoted to pinpoint that the whole farmers' agitation was as a result of a particular political party engineering the whole movement. In other words, it is a great tragedy that our Hon. Chief Minister did not properly analyse the situation at all. That is my submission. He did not bother to go into the details at all. In my opinion there is a very strong case for re-asserting and asking almost all Members of the House to vote for this no-confidence motion. For, his answer was the most unconvincing one and many members of the ruling party itself were not at all convinced by it. They know that the Hon. Chief Minister tried to render a peroration. That is beside the point.

[Dr. H. V. Hande] [1972 ஆகஸ்ட் 12

Now, what is it that was complained against them? Why should Hande bring in this no-confidence motion? Why should Mr. Thangamani bring in this censure motion? Why should they do so especially when they have no majority in the House and when there is no possibility of their over-throwing this Government? In fact this was asked by the Muslim League Member. The Hon. Health Minister was the Leader of the D.M.K. party in the Lok Sabha. Did he not join others in bringing in a no-confidence motion and did not the D.M.K. voted for the no-confidence motion, when the D.M.K. had not even the vestige of a shadow cabinet? There was not even a shadow of a shadow cabinet. But still they tried to bring in a no-confidence motion. Now the argument is sought to be made that we do not have a shadow cabinet. It is the duty of the opposition and we are doing the loyal, honest duty of the opposition party in bringing this no-confidence motion. By this, we bring out the omissions and commissions of the Government. That is the main reason for this no-confidence motion.

Then again the Hon. Chief Minister was listing out a number of things that the Government had been doing. What is the wonder in it? You have given a few more houses, you have given to some more areas water supply, you have given electricity to more villages and you can go on listing a hundred and one things like this. What is the peculiarity about it?

The Hon. Chief Minister forgets one fundamental thing. If a structure has to have 20 layers of brick, what is the credit in laying the 15th layer and other layers above that. The previous Government had laid 15 layers, you have laid the 15th, 16th, 18th and 20th layers. There is no great difficulty for the man who lays the 16th or 20th layer. The man who had laid the 15 layers, starting from the foundation, had to start from the scratch. Such was the work of laying bricks for this great structure of democracy. For people working in the upper layers, it is comparatively easy. We can go on listing so many things like the Parambikulam-Aliyar Project and so many other projects.

These things are not points of debate. The points of debate are the omissions and commissions of this Government. Charges were strongly levelled against the Government. They have not

1972 ஆகஸ்ட் 12] [Dr. H. V. Hande]

been effectively countered, I am afraid they have not been countered at all. What was it that we have been trying to do all these 2 or 3 days. We had been levelling charges against the Government that law and order has broken down; the police people have become one-sided, siding the ruling party. These are the charges levelled against the Government. We also said that a number of false cases have been foisted against a number of persons, irresponsible cases, without having any bearing at all to facts. I have explained the cases. Mr. Venkatasamy of our party and Thirupathi, a member of our party are incapable of anything violent, still cases were foisted against them. That was the charge I made. The Hon. Chief Minister made a debating point saying we ourselves were not 'vivasayees'. Yes, that is what I say, non-vivasayees have been put into jails. We have been complaining that you are arresting somebody else, not vivasayees, but non-vivasayees. Having done that, is it an argument to say 'AMBALAM AKIVIT-TATHU'. You are arresting unconcerned people. Whose fault was that? It is the fault of the ruling party and not the opposition.

Again, it is highly objectionable for the Hon. Chief Minister to wrongfully and indiscriminately foist all sorts of cases against innocent people and then ask them to go to court. 'You go to court' he says. What is the point and then the more atrocious thing is that if they proved their innocence, he would withdraw the case against them, and only if the Action Committee was prepared to waive the judicial enquiry. This is a very sensitive point. He argued 'I am prepared to allow withdrawal of cases, but then if I have to withdraw cases, you have to do something else and you have to waive judicial enquiry'. In other words, I make a serious charge against the Hon. Chief Minister and his Government that the Chief Minister was using the 3,000 innocent persons as hostages, I repeat the words as hostages for the purpose of getting rid of a judicial enquiry. I wish all our members appreciated that point. The 3,000 persons are held as hostages to get rid of, to annul, to destroy, to completely take away the basic duty of the Government to institute a judicial enquiry. That is a very very serious charge that I have to level even in my beginning speech. I am repeating it now.

[Dr. H. V. Hande] [1972 ஆகஸ்ட் 12

Why did we bring in this motion? Is it for fun, as if for three days we can talk all sorts of things? We had brought it with the deliberate intention. In the past two or three years, especially in the last one year, and especially in the last six months there had been mounting omissions and commissions in all departments, not one department, from A to Z, from the Chief Minister to the last Minister and all persons, they have all been indulging in all sorts of commissions and omissions. So, it was we thought that it would be fit to bring in a motion. There is a thing in the Supreme Court. I do not want to go into the merits and demerits of it.

One thing, I wish every member to bear in mind is this. Is there any parallel in the annuls of any State administration, anywhere in India—I want to know—Rightly or wrongly, the honour of the Government has been brought to public, remarks have been made against the Government and the Government has been brought to book in the Supreme Court by a former Chief Secretary. I am not going into the merits and demerits of it; that has been discussed. I am not on that. My only question is here is a Government against which the Chief Secretary has gone to the Supreme Court.

THIRU N. GANAPATHY : The hon. Member, Dr. Hande wanted to know one instance wherein an high official of the Government has brought the Government to book. In Andhra Pradesh the Hon. Chief Minister lost his office because of the charge of mala fide proved against him in the matter of issuing bus permits. In the Calcutta High Court also a case was filed by the Inspector-General of Police against the Government and the case ended in favour of the Government.

DR. H. V. HANDE : I am very grateful to the hon. Member for strengthening my argument.

Sir, I am only presenting a picture wherein the Chief Secretary of a State has gone to the court. I may ask my distinguished Friend, whether he can quote a single instance where the Chief Secretary and not the Inspector-General of Police or the Transport Secretary, has gone to the highest court of the country.....

1972 ஆகஸ்ட் 12]

THIRU S. KANDAPPAN : Sir, on a point of order. The hon. Member has stated that the Chief Secretary has gone to the court. I want to correct him that he is the ex-Chief Secretary and not the Chief Secretary. (Laughter).

DR. H. V. HANDE : Wonderful, excellent and very fine point! How can he go to the court if he is Chief Secretary and my distinguished Friend has not understood it. Because he has been removed from the post of Chief Secretary.....

MR. SPEAKER : Dr. Hande, I would like to point out that this is a very complicated matter, a matter on which a judicial decision is pending. You do not try to give any opinion or refer to it any further . . .

DR. H. V. HANDE : Therefore I leave it at that. That is a point which I want every one to seriously take into consideration.

Another point raised by Thiru Rama Arangannal is what happened to the municipal elections and is it not a point to the increasing popularity of this Government. Under what circumstances the municipal elections took place? I shall give one example. Election was to take place to the Palayamkottah town in the Tirunelveli district. I even used good offices of some Ministers to postpone the elections and to allow our party meetings to be held. But we were not allowed to hold the party meetings in Palayamkottah Town on the 8th. But on the previous day some Ministers and some members of the D.M.K. were allowed to make public speeches. In the case of our meeting, the police officer has stated :

அமைதி குறைவாக இருக்கிற காரணத்தால் அமைதியின்மை இருக்கிற காரணத்தால் இந்த இடத்தில் கூட்டம் நடத்த அனுமதி தரவில்லை.

When Dr. Hande speaks or when the Opposition Party wants to speak, there is அமைதியின்மை, அமைதிக் குறைவு but when the ruling party members speak there is no அமைதி குறைவு

There is one yard-stick for the ruling party and another yard-stick for the Opposition Party. Sir, so far as the elections are concerned, it is not free and fair and the members of the ruling

party were in the polling booths to influence the voters. By saying this, I am not trying to win a point. But I want the Government not to lull into a false sense of security and suffer from the intoxication of plethora of powers which you are enjoying now. Even a person who is extraordinarily strong should not think that he need not care for anybody and that is the beginning of his destruction. I do not want you to be destroyed or your popularity declined. I want to keep your eyes and ears open.

Now, what has happened in the colleges ? Almost in every college, the D.M.K. Unions are being edged out and other parties have captured them. Of course, I am not at all for colleges being utilised for party platforms but I want to point out that the student community . . . (Interruption from the Hon. Chief Minister).

Not only in the Arts College but in 111 colleges out of 140 colleges, the D.M.K. Unions are being edged out. So do not be suffering from intoxication of power and you keep your eyes and ears open.

Then with regard to law and order, I have to mention that I received a letter sometime ago from one S. Vijayalakshmi, M.A., Ph. D., of Mylapore saying that her house was ransacked and the policemen walked into the premises with shoes in their legs and searched the entire house in search of Thiru Kuchelar without a proper warning and without proper proof and without any basis. They had thought that Thiru Kuchelar was hiding there. The lady has given a complaint to the police but so far no action has been taken. This is one of the few instances I am trying to bring to the notice of the Government to show that the Opposition parties should not be victimised.

Then, the Hon. Chief Minister is a very clever and intelligent person and in the morning he had stated that the Opposition parties, particularly the Communist Party is trying to utilise the Farmers' agitation to further their political ends. I am not going into the merits or demerits of it and the hon. Member, Thiru Thangamani is there to reply to it. But my only sub-mission is that I do not blame the Hon. Chief Minister.

அவருக்கு பாறுங்கல் மாதிரியான நெஞ்சம் என்று காலையிலே சொன்னார்கள். I know he is a soft minded person. I know him better than many of you (Laughter). What is there for laughter?

THIRU K. KAMATCHI : எங்களுக்கு நல்லாத் தெரியும்.

DR. H. V. HANDE : Now I want to narrate one incident. Once the Hon. Chief Minister and myself happened to travel together. He told me that on the previous night he saw a ghastly accident. The next morning he did not take coffee or tiffin. I told him that he should be stronger to face any situation. I leave it at that.

Now I come to the situation prevailing in the districts. For instance, in the Madurai district a number of persons were arrested on the 15th June and 5th July. They were all arrested because the ruling partymen wanted them to be arrested and the Police arrested them only on their instruction. I would even go a step further and say that those people were not to be released without the sanction of the persons who wanted them to be arrested. This is a very serious matter.

The Worshipful Mayor of Madurai while addressing a meeting of D.M.K. workers said that if the arrested persons are hoping that they will be released on July 6th, they will be sadly mistaken. They will have to stay in jail longer than that. This has come in Hindu, dated 5th July 1972. What I say is that these men knew when those people would be arrested; they knew that they could arrest anybody if they wanted. This is a very serious matter which I would like to commend to the observation of this august House. What happened in Madurai. The Hon. Chief Minister was talking about meeting of 'Vivasayigal Poratta Kuzhu' and he quoted something from 'Dinamani'. I shall also quote something from what appeared in the Hindu.

'It expressed concern and disappointment at the continued harassment of agriculturists by officials and the violence indulged by D.M.K. against the agriculturists' movement.'

[Dr. H. V. HANDE] [1972 ஆகஸ்ட் 12

'It was decided that representatives of the Council would wait on deputation on the Chief Minister and explain to him the concern expressed by the members on the manner in which the agreement was being implemented and requested Government to implement the same. The agriculturist is attacked. His house is attacked. All opposition parties are attacked in the rural areas. I am here to explain their difficulties to Government.

I shall narrate one more instance. On 3rd July 1972 at Udumalpet a D.M.K. active workers' meeting was held at a rice mill belonging to the relative of our Minister for P.W.D. Minister Kannappan participated. (Interruption). If the Minister says that he did not participate, I accept. But from my information he is reported to have advised the workers to take all efforts to defeat the hartal.

My only point is the D.M.K. workers took all action to prevent the hartal taking place.

திரு. மு. சின்னசாமி : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். கனம் உறுப்பினர் ஹாண்டே அவர்கள் ஆங்கிலத்திலேயே பேசுகிறார்கள் எனக்கு ஆங்கிலம் தெரியாததால் அவர் என்ன சொல்கிறார் என்பது சரியாகப் புரியவில்லை. என்னுடைய தொகுதியைப்பற்றி சொல்வதால், அவர் என்ன சொல்கிறார் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எனவே, ஆங்கிலத்தில் யாராவது பேசினால் என்னைப் போன்ற உறுப்பினர்களுக்கு அதைப் புரிந்துகொள்வதற்கு வசதியாக மொழிபெயர்த்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லை என்றால் ஆங்கிலம் தெரிந்தவர்கள்தான் சட்டமன்ற உறுப்பினராக முடியும். என்ன சொல்கிறார்கள் என்று தெரிந்து கொண்டால்தான் அவர்களின் குற்றச்சாட்டுகளுக்கு நான் பதில் சொல்லமுடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி எதுவும் சொல்லிவிட மாட்டார்கள் அப்படி ஏதாவது குற்றச்சாட்டுகள் சொன்னால் அதை மற்ற உறுப்பினர்கள் கவனித்துக்கொள்வார்கள். அமைச்சர்களும் அதைக் கவனித்துக்கொள்கிறார்கள். சொல்லத் தகாதவற்றைச் சொன்னால் அதை நான் கவனித்துக் கொள்கிறேன். அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் தமிழிலேயே பேசுகிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் புரிந்துகொள்கின்ற வகையிலே நான் பேசுகிறேன்.

1972 ஆகஸ்ட் 12] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

ஈரோடு சின்னசாமி அவர்கள் என்னுடைய நெருங்கிய நண்பர். அவர்களுக்குப் புரியக்கூடாது என்று நான் நினைக்கவில்லை. தவறு இருந்தால் சொல்லட்டும். திருத்திக்கொள்கிறேன்.

3-ந்தேதி உடுமலைப்பேட்டையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு அது தெரியும். அந்தக் கூட்டம் நடைபெறாமல் இருப்பதற்கு என்னென்ன தடைகள் பிறப்பிக்க வேண்டுமோ அவ்வளவும் செய்தார்கள். 4-ந் தேதி அங்கு இருக்கக்கூடிய நண்பர்கள் நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு அவர்களை நன்றாகத் தெரியும், ஒரு ஜீப் காரில் ஒரு மைக்கை வைத்துக்கொண்டு பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தினார்கள். 5-ந்தேதி ஹர்தால் நடைபெறுவதாகச் சொல்கிறார்கள். யாரும் அதற்கு ஒத்துழைக்கக் கூடாது. எல்லோரும் கடைகளை மூடிவிட வேண்டும். (சிரிப்பு). மன்னிக்க வேண்டும். எல்லோரும் கடைகளைத் திறந்து வைக்கவேண்டும், மூடக்கூடாது என்று சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் உடுமலைப்பேட்டையைப் பற்றிச் சொல்லதால் நான் ஒரு சிறு விளக்கம் கொடுக்கவேண்டியிருக்கிறது. 5-ந்தேதி அங்கே யாரும் கடைகளை அடைக்கவில்லை. அமைதியான நிலைமை இருந்தது. எல்லாக் கடைகளும் திறந்து வைக்கப்பட்டிருந்தன. காங்கிரஸ் கட்சிக்காரர்களுடைய கடைகள்கூட திறந்து வைக்கப்பட்டிருந்தன.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அடுத்து 200 தி. மு. க. பிரமுகர்கள் உடுமலைப்பேட்டையிலிருந்து பேடப்பம்பட்டிக்கு ஒரு ஜீப், ஒரு லாரி, ஒரு பஸ், ஒரு அம்பாஸிடர் கார் இவைகளில் பயங்கர ஆயுதங்களுடன் சென்றார்கள். அங்கு வந்தவுடன் கற்களை வீசி எறிந்தார்கள். அதோடு சைக்கிள் செயின்கொண்டு தாக்கியதால், காங்கிரஸ் கட்சி (ஓ) செக்ரட்டரி பி. வி. சண்முகமும், 11-வது வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிற அவருடைய மகன் சக்திவேலும் பயங்கரக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்கள். மேலும் வேலுச்சாமி கவுண்டர், கந்தப்ப செட்டியார், சுப்பையா செட்டியார், முராசாகிப், பழனிசாமி, தேவராசு, தங்கமுத்து ஆகியோரும் காயமடைந்தார்கள். அதன்பின் அங்கிருந்து பூலவாடிக்கு வந்து நாராயணசாமி நாயுடு, கிருமலைசாமி நாயுடு, கிருஷ்ணசாமி நாயுடு, மதுசூதன், முத்துசாமி கவுண்டர், சுப்பாராய நாயுடு, ராசு நாயுடு ஆகிய 7 பேர்களின் மாட்டு வண்டிகளையும் அடித்து நொறுக்கினார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்த ஊர்வலம் எந்தத் தொகுதியில் நடைபெற்றது என்று சொல்வார்களா ?

டாக்டர் எச். வி. ஹாண்டே : அது உங்கள் தொகுதியில் இல்லை. உங்கள் தொகுதியில் நடைபெற்றதாகவும் நான் சொல்லவில்லை. இந்த சம்பவங்கள் பேடப்பம்பட்டியிலும் பூலவாடியிலும் நடைபெற்றவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே, ஒரு நிமிடம் நான் பேசலாமா ? (சிரிப்பு).

I invite your attention to Rule 75 (3) of our Assembly Rules which says as follows :—

"(3) A member when replying shall confine himself to matters raised during the debate and shall not introduce new debatable matter."

It is very clear. Now you are introducing new matter regarding 'Udumalpet'. If you introduce new matter, Hon. Chief Minister has to reply to it. That is not provided under the rules.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் ஒன்றைச் சொல்கிறேன். அவர்கள் மறுப்புத் தெரிவிக்கிறார்கள். அதற்கு மீண்டும் நான் பதில் சொல்ல வேண்டிய வனாக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முதலில் உட்காருங்கள். நீங்கள் பேசுவதற்கும் ஒரு விதிமுறை உண்டு. நீங்கள் அரை மணி நேரத்திற்குள் பேசி முடித்துவிட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதுவும் நடை பெற்ற விவாதத்திற்குப் பதில் உரைதான் நீங்கள் வழங்கலாம். ஏற்கெனவே இந்த விவாதத்தில் நீங்கள் 1½ மணிநேரத்திற்குமேல் பேசியிருக்கிறீர்கள். பதில் உரையின்போது, ஏற்கெனவே பேசப்பட்டவைகளுக்குத்தான் நீங்கள் பதில் சொல்ல வேண்டுமே தவிர, புதிதாக நீங்கள் வேறு ஒரு பிரச்னையைக் கிளப்பக்கூடாது. நீங்கள் உடுமலைப்போட்டையில் கலவரம் நடந்தது என்பீர்கள். அவர்கள் இல்லை என்பார்கள். அதையொட்டி நீங்கள் வேறு சில கருத்துக்களைச் சொல்வீர்கள். பிறகு அவர்கள் அதற்குப் பதில் சொல்ல வேண்டிவரும். விதி 75 பிரிவு 3-ன்படி அம்மாதிரியான புதிய கருத்துக்களை அனுமதிக்க முடியாது. நீங்கள் ஒரு மோஷனை கொடுத்திருக்கிறீர்கள் என்பதால், அதற்குப் பதில் சொல்வதற்குரிய ரைட் உங்களுக்கு இருக்கிறது. அதற்கு உகந்த முறையில்தான் நீங்கள் பேசவேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : வன்முறை நடந்திருக்கிறது என்று நான் சொல்கிறேன். அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். அதற்கு நான் பதில் சொல்லவேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் புதிய பிரச்சனைகளை எழுப்புவ தால்தான் அவர்கள் மறுக்கவேண்டியிருக்கிறது. அதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது அதனால் விதிமுறைகளுக்கு உட்பட்டு பேசுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : வன்முறை நடந்தது என்று நான் சொல்கி றேன். அதற்கு என்ன ஆதாரம் என்று கேட்கிறார்கள். நான் ஏற்கெனவே கொடுத்தது போக மேலும் பல ஆதாரங்களைக் கொடுக்கிறேன். அது கூடாதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, வன் முறைச் செயல் நடைபெறவில்லை என்று நான் சொல்லவில்லை. நடைபெற்ற வன்முறைச் செயல்கள் பற்றிய விவரங்களைச் சொல்லியிருக்கிறேன். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறுக்கிட்டபோது கூட 'இரண்டு தரப்பிலும் நடைபெற்ற வன்முறைச் செயலைக் கண்டிக்கிறேன்' என்று சொல்லி யிருக் கிறேன்.

பிசினஸ் அட்வைசரி கமிட்டியில், இதுவரையில் கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானங்களுக்கு எல்லாம் 3 நாட்கள் ஒதுக்கப்பட்டிருக் கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். ஒன்றிரண்டில் 4 நாட்கள் கூட ஒதுக்கப்பட்டிருந்ததை எடுத்துக்காட்டியதால் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு 4 நாட்கள் ஒதுக்கப்பட்டன. இதற்கு ஒதுக்கப்பட்டது நான்கு நாட்கள்தான் என்றாலும் நேரக் கணக்கை எடுக்கிறபோது நேற்று மாலையும் கூட்டம் நடைபெற்றிருக்கிறது. இன்றுமாலையும் நடைபெறுவதால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் 6 நாட்கள் என்ற அளவுக்கு வந்துவிட்ட பிறகும், விவாதம் இன்னமும் தொடர்ந்து போய்க்கொண்டே இருப்பது சரியல்ல அதையும் தாங்கள் அருள்கூர்ந்து கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : There is no objection. If you want, another no-confidence motion can be brought tomorrow. If not in the same session, in the next session you can bring one.

THIRU K. T. K. THANGAMANI : During the reply to substantiate the charges made, further arguments could be given.

MR. SPEAKER : The rules are very specific. Members must co-operate. You cannot bring in new aspects.

THIRU V. KRISHNAMOORTHY : Sir, may I be permitted to make mention to the Hon. Speaker as well as to Dr. Hande. Sir? When allegations are made in the first speech and when that had been replied to by the Chief Minister, if they start making fresh points, the Chief Minister also should be given another opportunity to reply. If that is accepted, we have no objection to sit even up to 12 o'clock. . . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, the hon. Member in the last bench has become suddenly active. May we know the reason, Sir ?

THIRU V. KRISHNAMOORTHY : I have no objection to the hon. Member becoming active and sitting here in the last bench by my side.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Stop it. What are you talking? You should know decency. You should not talk like that. Withdraw those words.

THIRU R. PONNAPPA NADAR : Sir, he should withdraw it.

MR. SPEAKER : Madam should not take it in such a sense.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திரு. கிருஷ்ண மூர்த்தி அதைத் திரும்பப் பெற வேண்டுமென்று நான் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : கனம் அங்கத்தினருக்கு வருத்தமாக இருந்தால் நான் அதைத் திரும்பப் பெறுகிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : சார் ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர். இந்தப் பேரவைக்கு ஒரு சட்டமன்றத் தலைவர். ஒரு துணைத் தலைவர்தான் இருக்கிறார்கள் என்று நான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒவ்வொரு உறுப்பினரும் இந்தப் பேரவையின் தலைவர் போல . . . .

MR. SPEAKER : I ask Mr. Subramaniam to resume his seat. What you say is a reflection on the Chair. Now you are speaking as Speaker.

THIRU A. SUBRAMANIAM : I raise a point of order, Sir. I have the right.

MR. SPEAKER : You can raise a point of order. But you cannot obstruct the proceedings of the House.

THIRU A. SUBRAMANIAM : I want to raise a point of order, Sir. It is the right of a Member. "வருத்தமாக இருந்தால் வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்" என்று அவர் சொல்கிறார். பின் என்ன பொருள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது முடிந்து விட்டது.

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, the Hon. Chief Minister in his reply and several Members of the ruling party who have spoken on these motions were trying to reply to our points; the main charge of ours was that there was a large scale interference by the ruling party members in the police administration. We were trying to say ..... (Interruptions). If you do that, we can also do so when the Minister speaks. It is double-edged weapon, you must remember it. We have been charging in this House that the Government is not a Government at all, it is a Government run for the sake of the party by the party-men, interfering in police-administration. We have charged that the party-men had been collecting funds . . . But then in the answers either of the Chief Minister or or the ruling party members none of them was refuted, they could not refute what we had said.

I shall now come to one other important point. Now regarding the Kaveri dispute, the matter went up to the Supreme Court and then the Hon. Minister for Agriculture and some other persons had collected funds for that. Have they thought it fit to give the accounts to the public? From whom they collected, we do not know. Do we know how much was collected. The Hon. Minister for Agriculture when he was the Secretary of the Ruling Party of the District he was associated with it and collected money . . .

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டி எந்த ஒரு அரசியல் கட்சி சார்பாகவும் போடப்பட்டது அல்ல. இதில்

திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ், கம்யூனிஸ்ட் ஆகிய எல்லாக் கட்சி உறுப்பினர்களும் இருக்கிறார்கள். நான் அமைச்சராவதற்கு முன்பு அதன் தலைவராக இருந்தேன். கபிஸ்தலம் மூப்பனார் அதன் பொருளாளராக இருந்தார். பணக் கணக்கு முழுவதும் அவரிடம்தான் இருக்கிறது. கமிட்டி இன்னமும் செயல்பட்டு வருகிறது. நான் அமைச்சரானவுடன் அந்தப் பதவியை ராஜிநாமாச் செயது பல மாதங்கள் ஆகிவிட்டன. அதுபற்றிய கணக்கு விவரங்கள் வேண்டுமென்றால் திரு. ஹாண்டே அவர்கள் அந்தக் கமிட்டியினரிடத்தில் விசாரித்து அறியலாம்.

DR. H. V. HANDE : Now who is responsible for that? The Minister who was at that time the Secretary of the D.M.K. of that district.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, காவேரி நீர்ப் பிரச்சனை சம்பந்தமாகத் தமிழக அரசு ஒரு வழக்கை சுப்ரீம் கோர்ட்டில் தொடர்ந்தது. அதைப் போல தஞ்சை, திருச்சி மாவட்ட விவசாயிகள் சார்பாக அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு வழக்கைத் தொடர்ந்தார்கள். மாவட்டச் செயலாளராக மாண்புமிகு அமைச்சர் திரு. மன்னை நாராயணசாமி இருந்தபோது அவர் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்களோடு சேர்த்து அமைக்கப்பட்ட ஒரு கமிட்டியின் தலைவராக இருந்திருக்கிறார். அந்தக் கமிட்டியினர் தான் வழக்கை நடத்தியது. வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. இவர் அமைச்சரானபின் அந்தப் பதவியை விட்டுவிட்டாரே தவிர அந்தக் கமிட்டி இருக்கிறது. அதைப்பற்றிய கணக்கை இருக்கிற சர்க்காரிடம் எப்படிக் கேட்க முடியும்?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இன்னும் சொல்லப் போனால் அந்தக் கமிட்டியின் செயலாளராக மாவட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் திரு. ராமசாமிதான் இருக்கிறார்.

DR. H. V. HANDE : Now Sir, as far as Police Administration is concerned we were saying in this House that there has been interference by the ruling party-men. The State Government has got judicial limbs. A number of times, the Judges have passed strictures that the first information reports are not immediately filed, but still there is inordinate delay. Whether it was the case relating to the Anbil village or the case of Tiruchirappalli, it was been stated that first information reports are not filed immediately.

Mr. P. Bhaskaran, Additional Judge has remarked that there was no explanation from the prosecution for the inordinate delay in filing first information reports.

Similar judgments have been given in several instances. So, the Government should properly pull up the department concerned and tell them that such cases should be properly booked and that the police should not wait till the first information report is recommended by the ruling party member. Why not the first information report be immediately filed? Why should there be political interference in regard to such matters?

So far as the Press is concerned, I have to quote some excerpts from a newspaper wherein it is stated that the Hon. Chief Minister himself said at a meeting sometime ago—

பத்திரிகைகளின் போக்கு மாற கழகத் தொண்டர்கள் தளபதிகளாக மாறவேண்டும்.

Sir, my only submission is that there are a number of newspapers in the Madras City and in other parts of Tamil Nadu which are completely pro-D.M.K. Eighty per cent of the newspapers are pro-D.M.K., and they have got eight lakhs of subscribers . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: டாக்டர் ஹாண்டே அவர்கள் என்னிடத்திலே கொடுத்திருக்கிற அலை ஓசை பத்திரிகையிலே இருப்பதை மாத்திரம் படித்து விடுகிறேன். பாக்கியை எல்லாம் கத்தரித்து விட்டு என்னிடம் கொடுத்திருக்கிறார். "ஒரு பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டதற்கு நானும் வருந்துகிறேன்" கருணாநிதி பேச்சு அதற்குப் பிறகு, "பத்திரிகைகளின் போக்கு மாற, கழகத் தொண்டர்கள் தளபதிகளாக மாற வேண்டும்". அதை யார் சொன்னார் என்று இல்லை. "ஒரு பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டதற்கு நானும் வருந்துகிறேன்" என்று தமிழக முதல்வர் கருணாநிதி தர்மபுரியில் நடந்த தி.மு.க. மாநாட்டில் பேசுகையில் கூறினார்.

அலை ஓசை மீது தி.மு.க.வினர் நடத்திய பயங்கரத் தாக்குதலைக் கண்டித்து காமராஜர் வெளியிட்ட அறிக்கைக்குப் பதில் அளிக்கும் முறையில் கருணாநிதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

காஞ்சிபுரம் மாநாட்டில் அலை ஓசையைத தூக்கி எறிந்து எம்.ஜி. ராமச்சந்திரனும் அலை ஓசை மீது நடந்த தாக்குதலைப்பற்றிக் குறிபபிட்டார். இதைப் போய் காமராஜர் பெரிதுபடுத்துகிறார் என்று அவர் கூறினார்.—இவ்வாறு அந்த பத்திரிகையிலே இருக்கிறது.

பத்திரிகைகளின் போக்கு கழகத் தொண்டர்கள் தளபதிகளாக மாற வேண்டும் என்ற தலைப்பு இருக்கிறது. உள்ளே அது பற்றி ஏதாவது செய்தி இருக்கிறதா? அதையெல்லாம் நீங்கள் ஆதரிக்கிறீர்கள். அதுதான் எனக்குக் கஷ்டமாக இருக்கிறது.

DR. H. V. HANDE: My submission is, almost all the newspapers, whether it is 'The Hindu' or 'The Indian Express' are supporting the Government almost every day (laughter). What is there to laugh and it is a fact . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதே மாதிரிதான் நீங்கள் குறிப்பிட்ட அலை ஓசைப் பத்திரிகையில் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் மதுரை மாநாட்டில் பேசிய பேச்சையும் திரித்துப் போட்டிருக்கிறார்கள். இராஜுவம் வரட்டும். இந்திராவே, இராஜுவம் வரட்டும்' என்று பேசியதாகத் தலைப்பு போட்டிருக்கிறார்கள். அதைப் படித்து விட்டு, நீங்களும் சரி, நானும் சரி, ஏமாந்துவிடக் கூடாது.

விவசாயிகள் போராட்டத்திலே, என்னைக் காண வந்த குழுவினரைச் சந்திக்க நான் தேதி குறிப்பிடவில்லையென்று உள்ளே செய்தி வருகிறது. நவமணி பத்திரிகை என்று கருதுகிறேன்—அதில் அம்மாதிரிப் போட்டிருக்கிறார்கள். நான் விவசாயிகளைச் சந்திக்கப் போவதில்லையென்று மேலே தலைப்புப் போட்டு விட்டார்கள். ஆகவே, தலைப்புகள் மாத்திரம் படித்து விட்டு நானும் சரி, நீங்களும் சரி ஏமாந்து விடாமல் இருப்பது நல்லது.

DR. H. V. HANDE: Sir, I repeat that even 'The Hindu' and 'The Indian Express' give them a report about the press conference and the meetings addressed by the Hon. Chief Minister. No other Chief Minister in the whole of India has got such publicity in the newspapers as our Hon. Chief Minister. I am very happy about it because he is the only Chief Minister of the State who does not belong to the Ruling Party at the Centre. Then he has got newspapers like 'Thanthi', 'Malai Murasu', and 'Murasoli'—he would say that he has no control over it—to

support him and their circulation is seven to eight lakhs. Almost in every meeting he has got the knack of stating—

பத்திரிகைகள் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும். பத்திரிகைகள் நமக்கு எதிராக இருக்கிறார்கள்.

This sort of intimidation against the Press not only by him but also by his lieutenants would cut at the very root of democracy . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பத்திரிகைகள் செய்தி போடவில்லை என்பதற்காக நான் யாரையும் தாக்கிப் பேசியது கிடையாது. உள்ளபடியே சொல்லவேண்டுமானால் இங்கே ஒரு சம்பவத்தைப்பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசினார்கள். திருச்சியிலே நடந்த விவசாயிகள் சங்கத்தினுடைய கூட்டத்தைப்பற்றி இந்து பத்திரிகையிலே போட்டிருக்கிறார்கள். அதிலே போராட்ட நோக்கமே இல்லையென்று போட்டிருக்கிறார்கள். ஆனால் இன்று வந்த தினமணியில் 'ஒப்பந்த அமலை வற்புறுத்தித் தீவிர இயக்கம் நடத்த முடிவு' என்று செய்தி போட்டிருக்கிறார்கள். இப்படித் திரித்துப் போடுவதைத்தான் நாங்கள் கண்டிக்கிறோமே தவிர வேறு ஒன்றும் இல்லை. செய்தி போட வில்லை என்பதற்காக நாங்கள் யாரையும் கண்டிக்கவில்லை.

DR. H. V. HANDE: That is why the Hon. Deputy Speaker of the U.P. Vidhan Sabha Thiru Vasudev Singh has given the ruling that the Press is free to publish the news from their own angle even if it hurts the concerned Members. The matter arose when the strength of the Members of the Congress (O) got reduced and their importance was belittled. But in this House how many times we have warned the press? Even outside the Assembly, the ruling party had warned the Press and even intimidated it. They have made it impossible for the Opposition to function effectively in this State. Some people are saying that Dr. Hande does not know how strongly the party has grown. I know it. I am afraid it has grown to such an extent that it has become a problem and the Hon. Chief Minister has lost control over his party organisation. He has no idea of the things happening in the districts because there is a lot communication gap between him and the districts. A situation has arisen in the villages where no 'beeda' or tea shopkeeper could transact his business without the support of the local D.M.K. men. This aspect of the matter should be looked into.

Then, Sir, I specifically mentioned about the manner in which funds were collected for party purposes in Madurai. A person living in my constituency and who is very popular with Madurai Muthu told me over the telephone, 'Dr. Hande, you have spoken against Madurai Muthu in the Assembly. Dr. Hande, you cannot touch Madurai Muthu and you cannot shake him. I will collect funds for the Party . . .' I want the Hon. Chief Minister to put an end to all these things and exercise proper control.

I repeat there are a number of omissions and commissions and they are increasing. There are so many other things to be referred to. For instance, there is no Chief Justice of the High Court now in Tamil Nadu. If we do not point out all these things and go on praising the Hon. Chief Minister, what will happen?

இடிப்பாரே இல்லாது ஏமாற வேண்டாம். பாதுகாப்பு இல்லாத மனிதராக அவரை ஆக்கிவிடாதீர்கள். இடித்துப் பேசுங்கள். அப்படி இருந்தால்தான் அவருக்கும் நன்மை, கட்சிக்கும் நன்மை. ஆகவே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெளிப்படையாகக் கொண்டு வரப்பட்டது. கடுமையான சொற்களாக இருந்தாலும், கண்ணியமான சொற்களைத்தான் பயன்படுத்தி இருக்கிறேன். வார்த்தைகள் கடுமையாக இருந்தாலும், காரசாரமாக இருந்தாலும் முறையான கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தக் கருத்துக்களை மிகக் கடுமையான வகையிலே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலமாக சொன்னதாலே, எல்லா விஷயங்களையும் எடுத்துச் சொல்லி வலியுறுத்துவதன் மூலமாக ஏறத்தாழ 2¼ கோடி மக்கள் இன்றைய தினம் தமிழகத்திலே நடைபெறுகின்ற ஆட்சிமீது சற்றுகூட நம்பிக்கை தெரிவிக்கவில்லை. நான் கொஞ்சம் சரியான வகையிலே பேசவில்லை, நம்முடைய குறைகளையெல்லாம் எடுத்துச் சொல்லுங்கள், எடுத்துச் சொல்லுங்கள், ஏன் நீங்கள் சொல்லவில்லை என்றுதான் பொதுமக்கள் என்னிடம் கூறுகிறார்களே தவிர ஏன் கடுமையாகப் பேசவில்லை என்று சொல்கிறவர்கள் குறைவாகத்தான் இருக்கிறார்கள் என்ற நிலைமையிலே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசும்பொழுது அரசினுடைய குற்றங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி எதிர்க்கட்சிகள் நியாயமான முறையிலே, ஜனநாயகப் பண்பு பாதுகாக்கப்படுகின்ற தன்மையிலே, ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக, ஜனநாயகம் இன்னும் செத்துப் போகவில்லை, உயிரோடுதான் இருக்கிறது—எனக்கு முதலமைச்சர் அவர்களைப் போல் பேசக்கூடிய திறமையில்லை என்றாலும் கூட—கருத்துக்களின் வலிமையை அடிப்படையாக வைத்துக்கொண்டு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவு

தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மிஸ்டர் ஸ்பீக்கர் சார், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது விவாதம் தொடங்குகிறபோது விவசாயிகளுடைய போராட்டத்தை இந்த அரசு பார்த்த விதம், அதை அணுகிய விதம் முதலியவைகள் ஆரம்பம் முதல் கடைசி வரை தவறானவை, கொள்கை ரீதியிலே பார்த்தாலும் சரி, நடைமுறையிலே பார்த்தாலும் சரி தவறானவை என்ற தீர்மானத்தை நான் கொடுத்திருக்கிறேன். அதன் பேரில் பலர் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். முதலில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லிய கருத்துக்கள் எல்லாம் நாங்கள் கிளப்பிய குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம் பதில் சொல்லக்கூடிய முறையில் இல்லாமல் அவற்றையெல்லாம் திசைதிருப்பக் கூடிய முயற்சியைத்தான் அவர்கள் செய்தார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

நேற்றும் இன்றும்—நான் முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்—வருகிற முரசொலி பத்திரிகையைப் பார்த்தால் திட்டமிட்ட முறையிலே கம்யூனிஸ்ட் கட்சியின் பேரில் ஒரு தாக்குதல் தொடங்கியிருக்கிறார்கள். அதற்கு என்ன என்ன விஷயங்கள் வேண்டுமோ அதையெல்லாம் சேகரிக்கவேண்டும் என்று சாமர்த்தியமான முறையிலே செய்திருக்கிறார்கள். ஏனென்றால் அதிலே கட்டியிருக்கிற தலைப்புக்கள், சொல்லப்பட்டிருக்கிற முறைகளை எல்லாம் பார்த்தால் அந்த சந்தேகம்தான் உண்டாகிறது. கம்யூனிஸ்ட் எதிர்ப்புச் சரக்கு விலையில்லாத சரக்காகி பல வருஷங்களாகிவிட்டன. இன்றைக்கு உலக ரீதியில் கம்யூனிஸத்தை ஆதரித்து அமெரிக்கா போன்ற நாடுகள்கூட நேசக்காரர்களாகியிருப்பதைப் பார்க்கிறோம். இந்திய அரசைப் பொறுத்தவரையிலும்கூட சோவியத் யூனியனுடன் உறவு கொள்கின்ற வகையில் பெரிய தாக்குதலை பாகிஸ்தான் நடத்தியபொழுது சோஷலிச நாடாகிய கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகின்ற நாட்டினுடைய உதவியுடன் இந்த நாட்டினுடைய சுதந்திரம் காக்கப்படக்கூடிய நிலைமையிலே தமிழகத்திலே உளுத்துப்போன வாதமாக வன்முறை, வன்முறை என்று சொன்னது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அதற்கு முத்தாய்ப்பு வைத்ததைப் போல் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் முதலில் முதலமைச்சர் அவர்கள் சொன்னவற்றிற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். பிறகு நான் மற்ற கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

ஜூன் மாதம் 27-ம் தேதி நான் கைது செய்யப்பட்டேன். நான் கூட நினைத்தேன், ஏதோ ஒரு சர்க்குலர் வெளியிட்டிருக்கிறார்களே நமக்குக் கூட தெரியாமல் வெளியிட்டிருக்கிறார்களே என்று நினைத்தேன். பந்த் ஐந்தாம் தேதி என்று 29-ம் தேதிதான் முடிவு செய்தார்கள். ஒரு சமயத்திலே 29-ஆம் தேதி முடிவு செய்த பந்த்தை பலாத்காரமாக மாற்ற வேண்டுமென்று சர்க்குலர்—சிறையிலே இருக்கக் கூடிய நமக்குத் தெரியாமலேயே முடிவு செய்திருக்கிறார்களோ, கட்சிக் கூட்டத்திலே கேட்க வேண்டுமென்றெல்லாம் நினைத்தேன்—விட்டிருக்கிறார்களோ என்றுகூட நினைத்தேன். ஆனால் ஒன்றை நான் ஒத்துக் கொள்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இரண்டு விஷயங்களை சாமர்த்தியமாக ஒன்றாக்கியிருக்கிறார்கள். அதிலே முதலமைச்சருக்கு நிகர் நம்முடைய முதலமைச்சர்தான். அந்த சர்க்குலர் வெளியிடப்பட்டது 29-ஆம் தேதியல்ல, 30-ஆம் தேதியல்ல. 15-6-1972 ஆம் தேதியன்றுதான் வெளியிடப்பட்டது. ஏனென்றால் கம்யூனிஸ்ட் கட்சியினருக்குத் தெரியும். அப்படி ஏதாவது இருந்தால் இப்படி சைக்ளோஸ்டைல் பண்ணுவது வழக்கம் அல்ல. (சிரிப்பு). இதிலே சிரிப்பதற்கு ஒன்றுமில்லை. 1948-49-லே கம்யூனிஸ்ட் கட்சி சட்ட விரோதமாக்கப்பட்ட நேரத்தில் அப்படி அனுப்புவது வழக்கம். ஆனால் இப்பொழுது சட்ட விரோதமாக்கப்படவில்லை கம்யூனிஸ்ட் கட்சி, ஆகவே, அப்படிச் செய்யவேண்டியதில்லை. இதுதான் எங்களுடைய திட்டம் என்பதை சொல்லிவிட வேண்டும், அதுதான் எங்கள் முறை. அந்தக் காலம் வேறு, இந்தக் காலம் வேறு. 1948-49-லே—திருப்பரங்குன்றம் உறுப்பினர் அவர்கள் கூடச்சொன்னார்கள்—இருந்த நிலைமை வேறு. அப்பொழுது இப்படி சர்க்குலர்களையெல்லாம் கைமூலமாகக் கொடுத்து படித்துவிட்டு கிழித்துப் போடுங்கள் என்று சொல்லப்படும். 7-ஆம் தேதி அன்று இந்த மாட்டு வண்டிப் போராட்டம். அதற்குப் பின்னால் போராட்டக் குழு விரிவாக்கப்படுகிறது. அப்படி விரிவாக்கப்பட்டதற்குப் பிறகு விரிவாக்கப்பட்ட குழுவால் 16-ஆம் தேதி ஒற்றிவைக்கப்பட்ட போராட்டம் மீண்டும் தொடங்கப்படுகிறது. போராட்டம் என்றால் என்ன, கலெக்டர் ஆபீஸ் முன்பு, தாசில்தார் ஆபீஸ் முன்பு மறியல் செய்ய வேண்டும். அவ்வளவுதான். அதற்கு தொண்டர்கள் யார் என்று முடிவு செய்யவேண்டுமென்பதுதான். இந்த சர்க்குலர் விடப்பட்டது 15-6-1971 ஆம் தேதிதான். அதை நான் படிக்கிறேன்.

சுற்றறிக்கை எண் 75/9. அன்பார்ந்த தோழர்களே, சர்க்கார் கூட்டுறவுக் கடன், வரி பாக்கிக்காக உடைமைகளை ஜப்தி செய்வதை எதிர்த்தும், மின்சாரக் கட்டணம் குறைக்கக்கோரியும், கோவை, தர்மபுரி, முகவை, நெல்லை ஆகிய மாவட்டங்களில் விவசாயிகள் அறப்போர் நடத்தி பல்லாயிரக்கணக்கில் சிறை சென்று வருகின்றார்கள். இதைத் தொடர்ந்து 16-6-1972 முதல் தமிழ் நாடு

முழுதும் விவசாயிகளின் அறப்போர் நடத்த மாநிலப் போராட்டக் குழு முடிவு செய்துள்ளது. இப்போராட்டத்தில் பங்குகொண்டு சிறை செல்ல விவசாயிகளும், மாதர்களும், இளைஞர்களும் துடிதுடிப்புடன் வருகிறார்கள். தமிழ் நாட்டில் விவசாயிகள் இயக்க வரலாற்றில் புதிய சூழ்நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது போன்ற சாதகமான சூழ்நிலைமையில் நமது கட்சிக் கமிட்டிகளும், கட்சி அணிகளும் தீவிரமாகப் போராட்டத் திட்டம் வகுத்து செயலாற்ற வேண்டும்.

இந்த சர்க்குலருக்கு உட்பட்டுத்தான் செயலாற்ற வேண்டும். முதலமைச்சர் அவர்கள் சொல்வது போல் செய்திருந்தால் நாங்கள் இங்கே இருக்கமுடியுமா? எங்களை உள்ளே கொண்டு போக வேண்டும். இந்தச் செய்திதான் பதினாறு பேர்கள் சாவதற்குக் காரணமாக இருந்ததா? அப்படியானால் நான் எல்லாம் இங்கே இருக்கக்கூடாது. ஆகவே அது அல்ல காரணம். நீங்கள் எடுத்த நடவடிக்கைகள்தான் 16 பேர்கள் சாவதற்குக் காரணமாக இருந்தது. இந்தச் செய்தியால் 16 பேர்கள் செத்தார்கள் என்று அவர்கள் சொல்வார்களானால் அது அவர்களுக்கு அழகு கிடையாது—நான் அழகு பற்றிச் சொல்லக்கூடாது, ஏனென்றால் நான் உங்களிடமிருந்து அழகு பெற்றுக் கொள்ளத் தேவையில்லை என்று சொல்வார்கள். மேலும் அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் பல்லாயிரக்கணக்கில் சிறை புகும் நேரத்தில் சிறைப்படுத்தப்பட்டவர்கள் அனைவருக்கும் விசேஷ வகுப்பு வசதி அளித்து, அரசியல் கைதிகளாக நடத்த வேண்டும் என்று பலத்த கிளர்ச்சி நடத்த வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: விசேஷ வகுப்பு வசதிக்காக ஏன் பலத்த கிளர்ச்சி நடத்த வேண்டும்?

திரு. கே. டி. கே. தங்கமணி: என்னமோ எங்களுடைய பாஷை அது. நீங்கள் எல்லாம், தம்பிகள் எல்லாம் தக்க முறையில் நடத்த வேண்டுமென்று எழுதுவீர்கள்.

மேலும் சிறை புகுந்தவர்களைக் கண்டு பேசுவது, அவர்களுக்குச் சட்டப்படி தர வேண்டிய வசதிகள் செய்து கொடுப்பது, ஆகிய இவற்றை கவனிக்க எல்லா இடங்களிலும் சர்வ கட்சிக் கமிட்டி அமைத்து, செயல்படுத்துவது அவசியமாகும். உடனுக்குடன் போராட்டம் பற்றிய செய்திகள் அனுப்பி வைக்கவும். வாழ்த்துக்கள், தோழமையுள்ள எம். வி. சுந்தரம், மாநில நிர்வாகக் குழுவிற்காக, சென்னை-1, 15-6-1972 என்று இருக்கிறது. இதிலே என்ன புரட்சியிருக்கிறது, படுகொலைக்கு என்ன காரணம் இருக்கிறது என்பதை உங்கள் மூலம் சபையிலிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். முதலமைச்சரவர்கள்

He was waxing eloquent. It was his anti-climax. He was reaching his climax when he vehemently attacked us. His language was very strong.

அதற்காக நான் சில உண்மைகளைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

19-ம் தேதி போராட்டம். 12 அம்சக் கோரிக்கையைப்பற்றிக் கொஞ்சம் கொஞ்சம் சொன்னார்கள். ஒவ்வொன்றிலும் என்னென்ன திருத்தி இருக்கிறார்கள், எதையெதை விட்டு இருக்கிறார் என்று கூறியிருக்கிறேன். அவர் சொன்னதற்குப் பதிலாகச் சொல்கிறேனே தவிர எல்லையை விட்டு போக நான் விரும்பவில்லை. 19/5-ல் தான் கோவையில் போராட்டம் ஆரம்பம். போராட்டம் என்பது மறியல். அப்பொழுது கோவையிலிருந்த விவசாய சங்கம் அகில இந்திய விவசாய சங்கத்தோடு இணைந்து கம்யூனிஸ்ட்களாக இருக்கும் விவசாயிகள் இன்னும் சில ஸ்தாபனங்கள் சேர்ந்திருந்தன. மன்றாடியார் போராட்டம் மன்றாடியார் போராட்டம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்களே. இங்கே சட்டமன்றத்திலே வீற்றிருக்கின்ற மருதாசலத்தையும் சேர்த்து மன்றாடியாரோடு 19-ம் தேதியன்று முதன் முதலாக சிறை சென்றவர்களில் மன்றாடியாரும் உண்டு, எங்கள் மதிப்பிற்குரிய மருதாசலமும் உண்டு என்பதை தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அப்படித்தான் இந்தப் போராட்டம் ஆரம்பம். ஆயிரம், இரண்டாயிரம் பேர் என்று கைது செய்யப்பட்டு தண்டனைக்குள்ளானார்கள், பெண்களும் கொண்டு போகப்பட்டார்கள். பிறகு வண்டிப் போராட்டம் நடந்தது. நான் இப்பொழுதும் சொல்கிறேன், முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், இந்திரா காந்தி 5-ஆம் தேதிக்கு முன்னாலே சொல்லியிருக்கலாம் என்று சொல்கிறார்கள், அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை அவர்களைத்தான் கேட்க வேண்டும். பத்திரிகைகளிலே ஒரு விஷயம் தெளிவாக வந்தது. அந்த அம்மையார் என்ன சொன்னார்கள் என்று பத்திரிகையில் வந்தது.

She expressed no opinion on the agitation. But she has got clear opinion on the manner in which the farmer's struggle was handled. அதே வார்த்தைகளை நான் உபயோகப்படுத்தியிருக்கிறேன். பார்மர்ஸ் ஸ்ட்ரகில்ஸ்ஸில் ஹேண்டில் செய்த முறை சரியல்ல என்று சொல்லியிருக்கிறார்கள். இந்திரா காந்தி அம்மாள் சாதாரண அம்மாளாக இருக்கலாம். ஆனால் நான் அம்மாதிரி நினைக்கவில்லை. அதேபோல சீப் மினிஸ்டர்.

As the Chief Minister, he is my top leader. He is the first man for the 4½ crores of people of Tamil Nadu.

அதே போல இந்தியாவில் இருக்கும் மக்களின் சார்பாகப் பேசும் இந்திராவின் வாய்ஸ் பவர்புல் வாய்ஸ். அதற்கு என்ன பதில்? அந்த வாய்ஸைத்தான் சட்ட

மன்றத்திலே டிஸ் அப்ரூவல் ஆஃப் பாலிசி என்று கிளப்பியிருக்கிறேன். அப்படியானால் பத்திரிகைகளில் வந்த செய்தி பொய்யா? சார் நீங்களும் லாயர். 15,000 வண்டிகள் வந்திருக்கின்றன. கலெக்டர், போராட்டக்குழுத் தலைவர்களை வைத்து இதை எப்படியாவது போக வைக்க வேண்டுமென்று நினைக்கிறார். அவர் புத்திசாலித்தனமான கலெக்டர், உண்மையிலேயே அவருக்கு சன்மானம் கொடுக்க வேண்டும். இவர்கள் எப்படி ஏற்றுக்கொள்வார்கள்? வண்டிகள் போக வேண்டுமென்றால் அவர் சொல்கிறார், இந்தப் போராட்டத்தை நிறுத்தி வையுங்கள், அல்லது கேன்சல் செய்யுங்கள் என்று சொன்னால் இவர் எப்படி ஒத்துக் கொள்வார்? அவர் சீஃப் மினிஸ்டரைப் பார்க்க ஏற்பாடு செய்கிறேன் என்று பேசியிருக்கிறார். அவர் பேசினாரோ பேசவில்லையோ, வேறு குரலிலே பேசினாரோ, அது டிராமா. சீப் மினிஸ்டரோடு பேச ஏற்பாடு செய்கிறேன் என்று கலெக்டர் சொல்கிறார். அதன்படியே வாபஸ் வாங்குகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். வாபஸ் வாங்குகிறார்கள், சென்னைக்கு வருகிறார்கள். அவர்கள் அப்படி வரும்பொழுது ஒரு முதலமைச்சர் கொடுக்க வேண்டிய அறிக்கையா அது? என்ன அறிக்கை தெரியுமா? மாட்டு வண்டிப் போராட்டம் ஒரு நாள் தானே நடக்கும் என்று சொல்வது? அப்படியானால் நான் ஏமாற்றி விட்டேன், விவசாயத் தலைவர்களே, நீங்கள் ஏமாந்து விட்டீர்கள், நான் ஏமாற்றிய பிறகு என் கைக்குத்தான் வர வேண்டுமென்று சொல்வதுமாதிரி இருக்கிறதா இல்லையா? அப்படிச் சொல்லிவிட்டு, பேச முடியவில்லை. அன்றைக்கும் கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்கள். இப்பொழுது வேண்டுமென்றால் மாநிலம் தழுவிய அளவிலே எல்லாத் தலைவர்களும் சந்தித்து மாநில அளவில் உருவாகும் தன்மை ஏற்பட்டது. சாத்தூரில் எங்கள் கட்சித் தோழர்கள் இரண்டு பேர் இருக்கிறார்கள். எந்தெந்த இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது தெரியுமா, எங்கெங்கு கம்யூனிஸ்டுகள் வலுவாக இருக்கிறார்களோ அங்கு என்று கூறுகிறார்கள். சாத்தூரில் எங்கள் கட்சி வலுவாக இருக்கிறது என்று சர்டிபிகேட் கொடுத்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு). சாத்தூருக்கு யாரும் சிவகாசியிலிருந்து வரவில்லை. அந்தப் பையன் 8 மைலுக்கு அப்பாலிருந்து வந்திருக்கிறான். அவர் ஸ்டாண்டர்டில் வேலை செய்கிறாரே தவிர சிவகாசியில் வேலை செய்யவில்லை. அந்தப் பையன் கலந்திருக்கிறான். அந்த நேரத்தில் என்ன சொல்லப்பட்டது? மதிப்பிற்குரிய திரு. காளிமுத்து அவர்கள் சொன்னார்கள் என்று ஞாபகம், ஸ்டேட் பேங்கைத் தாக்கினார்களாம் என்று. அப்படியென்றால் ஸ்டேட் பேங்க் ஏஜண்ட், எங்களைத் தாக்க வந்தார்கள் என்று அறிக்கை விடட்டும், ஸ்டேட் பேங்கிற்கு இவர்கள் ஏன் போகிறார்கள்?

திரு. கா. காளிமுத்து: மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஸ்டேட் பேங்கைத் தாக்கும் நேரத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது என்று சொன்னதாகச் சொன்னார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. போலீசார் இரு பக்கங்களிலும் கண்ணீர்ப் புகை வீசிய பிறகு இரண்டு பக்கம் பிரிந்து போனவர்கள் மீண்டும் வந்து போலீசாரை தாக்கிய நேரத்திலேதான் போலீசார் சுட நேர்ந்தது. கூட்டுறவு வங்கிக் கட்டிடத்தில் அழகுத்தேவர், எம்.எல்.ஏ. அவர்கள் இருந்திருக்கிறார், அங்கு கல்லால் எறிந்தார்கள், அதனால் காயம்கூட அவருக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே போலீசாரைத் தாக்கிய நேரத்தில்தான் துப்பாக்கியால் சுட நேர்ந்தது என்ற கருத்தைத்தான் சொன்னேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஸ்டேட் பேங்கைத் தாக்கவில்லை என்று சொன்னால் அதை விட்டுவிடுகிறேன். பத்திரிகையில் படித்ததாக ஞாபகம். ஸ்டேட் பேங்கை எடுத்துக் கொண்டால் கேஸ் ஸ்டாராங்காக இருக்கும் என்று நினைத்தார்களோ என்னவோ தெரியவில்லை. நான் அதை விட்டுவிடுகிறேன். எங்களுடைய கட்சி இல்லாத இடம். 19 வயதுள்ள சீனிவாசன் சுடப்பட்டான் என்றால் கழுத்திலே குண்டு பாய்ந்தது. அந்தப் பையனுக்கு தாயார் இருக்கிறார்கள், தம்பிகள் 3 பேர்கள் இருக்கிறார்கள், காருண்யம் உள்ள இந்த அரசு உடனே அந்தப் பிரேதத்தை தகனம் செய்து சாம்பலைத் தாயாருக்குக் கொடுக்கிறார்கள். அந்தப் பிணத்தை அவர்களிடம் கொடுக்கக்கூடாதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நேற்றே இந்தக் குற்றச்சாட்டைச் சொன்னார்கள். நான் அதைப்பற்றி விசாரித்தேன். சீனிவாசன் என்பவர் கம்யூனிஸ்ட் நண்பர் என்று கருதுகிறேன். அவர் தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலை செய்கிறார். அந்தப் போராட்டத்திலே கலந்து கொண்டால், அவர் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இரையான பிறகு யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர்? பெற்றோர் யார் என்று தெரியாமலேயே 5-ஆம் தேதியிலிருந்து 6-ம் தேதி காலை வரையில் வைத்திருக்கிறார்கள். இதற்கிடையில் தண்டோரா மூலமும் அறிவிக்கப்பட்டு, அடையாளங்காட்டச் சொல்லி, போட்டோவை எடுத்து வைத்துக்கொண்டு அதற்குப் பிறகு பிரேதத்தை அடக்கம் செய்திருக்கிறார்கள். அதுதான் தகவல்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அதேமாதிரிதானா நம்மாழ்வாரும்? காங்கிரஸ் தியாகி, விருதுநகருக்குப் போகிறவர்கள் அவருடைய வீட்டிற்குப் போய்விட்டுத்தான் போகிறார்கள். பேரன் நம்மாழ்வார் சுட்டுக் கொலை செய்யப்பட்டானே, அவனுக்கும் வீடு தெரியவில்லையா? அவனுடைய பிரேதத்

தின் சாம்பலை மட்டும் ஏன் கொடுத்தார்கள்? It is not an accident. துப்பாக்கி பாய்ந்தது கழுத்திலே. இரண்டு பேருக்கும் பாய்ந்தது. அதை நீங்கள் கொண்டு போய்க் கொடுப்பதற்கு தைரியமில்லை. உங்களுக்குத் தைரியம் இல்லை என்றால் அங்கேயிருக்கும் அதிகாரிகளுக்குத் தைரியம் இல்லை என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம்.

ஆகவே, அன்றைக்கே சந்தித்துப் பேசாமல் பேச மறுத்தது பெரிய தவறு. அன்றைக்கே பேசியிருந்தால், கூப்பிட்டால் என்னவாம்? பின்னால்தான் கூப்பிட முடிந்ததே, யாரைக் கூப்பிடுவது என்றுதான். ஒரு பெரிய போராட்டக் குழு வைத்திருக்கிறார்கள், அந்தக் குழுவிலிருந்து வந்திருக்கிறார்கள், அவர்களை வா என்று அழைத்தால் என்ன? அந்தச் சமயத்தில் முதலமைச்சர் சொல்லக்கூடிய வார்த்தைகளா அவை? இதைவிட சொல்ல கடுமையான வார்த்தைகள் எனக்கு வரவில்லை. அன்றைக்கு அவர்களைப் பார்ப்பதற்கு முதலமைச்சரவர்கள் மறுத்தார்கள், அது மிகப் பெரிய குற்றம். அதிலிருந்து ஒரு பெரிய புயலே கிளம்ப அவர்கள்தான் தூண்டிவிட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் தூண்டி விட்டேன் என்று குற்றம் சாட்டுகிறார்கள். குற்றம் சாட்டுவது என்றால் மாறிமாறிக் குற்றம் சாட்டலாம். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால், அவர்கள் வந்த நேரத்திலெல்லாம் அவர்களைப் பார்த்திருக்கிறேன். இன்னும் சொல்லப் போனால் ஹாண்டே அவர்களுக்கு ஞாபகம் இருக்கும். (குறுக்கீடு). நான் இறுதியில் பேசப்போவதில்லை. இடையிடையே பேசிவிடுகிறேன். ஹாண்டே அவர்களுக்குத் தெரியும், மன்றாடியாரை ஏப்ரல் மாதத்தில் பார்ப்பதற்கு முன்னால், கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் என்னைச் சந்தித்தார்கள். அவர்கள் விரிவடைந்த மாநிலப் போராட்டக் குழுவின் தளபதி. அவர், மன்றாடியார் அவர்களும், நாராயணசாமி நாயுடு அவர்களும் என்னைச் சந்திப்பதற்கு முதல் நாள் என்னிடம் வந்து, "அவர்கள் இங்கே வருவதற்காகப் புறப்படுகிறார்கள், தயவு செய்து பார்க்காதீர்கள்", என்று சொன்னார். அவர்கள் கையில் இப்போது கோவை விவசாயிகள் சங்கம் இல்லை. ஆகவே, அவர்களைப் பார்ப்பது தேவையற்றது என்று சொன்னார்கள். தேதி கொடுத்து விட்டேன், ஆகவே, நிச்சயமாகப் பார்ப்பேன். எப்படி உங்களைப் பார்த்தேனோ அதேபோல் அவர்களையும் பார்ப்பேன் என்று சொன்னேன். பத்திரிகைகளில் கூட வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றன. டாக்டர் ஹாண்டே அவர்கள் இதை மறுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். கூட்டத்திற்கு வந்திருந்தபோது, முதல் நாள் வந்து அவர்களைப் பார்க்கவேண்டாமென்று சொன்னீர்களா இல்லையா என்று கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்களைப் பார்த்துக்

கேட்டேன். அப்போது மன்றுடியார் அவர்களும் இருந்தார்கள். என் ஐயா அப்படியா சொன்னீர்கள் என்று கேட்டபோது அவர்கள் சிரித்துக் கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட விஷயங்கள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன. இவற்றையெல்லாம் தங்கமணி அவர்கள் மறந்து விடக் கூடாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: கமிட்டி சென்னையில் வந்து உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களைப் பார்ப்பதற்கு என்ன தடை இருந்தது? அதற்கு பதில் இல்லை. முதலமைச்சரவர்கள் பி.ஏ. மூலம் கடிதம் எழுதினாரே. அதை அன்றே எழுதியிருக்கக்கூடாதா? 9-ம் தேதி எழுதியிருந்தால் காரியங்கள் இவ்வளவு தூரத்திற்கு மாறியிருக்காது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் கடிதம் எழுதக் காரணம் அவர்கள் தீர்மானத்தை அனுப்பி வைத்திருந்தார்கள். நிபந்தனைகள் போட்டு அதற்கு ஒப்புக் கொண்டால் பேசலாம் என்றார்கள். நிபந்தனைகளில் ஒன்று எல்லோரையும் விடுதலை செய்ய வேண்டும் என்பது. நிபந்தனைகளைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்; பேச வாருங்கள் என்று எழுதியிருந்தேன். அப்படி ஒரு கடிதம் அல்லது தீர்மானம் அனுப்பியிருந்தால் நான் பதில் எழுதியிருப்பேன்.

THIRU K. T. K. THANGAMANI: This is what is called formality.

கலெக்டர் நேரிடையாக முதல் அமைச்சர் அவர்களோடு பேசாவிட்டாலும் தொழில் அமைச்சர் அவர்களிடம் பேசியிருக்கிறார்கள். 15 பேர்கள் லிஸ்ட் கொடுத்திருக்கிறோம். அவர் தகவல் சொல்லவில்லையா? இவர்கள் வந்திருக்கிறார்கள் என்பது தெரியாதா? பத்திரிகைகளில்தான் செய்திகள் பறக்கின்றனவே, மக்கள் பூராவும் இதைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்களே.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நாங்கள் கலெக்டர் அவர்களிடம் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். குமாரசாமி அவர்கள் வரவில்லையா என்று கேட்டோம். நானும், மாதவன் அவர்களும் கேட்டுக்கொண்டேயிருந்தோம். காரில் புறப்பட்டு விட்டார்கள் என்று சொன்னார்கள். ஆனால் சென்னைக்கு வந்து என்னோடு தொடர்பு கொள்ளவில்லை. ஏனெனில் முதல் நாள் அஜிட்டேஷன் கால் ஆஃப் என்று சொன்னார்கள். மறுநாள் கால் ஆப் என்று சொல்லாமல் வார்த்தைகளை மாற்றி சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறது என்று மாற்றிக் கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கிடையே ஏதோ தகராறு போல் இருக்கிறது. என்னைச் சந்திக்காமல் இருந்து விட்டார்கள்.

THIRU K. T. K. THANGAMANI: I do not think he will convince me, nor will I convince him. Let me go to the next point.

திரு. கே. என். குமாரசாமி: சந்திக்க ஏற்பாடுகள் நடைபெற்று, தொழில் அமைச்சர் அவர்கள் சென்னைக்கு உடனடியாக வந்து தீர்மானித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி நாங்கள் புறப்பட்டு வந்ததற்குப் பிறகு பின்னால் மாலை முரசில் நாங்கள் ஒன்றும் அழைக்கவில்லை, அவர்களாகவே பயந்து கொண்டு போராட்டத்தை நிறுத்திவிட்டு வருகிறார்கள், நாங்கள் ஒன்றும் கூப்பிடவில்லை என்று சொன்னதற்குப் பிறகு . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்களாக பயந்து கொண்டு போராட்டத்தை நிறுத்தி விட்டார்கள் என்று நான் சொன்னதாக ஒரு வரியை பாவது மாலை முரசு பத்திரிகையில் இருந்து எடுத்துக் காட்டுங்கள். அவர்கள் பயந்து கொண்டு நிறுத்திவிட்டார்கள் என்று நான் சொல்லவேயில்லை.

திரு. கே. என். குமாரசாமி: மாலை முரசு நிருபர் கேள்வி கேட்கிறார், நீங்களாகக் கூப்பிட்டீர்களா அல்லது அவர்களாக வருகிறார்களா என்று. அவர்களாகத்தான் வருகிறார்கள். அதிகாரிகள் வண்டிப் போராட்டத்தை வைத்து மிரட்டினார்கள், பயந்துகொண்டு நிறுத்தி விட்டு வருகிறார்கள் என்று பதில் வந்ததினால்தான், இது அலட்சியப்படுத்தப்படுகிறது என்ற காரணத்தினால் போராட்டக் கமிட்டி சொல்லிவிட்டார்கள், சீப் மினிஸ்ட்டரின் அறிக்கையைப் பார்த்தால் நமக்கு நன்மை கிடைக்காது போல் இருக்கிறது என்ற காரணத்தினால் போக மறுத்தார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அவர்களும் எங்களை கன்வின்ஸ் பண்ணப் போவதில்லை. நாங்களும் அவர்களை கன்வின்ஸ் பண்ணப் போவதில்லை. உண்மை ஒரு நாள் வெளியாகும். உள்ளங்கள் தெளிவு பெறும். அதோடு நான் நிறுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. தங்கமணி அவர்கள் ஒன்று சொன்னார்கள். நம்மாழ்வாரின் பிரேதம் அவர் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை என்று. நான் போலீசாரிடம் விசாரித்தேன். அவரது பிரேதம் அவரது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது என்று தகவல் தந்திருக்கிறார்கள். ஒரு வேளை இது தவறாக இருந்தால் அவர்கள் என்னைத் திருத்தலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அடுத்த விஷயம் . . . (சிரிப்பு) எனக்குக் கிடைத்த விஷயத்தை நான் சொல்கிறேன். அவர்களுக்குக் கிடைத்த விஷயத்தை அவர்கள் சொல்கிறார்கள்.

This is not a matter of shame. We speak from our information. If the police had handed over the body, all right.

அப்படி ஒரு பாயின்ட்டுக்காகச் சொன்னேன். பாடி கொடுத்தால் என்ன, கொடுக்காமல் இருந்தால் என்ன ஆள் இறந்ததற்குப் பிறகு. இறந்த பிறகு என்னவானால் என்ன?

அடுத்த பாயிண்ட். 29-ம் தேதிக்கு முன் சில சம்பவங்கள் நடந்தன. அவற்றைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். பிரதாப் சந்திரன் படுகொலை செய்யப்பட்டார். தொழிலாளிக்கு தொழிலாளி அடித்துக்கொண்டு சாவதை நாங்கள் என்றைக்குமே ஏற்றுக் கொண்டதில்லை. மதுரையில் 1946-ம் ஆண்டில் கலகங்கள் நடந்தன. வெள்ளச்சாமி இறந்தது பற்றிச் சொன்னார்கள். தொழிலாளிக்கு தொழிலாளி அடித்து இறந்ததன் காரணமாக ஒரு தொழிலாளி தூக்கு மேடை ஏறுவதற்கு முன்னால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை அழைத்து, தொழிலாளி இன்னும் எவ்வளவோ ரத்தம் சிந்த வேண்டியிருக்கிறது, சர்க்காரை எதிர்த்து எவ்வளவோ ரத்தம் சிந்த வேண்டியிருக்கிறது, முதலாளிகளை எதிர்த்து எவ்வளவோ ரத்தம் சிந்த வேண்டியிருக்கிறது. ஆனால் தொழிலாளிக்கு தொழிலாளி அடித்துக்கொண்டு ரத்தம் சிந்தக் கூடாது என்று சொன்னார். அதற்குப் பின்னால் மதுரை மில்லில் தொழிலாளிக்கு தொழிலாளி அடித்துக் கொண்டு ரத்தம் சிந்தியது கிடையாது. முப்பது ஆண்டுகளாக தொழிலாளிகளுக்காக வேலை செய்து வருகிறவன் என்ற முறையில் பிரதாப் சந்திரன் இறந்ததற்கு வேதனைப்படுவதோடு மட்டுமல்ல, எங்கள் கட்சியின் பொறுப்பான தலைவர் உடனடியாக அச்சம்பவத்தைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டிருந்தார்கள். அவர் பிரேத ஊர்வலம் நடக்கிறது. பத்திரிகைச் செய்தியை வைத்துச் சொல்கிறேன், அந்த இடத்திற்கு நான் சென்று பார்க்கவில்லை. என் கட்சியைச் சார்ந்த ஒருவரான பௌரிலால் கடையில் பத்தாயிரம் ரூபாய் சாமான்கள் வைத்திருக்கிறார்கள். பூராவையும் சூரையாடி விட்டார்கள். நான் கம்யூனிஸ்ட் கட்சி மெம்பர். என்னிடம் கம்யூனிஸ்ட் ரத்தம் ஓடுகிறது. ஆகவே சிறிது கவலையாக இருக்கிறது. அது பற்றி அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. வன்முறைச் செயல்கள் நடந்திருக்கின்றன. பத்திரிகைச் செய்தியை வைத்துச் சொல்கிறேன். எம்.ஜி.ஆர்., நாவலர், திரு. அன்பழகன், திரு. மாதவன் இவர்கள் யாரும் போகவில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நான் எந்தயிடத்தில் குடியிருக்கிறேனோ அந்த இடத்திற்குப் பக்கத்தில்தான் நிகழ்ச்சி நடைபெற்றது. இறந்தவர் உடல் வந்து இருந்த இடத்திற்கு நாவலர், இன்னும் இரண்டொரு அமைச்சர்கள் சென்றிருந்தார்கள். ஆனால் அங்கேயுள்ள தோழர்கள் அமைச்சர்கள் ஏதோ பாதுகாப்பு கொடுக்கவில்லை என்று அமைச்சர்கள் மீது ஆத்திரப்பட்டு கார் கண்ணாடிகளைக் கூட சேதப்படுத்தினார்கள். அவர்களை அமைதிப்படுத்திவிட்டு வந்த பிறகு, அங்குள்ளவர்கள் நாம்தான் ஏதோ எதிர்கட்சிக்காரர்களுக்கு இடம் தருவதாக நினைக்கிறார்கள், ஆகவே அங்கு செல்வதுமூலம் அவர்களுக்கு ஆத்திரத்தை உண்டாக்க வேண்டாம் என்று நாவலர் சொல்லி விட்ட பின் பொதுச் செயலாளர் கருத்தை ஏற்றுக் கொண்டு நான் செல்லவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: பாயிண்டு என்னவென்று சொன்னால் violence is in the air. அந்த நேரத்தில்தான் கண்ணப்பர் திடல் கூட்டம் (ஒரு குரல்: ஒரு வாரம் கழித்து) அதை ஒட்டித்தான் Please allow me deve op it in my our way ஃபாக்ட்சைப் பொறுத்த வரையில் நான் தப்பாக பேசவில்லை. ஃபாக்ட்சை வைத்துத்தான் பேசுகிறேன். 29-ம் தேதி மதுரையிலே நடந்த ஊர்வலம் பற்றி தயவு செய்து ஸ்பெஷல் பிராஞ்சு போலீசை வைத்து ஊர்வலம் எப்படி நடந்தது என்று விசாரணை செய்யுங்கள். ஊர்வலத்தில் கிளப்பப்பட்ட கோஷங்கள் என்ன? 'ராஜாஜியை கைது செய்', 'காமராஜை கைது செய்' 'கலியாண சுந்தரத்தை கைது செய்', 'தங்கமணியை கைது செய்'. தங்கமணி ஜெயிலில் இருக்கிறான், இருந்தாலும் தொலையட்டும், அவனை கைது செய். ஜெயிலில் இருப்பவனை எப்படி கைது செய்வது?

